# சத்தியத்தின் சக்திநிலை



சற்குருதேவர் மாமகரிஷி
ஈசுவரபட்டர்
அருளாசி பெற்றது

5-1

# சத்தியத்தின் சக்திநிலை

(மூன்றும் பாகம்)



சற்குருதேவர்

**மாமகரிஷி ஈஸ்வரபட்டர்**

அருளிய உண்மை நிலைகள்

வெளியீடு :

**சத்தியத்தின் சக்திநிலைச் சங்கம்**

தலைமையகம் : **பவானி - 638301**

பெரியார் மாவட்டம் — தமிழ்நாடு

முதற்பதிப்பு : நவம்பர், 1981




புத்தகம் கிடைக்குமிடம் :
சத்தியத்தின் சக்திநிலைச் சங்கம்
தலைமையகம், பவானி-638301

A. கந்தசாமி
எண் 1, தர்மலிங்கம் பிள்ளை தெரு
தாதகாபட்டி, சேலம்-6

திரு S. கிருஷ்ணமூர்த்தி
வீனஸ் பிக்சர்ஸ்
எண் 7, வீனஸ் காலனி
சென்னை-600018

விலை ரூ. 31-00

அச்சிட்டோர் :
கலாட்சேத்ரா பப்ளிகேஷன்ஸ் பிரஸ், சென்னை-600 041


5-1

சற்குருதேவர் மாமகரிஷி ஈஸ்வரபட்டரைத்
தியானிக்க அவர் அருளால் வெளிப்படுத்தியவர்

**திருமதி இராஜம்மாள் பாலசுப்பிரமணியம்**


எழுத்தில் வடிவமைத்தவர்

**திரு R. பாலசுப்பிரமணியம், பவானி**


ஓம் சிவசக்தி நம
ஓம் மஹாகாளி நம
ஓம் ஹேரம்ம சக்தி நம
ஓம் மஹாசரஸ்வதி நம
ஓம் மஹாலக்ஷ்மி நம
ச
வ
ர
ஓம் ஈஸ்வரா
ஓம்
ப
ஹ
குருதேவா
நம
ண
ஓம் மஹாகணபதி நம
ஓம் சித்தி விநாயகா நம




மாமகரிஷி ஈஸ்வரபட்டர்



தவத்திரு வேணுகோபால் சுவாமிகள்



திரு. எஸ். எஸ். எம். சுப்பிரமணியம்
தலைவர்: சத்தியத்தின் சக்திநிலைச் சங்கம், பவானி

ஓம்

ஓம் ஈஸ்வரபட்டாய நம

# ஞானச் சுடர் விளக்கம்

முதற்கண் என் தாய்தந்தையர்க்கு வணக்கங்கள். என் ஞானகுரு வேணுகோபால சுவாமி அவர்கட்கு வணக்கங்கள்.

ஓம் ஈஸ்வராய நம

ஓம் புத்தாய நம

ஓம் ஏசுநாதரே நம

ஓம் முகம்மது நபியே நம

''சத்தியத்தின் சக்திநிலே'' என்னும் இந்நூல் மூன்ரும் பாக மாகும். முதல் நூல் சென்னேயிலும், இரண்டாம் நூல் பவானி சங்கமேஸ்வர ஆலயத்திலும் வைத்து வெளியிடப்பட்டன. முதல் இரண்டு பாகங்ளேயும் இந்த மூன்ருவது பாகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஒரே நூலாக இப்போது வெளியிடப்படுகிறது.

எங்கள் குருவாகிய வேணுகோபால சுவாமிகளின் ஞான விளக்கத்தின் தியான வழிமுறையினுல் நாங்கள் பெற்ற பலன்தான் இச் சத்தியத்தின் சக்திநிலேச் சங்கமும், அவர் காட்டிய அவரின் குருவாகிய ஈஸ்வரபட்டரின் தொடர்பும், பல சித்தர்களின், சப்த ரிஷிகளின் ஒளி அலேத் தொடர்பும் பெற்று வெளி வந்துள்ள நூல் நம் ''சத்தியத்தின் சக்திநிலே'' என்னும் நூல்.

நம் ஞான குரு அவர்களிடத்தில் தியானம் செய்யும் முறை, மற்றும் விளக்கங்கள் பெறவேண்டியிருந்தால் தலேமைச்சங்கத்தில் அவர்களேச் சந்தித்து உபதேசம் பெறலாம். அல்லது கிளேச்சங்கம் உள்ள இடத்திற்கெல்லாம் அவரே வந்தும் உபதேசிப்பார்கள்.

இவ்வுலகெங்கும் படிப்படியாக காற்று மண்டலம் பல காரணங்களால் நச்சுத்தன்மை கூடி இனி வருங்காலத்தில் மக்கள் ஒவ்வொரு நாளும் பலவித இன்னல்களேத்தான் சந்திக்க வேண்டி யிருந்தாலும் சமீப எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் பிரளயம் உட்படப் பெருமாற்றத்திலிருந்து மக்களேக் காக்க ஒரே வழியான

எளிய தியான முறையை இந்நூல்களின் வாயிலாகவும் ஆங்காங்கு சொற்பொழிவுகள் மூலமாகவும் பரப்பி மக்களை இக்கலியுக மாற்றத்திலிருந்து தப்பி கல்கியுகமான நல் யுகத்திற்கு அழைத்துச் செல்ல வழி காட்டுவதே நம் சங்கத்தின் நோக்கம்.

இதுவரை எல்லா மதத்தவராலும் காட்டப்பட்ட வழிகள் மக்கள் தங்களுக்கு ஏற்படும் இன்பதுன்பங்களுக்கு ஆண்டவனை வேண்ட கோவில், மசூதி, சர்ச் முதலானவற்றுக்குச் சென்று வேண்டி காணிக்கைகள் செலுத்தினால் அவ்வாண்டவன் நல்லது செய்வான் என்றே நம்பச் செய்து நடைபெற்றும் வருகிறது. நம் இன்பதுன்பங்களுக்கு எவ்வாண்டவனும் காரணமல்ல. எங்கோ இருந்துகொண்டு நம் வேண்டுதலுக்கு இரங்கி நமக்கு நல்லது செய்வான் என்பதல்ல உண்மை நிலை.

இன்பமும் துன்பமும் பிறர் கொடுத்து வாரா என்பதற்கொப்ப நம் எண்ணமேதான் நம் இன்பதுன்ப வாழ்க்கைக்குக் காரணம். நோய் நொடிக்கும் நம் எண்ணமேதான் காரணம் என்னும் உண்மை நிலையை இந்நூல்களின் வாயிலாக உலகுக்கு உணர்த்துவதே நம் சங்கத்தின் நோக்கம். நம் வாழ்க்கையை நாமே தான் நம் எண்ணப்படி அமைத்துக் கொள்கிறோம். எண்ணமே தான் கடவுள், கடவுளே தான் எண்ணம் என்னும் உண்மை நிலையும் மாமகரிஷிகளால் இந்நூல் வழியில் வெளியிடப்படுகிறது.

பக்தி மார்க்கத்திலும் அவற்றை எதிர்க்கும் பகுத்தறிவு மார்க்கத்திலும் சில உண்மைகள் இருந்தாலும் இதுவரை எல்லா மகான்களாலும் மறைக்கப்பட்ட அனேக உண்மைகள் இந்நூல்களின் வழியில் உணர்த்தப்படுகின்றன. இவைகளைப் படித்து நம் பகுத்தறிவைக் கொண்டு ஞானத்தைச் செலுத்தி இயற்கையின் எல்லா உண்மை சக்தியினையும் அறிந்து அவ்வழி நடந்து தியான வழியைக் கைக்கொண்டு, ‘எம்மிலேதான் உள்ளான் இறைவன்’ என்பதை அனுபவபூர்வமாகவும் உணர்ந்து நம் எண்ணமே கடவுள், எண்ணம், சொல், செயல் தூய்மையானால் நாமே கடவுள்; நாம் ஏற்றுள்ள இவ்வுடல் என்னும் கூடு நாம் குடியிருக்கும் கோவில் என்பதுணர்ந்து அதன்படி நடந்து, நம்மையும் நம் இல்லத்தவர், சுற்றம் சூழ நல்நிலை அடைய வழிகாட்டும் இந்நூல்களை வெளியிடுவதும் கருத்துக்களைப் பரப்புவதுமே எங்கள் நோக்கம்.

வானவியல், புவியியல் தோற்றம், தாவரங்கள், ஜீவ ராசிகள் இவைகளின் உண்மை நிலையும், கடவுள் என்ற தர்க்க வாதத்திற்குட்பட்ட பிரச்சினையின் உண்மை நிலையும் மிக எளிய

நடையில் இந்நூல்களின் வாயிலாக மகரிஷி, சப்தரிஷிகளால் வெளியிடப்பட்டுள்ளன.

விஞ்ஞானத்தின் அதிவேக முன்னேற்றம் மனிதனுக்கு மிகப் பயனுள்ளதாய் அமைந்திருந்தாலும், அதே விஞ்ஞானத்தால் செய்யப்பட்ட அழிவுக்கருவிகளைக் கொண்டு இவ்வுலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும், புல் பூண்டும் மிகச் சமீப எதிர்காலத்தில் அழியத்தக்க நிலையும் ஏற்பட்டுள்ளதை உலக மக்களுக்கு இந் நூல்களின் வாயிலாக உணர்த்தி சமீப காலத்தில் கலியுக மாற்றத் திலிருந்து மக்கள் தப்ப தியானம் ஒன்றே வழி என்றும், அதை எப்படிக் கடைப்பிடிப்பது என்னும் முறையை வழிகாட்டி தியானத் தின் மூலம் ஒவ்வொருவரும் தம் தம் சக்தியினைத் தாமே கூட்டி, இல்லற வாழ்க்கையிலிருந்தே ஒவ்வொரு நாளும் சந்திக்கும் வாழ்க்கைப் பிரச்சினையில் நம் எண்ணம், சொல், செயல் எப்படி அமைய வேண்டும் என்பதை வழிப்படுத்திக்காட்டி நம்முள் உள்ள இறை சக்தியை, உணர்வு எண்ணமுடன் கூடிய எளிய தியானத் தின் மூலம் வலுக்கொள்ளச் செய்து, வாழ்க்கையையே பயனுள்ள தாக ஆக்க நாம் ஏற்றிருக்கும் இவ்வுடல் என்னும் கூட்டைப் பயன் படுத்தி ஆத்மாவுக்கு சக்தியூட்டி நாமே கடவுள். நம் வீடே கோவில் என்னும் நிலைக்குச் சென்று யாவரும் தனக்காகவும், தன் குடும்பத் துக்காகவும், தன் சமுதாயம், நாடு, உலகத்திற்கும் பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்து நல் ஆத்மபலம் பெற வழிகாட்டும் நூல் இந்நூல்கள்.

எவ்வுயிராத்மாவும் தான் ஏற்றிருந்த கூட்டை விட்டு வெளி யேறிய பின்பு முக்தி என்னும் முற்றான நிலையை அடைவதில்லை. தான் வாழ்ந்த காலங்களில் பெற்ற உணர்வு எண்ணத்துடனே தான் அவைகள் காற்று மண்டலத்தில் சுற்றிக்கொண்டேயிருக்கும், தனக்கு ஏற்ற உடல் எடுக்கும் காலம்வரை. தற்கொலை செய்து கொண்டவர்கள், பிறரால் கொல்லப்பட்டவர்கள் எல்லாரும் தங்கள் வெறி உணர்வுடன் கூடிய எண்ணத்துடன் முடிவேயில்லா மல் சுற்றிக்கொண்டிருக்கும் நிலை கொடுமையிலும் கொடுமை.

தியான வழியைக் கைக்கொண்டு தியானம் இருக்கும்போது நம் எண்ண அலைகளும் சப்த அலைகளும், மகரிஷி, சப்த ரிஷிகளுடன் அவர்களின் அலைத்தொடரில் கலப்பதால் நம்மை அவர்களே வழிநடத்துவதால் ஒவ்வொரு நாளும் தம் தம் ஆத்ம சக்தியைக் கூட்டிக்கொள்ளலாம். அதன் மூலம் இல்லற வாழ்க்கை முறையில் குடும்பநிலை, தொழில் நிலை, உடல்நிலை யாவையுமே எவ்விதத் துன்பங்கள் நேராமலும், இன்னும் சொல்லப்போனால் துர் மரணங்கள், அசம்பாவிதங்கள் ஏற்படாமலும் நம்மைத் தற்காத்து வாழ அம்மகான்கள் வழிகாட்டுவர். தியானத்தால் பெற்ற ஆத்ம

பலத்தால் எல்லா இன்னலிலிருந்தும் தப்பி தெய்வ நிலையுடன் ஒளி நிலை பெறலாம்.

இந்நூலைப் படிப்போர் தினமும் சூரியனைப் பார்த்து தியானிக்கும்போது தங்கள் தாய் தந்தையரையும் குருவையும் நினைத்து பின் தங்கள் இஷ்ட தெய்வங்கள் பெயரையும், மகரிஷிகள் பெயரையும் சொல்லி பின் 'ஓம் ஈஸ்வராய நம' அல்லது அந்தந்த மத வழி காட்டிகள் பெயர் ஒன்றைச் சொல்லி தியானித்துப் பழக வேண்டும். முதலில் 2, 3 நிமிடங்கள் வரையும், பிறகு 10, 15 நிமிடங்கள் வரையும் காலை 9 மணிக்குள் தியானித்துப் பழக வேண்டும். பின் காலையும் மாலையும் தங்களுக்குக் கிடைக்கும் நேரத்தைப் பொறுத்து 15 நிமிடங்கள் முதல் 30, 40 நிமிடங்கள் வரையும் தியானித்து முடிந்தால், வாரம் ஒருமுறை கூட்டுத் தியானமும் இருந்துவரல் வேண்டும். இப்படிப் பழக்கத்தில் வரும்போது தியானம் உள்ள நேரங்களில் நம் எண்ண சப்த அலைகளும், மாமகரிஷிகள் சப்த அலைகளும் ஒன்றுகும்போது நாம் வேறு அல்ல அவ்வீசன் வேறல்ல என்னும் நிலை ஏற்படும்போது வாழ்க்கையில் ஒவ்வொரு நிலைக்கும் அவர்கள் வழிகாட்டுதலும், துணையும் கிடைப்பதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் உணரலாம். அனுபவத்தில் கிடைக்கும் நன்மை உணர்வுகளைக்கொண்டு ஒவ்வொருவரும் ஆத்மபலம் பெறலாம்.

ஒவ்வொரு ஊரிலும் குறைந்தது 20 உறுப்பினர்களைக் கொண்டு, தலைமைச் சங்க அனுமதி பெற்று, கிளைச்சங்கம் துவக்கி, மேற்கொண்டும் விளக்கங்கள் பெற தலைமைச் சங்கத்துடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

சங்க உறுப்பினர்கள் தாங்கள் மட்டும் பயன் அடைவதோடு நில்லாமல் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் சொல்லி, அருகிலுள்ள ஊர்களுக்கும் சொல்லி இச்சக்தி நிலைபெற வழிகாட்டலாம். கிளைச் சங்கங்கள் தோற்றுவிக்கவும் ஆவன செய்து எல்லோரும் கூட்டுத் தியானத்தின் மூலம் ஒருவருக்கொருவர் சக்தி பெறவும் கோருகிறோம்.

தியான வழி வருவோர் இவ்வாழ்க்கையில், எல்லா நலனும் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல மாமகரிஷிகளையும் இயற்கையன்னையையும் வணங்கியே போற்றியே வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
**எஸ். எஸ். எம். சுப்பிரமணியம்**
தலைவர்
**சத்தியத்தின் சக்திநிலைச் சங்கம்**
தலைமையகம்: பவானி

ஓம்

நிஜம் எது? பொய் எது?
நித்தமாக நிலைப்பதெது?
நீரிலும் நிலத்திலும் வாழ்வது நிஜமா?
நிலைக்கண்ணாடியில் பார்ப்பது நிஜமா?
நீரிலும் நிழலிலும் பார்ப்பது நிஜமா?
நானென்றும் நீயென்றும் வாழ்வது நிஜமா?
நிகழும் தொடர் எல்லாமே
நினைவின் வழிச் செயலாமே.
நினைப்பாய் வளர் ஞானத்திலே
நித்திய வழி தியானத்திலே
நீ வளர் ஈஸ்வர தியானத்திலே
நிகரிலா ஒளிநிலை பெறுவது நிஜமே.

13–4–80

தாய், தந்தை, குரு, தெய்வம் வணங்கியே எமக்கு இந் நிலையை ஏற்படுத்திய, இவ்வுலகின் நல்லுணர்வாய் செயல் புரியும் சகல சித்தர்களுக்கும், சப்த ரிஷிகளுக்கும் எங்களின் அன்பான எண்ணம் கொண்டு, நமஸ்கரித்தே, நல்லாசி பெற்று அவர்களி னுலேயே அவர்கள் ஒளி அலையுடன் எம் ஒளியைக் கலக்கச் செய்யும் பக்குவத்தை எமக்கருள வேண்டுகின்றோம்.

*(1) காட்சி: மீனவன் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதைப் போலவும், ஒவ்வொரு மீனுகத் தூண்டிலில் பிடித்து, பையில் எடுத்துச் செல்வதைப் போலவும் காட்டுகின்றார்.*

விளக்கம்: மீனவனுக்கு வேண்டியது மீன்தான். அவன் தூண்டிலில் போட்டுத் தரும் ஆகாரத்தை எம் மீன் எடுக்கின்றதோ, அதைத் தான் அவன் எடுத்துச் செல்கின்றான். அதைப்போல, இவ்வுலக ஞானம் பெற, தன் ஒளியை இவ்வுலகத்தில் உள்ள ஆத்மாக்களிடம் செலுத்தி, அவ்வொளியை எவ்வாத்மா ஈர்க் கின்றதோ, அவ்வாத்மாக்களைத் தன் ஞானத்துடன் எடுக்கின்றனர் ஒளியின் பால் உள்ள சப்த ரிஷிகள்.

குறிப்பிட்ட ஆத்மாவைத் தன் சக்தியின் பால் ஈர்க்கவில்லை. எல்லா ஆத்மாக்களுக்குமே அவ்வொளி பாய்ச்சப்படுகின்றது. எவ்வாத்மா அவ்வொளியுடன் கலக்கின்றதோ, அவ்வாத்மாவின் சக்தியைத் தன் ஒளியான ஞான வட்டத்தில் சுழலவிட்டு, அவ் வாத்மாவின் ஒளியிலிருந்து பல ஆத்மாக்களைத் தன் ஒளி வட்டத் திற்குள் செயல்படுத்துகின்றனர், சப்த ரிஷிகள்.

அந்நிலை கொண்டவர்தான் நம் ஞான குரு ஸ்ரீ வேணு கோபால சுவாமி அவர்கள். அவரின் ஒளியைக் கொண்டு, நம் மேல் அவ்வொளி பாயும் பொழுது, நாமும் அவர் பெற்ற ஞான ஒளியில் பங்கு ஏற்கின்றோம்.

இதைப்போலத்தான் பல சித்தர்கள் நம்முடன் கலந்து விளையாடுகின்றனர். ஔவைப் பிராட்டி நமக்குக் கிடைத்ததும் இந்நிலைதான் (காட்சி ஔவை வரும் நிலை).

உலக ஆத்மாக்களுடன் சில சில காலங்களில் கால நிலைகள் மாறுகொண்டு, உரு மாறும் தருணத்தில் சப்த ரிஷிகளின் சக்தி நிலையை உலகம் உணர்வெய்தி விழிப்புறச் செய்ய மனித ஆத்மாக்கள் நிலையிலிருந்து தான் செயல்கொள்ளமுடியும்.

இந்நிலையில் தூண்டில் போட்டு எடுத்தவர்தான் நம் சத்தியத்தின் சக்தி நிலையை உணர்த்திய சத்திய குருவாம் ஸ்ரீ வேணு கோபால சுவாமிகள்.

(2) ஆவியான இவ்வுலகில் ஒலி, ஒளி, நீர் இவற்றின் சக்தியுடனே சகல திரவியங்கள், பிம்பங்கள் பல கோடி நிலைகள் ஏற்படுகின்றன. அதைப்போல் அவற்றுடனே மனித ஆத்மாக்களின் எண்ண நிலையும் கலந்துறவாடி எடுக்கும் சுவாசம் கொண்டு அனைத்து நிலைகளும் நடக்கின்றன.

ஆவியான ஒலி, ஒளி, நீரில் இருந்து தான் எல்லா ஜீவனுமே. பாலில் நீர் கலந்தாலும், எண்ணெயில் நீர் கலந்தாலும், அந் நீரின் நிலை தன் நிலையைக் காட்டுவதில்லை தனித்து. எதிலும் எதுவாகவும் அந்நீர் எப்படிக் கலக்கின்றதோ, அதைப்போல் எல்லாவற்றிலும் எல்லாமாய் ஆண்டவனின் சக்தி கலந்துள்ளது.

நம் எண்ணம் எல்லாவற்றுடனும் கலந்திருந்தாலும், எல்லாமில் எல்லாமாய் இருந்தே, நம் ஞானத்தை நாம் பெறல் வேண்டும். ஞானம் பெற்று, நான் என்ற நிலை பெற்றுவிட்டால், நம் ஞானமும் செயல்படாது. ஞானம் என்பதுவே நமக்காக மட்டுமல்ல. நம் ஞானத்தைக்கொண்டு, பலர் ஞானங்கள் பெறச் செய்ய நமக்கு ஏற்பட்ட நல் ஞானம் என்றுணர்ந்து, நீரைப் போல் ஞான சக்தி இருக்க வேண்டும்.

நீர் இல்லாவிட்டால் ஜீவனே இல்லை. நீரைப்போல், தான் பெற்ற ஞானத்தை ஞானிகள் வழி நடத்திடல் வேண்டும்.

(3) இரும்பைப் பழுக்கக் காய்ச்சி தட்டுவதைப்போல் காட்சி.

எந்த ஒரு பொருளையும் அதனை உருவாக்க, எவ்வுருவில் காண உருப்படுத்துகின்றோமோ, அதற்குகந்த பக்குவ நிலை ஏற்பட்டால் தான், நாம் காணும் பொருளை நாம் உருவாக்க முடியும். அதைப்போல் சக்தியின் அருள் ஞானம் பெறவும், நம் எண்ண ஞானத்தைப் பல நிலைகளில் பக்குவம் கொண்டால் தான், நாம் எண்ணிய ஈசனின் ஞானம் பெற முடியும்.

(4) காட்சி: சிறிய ஊசியில் அதற்குகந்த நூலைக் கோப்பதைப் போலவும் பெரிய ஊசியில் அதற்குகந்த நூலைக் கோப்பதைப் போலவும் காட்சி.

தன் ஞானம் என்பது குருவின் ஞானத்திலிருந்து எண்ண நிலை வளர்ச்சி கொள்ளும் நிலைப்படி தான் சேர்க்கப்படுகின்றது.

ஊசியில் உள்ள துவார நிலைக்கொப்பத்தான் நூல் கோக்கப்படுமேயன்றி, பொருந்தாத நூலைக் கோப்பது எப்படி?

பக்தி, ஞானம் என்ற வழித்தொடர் பெற்று சத்திய முக்தி நிலை கொண்ட சப்த ரிஷிகளின் நிலைபெற்றே, ஈசன்பால் செல்லும் பக்குவத்தை பக்தி மார்க்கத்திலிருந்து நல் ஞானம் பெறும் வழிமுறையை அறிதல் வேண்டும்.

எண்ணியவுடன் வந்தடைவதல்ல எல்லா சக்தியும். ஏற்கும் முறைப்படி தான் சக்தி நிலை கூடும்.

**14–4–80**

(5) குழந்தைக்கு ஆரம்ப பாட அறிவு தாயே புகட்டுகின்றாள். அம்மா, அப்பா, கடவுள் இப்படிப் பேசும் திறனைப் பழக்கி கல்விச் சாலைக்கு அனுப்புகின்றாள். அந்தந்த வயது நிலைக் கொப்ப, அறிவின் கல்வி புகட்ட அதற்குகந்த கல்வித்திறன் பெற்ற போதகரினால், அக் குழந்தை போதனைக்குட்பட்டு அதன் வளர்ச்சியின் மூப்பினால் பிறருக்குப் போதிக்கும் பக்குவம் பெற்று விடுகின்றது.

அதைப்போல் பக்தி என்ற வழிப்படுத்தி, பூஜை முறையில் ஆரம்பத் தாயின் கல்வி அறிவைப் போன்றது தான் பக்தி, பூஜை முறை. பக்தியின் வழித்தொடரில் ஞானம் பெற வேண்டும். ஞானத்தின் வழியில் சித்தாகி, சித்தினால் முனிவனாகி, மாமுனிவனாகி, சப்த ரிஷியாகி அப்பக்தியின் முக்தி கொண்ட நிலை பெற்று மீண்டும் தன் சக்தியைக் கொண்டே பல சக்திகளை ஒளி பெறும் பக்குவம் பெறல் வேண்டும்.

(6) காட்சி: சாதம் உண்ணுவதைப்போலவும் அதில் ஒரு கல் பட்டு உடம்பு சிலிர்ப்பதைப் போலவும் காட்டுகின்றார்.

விளக்கம்: நம் நிலையில் நல் உணர்வும், நல்ல ஜெபமும், ஆத்மீக ஞான வழிபெற்றாலும் அமுதான உணவைப் போல்–உணவு உண்ணும்பொழுது கூட வந்த கல்லைப்போல்–நம் நிலையில் நல்ல உணர்வான சக்தி நிலையில் வாழ்ந்தாலும் நமக்கேற்படும் சில சோதனைகள் வரத்தான் செய்யும்.

அந்நிலையில் உணவுடன் வரும் கல்லுக்காக நாம் உணவையே உண்ணாமல் இருப்பதில்லை. வரும் எதிரான செயலுக்கு நம்மை அடிமைப்படுத்தாமல், நல் ஞானத் தொடரை வழிபெற்றே செயல் புரிதல் வேண்டும்.

(7) வீடு கட்ட அதற்கு அஸ்திவாரம் பலம் பெறல் வேண்டும். அதைப் போல் சுவர் எழுப்பவும் அதற்குகந்த கலவைகள் அததற்குகந்த அளவை வைத்துக் கூட்டிச் சுவர் எழுப்பினுல்தான் அச்சுவர் உறுதியாய் இருக்கும்.

அதைப்போல் நம் உடலில் உள்ள அமில நிலைகள் அததற் குகந்த தன்மையில் இருந்தால்தான் உடல் ஆரோக்கியம் கொள்ளும். இவ்வுடல் ஆரோக்கியம் பெற்ருல், அதுவே எண் ணத்தின் மையக் கோலாகி, ஆத்மீகத்தின் ஆத்ம சக்தியைப் பெற முடியும்.

நாம் சலிப்பு, சங்கடம், கோபம், பேராசை, அதி உல்லாசம், அதி காம இச்சை இப்படி உள்ள நிலையில் வாழும்பொழுது, நாம் எடுக்கும் சுவாசமானது கனமாகி நம் உடலில் சேரும் அமிலத் தன் மையில் கூடியும், குறைந்தும் அவ்வமில சக்தி, சுரப்பி அமிலம் சுரக்கும் பொழுது, உடல் நிலையும் பாதிக்கப்பட்டு, எண்ண நிலை யும் சோர்வு பூண்டு, நம் உடல் என்னும் இக் கூடே பல பிணி களுக்கு ஆளாகின்றது.

சுவர் எழுப்ப அதன் கொள் அளவில் எந்தச் சாமான் அளவு நிலையிலிருந்து மாறுபட்டாலும் அச்சுவருக்குப் பலமில்லை. மணல் அதிகப்பட்டால் உதிரும் நிலையும், சிமெண்ட் அதிகப்பட்டால் வெடிக்கும் தன்மையும், நீர் அதிகம் சேர்ந்தால் அதன் பக்குவ முறைக்குச் செயல்படா வண்ணமும், மனிதனுல் எழுப்பப்படும் சுவருக்கே அதன் கலவை குணம் மாறுபடும் பொழுது உரு நிலை கொள்வதில்லை.

இம் மனித உடலுக்கும், இம் மனிதனின் உடலில் உள்ள அமில சக்திகள் கூடிக் குறையும் நிலை ஏற்பட்டால் சக்தி நிலை எப்படி வலுப்பெறும்?

**16–4–80**

(8) காட்சி: ஆற்றின் கரையும், ஓடமும் துடுப்பும் இருப் பதைப் போலவும், நாங்கள் இக்கரையிலிருந்து அக்கரைக்குச் செல்ல அவ் ஓடத்தில் ஏறி அவ் ஓடக்காரனுல் நீரின் போக் குக்குச் செல்லாமல், நீரை எதிர்த்துத் துடுப்புப் போட்டு ஓடத்தை ஓட்டி அக்கரைக்குச் சென்று இறங்குகின்ருேம்.

விளக்கம்: அதைப்போல் இவ்வுலக பந்தத்தில் பிறந்த நாம், நம் ஆத்மாவைக் கரைசேர்க்க இவ்வாழ்க்கை என்ற ஆற்றினைக்

கடக்க எதிர்த் துடுப்புப் போட்டுத்தான் நாம் செல்லும் மார்க்கத்தை இவ்வுலக வாழ்க்கையில் இருந்து ஆவி உலக வாழ்க்கைக்குச் செல்லவேண்டும்.

நாம் செல்லும் ஓடமும், நாம் நம்பி ஏறிய ஓடக்காரனின் திறமையும் நன்ருக அமைந்தால், நாம் செல்லும் வழி எளிதாகின்றது. இவ்வுடல் என்ற இக்கூடு ஆரோக்கியமுடன், நல்லெண்ணம் பெற்ற நிலைகொண்ட ஆத்மாவாய் இவ் ஓடம் போல் இருந்தால், அதை ஓட்டுபவனின் திறமையை ஒத்த வாழ்க்கையில் ஒன்றப்பெறும் அவரவர்களுடன் இணையும் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் அமைதல் வேண்டும்.

நல்ல ஓடமும், திறமை மிக்க ஓடக்காரனும் இருந்தால், செல்லும் வழி எளிதாகின்றது. எதிர்த் துடுப்புச் செலுத்தி நம் வாழ்க்கையில் ஏற்படும் பல நிலைகள் கொண்ட எதிர் நிலைகளை, இத்துடுப்புப் போல் எதிர்த் துடுப்புப் போட்டுத்தான், அக்கரைக்குச் செல்ல வேண்டும்.

ஓடம் செல்லும் வழியிலும் செல்ல முடியாது. நீர் தானுக அவ் ஓடத்தை இழுத்துத்தான் செல்லும். நடக்கும்படி நடக்கட்டும், நமக்கு வரும் வினைகள் எல்லாம் ஆண்டவன் அளித்தது, அவனே பார்த்துக்கொள்வான் என்ற நிலையில் நீர் போகும் போக்கில் ஓடம் போவதைப்போல் அல்ல.

எந்த ஒரு இன்னலான நிலை ஏற்பட்டாலும், அதன் போக்கில் செல்லாமல் இன்னலிலிருந்து மீளும் வலுவான, எதிரான துடுப்பைப்போன்ற வலுக்கொண்ட செயல் செய்தால்தான், இன்னலிலிருந்து மீளவும் முடியும், நம் வாழ்க்கைப்பாதையும் நன்ருக அமையும் என்பதனை உணர்ந்து, நாம் இஜ் ஜென்மப் பிறப்பில் வந்த பயனை, வாழ்க்கையென்ற வடிவின் முழுமை எய்தி, நாம் அடைய வேண்டிய அக்கரையின்—அக்கரையின் என்பதற்குப் பொருள், இப் பிறப்பில் நாம் வந்ததுவே, முன் ஜென்மத்தில் விட்ட குறையினுல்தான். அதற்காகத்தான் அக்கரை என்னும் ஞான ஒளி மார்க்கத்திற்குச் செல்லும் வழியறிந்து செயல்பட வேண்டும்.

(9) வாழ்க்கை என்ற நிலை, அமைதியுடன் செல்லல் வேண்டும். அதுதான் வாழ்க்கையின் முழுமை. ஒரு நிலைகொண்ட ஆண்டவனின் ஜெபத்தை மட்டும் ஜெபித்தே ஆண்டவன்பால் செல்வதல்ல வாழ்க்கை. ஒரு நிலை கொள்ளவேண்டும். ஆண்டவனிடம் சென்று ஐக்கியப்பட வேண்டும்.

எங்குள்ளானப்பா நீங்கள் சொல்லும் ஆண்டவன்? ஒன்றுடன் ஒன்று இணைத்ததுதான் ஆதிசக்தியின் நிலையே. காற்றும், நீரும் மோதுண்டால் ஒளி பிறக்கின்றது. ஒலியும், ஒளியும் மோதுண்டால் ஜீவன் பிறக்கின்றது. ஜீவன் பிறக்கவே இவ் ஒலி, நீர், ஒளி ஏறிய பிறகு தான், அஜ் ஜீவனுக்கு சுவாசத் துடிப்பு கொள்ளுகின்றது. சுவாசத் துடிப்பு பெற்றவுடன் அமில குணத்தை அஜ்ஜீவ அணு தன்னுள் மோதுண்டு மோதுண்டு ஈர்க்கும் பக்குவம் பெற்றுச் சுழலுகின்றது.

இப்படியே அதன் ஈர்ப்பின் நிலைக்கொப்ப, அது சேமித்த அமில குணத்தின் நிலைக்கொப்ப, இப் பூமியில் மோதுண்டு அதன் வளர்ச்சிநிலைக்கு அதன் ஈர்ப்பிற்கொப்ப அதன் சுவாசத்திற்கேற்ற வழித்தொடர் பெறுகின்றது.

எவ்வுயிர் அணு தோன்றி அதன் குண நிலை பெறுவதும், ஒன்றுடன் ஒன்று மோதாத நிலையில் ஜீவனே பெற இல்லை. இரண்டு நிலைகள் கொண்ட நிலையின் மோதலில் மூன்ருகி, நான்காகி, பலவாகிச் சுழலுவதுதான் ஒவ்வொரு மண்டலமும், மண்டலத்தில் சிக்கியுள்ள எல்லா ஜீவன்களும்.

தனித்த ஆண்டவன் எங்குள்ளான்? அமைதி கொண்ட ஒரு நிலைகொண்ட ஆண்டவன் ஜெபம் பெற்று, செல்லும் நிலை எதுவப்பா? முடிவே இல்லாத உண்மையின் ஒளிர் தத்துவ அடக்கமே, இச் சுழலில்தான் உள்ளது.

மோதுண்ட சுழற்சியில் ஜீவன் கொண்ட வளர்ச்சியில் வடிவுகளாகி, வழங்கும் மண்டல வளர்ச்சி, ஜீவ ஆத்மாக்களே. தனித்த ஆண்டவனில்லையப்பா. எல்லாமில் எல்லாமாய் ஒளிரும் எல்லாமே ஆண்டவன்தான்.

**20–4–80**

*(10)* ஞான வழிபெற்றவர்களுக்கு:

காட்சி: ஆட்டுக்கல்லில் அரிசியைப்போட்டு ஆட்டுவதைப் போலவும், ஆட்டும் நிலையில், ஒரே மாதிரி ஆட்டி வந்த நிலையில், ஒரு கல் சிக்குண்டவுடன் ஒலி கிளம்பி நர நரத்த நிலையுடன் மீண்டும் முதல் நிலையிலேயே அம் மாவு அரைபடும் பக்குவத்தைக் காட்டுகின்ருர்.

விளக்கம்: ஞானத்தின் வழி பெற்று நாம் சென்ருலும் நம்மையறியாமல் சில ஊடுருவல்கள் வந்து மோதும். அம்மோத

லின் நிலைக்காக நாம் நம் ஞானத்தைச் சஞ்சலப்படுத்தாமல் சுழலும்பொழுது மோதிய நிலையும் நம் ஞானத்துடனே கலந்து தனித்து நிற்காமல் நம் ஞான வழி மீண்டும் செயல் கொள்ளும்.

*(11) காட்சி:* பெரிய ஆலமரம். அதற்கு அருகில் அடுப் பெரித்து, உலைவைத்துச் சமையல் செய்கிறார்கள். அதே சமயத்தில் மற்றோர் இடத்தில் சிறிய ஒரு செடி பகலின், சூரியனின் நேர் உஷ்ணத்தைத் தாங்காமல் வாடி வதங்கி நிற்கின்றது.

*விளக்கம்:* ஆரம்ப ஞான வழிக்குச் சூரியனின் வெப்ப நிலையையே தாக்குப் பெறாத சிறிய செடியின் நிலையில் நாம் இருந்தாலும், ஆலமரத்தின் நிலைக்கொப்ப, நம் ஞானத்தின் விழுதுகளை வளர்த்துக்கொண்டால், ஆலமரத்தைச் சுற்றியுள்ள இடங்களிலெல்லாம் சூரியனின் இயற்கை ஒளியைக்காட்டிலும் செயற்கையாய் எரிக்கப்படும் இவ் எரிகள், ஆலமரத்தை எந்த நிலையிலும் தாக்குவதில்லை. ஆலமரம் மட்டுமல்ல, வளர்ந்த எம் மரமும்தான். அதைப்போல் தன் நிலையில் உயர்ந்த, ஞான வழிபெற்ற ஞானிகளை எந்நிலைகொண்ட சஞ்சலங்களோ, மற்ற எதிர்படும் எல்லா நிலைகளும் (நன்மை, தீமை கொண்ட இரண்டு நிலைகளும்) அந்த ஞானியின் நிலையில் ஒட்டாமல் அவர் ஞானம் வளர்ந்து கொண்டே இருக்கும்.

*(12) காட்சி:* நிலத்திலிருந்து ஓர் ஆத்மலிங்கம் வளர்ந்து வருகிறது. அவ்விலிங்கமே ஓர் மரமாக சப்த ரிஷியைப்போல் காட்சியளித்து, மேடான நிலையில் நின்று கொண்டு அவர் கையிலிருந்து ஓர் ஒளியான லிங்கத்தைக் காட்டி நிற்கின்றார். மேடான இடத்திற்குக் கீழ் பலர் நின்று கொண்டு அவரால் யாருக்கு அவ்வொளி லிங்கம் அளிக்கப்படும் என்று பலரும் கை ஏந்தி வேண்டி நிற்கின்றனர். இவரோ அவ்வொளி லிங்கத்தை மேலும் கீழும் ஆட்டி ஆட்டி அவ்வொளியைப் பாய்ச்சிக்கொண்டே தான் உள்ளாரேயன்றி, யாருக்கும் தனித்து அவ்வொளி லிங்கம் அளிக்கப்படவில்லை.

ஆனால், அவர் உருட்டிய ஒளி அலைகள் பாயப்பெற்ற, அவ்வொளியை ஈர்த்து, தன் ஒளியை அவ்வொளியுடன் கலக்கும் நிலைப்படுத்திய ஒளி ஆத்மாக்கள் எல்லாம், அவ்விலிங்க ஆத்மாவிடம் சென்று ஐக்கியப்படுகின்றன. மீண்டும் அவர் கையிலிருந்த அவ்வொளியான லிங்கம் முதலில் வீசிய ஒளியைக்காட்டிலும் அதிக ஒளி பரப்பிக் கொண்டே உள்ளது.

அவ்விலிங்கமே கிடைக்கும் கிடைக்குமென்று கையேந்தி நிற்பவர்கள் நின்று கொண்டேதான் இருக்கிறார்கள். அச் சப்த

மகரிஷியும், தான் பெற்ற அவ்வொளி லிங்கத்தைச் சிரித்துக் கொண்டே வளர்த்துக்கொண்டே தான் இருக்கிறர்.

விளக்கம்: ஆண்டவன் அருள் என்பது ஆண்டவனுய் நமக் களிப்பதல்ல. ஆண்டவன் ஒளி வடிவில் எல்லாமில் எல்லாமாய் ஒன்றுபோல் தான் ஒளி வீசுகின்றுன். அவ்வொளி அருளே நாம் பெற்று, அவ்வொளியுடன் ஒன்றும் ஒளியாய்த் தான், நம் செயல் இருக்க வேண்டுமே யன்றி, ஆண்டவனே வந்து நமக்களிக்கட்டும் என்று ஏங்கி நிற்கும் நாள் வரை காத்துத்தான் இருக்க வேண்டும்.

எவ்வளவு காலங்கள் காத்திருந்தாலும், அவ்வொளியை ஆண்டவனே வந்து நமக்கு அருளப்போவதில்லே. அவன் தந்த ஒளியை அவனதாக்கி அவனுடன் ஐக்கியப்படுவதுதான் ஞான ஒளி பெறும் ஆண்டவனின் அருள் சக்தி. அவன் ஒளியுடன் நம் ஒளி கலக்கப் பெற்ருல், நம் ஒளியைக் கொண்டு பலருக்கு ஒளி பரப்பலாம்.

இதன் நிலேயைப் புரிந்து ஆண்டவன் அருளே வேண்டி நிற் காமல், ஆண்டவனுடன் ஐக்கியப்படும் நிலே வழி பெற உம் சக்திகளேச் செயலாக்கிடுங்கள்.

**21–4–80**

இந்த ஞான ஒளிபெறும் பக்குவத்திலும் ஒருவரைப்போல் ஒருவர் நிலே இருந்திடாது. ஒவ்வொரு உடல் அமில குண வளர்ச் சியைக் கொண்ட பக்குவ மேம்பாட்டில் வித்திடும் ஞான வளர்ச் சிதான் அதன் வழித் தொடர் பெறும்.

ஒன்றை ஒத்த விதை நெல்லே, இரண்டு தோட்டக்காரர்கள் அவரவர்கள் ஊரில் பயிர் செய்தாலும் அம்மண், நீர் அங்குள்ள சீதோஷ்ண நிலே, அதைப் பயிர் செய்யும் மனித ஆத்மாக்களின் எண்ண வளர்ச்சியின் வளர்ப்பு முறை இவை கொண்டுதான் அப்பயிர் வளர்ந்து பலன் தரும்.

ஒரு தோட்டத்தில் வளர்ந்த விதை நெல்லேயே மாறு கொண்ட ஊரில் பயிர்செய்யும்பொழுது அதன் மகசூலும், சுவையும் வேறு கொண்டுதான் அமைகின்றது. அதைப்போல், ஞானத்தின் ஈர்ப்பும், அதை ஈர்த்துச் செயலாக்கும் முறைப்படித் தான் நம் ஞான ஒளியும் பிரகாசிக்கும்.

ஒருவர் நிலையை வைத்து மற்றவர்கள் நிலையை உயர்வு கொண்டும், தாழ்வு கொண்டும் எண்ணிடலாகாது. எல்லோரும் (ஞானத்தின் வழித்தொடர் பெற்றவர்கள்) தான் பெற்ற ஞான வளர்ச்சியின் முக்தி நிலைகொண்ட பிறகு, தனித்தனி ஒளிகளாய் வளர்ச்சி கொண்ட ஞான ஒளியெல்லாம், சப்த ரிஷிகள் போன்றோரின் நிலைபெற்ற பிறகும், அவரின் வளர்ச்சி நிலைபெற்ற, அமில குணத்தின் வட்டச்செயலில்தான் செயல்கொள்ளுகின்றார்.

எல்லோரும் பக்தி கொண்டு வணங்குவதும் ஒன்றை ஒத்து ஒன்றில்லை; ஞான வளர்ச்சி பெறும் நிலையிலும் ஒன்றை ஒத்த நிலையில் ஒன்றில்லை. சப்த ரிஷியாய் நிலைக்கப்பெற்ற நிலையிலும் ஒன்றை ஒத்து ஒன்றில்லை; மண்டலங்களாய் உருளும் மண்டலங்களும் ஒன்றை ஒத்து ஒன்றில்லை. ஆனால், ஒன்றின் சக்தி கொண்டு ஒன்றி வாழும் இவ் எல்லாமில் எல்லாமுமே அவ் ஒன்றே சக்தியாய், ஆதிசக்தி ஒன்றியுள்ளாள் என்பதனை உணர்ந்து எவ்வாத்மாவையும் குறை கண்டும், சலித்தும் வாழாமல் நம் நிலையில் ஏற்பட்டுள்ள அமில குணத்தின் சக்தியின் வீரிய நிலையை எவ்வழியில் அதிகமாகப் பெற்று வழிபெற்றோமோ, அதன் வளர்ச்சியில் ஞானத்தை வழிப்படுத்துங்கள்.

நம் முன்னோரின் கூற்றுப்படி, விதைத்த விதைதானே முளைக்கும் என்பதனை உணர்ந்து ஞானத்தின் வழித்தொடர் பெறுங்கள்.

*(13) காட்சி:* சில கனிகளைப் பறித்து அப்படியே உண்ணுகின்றோம். சில கனிகளுக்குத் தோல் நீக்கப்பட்டு உண்ணுகின்றோம். பலாப்பழம் போன்ற கனிக்கு அதன் முள்ளை அகற்றி அதற்குள் இருக்கும் சதைப்பகுதியைப் பிரித்துச் சுவையான பலாச்சுளையை எடுத்து, கொட்டை நீக்கித்தான் உண்ணுகின்றோம்.

நம் முன்னோர்களால் முக்கனியின் சுவையை எடுத்து 'என்ற' சொல் நாமத்தின் அமுதிசையைக் கேட்டு மகிழ்ந்துள்ளோம். முக்கனியை வைத்து வணங்குகின்றோம். மாங்கனியை அப்படியே கடித்துச் சுவைத்து உண்டு அதன் கொட்டையை வீசிவிடுகின்றோம். வாழைப்பழத்தின் தோலை நீக்கி அதை அப்படியே சுவைக்கின்றோம். பலாச்சுளையை எடுக்கப் பல வேலைகள் செய்து தான் உண்ண முடிகின்றது.

இதன் உருவ நிலை என்ன? முக்கனிக்கும் சுவையுண்டு; ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்குவ நிலைகொண்டுதான் அதனை நாம் உண்ண முடிகின்றது. அதைப்போல், நம் ஆத்ம ஞானத்தை

இவ்வழித்தொடர் எல்லாம் பெறும் நிலைப்படுத்தி மாங்கனியை ஒத்த பூஜை வழிபாட்டை பக்தியில் சுவைத்து மற்றவற்றை கொட்டையைப்போல் அகற்றி, நம் எண்ணத்தைச் சுற்றியுள்ள உலக நிலைகளை வாழைப்பழத்தின் தோலைப்போல் நீக்கி, ஞான வழிபோல் அப்பழத்தை உண்டு, நம்முள் கலந்துள்ள பல அணுக்களின் முட்களை நீக்கி, சதையான நிலையை எண்ணுமல் நம்முள்ளுள்ள சுவையான சுளையைச் சுவைத்திட, கொட்டை என்ற எதிர் நிலையை நீக்கி, சுவைத்திடல் வேண்டும் என்ற பக்கு வத்தை உணர்த்த முக்கனியைப் படைத்தார்கள்.

கலசம் வைத்து பூஜிக்கின்றனர். அதே போல் கோயில்களில் யானையை வைத்து யானையிடம் ஆசி பெற்றுக் கோயிலுக்குச் செல்லுகின்ருர்கள். இல்லங்களில் பூஜை புனஸ்காரம் செய்யும் பொழுது பசுவின் கோமயத்தைத் தெளிக்கின்றனர். தீபத்திற்கு ஐந்து முகங்களை வைத்துத் தீபம் ஏற்றுகிருர்கள். அன்று வாழ்ந்த சித்தர்களால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பொருள் கண்டு உணர்ந்து தான் வழிபடுத்திச் சென்ருர்கள்.

இதன் விளக்கமென்ன?

**26–4–80**

கலசம் வைத்து பூஜிப்பதின் விளக்கம்:

பலவாகியுள்ள நாம், கலசத்திற்குக் கிழ்பரப்பியுள்ள அரிசியைப்போல் ஒன்ருய் ஈர்க்கும் நிலைப்படுத்த, இவ்வுலகச் சிக்கலிலிருந்து மீள்வதற்காக, அக்கலசக் குடத்திற்கு மேல் சுற்றியுள்ள நூலைப்போன்ற சிக்கலிலிருந்து மீண்டும், கலசத்திற்குள்ளுள்ள தெளிந்த நீராக, ஜீவ சக்தியை அளிக்கவல்ல, அந் நீரைப்போல் தெளிந்த எண்ணம் கொண்டு, கலசத்திற்கு மேல் வைக்கப்படும் அவ் ஐந்து மாவிலையைப்போல், ஐம்புலனை அடையப்பெற்ற நாம், கலசத்திற்கு உச்சியில் வைக்கப்படும் தேங்காயைப்போல், ஐம்புலனை ஒரு நிலைப்படுத்தி, தேங்காய்க்கு உள்ள மூன்று கண்களைப்போல் இவ்வுலகில் அமைந்துள்ள மூன்று குண நிலையை ஒன்றுபடுத்தும் தத்துவத்தை விளக்கத்தான் கலசத்தை வைத்து, புஷ்பத்தைப்போட்டு, அதற்குகந்த தூப வாசனைகளைச் செலுத்தி, நம் எண்ணத்தை அதற்குகந்த செயல்படுத்தி, வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படும் காலங்களில், இக்கலசத்திஞல் நாம் ஜெபிக்கப்படும் ஜெபங்கள் ஜீவ சக்திகொண்ட அந்நீர் ஈர்த்து நமக்குத் தெளிந்த நிலைகள் ஏற்படுகின்றன.

கலசம் வைத்து பூஜிப்பதினுல் பல நற்பயன்கள் கூடும் என்றெல்லாம் வழிப்படுத்திக் காட்டினுர்கள்.

யானையை முதல் தெய்வமாக வணங்கும் விஞயகனுக்கு ஒப்பிட்டு, யானையை விஞயகனுக வணங்குகிருர்கள். அப்படி யென்ருல் யானையின் லத்தியை மிதிப்பதுவும், யானையிடம் குழந்தைகளேத் தந்து வாங்குவதுவும், பெரியோர்கள் யானையிடம் ஆசீர்வாதம் பெறுவதுவும் எதற்காக?

ஆண்டவன் ஊர்வலங்களில் யானையை முன் அழைத்துச் செல்கின்ருர்கள். யானைக்குகந்த சக்தித்திறன் என்ன?

இருபது மாதங்கள் கர்ப்பத்திலிருந்து, சில நூறு ஆண்டுகள் யானைகள் வாழ்கின்றன. யானைக்குச் சில நற்குணங்கள் அபரிமித மாக அமைந்துள்ளன. யானையின் எண்ணச்சுழற்சியில், தீய ஆவி உள்ள ஆத்மாக்கள், அதன் எண்ண வட்டத்திற்குள் செல்ல முடியாது.

மனித உடலிலிருந்து பிரிந்த ஆத்மாக்களின் உயிரணுவும், யானையின் ஈர்ப்பில் சிக்குவதில்லே. யானையின் பிறப்பே தனி யான அமில குணத்தை உடைய பிறப்பின் வட்டத்தில் வந்தது.

உயிரணுக்களின் மனித உருவில் உருப்பெற்று, மற்ற உயிர் ஜெந்துக்களுக்கு இம் மனித ஆத்மாக்கள் சென்ருலும், யானை யின் ஈர்ப்பிற்குச் செல்ல முடியாது. இவ் அபரிமிதமான அமில குணத்தின் ஈர்ப்பின் ஜீவனுன யானையின் நிலே உள்ள இடங்களில், தீய ஆவிகள் அண்டாது. அதற்காகத்தான் யானையை நல்லு ணர்வின் பக்தி வழிபாட்டு புண்ணியஸ்தலமான கோயில்களில் வைத்து வணங்குகிருர்கள்.

குழந்தைகளே யானையிடம் தந்து வாங்குவதினுல் குழந்தை களுக்கு அதன் சுவாச அமில குணத்தின் சக்தி பெற்று, அக்குழந் தையின் மேல் மற்ற தீய அணுக்கள் பரவாமல் இருக்கும். யானை யின் லத்தியை மிதிக்கின்ருர்கள். அதிலிருந்து வெளிப்படும் உஷ்ண அலேயினுல் நம் உடல்களுக்குச் சில ஆரோக்கிய நிலேகள் கூடப்பெறுகின்றன. முந்தைய காலங்களில் அரசர்களால் எதற்கும் முதலிடமாக யானையை வைத்தது இந்த அடிப்படை யில்தான்.

எதிரிகளின் தன்மையிலிருந்து ஏவப்படும் பில்லி சூன்யம், துர் மந்திரங்கள் இவையெல்லாம் அன்ருண்ட அரசர்கள் காலத் தில் போர்க்களத்தில், யானையை முன் நடத்தி இவர்கள் போருக்குச் சென்றதுவும், இதன் அடிப்படைக் குணத்தில்தான்.

சூழ்ச்சியில் ஏவப்படும் மந்திரங்களிலிருந்தும், குட்டிச்சாத்தான், பேய், பிசாசு என்கின்றார்களே, இவைபோன்ற நிலைகளிலிருந்தெல்லாம் யானையில் ஏறிச் செல்லும் அரசர்கள் காக்கப்படுகின்றனர்.

காலப்போக்கில் மற்ற மிருக இனங்களும், மனித ஆத்மாக்களும் கூடியுள்ள நிலையில் யானையின் பிறப்பு விகிதம் குறைந்ததற்கு இதுவும் காரணம். நம் மனித ஆத்மா உடல் இறந்த பிறகு இவ்வுடலிலிருந்து பல அணுக்கள் பிறப்பிற்கு வருகின்றன. யானையின் உடல் அமிலத்தன்மை அந்நிலை பெறும் தன்மை குறைவுடையது.

யானையின் சுவாச அலைகள் பட்டாலே அவ்விடங்கள் புனிதம் பெறும். இதனை மேற்கோள் கொண்டுதான், நம் முன்னோர்களினால், யானையைத் தெய்வமாகவும், அதே போன்று பசுவை இல்லத்தில் லட்சுமியாகவும் வணங்கி வழிபட்டனர்.

பசுவுக்கு உகந்த நற்குணங்கள் யாவை?

மற்ற மிருகங்களைப் போலவும், மனிதனைப்போலவும் பசுவிற்குப் பல எண்ணங்கள் மாறி மாறி வருவதில்லை. பசுவின் குணமே சாந்தமான, அமைதி கொண்ட குண நலம் கொண்ட நிலை. பசுவின் பால் அருந்துவதினால் அதன் குண அமிலத்தைக் கொண்ட சுவாசத்தைக்கொண்டு, அதன் உடலில் உதிரமான அப்பாலை நாம் அருந்துவதினால், அதற்குகந்த குண அமிலத்தை நாம் பெறுகின்றோம்.

மற்ற மிருகங்களிலிருந்தும் பாலைப் பெறும் சந்தர்ப்பமிருந்தாலும், நம் முன்னோர்கள் பசுவின் பாலைத்தான் உயர்த்தி வழிகாட்டிச் சென்றார்கள். அதே போல், பசுவின் குண நிலையை ஒத்த ஆவி ஆத்மாக்கள், ஆவி உலகில் இருப்பதில்லை. குறைந்த நிலையில் தான் அவை இருந்தாலும் அதன் வழித்தொடர்ச்சி பிறப்பில் வருகின்றது.

பசுவின் ஈர்ப்பிற்கு துவேஷ குணம் கொண்ட ஆக்ரோஷமான ஆவிகள் அதன் ஈர்ப்பிலும், அதன் எண்ண அணுக்களிலும் இல்லாததினால் பசுவின் கோமயம் தெளிக்கப்படும் இடத்திற்கும் பசுவின் எரு சாணத்தைக் கொண்டு நடத்தப்படும் யாகங்களின் புகை மண்டலத்திற்கும், பசுவின் நெய் மருத்துவத்திற்கு உயர்ந்ததாகியதற்கும், பசுவின் சாணத்திலிருந்து ஆண்டவனின் மந்திர விபூதியை திருநீருக்கி நாம் அணிவதற்கும் நம் முன்னோர்கள் பசுவைத் தெய்வமாக்கிக் காட்டினார்கள்.

இப்பொழுது புரிகிறதா பசுவின் உயர்ந்த சக்தி?

நம் மனிதனைக்காட்டிலும் மிருகங்களில் பலவற்றிற்குப் பல உன்னத சக்தி குணங்கள் இயற்கையிலேயே அதிகமாய்ப் படைக்கப் பட்டுள்ளன. எதனையும் அறியும் ஆற்றல் பெற்ற மனிதனே தன் நிலை மறந்து வாழ்கின்றான்.

மனித ஆத்மாக்கள், பிற உலக ஆசைகளுக்கு அழகு பெற்று வாழ விரும்புகின்றன. நம் உள் அழகை அழகாக்கி, அன்பாக்கி நம் ஆத்மாவை அழகுற வாழ வழி நடத்துங்கள் என்ற சத்தி யத்தை உணர்த்த நம் முன்னோர்களான பல சித்தர்களினால் பல தத்துவங்கள் விளக்கப்பட்டும் நம்மால் உயர்ஞானம் ஏற்கப் படவில்லை.

**27–4–80**

இதே முறைப்படிதான் தீபத்திற்கு ஓம் என்ற ஒலியின் உருவ எழுத்தை மேல் வைத்து ஐம்புலனின் ஐக்கிய ஒளியை ஐந்து முகங்களாக்கி தீபமேற்றி வணங்கிட நம் முன்னோர்கள் வழிப்படுத்திச் சென்றார்கள். ஒவ்வொரு முறைகளுக்கும் தத்துவ மையம் கொண்டே சகல நிலைகளையும் உணர்த்தினர்கள்.

பல முறைகளை உணர்த்தியும், வாழ்க்கை என்ற சுழலிலிருந்து ஞானம் பெறவும், அதற்குகந்த ஜெப முறையை வழிப்படுத்தி யதையெல்லாம் அதற்குகந்த காலங்கள் வரட்டும், இப்பொழுது வாழ்க்கை நிறைவுக்கு உண்டான வழி செயல்முற்றுப்பெற்ற பிறகுதான் ஞான வழிக்கு நம் ஜெப நிலை செல்ல வேண்டு மென்று கால நிலையைக் கடத்தி அதற்குகந்த காலத்தை ஏற்கும் நாளை எண்ணியே காலத்தைக் கடத்தி விடுகின்றனர்.

பசிக்கு உண்ணுகின்றோம். அதற்குகந்த காலம் வரட்டும் என்று காத்திருப்பதில்லை, பசிப்பவன். அதே போல் எச்செயலில் இருந்தாலும், எச் சூழ்நிலையில் சிக்குண்டு இருந்தாலும், நம் உடம்பில் இருந்து வெளிப்படும் கழிவை வெளிப்படுத்த காலம் வரட்டுமென்று பொறுத்திருக்க முடிகின்றதா?

உடலில் உள்ள அமிலத்தை உண்டு, கழித்தே வாழும் நாம், அவ்வுடலுக்குகந்த உயர் குணமுடைய அமில ஞானத்தைப் பெற மட்டும் கால நிலையையும், வயது வரம்பையும் நீட்டிவரும் நாள் என்று எண்ணிக் கடத்தி வருகின்றோம்.

நம் ஆத்மாவுக்குகந்த உயர் ஞானத்தைப் பெற இன்றைய கலியில் உள்ள ஆத்மாக்களில் வழிபெறும் பக்குவம் இன்றைய நாகரீக உலகில் மிகவும் குறைந்துவிட்டது. இன்று உணர்த்தப் படும் முறையும் ஏற்கப்படும் வடிவிலில்லே.

ஜெபம் பெறுங்கள், தன் உண்மை நிலேயைத் தான் உணர்ந் தால், தன் ஆத்மாவின் நிலே உயரும் என்ற வழித்தொடர் பெற்றே ஜெபநிலே கொண்டிடுங்கள்.

**29–4–80**

கண்ணுடியில் படிந்துள்ள தூசியை அகற்றிஞல்தான் (துடைத்தால்தான், நம் முகம் தெளிவாகத் தெரியும். இருட்டில் உள்ளபொழுது வெளிச்சத்தைக் காண மகிழ்கின்ருேம். வெயிலில் உள்ளபொழுது தான் நிழலுக்கு ஏங்குகின்ருேம். ஆனுல் இந் நிலே பெற்ற பிறகு அதன் உண்மையின் நிலேயிலேயே உள்ளோமா?

தன்னிச்சைப்படி இவ்வழித்தொடரின் வாழ்க்கையில்தான் சுழன்று உள்ளோம். அதே போல் நம் வாழ்க்கையில் பல நிலேகளே நம் உடலினுள் கூட்டிக்கொண்டுள்ளோம். இந்நிலேயை மாற்றி நம் ஒளியைக் காண முயல்கின்ருேமா? கண்ணுடியின் தூசியை அகற்றித் தெளிவாய் உருவைக் காண்கின்ருேம். இவ்வுடலினுள்ள அசுத்த அலேகளேயும், தீய எண்ணங்களேயும் மாற்றி நம்மின் உண்மை அழகைக் காண முயல்கின்ருேமா?

நம்மிடமுள்ள அசுத்த அலேகளே அகற்ற நாம் விழையாமல் மற்ற ஆண்டவன் வந்து தாஞக அகற்றுவான் என்று ஆண்டவனே வேண்டி அக அழகு காண முயல்கின்ருேம். செம்பில் உள்ள அசுத்த நீரில் அதற்கு மேன்மேலும் நல்ல நீர் ஊற்றும்பொழுது, நல்ல நீரும் அசுத்த நீரும் கலந்து வெளிப்பட்டே பிறகு தாஞக அனைத்தும் நல்ல நீராகிவிடுகிறது. அதைப்போல் நம்மில் உள்ள தீய அணுக்களே நாம் எடுக்கும் நல் உணர்வின் ஈர்ப்பிஞல் மேன் மேலும் சேமிக்கப்படும் நல் உணர்வான அமில குணங்கள் அதிகப் படப்பட இத்தீய அணுக்கள் பல ரூபத்தில் வெளிப்பட்டுவிடும்.

நம் உடலில் இரத்த நாளங்களில் ஆக்ரோஷமான, ஆவி ஆத்மா ஏறி இருந்தாலும், தீய அமில குணங்கள் வெளிப்படும் பொழுது அதன் குண அமிலத்திற்குகந்த ஆகாரம் கிடைக்காத தன்மையில் அதன் பாதிப்பான குணத்தூண்டுதலும் நம்மை ஒன்றும் செய்திடாது.

இதனை உணர்த்தத்தான் எண்ணநிலையை ஒரு நிலைப்படுத்தி, சாந்த குணத்தின் சக்தி அமிலத்தை ஈர்க்கும் ஜெப நிலை பெறுங்கள். அன்பு, ஆசை என்ற பிணைப்பான நிலைக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டு அதி அன்பினால் வரும் வினையையும், அதி ஆசைகொண்ட பேராசைக் குணத்தையும் வழிப்படுத்திடாமல் இத் தீய குணத்தின் ஆணிவேரை முதலில் சமப்படுத்தும் பக்கு வத்தை ஏற்று நம் ஆத்ம ஜெபம் இருந்திடல் வேண்டும்.

ஆண்டவனின் அன்பு பெற 'அன்பே தெய்வம்' 'அன்பே சத்தியம்' என்ற அன்பு வெறிக்கு அடிமைப்பட்டாலும் நம் ஆத்ம நிலை உயருவது கடினம். நம் எண்ணமெல்லாம் இவ்வுலகுடன் கலந்துள்ள அலையில் உள்ள நல் அலைகளை மட்டும் சேமிக்கும் பழக் கத்தைத் தான் மேற்கொள்ள வேண்டும். தீய அணுக்கள் என்று ஒதுக்கியும், வெறுத்தும் நான் நல்லவன் என்ற ஒரே வெறி கொண்ட நிலைபெற்றாலும் நம் ஆத்மநிலை வளருவது கடினம் தான்.

ஜெபம் பெறுங்கள், நல் உணர்வு பெறுங்கள் என்றெல்லாம் வழிப்படுத்துகின்றோம். அந்த நிலையில் நம் எண்ணக் கலவை வழிப் படுத்திட்ட நிலையில், நம்மை அறியாமல் பிறர் செய்யும், அவர் எடுத்த அமில குணத்தை ஒத்த அலைகள் நம்மை மோதுண்ட நிலையில், அதே சமயத்தில் மற்றொருவர் செய்யும் தவறை, இவர் சுட்டிக்காட்டும் பொழுது, இவரின் நிலையான அமில மோதலின் நிலையால், பல நாட்கள் நாம் நம்முடன் மோதுண்ட அலைகளை அடக்கிப் பழக்கப்பட்ட நிலையில் மற்றோரின் சொல்லில் இருந்து வெளிப்படும் எக்குண எதிர்நிலை மோதலும் நம்மைச் சாடி, அதே உணர்வுடனே நம்மையும் பேசச் செய்யும்.

நாம் பெற்ற ஜெபம் என்னவாயிற்று?

முதலில் நம் நிலையில் பிறரின் சொல், எண்ணத்தைக்கொண்ட அமிலத்திற்கு அடிபணியலாகாது. பல நாள் நமக்குகந்த குண முடன் வாழ்ந்த நிலையில் ஒருவர் வந்து மற்றொருவரின் மேல் சொல்லப்படும் எந்நிலைகொண்ட சொல்லின் அமிலங்கள் நம் மிடம் சொல்லும்பொழுதும், நாம் அவர் சொல்லும் நிலையை வைத்து நம் எண்ணத்தைச் சிதறவிடலாகாது.

ஆத்ம ஞானம் பெறும் வழித்தொடர் பல நிலைகள் உள்ளன. ஒவ்வொரு தடவை நாம் சுவாச நிலை எடுத்து வெளிப்படுத்தும் நிலைகொண்டு அதன் எண்ணத்தை ஒத்த அமிலத்தன்மை உராய்ந்து கொண்டேதான் உள்ளது என்பதனை உணர்ந்து நம் ஆத்ம ஞானம் இருந்திடல் வேண்டும்.

இந்நிலையை உணர்த்தும் தத்துவ ஞானத்தை உணர்ந்து இவ்வாத்மாக்கள் உயர்ந்தால் தான் சக்தி நிலை கூடும். உலக சக்தியும் அண்ட சராசரங்கள் என்று உணர்த்துகின்றனரே அந்த அனைத்து சக்தியையும் உணர்த்த வல்ல சக்தி இவ்வுலக ஆத்மாக்களுக்குத்தான் உண்டு. மனித ஆத்மாவினால் முடியாத சக்தி எச்சக்திக்குமில்லை. இதை உணர்த்தும் நிலை இவ்வுலகம், நம் பூமியின் நிலை கூடிக்கொண்டே உள்ளது.

உலகச் சுழற்சியில் பல அமில சக்திகளை நம் உலகம் ஈர்த்துக் கொண்டே சுழன்றுள்ள நிலையில் உலகின் உள் நிலையிலுள்ள பல அமிலங்கள் வெளிப்பட்டதினால், இயற்கையாய் வெளிப் பட்டது மட்டுமன்றி, நம் மனிதனால் பூமியிலுள்ள பல பொக்கி ஷத்தை ஈர்த்து எடுத்ததினால் மேல் பாகம் கனத்தும், உள் நிலை வலுவிழந்தும் உள்ள நம் பூமியின் நிலை இக்குறுகிய காலப் போக்கில் தன் நிலையைத் தானாக ஒழுங்குபடுத்தும் நிலையில் நம் நிலையெல்லாம் என்னவாகும்? என்பதனை உணர்ந்து இவ்வுடல் என்ற இக்கோளத்தை நம் நிலைக்குகந்த அமிலங்களைச் சேமித்து, நம் உயிர் ஆத்மாவிற்கு ஊட்டம் தந்து, ஆத்ம ஞானம் பெறும் அறிவின் பொக்கிஷத்தின் வழித்தொடரை உருவாக்குங்கள்.

**1–5–30**

இப்பொழுது நாம் சொல்லும் முறையை மனித ஆத்மாக் களால் முந்தைய காலங்களில் இருந்த நிலையை, மாமரத்தில் மரம் முழுவதற்கும் எல்லாக் கிளைகளிலும் கனிகள் ஒன்றைப் போல் கிடைக்கப்படும் நிலையில், ஒத்து வாழ்ந்த நிலை மாறி அரசன் என்ற ஒருவரின் கீழ் ஆதிக்கம் பெற்று, குடிமக்களாய் வழி வந்த வாழையின் நிலையில் ஒரு மரம் ஈனும் குலையில் பல பழங்கள் உள்ளநிலை போன்று வழி வந்து, இப்பொழுதைய நிலை பலா மரத்தையும் ஒத்த ஜாதியின் மரம் ஒன்றுதான், அம்மரத்தில் காய்க்கும் பலாப்பழத்தில் ஒவ்வொரு பழத்திற்குள்ளும் பல சுளைகள் அடக்கம் பெற்றுள்ள நிலைபோல் ஜாதி என்ற ஐக்கியப் பிணைப்புடைய இன்றைய கால நிலையில், சத்தியத்தின் சக்தியை உணர்த்தினால், சுழன்று கொண்டே உள்ள ரங்கராட்டினத்தை உடனே நிறுத்தும் பொழுது அது அப்படியே நிற்காது. ஓர் அசைவு பட்டுப் பின்னோக்கி முன் வந்துதான் அதனை நிறுத்த முடியும்.

அதைப்போல் சுழன்றுகொண்டுள்ள இப்பிணைப்பான வழி முறை மாற்றத்திலிருந்து நம் மனித ஆத்மாக்களை அவர்களின் எண்ணத் தொடரையே சிறுகச் சிறுக வழிப்படுத்தித்தான் உண் மையின் ஸ்வரூபத்தை உணர்த்திக் காட்டிடல் முடியும்.



2

இதுவரைக்கும் ஆதிசங்கரரின் காலத்திற்குப் பிறகு, மனித ஆத்மாக்களை ஞானமார்க்கத்திற்கு வழிப்படுத்தும் யோக மார்க்கங்களும், பக்திமார்க்கங்களும் மனிதனைத் தன் இச்சையில் வழிப்படுத்தும் நிலையிலேயே விட்டுவிட்டனர். பல மகான்கள் இவ்வுலகத்திற்கு நல்வழி புகட்டப் பல நிலைகளைச் செயல்படுத்தியும், ஈர்த்து எடுக்கும் பக்குவ குணமுள்ள மனித ஆத்மாக்களைச் செயலாக்குவது கடினப்பட்டுவிட்டது.

அதனால்தான், அம் மகான்கள் தாம் உணர்ந்த வழிகளை மட்டும் அனுபவக் கதையாக்கி, கடைசியில் ஆண்டவன் என்றால் யார்? என்ற ஒரு ஞானத்தைப் புகட்டிவிட்டு இந்நிலை பெற மனித ஆத்மாக்கள் எந்நிலை பெற வேண்டும் என்பதனை உணர்த்தாமல் சென்றுவிட்டனர்.

இவ்வளவு காலங்களுக்குப் பிறகு உம்மால் உணர்த்தப்படும் நிலையென்ன? என்ற வினா எழும்பலாம். இந்நிலையை இப்பொழுது உணர்த்துவது என் ஒருவனின் செயல் மட்டுமல்ல.

இப்பூமியில் அவதரித்து, ஆண்டவனான சப்தரிஷிகளின், பலரின் ஆவலை இப்பூமியின் ஆத்மாக்கள், உண்மை உணர்ந்து உயரச் சில போதனைகள் இங்கு அளிக்கப்படுகின்றன. இதற்கும் வினா எழுப்பலாம். எச் சக்தி பரப்பப்பட்டதோ அந்நிலையில் ஏற்றுக்கொண்ட நிலைப்பட்டவரினால் பலருக்கும் நிலைப்படுத்த இச் செயல் நடந்து வருகிறது.

ஒவ்வொரு ஆத்மாவும் தன்னுள் உள்ள ஜீவத்துடிப்பே ஆண்டவன் தான் என்பதனை உணர்ந்து, இஜ் ஜீவனுக்கு ஜீவன் தந்த காற்றும், ஒளியும், நீரும் கொண்ட ஜீவ ஆண்டவன்களை ஜோதி கொண்டு வணங்கியே வழித் தொடர் பெறும் நடை முறைச் செயல்களை உணர்த்திடுவோம்.

**2–5–80**

மனிதர்களால் பல வினாக்கள் எழுப்பப்படலாம். ஆண்டவனை வணங்கி, நம்மையே ஆண்டவனாக்கி, ஞானம் பெறும் வழியையெல்லாம் இம் மனித ஆத்மாக்கள் தானே உணர முடிகின்றது. மிருகங்களின் நிலைக்கு ஞான உபதேசங்களோ, பக்தி வழிபாடோ எதுவும் இல்லையே.

அவற்றிற்கு இவ் உலகின் மாற்றத்தினால் அழியாமல் இன்றுள்ள நிலையிலிருந்து விடுபாடே இல்லையா? என்ற வினாவும்

எழுப்பலாம். மனிதனுக்குத்தான் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவற்றின் நிலை கொண்ட எண்ண வழித்தொடர் உண்டு.

மனிதனுல் இன்றைய நிலையில் ஆடை உடுத்தாமல் அம் மணம் கொண்டு வாழ்ந்திட முடிந்திடுமா? மனிதனுக்கு, ஒரு வனுக்கு ஒருத்தி என்ற இல்லறப் பிணைப்பைப் பிணைத்து, குடும்பம் என்ற குடில் அமைத்து, பல் நிலைகளை மனித ஞானத்தால் பக்குவ மேம்பாடு படுத்தி, தானுகப் பெய்யும் மழைக்கு வடிகாலமைத்து, வழிப்படுத்தியவன் மனிதன்தான்.

மனிதன் கல்லைச் சிலையாக்கி வணங்கினுன், ஆண்டவன் என்ற பக்தி செலுத்த. அதே போன்று பல பக்குவ மேம்பாட்டின் ஞானம் பெற்ருன் மனிதன். மனித அமில குணத்தின் ஞான வளர்ச்சி உயர்ந்தோங்கும் ஆற்றல் கொண்ட, அபரிமிதமான சக்தியின் ஜோதி வளர்ச்சி, இயற்கையில் வழித்தொடரின் அமில குண, ஞான, அறிவாற்றல் கொண்ட இம் மனித வளர்ச்சியின் நிலைக்கொப்ப, மேம்பாட்டின் சக்தி குண அமிலம், மிருக வர்க் கங்களின் சிலவற்றிற்கு வழிப்படவில்லை.

பல ஆயிரம் ஆண்டுகள் மேல் நோக்கிய சுவாசத்தை ஈர்த்து, அவ் ஈர்ப்பின் சக்தி அமிலமான மாணிக்கத்தை ஈர்க்க வல்ல குண முடைய நாக சர்ப்பத்திற்கே, அதன் வட்டத் தொடர்ச்சி அமில குணமானது, மனித ஞானத்திற்கொப்ப மேம்பாடு பெறவில்லை.

இதே போன்று ஒவ்வொரு மிருக இனத்திற்கும், மற்ற ஜீவஜெந்துக்களுக்கும், மனிதனைக்காட்டிலும் பல சக்தி அமில குணங்கள் மேம்பட்டு வளர்ச்சியுற்றிருந்தாலும், மனிதனுல் செய லாக்கவல்ல ஞான வளர்ச்சியின் செயல் கொள்ளும் வழிமுறை நிலைகள் அவற்றின்பாலில்லை.

மனிதனிலிருந்துதான் எல்லா மிருக இனங்களும் செயல் கொண்டதா? என்ருல் அதுவுமில்லை. மிருகத்திலிருந்து மனித இனம் வரவில்லை. ஆனுல் மனிதனுய் வாழும் நிலையில் இவன் எடுக்கும் நிலைகொண்ட சுவாசத்தினுல், ஏழு பிறவியில் இவன் சேமித்த அமில குணத்தின் நிலைக்கொப்ப ஞான ரிஷியாகவும் மிருகத்தின் நிலையிலும் சென்றுவிடுகின்ருன்.

இதுதான் உண்மை நிலை. மிருகங்களிலே, ஊரும் ஜெந் துக்களிலே அதனதன் நிலைக்கொப்பப் பல அறிவு குணங்கள் நிறைந் துள்ளன. மூட்டைப் பூச்சிக்கு மனிதனின் சுவாசமும், மனிதன் தன்னைப் பிடிக்கப் போகின்ருன் என்று அறியும் ஆற்றலும், அதே போல் பல்லியைக் கண்டாலும் தன்னைப் பிடித்து விடும் என்பதை உணரும் ஆற்றலும் அதற்கு உண்டு.

ஒவ்வொரு ஜீவராசிக்கும் தன்னை காத்துக் கொள்ளும் நிலையும், தன் ஆகாரத்தை ஒரே குறியுடன் எடுக்கவல்ல சக்தியும் உண்டு. மனிதனுக்கு மூட்டைப்பூச்சி அவன் மேல் கடித்தால்தான் உணர முடிகிறது. மனிதனுக்கு தன்னைத்தானே தற்காப்புக் கொள்ளும் இயற்கைக் குண அமிலத்தன்மை குறைவு.

அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவற்றின் வழிபெற்ற வன்தான் மனிதன். மனிதனின் இயற்கைக் குணமே அவன் ஞானத்தை வளர்க்கும் வழிபெற்ற அமில குணமுடையதுதான்.

பூனை, நாய் இவையெல்லாம் தன் சுவாசத்தைக் கொண்டு நடப்பதற்கு முதலிலேயே வரப்போகும் நிலையை உணரும் மேம் பாட்டுக் குணமுடையது. இப்படி இயற்கையே கலவையாகி, அக்கலவையில் வெளியான உலகில் ஏற்படும் பலகோடி நிலை களில் கலந்துள்ள நாம், நம் ஞானத்தை நம் முன்னோர்களினால் உணர்த்தப்பட்ட உன்னத வழிக்கோலை வழிப்படுத்திச் செயல்பட வேண்டும்.

ஆண்டவனுக்கு (சிலைக்கு) மாலை முன் போட்டுத்தான் வணங்குகின்றோம். பின் போட்டு அழகு காண்கின்றோமா? எங்கும் நிறைந்துள்ள ஆண்டவனுக்கே மாலையை முன்பக்கம் போட்டாலென்ன? பின் பக்கம் போட்டாலென்ன? என்று செயல் படுத்தாமல் முன்னின்று மாலை அணிவித்து ஆண்டவனையும், முன்னோரையும் வணங்குகின்றோம்.

அந்நிலைக்கொப்ப முன்னோரின் முன் வழிப்படுத்திய தத்துவ ஞானத்தின் உண்மையை உணர்ந்து, ஞான சக்தியை தன் ஞானத் தால் ஈர்க்கவல்ல ஞானம் பெறுங்கள்.

**3–5–80**

மனித ஆத்மாக்களுக்குத்தான் வழி முறையும், செயல் திறமையும் செய்விக்க உணர்த்துகின்றேன். இவ்வுலக மாற்றத் தில் மிருகங்களின் நிலையென்ன? மற்ற ஜீவராசிகளின் நிலையென்ன?

எழுதவோ, படிக்கவோ, செயல் செய்விக்கும் அவயவங்களோ ஜீவன்களின் நிலையெல்லாம் என்ன இவ்வுலக மாற்றத்தில்.

இவ்வுலக மாற்றத்தினால் மனிதனின் நிலைமட்டும் மாற்றப்படு வதில்லை. இப்பூமியின் இயற்கைக் குணமே மாற்றம் கொள்ளப் போகின்றது. நல்ல கனியை அது கெடாத வரைக்கும் சுவை

உணர்ந்து உண்ணமுடிகிறது. அதே கனி அழுகிவிட்டால் நாற்றம் அடிக்கின்றது. அதைப்போன்று மாற்றம் கொள்ளும் தருவாயில் நல் உணர்வு கொண்ட ஆத்மாக்கள், மற்ற ஜீவஜெந்துக்கள் இவற்றின் நிலையில் இருந்து மாறும் அமில குணங்கள்தான், இவ் வுலகமே கல்கிக்குச் செல்லும் அவதார நிலைப்படுத்துகிறது.

தீய எண்ணத்தைக் கொண்ட விஷமான அமில குணங்கள், இவ்வுலகினில், இக் கலியுடன் மாறப்போகின்றது. ஜீவராசி களில் உன்னத சக்தியுடைய நம் மனித ஆத்மாக்கள் காணுத பலகோடி நிலைகள் உண்டு. பலகோடி தாவர வர்க்கங்களுண்டு நாம் கண்டுணரும் பட்சிகளும், மற்ற சாது குணங்கள் கொண்ட பிராணி வர்க்கங்களும் பல உண்டு.

இவ்வுலக மாற்றத்தின்போது அந்தந்த இடங்களின் மாற்ற நிலைக்கொப்ப அங்கங்குள்ள ஜீவன்கள் எல்லாமே இன்றைய நிலை கொண்ட ஜீவ நிலை உருமாறி, அவ்வுயிரணுக்கள் அவ்வுருவிலிருந்து பிரிந்தவுடன், அவ்வுருவுக்குண்டான ஆவியான அமில குணங்கள் நற்குணங்களெல்லாம், ஆவியான நிலையில் திடப்பட்டுப் பல உன்னத சக்திகொண்ட பல கனி வளங்கள் இப்பூமியில் தோன்றிட கலிக்குப் பிறகு கல்கியில் செயல் கொள்ள உதவுகின்றது.

அப்பொழுது அக்கல்கியில் எந்நிலைகொண்ட தன்மையில் உயிரணு வெளிப்பட்டதோ அதன் சக்தி இப்பூமியில், கல்கியில் உருவாக்கும் உயிர்த் துடிப்பின் உன்னத சக்தியில் அவ்வுயிரணுவின் உருவ ஜொலிப்பு இருந்திடும்.

இவ்வுலகம் முழுமைக்கும் இன்றுள்ள உண்மையின் உயிர் ஜீவ நற்சக்திகள் அதிகம். கடலும், மலையும், மடுவும் எல்லாமே. ஜீவத் துடிப்புள்ள சக்திதான் இத்தீய எண்ணங்களும், தீய செயலும் புரிவதெல்லாம் மனித ஆத்மாக்களின் தொடர்தான்.

மனிதனிலிருந்து சென்ற மிருகங்களும் சில உள்ளன. இம் மாற்றத்தினுல் இத்தீய சக்திகள் மாறப்போகின்றன. எத்தீய சக்தியும் கல்கிக்கு மருந்தாகச் செல்கின்றது. எந்த நிலையில்?

இப்பொழுது எப்படி இக் காற்றிலுள்ள விஷத்தன்மையை சில விஷச் செடிகள் தன்னுள் ஈர்த்துக் கொண்டு, இக் காற்றை சுத்தம் ஆக்குகின்றனவோ, அதைப்போல் பல நிலைகளை இன்றுள்ள தீய குணங்களும் இம் மாற்றத்தினுல் வளர்ச்சி பெறப் போகின்றன, கல்கியில்.

இவ்விஷமான காற்று எங்கு செல்லும்? இவ்வுலகம் மாற்றம் பெற்ருல் எல்லாமே ஆவி நிலையாகி, அமில குணப்பட்டு, திடப்

பட்டு மீண்டும் ஒன்றுடன் உராய்ந்து வளர்ந்து கொண்டேதான் உள்ளது. தீய சக்தியையும் அழிக்க முடியாது, நற்சக்திகளையும் அழிக்க முடியாது. இம் மாற்றத்தினுல் இவ்வுலகத்துடன் கலந் துள்ள காற்றுமண்டலத்தின், கரியமில வாயுவின் விஷச் சக்தி இவ்வுலகின் இயற்கைத் தன்மையினுல் இவ்வுலகம் மாறும் தருவா யில் இவ் இயற்கைக் குணத்திலிருந்து வெளிப்படும் ஆவியான அமில சக்தி அதிகப்பட்டு அதன் திடத்தினுல் இக்காற்றுமண்ட லத்தின், இன்று சுழன்றுள்ள தீய, விஷமான அமில குணத்தை இந் நற்சக்திகளின் அமில குணங்கள் மோதுண்ட பொழுது சுழன்று கொண்டுள்ள இக்காற்று மண்டலத் தன்மை மேல் நோக்கி இப்பூமி யின் காற்று மண்டலத்திற்கு மேல் சென்று விடுகின்றது.

இப்பூமியில் ஈர்ப்பின் காற்று குண அமில நிலைக்கு மேல் இத் தீய சக்தி பல நூறு மைல்களுக்கு மேல் நோக்கி உயர்ந்தும் சக்தி பெற்று பால்வெளி மண்டலத்துடன் பல திசைகளில் பரவி விடுகிறது. அதன் தொடரில் அந்தந்த குண நிலைக்கொப்ப உள்ள மண்டலங்களில் இந்நிலை சேர்ந்துவிடுகின்றது.

ஒரு நிலையில் சுழன்று கொண்டுள்ள இச் சக்தி நிலையே பிரிந்து செல்லும் பொழுது அதன் தன்மையிலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

கடும் விஷமான வைரம் எப்படி ஜொலிக்கின்றது? அப்படித் தான் இம் மாற்றத்தினுல் பல உன்னதத் தன்மைகள் நிகழப் போகின்றன. இப்பூமியைச் சுற்றியுள்ள காற்று மண்டலம் புனிதப் படும்பொழுது, இப்பூமியில் வளரும் ஜீவனின் நிலை எந் நிலை கொண்ட புனிதத்தன்மை பெறும்? இதனை உணர்ந்து செயல் கொள்ளுங்கள்.

**4–5–80**

இப்பூமியில் நிகழப்போகும் மாற்றத்தினுல், இப்பூமியில் உள்ள இயற்கைக் குண அமிலத்தில், குண அமிலம் என்பது இப் பூமியின் மேல் பகுதியில் உள்ள அனைத்து ஜீவன் கொண்ட நிலைகள் எல்லாம் மாற்றத்தில் உருமாறும் பொழுது அதிலிருந்து வெளிப்படும் உஷ்ண அலை. இப்பொழுது பூமியின் தன்மை மாறும் பொழுது இதிலுள்ள எல்லா இயற்கை நிலையும், மாறிய பிறகு (இறந்த பிறகு) அதனுடைய அமில குணங்கள் எப்படி வெளிப் படுகின்றன?

ஒரு கனி அழுகிவிட்டால், அக்கனியிலுள்ள நீர்ச்சத்தெல் லாம் உஷ்ணம் படபட வெளிப்படுகிறதல்லவா? பல நாட்

களுக்குப் பிறகு அது காய்ந்து எதுவுமே இல்லாமல் அதனுடைய சக்கையும் மண்ணுடன் மண்ணாய் கலந்துவிடுகிறது. அதைப் போன்று இவ்வுலக மாற்றத்தில் அழியப்படும் எல்லா இயற்கை ஜீவன்களும் இப்பூமியின் மேல், ஜீவனற்று உள்ள நிலையில், இப் பூமியின் சுழற்சியினால் பூமி ஈர்த்து வெளிக்கக்கும் உஷ்ண அலைகள் அவற்றின் மேல் மோதுண்டு மோதுண்டு அதிலிருந்து வெளியாகும் ஆவி, அமில குணத்தின் நிலையுடன் இப் பூமியிலிருந்து பிரிந்த உயிரணுக்களெல்லாம் மீண்டும் உஷ்ண அலைகள் பட்டவுடன் ஜீவன் பெற வருகின்றன, மாறுகொண்ட நிலையுடன். அதன் தன் நிலையிலேயே மீண்டும் வர முடியாது.

ஒன்றிலிருந்து வெளிப்பட்ட அமில குணமே அதன் சுவா சத்தை ஈர்க்கும் உயிரணுவுடன் மோதுண்டு ஜீவனுக்கு வரும் பொழுது உரு மாறப்பெறுகிறது. எப்படி என்று வினா எழும்பலாம்.

கொசு எதற்காக ரத்தத்தை உறிஞ்ச மனிதனையும், மிரு கத்தையும் மட்டும் கடிக்கின்றது? தாவரத்திலும் பல நிலைகள் உள்ளபொழுது மனிதனின் ரத்தத்தைத்தானே அக்கொசு விரும்பு கிறது. மனிதனிலிருந்து– அவன் இறந்துவிட்டால் அவ்வுடலைப் புதைத்த நிலையிலிருந்து– வெளிப்படும் பலகோடி அணுக்கள் இக் காற்றுடன் படர்ந்துள்ளன. அந்நிலையில் மனிதன் உண்டு, கழித்த சாக்கடை நீர்களிலும், மனித மலத்திலும், மனிதனால் உண்ணப் பெறும் கனிகளின் அழுகிய பழங்களில் இருந்தும் இக்காற்றில் படர்ந்துள்ள இவ்வுயிரணுக்களுக்கு ஆகாரம் எடுக்க அதன் மேல் மோதுண்டவுடன் அங்குள்ள ஈரத்தின் உஷ்ண அலையில் இஜ் ஜீவ அணு பட்டவுடன் உருவ நிலைகொண்டு கொசுவாகி, புழுவாகி உரு அமைப்புப் பெற்றவுடன் அது சுற்றி வாழும் தருவாயில் மனிதனின் இரத்தத்தையே ருசி காண வருகிறது.

நாய் உள்ள இடத்தில், நாய் உண்ணி என்னும் ஒரு வகைக் கொசு இருக்கும். அதைப்போன்று ஒவ்வொரு மிருக இனத்திற் கும் அது அது உள்ள இடத்தில் அதன் இன வர்க்க உடலில் இருந்து வெளிப்பட்ட உயிரணுக்களின் அமில குணத்தில் பிறப் பெடுக்கும் அதன் இன வர்க்க சுவாச குணமுடைய பல உயிர்ப் பிறப்புக்கள் வளர்ச்சி கொள்கின்றன.

ஓர் உயிராத்மா, ஓர் ஜீவ உடல் (மனிதனோ, மிருகமோ) அதன் நிலை மாறும் பொழுது அதிலிருந்து வெளிப்படும் உயிர ணுக்கள் அதன் நிலைக்கொப்ப அமில குணமுடைய உருக்கொண்டு அந்நிலை (அவ் உருவ நிலை) மாறும் பொழுது, அதிலிருந்து சில நிலைகள் ஏற்பட்டு ஏற்பட்டு பல உருவ நிலைகளும் மாறி மாறி

வரும் ஜீவ ஜெந்துக்களின் நிலையும் இன்றைய கால நிலையிலேயே ஏற்பட்டு வருகின்றது. இவ்வுலகமே மாற்றம் கொள்ளும் தரு வாயில் எல்லா ஜீவ ஆத்மாக்களின் நிலையும் மாறுகொள்ளும் பொழுது எந்த நிலையான மாற்றம் ஏற்படும் என்று எண்ண முடிகின்றதா?

இன்றளவும் இவ்வுலகினில் நடந்து வந்த நிலையே இக்கலி மாறி கல்கியுகத்தில் எல்லா நிலைகளுமே மாறித்தான் நடக்கும். ஒன்றிலிருந்து ஒன்று மாறும் பொழுது ஒன்றைப்போல் ஒன்றிருக் காது. கல்கி என்ற புதிய உலகச்சுழற்சிதான் மீண்டும் ஏற்படும்.

இப்புதிய உலகில், இக்கலியில் மாற்றம் கொண்ட இயற்கைத் தன்மையினுல் இவ் இயற்கையின் ஜீவ அணுக்களெல்லாம் கல்கி யுகத்தில் உருவ நிலைக்கு வரும் பொழுது எண்ணிலடங்கா மாற்ற நிலைகொண்ட வளர்ச்சிகள் ஏற்படப்போகின்றன.

இப்பூமியின் ஈர்ப்பில் ஜீவிக்கும் ஜெந்துக்களுக்கு மட்டுமா? பறக்கும் பறவைகளின் நிலையெல்லாம் எந்நிலை? என்ற வினு எழும்பலாம். மாற்றத்தினுல் அப்பறவைகளின் நிலையும் மாறப் போகின்றது. இப்பூமியின் ஈர்ப்பு சுற்றளவில் உள்ள மண்டலத் தில் வாழும் அனைத்து ஜீவராசிகளின் நிலையும்தான் இம் மாற் றத்தினுல் மாறப்போகின்றது.

இப்பூமியைச் சுற்றியுள்ள காற்றுமண்டலமே இப்பூமி ஈர்த்து வெளிப்படுத்தும் உஷ்ண அலையினுல்தான் உள்ளது. அந் நிலையில் இம் மாற்றத்தினுல் வெளியிடப்போகும் உஷ்ண அலையின் வெக்கையான அமில குணங்கள் மாறும் பொழுது இப்பூமியின் ஈர்ப்பில் சுழன்று ஒடும் காற்றுமண்டலத்தில் உள்ள ஜீவராசி களுக்கு வழக்கமாய் சுவாசித்த காற்றின் குணநிலை மாறும் பொழுது அதன் எண்ண நிலையும் மாறுகொண்டு அதன் சுவாசத் தின் நிலையினுல் அதன் ஜீவ உடலும் மாறத்தான் போகின்றது.

இந் நிலையினுல் பலப்பல மாற்றங்கள் நிகழத்தான் போகின்றன.

**5–5–80**

இம் மாற்றத்தின் சுழற்சியில் மீண்டும் ஜீவனுக்கு வந்தாலும், நாம் இவ்வுலக மாற்றத்தின் பொழுது, நம் உடலிலுள்ள ஜீவ ஆத்மா பிரியும் நிலைகொண்டு பிறப்பிற்கு வரும் தொடரும், அதன் சுழற்சியிலேதான் செயல் கொள்ள முடிந்திடும். இப்படி

பிறப்பிற்கு வருவதுவே இம் மாற்ற முதல் கால கட்டத்தில் (கல்கி யுகத்தில்) வரும் தருவாயிலேயே அறிவாற்றல் கொண்ட எண்ணத்தின் நிலைக்கொப்ப, தாயின் கருவிற்கு வர முடியாது. எல்லாமே மாறிய பிறகு புதிய உயிரணுக்கள் தோன்றும் தரு வாயில் அவ்வுயிரணுக்கள், ஜீவனின் வளர்ச்சி நிலை பல காலங்கள் தாவர இன வர்க்க வளர்ச்சியிலும், மற்றக் கனி வளங்களின் வளர்ச்சி நிலையிலும், செயல் கொண்ட பிறகு அவை வளர்ந்து, மடிந்து, அதிலிருந்து தோன்றும் உயிர்ப் பிராணி நிலைபெற்று, மீண்டும் அதன் இன வர்க்க நிலை மாறி, பல வளர்ச்சி நிலைகள் தானுக உயிர் பெறும் உயிரணுவிலிருந்து மாறிப் பல அமில குணத்தை ஈர்த்த உயிரணு ஆன பிறகுதான் உயிராத்மாவாகி அவ் உயிராத்மாக்களின் சேர்க்கைக் குணமுடன் மற்ற உயிரணு வின் பிறப்பு நிலை தோன்றிய பிறகுதான் ஜீவன் பெறும் நிலை கொள்கின்றது.

உயிரணுவிற்கும், உயிராத்மாவிற்கும் வேறுபாடு புரிகின்றதா?

படர்ந்துள்ள உயிரணுக்களெல்லாம் இப்பூமியில் இருந்து வெளிப்படும் வெப்ப அலையின் அமில குணத்தின் ஈர்ப்பில் படர்ந்து இயற்கை வளங்களாய் வளர்பவை எல்லாம் உயிரணுக் கள் கொண்ட நிலை.

உயிராத்மா என்பது பிறப்பிற்கு வரும் இரண்டு ஜீவ உடல் களின் எண்ணக் கலவையில், சேர்க்கையில் தன் நிலையை ஜீவிதம் கொள்ளும் ஆசையுடன் கர்ப்ப நிலைக்கு ஜீவன் கொள்வதெல் லாம் ஜீவ ஆத்மா பெறும் நிலை.

இப்படி இம் மாறும் கலியினுல் கல்கியில் நம் உயிரணு உருவிற்கு வரப் பல ஆயிரம் ஆண்டுகள் செல்லும். இவ்வெண்ண நிலையிலேயே பிரியும் ஆத்மாக்கள் இதில் நாம் சேமித்த குண நிலையுடனே சுழன்று சுழன்று அறிவு நிலைகொண்ட ஆண்ட வனுகும் வளர்ச்சியுறும் ஜீவ ஆத்மா கொண்ட ஞானம் பெறக் கூடிய இவ்வுடல் நிலை பெறுவதற்குப் பல காலங்கள் சுழலும் நிலை யிலிருந்து மீளத்தான் இங்கு நாம் புகட்டும் நிலையெல்லாம்.

இவ்வுலகச் சுழற்சியில் நம் எண்ணத்தை இவ்வுலகப் பிடியில் அடகு வைத்து விட்டால் அதை மீட்பதற்கு பல ஆயிரம் காலங்கள் செல்லும். பரம்பொருளின் ஞானமான அச்சக்தி நிலைகொண்ட ஜோதி ஆத்மாக்களிடம் நம் எண்ணத்தை பக்தி முறைப்படுத்தி வழிப்படுத்தும் நிலைப்படுத்தி நம் வாழ்க்கை நிலை அமைந்தால் அவர்களின் எண்ண வட்டத்திற்குள் நாம் எடுக்கும் சுவாச அலைகள் பாயும்பொழுது, பரம்பொருளிடம் ஐக்கியம் கொண்டு

ஜோதியின் வடிவான சூட்சுமம் கொண்ட சப்த ரிஷிகளினுல் நம் ஒளி வட்டத்திற்கு மேன்மேலும் சக்தி நிலை கூட்டிக்கொண்டால் இவ்வுலக மாற்றத்தினுல் அவர்களின் நிலையுடன் ஐக்கியப்பட்டு, அவர்களின் செயல் ரூபத்தை நாமும் பெற்று, அச்சக்தியின் வடிவ குழந்தைகளாய் இன்று எப்படி பல ரூபத்தில் ஆண்டவன் என்று-முருகன், வெங்கடாஜலபதி, ஐயப்பன் என்றெல்லாம் வணங்கு கின்றோமோ, அந்நிலை கொண்ட நிலை பெற்று இப்பூமி மட்டுமல்ல எப்பூமியும் நமதாக ஏற்று அவ்வொளி வட்டத்திற்குள் நம் ஒளி பிரகாசிக்கத்தான் சத்தியத்தின் சக்தி நிலை ரூபம் கொண்டு உண்மைநிலைகளை, நாமறிந்த உண்மையைப் பலரும் அறிந்து அப்பரம்பொருளின் ஞான சக்தியை வழிபெறும் வழி ஆற்றலைப் புகட்டுகின்றோம்.

இவ்வுயிரணு தோன்றி மாறி மாறி எடுக்கும் அமில குணத் தின் வளர்ச்சியினுல் ஏற்படுவதுதான் சிறு எறும்பு முதற்கொண்டு, சூரியன், சந்திரன் அதற்கும் அப்பாற்பட்ட எல்லாமே. எவ் உயிரணுவும் மடிவதில்லை.எப்பரம்பொருளிடமும் ஒன்றி நிற்பது வும் இல்லை.

உயிரணுவாய், உலகாய் உருண்டு கொண்டே, வளர்ந்து கொண்டே கலந்துள்ளது தான் அப்பரம்பொருளான ஆதிசக்தியின் ஒளி சக்தி. ஒன்றுடன் ஒன்று மாறி மாறி உருப்பெற்றே சுழன்றே ஓடும் சிக்கலில் உயிர் ஞானம் கொண்ட சப்த ரிஷியின் ஞானம் பெறுவதுதான் உயர் ஞானம். அந்த ஞான நிலை பெறும் வழித்தொடர் தான் இம் மனித உடல் கொண்ட ஆத்ம ஞானம்.

மனித உடல் கொண்ட ஞானத்திலிருந்து தான் உயர் ஞானம் பெற முடியும். இம் மனித உடல் கொண்ட அறிவு நிலை பெற பல உருமாற்றம் கொண்ட உருவ நிலையெல்லாம் பெற்றுப் பெற்று இம் மனித உடலுக்கு வருகின்றோம்.

இந்த ஞானத்தை நாம் இன்று போற்றி, வளரும் ஞானம் பெருமல் செயற்கையின் பிடியில் கலியான இக் காலத்தில் சோம் பேறி நிலைகொண்ட வாழ்க்கைக்கு அடிமைப்பட்டு மீளத் தெரி யாமல் சிக்குண்டு வாழும் நாம், இம் மனித ஞானத்தைப் போற்றி நல்வழிபெறும் ஞானத்தைப் பெற்றிடுவோம்.

கண்ணுடியில் உள்ள தூசியைப் போக்கிட அழுக்குத் துணியினுல் தட்டினுல் மீண்டும் இதன் அழுக்குத்தான் அதில் போய்ப் படரும். சுத்தமான துணியைக் கொண்டு துடைத்தால் தான் அக்கண்ணுடியில் உள்ள அழுக்கு நீங்கும்.

அழுக்கை அழுக்கு கொண்டு அகற்ற முடியாது. அதைப் போல் இவ் அக அழுக்கை பக்தி என்ற பகவான் ஞானத்தைக் கொண்டு போக்கியே நம் அழகை நாம் காணல் வேண்டும்.

**6–5–80**

ஒரு நாள் தோன்றி மறு நாள் மடிகின்றது காளான். அதே போல் ஒவ்வொரு தாவர வர்க்கத்திற்கும் அது அது ஜீவிக்கும் கால நிலைகள் உண்டு. ஆலமரம் பல நூறு ஆண்டுகள் உள்ளது. வைரம் பாய்ந்த ஆயிரம் காலத்து மரங்கள் பல உள்ளன.

ஆனுல் இவ் ஆயிரம் காலம் வாழும் மரம் உருவான ஆரம்ப கால நிலையே காளானின் வழித் தொடர்ச்சிதான். இயற்கையில் தாவர இனத்தின் முன்னுேடி காளான் நிலைகொண்டு அவ்வு யிரணு, அவ் அமில வண்ணமுடன், இடியும், மின்னலும் தோன்றும் காலத்தில் ஒன்றுடன் ஒன்று, இரண்டு இன வர்க்க அமிலங்கள் மோதும் நிலையில், அதற்கு மேல் இம் மழை நீர் படும்பொழுது வெடிக்கும் தருணத்தில், இரண்டு வகை அமில குணத்தின், வெடிப்பில் தோன்றும் அமிலமானது, இப்பூமியின் மேல் மோதுண்டவுடன் அதன் மேல் படும் ஒளி அலையின் ஈர்ப்பினுல் உயிரணு தோன்றி, தாவரம் வளர்ந்து, ஒவ்வொரு நிலை கொண்ட தாவர இன வர்க்கங்கள் மாறி மாறித் தோன்றி முதலில் காளான் தோன்றி அதன் ஆயுள் முடிந்தவுடன், அக் காளானுனது அழுகிய நிலையில் பூமியில் படர, பூமியிலிருந்து வெளிப்படும் உஷ்ண அலையின் வெக்கை அதன் மேல் பட்டு, அதிலிருந்து வெளிப்படும் அமில குணத்தைக் கொண்டு மீண்டும் பூமியில் படர்ந்து அதிலிருந்து வெளிப்படும் உயிரணுவின் இன வளர்ச்சி சிறிது மாற்றம் கொண்டு மீண்டும் அதிலிருந்து சில வளர்ச்சி நிலைகள் மாறி ஏற்பட்டு, இப்படியே பல இயற்கை வளங்கள் தோன்றி ஒன்றுடன் ஒன்று அமிலத்தன்மைகள் மாறி மாறி உருவாகி உருவாகி, பல வழிகள், பலவித உயிரணுக்களும், உயிராத்மாக்களும், கனி வளங்களும் வளர்ந்து கொண்டே, மாறி மாறி வாழ்ந்துகொண்டே சுழன்று கொண்டே, சுழன்று ஓடிக்கொண்டே உள்ளன.

ஓடும் ஓட்டத்தில் வெளிப்படும் அமில குணத்தில் பல உயிரணுக்கள் அம் மோதலில் வெளிப்படுகின்றன. ஒன்றில்லாமல் ஒன்றில்லை என்பதின் பொருளும் இதுவே. எவ்வணுவும் உதிக்கவும் இம் மோதல்தான் காரணம். அமில குணங்கள் மோதுண்டு அதன் மேல் படும் மழை நீரின் ஜீவனுல் வெடிப்பு நிலைப்பட்டு உருவாகின்றது உயிரணு.

அதன் தொடர்ச்சி நிலையின் சேர்க்கைதான் ஜீவனின் சேர்க்கையினால் ஜீவ அணு தோன்றுகின்றது. ஆண், பெண் சேர்க்கையினால் இவ்விரண்டு குண நிலைகொண்ட அமிலத்துடன், ஜீவன் கொண்ட மற்றோர் எண்ண அமிலமான உயிராத்மா தனக்குகந்த அமில குணம் கொண்ட தாயின், தந்தையின் பிறப்புக் கருவிற்கு வருகிறது.

பலவகையான அமில குணங்களின் சேர்க்கை கொண்டது இவ்வுலகின் ஈர்ப்பு அமில குணம் ஒன்று தான். இவ் ஈர்ப்பின் நிலைக்கொப்பப் பல நிலைகளை நம் பூமி வளர்த்துக் கொள்கிறது. பூமி வெளிக்கக்கும் உஷ்ண அலையின் ஈர்ப்பில் பல குண நிலைகள் மாறுகொள்ளுகின்றன.

பலவகையான அமில குணம் கொண்ட இக்காற்றைத்தான் நாம் சுவாசிக்கின்றோம் என்றாலும் நம் எண்ண நிலைக்கொப்ப சுவாச அமிலம்தான் நம் சுவாச ஈர்ப்பிற்கு வரும். வெங்காயச் செடி அதன் கார அமில சுவாசத்தை ஈர்க்கின்றது. மிளகாய்ச் செடி நெடி கலந்த கார அமிலத்தை ஈர்க்கின்றது. கருணை, சேனை இவற்றின் குண அமிலம் அரிக்கும் (அரிப்பு) தன்மை உடைய அமில குணத்தை ஈர்த்து அவை வளர்கின்றன.

ஒவ்வொன்றிற்கும் அதனதன் நிலைக்கொப்ப ஒரே தன்மை யுடைய அமிலத்தை தான் ஈர்த்துப் பழக்கப்பட்டு வளரும் பக்குவ முடையது தாவர வர்க்கங்கள். ஆனால் பலவற்றையும் புசிக்கும் மனித ஆத்மா தான் உண்ணும் உணவின் உணர்வைத் தவிர எண்ணும் எண்ணத்தின் அமில குணத்தையும் அறியவல்ல ஆற்றல் கொண்டவன். உடம்பின் மேல் மிளகாயின் காரம் பட்டவுடன் எரிகிறது என்று அறிகின்றோம். வெங்காயத்தின் காரத்தினால் நம் கண்ணில் நீர் வடிகிறது. சேனை, கருணை போன்ற கிழங்கு களின் அமில நீர் பட்டவுடன் அவ்விடம் பிய்ப்பு எடுக்கின்றது. இந்நிலையான அமில குணத்தை நம் உடம்பும், உணர்வும் ஈர்க்கா விட்டால் அதன் தன்மையின் பாதிப்பை நாம் அறிவோமா?

மிளகாயின் குணம் நெடி கலந்த கார குணம். வெங்காயத் தின் குணம் அதற்குத்தக்க கார குணத்தினால் அதன் தன்மை உணரப்படுகின்றோம். எல்லாமே இக்காற்றின் ஈர்ப்பில், தன் ஈர்ப்பின் நிலைக்கொப்ப வளருகிறது. இந் நிலைகளை உணரும் மனிதன், இந் நிலைகளைப் போன்றுதான், நம் மனித ஆத்மாவின் எண்ண நிலைக்கொப்ப அமில குணங்களை நம் உடல் சேமிக்கின்றது என்பதனை அறியவில்லை.

நம் எண்ண நிலைக்குகந்த ஈர்ப்பில், நாம் எடுக்கும் சுவாசத்தைக் கொண்ட நிலையுடனே, எவ்வெண்ணத்தில் எல்லாம் நாம் இருந்து கொண்டு உள்ளோமோ, அதன் நிலைக்கொப்ப அமில குணங்கள் நம்முள் சேமிதம் கொண்டே வாழ்கின்றோம், நாம் எடுக்கும் சுவாசத்தினால்.

குண அமிலம் என்பதன் நிலை புரிந்ததா? இக்குண அமிலத்தின் நிலையை உணர்த்துவதின் உண்மை நிலையென்ன? ஒவ்வொரு மண்டலத்திற்கும், நட்சத்திர மண்டலத்திற்கும், பால்வெளி மண்டலங்களுக்கும் அதனதன் தன்மைக்குகந்த குண அமிலம் உண்டு. அதன் வளர்ச்சி வட்டத்திலே தான் இயற்கையின் அமில குணங்கள் செயல் கொண்டு வாழ்கின்றன. இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட குண அமிலத்தைப் பெறவல்ல ஆற்றல் (தனக்கு உகந்ததை) மனித ஆத்மாவுக்கு உண்டு.

இயற்கை வளங்கள் ஒரு வகையான அமில குணத்தை ஈர்க்கவல்லது. ஆனால் மனித ஆத்மாவோ, எண்ண நிலைக்குகந்த அமில குணத்தையெல்லாம் ஈர்த்து ஈர்த்து வாழ்கின்றான். எண்ண நிலைகொண்ட மனிதனால் தனக்குகந்த அமில குண அமிலத்தை ஈர்க்கும் பக்குவம் பெற்றால் இக்குணங்களிலேயே சிறந்த குணமான ஆண்டவன் என்னும் நிலைகொண்ட குணத்தைப் பெற முடியும்.

**11–5–80**

பல நூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னும், இச் சமீப நூற்றாண்டுகளில் மனிதனால் விஞ்ஞானம் கொண்டு செயற்கை யுகத்திற்கு வழிகாட்டிய நாளில் உள்ள நமக்கு, பல நூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களைக் காட்டிலும், இன்றைய இயற்கைத் தன்மையின் குண அமில வர்க்கத்திலுள்ள சக்தித் தன்மையே குறைந்துவிட்டது. இது எப்படிக் குறைந்தது?

பால் வெளி மண்டலத்தில் சுழன்று ஓடும் நம் பூமி, அதில் உள்ள காற்று மண்டலத்தின் அமிலத்தன்மை குறைந்ததென்றால் எப்படி சாத்தியப்படும்? சூரியனிலிருந்தும், நட்சத்திர மண்டலங்களில் இருந்தும், மற்றக் கோளங்களிலிருந்தும், அனைத்து மண்டலங்களுக்கும் பொதுவான பால்வெளி மண்டலத்திலிருந்தும் சக்தித் தன்மை ஒவ்வொரு மண்டலங்களுக்கும் கூடிக்கொண்டே உள்ளதா?

பொது மண்டலம் பால்வெளி மண்டலம். நமக்கு ஒளி தரும் மண்டலம் சூரிய மண்டலம். சூரியனிலிருந்து நம் பூமி எப்படி ஒளி பெறுகிறது? நம் பூமியிலுள்ள உஷ்ண விகிதம் மற்ற சூரியனுக்கும், பூமிக்கும் இடைப்பட்ட தூரங்களில் உள்ளனவா? நம் பூமியின் சுழற்சியினுல் நம் பூமி சுவாசித்து வெளிக்கக்கும் அலையின் அமிலம், சூரியனிலிருந்து வெளிப்படும் அமிலத்துடன் மோதும் நிலைகொண்டு, நம் பூமிக்கு உஷ்ண விகித நிலை செயல் படுகின்றது.

நம் பூமியின் காற்றுமண்டலத்திற்கு மேல் ஐம்பது மைல் விகித தூர அளவில் ஒளிவட்டம் உள்ளதாக இன்றைய விஞ் ஞானம் கூறுகின்றது. ஒளி வட்டம் உள்ளதினுல்தான் நம் பூமிக்கு இவ்வுஷ்ண அலை ஏற்படுகிறது. இவ் உஷ்ண அலையான ஒளிவட்டத்திற்கு மேல் சூரியனுக்கும் பூமிக்கும், இடைப்பட்ட வழியெல்லாம் பூமியின் உஷ்ணத் தன்மையைக் காட்டிலும் அங்கு குளிர்ந்த நிலைதான் உள்ளது.

சூரியனுக்கு அருகாமையில் 200, 300 மைல்களுக்கு இப் பாலும் நம் பூமிக்கு காற்று மண்டலம், ஒளி வட்டம் கொண்ட உஷ்ண அலைகளின் நிலையின் தன்மைக்கு அப்பாலும், பால்வெளி மண்டலத்தின் பொதுவான குளிர்ந்த நிலைதான் சூரியனுக்கும் பூமிக்கும். அதைப்போல் ஒவ்வொரு மண்டலங்களுக்கும் இடைப் பட்ட பால்வெளி மண்டலம் உள்ளது.

ஒவ்வொரு மண்டலத்தின் அமில குணம் தொட்டு, அம் மண்டலம் ஈர்த்து வெளிப்படுத்தும் அமிலத்துடன் அமிலம் மோதும் நிலைகொண்ட உஷ்ண அலைகளும் அதன் குளிர் நிலை களும் செயல் கொள்ளுகின்றது. இப்படி இயற்கையில் வளர்ந்து ஓடும் நம் பூமியின் நிலையுடன் கூடிய காற்று மண்டலத்தில், காற்று மண்டலத்திற்கு மேல் உள்ள ஒளி வட்டத்தின் ஈர்ப்பினுல், காற்று மண்டலத்தில் சேமித்துள்ள இயற்கைக் குணத்தை நம் மால் மாற்றப்படுவதினுல், அதன் தன்மை நிலைகள் மாறி விட்டன.

மாறினுலும் இக்காற்றினில் தானே கலந்திருக்கிறது எல் லாம் என்பீர்கள். இயற்கையாய் மாறும் நிலையைச் செயற்கை யுடன் பிரித்துவிடுவதினுல் அதன் சக்தியில் வலு குறைந்து விடுகின்றது. மலைகளிலும், மடுக்களிலும் இருந்து உற்பத்தியாகி வரும் நீரின் சுவைக்கும், ஆறுகளில் நாம் சேமித்து வைத்து அதிலுள்ள மின்சாரத்தைப் பிரித்து எடுத்த பிறகு, அந்நீரின் அமில குணத்தில் சில சக்திகள் குறைந்ததினுல் சுவையும் குறைந்து,

அந்நீரினுல் வளரும் பயிர்களுக்கு நாம் எந்நிலையான அமிலத்தைப் பிரித்து எடுத்தோமோ, அதன் நிலைக்குகந்த உரங்களை இட்டால் தான் அப் பயிரும் வளரும்.

இப்படி இயற்கையையே நாம் பல நிலைகளுக்காக மாற்றி அமைக்கும் பொழுது, இம் மண்டலத்தின் காற்று அலைகளில் உள்ள சக்தி நிலைகள் குறைந்துவிட்டன. மனிதனின் எண்ண சுவாசமும் இதன் தொடர் அலையினுல் மாற்றம் கொண்டு விட்டது. இந்நிலையிலிருந்தெல்லாம் நாம் நம் ஜெப நிலையை ஒரு நிலைப்படுத்தி ஞானத்தின் வழித்தொடர் பெற நம்மையே அந்த ஞானமாக்கும் சக்தி செயலில் பக்தி கொண்டு ஜெபம் பெற்ருேமாஞல், மின் அலையின் தொடரில் ஒளி காண்கின்ருேம். அதே மின் அலையினுல் ஒலி (வாஞெலி) கேட்கின்ருேம். இவையும் இந்நீரிலிருந்தும் காற்றிலிருந்தும் தான் மனித விஞ்ஞானத்திஞல் கண்டறியப்பெற்ருேம். நம் சுவாசத்தில் எடுக்கும் காற்றலையின் உரு நினைவலையான எண்ணத்தை அவ்வாண்டவன் மேல் பாய்ச்சி, நாம் செயல்படுவோமாஞல் நம் எண்ணநினைவலை எச் சித்தர்களின் நினைவில் பாய்ச்சப்படுகின்றதோ அவர்கள் பெற்ற ஒளி அலைகளின் சக்தியை நம் எண்ணமுடன் கலக்கும் நிலையில் அவர்கள் செயல்பட்டு, நம் ஞானம் வளர்ந்து, அதன் தொடரினுல் பல சக்தி நிலைகளை இவ்வுடல் என்னும் கூட்டிலேயே நாம் கூட்டிக் கொண்டு, நம்மால் பல உண்மைகளை இவ்வுலகம் உணரச் செய்து, இன்றுள்ள இவ்வுலகின் ஆத்மாக்கள் வாழும் இப்பயம் கொண்ட செயற்கையிலிருந்து மீள வைக்க முடியும்.

இன்றைய கால நிலையில் அங்கங்கு இயற்கை மாற்றங்களும், விபத்துகளும், போர்களும் இவற்ருல் ஏற்படும் உயிர்ப் பலியின் பீதியிலிருந்தும், மனிதனுல் செய்யப்பட்ட அணு குண்டு, அணுக் கதிர் வீச்சின் பயத்திலிருந்தும், மனித ஆத்மாக்களை மீட்டு அவர்களின் எண்ணத்தை மேலோங்கச் செய்தால் நடக்கவிருக்கும் உலக மாற்றத்திலிருந்து மனித ஆத்மாக்களை மீளச் செய்யலாம்.

ஒன்று பலவாகி, பல நூருகி நூறு பலவாகிச் செயல்படும் சக்தி அலையாய் நாம் செயல்படும் ஞான அலையின் சக்தியை ஈர்க்கும் செயலை முறைபெற்றுச் செயல் கொள்ளுங்கள்.

**12–5–80**

இந்நிலையைச் செயல்படுத்தும் பக்குவ ஞானம் நாம் பெற்ருல், நம் பக்குவ ஜெபத்தைக்கொண்டு நமக்கு முதலில் அந்நிலைக்குச்

சென்ற சப்த ரிஷிகளின் துணையுடன் இவ்வுலக நிலையிலே எச் செயலையும் நடத்திடவும், நிறுத்திடவும் நம் ஞானத்தால் முடியும்.

முடியாத நிலையென்ற சொல்லுக்கே அர்த்தமற்ற குணத்தைக் காட்டலாம். சிறு தீப்பொறி காற்றலையின் அதன் நிலைக்குகந்த பொருளின் மேல் படும்பொழுது, தீ பற்றிக்கொள்ளுகின்றது. இத்தீயானது அதன் தன்மைக்குகந்த பொருள்கள் எல்லாவற்றை யும் எரித்து, அதன் தன்மைக்குகந்த எரிபொருள் இருக்கும் வரை எரிந்துவிட்டு, அது தீர்ந்தவுடன் தன் நிலையில் சாம்பலாகி, பூத்து விடுகிறது.

இவ் எரியும் நெருப்பை நம்மால் அணைக்க முடிகின்றதா? நெருப்பிற்கு மேல் சக்தி கொண்ட நீரை அதன் மேல் பாய்ச்சித் தான் அதனை அணைக்க முடியும். அதைப்போல் தீய சக்தியான இக்கடும் எண்ணக் கலவையின், இன்றைய மனித ஆத்மாக்கள் வாழும் நிலைமையில் பக்தி பூண்டு நாம் வணங்கினால், நம் ஜெப நிலைக்குகந்த ஒளி அலைகளை இவ்வுலக மாயை எண்ணத்தில் வாழும் நமக்கு அவர்கள் அளிக்கும் ஒளி அலையினால்தான் நம் உலக ஞானத்தை நாம் பெற முடியும்.

ஒன்றில்லாமல் ஒன்றில்லை. பக்தி கொண்டு வணங்கி, பிறரின் உபதேசத்தினால்தான் நம் ஞானம் வளருமா? ஆதி சக்தியின் சக்திக் குழந்தையான நம் சக்தியை, பிறரை வணங்கி ஏன் ஏற்றம் பெற வேண்டும்? நம் ஞானத்தை நாமே பெற லாகாதா? என்ற வினா எழும்பலாம்.

அவர்கள் பெற்ற அதிசக்தி—அவ்வுன்னத சக்தியின் ஒளி அலையின் சக்தியை நாம் பெற்றால், நாம் அடையக்கூடிய ஞான வழிக்குச் சில வழிமுறைப் பாடங்களை அவர்களின் துணையுடன் பெற்றுச் செல்ல முடியும்.

பல புராணக் கதைகளில் கிருஷ்ணாவதாரம், இராமாவதாரங் களில் சில நிலைகளைக் கதை ரூபமாக, புரியாவண்ணம் உணர்த்தி இருக்கின்றார்கள். கிருஷ்ணர் போர்க்களம் சென்றவுடன் அனைத்து எதிரிப்படைகளும், அவரின் மேலிருந்து ஒளிகள் பாய்ந்தவுடன் நின்றதாக உணர்த்தி இருக்கின்றார்கள்.

இந்நிலை சாத்தியப்படுமா? ஆண்டவனே வந்து அவதரித் தால்தான் இந்நிலை நடக்கும், கிருஷ்ணர் வாயைத் திறந்து காட்டியவுடன், ஈரேழு உலகமும் கண்டதாக வர்ணிப்புக் கதை யுண்டு. கதையல்ல, காவியம்தான் என்றாலும் அந்நிலையின்

சாத்தியக் கூற்றை ஒவ்வொரு ஆத்மாவினுலும் செய்து காட்டிட முடியும், அதற்குகந்த ஞானம் பெற்ருல். இரண்டு நாட்களாக எங்களுக்கு நம் குருநாதர் இவ்வுலக நிலேக்காகச் சில பூஜை நிலே களைப் போதித்தார்.

**13–5–80**

தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் என்று இனம் பிரித்துக் காட்டினுர்கள் நம் முன்னேர்கள். தேவர் என்பவர் யார்? அசுரர் என்பவர் யார்? மனிதன் என்பவன் யார்? எந்தெந்த வளர்ச்சி செயல் புரிந்து எவ்வெவ்வெண்ண ஓட்டத்தில் வாழ்கின்ருர் களோ, அதனே இனம் பிரித்துத் தேவனுகவும், அசுரனுகவும், மனிதனுகவும் காட்டினர்.

இன்று நம்மிலேயே இம் மூன்று வகை குணத்தவர் உள்ளனர். அவரவர்களின் எண்ணப் பயனுல் அமைவதுவே இக் குண நிலே. மனித ஆத்மாவுக்கு மட்டுமல்ல, அனேத்து நிலேகளுக்கும் உண்டு என்று உணர்த்தியுள்ளேன். நம் பூமியின் குண நிலேயை ஒத்த நிலேகள் மற்ற மண்டலங்களுக்கு மாறுபாடு கொள்கின்றன.

சூரியனின் ஒளி அலேயை ஈர்த்து, நம் பூமி வெளிக்கக்கும் உஷ்ண அலேயின் சக்தி நிலேப்படி, நம் பூமியின் சுழற்சி ஓட்டமும், இயற்கைத் தன்மையும் அமைந்துள்ளன. அதுவல்லாமல் பூமிக் கும், சந்திரனுக்கும் இடைப்பட்ட விகித தூரத்தைக் கொண்டும், நம் பூமியின் நீர்நிலேயின் தன்மைகொண்டும், நம் பூமிக்குத் தொடர்புடைய மண்டலங்களின் ஈர்ப்பு அலேகளின் வெளிக்கக்கும் அமில குணத்தைக் கொண்டும், நம் பூமியின் இன்றைய குணநிலே உள்ளது. இதுபோல் மற்ற மண்டலங்களின் தன்மைகளும் மாறுபடுகின்றன.

உஷ்ண அலேயில் வாழும் நம் பூமியில் இருந்து பிரிந்து வாழும், பிரிந்து என்பது, இப்பூமியில் வாழ்ந்த ஆத்மாக்கள், இப்பூமியின் சுழற்சி ஓட்டத்துடன் எந்த இடத்தில், எவ்வெண்ணத்தில் தன் ஆத்மா பிரிந்ததுவோ, அதே எண்ண நிலேக்கொப்ப, அவ்வுஷ்ண அலேயின் நிலேயுடனே இப்பூமியின் சுழற்சியுடன், இப்பூமியின் ஓட்டத்திலும், இப்பூமியின் ஈர்ப்புடனும் அதன் சுழற்சிநிலே உள்ளது.

நம் பூமி ஓர் இடத்தில் நிற்பதில்லே. சுழன்றே ஓடிக் கொண்டுள்ளது. இப்பூமியிலிருந்து பிரிந்த ஆத்மாக்களும் அதன் சுழற்சியிலேயே ஓடிக்கொண்டே, சுழன்றுகொண்டே வருகின்றன.

ஆத்மா பிரிந்த பிறகு 'மேலுலகம் சென்றுவிட்டான்' என்கின்றனர். மேல் உலகம் என்பது எவ்வுலகம்?

இப்பூமிக்கும், மற்ற மண்டலங்களுக்கும் மேல், கீழ் என்ற நிலை உள்ளதுவா? சூரியனின் ஒளி அலைகள் பாயும் மத்திய பாகத்தை மேல் பாகம் என்றாலும், இரவில் கீழ் பாகத்தில் வாழுகின்றோமா? சுழலும் சுழற்சி வட்ட ஓட்டத்தில் கீழும் இல்லை. மேலும் இல்லை. இப்பூமியின் காந்த ஈர்ப்பின் நிலையுடன் ஒட்டி, பூமியின் சுழற்சியுடன் நாம் எப்படி அதன் ஈர்ப்பில் வாழ்கின்றோமோ, அதைப்போல்தான், இவ்வுலகில் வாழ்ந்து, பிரிந்த உயிர் ஆத்மாக்கள், இவ்வுலகின் ஈர்ப்பின் வட்டத்திற்குள், காந்த அமில வட்டத்திற்குள்ளேயே, நம்முடன் கலந்தேதான் அவர்களின் அமில வட்டக் குணங்களும் உள்ளன.

ஆவி பிரிந்து அவ்வாத்மா ஆகாயத்தில் சென்று நிற்பதில்லை. நம் மூதாதையர்களினால் சொல்லப்பட்ட, நடந்த கதைகளில் பேய், பிசாசு வந்ததாகவும் அதன் பாதம் நிலத்தில் பதியவில்லை, பேய்க்கும் பிசாசிற்கும் பாதம் நிலத்தில் பாவாது என்றெல்லாம் கதைகளாகக் கேட்டிருப்பீர். இவையெல்லாம் கதைகள் அல்ல. உண்மை நிலையில் வெளிப்பட்ட சில அர்த்தம் கொண்ட செயல் முறைகள்தான்.

பிம்ப உடல் இல்லாததினால் அவற்றின் உடல் பூமியில் பதிவதை நாம் காண முடியாதேயன்றி, மனித ஆத்மாக்கள் எப்படி பூமியின் ஈர்ப்பில் வாழ்கின்றனவோ, அதைப்போன்றே ஆவி ஆத்மாக்களும் இவ் ஈர்ப்பின் வட்டத்திற்குள்ளேயே இருக்க முடியும், இருக்கின்றன.

இவ் ஈர்ப்பின் வட்டத்தைத் தாண்டிச் செல்ல வேண்டுமானால் அதற்குகந்த ஞானம் பெற்றிருந்தால், அப்பக்குவ வழிபாட்டின் சூட்சுமம் கொண்டோரினால்தான் இப்பூமியின் ஈர்ப்பு வட்டத்திற்கு மேலே செல்ல முடியும்.

இப்பூமியின் காந்த சக்தி அலையில் இருந்து, நம் ஆத்ம நிலை மற்ற நிலைகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், அதற்குகந்த பயிற்சித் திறன் நாம் பெற்றிருந்தால், அதன் செயலில் செல்ல முடியும். மனிதனில் இருந்து பிரிந்து சென்ற ஆத்மாக்களினால் இவ் ஈர்ப்பின் தன்மையிலிருந்து பறந்து எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியாது.

பூமி சுழன்று ஓடிக்கொண்டே உள்ளபொழுது, பூமி சுழலுவதும், ஓடுவதும் நமக்குத் தெரிகின்றதா? அதன் ஈர்ப்பில்

ஐக்கியப்பட்டுள்ள நம்மைப் போன்ற நிலைதான் இப்பூமியில் பிறந்து, இப் பிம்ப உடலை விட்டுச் சென்ற ஆத்மாக்கள் நிலையும் உள்ளது.

**14–5–80**

உடல் பொறுக்கும் சூட்டைக்காட்டிலும் நம் உடலின் உள் உறுப்புக்கள் அதிகச் சூட்டை ஏற்கும் தன்மை கொண்டுள்ளன. உடம்பின் மேல் நாம் சூடாக அருந்தும் பானத்தின் சூடு பட்ட வுடன் உடம்பின் மேல் அங்கங்கள் அந்நிலைச் சூட்டைப் பொறுப் பதில்லை. ஆனால் உள் உறுப்புக்கள் அச்சூட்டை ஏற்கின்றன.

ஒரே பிம்ப உடல்தான், ஆனால் ஒவ்வொரு அவயவங்களின் நிலைக்கொப்ப உஷ்ணத்தன்மைகள் உள்ளன. இவ்வுடலிலிருந்து இச்சுவாசம் ஈர்த்து வெளிப்படுத்தும் உஷ்ண அலையின் நிலைக் கொப்ப நம் உடல் உறுப்பு உள்ளது.

தாவரங்களின் தன்மையிலும் இத்தகைய நிலையுள்ளது. நம் பூமியின் தன்மையிலும் இதுவேதான். பூமியின் உள் நிலை பூமியின் மேல் நிலையைக் காட்டிலும் சில இடங்களில் அவ் உஷ்ண நிலை மாறுகொள்ளுகின்றது. கோடை காலங்களில் பூமியைப் பறிக்கும் பொழுது, அப்பூமியின் உள் நிலை மேல் நிலையைக் காட் டிலும் உஷ்ணமாகவே உள்ளது. நாம் நினைக்கின்றோம் சூரியனின் வெக்கையினால் அப்பூமியில் சூடு உள்ளதென்று.

பூமிக்கு உஷ்ணத்தை ஈர்ப்பதுவே பூமியின் சுவாசத்தினால் தான். உள் இழுத்து வெளிக்கக்கி, இவ்வுலகம் சுழன்று, சுழற்சி யின் மோதலில் ஒளி அலையை ஈர்த்து, காற்றுடன் மீண்டும் பூமி ஈர்த்து, வெளிக்கக்கும் நிலையில், அந்தந்தக் கால நிலைகளில், எந் தெந்த மண்டலங்களின் ஈர்ப்பலையின் சக்தி அதிகமாக ஈர்க் கப்படுகின்றதோ, அதன் நிலைக்கொப்ப நம் பூமியின் கால நிலைகள் மாறுபட்டு, உஷ்ண அலையின் தன்மையும் மாறு கொண்டே உள்ள நம் நிலைக்கொப்ப, மற்ற மண்டலங்களின் தன்மைகளும் மாறு கொண்டுள்ளன.

சனி மண்டலமானது மிகவும் குளிர்ந்த அமிலத்தன்மை கொண்ட மண்டலம். அம் மண்டலத்தின் ஒளி அலையே நம் பூமியைப் போல் வெளிச்சமானதாக இல்லை. வளர்ந்த மண்டலம் தான், சுழன்று ஓடிக்கொண்டே உள்ளது. அதன் தன்மையே மிகவும் குளிர்ச்சி வாய்ந்த அமிலத்தை ஈர்த்து, வெளிப்படுத்தி அதன் நிலைக்கொப்பப் பனிமண்டலமாய் உருளுகின்ற சனி மண்ட

லத்தின் ஈர்ப்பலையின் காலங்களில் நம் பூமியின் வடதுருவ, தென் துருவ ஈர்ப்பின் நிலைக்கொப்பக் குளிர் காலங்கள் நம் பூமியில் ஏற்படுகின்றன.

அதே போன்ற நிலைதான் நம் பூமியைக் காட்டிலும் அதிக மான உஷ்ணத்தை ஈர்த்து வெளிப்படுத்தும் சில மண்டலங்களின் தொடர்பினால் நம் பூமியில், கோடையில் ஏற்படும் உஷ்ண விகித நிலை.

**18–5–80**

இதன் தொடரிலிருந்து உலகில் உள்ள உண்மை இயற்கைத் தன்மைகளை மெய்ஞானம் கொண்டு விளக்குகின்றோம். இதனை விஞ்ஞானத்தவர்களும் எடுத்து ஆராயலாம்.

நம் பூமியில் மட்டுமல்லாமல் அனைத்துக் கோளங்களுக்கும் பொதுவாய் உள்ள பால்வெளி மண்டலத்தில் நிறைந்துள்ள அமில குணங்கள் அதனதன் நிலைக்கொப்ப அதனதன் இனத் துடன் சென்று எப்படி ஐக்கியப்படுகிறது?

ஒவ்வொரு மண்டலமும் இயற்கைக் குணத்தில் எப்படியெல் லாம் வளர்ச்சி ஏற்படுத்திக் கொண்டது?

மழை வரும் காலங்களில் இடியும் மின்னலும் ஏற்பட ஏற்பட ஒவ்வொரு பூமியின் வளர்ச்சித் தன்மையும் கூடுகின்றது என்று அர்த்தம். இரண்டு அமில குணங்கள் மோதுண்டு, வான மண்டலத்தில் சுழலும் தன்மையில் அதன் மேல் மழை நீர் பட்டு, இடி ஏற்பட்டு அவ் இடியின் ஈர்ப்பு பூமியில் பதிந்து, அதன் நிலையில் வளரும் காளான்களின் வளர்ச்சியிலிருந்து புதிய புதிய இன இயற்கை வளங்கள் வளருகின்றன. எந்த நிலை கொண்டு?

பூமியில் காளான் வளர்ந்த பிறகு ஒன்றிரண்டு நாளில் அதன் நிலை மாற்றம் கொள்ளுகிறது. காளானிலிருந்து வெளிப் படும் அமிலத்தினால் அந்த நிலை காற்றாக பூமியில் படரும் பொழுது அதன் அமிலம் காற்றுடன் கலக்கப்பட்டு எந்தெந்த இடங்களில் அக்காற்றினால் அவ்வமிலம் படர்கின்றதோ அங் கெல்லாம் புதிய இன வளர்ச்சி ஏற்படும். மற்றும் இக்காளான் வகைகளிலேயே கணக்கிலடங்கா குண வகைகள் வளருகின்றன, மழைக் காலங்களில்.

பூமியில் மட்டுமல்ல, கடல்களிலும் நீர்நிலைகளிலும் பல வகைக் காளான்கள் மழைக்காலங்களில் ஏற்படுகின்றன,

மரங்களில் வளரும் காளானுல் ஒன்று, இரண்டு நாளில் அக் காளான் மடிந்து அம் மரத்தின் மேல் அக்காளான் செடி அழுகிய நிலையில் படர்ந்து, அம் மரத்தில் இருந்து வெளிப்படும் சுவாசக் காற்று, அவ்வழுகிய காளான் மேல் பட்டு அக்காளா னிலிருந்து ஆவியான அமிலம் மற்றென்றின் மேல் படும்பொழுது வேறு வகையான இன வளர்ச்சி தோன்றக்கூடிய உண்மை இதன் தொடரில்தான் வருகிறது.

இயற்கையில் ஏற்படும் எந்த நிலையிலுமே அதன் தொடரினுல் பல உண்மைகள் வெளிப்படும் நிலையில்தான், இயற்கையின் வளர்ச்சியே உள்ளது. நம் பூமியில் சூரியனின் மேலிருந்து நம் பூமிக்கு வரும் ஒளி அலை ஒன்றுபோல் உள்ளதா? என்று முந்தைய கால விஞ்ஞானத்திற்கும், இன்றைய விஞ்ஞானத்திற்கும் மாறு பட்ட கருத்துக்கள் ஏற்படுகின்றன.

உலகச் சுழற்சியில் ஏற்படும் இவ்வொளி அலைகள் ஒன்று போல் சுழன்ருலும் பூமி எடுக்கும் விதத்தில் அதனதன் நிலைக்குகந்த ஒளி அலையைத்தான் அப்பூமியினுல் எடுக்க முடிகின்றது. நம் பூமியில் சில இடங்களில் எரிமலை தோன்றுகிறது. சில இடங் களில் பனிமலைகள் உள்ளன. அந்த இடங்களில் உள்ள ஒளி அலைகளை பூமி எப்படி ஈர்க்கின்றது?

எரிமலையாய் கக்கும் அவ்வுஷ்ண பூமியில் அதற்குகந்த ஆகாரத்தை அது அதிகமாகத்தான் எடுத்துக் கொள்கின்றது. இவ்வொளி அலையின் மூலமாய்த்தான், நம் பூமியின் ஜீவனே வாழ்கின்றது. நம் பூமிக்கும் ஜீவனுண்டு, உணர்வுண்டு, உருவ சதைகளுமுண்டு. பூமியின் உள் நிலையை நம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக்கு அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. பூமியின் உள் நிலையில் உள்ள சக்திகளிலும் நம் செயற்கையின் ரூபம் காண நாம் விரையப்படுத்தி வாழ்கின்ருேம்.

வரும் இடியை இடிதாங்கியினுல் தடுக்கின்ருேம். இடி இல்லா விட்டால் இன வளர்ச்சிக்குகந்த இயற்கைத் தன்மையை நாம் பெற முடியாது. இயற்கையின் தாவர வளர்ச்சி அதிகம் கொண் டால்தான் நாம் இப்பூயில் வாழமுடியும்.

மனித ஆத்மாக்கள் இக்குறுகிய ஆண்டிற்குள் செயற்கைக்கு மிகவும் அடிமைப்பட்டு, இயற்கையைச் செயற்கையில் கண்டு வாழ்ந்து, இப்பூமியையே நிலைதடுமாற வைக்கின்ருர்கள்.

**20–5–80**

பூமியின் உள் நிலையை நாம் எப்படி விரையப்படுத்துகின்றோம்? பூமியிலிருந்து எடுக்கப்படும் கனி வளங்களைக் காட்டிலும் நம் பூமி ஈர்த்து வெளிப்படுத்தும் காந்த அமில சக்தியை மனிதனால் மின்சாரம் காண, காற்று அலையில் உள்ள சக்தியைக் காட்டிலும் பூமியிலிருந்து அதிக மின் அலைகளை எடுக்கின்றோம்.

இப்படி பூமியையே நம் செயற்கையின் சோம்பேறி நிலைக்காகப் பல சக்திகளை விரையப்படுத்துகின்றோம். ஆங்காங்கு உள்ள கனிவளங்களை எடுத்துவிட்டாலும், வளரும் இயற்கை வளர்ந்து கொண்டே இருக்க இன்றைய செயற்கை விஞ்ஞானம் தடைப் படுத்துகின்றது. பல ஆயிரம் ஆண்டு காலங்களாக பூமியிலிருந்து தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களை எடுத்துவந்தே உள்ளார்கள். எடுக்க எடுக்க இவையும் வளர்ந்தன.

ஆனால் இக்குறுகிய நூற்றாண்டுகளில் பெட்ரோலிய இன திரவத்தையும், மின்சாரம் காண்பதற்காக காந்த அலையின் அணு சக்தியையும் நாம் உறுஞ்சி எடுத்ததினால் பூமியில் வளர வேண்டிய கனிவளங்களுக்குகந்த ஆகாரமான இவ்வமில குணங்களெல்லாம் தடைப்பட்டவுடன் அதன் வளர்ச்சியும் குன்றிவிட்டது, பொன் முட்டையிடும் வாத்தின் கதையைப்போல். வாத்து தானாக தினசரி இட்ட முட்டைகளை பேராசைகொண்டு ஒரு நாள் அவ்வாத்தை அறுத்துப் பார்த்த நிலையைப்போல், நம் பூமியின் நிலையை நம் மனிதர்கள் சிதறடித்து விட்டனர்.

மனிதனின் எண்ண வளர்ச்சியிலும் அறிவாற்றலிலும், ஞானத்திலும் வேகமில்லை. ஆனால் நினைத்தவுடன் நினைத்தது நடக்க வேண்டுமென்ற பேராசையின் வெறி வேகம் மனிதனுக்கு மிகவும் துரிதப்பட்டதினால் இயற்கையின் பொக்கிஷத்தை அழித்து வாழ்கின்றோம்.

இயற்கையின் சக்தியே ஒன்றுடன் ஒன்று கலந்து கலந்து, ஒன்றிலிருந்து வெளிப்படும் அமிலமானது மற்றொன்றில் மோதி, மற்றொரு புதிய உயிர் ஜீவன்கொண்டு, அதிலிருந்து வெளிப்படும் அமிலம் அதற்குகந்த தன்மையில் மாறுகொண்டு, மாறி மாறியே வளர்ந்து வருகின்றது, தொடர் வளர்ச்சியாக. உங்களின் வினாவை எழுப்பலாம். இப்பூமியின் அமில குணம் இப்பூமியின் காற்று மண்டலத்திலேயே தான் உள்ளதென்கின்றீர். அப்படி இருக்க பூமியிலிருந்து பிரித்தெடுக்கும் சக்தி குணங்கள் மாறுபட்டால் மீண்டும் நம் பூமியின் ஈர்ப்பில் தானே நிலைபெற வேண்டு

மென்று. ஒன்றிலிருந்து பிரிக்கப்படும் அமிலமானது அதன் இன நிலையிலிருந்து ஆவியாய் காற்று மண்டலத்தில் சுழலும் நிலையில் அவ்வமிலத்துடன் மற்றொரு அமில நிலை மோதுண்டு அது ஏற்காத நிலையில், பிரியும் நிலையில் அதிலிருந்து ஒருவகை அமிலம் வெளிப் படுகின்றது.

அதுவுமல்லாமல், மழை வரும் காலங்களில் ஏற்படும் இடி யினால்தான், இவ்வுலகின் பல இயற்கையின் குண அமில வர்க் கங்கள் மாறுபாடு கொண்டு வளர்கின்றன. இப்படியே மாறு கொண்டே அமில வளர்ச்சியில் சுழன்று ஓடும் நிலையில் மாறுபடும் இயற்கையின் வழித்தொடர் கொண்டு நாம் வாழ்ந்து வருகின் றோம். எல்லா வகை இயற்கை வளங்களுமே உருவிலும், சுவை யிலும் வண்ணத்திலும், ஒளியிலும், ஒலியிலும் நீரிலும் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டேதான் உள்ளது. நம் நிலைக்கு ஒன்றுபோல் உள்ளனவாகத் தெரிபவையும், சிறுகச் சிறுக அதன் நிலையிலும் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டே தான் உள்ளது.

இந்நிலை எல்லா மண்டலங்களின் நிலைக்கும் ஒத்ததுதான். நம் பூமியின் நிலையில் மட்டும் இப்பூமியின் மாறிடும் தன்மை குணத்தில் ஏற்படப்போகும் நிகழ்ச்சிக்கு மனித ஆத்மாவினால் நிகழுகின்றது என்ற குற்ற உணர்வை ஏன் காணல் வேண்டும்? இயற்கையின் உந்தலினால் மனித எண்ணமே செயற்கை காண வழிபட்டதற்கு மனிதனைக் குற்றம் காணலாமா? என்ற வினா எழும்பலாம்.

மனிதனால் ஏற்படுத்திக்கொண்ட இத்தீய அமில குணத் தினால் தான், நம் பூமியின் இயற்கை பாழ்பட்டது. மனிதனால் அரசர்கள் என்றும், தேவர்கள் என்றும், அசுரர்கள் என்றும், மனித ஆத்மாவுக்குகந்த குணத்தைப் பிரித்துக் கண்டு, ஒருவனை உயர்த்தி ஒருவனை அடிமை கொண்டு வாழ்ந்த எண்ணத்தில் போட்டி, பொறாமைகள் ஏற்பட்டு பேராசையில் அதிகப் பொருள் சேர்த்து ஒருவனை அழிக்க ஒருவன் வாழ்ந்து வந்ததின் நிலையினால் குண அமிலங்களில் மாறுபட்டு இயற்கையிலிருந்த அணுகுண்டு களையும், அணுக் கதிர்களையும் காற்று மண்டலத்தில் கலக்கவிட்டு, இயற்கையைப் பாழ்படுத்திய மனிதனால்தான், நம் பூமியின் நிலை, நிலைதடுமாறப் போகின்றது.

**24–5–80**

இக்கலியில் பூமியின் நிலையையே நிலைதடுமாற வைப்ப வனும் இம் மனிதன்தான். இப்பூமி நிலைக்க கல்கி யுகம்

காணச் செயல்படுத்தப் போகிறவனும் இம் மனிதன்தான். மனிதன் மனித ஞானம் பெற்ருல் மனிதனுல் மனித ஆத்மாக்களே பலவாக நிலே நிறுத்த முடியும்.

இன்று நம் பூமியில் மனிதக் கரு வளர, நம் பூமி மனித ஆத்மாக்களே வளர்க்கும் தன்மை கொள்ள, வியாழனில் இருந்து மீண்ட மனித ஆத்மாக்கள் இருந்ததினுல்தான், மீண்டும் நம் பூமி வளர்ந்த பிறகு, நம் பூமியில் மனித ஆத்மாக்கள் வாழக் கூடிய கருவே வளர்ந்தது. பல சப்த ரிஷிகளும் அவர்களின் வழித் தொடர் பெற்ற பல நிலே கொண்டவர்கள் இருந்தாலும், இப் பூமியில் வாழ்ந்த மனித ஆத்மாக்களின் சக்தி நிலே உயர்ந்து தன் ஞானம் பெறும் ஆத்மாக்கள் வளர்ந்து இப்பூமியின் மாற்றக் காலத்தில் இம் மனித வாழ்க்கையில் கொண்டுள்ள ஆசா பாசங் களிலும், நித்தியக் கடன்களிலும் மூழ்கியே இக்கலியின் மாற்றத் தில் வாழ்ந்திடும் மனித ஆத்மாக்கள் கலி மாறும் தருணத்திலும், அதே சுழற்சி ஓட்டத்தில் இருந்துதான், இதிலிருந்து மீள முடி யாமல் மீண்டும், அறிவு ஞானம் கொள்ளும் மனிதக் கரு வளர்ந்து, அக்கருவின் செயலிலிருந்து தான் மனித உருவங்களே இச் சூரி யனேச் சுற்றியுள்ள 48 மண்டலங்களின் வளர்ச்சியில் மனித ஆத்மாக்கள் வாழும் நிலே பெறும்.

நம் சூரியனின் சுழற்சியில் பல மண்டலங்கள் ஓடினுலும், நம் பூமியின் நிலேக்கொப்ப மனித ஆத்மாக்கள் வாழக்கூடிய இச்சக்தி மண்டலத்தின் கலி மாறி கல்கி யுகம் பெற்று நம் பூமி சுழலும் தருணத்தில் இன்றைய நிலேயில் வாழும் ஆத்மாக் களின், பல கோடி எண்ணங்களே மாற்றிச் செயல்புரிய பல சக்தி நிலேகள் செயல்கொண்டு, செயலாற்றித்தான் கல்கி யுகம் வாழ முடியும்.

இவ்வுலக மாற்றத்தினுல் இவ்வுலகிலுள்ள மனித ஆத்மாக் களின் உடல் அழிந்தாலும், அவர்களின் உயிரணுவும், உயிராத் மாவும், சப்த அலேகளும் சகல எண்ணத்தில் விட்ட சுவாச அலே களும் பூமியின் சுழற்சியில் சுழன்றுள்ள நிலேயில், மீண்டும் கலி பிறந்தால், இவ் எண்ண வளர்ச்சி எங்கு செல்லும்? இப்பூமியின் காற்று மண்டலத்தில் கலந்துள்ள இந் நிலேகள் எல்லாமே அடுத்த நிலேக்கு வர ஏதுவாகின்றதா? என்ற வினு எழும்பலாம்.

இதன் நிலேயில் இக்கலி மாறி கல்கி வரும் தருணத்தில் சில நிலேகள் ஏற்படலாம், எந்நிலேகொண்டு?

இப்பூமியின் மாற்றத்தினுல் இப்பூமியில் இன்று வாழும் மனித ஆத்மாக்களும், பலகோடி ஜீவஜெந்துக்கள் தாவரங்கள் இன்று

பூமியில் வளர்ந்துள்ள கனி வளங்கள், நீர் நிலைகள், மனித உடலை விட்டுப் பிரிந்து வாழும் அனைத்து உயிராத்மாக்கள், உயிரணுக்கள், இது நாள் வரை நம் பூமியின் காற்று மண்டலத்தில் நிறைந்துள்ள சப்த அலைகள் அனைத்து நிலைகளுமே இப்பூமியின் மாற்றம் நிகழும் தருவாயில், பல நிலைகள் மாறி, கலியில் இன்றளவும் வளர்ந்து விட்ட நிலையில் மாற்றம் காணப்போகின்றோம்.

பல கோடி ஆண்டுகளாய் மாறாமல் சுழன்றுள்ள பலரின் சுவாச அலைகளெல்லாம் இன்று நாம் எடுக்க முடியும். இராமாயண காலத்திலும், கிருஷ்ணாவதார காலத்திலும், மச்சாவதார காலத்திலும் மனித ஆத்மாக்கள் விட்ட சப்த அலையை இக் காற்றிலிருந்து அதன் சுழற்சி வட்டத்தில் ஞானம் பெற்றோரினால் ஈர்த்து எடுக்க முடியும். ஆனால் இக்கலியின் மாற்றத்தினால், இந் நிலையும் மாறப் போகின்றது. எந்நிலையில்?

இன்று இக்காற்று மண்டலத்தில் வாழ்ந்தவரின் சப்த அலைகள் அனைத்துமே உள்ளனவா? என்ற வினா எழும்பலாம்.

இராமாயண காலத்தில் உள்ள நிலைகளைக் காவியமாய்ப் படைத்து இன்றளவும் அந்த இராமாயண கதை மனித ஆத்மாக் களிடம் கலந்துள்ள நிலையில் இச்சப்த அலையின் ஈர்ப்பும், அதன் நினைவு சக்தி சுழன்று உள்ள ஜீவ ஆத்மாக்கள் உள்ளவரை எச் சப்த அலையும் மாறாது. பல கோடி ஆண்டுகளானாலும் அதன் தொடர் வட்டத்தில் செயல்படும் சப்த அலையின் நிலை சக்தி மாறாது. இக்கலியில் மாறுகிறதென்றால், இவ்வுலக மாற்றத்தில் ஏற்படும் அதிர்வினால், சில ஒளி அலைகள் நம் பூமியின் காற்று மண்டலத்திற்கு மேல் அனைத்திற்கும் பொதுவான பால்வெளி மண்டலத்தில் கலந்துவிடும் நிலை பெறுகின்றது.

இன்னும் பல சப்த அலைகள் இப்பூமியின் ஈர்ப்பில் இவ்வதிர் வினால், மோதுண்டு இப்பூமியுடன் கலக்கும் நிலை பெறுகின்றது. பலப்பல மாற்ற நிலைகள் இக்கலி மாறிக் கல்கியில் காணப்போகின் றீர்கள். இவ் ஈஸ்வரப்பட்டன் உணர்த்தும் நிலை பைத்தியமாகத் தோணலாம். இன்னும் ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மனித ஆத்மாக்களின் எண்ண நிலை தடுமாற்றம் கொள்ளப் போகின்றது.

இன்று உலகின் பல திரையறியச் செயல்படும் கருவிகளும், இக்காற்றிலிருந்து ஈர்த்து ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத் திற்கு ஒலி அலைகளைப் பரப்பி வாழும் நிலையில், மற்றும் மனிதனால் செயற்கைக் கோள்களை ஏவி விட்டு அதிலிருந்து உணரும் ஒளி

அலைகளும், ஒலி அலைகளும் இவர்கள் இன்று செயலாற்றும் முறைப்படி செயலாகாது. இயந்திரத்தைத் துணைகொண்டு காற்று மண்டலத்தில் இவர்கள் இன்று பிரித்து எடுக்கும் நிலை யெல்லாம் செயல்படுத்தும் முறையில் இன்றுள்ள நிலைக்கொப்ப செயலாக்க முடியாமல் அதற்காக இன்னும் பல புதிய சாதன முறைகளை மனிதன் உருவாக்கப் பார்ப்பான்.

இக்காற்று மண்டலத்தின் விஷத்தன்மை கூடி, ஆவி உலகில் வாழும் ஆத்மாக்களின் வெறி உணர்வும் அதிகப்பட்டு, எண்ணி லடங்கா விபரீத நிலைகள் ஏற்படும் தொடர் இனி வரப்போகும் ஐந்து, ஆறு வருடகாலத்தில் நிகழத்தான் போகின்றது. மனித ஆத்மாக்களே, உங்களை நீங்கள் உணர்ந்து, என்றிருந்தாலும் மடியத்தான் போகின்றீர்கள் என்று எண்ணம் கொள்ளாமல், மனித ஆத்மாக்களால்தான், நிகழப்போகும் சக்தியை மனிதன் உணர்ந்து செயல்படத்தான் பல நிலைகளைப் போதிக்கின்றோம். மனிதனாய் அறிவுகொண்டு, அன்பு பட்டு, ஞானம் பெற்றிட வாருங்கள். இம்மனித ஆத்மாவிற்குத்தான் அறிவாற்றலை வளர்க் கும் ஆற்றல் உண்டு. அறிவு நிலைகொண்ட மிருகங்கள் வாழ்ந் தாலும் மனிதனை ஒத்த ஞான சக்தி பெறும் தன்மையற்ற நிலையில் தான் மிருக இனம் உள்ளது. தேவனாய் வாழக்கூடிய மனிதன் தன் நிலை உணர்ந்தால் தேவனாகலாம்.

**30–5–80**

தன் சக்தி நிலை கூடக்கூட, ஆத்ம பலம் வலுவேறி, தன் உயிராத்மாவிற்கு வீரிய உரம் ஏற்றி, தன் பலம் என்னும் உண்மை பலத்தை, இம் மனித ஆத்மாக்கள் பெறக்கூடிய நிலை பெற வேண்டும். தன் பலம் பெறத்தக்க வழி முறைகளைப் பல உணர்த்தியுள்ளோம். மண் மணலாகி, மணல் உருண்டு வளர வளரச் சிறு கல்லாகி, பாறையாகி, மலையாகி வாழவில்லையா?

ஒன்றுடன் ஒன்று சக்தி நிலை கூடிக்கூடி, வலுப்பெற்று வளர்ந்து கொண்டே தான் உள்ளது. மனிதனின் வளர்ந்த நிலை தான் எல்லாவற்றின் ஐக்கியமும். அறிவாற்றல் கொண்டுள்ள மனிதன், தன் ஞானத்தை இவ்வழித்தொடரில் உரம் பெற்று, ஆத்ம பலம் பெறப்பெற மனிதனின் உயிரணுவின் வளர்ச்சி நிலை வளரப்பெறுகிறது. உயிரணுவாய், உயிராத்மாவாய் இச் சுழற்சி வட்டத்தில் பிறந்து வாழும் நாம், ஒவ்வொரு இயற்கையும் பலவாக வளரும்பொழுது, இயற்கையின் உயர் சக்தி மனிதன்,

தன் உயிராத்மாவிற்கு உரம் கூட்டி, அவ்வுயிராத்மாவை வளர்க்கக் கூடிய பக்குவ ஞானத்தைச் செயல்கொண்டு வளர்த்திட்டால், இம் மனிதனின் உண்மையின் உயர்ந்த பலம் கூடி உயர்நிலை பெறலாம்.

காற்றில்தான் சகலமும் கலந்துள்ளன. அக்காற்றிலுள்ள அமில குணத்தில் தனக்குகந்த சக்தியை ஒவ்வொரு இயற்கை குணங்களும் அதற்குகந்த அமிலத்தை ஈர்த்து வளர்க்கும் செயலைப் போல், மனிதனாய் வாழும் நாமும் நம் எண்ணத்தை இவ் இயற்கையில் காற்றுடன் கலந்துள்ள அமில சக்தியில் பலவும் உள்ள பொழுது, இவ்வெண்ணத்தைக் கொண்டு நாம் எடுக்கும் சுவாசத்தினால், நாம் எடுக்கக் கூடிய எண்ணநிலைக்கொப்ப, அதன் செயல் கொண்ட அமில குணத்தின் சக்தியை, நம் சுவாசம் ஈர்த்து, நம் உயிராத்மா பலம் கொள்கின்றது.

இக்காற்றிலும் நீரிலும் இருந்துதான் மின் அலையை எடுக்கின்றார்கள். இவ்வுலகினில் தோன்றும் மின் அலைகளின் துளிகள்தான் உயிரணுக்கள் யாவையுமே. உயிர்த் துடிப்பு ஏற்படவே அம்மின்அலை இருந்தால்தான் செயல் கொள்ள முடியும். நீரைப் பாய்ச்சி, சுழலவிட்டு மின் அலையை எடுத்து, ஒளியையும் பல இயந்திரங்களை இயக்கவும், சாதன முறை கொண்டு செயலாக்குகின்றோம்.

இப்பூமி பல மண்டலங்களில் இருந்து வரும் ஒளி அலைகளையும், அம் மண்டலங்களின் இயற்கை குணத்தையும், ஒன்றுக்கொன்று ஈர்த்து எடுக்கின்ற தென்றால், காந்த அலையின் ஈர்ப்பினால், ஒவ்வொன்றும் சுழன்று செயல்படுகிறது. நம் பூமி சூரியனின் ஒளி அலையை ஈர்த்து வெளிப்பட்டு, இவ்வுலகச் சுழற்சி ஓட்டத்தில் ஓடியே செயல்படுவதுவும், ஒவ்வொரு உயிரணுவும், ஜீவ உடல்களும் வாழுகிறதென்றால் காந்த மின் அலையின் சக்தி நிலையில் இருந்துதான் எல்லாமே செயல் கொள்கின்றன.

மின்சாரத்தை விஞ்ஞானத்தில் மட்டும் காண்கின்றீர். இவ்வுடலும் மற்ற எல்லாமுமே மின் அலையின் கூட்டுத்தான். மிகவும் சக்தி வாய்ந்த உயிரணுவின் ஆத்மக் கூட்டை, இவ்வுடல், என்ற பிம்ப வாழ்க்கைக்குச் சொந்தப்படுத்தி இப்பந்தச் சுழற்சியிலேயே நம் சக்தியையும், செயலையும் விரயப்படுத்துவதோடல்லாமல், பல சஞ்சலங்கள் கொண்ட ஆவேச உணர்ச்சியிலெல்லாம் நம் உயர் சக்தியை நம்மை அறியாமல் விரயப்படுத்துகின்றோம்.

பல கோடிகோடி உயிரணுக்களின் துணைகொண்டு உயிர் வாழும் நாம், இவ்வட்டச் சுழற்சியில் வாழ்க்கையென்ற நிலையிலும்

நிறைவு பெருத வாழ்க்கையை வாழ்ந்து இம்மனிதனுய் வாழ்ந்த, வாழக்கூடிய செயல்பெற்ற நாம், இவ்வெண்ணச் சுழற்சியை எதற்கும் பயன்படாத நித்தியக் கடனில் மூழ்கி வாழ்கின்ரேம்.

தன் உயிராத்மாவை நல் ஞானம் பெறும் வழி பெற்ற ஞானியின் செயலினுல் என்ன பயன் என்ற வினுவும் எழும்பலாம். உயிராத்மாவின் வலுவைக் கூட்டுவதினுல் என்ன பயன் என்ற வினுவும் எழும்பலாம். பயன் கண்டு, இச் சுழற்சி வாழ்க்கையில் வாழ்ந்து மட்டும் எப்பயனே எவ்வாத்மா (சாதாரண நிலேயிலுள்ள ஆத்மா) கண்டது?

ஆதி சக்தியின் பரம்பொருளின் உண்மையை அடைய, உணர பல ஆத்மாக்களுக்கு ஆவல் உண்டு. தன் உயிரணுவின் ஆத்ம பலத்தை நாம் கூட்டிக் கொண்டால், அப்பரம்பொருளின் சக்தி அலேயில் உள்ள உயர்ந்த சக்தியின் ஈர்ப்பை நம் எண்ணத்தினுல் ஜெபம் கொண்டு ஈர்க்கவல்ல முறைபெற்று, நம் உயிராத் மாவிற்கு நல் உரத்தை நாம் சேமிக்கலாம். நம் எண்ணத்தை பல நிலேகளில் செயல்படுத்தி வாழ்ந்து, நம் உடலில் உள்ள பல கோடி உயிரணுக்களேயும், அதனதன் எண்ண நிலேக்கொப்ப வாழ விடாமல் அனேத்து உயிரணுக்களும், நம் உயிரணுவிற்கு நாம் எண்ணும் ஒரு நிலேகொண்ட எண்ணத்தில் செயல்படும் வழி முறை கூட்டி, வாழ்க்கையில் ஏற்படும் எந்த நிலேக்கொப்ப எண் ணத்தின் தொடரின் ஈர்ப்பிலும் நாம் சிக்காமல், அதிலிருந்து ஒதுங்கி சலிப்புற்றும் வாழாமல், எவ்வட்டச் சுழற்சி எண்ணத்தை யும் நாம் எண்ணியே அடிமைப்படாமல், பரம்பொருளின் உண்மை சக்தியின், வீரிய குணத்தின் அலேத்தொடரில் ஐக்கியம் கொண்டே வாழக்கூடிய பக்குவம் நாம் பெறுவதுதான், நம் உயிராத்மாவின் பலத்தைக் கூட்டிக்கொள்ளும் நிலே.

நாக சர்பம் விஷத்தையே ஈர்க்கும் சுவாச குணமுடையதாய் இருப்பதினுல், அதன் எண்ண நிலே எதன் நிலேக்கும் மாறு கொள் வதில்லே. விஷ ஜெந்துவாய் நாம் காணுகின்ரேம். அவ்விஷத் தையே உரமாக்கி, வைரமாக்கி, மாணிக்காமய் சேமித்து வளர்த்து ஒரு நிலேயில் வாழுகின்றது அந்நாக சர்பம். பல நினேவலேகள் பலவும் உள்ளவன்தான் மனிதன். பலவற்றில் ஒன்ருன உயர் அமில ஞான குணத்தை எண்ணிடும் வழி முறையைத் தான் பெறல் வேண்டும். பெற்று தன் பலம் காணுங்கள் என்று உணர்த்து கின்ரேம்.

இயற்கையிலுள்ள அனேத்து நிலேகளுமே அதனதன் குண வட்டத்தில்தான் ஒரு நிலேயில் ஈர்த்து, வளர்ந்து வாழுகின்றன.

ஒன்றுடன் ஒன்று வளர்ச்சி பெற்று வளர்ந்துள்ள இயற்கையில், இஜ் ஜீவ ஜெந்துக்களின் நிலையில்தான் பல மாற்ற குணங்கள் உண்டு. தன் நிலையுணர்ந்து மனிதன் வாழ்ந்தால் உலக ஞானத்தையும், மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி என்று உணர்த்தும் அப் பரம்பொருளின் உண்மையையும் உணர முடியும்.

**8–6–80**

ஜீவ ஜெந்துக்களுக்குத்தான் உண்டு, கழிக்கும் குணமுண்டு. இயற்கைக்கு ஜீவன்களைப்போல் உண்டு கழிக்கும் தன்மையில்லை. எல்லாத் தாவரங்களுமே அதற்குகந்த வளர்ச்சிக்கு வேண்டிய சத்தைமட்டும் சூரியனில் இருந்து நேராக எடுத்து வாழ்கின்றன. ஆனுல் தாவரங்கள் பிறகுதான் ஜீவ சக்தி பெறுகின்றன. எல்லா மண்டலங்களின் சுழற்சியின் கூட்டுடன் சூரியனின் ஒளி அலையை, அமிலத்தன்மையைப் பெறும் ஆரம்ப உயிரணு திடமாய் இப்பூமியின் ஈர்ப்பில் படர்ந்து, தாவரமாய் வேர் ஊன்றி அதன் தன்மை மாறுபட்டு, ஆவியாய் அமிலம் பெற்று, மீண்டும் மீண்டும் அதன் வளர்ச்சி நிலை சுழற்சியில் ஏற்படும் உயிரணுக்கள் அதன் சக்தியைக் கொண்டு பூமியின் ஈர்ப்பிற்குச் செல்ல முடியாமல் மற்ற ஜீவனின் கர்ப்ப நிலையில் உண்டு கழிக்கும் வளர்ச்சிக்குகந்த ஜீவிதத்திற்குத்தான் வருகிறது.

இடியிலும், மின்னலிலும் ஏற்படும் அதிர்வினுல் பூமியின் ஈர்ப்புத்தன்மையில் வான மண்டலத்திலுள்ள அமில குணங்கள் படர்ந்து காளானுய், புல் பூண்டாய், இன்னும் எப்பலனும் தராத பல தாவர வர்க்கங்களாய், அதற்குப் பிறகு அதன் நிலை மாறு கொண்ட அமில குணங்களினுல் வளரும் தாவரத்திலிருந்து புஷ்பம் தரவல்ல நிலை பெற்று, அதிலிருந்து வெளிப்படும் அமில குணத்தின் நிலை மீண்டும் வளர்ச்சியுற்றுப் பல பலன் தரத்தக்க கனிமரங்களாகின்றன.

பல தாவரங்கள் எப்பலனும் தராத நிலையில் இவற்றின் வளர்ச்சியினுல் எப்பலன் நாம் பெறுகின்றேம் என்று எண்ணுகின்றேம். ஒன்றிலிருந்து ஒன்ருகத் தான் வளர்ச்சி நிலை கூடி ஜீவஜெந்து வந்து மீண்டும் தாவரங்களின் நிலையிலிருந்தே நம் ஜீவனுக்கு உணவாகவும் எடுத்துக் கொள்கின்றேம். காளானுய் புல்லாகி, பூண்டாகி, பூவாகி, கனியாகி ஜீவன் பெற்ற நாம் மீண்டும் நம் ஜீவனுக்கு அதையே உணவாக உண்டு, கழித்து அக் கழிவினுல் பலவித இன வர்க்கங்கள் புழுவாய், வண்டுகளாய் கொசுக்களாய் இவற்றின் தொடர் வட்ட வளர்ச்சியில் மாற்ற

குணங்கள் பல ஏற்பட்டு ஏற்பட்டு ஒன்றிலிருந்து ஒன்ருகி இச் சுழற்சி வட்டத்தில் எண்ணிலடங்கா சக்தியுடன் வாழும் நாம், நமக்கு இச் சக்தியை அளித்துள்ள சூரியனின் ஒளி அலையை நம் சுவாசத்துடன் எடுக்கும் எண்ணம் கொண்டு ஈர்த்து வாழும் வழிபெற்ருல் நம் சக்தியின் நிலை கூடும்.

இல்லங்களில் இருந்து கொண்டும், தன்னிச்சையில் வாழும், பொழுதும், சூரியனின் ஒளி அலை ஒன்றின் மேல் பட்டு அது வெளிப் படுத்தும் எதிரலையில் வாழும் நாம், எல்லாமில் எல்லாமுமாக வளர்க்கும் சூரியனின் ஒளி அலையை நாம் எடுக்கும் எண்ண நிலைக் கொப்ப, நம் சுவாசத்தில் ஈர்த்து நல் சக்தியை நமதாகப் பெறும் சக்தியை எடுக்கவும்.

**13–6–80**

வாழ்க்கையுடன் கூடிய வழி முறை, நெறிமுறையிலெல்லாம் எந்நிலையிலும் சமமான ஒரு நிலைகொண்ட எண்ணமுடன் கூடிய சுவாச அலையை எடுக்கவல்ல சக்தி அமில குணத்தைப் பெற வல்ல வழிமுறையை நாம் அமைத்துக் கொண்டால், அதன் நெறி முறை யில் வழித்தொடர் கொண்டு நம் ஜெப நிலை இருக்குமானுல், அஜ் ஜெப முறையினுல் நாம் இழுக்கும் சுவாசமானது சூரிய னிலிருந்து வெளிப்படும் அமில சக்தியில் உள்ள புதிய அமில குணத்தை நேராக நம் உயிரணு எடுக்க எடுக்க நம் உயிரணுவின் சக்தி வலுப்பெற்று வளர்ந்து அதன் தொடரினுல் ஞான ஒளி அலையின் ஈர்ப்பு குணம் அதிகப்பட்டு எவ்வெண்ணத்தைப் பாய்ச்சி எக் குண அமிலத்தையும் நமதாக ஈர்க்கவல்ல சக்தி நமக்கு ஏற்படும்.

புதிய குண அமில சக்தி என்று உணர்த்தினேன். சூரியனி லிருந்து மற்ற மண்டலங்களின் ஈர்ப்பின் மோதலில் இருந்து உரு வாகி இப்பூமியில் படர்ந்து, அதிலிருந்து உண்டாகும் உயிரணுவின் சக்தி நிலை வேறு. சூரியனின் அமில குணம் ஏற்கனவே வளர்ச்சி பெற்று, வாழ்ந்து, மடிந்து அதிலிருந்து வெளிப்படும் வெக்கையின் மேல் சூரியனின் ஒளி அலை பட்டு அதிலிருந்து உண்டாகும் உயிரணு வின் தன்மை வேறு.

ஒன்றின் சக்தியின் மேல் சூரியனின் ஒளி பட்டு வளரும் உயிரணுவின் வளர்ச்சி நிலை வேறு, சூரியனின் நேராக அமிலத்தில் வளரும் உயிர் அணுத் தன்மை வேறு. தாவரங்களிலேயே ஒன்றிலிருந்து எடுத்த விதையை மீண்டும் பயிராக்க சூரியனின்

ஒளி அலே பட்டுத்தான் அது ஜீவன் பெறுகின்றது. அவ்விதையின் மேல் அவ்வொளி பட்டவுடன் அவ்விதையின் அமில குணத்திற் கொப்ப சூரிய ஒளியின் சக்தியில் உயிர் பெறும் உயிரணுவின் வளர்ச்சி குணமானது, அவ்விதையின் அமில வளர்ச்சியில் வெளிப் படும் தாவரம் வளர்ந்து, அதன் இனப் பலனே தருகின்றது. அதைப்போல் மீண்டும் மீண்டும் பிறக்கும் மனித ஆத்மாக்களின் வளர்ச்சி நிலேயும், இப்பூமியிலிருந்து வாழ்ந்து வெளிப்படும் அமில குணங்களும், உயிரணுக்களும் ஒன்றிலிருந்து பிரிந்த உயிரணுக் களின் தன்மை வலுக் குறைந்ததாகி இப்பூமியின் ஈர்ப்பில் மோதுண்டு பூமியில் படர்ந்து வேர் ஊன்ற முடியாமல், காற்று போன்ற கனம் குறைந்த உயிரணுக்களாய் பூமியின் மேல் படர்ந்து கொண்டுதான் இவ்வுயிரணுக்களெல்லாம் உள்ளன. மீண்டும் இப்பூமியின் ஈர்ப்பில் வளர்வதற்கு இவ்வுயிரணுக்கள் ஜீவன்களின் சுவாசத்தில் படர்ந்து, உயிர்பெற்று ஜீவனுகி இப்பூமியின் ஈர்ப்பில் வாழ முடியும்.

பூமியின் ஈர்ப்பில் வாழ்ந்த ஜீவ ஜெந்துவில் இருந்து பிரியும் பல கோடி உயிரணுக்கள் மீண்டும் மீண்டும் பூமியின் மேல் படர முடியாமல், இக்காற்றுடன் கலந்து, படர்ந்து, சுழன்றே இப்பூமியின் மேல் ஈர்ப்புடன், பூமியின், சுழற்சியுடன் ஓடியே வருகின்றன.

பல கனி வளங்களேத் தரவல்ல அமில குணங்கள் அதன் கெட்டித் தன்மையினுல் அதனதன் குண அமிலத்துடன் அதனதன் ஈர்ப்பு இனத்துடன் சேர்ந்து வருகின்றது. இதன் நிலேயிலிருந்து நம் சக்தி வலுவை நாம் நேராக சூரியனின் ஒளி அலேயிலிருந்து பெறவல்ல தன்மை பெற்ருேமானுல் நம் உயிரணுவின் கனம் கூடி விட்டால் அதன் ஈர்ப்பு நிலேக்கொப்ப சூரியனிலிருந்து நேராக நம் சக்திக்குகந்த அமிலத்தை நம் உயிரணு தானுக எடுக்கும் நிலே பெற்றுவிட்டால் மற்ற ஜீவனற்ற உயிரணுக்கள் நம் சுவாசத் துடன் கலக்கும் வலுவிழந்து விடுகிறது. இதன் வழித்தொடரின் நிலே உயர உயரத்தான், நம் சக்தி நிலே வலுப்பெறுகிறது. இதன் தன்மையில் வலு ஏற்றிக் கொண்டால், நம் தன்மையுடன் எவ் வணுவின் ஆசை நிலேயின் உந்தலும், அதன் குண நிலேயின் எண்ணமும் நம்மைச் சாடாது. அதன் எண்ணக் கனவில் நம் ஈர்ப்பும் செல்லாது. இதனே உணர்ந்து நம் நிலேயின் வளர்ச்சியை நாம் பெறல் வேண்டும்.

**14–6–80**

இயற்கைத் தாவரங்களும், கனி வளங்களும் அந்தந்தக் கால நிலேக்கொப்பத் துளிர்விட்டு, வளர்ந்து, மொக்காகி, பூவாகி,

காயாகி, கனிந்து பலன் தந்த பிறகு அவ் இலைகளெல்லாம் முற்றி, பழுத்து, உதிர்ந்து மீண்டும் துளிர்விட்டு, அந்தந்தக் கால குணங்களுக்கொப்ப அத்தாவரத்திற்கு வேண்டிய ஈர்ப்பு குண அமில மண்டலங்களின் செயல் சக்தியை ஒவ்வொரு காலங்களிலும் வெளிப்படுத்துகின்றன.

தாவரம் மட்டுமல்ல பூமியின் கனி வளங்களான உலோக வளர்ச்சியின் ஈர்ப்பு குணமும் இதன் நிலைக்கொப்பத்தான் செயல் படுகிறது. சில காலங்களில், சில தாவரங்கள் அதிகப் பலன் தருகிறது. அதே இனத் தாவரம் அடுத்த வருடத்தில் முந்தைய வருடப் பலனுக்கொப்ப நிலையின் விகிதத்தை நாம் எந்தப் பராமரிப்பு செய்தாலும் அதன் பலன் மாறுகொள்கின்றது. சிலமலர் வகைகள் மலைப்பிரதேசங்களில் பல வருடங்களுக்குப் பிறகுதான் அதனுடைய வளர்ச்சியைக் காண முடிகின்றது (குறிஞ்சிப்பூ). அதன் நிலை எப்படி?

அத் தாவரத்திற்கு வேண்டிய சக்தி அமில குணத்தின் தொடர்பு இப்பூமியின் ஓட்ட ஈர்ப்பில் சந்திக்கும் மண்டலத்தின் கால கட்டத்தைப் பொறுத்துத்தான் அத் தாவரத்திற்கு வேண்டிய அமில குண சக்தி கிடைத்து அப் பூ பூக்கின்றது. ஒவ்வொரு விதமான கனி, காய்கறி இவற்றை நாம் பயிர் செய்கின்றோமென்றால், அதற்குகந்த ஈர்ப்பு குண அமில நிலைகள் எங்கிருந்து வந்தன?

இப்பொழுது எந்தத் தருணத்திலும் எந்த வகையான பலன் தரவல்ல மகசூலைக் காண்கின்றோமென்றால், இன்றைய மனிதனால் செய்யப்பட்ட இரசாயன அமிலத்தின் நிலைகளைப் பரப்பி எடுக்கின்றான். ஒரு இன வகை தாவரத்திற்கு இடப்படும் இரசாயன முறைகளை மற்றவை ஏற்பதில்லை.

இயற்கையில், ஆதியில் அந்தந்தக் காலங்களில் செய்யப்படும் பயிர் நிலைக்கொப்ப விளைந்ததின் நிலையெல்லாம் நம் பூமியின் ஓட்டத்தினால் நம் பூமி சந்திக்கும் மற்ற மண்டலங்களின் நிலையுடன் கூடிய அமில குணங்கள் வெளிப்படுத்தும் சக்தியைக் கொண்டு வளரும் பயிர் இருந்தது அன்று. அதன் சுவையும் மணமும் இயற்கையுடன் கூடியதாக இருந்தது அன்று. இன்றைய நிலைகள் மாறிவிட்டன. ஆனால் மனித ஆத்மாவிற்கு இக்கால நிலைகளும் அமில குணங்களின் ஈர்ப்பு சக்தியும் என்றும் ஒன்று போல் இருக்கவல்ல நிலை ஏற்படுத்திக் கொள்ள முடியும், தன் சக்தியை மனிதன் உணர்ந்தால்.

**17–6–80**

இவ்வுலகில், மனிதனின் எண்ண சக்தியில், அறிவு நிலையின் வளர்ச்சி குணத்தை, ஞாயத்தின்பால் செலுத்தும் வழிமுறை பக்குவத்தை மாற்றிக் கொண்டால், ஒரு சாரார் ஏற்படுத்திக் கொண்ட அறிவின் ஞான முதிர்ச்சியினுல் தன் ஞானம் பெற்றதை விஞ்ஞானம் கண்டு வளர்த்திட்டான் அதன் வழி சக்திகளை. இப்படி மனித ஞானத்தின் வளர்ச்சியே விஞ்ஞானம் கொண்டு உணர்ந்து செயலாற்றும் பல நிலைகளை உணர்ந்துள்ளான் மனிதன்.

அம்மனித விஞ்ஞானத்தை, தன் ஞானத்திற்கு எட்டும் பொருளாக மனிதர்கள் யாவரும் உணருவதில்லை. பிறப்புடன் கூடிய அபூர்வ சக்தியின் வழிபெற்றிட்டான் அம் மனிதன் என்று போற்றி, புகழ்ந்து அம் மயக்கத்தில் தான் அடி பணிந்து வாழ்கின்ருன். இதே நிலை எல்லா வட்ட நிலைகளிலும் உண்டு.

பக்தி மார்க்கத்தில் சித்தன் நிலைகொண்டு செயலாற்றுபவனையும், அவன் தாள் பணிந்து உயர்த்தி தாழும் செயல் வடிவாய் உள்ளான் மனிதன். வாழ்ந்த வழிபெற்ற நிலையின் தொடரிலும் பிறரின் புகழ் பாடி வணங்கும் முறையிலும் வாழ்ந்தால் நம் ஆத்ம பலம் வளம் பெருது. எச்சக்தியாய் இருந்தாலும் இக்காற்றின் ஈர்ப்பிற்குச் சொந்தப்பட்டது தான். அதே காற்றின் சுவாச அலையுடன் வாழும் நாம், நம் சக்தியைக் குறைத்து ஒன்றின் தொடர் அலையில் வாழாமல், ஒவ்வொரு ஆத்மாவுக்கும் உகந்த ஞான ஒளியின் ஈர்ப்பை நமதாகப் பெற வேண்டும்.

அதி விரைவில் தன் ஞானத்தைக் கூட்டிக்கொள்ளுங்கள். நம் பூமியின் இன்றைய இவ்வளவு காலங்களாக சுழன்று ஓடிய ஈர்ப்பின் ஓட்டப்பாதை சென்ற கிரகண காலத்திலிருந்து, நம் ஆராய்ச்சி நிலைக்குப் புலப்படாத வழி முறையிலிருந்து விலகி விலகிச் சென்று ஓடுகிறது. நம் பூமி மட்டுமல்லாமல் ஒவ்வொரு மண்டலங்களின் நிலையிலும் சில மாற்றங்கள் வழக்கமான பாதை முறையிலிருந்து, சிறிது மாற்றமுடன் ஓடிக்கொண்டுள்ளது. இதில் உணர்த்துவது புதுமையாகவும், வேடிக்கையாகவும் இருக்கும்.

இதுநாள் வரை தெரியாத பூமியைச் சுற்றியுள்ள ஒளிக் கோலத்தை இன்று காண்கின்ருன் என்ருல், இதன் உண்மை நிலையே நம் பூமியின் ஈர்ப்பு ஓட்ட விகிதப் பாதையில் ஏற்பட்ட நிலையின் உண்மைதான். இன்னும் நம் பூமியிலிருந்து வெளியாகும் சக்தியின் உண்மையை விஞ்ஞானத்தில் காண முடியும்.

ஆகாயத்தில் கோட்டை கட்ட வழிப்பாதை அமைக்கும் விஞ்ஞான ரீதியில் செயல்முறை நடத்தையில் வெற்றி காணலாம். இப்பூமியின் ஈர்ப்பு மண்டலத்திற்கு மேல் சென்றுவிட்டால் அதே போல் மற்ற மண்டலங்களும், ஏன் வளர்ச்சியுற்ற நட்சத்திர மண்டலத்தின் ஈர்ப்புக் கூட இல்லாத நிலையில் இங்குள்ள சுவாச நிலையை எடுத்துச் சென்று அதற்குகந்த மருத்துவ நிலையில் அங்குள்ள அலையின் சுவாச நிலையை ஏற்கும் அமில குணத்தைச் சிறுகச் சிறுக வழிப்படுத்தி மனித ஆத்மா சென்றாலும் வாழ முடியும். மனிதன் செய்யும் இச்செயல் விஞ்ஞானமே நூறு ஆண்டுகளுக்கு முந்திய மார்க்கத்தில் வழிப் படுத்தி இருந்தானானால் வெற்றி கண்டிருப்பான். இவன் செயல் முறை காலத்திற்குள் உலக மாற்றமே நிகழப்போகும் நிலையில் அந்தர வாழ்க்கையில் அதன் நிலையை உணர்த்தப் போகின்றான்?

இன்றைய நிலையில் இவ் ஓட்ட கதியின் மாற்றப் பாதையினால் பூமியின் ஈர்ப்பில் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. நூறு மாடிக் கட்டிடம் எழுப்பும் மனிதன் அந் நூறு மாடிக் கட்டிடத்திற்கு உகந்த அதே உயரத்திற்குகந்த அஸ்திவாரத்தையா பூமியில் போடுகின்றான்? இப்பூமியில் வாழும், வளரும் பூமியிலிருந்து பிரித்து எடுத்த பொருள்களும் நாம் அமைத்த எல்லாமும் பூமியின் ஈர்ப்பின் பிடிப்புடன் சுழன்று ஓடும் நிலையில் சக்திகொண்ட நிலை மாறுகொண்டதால்தான், இன்று வலுவிழந்த சில கட்டிடங்கள் விழுவதின் உண்மையும்.

இப்பூமியின் காற்று மண்டலத்தில் ஏற்பட்ட விஷத்தன்மையின் அதிகரிப்பும், பூமியிலிருந்து உறிஞ்சப்பெற்ற பல சக்திகளின் ஈர்ப்பின் வலு குறைப்பும் கொண்டு சிறிது மாற்றமுடன் ஓடும் இன்றுள்ள நிலையிலிருந்து மேன்மேலும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உட்படுத்தி உயர் மின் அலைகளைக் கடலிலிருந்தும், காற்றிலிருந்தும் இம் மனிதன் சுகம் காணப் பிரித்து எடுப்பானாகில் தன் குறுகிய கால சுகத்திற்காக இப்பேரண்ட உலகையே வலுவிழக்கச் செய்து வலுப் பெற வைக்கப்போகின்றான் மனிதன். இதன் உண்மை என்ன என்பது புரிந்ததா? நம் தலைவருக்கு (சங்கத் தலைவருக்கு). வலுவிழந்ததினால் தான் ஓடும் பாதையில், ஈர்ப்பின் மாறுகொண்டு இன்று ஓடும் நிலையில் மேன்மேலும் இதன் நிலையினால் இதுநாள் வரை இப்பூமியின் ஈர்ப்பில் சிக்காத பல நட்சத்திர மண்டலங்களின், ஈர்ப்பின் நிலையும் நம் பூமியில் படரப் போகின்றது. இதன் வழி உண்மை தான் நீங்கள் அன்று அறிந்த நட்சத்திரம் வெடித்து, சிதறி பூமியில் படரும் உண்மை நிலை. முன் கூட்டி உங்கள் ஞானத்தினால் உணர்ந்த உண்மை அது.

ஒவ்வொரு மனிதனும் ஞானத்தைக் கூட்டிக்கொண்டால் பல உண்மைகளை அறிய முடியும்.



**18–6–80**

வலுவிழந்து, வலு கூட்டிக்கொள்ளப் போகின்றது நம் பூமி என்று உணர்த்தினேன். எதன் அடிப்படைத்தன்மையில்?

முந்தைய பாடத்தில் பூமியின் ஓட்டமுடன், பூமிக்குகந்த அமில குணங்கள் கொண்ட நட்சத்திர மண்டலங்கள் பூமியின் ஈர்ப்பில் வந்து சிக்குகின்றன என்று உணர்த்தினேன். வலு விழந்து, வலுக்கூடும் நிலை என்பது இன்றைய பூமியின் வலுவிழந்த இந்நிலை, இப்பொழுது பூமியின் மாறுகொண்ட ஓட்டப் பாதை யில் சந்திக்கும் நட்சத்திர மண்டலங்களில் சிதறல்களும், மாறு கொண்ட அமில குணத்தின் சேர்க்கையில் ஏற்படும், நிலையில் ஏற்படும் புதிய அமில வளர்ச்சிக் குணங்களின் அதிகரிப்பும், நம் பூமியின் ஈர்ப்பில் மோதுண்டு இன்றைய இயற்கைத்தன்மையின் நிலையே மாறுகொண்டு செயல்படும் இன, குண வழிப்பாதை நிலை நம் பூமிக்கு ஏற்பட்டுள்ளது.

வழக்கமான பாதை நிலையிலிருந்து மாறுகொண்டு சுழன்று ஓடும் தன்மையினுல், அந்த இடங்களுக்குகந்த அமில குணங்களும், ஏற்கனவே நம் பூமி வளர்த்துக் கொண்ட, நம் பூமியின் ஈர்ப்பலை யின் காற்று மண்டல அமில குணத்துடன், புதிய அமில குணங் களின் ஈர்ப்பின் நிலை மோதுண்டு, இது வெளிப்படுத்தும் அமிலமும் மோதுண்டு, ஒன்றுக்கொன்று உராய்ந்து, ஏற்கும் நிலை பெறுவதற்கு முன், ஒளி அலையாகி, அதற்குப் பின்தான் பூமியின் ஈர்ப்பலைக்கு, இப்பொழுது ஓடும் பாதையில் சந்திக்கும் புதிய அமில குணம், நம் பூமியின் ஈர்ப்பின் காற்று மண்டலத் துடன் கலக்கும் தன்மை பெறுகின்றது.

நம் பூமியின் காற்று மண்டலத்திற்குள்ளுள்ள அமில குணத் தின் மாற்ற குணங்கள் மோதிடும் நிலையிலேயே மழை வரும் காலங்களில் இடியும் மின்னலும் ஏற்படுகின்றன. சுழன்று ஓடும் இப்பெரிய நம் பூமியின் கோளத்தைக் காட்டிலும், நம் பூமி உறிஞ்சி வெளிப்படுத்தும் காற்று மண்டலத்தின் விகித வட்டம் பெரிதாக உள்ள தன்மையில், இவ் ஓட்ட கதியில் ஏற்படும் அமில மோதலில் ஏற்படும் ஒளி வட்டம் தான் இன்று பூமியைச் சுற்றியுள்ள ஒளி வட்டம்.

முந்தைய காலங்களைக் காட்டிலும், இன்றைய நிலையில் அவ் வொளி பிரகாசம் கூடுதலாகத் தெரிகின்றது. நம் பூமிக்கு இன்று ஏற்பட்டுள்ள இந்நிலையினால் அபரிமிதமான அமில சக்திகள் ஓடும் பாதையிலிருந்தும், நட்சத்திர மண்டலங்களின் வெடிப்பு நிலையிலிருந்தும் கூடிக்கொண்டு அதிகமாக பூமியின் சுவாச நிலைக்கு வருவதினால், வலுவிழந்து, வலு கூடும் தன்மை என்பது, இக்கலி காலத்தில் மனிதனால் காற்று மண்டலத்தை நஞ் சாக்கி, வலுவிழக்கச் செய்த நிலையை இம்மாற்ற ஓட்டத்தின் நிலையினால் ஏற்பட்டுள்ள மாறுகொண்ட அமிலகுணத்தை நம் பூமியின் அலையில் கலக்கச் செய்து, நம் பூமியின் பழக்கப் படுத்திக் கொண்ட நிலையிலிருந்து, அதிகச் சுமை கலக்கப்பெற்று அதை ஏற்கும் பக்குவத்தன்மையை நம் பூமியின் சுவாச நிலை ஏற்றுக்கொள்ளும் இயற்கை நிலையில்லாததினால், பூமியின் சுவாச நிலையே மனிதனுக்கு எப்படி அதிகமான உணர்ச்சி நிலை ஏற் படும்பொழுது இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறதோ, அதைப் போன்ற நிலையில் நம் பூமி உள்ளது.

இன்றைய கால கட்டத்தில் சிறுகச் சிறுக உள்ள இந்நிலை அதிகப்படும் தருணத்தில் பூமியின் சுவாச அலைகள் மாறுகொண்ட வுடன், இன்று மனிதனால் புதைத்து வைக்கப்பட்டுள்ள வெடி குண்டுகளின் நிலைக்குகந்த பாதுகாப்பும் குறைந்து, முந்தைய பாடத்தில் உணர்த்தி உள்ளதைப்போல், இக்கலியின் மாற்ற நிலையை மனிதன் காணப்போகிறான்.

சொல்லும் நிலைகள் வேடிக்கையாக இருக்கலாம். காற்று மண்டலத்தின் ஈர்ப்புக்கு வந்துள்ள புதிய குண அமிலத்தின், வளர்ச்சியின் புதிய சக்திகள் உருவாகலாம். இயற்கையில் விஞ் ஞானத்திற்கும், செயற்கையின் வழி வாழ்க்கைக்கும், இன்றைய ஆராய்ச்சியில் இருந்தும் பல உண்மைக் குண நிலைகளை எடுக்கலாம். ஆராய்ச்சிக்குப் புதிய வழித்தொடரில் சென்று பாருங்கள் இதன் உண்மைக் குணம் புரியும்.

**19-6-80**

இதுநாள் வரை உள்ள ஆராய்ச்சியின் கண்டுபிடிப்பில் உணர்ந்த உண்மைக்கு, மேலும் வலுக்கொண்ட பல நிலைகள் இன்று கூடி வருகிறது. நம் பாட முறையில், யான் உணர்த்திய நிலையில், நம் பூமியின் சுவாச நிலை பெற்று வாழும் உயிர் ஆத்மாக்கள் மற்றக் கோள்களில் சென்று வாழ முடியாது. இப் பூமிக்குகந்த ஈர்ப்பு குண அமிலத்தைத்தான் நம் பூமி ஈர்த்து

வெளிப்படுத்தி வாழ்கின்றது என்பதனைப் பல இடங்களில் உணர்த்தியுள்ளேன்.

இன்றைய இரண்டு நாள் பாடங்களில் நம் பூமியின் ஓட்டப் பாதை சிறிது மாறுகொண்டுள்ளதாகவும், மாறுகொண்ட அமிலங்களும், ஓடும் ஓட்டமுடன், நம் பூமியின் ஈர்ப்பு காற்று மண்டல நிலையுடன் சிக்குண்டு மோதிச் சிதறும் நட்சத்திர மண்டலங்களின் அமில குணமும், முந்தைய நாட்களைக் காட்டிலும் மாறுகொண்டு வருகின்றது என்று உணர்த்துகின்றேன்.

மாறுகொண்ட அமிலத்தைத் தான் நம் பூமி ஈர்க்காதே, அப்படியிருக்க நம் பூமியின் சுவாச நிலை கெடுவதேன்? என்ற வினா எழும்பலாம். நம் பூமியின் ஈர்ப்பு வட்டக் காற்று மண்டல நிலைக்கும், நம் பூமியின் வட்டத்திற்கு மேல், காற்று மண்டலத்திற்கு மேல், பால்வெளி மண்டலத்திற்கும், நம் பூமியின் காற்று மண்டல ஈர்ப்பு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலையில்தான் பல சக்தி நிலைகளும், அமில நிலைகளும் மாறுபட்டு நம் பூமியின் ஈர்ப்பிற்கு வருகின்றன.

நம் பூமி ஈர்த்து விடும் சுவாச அலையும், பால்வெளி மண்டலத்தில் இருந்து நம் பூமிக்கு வரும் (பூமியின் ஈர்ப்பிற்கு வரும்) அமிலகுணங்களும், இவ்விடைப்பட்ட நிலையில் சுத்திகரிக்கப் பட்டுத்தான் (Filter) நம் பூமியின் ஈர்ப்பிற்கே வருகிறது. அப்படி இருக்க மாறுகொண்ட ஓட்ட கதியில் அமில குணங்கள் அதிகப்பட்டு வருகிறதென்றால், நாம் சமையல் செய்யும்பொழுது ஒரு வகை மரத்தை, கருவேலமரத்தை வைத்து எரிக்கின்றோம். அதனுடன் மற்ற குண விறகைக் குறைவாக வைக்கும் பொழுது கருவேலமரத்தின் நிலை உயர்ந்ததாக இருக்கும். மற்ற விறகை கருவேலமரத்தைக்காட்டிலும் அதிகமாக வைத்து எரிக்கும் பொழுது, மற்ற விறகின் நிலை அதிகமாகக் கூடி விடுகிறது. எரிந்து, ஆவியாகிக் கலக்கும்நிலையில் அதிகப்படியாக வைத்த விறகின் குண ஆவி நிலையும், கருவேலமரத்தின் ஆவி நிலையும் ஒன்றுடன் ஒன்று கலந்து அதற்குகந்த தனி அமில நிலையாகி மீண்டும் ஒரு நிலையான தன்மை வழிபடுகிறது.

அதைப்போல் நம் பூமியின் ஓட்ட கதியில், இன்று ஓடும் மாறுகொண்ட ஓட்டத்தினால் ஏற்படும் புதிய அமில குணமானது, வழக்கமாக எடுக்கும் நிலையைக் காட்டிலும் அதிகப்பட்டுள்ளதால், நம் பூமியின் ஈர்ப்பு நிலைக்கும், பால்வெளி மண்டலத்திற்கும் இடையிலுள்ள இச்சுத்திகரிப்பு ஆலை புதிய அமில குணத்தை நமக்கு அனுப்பி வருகின்றது.

இதன் தன்மை நம் பூமியின் நிலையில் அதிகமாக ஜீவராசியின் சுவாச நிலைக்கு வருவதைக் காட்டிலும் நம் பூமியின் வடதுருவ, தென்துருவ நீர்நிலையின் ஈர்ப்பிற்குத்தான் அதிகமாகச் செல் கின்றது.

முந்தைய பாடத்திலேயே நம் பூமிக்கு உயிர்நாடியாய் வடதுருவம், தென்துருவம் அமைந்துள்ளன என்றுணர்த்தினேன். அதுவுமல்லாமல் நம் பூமிக்குச் சில இடங்களில் சூரியனின் ஒளியே காணாத இடம் உள்ளது என்றும் உணர்த்தினேன்.

ஆனாலும் அங்கு உயிரணுக்கள் உண்டு. சூரியனின் ஒளி படாவிட்டாலும் (நேராக) பூமியின் சுவாச அலையின் வெக்கை யும், காற்று மண்டலத்தின் அலையும் அங்கு உள்ளதினால் ஜீவன் உண்டு, ஆனால் கடும் விஷ குணங்கள் நிறைந்துள்ள இடங்களாகத் தான் அவை உள்ளன.

இப்பூமியிலேயே பலதரப்பட்ட வளர்ச்சி நிலைகள் எண்ணி லடங்கா வண்ணம் உள்ளன. அதற்குகந்த நிலையை அவை அவை பிரித்து, அவற்றின் வளர்ச்சி நிலை வளர்கின்றது. இதை உணர்த்தும் நிலையெதற்கு என்று எண்ணலாம். பூமியின் மாறு கொண்ட ஓட்ட கதியில் இருந்து, பூமியின் அலையுடன் அதிகப் பட்டு அவ்வமிலங்கள் நம் பூமியின் ஈர்ப்பிற்கு வந்தாலும், அதன் நிலைக்குகந்த ஈர்ப்புநிலையான, நம் பூமியின் சூரிய ஒளி படாத இருண்ட பகுதியின், அமில குண வர்க்கத்தின் தொடர் புடைய அமில குணமாக அது இருப்பதினால், இருண்ட பகுதியின் ஈர்ப்பிற்கு இப்புதிய நிலை விஷ அமிலம் சென்றுவிடுகின்றது.

ஆனால் இதன் வளர்ச்சி நிலை அதிகரிப்பினால் இன்றைய கால கட்டத்தில் நம் பூமியின் ஆத்மாக்கள் ஏற்க முடிவதாகத்தான் உள்ளது. கால நிலை கூடக்கூடத்தான் இதன் வளர்ச்சி நிலையில் அதிகரிப்பும் ஏற்படும். மிளகாய், குருமிளகு இப்படியுள்ள செடிகள் அதற்குகந்த கார குணத்தையும், கரும்பும், கனிகளும் அதற்குகந்த இனிப்பு குணத்தையும் அதனதன் பழக்கப்பட்ட ஈர்ப் பில் வளர்வதைப் போல், இன்றைய நிலையில் நம் பூமியின் ஓட்டமாற்றத்தினால் வந்தடைந்த அமிலத்தை எடுக்கக் கூடிய, இருண்ட பகுதியிலுள்ள விஷ ஜெந்துக்களுக்கும், தாவரங்களுக்கும் உகந்ததாக உள்ளது. இதன் வளர்ச்சியினால்தான் மாற்ற நிலை ஏற்படும்.

**20–5–80**

இதன் வளர்ச்சித் தொடர் அலையினால் இக்காற்றுடன் அதன் சக்தி நிலையும் வளர்ச்சியுறும் நிலையிலிருந்து கூடப்போகின்றது.

காற்றிலிருந்துதான் அத் தீய சக்தி அதன் ஈர்ப்பில் வளர்கிறது. அதனதன் இனம்தான் அத்துடன் கலக்கப் பெறுகிறது என்று உணர்த்தியுள்ளீரே. வளர்ச்சியுறும் நிலை என்றால் என்ன? என்ற அடிப்படை வினா எழும்பலாம்.

சூரியனிலிருந்தும், பால்வெளி மண்டலத்திலிருந்தும் நம் பூமியின் ஈர்ப்புக்கு வரும் குண அமிலமானது பூமியின் சுவாசத்தில் இழுபட்டு அது வெளிப்படுத்தும் நிலையுடன், பூமியுடன் ஐக்கியப்பட்டு அதன் உயிரணுத் தோன்றி, அதன் வளர்ச்சியில் வளரும் செழிப்பிலிருந்து வெளிப்படும் அமில குணங்களின் நிலை வேறுபடுகிறது. அழுத்தமான அமில குணங்கள்தான் சூரியனிலும் பால்வெளி மண்டலத்திலும் உள்ளன.

சுவாசத்தில் பட்டு வெளிப்படும் நிலையில் வளரும் இயற்கையிலிருந்து வெளிப்படும் அமிலத்தின் மாற்றம் உண்டு. இப்பொழுது நாம் பலதரப்பட்ட உணவு வகைகளை உண்டு மீதியைக் குப்பையாக்குகின்றோம். அக்குப்பையிலிருந்து அதன் ஈர்ப்பில் உள்ள சத்துக்களை மட்டும் எடுத்து உன்னத மணிகளைக் காண்கின்றோம்.

இப்படி இது நாள் வரை அமில குணங்களையும், உயிரணுக்கள், சுவாச நிலைகள், மண்டலத்தன்மைகள் ஒவ்வொன்றின் நிலையையும் உணர்த்தி வந்தோம் என்றால் எதன் அடிப்படைப் பொருள் காண? நம் உடலில் பலவகை அமிலங்கள் கொண்ட பலகோடி 'உயிரணுக்கள் உள்ளன. இதிலிருந்தெல்லாம் நம் ஞான மணியை ஈர்த்து ஒளிபெறல் வேண்டும்.

குப்பையில் வளர்கின்றது நல்ல சக்தி மணிகள். இவ்வுடல் என்ற குப்பைக் கூட்டிலிருந்து நம் மணிக்கான உரம் எடுத்துக் கொள்ள வேண்டிய செயல் முறையை இத் தியானம் என்ற வழிபாட்டு முறை ஏற்படுத்திக் கொண்டால் பக்குவச் செயல் படுத்தி நம் உடலிலுள்ள பல அமிலங்களில் கலந்துள்ள பல கோடி உயிரணுக்களிலிருந்து நம் ஞானத்தின் வளர்ச்சிக்கு சத்தெடுத்து, தெய்வ ஞானம் பெற்று ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டும் என்று எண்ணும் உன்னத நிலை எது என்றறிந்து ஒளி பெறலாம்.

சக்தி நிலை சகலத்திலும் இருந்தாலும், அததற்குகந்த வழி நிலையில்தான், அச்சக்தி நிலை வளர்கின்றது. மாற்றவோ, திருத்தவோ, மனித ஞானத்திற்கு வழி தெரிகின்றது. தன் ஞானத்தைப் பலவற்றிலும் கலக்கவிட்டுள்ள மனிதன், தன்னைத்

தானே உணரும் ஞான வழிபாட்டினை அறியாமல் வாழுகின்ருன். கால நிலையின் குறைவை இப்பொழுது உள்ள மனித வாழ்க்கை யின் சந்தர்ப்ப காலத்தைப் பயன்படுத்தி வாழுங்கள்.

**26–6–80**

சக்தியின் நிலை பலவற்றில் கலந்திருந்தாலும் அதன் கூட்டு நிலை கொண்டுதான் ஒவ்வொன்றின் பிரகாசம் ஜொலிக் கின்றது. தனித்த பூவை பலவாக ஆரம் கட்டித்தான் ஆண்ட வனுக்கு அணிந்து மகிழ்கின்ருேம். ஒன்ருக உள்ளதைப் பலவாக்கித் தருவதுவே இயற்கையின் தாவர வளர்ச்சியின் நிலையிலிருந்து தான் முன்னுேடி நிலை பெறுகின்றது.

தானுக வளரும் தாவரங்களும் சரி, நாமாகப் பயிர் செய்யும் தாவரங்களும் சரி, ஆரம்ப வளர்ச்சியில் அதற்கு வேண்டிய சக்தியை ஈர்த்து, ஈர்த்து, தன் சேமிப்பு சக்தியின் பலன்களாய் பூவும், காயும், கனியும் சில தாவரங்கள் தருகின்றன. இப்படி இல்லாமல் பூவும், கனியும் அளிக்காத புல், பூண்டு இன வர்க் கங்கள் அதன் அமில குணங்கள் முற்றிய பிறகு வேர்களில் அதன் சக்தி குணத்தை அதிகப்படுத்தி கனம் கொண்டு தான் சேமித்த வளர்ச்சி நிலையை வளர்ந்த பிறகு வெளிப்படுத்துகின்றன.

வளர்ச்சியின் முற்றலை ஒவ்வொரு தாவர இன வர்க்கமும் வெளிப்படுத்திய பிறகுதான் அதன் உயிர் ஜீவ சக்தி மாறு படுகிறது. அதன் மாற்றத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட ஜீவ ஆத்மாக்களுக்கு ஆரம்ப காலத்திலேயே ஒன்ருகப் பல அமில குணத்தை ஈர்க்கும் நிலைபெற்றதனுல்தான் மனிதனும், மிருக மும், முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும் இன வர்க்கங்களும் தம் உடல் அவயவ அமைப்பில் பல நிலைக்கேற்ப அங்க அவயவங்கள் ஒரே தன்மையில் ஈர்த்து வளரும் நிலைகொண்ட இன குணங் களுடைய ஜீவராசிகளாகின்ருேம்.

தாவரங்கள் சக்தியை ஈர்த்துப் பிறகு பலன் தருகின்றன. உண்டு கழிக்கும் நிலை இல்லை தாவரங்களுக்கு. பலவும் ஒன்ருக ஈர்த்துப் பல அவயவங்களை ஒன்றுபடுத்தி உருவ அமைப்புக் கொண்ட ஜீவன்களுக்கு எப்படி பலவாகி, பொருளாகி, ஜீவனுக உண்டு, கழித்து, வாழும் ஜீவஜெந்துக்களின் அவயவங்கள் அளிக்கப்பட்டன. அளிக்கப்பட்டன என்பதைக் காட்டிலும், வளர்ச் சியில் முன்னேற்றம் கொண்ட ஜீவஜெந்துக்களில் உண்டு, கழித்து பலகோடி உயிரணுக்களை வளர்த்து வாழும் நிலையில் பயன் பெறும் பக்குவ நிலை பெறுவது தான், தன் அவயவங்களில்

உள்ள பலகோடி அணுக்களை வளர்த்து ஒன்றாக அதனைக் கூட்டிப் பேணிக் காக்கும் ஓர் உயிரணுவின் தெய்வ சக்தியில் உயிர் சக்தியான மனித உயிரணுவின் ஞானத்தின் வளர்ச்சியைப் பழக் கப்படுத்திக் கொண்டு, ஞான வளர்ச்சிக்கு உகந்த தன்மையில், ஒவ்வொரு உயிரணுவும் இதன் தொடருடன் ஐக்கியப்படும் வளர்ச்சி நிலையை ஏற்படுத்திக் கொள்வதுதான் மனித ஜீவன் பெறும் பலன். ஜீவனுயுள்ள ஜீவனின் பலனும் இந்த ஞானம் பெறும் வழி ஞானம்தான். பலனற்ற, நிலைபெறாத ஜீவ ஞானம் தான் அதன் தொடரில் ஏற்படும் மாற்று நிலைகளுக்குச் செயல்படச் சென்று விடுகின்றது.

மனிதனின் உடலிலுள்ள அனைத்து அணுக்களும் அதனதன் வளர்ச்சியில் வளர்ந்து கொண்டு இருந்தால்தான் அவயவங் களிலுள்ள அனைத்து உறுப்புக்களும் ஆரோக்கியமான நிலையில் வளர்ந்து வாழ முடிகின்றது. அணுக்களுக்கு உகந்த உணவை அதததற்குகந்த ஈர்ப்பில் பெற்று வளர்ந்து வாழ்கின்றது. எண் ணத்தின் நிலையை மாற்றிக்கொண்டு செயல்புரியும் நிலை பெற்று விட்டால் ஈர்க்கும் குண நிலையும் அதன் வழித் தொடர் கொண்ட எச் செயல் முறையும் தடைப்படத்தான் செய்யும்.

பலவாக உள்ள பூவை ஒன்றாக்கி ஆரம் கட்டினால் அதன் அழகு ஆண்டவனுக்கு அணிவித்து இன்பம் காண்பதுபோல் பலவாக உள்ள அணுக்களை ஒன்றாக ஆரம் கட்டி, உயிராத்ம ஆண்டவனுக்கு ஞானம் சூட்டி அழகாக்கி மனிதன் மகிழ வேண்டும் என்ற சித்தத்தை சிந்தையில் உணர்ந்தாலே சிவபதம் முதலிய எப்பதமும் காணலாமப்பா.

**27–6–80**

சூரியனும், சூரியனில் இருந்து வெளிவரும் சக்தி அலையை நம் பூமியும் எடுக்காவிட்டால் பூமியின் வளர்ச்சி நிலையாய்த் தோன்றி இருக்காது. வளர்ந்த பின்னும், அதன் ஈர்ப்பில் பூமி எடுத்துக்கொள்ளும் நிலை தொட்டுத்தான், இன்றளவும் உருண் டோடி, பலவான ஒன்றாகி, ஒன்றில் பலவாகி வாழுகின்ற இப்பூமி யின் அனைத்து ஜீவராசிகளுக்கும், அதனதன் ஈர்க்கும் செயல் முறைக்கொப்ப வளர்ச்சி நிலையும், எண்ண நிலையும், அததுவே தான் எடுத்துக் கொள்கிறது.

மனிதனின் ஈர்ப்பு நிலையின் குண நிலை அமைவதுவும், அவன் எடுத்துக் கொண்ட, ஆரம்ப வளர்ச்சி நிலை அமில குணத்தின் தொடரினால் ஒவ்வொருவரின் அறிவு நிலையும், அதற்குகந்த செய

லாற்றும் திறமையும், அதன் வடிவ வட்டத்துக்குகந்த எண்ண ஓட்டத்தின் ஈர்ப்பை எதில் அவன் அகிகப்பட்டு வளர்த்துக் கொள்கின்ருனே, அதன் வளர்ப்பு அமிலத்தின் கூட்டு நிலையின் எண்ண மோதலுடன், இவன் எண்ண மோதலுக்குகந்த மற்ற ஆவிகளின் எண்ண மோதலையும் வளர்ச்சியுடன் ஈர்க்க வேண்டி யுள்ளது.

ஓர் மனிதன் தன் சுவாசத்தினுல் எடுக்கும் எண்ணத்தின் அலையை ஒத்துத்தான் அவனது அறிவாற்றல் குணமும், உடல் உறுப்பும், உருவமும் இருந்திடும். எந்த ஆண்டவனும், எந்த ஒரு தனி மனிதனுக்கும் ஆண்டவனுக வழி அமைத்துத் தருவ தில்லை. எல்லாமும் ஒன்ருக, ஒன்றிலே எல்லாமும் உள்ள பொழுது, எதன் அடிப்படை சக்தியை எவ்வாத்ம எண்ணம் ஈர்த்து வாழ்கின்றதோ அதன் தொடர்ச்சி நிலைக்குகந்த அளவு அறிவாற்றலும், வாழ்க்கை நிலையும் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அமைகின்றது. ஒருவர் அதிக சுறுசுறுப்புடனும், செயலாற்றும் திறமையுடனும், நல் நிலையில் வாழும் பொழுது அவர் எடுத்துக் கொள்ளும் எண்ண சுவாசத்தின் வளர்ச்சி அமிலத் தன்மையினுல் தான் ஒரு மனிதன் உயர்கின்ருன். அவன் எடுக்கும் நிலைக் கொப்ப ஆவிகளின் தொடர்பு நிலையும் ஏற்படுகின்றது.

மின் அலை எப்படி எந்தெந்த விகித நிலைக்கொப்ப பாய்ச்சப் படுகின்றதோ, அதன் நிலைக்கொப்ப ஒளியைத் தரக்கூடிய நிலையையும், எந்தெந்த இயந்திரங்களுக்கு எந்தெந்த விகிதத் தில் மின் அலை பரப்பப்படுகின்றதோ அதன் சக்தி ஓட்டத்தைத் தான் அவ் இயந்திரம் எடுத்து ஓடுகின்றது. அதைப்போல் எதன் அடிப்படையில், எதன் விகித நிலைக்கொப்ப ஒவ்வொரு ஆத் மாவின் எண்ண சுவாசம் உள்ளதோ, அதன் சக்தி நிலையைத் தான் அவன் பெற முடியும். அதன் செயலில்தான் அவன் வாழ்க்கையும் அமைகிறதேயன்றி ஆண்டவனைப் பல கோயில் ஸ்தலங்களுக்குச் சென்று, வணங்கி வந்து, பூஜித்து சக்தி பெறு வதல்ல.

எண்ணத்தின் ஈர்ப்பை உயர்வாக்கி, எடுக்கும் சுவாச குண அமிலத்தினுல் பலவாக உள்ள இக்காற்றின் அமிலத்திலிருந்து நமக்குகந்த அமிலத்தை நாமாக எடுத்துக் கொள்ளலாம். இதன் வளர்ச்சியில் நமது எண்ணமும் சுவாசமும் இருக்குமானுல், அதன் நிலையில் நாமெடுக்கும் ஜெப முறையில், நம் எண்ண ஈர்ப்பை நமக்கு மேல் சக்தி வாய்ந்த சித்தரின்பால் நம் எண்ணத்தைச் செலுத்தி எடுக்கும் சுவாச அலையின் தொடர்பினுல், உடலுடன் மனித உலக வாழ்க்கையில் பிம்பப் பொருளைக் கண்டு, பொருளாக

வாழும் இவ்வாழ்க்கையில் இருந்து பெற முடியாத ஞானத்தை, நம் ஈர்ப்பின் ஜெப எண்ணத்தை, சித்தர்பால் செலுத்தி, அவர்களின் தொடர்பலேயின் சக்தி குண அமிலங்களே நாம் பெறும் படி வழிப்படுத்திக் கொண்டால், நம் ஞான வளர்ச்சியின் தொடரில் செல்லும் வழி முறைப்பாதை தெரிந்து கொள்ளலாம்.

நாம் பாதையை அறிந்துவிட்டால், நாம் செல்ல வேண்டிய வழியில் எத்தடங்கலும் இருக்காது. பலவாக உள்ள உலக வாழ்க்கை எண்ணத்தில், நம் எண்ணத்தை ஒன்ருக்கி, ஓம் என்ற ஒலியுடன் சித்தன் பால் நம் எண்ண ஈர்ப்பு சக்தியை நாம் தந்தோமானுல், மெய்ஞ் ஞானம் பெறும் வழி ஞானம் அறியலாம்.

ஞானத்தின் ஈர்ப்பில் கலந்தோமானுல் பல உண்மையின் பொருளே உலகளவுக்கு உணர்த்தலாம். ஞானிகளும், சப்த ரிஷிகளும், தம் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கா விட்டால் நம் பூமியில் மனித ஞானம் இன்று, ஞானமும் கண்டிருக்காது, விஞ்ஞானமும் கண்டிருக்காது. இன்றைய காலக்கட்டத்தில் நம் சித்தர்களின் ஒளி சக்திகள் இவ்வுலகில் அதிகமாகச் செயல்பட்டுக்கொண்டுள்ளது. மனித ஞானம் எல்லாமே, ஞானத்தின்பால் செல்லும் வழிமுறையற்று, பேராசையின் பிடி ஞானத்தில்தான் வலுவான விந்தை காணத் துடிக்கின்றது. மனிதனின் பேராசையின் விபரீத எண்ணச் சுழல் காற்றுத்தான், பூமியின் சுழற்சியுடன் அதிகப்பட்டு மோதி, உயிர்ப்பலிகள் அதிகமாகி, ஆவியின் சூழ்ச்சியில் அல்லலுக்குகந்த வாழ்க்கையில் வாழ்கின்ருன் மனிதன் என்பதனே அறியாமல் அல்லவா வாழ்கின்ருன் மனிதன்.

தனதாக உள்ளது எது? என்பதுவும் இம் மனித ஞானத்திற்குப் புரியவில்லே. தனி மனிதன் யாரும் வாழவில்லே. காற்றையும், நீரையும், நிலத்தையும் தன்னுள்ளுள்ள பலகோடி அணுக்களேயும் வாழவைத்து வாழும் மனிதன் தானுக வாழ்கின்ருனு? தனது என்ற பேராசைக்கார மனிதன்?

ஒன்றின் துணேயில்லாமல், ஒன்றுடன் ஒன்றில்லாமல் வாழவே முடியாத மனிதன், நான் என்ற நானுக வாழுகின்ருனும். ஒவ்வொரு மனிதனும் இயற்கையின் ஆண்டவனின் ஸ்வரூபத்தை எண்ணி வாழவேண்டுமப்பா.

**28–6–80**

தெய்வ சக்தி பெறுவதும் மனிதன்தான். பேயாக, புழுவாக செல்லுபவனும் மனிதன்தான். மனித எண்ணத்தில் இருந்து

தான் மனிதக் கருவின் வளர்ச்சி வாழ்க்கை மண்டலங்களில் வேரூன்றுகிறது. நம் பூமியின் ஈர்ப்புக் குணமும், வளர்ச்சி நிலையும் மனித குணத்தின் எண்ணச் செயலுக்குகந்ததாக உள்ளதினால்தான் மனிதன் இங்கு வாழ்கின்றான்.

மனிதன் காணாத, அறியாத பல உயிரினங்கள் இப்பூமியில் வாழ்கின்றதென்றாலும், மனிதனின் தொடரிலிருந்து சென்ற வகைகள்தான் அவைகளும். இயற்கையில் பல மாற்றங்கள் இருந்தாலும் ஒன்றை ஒட்டி ஒன்று வளர்ந்து, பலவாகிச் செயல்படும் நம் பூமியிலே, பூமியின் இயற்கைத்தன்மை பலவாக உள்ளதற்கு இப்பூமி ஈர்க்கும் நிலைகொண்டு மனிதனின், தாவரங்களின் எண்ண, சுவாச ஈர்ப்பின் நிலை வளர்ச்சி எப்படி மனிதனுக்கு உட்பட்டு வெளிப்படுகின்றதோ, அதைப்போன்றுதான் பூமியின் ஈர்ப்பின் நிலைக்கொப்ப அந்தந்த இடங்களில் ஏற்படும், குண, சீதோஷ்ண–தட்ப வெட்ப–நிலை என்று பல தடவை முந்தைய நூல்களில் உணர்த்தியுள்ளேன்.

**29–6–80**

ஆவியாகி, நீராகி, பிம்பமாகி மீண்டும் ஆவியாகி, நீராகி, பிம்பமாகி முடிவில்லா மூன்று நிலைகளின் வட்டம்தான் நாம் இன்றுள்ள நிலை. அன்று சித்தர்களினால் படைக்கப்பட்ட இராமாயண காவியங்களிலும், இன்னும் பல புராணக் கதைகளிலும் உள்ள உள் கருத்தை ஊன்றி நாம் அறிந்தோமானால் கதையாய்ப் படைக்கப்பட்டு, உள் ஞானத்தின் சத்தை எடுத்து, நாம் ஆராய்ச்சிக்கு உட்படுத்திப்பார்த்தோமானால், அதன் வடிகாலில் இருந்து பல உண்மைகளை நாம் அறியலாம்.

இவ்வுலகினில் வடதுருவ, தென்துருவ நிலையினால்தான், இவ்வுலகமே சுழன்று ஓடிக்கொன்டுள்ளது, ஆவியாகி, நீராகி, பிம்பமாகி. இதன் தொடர் உலகில் பிம்பங்கள் மாறுபட்டு, அதன் சக்தி அமிலம் பிரிக்கப்பட்டு, அப்பிரித்த அமிலத்தில் வளர்ச்சி நிலை மீண்டும் சத்தேற்றி, நீரினால், பிறிதொரு பிம்பமாகி, நம் செயலினால் செய்விக்கும் பயிர் நிலைகளல்லாமல், இவ்வுலகின் நிலையிலும், மாறி மாறி ஏற்படும் நிலையின் வழித்தொடர் நடந்து கொண்டே உள்ளது.

நம் பூமியின் உள் நிலையில், பூமி ஈர்க்கும் சுவாச நிலையில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து, அதிலிருந்து வரும் அமில குணங்கள் திடப்பட்டு, அதன் நிலை மாறுகொண்டு, பல நிலைகள் நடப்பது

எல்லாமே இவ்வடதுருவ, தென்துருவ நிலையினுல்தான். நம் பூமியில் பாலைவனப் பிரதேசங்களில் வெறும் மணல்தான் உள்ளது. ஆனுல் அங்கு பெட்ரோலிய இரசாயன திரவங்களை எடுக்கின்ருேம் என்ருல், அங்கு அவ் ஊற்று எப்படி வந்தது? நாம் பூமியைத் தோண்டும்பொழுது மணலும், பாறையும், நீரும் வருகின்றது. இதன் நிலையிலிருந்து எல்லாம் பிரித்து எடுத்த அமில குணமான பெட்ரோலிய இரசாயன நீர்தான் பாலைவனங்களில் எடுப்பது எந்த நிலையில்? நாம் நீரை விட்டு பயிராக்கித்தான் கடலை, தேங்காய், பருத்தி இப்படி எண்ணெய் வஸ்த்துதரவல்ல பயிர்களைச் செய்கின்ருேம்.

நீரினுல் வளர்ந்து, நிலத்தின் சத்தை உறிஞ்சி, நாம் எந்தக் கொட்டையை பயிராக்கினேமோ அவை நீரிலுள்ள, நிலத்திலுள்ள சத்தை எடுத்து ஒன்று பலவாகி, அப்பலனில் எண்ணெய் காண்கின்ருேம். எந்தத் தாவரத்தைப் பயிராக்குகின்ருேமோ அதன் பலன் ஈர்ப்பில் அப்பொருளின் மகசூல் பெறுவதைப் போல், நம் பூமியின் உள் நிலையில் வளரும் இயற்கையின் பலனிலிருந்து, அதன் அமில குண பொருட்கள் ஒவ்வொன்றும் அந்தந்த ஈர்ப்பின் பூமியில் அதன் பலன் பொருள் செல்லுகின்றது.

பாறைகளும், நிலக்கரிகளும், பல உலோகங்களும் உண்டென்ருல் அதன் வளர்ச்சி மட்டும் அவை வளர்வதோடல்லாமல் அவற்றிலிருந்து வடியும் அமில குணங்களான பல வஸ்துக்கள் இப்பூமியில் வளர்கின்றன. நிலக்கரிப் படிவங்களும் இன்னும் பல உலோகங்களின் இயற்கையிலிருந்து சிலவகை அதனதன் குண நீர்கள் (அமிலங்கள்) அதிலிருந்து வெளிப்பட்டு நமக்கு இன்று எண்ணெய் வித்துக்களாய் பாலைவனப் பிரதேசங்களில் அதன் பலனைத் தருகின்றது.

பூமியின், இன்றுள்ள இயற்கை விகிதத்தில் உள்ள மூன்றில் இரண்டு பாக நீரும், ஒரு பாக நிலமும் இதன் அடிப்படையில் சுழலும் வரை இன்றுள்ள இயற்கையில் நாம் தோண்டி எடுக்கும் எண்ணெய் வஸ்த்துக்கள் கிடைக்கும்.

சூரியனைப் போலவும், சந்திரனைப் போலவும் உள்ள இடங்களில் நம் பூமியிலிருந்து கிடைக்கப் பெறும் பொருள்கள் அங்கு மாறுபட்டுத்தான் கிடைக்கும். கடல் மட்டத்தின் உள் பாகம் பல முத்துக்கள், சங்குகள், கோரல் இப்படிப் பல பொருட்கள் எப்படி வளர்கின்றன? கடல் மட்டத்திற்கு உள்ளும், கடல்களில் உள்ள பாறைகளிலிருந்தும் அதன் சத்து நிலையான அமிலங்கள் வெளிப்

பட்டு அதன் குணம் ஒன்றுடன் ஒன்று மோதி முத்துச்சிப்பிகள் உருவாகின்றன. ஒவ்வொன்றில் இருந்தும் அதன் குணச்சாறுகள் வெளிப்பட்டு அதன் வடிவாய்ச் சில அபூர்வப் பொருட்கள் பிறக்கின்றன.

நீர் இல்லாவிட்டால், நிலமில்லை. காற்றில்லாவிட்டால் நீரேயில்லை. இப்படி ஒன்றிலிருந்து ஒன்று வடிவம் பெற்று, பூமியின் உள் நிலையில் வளரும் கனி வளங்கள், அதன் சத்து நீர் அமிலத்தை வெளிப்படுத்தி, அதன் உருவில் இருந்து வளர்ந்து வருவதுதான் பல உயர்ந்த குணம் கொண்ட இரசாயன திரவங்களெல்லாம். தங்கம், வெள்ளி, செம்பு இப்படி ஒவ் வொன்றிலிருந்தும் அதன் சத்து நீரில் வெளிப்படும் உலோகங்களில் ஒன்று பிறக்கின்றது. வெள்ளியிலிருந்து தான் இரசமணியைக் காண முடிகின்றது. இப்படி வைரங்களிலிருந்தும், மற்ற எல்லா வகை உலோகங்களிலிருந்தும், அதன் சத்து நீர் அமிலம் ஒன்று வளர்கின்றது பூமியின் உள்மட்டத்திலேயே. இதன் குண வரிசை யில் வந்ததுதான், நீங்கள் பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் எண்ணெய் வித்துக்களெல்லாம்.

வடதுருவ தென்துருவ நீர்நிலைகளினால் இவ்வுலகம் வளர்ந்து ஓடுகின்றது. இப்பூமியில் உள்ள விஷ அமில குணங்களைத் தன்னுள் ஈர்த்து இன்றைய மனிதனுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும், வாழக் கூடிய சக்தியை அளிக்கவல்ல திசைதான் வடதிசையும், தென் திசையும். ஆனால் வடதிசையை எதற்கும் ஆகாததாக சகுனம் பார்க்கின்றான். தியவை தீயவையுமல்ல, நல்லவை எல்லாம் நல்லவையுமல்ல.

சிவன் விஷத்தை உண்டு தன் கழுத்திற்குக் கீழ் அது செல்லா மல் தன் கழுத்திலேயே பாம்பாக வைத்துள்ளார் என்ற தத்துவத் தின் உண்மை என்னப்பா? வடதுருவம் விஷக்காற்றுக்களை ஈர்த்து வைத்துக்கொண்டு மற்ற பாகங்களில் பரவாமல் விஷ குண அமிலத்தையே நன்மையாக்கச் செயல்புரிகிறது வடதுருவ, தென் துருவ திசைகள்.

**30–6–80**

வடதுருவத்தையே ஈஸ்வரனுக்கி பாற்கடலில் பள்ளிகொண்டு அவரின் செயல் சிலாக்கிய முறைகளையெல்லாம் தத்துவக் கதைகளில் பிம்பத்தை உணர்த்தி, பிம்ப நாம காவியம் படைத் தார்கள் நம் முன்னோர்கள். நம் பூமியில், இக் கோடிக்கணக்

கான ஆண்டு சுழற்சி ஓட்டத்தில், பூமியின் சத்து நிலைப்பலனை இன்றளவும் நம் பூமி பெற்றது. இன்றைய காலகட்டத்தில் தான், அறிவின் வளர்ச்சி கொண்ட மனிதனால் நம் பூமியின் நிலையே பட்டுப்போன மரத்தைப் போல் உள்ளது. பல ஆண்டுகள் பலன் தந்து தன் சக்தி வலுவிழந்து நிற்கும் பட்டுப்போன மரத்தைப்போன்ற நிலையில்தான், நம் பூமியின் உள் ஜீவ நிலை உள்ளது.

பலனையெல்லாம் தந்தது. அப்பலனை நாம் பலவாகப் பிரித்தெடுத்துவிட்டோம். இன்றைய நிலை எப்படியப்பா இருக்கும்? நம் பூமியின் வடதுருவ, தென்துருவ திசைகளிலும் அதிகப்படியான விஷத்தன்மையின் நிலையினால் அதை வடிகட்டி இதுநாள் வரை நம் பூமிக்கு சுத்தமாக்கித்தந்த காற்றின் நிலையே இன்று மாறிக்கொண்டு வருகின்றது. வடதுருவம், தென்துருவம் எப்படி விஷக்காற்றைத் தன்னுள் எடுத்து சுத்தப்படுத்தித் தருகின்றது என்பீர்.

மாம்பழத்திலும், இன்னும் சில பழவகைகளிலும் எப்படி அதன் உள்கொட்டை கசப்பாகவும், பழங்கள் இனிப்பாகவும் உள்ளன? அதைப்போல் நம் பூமியின் இயற்கையே இக்கரியமில வாயுவான விஷ அமிலக்காற்றை சுத்தப்படுத்தி வெளிப்படுத்தும் மையக்கோளங்களாக இவ்வடதுருவ, தென்துருவ நிலையுள்ளது. அதன் அமிலப்படிவமே மீண்டும் உறைந்து பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மாற்றங்களின் வழித்தொடரிலும், நம் பூமியின் விஷ அமில குணத்திலும் அதிகப்படியான வளர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளதினால் வடதுருவ, தென்துருவ செயல் நிலையிலும் இவ் விஷத்தன்மை அதிகப்பட்டுவிட்டது.

எதுவும் அதனதன் வளர்ச்சி நிலைக்கொப்ப தன் இயற்கையுடன் தானாக வளர்ந்து ஒரு நிலையான வழிமுறையுடன் வழி நடந்தால்தான், அதன் நிலையில் ஒன்றுபோல் இருக்க முடியும். குழந்தைப்பருவத்தில் அந்தந்த வயதுக்குகந்த அறிவு ஞான வளர்ச்சியை எப்படி வளர்த்துக் கொண்டு, எந்த அறிவு செயல் முறை மனிதனாக வழிபெற்று, அவன் வாழ்கின்றானோ அதன் தொடர் வாழ்க்கை தான் அவனால் வாழ முடியும்.

எண்ணத்திற்கு மேல் செயலை ஏற்றினால் செயல்முறையில் நிறைவைக் காண முடியுமா? அதிகப்படியான எண்ணச்சுமை ஏற்றப்படும்பொழுது பைத்தியம்தான் பிடிக்கும் அம் மனி

தனுக்கு. அதைப்போன்ற நிலைதான் நம் பூமியில் வடதுருவ, தென்துருவ திசைகளுக்கு ஏற்பட்டுள்ளது.

**1–7–80**

## எங்கள் அனுபவம்

உங்களின் தியான ஈர்ப்பின் அருளினுல், உங்களின் ஈர்ப்புக் குகந்த போதனையை உணர்த்தி வருகின்றேனம்மா. நீங்கள் இருவரும் செலுத்திய தியானத்தின் ஈர்ப்பிற்கு, உங்களுக்கு இப் பொக்கிஷப் பேழையை அளிக்கின்றேன். இதிலிருந்து அருளப் பெறும் உண்மைகளை, உமதாகப் போற்றி, சிவனடியார்கள் என்று உணர்த்திய சித்தர்களும், நாயன்மார்களும், பல பாடல்கள் பற்றி வழிபெற்று எதை அடைய வேண்டுமென்று அதன் நிலைபெற்று இதனை உமதாகப் பிறருக்கு வெளிப்படுத்தாத பொக்கிஷமாய் வைத்து பேரின்பப் பெருநிலை என்ற அந்நிலையை அடையலாம் என்று உணர்த்திய எங்களின் குருநாதர் சற்குரு மாமகரிஷி ஈஸ்வரப் பட்டர் இன்றைய தியானத்தில் இந்நிலையில் காட்டித் தந்து அருளிய வுடன் பேரானந்தம் கொண்டு அவர் தந்த பேழையை நான் பெற்றவுடன்தான், என் எண்ணத்தில் சில வினுக்கள் தோன்றி அவரிடமே என்ன பயன்? என்றெல்லாம் வினு எழுப்பிய பிறகு, அவரிடம் அப்பேரின்பப் பெருநிலையை நீங்கள் தந்த அருள் பொக்கிஷத்தை நான் பெற்ருல், சுயநலம் என்ற நிலையில் நான் தனிமையாக்கப்படுவேன். அதனுல் பெறக்கூடிய பயன் என்ன? என்ற வினுவுக்கு, எம் குருநாதர், நம் பூமியில், அதுவும் இவ் இந்திய கண்டத்தில் பல பொக்கிஷங்கள் அரசர்கள் ஆண்ட காலத்திலிருந்து வைக்கப்பட்டு, அப்பொருள் உபயோகமற்று நம் பூமியில் உள்ளது. இன்று உங்களுக்கு என் அருளினுல் உலகத் திலுள்ள எப்பொருள் எங்குள்ளது என்று உணர்த்தினுல் அதன் பயனை நீங்கள் பெறவும், அதைப் பிறர் எடுக்கவும் உங்களின் தியான அருள் வழி செய்யும் என்று உணர்த்தி நம் குருநாதர் பதிலுரைத்தார்.

இவர் எங்களை எங்களின் அருள் நிலையையும், அவர்பால் வைத்துள்ள பக்திக்கும் பொருளைக்காட்டி சோதனைக்குள்ளாக்கு கின்ருர் என்பதனை அறிந்து ஆரம்பத்தில் அவர் சொன்னவுடன் நீங்கள்தான் பாடத்தில் உணர்த்தியுள்ளீரே, அரசர்களாலும், அன்றைய மக்களாலும் பூமிக்கடியில் புதைத்து வைத்துள்ள பொக்கிஷங்களை அவர்களின் ஆவியே அங்குள்ளபொழுது, அதனை அடைவது நம் சாதனைக்குடையதா என்ற சபல எண்ணமுடனும், முதலில் வினு எழும்பியது.

அதற்கும் குருதேவர் ஆவிநிலையில் பூதங்களாய் உள்ளவற்றை சப்த ரிஷிகளின் துணையுடன், எங்கள் துணைகொண்டு இப் பூமியில் எங்கெங்கு, எப்படி எப்படி பொருள்கள் புதைக்கப்பட்டுள்ளன எனச் சிலவற்றைக் காட்டி, எங்களைச் சோதனைப்படுத்தினர். அவர் ஒவ்வொரு நாளும் எங்களுக்குச் சில வினக்களை எழுப்பி அதன் நிலையில் எங்களை, எண்ணத்தினுல் பல சோதனைகள் வைத்துத்தான், எங்களின் அருள்நெறி தியானத்திற்கு வழி காட்டித் தருவார்.

இன்று உடலுடன், எங்களுடன் கலந்து வாழும், எங்கள் குரு வேணுகோபால சுவாமிகள் அடிக்கடி ஈஸ்வரப்பட்டர் அவர்கள் உடலுடன் உள்ள காலத்திலும், இன்றும் அவருக்கு ஏற்படும் சோதனையின் நிலையையெல்லாம், ஒருசில உணர்த்தியுள்ளார். இன்று எங்களையும் அதே சோதனைப்படுத்தினர். அப்பொழுது "நான் தந்த அருள் பொக்கிஷத்தை நீ ஏற்கவில்லையா? எங்களின் அருளால் எங்களால் தான் இந்நிலை ஏற்பட்டது என்ற பெயர் நிலைக்கும். நாங்களே அருள் தந்த பிறகு நீ எப்படி மறுக்கலாம்?" என்ற வினவும் எழுப்பினர்.

உடனே குருதேவர் "உள் நிலையில் இருந்து மட்டும் பதிலளிக்க வேண்டாம். உன் கணவரிடம் இவ்வினவை எழுப்பு" என்ருர். அவர் உடனே "இப்பொழுது குருநாதரின் அருளினுல் கிடைக்கப் பட்ட ஆத்மீக வழித்தொடரின் ஞான பொக்கிஷத்தின் அருள் நிலையடையும் பக்குவப்பேற்றைத் தந்தால் போதும். பொருளான பொக்கிஷத்தால் எப்பயன்?" என்ருர். உடனே குருநாதர் "இதே வட்டத்தில் இருந்தால் போதுமா? ஜீவாதாரப் பொருள் இருந் தால்தான் உயர்ந்தவனுக உலகம் மதிக்கும், வாழ்க்கை நடக்கும்" என்றுணர்த்தினர்.

இப்பொழுது நான் எழுப்பிய வினவிற்கு குருநாதர் கை தட்டிச் சிரித்துவிட்டுச் சில வழிமுறைப் பாடங்களைத் தந்தார்.

பலகோடி உயிரணுக்களைக் கொண்ட இவ்வுடலின் பிம்பத் திற்கு, இவ்வுயிர் என்ற பொக்கிஷத்தினைப் போன்ற, பலவாக உள்ள உலகத்தில் ஒன்ருகிய தெய்வ சக்தியைப் பெறும் பொக்கி ஷத்தை நாம் பெறும் ஞான அருள் பெறுங்களம்மா. உலகத் திலுள்ள பொருள் பொக்கிஷத்தை நாடி உங்கள் நாட்டம் செல்கிறதா என்பதனைத்தான் இன்று உங்களுக்கு சோதனையாக்கிக் காட்டினேன் என்று கூறி அவரால் இன்னும் சில உபதேசங்களும் எங்களுக்கு அளிக்கப்பட்டன.

## 2–7–80

இவ்வுலகில் உள்ள பொருள் பொக்கிஷங்கள் அன்றுண்ட நம் அரசர்களாலும், முன்னோர்களாலும் இவ் இந்திய கண்டத்தில் முக்கியமாகக் கோயில்களிலும், அரண்மனை அகழிகளிலுள்ள சுரங் கப்பாதைகளிலும், மற்றும் சில பெயர் குறிப்பிட வேண்டாத சிலைகளுக்குள்ளும் அப்பீடங்களிலும் பல பொருட்களைப் பதுக்கி வைத்துள்ளார்கள் நம் முன்னோர்கள். மற்றவருக்கும் உபயோக மற்று, தன் ஆத்மாவும் உயர முடியாமல் இப்பொருள் என்ற பேராசை பொக்கிஷ சுழற்சியில் அவ்வாவிகள் இன்றளவும் வாழ் கின்றன.

நம் எண்ணத்தினால் அதனை அடைய வேண்டுமென்ற தெய்வ சக்தியுடன் செயல் பட்டு, சித்து நிலைகொண்டு அறிந்திடலாம்; அதை எடுக்கவும் செய்திடலாம். அதனால் அடையக்கூடிய பொருள் என்ன? பிம்பப் பொருளை அடைந்தால் நாம் பெற வேண்டிய ஞானப் பொருளின் வழித்தொடர் அற்று, மேன் மேலும் இப்பேராசையின் சுழற்சியில் சுற்றிக்கொண்டுதான் வாழ்ந்து, அதே நிலையில் ஆத்மா பிரிந்து வழி நடந்திடல் வேண்டும்.

இப்பொருள் மட்டுமல்லாமல் இப்பூமிக்கடியில் இயற்கை வளமுடன் வளர்ந்திட்ட பல அபூர்வ கனி வளங்கள், படிவக் குவியல்கள் எங்கெங்கு உள்ளன என்பதனையெல்லாம் நாமடையும் சித்துநிலையால் உணரலாம். அதன் நிலையை வெளிப்படுத்தி இவ்வுலக ஆத்மாக்களை மேன்மேலும் இப்பேராசையின் செயற்கை செயலுக்குத்தான் எச்சக்தி நிலையும் முன்னோடியாக நிற்குமேயன்றி எப்பொருளை அடைய வேண்டுமென்ற பரம்பொருளின் நிலை பெற வழியாகாது.

சித்தர்களின், சப்த ரிஷிகளின் செயலினால்தான், இவ் வுலக ஆத்மாக்கள் இன்று வாழ முடிகின்றது என்று பல முறை செப்பிவிட்டேன். சித்தர்கள், சப்த ரிஷிகள் இவர்களின் செய லென்ன?

## 3–7–80

இன்று எப்படி நாம் உடலுடன் ஜீவன் பெற்று வாழும் நிலையில், நம் உடலின் எடையை நாம் பாரமாகச் சுமக்க முடி யாமல் இருப்பது போன்ற உணர்வு நமக்கு ஏற்படுவதில்லை. நாம் எடுக்கும் சுவாச அலையில் நம் உயிரணு என்ற இயந்திரத்தின்

ஓட்டத்தினுல் நம் உடலிலுள்ள பலகோடி உயிரணுக்களும் அச் சுவாசத்தின் அலையை இப்பூமியின் ஈர்ப்பில் காற்ருகக் கலந்து தான் வாழுகின்ருேம்.

இப்பொழுதுள்ள நம் உடலின் எடையே ஜீவனற்ற உடலாய் ஆன பின்பு அதன் கனம் கூடிவிடுகிறது. இப்பூமியின் ஈர்ப்புடன் ஐக்கியப்பட்டு, பூமியின் ஈர்ப்பு சக்தி குணத்துடன் ஜீவனற்ற பிம்பங்கள் உள்ள நிலையைப்போல், ஜீவன் பிரிந்த உடல்களும் அவ் ஈர்ப்பின் அதிகப்படியான இழுவையுடன், சுவாச அலையை எடுக்காத உடல் ஆனவுடன், கனம் பொருந்திய ஈர்ப்புடன், அவ் வுடல் ஐக்கியப்பட்டு விடுகிறது. இச்சுவாச அலையின் சக்தியினுல் தான், ஜீவன் கொண்ட ஜீவன்களின் நிலைக்கும், ஜீவனற்ற பிம்பங் களின் நிலைக்கும் கனத்தில் (எடையில்) வேறுபாடு ஏற்படு கின்றது.

இருந்தாலும், ஜீவன் பிரிந்த உடல்கள் அவ்வுடலிலுள்ள மற்ற ஜீவ அணுக்களின், ஈர்ப்பின் அமில குணத்தால் அவ்வுடல் உயிர் பிரிந்த பிறகு அதன் உடல் உறுப்புக்கள் பெருகுகின்றதே, அதன் நிலை எப்படி?

நாம் சிலவகை உணவுப் பொருட்களை ஒன்றுடன் ஒன்று கலந்து அதில் நீரை ஊற்றி வைத்தால் அதிலிருந்து சில அமிலங்கள் வளர்ந்து புளிப்பு நிலை ஏற்படுவதைப்போல், இஜ் ஜீவனற்ற உடலும் அப்புளிப்பு நிலையான அமிலங்கள் ஏற்பட்ட பிறகுதான், அதன் நீர் சக்தி வடிந்து, அவ்வுடல் பிம்பம் நாற்றத் தன்மை இழந்து, இப்பூமியுடன் அவ்வுடலும் கலக் கின்றது.

அதன் பிறகுதான், உடலிலுள்ள அவ்வுடலுக்குச் சொந்த மான ஜீவ அணுவுடன், அஜ் ஜீவ ஆத்மாவும் முதலிலேயே உடலைவிட்டுப் பிரிந்த உயிருடனும் இச் சப்த அலையுடனும், இவ்வாத்மாவும் கலந்து இவ்வாத்ம ஜீவன் அதற்குகந்த செயல் வட்டத்திற்குள் செல்லுகின்றது. உடலுடன் உள்ள பொழுது ஒரு நிலையும், உடலைவிட்டு ஜீவன் பிரிந்த பிறகு ஒரு நிலையும், அவ்வுடல் பிம்பமே மாறி அவ்வாத்மா ஜீவனுடன் சேர்ந்த பிறகு ஒரு நிலையும், இப்படி மூன்று நிலைகளில் மனிதனின் நிலைகள் உள்ளன.

ஆனுல் சப்த ரிஷிகளும், சித்தர்களும் இவ்வுடல் என்ற பிம்பத்தையே பிரித்துக்கூட்டும் செயலுடையதாக்குகின்ருர்கள், அவர்கள் எடுத்த எண்ணத்தின் சுவாச ஜெபத்தால். இக்காற்றில்

உள்ள அமில குணங்களைப் பிரித்து, கூட்டி வழிப்படுத்தும் செயல் முறையைச் செயல்படுத்துபவரே நம் சப்த ரிஷிகள்தாம்.

காற்ருகவும், நீராகவும், ஒளியாகவும் ஐக்கியப்பட்டுள்ள நம் சப்த ரிஷிகளின் செயலினுல்தான் இன்று இப்பூமியில் மனித ஆத்மாக்கள் பிறந்து வாழச் செயலாக்கி வருகின்றனர். நம் பூமி மட்டும்தான் சுழன்று ஓடுகின்றதா? மற்ற மண்டலங்கள் இல்லையா என்று வினு எழும்பலாம். ஜீவன் கொண்ட ஜீவாதார முடன் வாழும் பூமி நம் பூமி. அதற்குகந்த அமில சக்தியைக் கூட்டி, வழிப்படுத்தியவர்கள் கோடிக்கணக்கான ஆண்டுகளாய் பெற்ற தவத்தின் வலிமை நிலையில், இப்பூமியின் அமிலங்கள் கூடப்பெற்று, அக்கூட்டின் வளர்ப்பில் மனித பிம்பங்கள் வளரச் செய்து, அம்மனித பிம்பங்களுக்கு அறிவாற்றலின் வழியைப் பல வழிகளில் வளரச் செய்து. மனிதனின் ஞானத்தின் வளர்ச்சிக் கூட்டின் வலு சக்தியைத் தன் வலுவுக்கு அதிகப்படி எடுத்து, மேன்மேலும் இக்காற்று மண்டலத்திலுள்ள, இப்பேரண்டப் பெரு நிலை என்ற பரந்த நிலையைக் கூட்டி பிம்பம் செய்கிருர்கள் நம் சப்த ரிஷிகள்.

மண் மண்ணுக உள்ளபொழுது அதன் பிம்பத்தைக் காண முடிகின்றதா? மண்ணை எடுத்துக் குயவன் பானையும், சட்டியும் பல பொருட்களாக்கிக் காட்டினுல், தான் அம்மண்ணின் பிம்பத்தை நாம் காணுகின்ருேம். ஆதிசக்தியின் அருள்தான் குயவனும் மண்ணும். அக்குயவன் அம்மண்ணைத் தோண்டி எடுத்துத்தான், செய்து பொருளாக்கிக் காட்டுகின்ருன். அதைப்போன்று நம் பூமியைப் பொருளாக்கி, மனித சக்தி படைத்து தன் சக்திக்குகந்த பொருளான ஞானப் பொருட்களை சப்த ரிஷிகள் ஞானியாகவும், சித்தனுகவும் பொருள்படுத்தி எடுத்துக் கொள்கின்ருன்.

சப்த ரிஷியின் பொருளான நம் பூமியின் தொழிற் சாலையே அத் தொழிலுக்குகந்த மூலப்பொருளின் தரம் குறைந்ததினுல், மேலும் தரமான பொருளைப்போட்டு கல்கியைக் காண சப்த ரிஷிகளின் செயல்கள் இன்று நடந்து வருகின்ருன்.

**4–7–80**

இங்கு வந்து எங்களின் செயல் நடப்பின் உண்மையை உணர்ந்து, மனித ஆத்மாக்கள் அவரவர்கள் உணர்ந்து பக்குவம் பெறும் பாட முறைகளை உணர்த்தி வந்துள்ளோம். பள்ளியில் பயிலும் மாணவனுக்கு, அவன் ஆசிரியரின் போதனையை ஏற்று,

அவனுக்கு வைக்கும் தேர்வில் அவன் பெறும் மதிப்பெண்படித் தான், அவன் அறிவு நிலை கூடிய மதிப்பெண் பெறுகின்றான். அம் மதிப்பெண்ணின் உயர்விருந்தால், உயர் ஞானக் கல்விக்குச் செல்கின்றான். அறிவு ஞானம் பெறாத மாணவனை உயர் வகுப் பிற்குத் தேர்ந்தெடுக்க மாட்டார் அவ் உபாத்தியாயர்.

அதைப்போல் ஆண்டவனின், ஆண்டவன் என்பது, உயர் சக்தி ஞான ரிஷியின் அருள் உலகளவுக்கும் பரப்பப்பட்டு, அந்த ஞானத்தின்பால் ஈர்ப்புக்கொண்ட அவர்களின் பயனை ஏற்ப, படைப்பின் பொருளை அவர்கள் பலனில் கண்டெடுத்துக் கொள் கின்றனர் சப்த ரிஷிகள். அப்பயன் பெற்ற ஆத்மாக்களின் செயலுக்கும் பல தேர்வுகள் வைத்துப் பொறுக்கித்தான் அவர் களின் வட்டச் சுழற்சிக்கே செல்ல முடிகின்றது.

கல்விக் கூடம் செல்லும் மாணவர்கள் யாவரும் பள்ளியில் இறுதிப்படிப்பு வரையும் மேல் ஞானக் கல்வி பெற செல்ல முடி யாமலும் எப்படி அப்படிப்பை ஏற்கமுடியாமல் பள்ளியிலிருந்து நின்றுவிடுகின்றனரோ அதைப்போன்று இச்சக்தி நிலையுணர்ந்து பேரின்ப நிலை எய்திடல் வேண்டுமென்ற செயலில் உள்ளவர்களும், தான் எடுக்கக்கூடிய முயற்சி ஜெபத்தில் பின்தங்கி விடுவதுண்டு.

தங்கத்தைப் பழுக்கக் காய்ச்சித் தட்டத் தட்டத்தான் அதன் தரம் உயருகின்றது. எண்ணத்தில் ஏற்படும் பலவற்றிலிருந்தும் ஒன்றான இறை ஞான சக்தியை ஈர்க்கும் நிலை பெற ஏற்படும் சோதனையிலெல்லாம், எச்சோதனையிலிருந்தும், நாம் மீண்டும் அஜ்ஜெப நிலை பெறுகின்றோமோ அதுதானப்பா இறை ஞானம் பெறும் ஜெப முறை.

**5–7–30**

காட்சி: தூளியில் குழந்தையைப் போட்டுத் தாலாட்டி தாய் தூங்க வைக்கிறாள். அக்குழந்தை இன்பமாகத் தாயின் தாலாட்டுடன் மகிழ்ந்து உறங்குகின்றது, நிம்மதியாக. தாய் குழந்தையை அன்பாய்த் தாலாட்டி, உறங்க வைத்தாலும், அத்தூளி உறுதியாக உள்ளதா? அதில் கட்டியுள்ள துணி கெட்டியாக இருக்கின்றதா? குழந்தையின் மேல் பூச்சி புழுக்கள் விழாமல் உள்ளதா? என்றெல்லாம் பல தற்காப்புகளைப் பார்த்துத் தான், அக்குழந்தையைத் தாலாட்டும் இன்ப நிலையில் மகிழ்ந்து, குழந்தையின் நிம்மதியான உறக்கத்திற்கு உகந்த பாதுகாப்பைச் செய்கின்றாள்.

இதிலிருந்து எதனைப் புரிந்துகொண்டீர்கள்? இன்று அக் குழந்தைக்குத் தாயாய் தன் சுயநலம் கண்டு அக்குழந்தையைப் பேணிக்காக்காமல், தன் நிறைவைக் காணும் தாய், அதே குழந்தை வளர்ந்து, அது ஒரு குழந்தையை ஈன்று, பேணி வளர்க்கும் முறைக்கு அத்தாய், அக்குழந்தையை வழி நடத்திச் செல்லுகின்றாள். இதன் தொடர்வழிக்காலங்கள் உருண்டு கொண்டே வருவதைப்போன்று நம் சப்த ரிஷிகளால் அவர்கள் பெற்றெடுத்த உயர் ஞானக் குழந்தைகளை அவர்களின் வழித் தொடர் ஞானங்கள் வழி நடந்தே செயல் கொள்ள, அவர்களின் செயல்கள் உலகெங்கும் வழிபட்டுக்கொண்டுள்ளது.

இப்பூமியிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் இன்றுள்ள ஜென்ம நிலை இக்கலியில் கடைசியாக முடிவுற்று இதன் நிலை முற்றுப் பெறாமல் இருக்கத்தான் நம் சப்த ரிஷிகளின் செயல் ஞானத் தொடர். தன் ஆத்மக்குழந்தைகளை இப்பூமியின் ஈர்ப்பு அமிலத் துடன், சூட்சுமம் கொள்ள வழிப்படுத்தினால்தான், கலியில் ஞானம் பெருகும். கலியின் வட்டத்தில் ஞான ஜெந்துக்கள் ஜீவன் கொண்டு, அஜ் ஜீவ சக்தியிலிருந்து எடுக்கும் ஜெகத்தின் ஜோதி சக்தியிலிருந்துதான் எந்த சக்தியும், எந்த சக்தி என்பது எந்த ஒரு வளர்ச்சி பெறும் அமில குணங்களின் மண்டல சக்திகளே வளர முடியும்.

இன்றுள்ள இக்கலியில் வாழும் மக்களின் நலனை உயர் வாக்கி ஞானத்தின்பால் அவர்களின் எண்ண ஒளியைச் செய லாக்குவது உலக வளர்ச்சி மட்டுமல்லாமல் எம் மண்டலங்களையும் வளர வைக்கும் சக்திக்கு மனித ஞான வழியில் வந்த செயல் ஞானம் வேண்டுமப்பா. இது நாள்வரை தந்து வந்த பாடத்தின் பொருள் புரிந்ததா? இன்றுள்ள நம் பூமியில் உள்ள மனித ஆத்மாக்களுக்கு, எந்த நிமிடத்தில் எந்த ஆத்மா பிரிகிறதென் பது தெரியாத ஓர் சூழ்நிலை உலகெங்கும் உருவாகி, உலக மாற்றத்திற்கு நாள் நெருங்க நெருங்க மனித ஆத்மாக்களின் எண்ணங்களும் சிதறிவிட்டன.

சிதறியுள்ள ஆத்மாக்களில் ஜெபத்தின் ஈர்ப்பால் நாமும் பொறுக்கி எடுக்கின்றோம்.

**6–7–80**

ஆதி பராசக்தியின் சக்திக் குழந்தைகளான எல்லாமில் எல் லாமாய் இறைசக்தி நிறைந்துள்ளது. ஒவ்வொரு சாராரும்

இறைவனை அவரவர்கள் ஒவ்வொரு வழிகொண்டு வணங்கு கின்றனர். நாஸ்திகம் பேசுபவர்கள் இறை சக்தியைக் காட்டச் சொல்லுகின்றனர். எல்லா ஜீவராசிகளும் எல்லாமும் இறைவன் தான் என்றாலும் இறைவனை நாம் காண முடிகின்றதா?

காட்சி: முதுகில் அரிப்பெடுத்த ஒருவர் அரிப்பெடுத்த இடத்தைத் தன் கையால் கீற முடியாமல் மற்ற உபகரணத்தை எடுத்துக் கீறுவதைப் போன்றும், முதுகைச் சுவரில் தேய்ப்பது போன்றும் காட்சி தருகின்றார்.

விளக்கம்: தன் முதுகுதான், ஆனால் தன் முதுகைத் தானே சொறிவதற்கு முடிவதில்லை. அந்த இடத்தில் என்ன உள்ள தென்று பார்க்கவும் முடிவதில்லை. ஆனால் தனக்குச் சொந்தமான முதுகுதான் அது. அதில் ஏற்படும் நமச்சலையும், உணர்ச்சி களையும் உணர முடிகின்றது. அதைப்போன்று ஒவ்வொரு உயி ரினத்திலும் அவ் உயிரணு தோன்றிடவே ஆண்டவனின் சக்தி ஆவியாய் உயிர்கொண்டு இருந்தால்தான் அனைத்து ஜீவன் களுமே வாழுகின்றன. இப்படி இருக்க ஆண்டவன் என்ற தனித்த பிம்பத்தைக் காட்டினால் தான் ஆண்டவன் என்று உணர முடியுமா?

ஆண்டவனின் அருள் சக்திக்குகந்த செயல்படும் ஜீவன் களாகத்தான் ஒவ்வொரு ஜீவனும் ஜீவித்து வாழ்கின்றது. இதை உணராமல் தனக்கு எந்த அளவு சக்தி நிலை உள்ளதோ அந்த நிலையில் எடுக்கும் செயல் வாழ்க்கைதான் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் அவன் எடுக்கும் சுவாச எண்ணம் கொண்டு செயல்படுகின்றது. நுண்ணிய, சிறு கருவிகளை நுண்ணிய சிறு உறுப்பின் துணைகொண்டுதான் அதன் வேலைப் பாடு செய்ய முடிகின்றது. கனம் கொண்ட பெரிய உறுப்புகளின் செயலுக்கு, அதன் செயலுக்கு உகந்த சாதனைப்பொருள் கொண்டு தான் அப்பொருளை உருவாக்க முடிகின்றது. அதைப்போன்று, நாமெடுக்கும் குறுகிய எண்ணத்தின் வளர்ச்சி சுவாசமிருந்தால் அதன் தன்மைக்குகந்த குறுகிய ஞானம் கொண்ட வாழ்க்கை நமக்கு அமையும்.

எண்ணத்தின் வலு எதன் அடிப்படையில், எதன் சக்தி திறனில் கூடுகின்றதோ, அதன் செயல் ஞானம் தான் நமக்கும் கிட்டும். எண்ணத்தின் உயர்வை இவ்வுடல் என்ற ஆவியுடன் கூடிய ஆத்ம உயிர் இப்பிம்பத்தில் உள்ளபொழுதே நம் சுவாச அலையை உயர்ந்த ஞான எண்ணமுடன் செலுத்தி எடுப்போ மானால் இப்பொழுதுள்ள ஜீவ சக்தி கொண்ட இவ் உடலில்

எடுக்கும் ஞான அலையைக் காட்டிலும் உயர்ந்த ஞான அலையை நாம் பெறுவதற்கு உடல் அற்ற பிறகு செயல்படுத்திட முடியாது.

காட்சி: ஒரு பந்து நீரில் மிதந்து ஓடிக்கொண்டே உள்ளது. அப்பந்தில் சிறு துவாரம் ஏற்பட்டவுடன் பந்திலுள்ள காற்று பிரிந்து அப்பந்தானது நீரின் உள்பாகத்திற்கு நிலத்தில் சென்று விடுகின்றது.

விளக்கம்: அதைப்போன்று இவ்வுடல் என்ற காற்றடைத்த இப்பந்து இவ்வுடலில் உள்ள உயிர் ஆவி பிரிந்தவுடன் நடக்கவோ நிற்கவோ முடியாமல் ஜீவனற்று இக்காற்று பிரிந்தவுடன், நிலத்துடன் கனத்து ஐக்கியப்பட்டு விடுகிறது. அதைப்போன்று இக்காற்றின் அலை சக்தியை நம் சுவாசம் எடுக்கும் நிலைகொண்டு தான் நம் உடல் ஆத்மா மட்டும் வாழ்வதோடல்லாமல் நம் எண்ணத்தின் ஆத்ம வலுவின் சக்தியும் வாழுகின்றது. அதன் சக்தித்திறனை வழிப்படுத்தித் தருவதுதான் நம் சத்தியத்தின் சக்தி நிலை தரும் உண்மை ஞான வழித்தொடர் எல்லாமே.

**10–7–80**

முற்றும் துறந்தவன் முனிவன், பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்தால் தான் தெய்வத்தின் ஒளி மோட்சம் கிட்டும் என்ற சொல் நடைமுறையில் உள்ளது. முற்றும் துறந்தவன் முனிவன் என்றால் எதன் அடிப்படை கொண்டு பகர்ந்த பொருள்? முந்தைய நாட்களில் நம் முன்னோர்களால் வெளியிடப்பட்ட கருத்துக்களின் உண்மைக் கோவையை உணர்ந்தோமா நாம்? முற்றும் துறந்த நிலை என்பது வாழ்க்கையில் பற்று, பாசம், கடமை இவற்றிலிருந்து விலகி தன் நலம் காணத் துறவறம் பூண்டு, மெய் அருள் பெறும் நிலையல்ல, முற்றும் துறந்ததின் நிலை.

ஒவ்வொரு ஆத்மாவுக்குள்ளும் நிறைந்துள்ள பலகோடி அணுக்களின் எண்ணத்தின் வளர்ச்சியில் வாழ்ந்திடும் மனிதன் தன் எண்ணத்துக்குள் உந்தப்படும் உணர்ச்சியிலிருந்து, அவ்வுந்தலுக்கு அடிபணியாமல் அவ்வுந்தலைத் துறக்க வேண்டும். பயம் என்ற உணர்வினால் உருளப்படும் கோளம் இம்மனிதக் கோளம். மனிதனின் எண்ணமே முற்பிறவியில் பிறப்பாசை கொண்டு இப்பிறப்பில் கருவிற்கு வருவதினால் பயம் என்ற அச்ச உணர்வு குழந்தைப்பிராயம் முதற்கொண்டே மனித ஆத்மாவுக்கு வருகின்றது.

மனிதனைக் காட்டிலும் அதிகமான இப்பயம் என்ற அச்ச உணர்வு மிருகங்களுக்கும், பட்சிகளுக்கும் அதிகமும் உண்டு, தற்காத்துக்கொள்ளும் சுவாச அலையின் சக்தியும் அதிகமாக உண்டு. மனிதனிலிருந்து வந்த மிருகத்திற்கு அவ்வுணர்வின் அலை அதிகமாக ஒவ்வொரு பிறவியும் எடுத்து, மிருகப்பிறவிக்கு வந்த பிறகு அதன் சுவாச அலையின் ஜீவன் கொண்ட உடல் அமைப்பு வளரத்தக்க நிலையிலேயே இத்தற்காத்துக்கொள்ளும் அமிலத்தின் சக்தி குணம் வீரியப்பட்டு இயற்கையாய் அதனுடைய உருவத் திலேயே சில உணர்வுடன் மிருக ஜெந்துக்களும், பறவைகளும் பிறப்பெடுத்து வருகின்றன.

மனிதனின் நிலையுடன் அதிகப்படியான எண்ண அலையின் மோதலினால், தன் எண்ணத்திற்குகந்த, தன் உடலில் ஏற்றிக் கொண்டுள்ள, பல உயிராத்மாக்களின் நிலையும் கலந்துள்ளன. அதுவுமல்லாமல் ஒவ்வொரு தாய் தந்தையரின் (ஆண், பெண்) உடலுடன் பிறப்பிற்கு வரக்கூடிய பல உயிரணுக்கள் கர்ப்பம் தரிக்கும் நாட்களுக்கு முதலிலேயே அவ்வுடல்களில் ஏறிவிடு கின்றன.

இப்படிப் பல உயிரணுக்கள் நம் (மனிதனின்) ஆத்மாவுக் குள் உடலில் கலந்துள்ள நிலையில், இப்பயம் என்ற உணர்வின் நிலை அதிகப்படுமானால், மனிதனின் உணர்வில் எண்ணத்தைக் காட்டிலும், மனிதனின் உடலிலுள்ள அணுக்களும், உயிராத்ம அணுக்களும் தன் செயலுக்குகந்த நிலை அவ்வுடலில் ஏற்படாத குணம் கண்டவுடன் தன் விடுதலையை எண்ணி அதனுடைய எண்ண வேக உந்தலுக்கும் மனிதன் உட்படுகின்றான். மனி தனுக்கு பயம் என்ற உணர்வு அற்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் முனிவன் என்ற நிலை எய்துகின்றான்.

மனித ஆத்மாவில் இருந்து இவ்வெண்ண நிலையை பயம் என்ற அச்ச உணர்வுக்கு இடம் தராத சுவாச அலையுடன், ஒவ் வொரு மனிதனும் வாழ வேண்டும். எந்நிலைகொண்ட இக்கட் டான சூழ்நிலை ஏற்படும் தன்மையிலும், இம் மரண பயம் ஏற்படாவிட்டால் அந்த இடத்தில் தெளிவின் வழி கிடைக்கும்.

ஓர் அறையில் ஜீவன் பிரிந்த உடலுடன் தனித்து நாம் இருந்தாலும் பயம் என்ற உணர்வை அண்டவிடாமல் ஜீவனற்ற வஸ்துப்பொருள் உள்ளதைப் போன்று நம் எண்ண நிலை இருந் திடல் வேண்டும். ஒவ்வொரு மனித ஆத்மாவின் உடலும் உயிரணுக்களும், உயிர் ஆத்ம அணுக்களும் பல உள்ள பொழுது மனிதனுக்கு இம்மரண பயம் என்ற பயம் ஏற்படாவிட்டால்,

மனிதனுக்குள்ளுள்ள இவ் ஆத்மாவே ஓர் மனிதனின் செயலைப் பலகோடி மனிதர்கள் செய்யத்தக்க உணர்வு சக்திகளை மனிதனின் உடலிலுள்ள உயிரணுக்களே உதவி செய்யும்.

தன் நிலை பெறல்வேண்டும் என்பதின் உட்பொருளின் உண்மை நிலை, தன் நிலை பெறும் மனிதனின் எண்ணத்திற்கு தன் நிலைக்கொப்ப அனைத்து உயிரணுக்களும் ஒன்றுபோல் சக்தியை அவ்வலுவின் வலுவுடன் கூட்டச் செய்யும். பல நினைவுடைய மனித ஆத்மாவின் உடலிலுள்ள உயிரணுக்களும் அதனதன் நினைவின் வளர்ச்சியின் செயலுக்குத்தான் பல நினைவுடன் உள்ள மனிதனுக்கு உதவி புரியும். மிருகங்களைக் காட்டிலும் மனிதனின் எண்ணம் வளர்ச்சி பெற முடியும் என்ற அடிப்படையில் தான் சமநிலை கொள்ளும் மனிதனுக்கும், சாந்த குணம் கொண்ட பசுவைப் போன்ற சில பிராணிகளுக்கும் அதன் சூலில் ஒவ்வொரு சிசு பிறக்கின்றது.

இரட்டைக் குழந்தைகளும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளும் மனித ஆத்மாவுக்கு எப்படிப் பிறக்கின்றன? மிருகங்களுக்கு ஒரே சூலில் பல குட்டிகள் எப்படிப் பிறக்கின்றன?

**14–7–80**

இது நாள் வரை முந்தைய பாடங்களில் அவரவர்கள் எடுக்கும் எண்ண நிலைக்கொப்ப அமிலங்கள் வளர்கின்றன. இவ்வெண்ண நிலையில் அதிகப்படியான குண நிலைகொண்டு அதே குண எண்ணத்தைக்கொண்ட, உடலை விட்டுப் பிரிந்த, ஜீவ ஆத்மாக்களும் இன்னும் தன் மகன், மகள் என்ற குடும்ப பாசத்திலிருந்து சென்ற முன்னோர்களின் உயிராத்மாவும், இத்தாயின் கருவில்தான் பிறக்க வேண்டுமென்ற பிறப்புத் தொடரில் இருந்தும், முந்தைய காலங்களில் பல ஜென்மங்களாய் விட்ட குறையிலிருக்கும் உயிராத்மாக்களும், இவ் ஆண், பெண் இரு பாலரின் பருவ மாற்ற உடல் வளர்ச்சி ஏற்படும் காலம் தொட்டே அவர்களின் சுவாச அலையுடன் இவ்வாவிகளின் ஈர்ப்பு, அவ்வுடலுடன் ஏறிக்கொள்ளுகின்றது. நம் முன்னோர்கள் பருவம் எய்திய பெண்களை அதிகமாக வெளியில் செல்லாமல் வைத்திருந்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

தன் மண வாழ்க்கையில் தோல்வி கண்ட ஆவிகள் தன் எண்ணத்தை ஈடேற்ற அதே வயதுக்குகந்த, அப்பருவ நிலை கொண்டோரின் உடலில் ஏறிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் எதிர் நோக்கிப் பல நிலைகளைச் செய்கின்றது. இதன் சக்தியின் நிலை

சூரியனின் ஒளி அலை அதிகமாகப் பாயும் நேரத்தைக் கொண்டு இதன் செயல் நடக்கும் (உச்சி வெய்யிலில்). அதுவுமல்லாமல் இவ் வாவிகள் மற்ற இடங்களில் சுழன்றுகொண்டிருப்பதைக்காட் டிலும், நீர்நிலைகள் உள்ள இடங்களில்தான் அதன் சுழற்சி அதிகப்பட்டிருக்கும்.

ஜீவனுக்கு வரவேண்டுமென்ற ஆசையிருப்பதினால், தன் உயிரணுவுடன் கூடிய ஆத்ம நிலை சிதறிவிடாமல் இருக்க, நீரிலி ருந்து சூரிய ஒளிபட்டு அதிகமாக அவ்வொளி அலை உள்ள இடங் களிலிருந்தால், இவ்வாவிகளுக்கு அதனுடைய ஆத்ம அமிலம் சிதறுபடாமல் காத்திருக்க முடியும். முன்னோர்களை வணங்க எதற் காக ஜீவ நதி உள்ள இடத்திற்குச் செல்லும் பொருள் புரிந்ததா? இப்படிப் பலவாக உள்ள ஆவி ஆத்ம உயிரும், ஜீவ உடல்கொண்ட ஆத்ம உயிருமான மனிதர்களின் நிலையும் கலந்து வாழ்வதினால் தன் பிறப்பின் ஆசைக்காகப் பிறப்பெடுக்கப் பல உடல்களில் முன் கூட்டியே இவ்வாவி ஆத்மாக்கள் ஏறிக்கொள்ளுகின்றன. ஏறிக்கொள்வதோடு மட்டும் அல்லாமல் அவ் உடலிலிருந்து தன் சாதக நிலைக்காக அம்மனிதனின் எண்ணத்தையே இவ்வாவி ஆத்மாக்கள் செயல்புரிகின்றன.

இப்படி உள்ள ஆவி ஆத்மாக்கள் தான் பிறப்பில் வரும் நிலையில் சிலருக்கு ஒன்றுக்கு இரண்டாகவும் பலவாகவும் கரு வுக்கு வருகின்றது. மனிதனைக் காட்டிலும் மிருகத்தின் சுவாசத் திற்கு மிருக உடலில் பல உயிராத்மாக்கள் ஏறிவிடுவதால், ஒரே சூலில் பல குட்டிகளை ஈனுகின்றது. மிருகங்களிலேயே ஒரு நிலைகொண்ட, சாந்த குணமுடைய சில பிராணிகளுக்கு ஒரு சூலில் ஒரு கன்று ஈனும் நிலை வழி உள்ளது.

இப்பிறப்பில் நடைபெறும் இச்செயல்களும் எண்ணத்தி லிருந்துதான் வழித்தொடர் பெற்று அதனதன் இன நிலையின் அமில குணம் தொட்டு பிறப்பிற்கு வருகின்றது. இதன் தன்மையில் உடலில் ஏறிய அத்தனை உயிராத்மாக்களுமே பிறப்பிற்கு வர முடியாமல் அவ்வுடலிலிருந்து ஆவி பிரிந்த பிறகு அதற்கும் விடுதலை கிடைத்து மீண்டும் தன் பிறப்புக்குகந்த இடம் எடுத்து வருவதற்குள் பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன, இவ்வுடலை விட்ட ஆவி ஆத்மாக் களுக்கு.

இவ்வாவி ஆத்மாக்களின் வழித்தொடரில் தான் பிறப்பு வருகின்றதா, என்ற வினா எழும்பலாம். ஒவ்வொன்றின் நிலை மனிதனிலேயே பலவாக வருகின்றது.

16–7–80

இம் மனிதப் பிறப்பெடுக்கவே நம் வாழ்க்கையில் காணும் முறைப்படி கர்ப்பத்தில் பத்து மாதம் இருந்து பிறப்பெடுத்து, வாழ்ந்து மடிந்து மீண்டும் இதே நிலையென்ற உணர்வுகளும் இது நாள் தொட்டு மனித ஆத்மாவின் உயிர் பிறப்பின் வளர்ச்சி நிலையின் தத்துவ நிலைகளும் உண்மையை உணர்த்தி மனிதனுக்கு வழிகாட்டவில்லை.

தாவர வர்க்கமாகி, அத்தாவர குண ஈர்ப்பில் வளர்ந்த நிலையில், வளர்ந்தநிலையென்பது, தாவரங்களிலேயே எண்ணில டங்கா பல கோடி இன வளர்ச்சியுண்டு. ஒன்றிலிருந்து மாறு பட்டு மீண்டும் அத்தாவர இனமே மற்றொன்றாகிறது. வளர்ந்து கொண்டேயுள்ளது. இத்தாவரங்களில் பல அபூர்வ உன்னத அமில குணத்தின் ஈர்ப்பில் அது வளர்ந்து வாழ்ந்து, அது மடிந்த பிறகு, மீண்டும் இம்மண்ணில் அத்தாவர இனத்துடன், இம்மண் ணின் ஈர்ப்புக் குணமும் சேர்ந்து மற்றொரு குணமும் பெறுகின்றது. இது மடிந்த நிலையில் இதிலிருந்து வெளியாகும் ஆவி அமிலம் தன் இனத்துடன் இனமாகச் சேரும்பொழுது ஒன்றின் மேல் ஒன்று பட்டு, கனநிலை ஏற்பட்ட பிறகு, பூமியின் ஈர்ப்பில் அதற்கு மேல் கனத்தன்மை கொண்ட தன் இன உலோகமுடன் அது கலந்து விடுகின்றது. இப்படியே பூமியின் காந்த ஈர்ப்பின் ஆவி நிலையான இவ்வெக்கையின் வளர்ச்சி தாவர நிலையிலிருந்து பிரிந்த அமில குணத்தில், சக்தி கொண்ட வலுவாய் மனித வர்க்கங்கள் ஆரம்ப கதியில் தோன்றியிருந்தாலும் இன்றைய மனிதன் ஒன்றிலிருந்து ஒன்றாக மனிதனிலிருந்து மனிதன் பிறக்கும் இன்றைய உலகில் தாவரங்களை எப்படி நாமாக பயிர்செய்து அதன் மகசூலிலிருந்து மீண்டும் மீண்டும் அதன் மகசூலை எடுக்கின்றோமோ, அதன் நிலை போன்ற வழி நிலையில் மனிதக் கரு தோன்றி வந்தன. இன்றைய நாளில் எப்படி நாம் பயிர் செய்யும் நிலங்களில் பல காலங்களுக்கு ஒரே இனப்பயிரைப் பயிர்செய்யும் பொழுது அப்பூமியின் ஈர்ப்பி லுள்ள சக்தி குறைந்து அந்நிலத்தின் பலன் நிலை குறைவுபடுவதைப் போன்று ஆரம்ப கதியில் உயர்ந்த உயிரணுவாய்ப் பல சக்தி அமிலத்தைக் கூட்டிக் கூட்டி மனிதனாகிப் பிறப்பு மாறி மாறி அவன் எடுக்கக் கூடிய எண்ணத்தின் ஈர்ப்பின் நிலையினால், மனித அமில குணமுள்ள நாள் வரை மனிதக் கருவில் உதித்து, வாழ்ந்து, மனிதனாய் உள்ள நிலையில் மிருக குணத்தில் வாழும் மனிதன் நிச்சயம் அடுத்த பிறப்பில் மிருகமாகின்றான்.

மிருகமாகி, அதன் சுழற்சி வட்டத்தில் ஓடி, மீண்டும் மிகவும் ஈன நிலையான புழு, பூச்சியாகி, அவ்வினத்தின் சுவாச

நிலையில் மீண்டும் பலகோடி ஆண்டுகளுக்குப் பிறகுதான் மனிதனாக வரக்கூடிய தன்மை ஒரு சாராருக்கும், மிருக நிலையிலிருந்து அதன் சுவாச குணத்தில் மனிதனாகும் சில அபூர்வ சக்திகளில் மனிதனாகும் வழித்தொடரும் சிலருக்கு உண்டு.

இதற்கெல்லாம் அப்பாற்பட்ட சக்தியான புதிய உயிரணுவே அத்தாயின் கருவிற்குத் தோன்றக் கூடிய வாய்ப்பு நிலையும் பல உயிராத்மாக்களுக்கு வந்து வாய்க்கின்றன. இந்நிலை பெறுவதென்பது பலகோடியில் ஒன்றாகத்தான் இருக்குமேயன்றி எல்லா உயிரணுக்களும் இப்படி வளர்வதில்லை.

மனிதனாய் உள்ள காலங்களில் ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு ஊர், நாடு, தேசம் என்ற நிலையிலும், அங்குள்ள மனிதர்களின் எண்ண வளர்ச்சியிலும், உடல், உருவம் அனைத்திலுமே அங்குள்ள பூமியின் ஈர்ப்பின் சுவாசத்தினால் மாறுகொள்ளுகின்றனர். ஒரு சாரார் பிறந்து, வளர்ந்து தன் ஜீவித வாழ்நாள் எல்லாம் கிடைக்கப்பெற்று அதே சுழற்சியில் மடிகின்றனர். இன்னும் சில சாரார் தன் ஜீவிதத்துடன் அறிவாற்றலின் வளர்ச்சி மேம்பாட்டில் பலவற்றை அறிய எண்ணி வாழ்கின்றனர்.

இன்னும் சில சாரார் தன் சக்தியின் அறிவைக்கொண்டு புதிய ஆற்றல் படைப்புகளை ஆராய்ந்து செயலாக்கிக் காட்டுகின்றனர். இப்படி மனித ஆத்மாக்களின் எண்ணமே அதன் எடுக்கும் வளர்ச்சியில் மேன்மைகொண்டு, அம் மேன்மையின் சக்தியை ஈர்க்கும் பக்குவத்தில் செலுத்தினால் தான், மனிதனின் உடலிலுள்ள உயர்காந்த அலையின் சக்தியான ஜீவ உயிர் உள்ளதினால் நாம் எந்த சக்தியை ஈர்த்து எடுக்கின்றோமோ அதன் பலனை நம் உயிராத்மா ஈர்க்கக்கூடிய காந்த மின் அலை கொண்ட உடலப்பா மனிதனின் ஜீவ உடல்.

விஞ்ஞானத்திற்கு, செயலாக்க எப்படி காந்த மின் அலையுடன் உலோகங்களின் சக்தி அமிலத்தைப் பூசி அதிலிருந்து சூரியனின் ஒளி அலைகளில் வரும் மின் அலைகளை தன் ஆராய்ச்சிக்குகந்த நிலைக்கும், தன் செயலாக்கும் விஞ்ஞானக் கருவிகளின் நுட்ப வேலைகளுக்கும் எடுத்து இன்றைய விஞ்ஞான மனிதன் சூரியனின் ஒளி அலையில் உள்ள சக்தி அலைகளைப் பிரித்தெடுத்து அதன் தொடர் அலையிலிருந்து பல விஞ்ஞான சாதனைகள் புரிகின்றான்.

அதே மின் அலையுடன் காந்த சக்தியின் ஈர்ப்பின் ஜீவ உயிராத்மாவான உடலைக் கொண்ட நாம் நம் எண்ண அலையை எதனெதன்பால் செலுத்தி அதீத ஈர்ப்பின் எண்ணத்தை நம்

உயிராத்மா ஈர்க்கும் வழித் தொடர் பெற்றால், விஞ்ஞான சாதனை யில் கண்டு மகிழும் அனைத்து சக்தியும் நம் உயிராத்மாவுக்குண்டு. இதன் வழித்தொடரில் தான் சித்து நிலையும், சப்த ரிஷியின் நிலை யும் ஏற்பட்டதேயன்றி இன்றையக் காலத்தில் பிரித்து இருக்கும் பக்தி முறையின் நெறிப்பாட்டிலல்ல.

மனிதனையும், தெய்வத்தையும் வேறுபடுத்திக் காட்டி மனி தனின் எண்ணத்தையே குன்றச் செய்துவிட்டனர், தெய்வத்தின் பக்தி பூண்ட அருள் நெறித் தொண்டர்கள் என்பவர்கள்.

**18–7–10**

நம் எண்ணம் ஜெப முறைகொண்டு ஞானத்தின் ஈர்ப்பு நிலைக்கு வழிபெறும் காலங்களில் குழந்தைப் பிராயத்தில், குழந்தையின் உடல் உறுப்பில் எப்படி மிருதுத்தன்மையுடன் பிறந்து பிறகு வளர வளர உடல் உறுப்புக்களும், தசைநார்களும் வலுப் பெற்று வளர்கின்றதோ அதைப்போன்று நம் ஆரம்ப தியான வழிபாட்டிற்கு நம் எண்ண நிலையெல்லாம் வளர்ச்சி பெற்று, ஒரு நிலைபெற்று, பக்குவம் எய்தி அதன் ஈர்ப்பின் வழித்தொட ருக்குப் பிறகு, ஒவ்வொரு நிலையும் நாம் பெற்று, நம் எண்ணத்தி னுலேயே நாமெடுக்கும் சுவாசத்தினுல் பல மணங்களை உணரும் பக்குவமும், பல சுவையின் ஈர்ப்பில் உண்ட களிப்பு நிலையும், பல ஒளி அலைகளைக் கண்டுணர்ந்து மகிழும் நிலையும், நம்மின் உருவின் உருவ நிலையைக் காணும் நிலையும், அந்நிலையின் ஈர்ப்பில் பல ஓசைகளை அறியக் கூடிய நிலையும், ஓசையென்பது இவ்வுலகின் சுழற்சி ஓசையான 'ஓம்' என்ற ஒலி ஈர்ப்பின் அலைதனை ஈர்த்துக் கேட்கும் வழித் தொடரின் நிலையும், இதன் வளர்ச்சியில் பல சித்தர்களின் நிலையுடன் தொடர்புகொள்ளும் நிலையும், இப்படி ஒன்றின் வளர்ச்சி கொண்டு ஒன்றின் மேம்பாட்டில் தியானத் தின் ஈர்ப்பு வளர்ச்சி நிலை பெற்றபிறகுதான் சித்தன் நிலையை நாம் அடைய முடியும்.

எப்படி புகைப்படம் எடுப்பவன் ஓர் பிம்பத்தைப் பலவாக மறு பிம்பங்களை எடுத்துத் தருகின்றுன்? ஒரே பிம்பத்தை நிலைக் கண்ணுடியைப் பல கோணத்தில் வைத்து காணும்போது நம் பிம் பத்தைப் பலவாகக் காண்கின்றேம். இதைப் போல் சித்து நிலை பெற்றவர்கள் இவ்வுடல் என்னும் கூட்டை இவ்வுடலில் உள்ள உயிர் அணுவை, ஜீவ உயிரை இவ்வுடலில் இருந்து பிரித்து இவ்வுடலுக்குகந்த பிம்ப உடலின் பிம்பத் தன்மையையும்,

இக்காற்றிலுள்ள அமில சக்தியை அஜ் ஜீவனுடன் கூட்டிக் கொண்டு பல இடத்தில், ஒரே சமயத்தில் செயல்புரிகின்றனர்.

இருந்த நிலையிலிருந்தே ஜீவ உயிரணுவுடன் எம் மண்டலத் திற்கும், எந்த இடங்களுக்கும் நினைத்த மாத்திரத்தில் சென்ற றிந்து வருவதோடு மட்டுமல்லாமல், பல சக்தி அமிலங்களையும் எடுத்து வருகின்றனர். விட்டுச்சென்ற உடல் கூட்டின் அவயவங் களெல்லாம் அஜ் ஜீவ உயிர் இல்லாமலே உடலில் உள்ள பல கோடி உயிர் அணுக்களுக்கும், அவ் உடலில் இருந்த ஜீவ உயிரைப் போன்று அனைத்து உயிரணுக்களும் தாமாகச் சுவாசமெடுத்து இயங்கக் கூடிய சக்தி பெற்று விடுகின்றன.

எல்லா உயிரணுக்களுமே அவ்வுடலின் உயிர் ஜீவனைப் போன்று தானாக இயங்கிக் கொண்டிருக்கும். ஆனால், அவ்வுடல் பிம்பத்திற்குச் செயலாற்றவோ, எண்ணத்தின் ஈர்ப்பின் நிலையோ அஜ் ஜீவ உயிர் வரும்வரை இருக்காது. கூடு விட்டுக் கூடு பாயும் நிலையென்று புரியாமல் உணர்த்துகின்றார்களேயன்றி, உண்மைச் சித்தன் இவ்வுயிர் ஜீவனுக்கு எத்தனை பிம்ப நிழலையும் அவனால் எடுக்க முடியும். அமில குணத்தைச் சேர்ந்த புகைப்படத்தை (நிழற்படம்) நம்புகின்றான் மனிதன். பாதரசத்தின் துணையுடன் நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தை நம்புகின்றான். அதே நிலை நம் கண்ணின் கருமணியிலும் உள்ளது, நீரிலும் உள்ளது தெளிந்த நீரில் நம் பிம்பத்தைக் காண்கின்றோம். அதைப்போன்றுதான் சித்தனுக்கு உடல் விட்டுப் பிரிந்த தன் உயிர் ஜீவனுடன் எந்நிழல் பிம்பத்தையும் இக்காற்றுடன் கலந்துள்ள அமில குணத்திலிருந்து பிரித்தெடுத்து ஒரே இடத்திலிருந்து பல இடங்களுக்கும் செல் கின்றான். இந்நிலை உணர்த்தினால் மனிதன் உடலில் இருந்து உயிரை எப்படிப் பிரித்தெடுப்பது? என்ற வினா எழுப்புவான்.

ஒவ்வொரு மனிதனும் தான் எடுக்கும் சுவாச அலையின் ஈர்ப்பினால் உடலின் அனைத்து அணுக்களும் தன் வசப்பட்டு, ஒவ்வொரு அணுவும் உயிர் ஜீவனின் சக்திகொண்ட நிலை பெற்று, வாழ்க்கையில் எந்த ஒரு நிலையிலும் மற்ற ஈர்ப்பின் நிலைக்கு அடிமைப்படாமல், எவ்வெண்ணமும் தன் எண்ணமாக எண்ணும் முறைபெற்ற தியான வளர்ச்சியுடன் எடுக்கும் சுவாச அலையின் ஈர்ப்பில், ஒவ்வொரு நிலையையும் அறியும் வழித்தொடர் பெற்ற பிறகு, இச்சித்தன் நிலை பெறத்தக்க உயிர் ஜீவனின் எப் பிம்பமும் காணும் நிலையெய்தலாம்.

**21–7–80**

எண்ணவழித்தொடர் தியானம் பெற்று, பலவாக உள்ள நினைவின் ஓட்டத்தை ஒரு நிலைப்படுத்தி, பல நிலைகொண்ட அமில

குணமுடைய எண்ண மனிதன், பலவற்றையும் ஒரு வழிக்கு வரப் பழக்கப்படுத்தி, திசை திருப்பும் ஞான வழி பெற்ருனுல், தான் எடுக்கும் சுவாச ஈர்ப்பினுல் எந்த ஒரு நற்சக்தியின்பால் தன் எண்ணத்தைச் செலுத்தி, அதே நினைவில் சுவாசம் எடுத்து, அதன் வழித்தொடர் நினைவில் அத்தொடரிலுள்ள உண்மையின் வளர்ச்சியை நிச்சயமாகப் பெற முடியும்.

ஞானத்தின் பால் செலுத்தப்படும் இவ் ஈர்ப்பு குண நலம் அமையப்பெறும் வழித்தொடரில் சென்ருல், எந்த ஒரு நுண்ணிய அலைத்தொடரையும் வளர்ச்சி ஞானத்தினுல் பெற முடியும். இந்நுண்ணிய அலைத்தொடரில் இருந்து நம் தேகத்துக்குள்ளுள்ள அனைத்து அணுக்களுடனும், இந் நுண்ணிய ஈர்ப்பு அலையின் சக்தி எடுக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டால், இப்பிம்ப உடலிலிருந்து உயிர் ஜீவ சக்தியைத் தனித்துப் பிரித்துச் சென்று ஒவ்வொரு அமில குணங்களின் சேர்க்கையையும், அதன் வட்டத்தில் இருந்து உயிர் பெறும் ஜீவ நிலையையும் ஒன்றுடன் ஒன்று கலவைப்பட்டு வளரும் நிலையையும், பூமியின் சுழற்சி ஓட்டத்தினுல் விஞ்ஞான சாதனை கொண்டு செயற்கை மின் அலையின் தொடரினுல் இப்பூமியி லுள்ள கனி வளங்களின் நிலை அறியவும், கனி வளத்திலிருந்து கசிந்து உருகி வரும் திரவ நிலைகளும், இப்பூமியின் பூமத்திய ரேகையில் உள்ள உண்மை நிலைகளையும், செயற்கை மின் அலை யிலிருந்து விஞ்ஞானத்தில் கண்டறியும் ஆற்றலைக்காட்டிலும் இஜ் ஜீவ மின் அலையின் சக்தியை வளர்த்துக்கொள்ளும் மனி தனுல் இவ்வுடலில் உயிராத்மாவை எந்த இடத்திற்கும் சென்று பூமியின் மேல் மட்டத்தில் உள்ள நிலைகளை அறிவதைப்போல் இப்பூமியின் உட்கோளங்களில் வளர்ந்து வரும் நிலைகளையும் அறியலாம்,

இப்பூமியின் காற்று மண்டலத்தையும், காற்று மண்டலத் திற்கு அப்பால் பால்வெளி மண்டலத்தையும் இந்நுண்ணிய அலை யின் சக்தியை வளர்த்துக் கொண்ட மனிதனுல் எந்த நிலை களையும் காண முடியும். விட்டுச்சென்ற உடலில் அனைத்து உயிரணுக்களும் இந் நுண்ணிய மின் அலையின் சக்தியின் ஈர்ப்புடன் உடலில் உள்ள தசைகளும் மற்ற எல்லா உறுப்புகளும் அதே நிலையில் உண்டு கழிக்க வேண்டும் என்ற நிலையில்லாமல், சுவாச மெடுத்து, சுவாசம் விட்டு இருக்கக் கூடிய நிலையுமில்லாமல், இவ் வுடல் பிம்பம் எந்த வகை பின்னமும் படாமல் அதே நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும்.

மந்திரமும், மாயமும், தெய்வீகப் பெரும் சக்தி என்றும், சாதாரண மனிதனுல் முடியாத நிலையென்றும், உயர் சக்தியை

மனிதன் எடுக்க முடியாமல் எட்டாத நிலைப்படுத்தி மறைக்கப் பட்டுவிட்ட நிலை இன்று. செயற்கையின் மின் அலையை விஞ்ஞானப்படுத்திச் செயலாக்கும் மனிதனுல், தன் அலையின் தொடர்பில் இருந்தே அச்சூரியனின் ஒளி அலையின் ஈர்ப்பினுல் தன் உயிராத்மாவே எந்த ஒரு நுண்ணிய அலையின் வளர்ச்சியை யும் ஜீவ உடல்கொண்டு மனிதனுல்தான் எடுக்க முடியும். ஜீவ உடலுடன் மனிதன் உள்ள நிலையில் இவ்வுடலில் பலகோடி ஜீவ உடலுடன் மனிதன் உள்ள நிலையில் பல கோடி கோடி உயிரணுக்கள் ஜீவ சக்தியுடன் இயங்கும்பொழுது ஒரு உயிராத் மாவின் நிலையுடன் நிறைந்துள்ள பலகோடி உயிரணுக்களும் இவ் அலையின் ஈர்ப்பை எடுக்கும் நிலையினுல் மனிதனின் சக்தித் திறன் பலவாக உயரும். ஆனுல் உடலை விட்டுச் சென்ற ஆவி ஆத்மாக்களுக்கு ஜீவ அணுக்களின் ஜீவ சக்தி இல்லாததினுல் மனித ஞானத்தில் செயல்படும் திறனில்லாமல் ஆவி உலக வாழ்க்கை இருந்து விடுகின்றது.

ஜீவ சக்தியில் ஈர்க்கப்படும் ஞானங்களும், இவ் உயர் மின் அலையின் தொடர்பும் ஜீவனற்ற ஆவி ஆத்மாக்களுக்கு முடி யாதப்பா. சூரியனின் மின் அலையின் சுவாசத்தை ஒரு நொடிப் பொழுதும் விடாமல் எடுத்து வாழும் நம் வாழ்க்கை அலையில் நாம் விரையப்படுத்தித்தான் உண்டு, கழித்து, உறங்கி, நமக்குக் கிடைத்த பல காலமாய் நாம் வளர்த்து, வழிவந்த இஜ்ஜீவ உடல் வாழ்க்கையில் பெற்ற உன்னத சக்தியை அறியாமல் வாழ்கின்றேம்.

**22–7–80**

கடவுள் எல்லாவற்றிலும் உள்ளார்; எல்லாமாகவும் உள் ளார். நல்ல சக்தி மட்டும் கடவுளல்ல. தீயவையும் கடவுளின் படைப்புத்தான். கடவுளின் பிம்பம் நன்மையிலும் தீமையிலும் கலந்தே உள்ளது. நற்குணம் கொண்ட மனிதனும் கடவுளுக்குச் சொந்தம். தீய குணத்தில் உள்ளவனும் கடவுளின் படைப்புத் தான்.

இதில் உள்ள உண்மை நிலையை உணர்ந்தால் தெய்வத்தின் சக்தியை மனித ஆத்மாக்கள் உணர்ந்து நடக்க ஏதுவாகும். எல்லாப் படைப்பும் தெய்வத்தின் படைப்பே. படைக்கப்பட்டவன் படைப்பின் பொருள் கண்டு மகிழ்ந்து தன் பொருளான தான் படைத்ததன் பலன் தான், தெய்வ சக்தியின் அருள் வளர்ச்சியும், நற்குண வளர்ச்சியும். சப்த ரிஷிகளின் நிலைபெற்றோரின் வளர்ச்சி யினுல் தன் படைப்பின் பலனைப்பெற்றுன்.

மனிதன் உருவாக்கும் செயல்களில் இருந்து எப்படித் தன் எண்ணத்திற்குகந்த நிலைபெற்றவுடன் மகிழ்ச்சி கொள்கின்ருனே அதைப்போன்ற மகிழ்ச்சிதான் தெய்வ சக்தியில் வளரும் நற்குண வளர்ச்சியும். நன்மை, தீமை கொண்டு தெய்வப்படைப்பு இல்லை. எல்லாமே தெய்வப்படைப்புத்தான். பல சுவையும் இயற்கையில் கலந்துதான் வளர்கின்றது. கசப்பின் சுவை இல்லாவிட்டால் இனிப்பை அறிய முடியாது. மனித வாழ்க்கையில் ஏற்படும் சோதனை நாட்களைக் கசப்பாக எண்ணி அக்கசப்பின் நிலையில் விரக்தி பூணும் மனிதனின் சுவாச அலையின் தொடரினுல் அதே சுழற்சியிலிருந்து சலிப்பின் உந்தலினுல், பல மனித ஆத்மாக்கள் தன் நிலை உணராமல், இக் கசப்பான நிலையிலிருந்து மீள முடியாத சிக்கலில் சிக்கி, அதன் உணர்வு அலையின் உந்தலில் ஏற்படும் ஆவேச எண்ண நிலையிலிருந்து மீளாத மனிதன்தான் தீய வழிகளுக்கும் தீய செயலின் நிலைக்கும் தன் நிலை உணராமல் சென்றுவிடுகின்ருன்.

தனக்கேற்படும் இன்னலிலிருந்து கசப்பான வாழ்க்கையை இனிய செயலாக்குவது இம் மனிதனின் எண்ணம்தான் என்று உணர்ந்து, கசப்பு துவர்ப்பாக்கி, துவர்ப்பு இனிமையாகும் வாழ்க்கை செயலுக்கு வரும் மனிதன், அதே சுழற்சி ஓட்டத்தில் மீண்டும் ஏற்படும் சோதனையான, கசப்பான நிலை தன் வாழ்க்கையில் ஏற்பட்டாலும் அதனை இனிமைப்படுத்திடும் வழித்தொடர் அறிய தன் எண்ணத்தை அவ் ஈர்ப்பின் நிலையுடன் தன் உணர்வு பெறுகின்ருன்.

இனிமையிலிருந்து வளர்வதல்ல நல் உணர்வு எதுவுமே. சுவையான மாங்கனி பிஞ்சில் கசப்பாகவும், பிறகு வளர வளர துவர்ப்பு, புளிப்புமாகி, பிறகுதான் முற்றி, பழுத்து, இனிப்பாகின்றது. உள்ளிருக்கும் துவர்ப்பான அக்கொட்டையின் நிலையுடன், ஆரம்ப ஈர்ப்பு குணத்திலுள்ள அமிலப்படிவம் கொட்டையுடன் உள்ளபொழுதும், அத்துவர்ப்பான கொட்டையின் மேல் சுவையான மாங்கனி எப்படி வளர்கின்றது?

அதைப்போன்று கசப்பான வாழ்நாட்களை இனிமையாக்கப் பழகிடுங்கள். கசப்பிலிருந்துதான் இனிமை காண முடியும். பல சித்தர்களும், சப்த ரிஷிகளும் மற்றும் இன்றைய காலங்களில் உள்ள நீங்கள் அறிந்த வளர்ச்சி கொண்ட எந்த மேதைகளையும், அவர்களின் வாழ்க்கையின் ஆரம்ப காலங்களில் நடந்த உண்மை நிகழ்ச்சியின் உண்மையை ஆராய்ந்தோமானுல் இதன் நிலை புரியும்.

அரசனுய் இருந்தாலும், மாமேதையாய் இருந்தாலும் எந்த ஆண்டவனும் அவர்களுக்கு அந்த சக்தி தரவில்லை. அவரவர்கள் எடுக்கும் எண்ண சுவாசத்தினுல்தான், அவர்கள் அடையும் பெரு நிலை எல்லாம். இறைவனின் படைப்பு ஒன்றே; இயற்கையின் சக்தியும் அதுவே. வளர்ந்த செயலில்தான் அதனதன் அடிப் படைக் குணமெல்லாம் உள்ளன. இக்குணத்தின் வழி பெற்றது தான் ஆண்டவன் கண்ட பொருள் மகசூலான சந்திரனும், சூரியனும், நம் பூமியும், நாமும் எல்லாம். நன்மை தீமை கொண்டு படைக்காத ஆண்டவன் தன் படைப்பின் பலனுன நல்லதுவும், தீயதுவும் சுழன்றுள்ள நிலையில் தன் வளர்ச்சிக்குத் துணையாக நல்லவற்றைக் காண்கின்ருன்.

இப்படியிருக்க ஆண்டவன் படைப்பை எப்படிப் பிரித்துக் காண்பது?

**25–7–80**

காட்சி: உணர்ச்சி மிகுந்த மனிதன் ஒருவன் உணர்ச்சி குறைந்த எருமையில் அமர்ந்து அதனை அடித்து, துன்புறுத்தி வண்டியில் கட்டி பாருங்கற்களை ஏற்றிச் செல்லுகின்ருன் அவ் வண்டியில்.

விளக்கம்: மனிதன் தன் செயலுக்காகப் பலவற்றையும், மிருகங்களையும், மற்றச் செயலுக்குகந்த பொருள்களையும், உலோகங்களையும் தன் ஜீவித வாழ்நாட்களில் சுகம் காணச் செயல்படுத்துகின்ருன். உணர்ச்சி குறைந்த எருமை இவனைக் காட்டிலும் இவனுக்கு உபயோகமாக இருக்கின்றது. அதனுல் இவன் பலன் காண்கின்ருன். உணர்ச்சி குறைந்த எருமைதான் உணர்ச்சி மிகுந்த மனிதனுக்குப் பயன்படுகின்றது.

இதைப்போன்று மனிதன் இப்பூமியிலுள்ள பிற இன வஸ்துக்களையும், உயிர் இனங்களையும், தனக்கு உகந்ததாகப் பயன் படுத்தி வாழுகின்ருன். உலக சக்தியையே மனிதனுக்குச் சொந்த மாக்கி வாழுகின்ருன், இன்றைய மனிதன் தன் அறிவின் விஞ்ஞான வளர்ச்சியினுல். ஆனுல் தன்னை உணர்ந்து, தனக்குள்ளுள்ள உண்மை சக்தியை உணராமல் வாழுகின்ருனப்பா ஒவ்வொரு மனிதனும் இக்கலியின் கடைசிக் காலத்தில்.

காட்சி: ஒரு மனிதன் ஆற்றங்கரையிலமர்ந்து, இரை வைத்துத் தூண்டில் போட்டு, பெரிய மீனுகப் பிடித்துச் செல் கின்ருன்.

விளக்கம்: இன்றைய உலக நிலையும் இதன் அடிப்படை குணத்தில் தான் மனித ஆத்மாக்களின் வளர்ச்சி எண்ண வாழ்க்கை நடந்து வருகிறது. தன் சாதகம் காண மீனுக்கு உணவு வைத்து அதனைப் பிடித்து, தான் உண்ணுகின்றான்.

அதைப்போன்று தன் வசதியான சோம்பல் மிக்க வாழ்க்கையின் சாதனைக்கு, சூரியனிலிருந்து பூமி ஈர்க்கும் மின் அலையையும், பூமி ஈர்த்து வளர்த்த கனிவளங்களையும், அறிவின் மேம்பட்ட கலி மனிதன் உண்டுவிடுகின்றான். இதுநாள் வரை வெளிப் படுத்தாத சில நிலைகளையும் உணர்த்துகின்றேன்.

எரிமலையையும், பனிமலையையும், பாலைவனங்களையும், ஏன் ஆழ்கடலையும் கண்டு ஆராய்ந்து வரும் மனிதன், நம் பூமியில் மூன்று இடங்களில் இதுவரை மனிதன் சென்று ஆராயாத அடர்ந்த காடுகள் உள்ள இடங்களில் அதிகமாக காந்த ஈர்ப்புக் கிணறுகள் உள்ளனவே. இவர்கள் ஆராய்ச்சியில் ஏன் அதன் நிலைக்குச் செல்லவில்லை? பூமத்திய ரேகையின் மையப்பகுதியில் இக்காந்த ஈர்ப்பு ஆழ்கிணறுகள் நிறைந்துள்ளன. கடல் மட்டத்தின் கீழ் இவ் ஈர்ப்பு மிக அதிகப்படியாக உள்ளன. மனிதன் மட்டுமல்ல இயற்கைக்கு மாறி எந்த நிலைகளும் அங்கு சென்றால் அதன் ஈர்ப்பில் அப்படியே இழுத்துக் கொள்ளும்.

பூமியின் ஈர்ப்பு காந்த அலைக்கு சக்தி தருவது பூமத்திய ரேகையின் மையப்பகுதிதான். ஆராயும் நிலைக்குச் செல்வதாக இன்றைய விஞ்ஞானம் உள்ளது. இவர்கள் செலுத்திச் செயல்படும் எக்கருவியையும் தன் ஈர்ப்புடன் அவை இழுத்துக் கொள்ளும். படர்ந்து மைல் கணக்கில் இல்லை காந்த ஈர்ப்பு ஆழ் கிணறுகள். இப்பூமியில் குறிப்பிட்ட மூன்று இடங்களில் ஐந்து, ஆறு அடி விஸ்தீரண சுற்றளவு கொண்டதாய் அது உள்ளது.

இவர்கள் ஆராய்ச்சியில் பிடிபடுவதும் கடினம். கடல் மட்டத்தில் ஒன்றும், மலை மேட்டில் ஒன்றும், பாலைவனத்தில் ஒன்றும் உள்ளது. பூமத்திய ரேகையின் மையப்பகுதியிலும், கர்நாடக மாநிலத்தில் மலைப்பிரதேசத்தில் ஒன்றும், சஹாரா பாலைவன பிரதேசத்தில் ஒன்றும் உள்ளது. அதன் பக்கங்களில் உள்ள இடங்களிலும், அதன் ஈர்ப்பின் செயல்கள் அந்தந்த இடங்களில் படர்ந்துள்ளன. இதனை உணர்த்துவதின் நிலை என்ன? என்ற வினா எழும்பலாம் உங்களுக்கு.

**26–7–80**

நம் பூமியின் ஈர்ப்பிற்கு சக்தி தரும் இக்காந்த மின் அலையின் வளர்ச்சிக்கு ஊற்றாக அமையப்பெற்றதுதான் இக்காந்த மின்

கிணறுகள். இக் காந்த மின் கிணறுகளின் ஈர்ப்பு அதிகப்பட்டுப் பட்டு வளர்ச்சிபடுமேயானல் நம் பூமிக்கு, பூமியின் ஈர்ப்பு சக்தியும் அதிகப்படும். அதிகப்படியான ஜீவ இன வளர்ச்சிக்குகந்த சத்து அமில நிலையைத் தரவல்ல தாவரங்களின் இயற்கை வளம் பெருகி இன்றைப்படி நம் பூமியைக் காட்டிலும் வியாழனும், சூரியனும் வளர்ந்து ஈர்ப்பில் நம் பூமியைவிட அதிக ஈர்ப்புக் குணமுடையதாக வளர்ந்து கொண்டே மற்ற எல்லா மண்டலங்களுக்கும் அதன் சக்தி குணத்தைத் தருகின்றதோ, அதைப்போன்று வளர்ந்து பெருகும் நிலை நம் பூமிக்குக் குறைவுபட்டுள்ளது.

நம் பூமியும் கன விகிதத்தில் வளர்ந்துதான் வருகிறதேயன்றி ஈர்ப்பின் சக்தியை வளர்க்க முடியாத நிலையை, இன்றைய கலி மனிதன் தன் விஞ்ஞான செயற்கை மின் அலை காண, சூரியனின் சக்தி அலையை நம் பூமி ஈர்த்து பூமியின் இயற்கை வளர்ச்சியைத் தடைப்படுத்தி, செயற்கை மின்சாரம் கண்டுவிட்டான்.

பூமிக்கு பூமியின் ஈர்ப்பு காந்த சக்திக்குக் கிடைக்க வேண்டிய ஆகார நிலையை அது எடுத்து உண்டு வளர்ந்து பலன் காணும் முன் இன்றைய கலி அறிவு மனிதனுல் துரித நிலையில் மின்சாரம் கண்டு பூமியின் வளர்ச்சிக்கும் வரும் கால உயிரினங்களின் வளர்ச்சி நிலைக்கும் மாற்றம் தர வல்லவன் இன்றைய கலி மனிதன்தான்.

இக்கலி மனிதனுல் அவன் அறிவாற்றல் என்ற மேம்பாட்டில் கண்ட செயற்கையினுல் பல கோடி உயிரணுக்களின் சக்தி கலவையாய் கலந்து வாழ்ந்து, தான் வாழ்வதோடு மட்டுமல்லாமல் வளர்ந்துகொண்டே சுழன்றோடும் இப்பூமியின், இக்கலியின் அறிவு நிலைகொண்ட மனிதனுல் தன் செயலுக்காக மின் அலையைப் பாழ்படுத்தியதனுல் பூமியின் இயற்கையையே பாழ்படுத்தி விட்டான்.

இதன் நிலையை மாற்றி நம் பூமி வளரத்தான் இக்கலி மாறி கல்கியும் வருவதற்குப் பலகோடி சித்தர்களும், சப்த ரிஷிகளும் செயல்கொள்கின்றனர். இக்கலி மாறும் தருணத்திற்குள் இப்பூமியின் அமில குணத்துடன் ஒன்றி வாழ்ந்த மனித இன குண சக்தி இருந்தால்தான், மீண்டும் மீண்டும் மண்டல சக்திகளும், எந்த ஒரு புதிய படைப்பு நிலையும், இவ்வெண்ண சக்தியின் வளர்ச்சி நிலை கொண்ட அமில குண ஜீவன் மனிதனிலிருந்துதான் இந்நிலை வளர முடியும் என்ற உண்மையில் சப்த ரிஷிகளும், அவர்களின் ஆசி பெற்ற சித்தர்களும் செயல் புரிகின்றனரப்பா. (காட்சி) கூரையமைக்கத் தூணே, சுவரோ தேவை. அதுபோல்

இம்மனித ஆத்மாக்களின் எண்ண வளர்ச்சியின் மேம்பாட்டில் தான் மண்டல வளர்ச்சியுண்டு, மற்றெல்லா வளர்ச்சியும் உண்டு.

இதன் நிலையையுணர்ந்து ஒவ்வொரு மனித ஆத்மாவும் இஜ் ஜீவ உடல்பிம்ப நிலையிலிருந்து தன் உயிரணுவான காந்த உயிர் சக்தியை நல்ல நிலையில் எடுக்கும் எண்ணம் கொண்டு, இவ்வுடலில் உள்ள அனைத்து உயிரணுக்களையும் வீரிய சக்தி பெறும் வழித் தொடர்படுத்தி, தானெடுக்கும் ஜெப நிலையால் தன் உடலிலுள்ள அனைத்து உயிரணுக்களும் ஒளிபெற்றுத் தானாக இவ் ஓர் உயிரணு ஆத்மாவுடன் பலகோடி அணுக்களும் ஒன்றுபட்டுச் செயல்படு மானால், அதன் சக்தி ஜெபத்தினால் எடுக்கும் நுண் அலையின் தொடர்பைக் கொண்டு பலவாகப் படர்ந்துள்ள சப்த ரிஷிகளின் ஒளி அலையைப் பெற்று, அதன் நிலையின் தொடர்பினால் பல செயல்களை இவ்வுயிராத்மாவினால் வளர்க்கமுடியும்.

வாழ்க்கையின் பொருள் என்பது வாழும் காலங்களில் பிறர் போற்றி, மடிந்த பிறகு புகழாஞ்சலி பெறுவதல்ல. இம்மனித பிம்ப வாழ்க்கையில் எடுக்கும் ஒளி அலையின் நிலையின் வளர்ச்சி தான் எல்லாவித இயற்கை குண வளர்ச்சி மண்டலங்களும், சக்தியும் என்பதனையுணர்ந்து இவ்வாழும் குறுகிய கால வருடத் தில் சந்தர்ப்பத்தைக் குறுகிய நிலை புகழுடன் மங்கவிடாமல் பேரண்டப் பெரு நிலையென்ற உயர்ந்த அண்டமாகும் சக்தி நிலை பெறும் பாடநிலைதான் இச் ''சத்தியத்தின் சக்தி நிலை'' சங்கத்திலிருந்து வெளிப்படுத்தும் உண்மை நிலை.

**28–7–80**

இன்னும் மனிதன் விதை முதலா? செடி முதலா? கோழியி லிருந்து முட்டை வந்ததா? முட்டையிலிருந்து கோழி வந்ததா? இப்படி தர்க்க வாதத்தினாலும், புராணங்களில் படைத்த காவி யங்களை அதன் மையக்கருவைப் பிரித்து உணரும் ஆற்றலற்று வாழ் கின்றனர். அறிவாற்றலும், செயல் அவயவங்களும் வளர்த்துக் கொண்ட மனிதன், தன் வளர்ச்சியை உணராமலும், வளர வேண்டுமென்ற நிலையற்றும், இயற்கையின் உண்மை வளரும் வளர்ச்சியை அறியாமலும் வாழ்கின்றனர்.

குணத்திலும் பல நிலைகளுண்டு, மனத்திலும் பல நிலை களுண்டு, ஒலியிலும் பல நிலைகளுண்டு. இதன் அடிப்படை வளர்ச்சி குண அமிலங்கள் பலகோடி கோடியுண்டு. நம் பூமியின் ஜீவ சக்தி காற்றும், ஒலியும், நீரும் தான். இஜ் ஜீவ சக்தியின் நிலை இப்பூமியைச் சுற்றி, காற்று மண்டலத்திற்கப்பால் இல்லை

யப்பா. இப்பூமிக்கு ஜீவன் பூமியேதான் எடுத்துக் கொள் கின்றது.

பால்வெளி மண்டலத்திற்கு அந்தந்த இடங்களிலுள்ள அமில குணங்களின் சுழற்சி கொண்ட, சீதோஷ்ண நிலை படர்ந்துள்ளது. நம் பூமியின் காற்று மண்டலத்திற்கப்பால் உள்ள பால்வெளி மண்டலத்திற்குச் சென்றுவிட்டால், நம் பூமியில் உள்ளதைப் போன்ற ஜீவ சக்தி மாறுகொள்ளுகின்றது. ஜீவ சக்தியென்பது பூமியின் சுழற்சியில் பூமி ஈர்த்து வெளிக்கக்கும் ஆவியினுல் ஒளி, ஒலி, நீர், எப்படி இக்காற்று மண்டலத்தின் சுழற்சியில் பூமி யின் சுழன்று ஓடும் ஓட்டத்தினுல் இஜ் ஜீவ சக்தி அமில குணம் கொண்டு ஓடுகின்றது.

பூமிக்குச் சொந்தமானது தான் பூமியைச் சுற்றிக்கொண் டுள்ள இப்பத்துப் பதினைந்து மைல் நிலையிலுள்ள காற்று மண்டலம்.

முந்தைய வினுப்போன்று, சக்தி பெரிதா? சிவன் பெரிதா? என்ற வினுவும் மனித ஆத்மாக்கள் உணராத முறையில், சில சித்தர்கள் தானறிந்ததை மறைமுகமாக்கி சரிபாதி சிவனும், சரிபாதி சக்தியுமென்று உணர்ந்தெடுத்த மனிதன் ஆண்டவனின் ரூபத்திற்கும் மனித பிம்ப உருவைக் கல்லில் வடித்துக் காட்டி விட்டான்.

எந்த ஒரு அமில பிம்பமும் அமிலம் திடமாகி அந்தத் திடத் தில் எடுக்கும் ஒளியென்ற சக்தியினுல் ஜீவன் கொண்டு அதன் சுழற்சியில் அமிலமும் கூடுகின்றது. அமிலத்தின் வளர்ச்சிக் கூட் டினுல் அதன் ஈர்க்கும் சக்தி ஒளி இதன் வளர்ச்சிக்கொப்ப அதிகப் படியாக, வளர்ச்சி நிலைக்கொத்த நிலையுடன் வருகின்றது.

நம் பூமியும் மற்ற எல்லா மண்டலங்களும் ஆரம்ப ஜீவன் சிவசக்தி பிம்பத்தில் வளர்ச்சி கொண்டதுதான். அமிலமான திடப் பொருள்தான் சிவனுகவும் அமிலமுடன் ஈர்க்கப்பட்ட காந்த ஒளி நிலைதான் சக்தியாகவும் ஆனதப்பா. அமில பிம்ப சிவன் ஈர்க்கா விட்டால் சக்தியின் காந்த அலை பாய்ந்து அக்காந்த அலைக்கும் சக்தியிருக்காது. அதே போன்று அமில குண திட பிம்ப சிவன், அச்சக்தி ஒளி பாயாவிட்டால் ஜீவன் பெற முடியாது. இதன் வளர்ச்சி நிலைதான் எல்லாமில் எல்லாமாய், உணர்ந்து, வளர்ந்து வளர்ச்சி கொண்ட அண்ட சராசரங்களும், அனைத்து ஜீவ சக்திகளும்.

இதில் சக்தி பெரிதா? சிவன் பெரிதா? சக்தியில்லாவிட்டால் சிவனுமில்லை, சிவன் இல்லாவிட்டால் சக்தியுமில்லை. பிம்பம்

தான் சிவன், பிம்பத்தின் ஜீவன்தான் சக்தி. சக்திக்கும், சிவனுக்கும் அப்பாற்பட்ட ஆதி சக்தியின் நிலையுணர்ந்து வளர வேண்டுமப்பா அனைத்துமே. சிவன் ஆணுமல்ல, சக்தி பெண்ணுமல்ல. ஒவ்வொரு ஜீவனிலும் சக்தியும் சிவனும் இருந்தால்தான் அஜ் ஜீவன் வாழ முடியும்.

சித்தர்களினுல் மறைமுகமாக மறைத்து வெளிப்படுத்திய நிலைதான் சிவ சக்தி உருவ நிலை.

விதை முதலில் வந்ததா? செடி முதலில் வந்ததா? என்ற வினுவிற்கு அறிவாற்றலின் மனிதன் தன் எண்ணத்தைச் செயல்படுத்தினுல் ஆரம்ப வளர்ச்சியான செடியிலிருந்து விதையென்ற உண்மையை அறியலாம்.

**29–7–81**

அமில குணமான பிம்ப சிவனுக்கு, அதன் வளர்ச்சிக்கு ஜீவ குணமான காந்த ஒளி சக்தி ஈர்ப்பிற்கு வந்த பிறகு, அவ் அமில குணத்திற்கே ஜீவனும் அதன் வளர்ச்சி நிலையும் ஏற்படுகிறது. அமில பிம்ப திடப் பொருள் இல்லாவிட்டால் காந்த ஒளி சக்திக்கு சக்தி இல்லை. அச்சக்தி நிலை படர்ந்து, பிம்ப அமிலம் ஜீவன் பெருவிட்டால், இதன் ஜீவ வளர்ச்சியும் இல்லை.

இதன் குண அடிப்படைதான் நாமும். எல்லாமில் எல்லாமுமே, இதன் வழித்தொடர்கொண்டு, வளர்ந்து வாழும் நாம், நமக்கு இம்மனித உடல் பெறக்கூடிய ஆற்றல் நிலை பெற எத்தனை கோடி ஆண்டுகள் ஆகின்றன என்ற உண்மையை உணராமலும், உயர்வின் வழிக்குச் செல்லாமலும், நம்மை நாமே அழித்து வாழ்கின்ருேம்.

மாங்கனி அதன் முற்றிய நிலைபெற்றவுடன் அதன் வண்ணமும், வண்ணத்திற்கேற்ப மணமும் உள்ள கனியின் சுவை இனிமை எப்படி உள்ளது? குறுகிய கால வளர்ச்சி முற்றலிலேயே முற்றிய, நன்கு பழுத்த மாங்கனியின் வண்ணத்தையும் மணத்தையும் கண்டவுடன், சுவை நிறைந்த கனியென்று எண்ணி உண்ணத் துடிக்கின்ருேம்.

இதன் நிலைபோன்று மனிதனின் வளர்ச்சி நிலை இருந்திட்டால், மனிதனின் உடல் பிம்ப அழகும், எண்ண மணமும் இனிமையும் குண தேவனின் சக்தியாய்ச் சுடர்விடும் அப்பா. பிஞ்சில் மாங்கனி துவர்ப்பு, புளிப்பு இப்படித்தான் உள்ளது. அதைப்போன்று

ஆரம்ப வளர்ச்சியில் அறியா மனிதன், தன் அறிவாற்றலே ஞானத்தின் மேம்பாட்டில் முற்றி, பழுத்து, இனிமை கெள்ள வேண்டும். அமில ஈர்ப்பின் வழித்தொடரினுல் நம் பூமியில் எண்ணற்ற குண சக்திகள் நிறைந்துள்ளன. பல வண்ணங்களே யும், மணங்களேயும், சுவைகளேயும் பூமியின் ஆரம்ப காலத்தி லேயே வளர்ச்சி கொண்டு வழி வரவில்லே. ஒவ்வொன்றின் வழித்தொடர் அமில குணத்தின் ஈர்ப்பு சக்தியின் சிவசக்தியென்ற சிங்காரக் கலவை ஈர்ப்பில்தான், இன்று பூமியில் நிறைந்துள்ள இயற்கை வண்ணமும், சுவையும், மணமும் உள்ளன.

வண்ணம் எப்படி புஷ்பங்களுக்கு வந்தது? சுவை எப்படி கனிக்கு வந்தது? படர்ந்த அமில பிம்பம் அதன் ஈர்ப்பில் காந்த ஒளி சக்தி பெற்றவுடன் சில நிலேகளில் வண்ணத்துப்பூச்சி யென்ற, பல வண்ணங்கள் நிறைந்த அப்பூச்சி ஜீவன் பெறு கிறது. இப்பொழுது உணர்த்துவது பூமி தாவர வளர்ச்சி ஏற் பட்ட நாட்களில் வந்ததன் நிலே. இவ்வண்ணத்துப் பூச்சி சில தாவரங்களின் மேல் தன் அமிலத்தை, அமிலம் என்பது தன் கழிவின் முட்டையை இட்டதினுல் அதிலிருந்து அதன் அமில சுவாசம் படர்ந்த பிறகு வண்ணப் புஷ்பங்கள் கிடைத்தன.

இவ்வண்ணத்தின் பூவிலிருந்துதான் தேனீக்கள் ஜீவன் கொண்டன. தன் ஜீவனுக்குகந்த ஆகாரமாய் அப்பூவிலிருந்தே தன் ஆகாரத்தை உறிஞ்சியெடுத்து தேனீக்கள் வளர்ந்தன. தேனீக்கள் இல்லாவிட்டால் சுவைநிறைந்த கனி எதுவுமேயில்லே. இப்படி உலக இயற்கையே ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டு, ஒன்றெடுத்த அமிலம் ஜீவன் கொண்டு, அதன் ஜீவன் மாற்றம் கொண்டு, பிறிதொரு ஜீவனும் வளர்ந்து நம் பூமி ஓடிக்கொண் டுள்ளது.

இவ்வமிலத்தின் நிலேயிலிருந்துதான் எல்லா சக்திகளும் ஜீவன் பெறுகின்றன. ஆயிரம் காலங்கள் ஒரு நிலேகொண்ட நுண்ணிய ஈர்ப்பு அலேயின் சக்தியினுல் நாகம் மாணிக்கக் கல்லேத் தன்னுள் வளர்த்துக்கொள்கிறது. மாணிக்கக் கல்லே வளர்த்துக் கொள்ள நாகம் எப்படி வழிபெற்றது? என்ற வினுவும் எழும்ப லாம். மற்ற ஜீவன்களேக் காட்டிலும் நாகத்தின் கண் ஒளி ஈர்ப்பு நுண்ணிய மின் அலேயை ஈர்க்கவல்ல செயல் கொண்டது. நாகம் ஒரு பொருளேப் பார்த்தால் அப்பொருளின் பிம்பம் அதன் கண்ணில் பல மணி நேரத்திற்கு புகைப்படத்தில் பதிந்துள்ளதைப் போல் பதிந்திருக்கும்.

சிங்கத்தின் நிலேயும் ஏறக்குறைய நாகத்தின் ஈர்ப்பலேக்கு ஒத்தது தான். ஆனுலும் அதன் வளர்ச்சி நிலேயில் நாகத்தைப்

போன்று நுண்ணிய ஈர்ப்பின் பதிப்பு இல்லாமல் சிங்கத்தின் துடிப்பு ஆக்ரோஷ நிலையில் வளர்ச்சி பெறவில்லை. காந்த ஈர்ப்பின் இரசமணியின் அபரிமிதமான ஒளி ஈர்க்கும் கண்கள் சிங்கத்தின் கண்கள். இதனை உணர்த்தும் முறை எதற்கு? என்ற வினா எழும்பலாம்.

நுண்ணிய ஈர்ப்பலையின் சக்தி அமிலங்கள் நிறைந்துள்ள பல பிராணிகள், மிருகங்கள் இருந்தாலும் மனிதனை ஒத்த அறிவாற்றலும், அங்க அவயவங்களும் இந்நிலை பெருததினால், அவற்றின் நிலை புரியாமல் சென்றுவிட்டது. மனிதனுக்குச் செயலாற்றும் திறமை கொண்ட அங்க அவயவங்களும், அறிவின் வளர்ச்சியும் உள்ளபொழுது இந்நுண்ணிய ஈர்ப்பலையை சூரியனின் ஒளி அலையிலிருந்து பலவாக நிறைந்துள்ள இப்பூமியின், அமில குணத்தின் உதவியினால் மனிதன் பல எண்ணத்தில் தன் ஜெபத்தைச் சிதற விடாமல் நுண்ணிய ஈர்ப்பலையைத் தன் எண்ண ஈர்ப்பில் செலுத்தும்பொழுது, அவ்வெண்ண ஈர்ப்பே சுவாசமாகக் காற்றிலுள்ள, தன் எண்ணத்திற்குகந்த ஈர்ப்பு குண நுண்ணிய அமில சக்தியை, நம் உடல் முழுமைக்கும் பரப்பச் செய்கின்றது.

இவ்வெண்ணத்தை ஒரு நிலைப்படுத்துங்கள் என்பதன் பொருள் இதுதான். ஒரு நிலையென்பது ஒன்றின்பால் உயர் ஞான எண்ணத்தைச் செலுத்தி, அவ்வொளி அமில குணத்தை நுண்ணிய ஈர்ப்பாய் நம் சுவாசம் எடுக்கும் வழி நிலை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

## 31–7–80

நம் பூமியில் பல காலங்களாகவும் இன்றைய காலங்களிலும் பலர் பல உண்மை ஆராய்ச்சி நிலையில் பல சாதனைகளை வெளிப்படுத்தித்தான் வந்துள்ளார்கள், வழித்தொடரிலும் வாழ்கின்றனர். மனிதன் பல புதிய புதிய நுண்ணலை ஈர்ப்பால் பல செயல்களைச் செய்கின்றான்; என்றாலும் அம்மனிதன் தன் ஆத்ம உயிர் அணுவிற்கு அவ்வொளியின்பால் செல்வதற்குகந்த வழியாற்றல் பெறவில்லை. பல மேதைகள் உண்டு; ஆனாலும் அம்மேதைகளினால் எதன் அடிப்படை ஆராய்ச்சி ஈர்ப்பில் தன் எண்ண ஞானத்தைச் செலுத்தி வழிபெறுகின்றனரோ அதன் தொடர்ஞானம் ஒன்றின்பால் மட்டும் அவர்களின் ஈர்ப்பில் சுவாசம் உள்ளதினால் அதன் சுழற்சி வட்டத்தில் மட்டும்தான் உடலைவிட்டு ஜீவன் பிரிந்த பிறகும் அதே எண்ண செயலுக்காகப் பிறிதொரு ஜீவ ஆத்மாவுடன் 'தொடர்ச்சிப்படுத்திக்கொண்டும் அல்லது ஜென்

மத்திற்கு வருகிறுர்களேயன்றி தன் ஆத்ம ஜீவ உயிர் அணுவின் வளர்ச்சியை ஒளி அலேயுடன் கலக்கவிடும் நிலே எய்துவதில்லே யப்பா.

இஜ் ஜீவ உடலின் பிம்பத்திலிருந்து கொண்டுதான் அவர வர்கள் எடுக்கும் ஞான ஒளி அலேயின் ஈர்ப்பில் ஜீவ உடலுடன் உள்ளவர்களின் தொடர்பு அவர்களுக்கு மேல் வளர்ச்சி கொண்ட சித்தர்களும் சப்தரிஷிகளும் தம் நிலேயைச் செயல்படுத்தி எண்ணத் தால் எடுக்கும் சுவாசத்தில் நுண்ணிய ஈர்ப்பலேயின் நினேவைச் செலுத்தி சக்திகொண்ட மகான்களின் ஒளியுடன் நம் எண்ண நுண்ணிய அலே பதியும்பொழுது அதன் தொடரிலிருந்து அவர் களின் ஒளி அலேயை நம் உயிராத்மா ஈர்க்கக் கூடிய வழித்தொடர் பெற்று இவ்வுடலிலுள்ள பலகோடி உயிரணுக்களும் அம்மகான் களின் தொடர் அலேயுடன் கலக்கும் வழி நிலே பெற்ருேமாளுல் இன்று இப்பிரபஞ்ச ஆதி சக்தியின் வளர்ச்சியில் வளர்ந்துள்ள பலகோடி கோளங்களின் வளர்ச்சி ஏற்படுத்திய சப்த ரிஷிகளின் ஒளி வட்டம்போல் நம் நிலேயும் நிலேத்து நிற்கும். எடுக்கும் எண்ணத்தைக் கொண்டுதான் ஒவ்வொரு வளர்ச்சியுமே மனி தனுக்கு மட்டுமல்ல மற்றைய எல்லா நிலேகளுக்குமே. எண்ணத் தின் துணேயுடன் செயலாக்கும் அவயவங்களேயும் அறிவாற்றலே வளர்க்கும் மனித ஜீவன் தன் நிலே உணர வேண்டுமென்று போதிக்கும் நிலேயில்தான்.

மனிதனுக்கு எப்படி தன் எண்ணத்தின் சுவாச ஈர்ப்பை இவ்வுடல் பிம்பம் பலவாக உள்ள நரம்புகளில் ஈர்த்து இவ்வுடல் முழுமைக்குமே எண்ணத்தின் சக்தி பிம்பம் பரப்புகின்றதோ அதைப்போன்று ஜீவன் கொண்ட தாவரங்களுக்கும் மற்ற எல்லா இயற்கை வளங்களுக்குமே இவ் ஈர்ப்பலேயை உறுஞ்சக் கூடிய நரம்புகள் உண்டு.

அமிலத்தின் ஒளி சக்தியை ஈர்த்து ஜீவன் பெற்று துடிப்பு நிலே ஏற்படும் நிலேயிலேயே ஈர்க்கும் காந்த நரம்புகள் வளர்ச்சி பெறுகின்றன. ஆனுல் மனித சுவாச ஈர்ப்பினுல் அவ் ஈர்ப்பின் நிலேயில் மனிதன் உடல் பிம்பத்தில் நிறைந்துள்ள உதிரத்தில் அவன் எடுக்கக்கூடிய எண்ணத்திற்கொப்ப எல்லாம் அவன் உடலிலுள்ள உதிரத்தில் வளரும் ஜீவ அணுக்களின் நிலேயும் கலந்து விடுகின்றது.

ஒரு நிலேகொண்ட சுவாசம் கொண்டவை தாவரங்கள். மனி தனேயும் மற்ற மிருகத்தையும் ஒத்த உதிர சுழற்சி இல்லாமல் நரம்பின் ஈர்ப்பினுலேயே ஒரு நிலேயில் காந்த சக்தியை ஈர்க்க

வல்லது தாவரம். பலவாக உள்ள எண்ணக் கலப்பில் பலவற்றையும் எண்ணி வாழும் மனிதன் தன் எண்ணத்தில் எடுக்கும் ஒவ்வொரு நிலையினுலும் அவன் பிம்ப உடலை அவனே பல நிலைகளுக்கு உட்படுத்திக் கொள்ளுகின்றான்.

இந்நிலையிலிருந்தெல்லாம் மீண்டும் பல நிலைகள் மோதிடும் நிலையை நம் எண்ணத்தில் பதியவிடாமல் சமமான நிலையில் நம் எண்ண ஈர்ப்பை வழிப்படுத்தி வாழ்க்கைக்குகந்த செயலுடன் இவ்வெண்ணத்தை ஒவ்வொரு ஆத்மாவும் தன் பிறப்பின் உண்மை உணர்ந்து ஆண்டவனின் சக்தியில் அவதரித்த ஆண்டவன் என்ற உயிராத்மாவுடன் வாழும் நாம் அவ்வாண்டவனுக்கு உகந்த காணிக்கையாய் நம்மை நாமே ஆண்டவனுக்கிக் கலப்பதுதான் மனித ஆத்மாவின் எண்ண வளர்ச்சியின் வழித்தொடர் இருந்திடல் வேண்டும். அதுதான் ஆண்டவனுக்கு நாம் தரும் காணிக்கை.

**1–8–80**

எச் சக்தியும் செயல்பட ஜீவத்துடிப்பு காந்த ஒளி அலை வேண்டும். இச்சக்தி நிலை ஜீவன் தரவல்ல நீரிலிருந்து கிடைக்கின்றது. நீர் எப்படிக் கிடைத்தது? இயந்திரங்களைச் செயலாக்க அவ்வியந்திரங்களுக்கு ஆகார திரவங்களைச் செலுத்தி இயக்கினுலும் அதற்கு ஜீவ நீரைச் செலுத்தி, சுழலவிட்டு காந்த மின் அலையின் ஒளியை சுழலவிட்டுத்தான் அவ்வொளிப் பொறியினுல் இயந்திரங்களை இயக்குகின்றான் மனிதன். காந்த மின் ஒளி பிறக்கும் பொழுதே ஜீவன்தான் செயல்படுகிறது.

மின்சாரத்தை எடுக்கவும் மனிதன் நீரிலிருந்து காந்த மின் அலையைத்தான் பிரித்து மின் அலை காண்கின்றான். உள்ள உண்மையை உணர்த்துவதின் நிலையென்ன? என்ற வினு எழும்பலாம்.

சூரியனின் ஒளி அலை வருகின்றது. உலகம் சுழன்று, ஈர்த்து வெளிக்கக்கும் நிலையினுல் ஒளியும், இயற்கையும், ஜீவ நீரும் பெறுகின்றோம் என்ற உண்மையை உணர்ந்து வாழும் மனிதன் இதிலுள்ள கருத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய உண்மை இரகசியத்தை அறிய வில்லை.

சூரியனிலிருந்து வெளிப்படும் அமில குண சக்தி நேராக நம் பூமியில் மட்டுமா வந்து படர்கிறது? அப்படிப் படரும் ஒளி சக்தியானது பூமியின் மேல் செல்லச் செல்ல எந்த நிலையில் உள்ளது? இப்பூமிக்கு சீரான ஒளி அலை பெறக்கூடிய தன்மைக்கு

நம் பூமிக்கு மனித ஆத்மாக்கள் கருத்தோன்றி வளர்ச்சி நிலை பெற உதவிய வியாழனின் சக்தி அலையின் உதவி இல்லாவிட்டால் இன்றைய பூமியின் ஜீவத்துடிப்பான நீரின் அமிலத்தன்மையே யில்லை. ஒலியும் ஒளியும் கலந்து ஆவியாகி, நீராகி, நிலமாகி ஜீவ சக்தியைப் பெற்றுள்ள நம் பூமியின் ஜீவ குண நிலை பெறப் பல மண்டலங்களின் அமில சக்தியும் துணைபுரிகின்றது.

இஜ் ஜீவனுக்கு ஒலி அலைகளை ஈர்க்கும் தன்மையும் வேண்டும். காந்த மின் அலை, காந்த மின் அலையென்று பல நாட்களாய் உணர்த்தி வருகின்றேன். இக்காந்த மின் அலைக்குத் துடிப்பு எங்கிருந்து வந்தது? காந்த மின் அலை எப்படி ஏற்பட்டது? இவ் அமில குணங்களின் படர்ந்த தன்மையில் மற்றொரு அமில குணம் மோதும்பொழுது ஏற்படும் ஒலியின் அதிர்வு ஈர்ப்பினால், இக் காற்று மண்டலத்தில் படர்ந்துள்ள சூரியனின் குண அமில சக்தி மோதுண்டவுடன், இழுக்கும் ஈர்ப்பு நிலைகொண்டு ஜீவத் துடிப் பான ஆவி நீர் சுரந்து இவ் இழுவையின் ஒளி ஏற்பட்ட பிறகு துடிப்பு நிலை கொள்கின்றது.

இத்துடிப்பின் ஈர்ப்பு கனம் கொண்டு பூமியின் ஈர்ப்பில் காற்று மண்டல முந்தைய பாடத்தில் உணர்த்தியதைப்போல் இப்பூமியின் சுழற்சி ஓட்டத்தில் வடிகட்டி ஈர்க்கும் நிலையென்று உணர்த்திய நிலையில் மோதுண்டு, இஜ்ஜீவ ஒளியைப் பூமி பெற்று பூமியின் ஈர்ப்பில் உறிஞ்சி வெளிப்படுத்தும் ஒளி அலைதான் சூரியனின் ஒளி பிம்பமாக நாம் காண்கின்றோம்.

பன்னிரண்டு மணி உச்சிவெயிலில் நம் பூமி எந்த இடத்தில் சூரியனின் ஒளி அலையை எந்த டிகிரி கோணத்தில் பெறுகின்றதோ, அதன் நேர் கோட்டில் பூமிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தூர விகிதத்தில் இதே அளவு உஷ்ண அலையும் வெளிச்சமும் இருக்காது. விஞ்ஞானிகளும் கண்டு ஆராயட்டும். பூமியின் நிலைக்கும், பூமிக்கு மேல் செல்லச் செல்லக் குளிர்ந்த நிலைதான் அதிகமாகக் கூடியிருக்கும். பூமியின் சுழற்சி ஓட்டத்தில் தன்னைத் தானே பூமி சுழன்று ஓடும் சக்தி ஈர்ப்பினால் பூமியே தான் சூரிய னின் ஒளி அலையைக் கிரகித்து ஒளி பெற்று ஓடுகின்றது. நீங்கள் விஞ்ஞானத்தில் திரவங்களைச் செலுத்தி வாகனங்களை எப்படி ஓட்டுகின்றீர்களோ, அதைப்போன்றுதான் நம் பூமியும் தன்னைத் தானே அமில குணத்தின் உணவை எடுத்து சூரியனின் சக்தி ஒளியை நுண்ணிய காந்த அலையாய் ஈர்த்து வளர்த்து ஓடிக் கொண்டுள்ளது. மற்ற ஒவ்வொரு மண்டலமும் இதன் இயற்கை கதியில் தான் செயல் கொள்ளுகின்றதேயன்றி அதனதன் ஈர்ப்பு இல்லாவிட்டால் சூரியனாய் இருந்தாலும் சரி, சூரியனுக்கே

சக்தி தந்த வியாழனாய் இருந்தாலும் சரி, சூரியனைப் போன்று சூரியனைக் காட்டிலும் வளர்ந்த எக்கோளமாய் இருந்தாலும் சரி, அதனதன் ஈர்ப்பில் வளர்ச்சிகொண்டு வாழ்வதுதான் ஒவ்வொரு நிலையும்.

உண்மை நிலையுணர்ந்து அறிவாற்றலில் செயல் கொள்ளும் மனிதன் ஏன் தன் ஞானத்தின் ஈர்ப்பை, ஜீவத் துடிப்புக்கொண்ட உயிராத்மாவின் ஈர்ப்பிற்கு, தான் எடுக்கும் சுவாசத்தினால் இவ் வெண்ண அலையைப் பாய்ச்சினால் தன் உயிராத்மாவிற்கு வேண்டிய நல்ல சக்தியான எவ்வமில குணம் உள்ளதுவோ, அதன் ஜீவ அலையை நுண்ணிய காந்த ஈர்ப்பை இவ்வெண்ண சுவாசத்தால் செயலாக்க முடியும்.

## 2-8-30

எண்ணம்தான் செயல், எண்ணம்தான் கடவுள் என்ற நிலையை முந்தைய பாட நிலையிலேயே பல இடங்களில் வேரூன்றச் செய்துள்ளேன். தாவரம் எப்படி ஒரு நிலையில் அதற்குகந்த ஒரே அமில குணத்தை ஈர்த்து, வளர்ந்து வாழ்கின்றது? வெங்காயம் அதன் அமில குணமான, அதிகப்படியான ஈர்ப்பு அமில ரசத்தை உறிஞ்சி, ஒரு வகையான காரத்தை வளர்க்கிறது. அதன் ஆவி பட்டவுடன் நம் கண்ணீர் சுரக்கிறது. மிளகாயின் நெடி எரிச்சலை யும், இன்னும் சிலவகை காய்களினால் நமைச்சலும், நாம் பயிராக்கி வளர்க்கும் தாவரமல்லாமல், இயற்கையுடன் வளரும் பல கோடி இன வளர்ச்சியும், ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு குண நிலை ஒத்த அமில சக்தி ஈர்ப்பில் வாழ்கின்றது.

முந்தைய பாட நிலையிலேயே உணர்த்தியதுதான் இவை யெல்லாம் என்றாலும், வழித்தொடர் பாடத்திற்காக இதனையும் உணர்த்துகிறேன்.

ஒரு நிலையில் ஈர்த்து வளரும் தாவரங்களுக்கு மனிதனை ஒத்த செயல், உணவு முறைகள் வேண்டி இருப்பதில்லை. உண்டு, கழித்து, உறங்கி வாழும் நிலை மனிதனுக்கு எப்படி ஏற்பட்டது? ஒன்றிலிருந்து மாறுபட்ட அமிலப்படைப்பில் பிம்பம் கொண்ட ஜீவராசிகளின் நிலையே, ஒன்றுடன் ஒன்று கூடிக்கூடி வளர்ச்சி நிலை முற்றி, கனம் கொண்ட பிம்ப, ஜீவ நிலை ஏற்பட்ட பிறகு, ஒவ் வொன்றிலிருந்தும் சேமிக்கப்பட்ட குண நிலைகளுக்கு ஒப்ப எல் லாம், ஈர்ப்பு நிலை அமையப்பெற்றதினால்தான் ஜீவ, பிம்ப உடல் பெற்ற பிறகு, எண்ணத்தின் செயலினால், தன் தேவையை உணரும்

நிலையும், தன் தேவைக்குகந்த செயலாற்றும் திறமையும், ஆரம் பப்படைப்பின் கூட்டினுல் ஒன்றில் பலவாக கூட்டிக்கொண்ட பல அமிலங்களின் ஈர்ப்பின் பிம்ப ஜீவன்களுக்கு தன் உணர்வின் எண்ணச் செயலுக்கெல்லாம் அதன் தேவையின் அடிப்படை உணவு தேவைப்படுகின்றது.

இதிலுள்ள உள் அர்த்தம் என்ன? இதுநாள்வரை எண்ணத் தின் செயல் என்றுணர்த்தி வந்தேன். இன்றைய நிலையில் உணர் வின் எண்ணத்தேவையென்று உணர்த்துகின்றேன். நம் உடலுக்கு நீர் தேவைப்படும்பொழுது, நம் வாய் வரண்டுவிட்ட பிறகு, நீர் அருந்த எண்ணத்தைச் செலுத்துகின்ரும். உணர்வின் தேவை யினுல் எண்ணத்தைச் செலுத்தி, எண்ணத்தின் செயலால் நீர் அருந்துகின்ரும்.

அதே போன்று நம்மை அறியாமலே நாம் எந்தச் செயலில் இருந்தாலும், எண்ணத்தை அதன்பால் செலுத்தாவிட்டாலும், நம்மையறியாமல் நம் உடலிலுள்ள இவ்வெண்ணத்தின் மோதலின் செயல் நிலையினுல் நாள் முழுவதும் நம் செயல் இருக்கும் பொழுது இவ் உடலின் உஷ்ண அலைகள் ஆவியாக (கொட்டாவி) வெளிப் பட்டு, இவ்வுடல் உறுப்புக்களுக்கு அமைதிப்படுத்தும் நிலையான உறக்கம் கொள்ள வேண்டியுள்ளது.

இப்படிப் பல எண்ணத்தை எடுத்துப் பல அமிலங்களின் செயல் தொடர்பில் வாழும் பிம்ப உடல்களுக்கு உணர்வின் எண்ண அலையும் வருகின்றது. ஒரே நிலைகொண்ட தாவரங் களுக்கு மற்ற ஜீவன்களான ஜீவ சக்தி கொண்ட எல்லாக் கனி வளங்களுக்கும், நம் பூமிக்கும், மற்ற எல்லாவித மண்டலங்களுக் கும் ஜீவன் உள்ளபொழுது தன் தேவை அறியும் உணர்வு நிலையும், உறங்கும் நிலையும் ஏனப்பா இல்லை?

ஜீவன்கள் உறங்கி விடுகின்றன. பூமியும், மற்றக் கோளங் களும், தாவரங்களும் உறங்குவது இல்லை. ஒரு நிலைகொண்ட அமிலப் படைப்புகள் இவ்வெண்ண சக்தியின் பலவற்றை மோதுண்டு வாழும் ஜீவன்களைப்போல் உறங்குவதில்லை. அவை உறங்கி விட்டால் உறங்கும் ஜீவன்களுக்கு ஜீவத்துடிப்பு எங்கிருந்து வரும்?

இயற்கையின் ஜீவப்படைப்பில் சுகம் கண்டு வாழும் நிலை பெற்ற ஜீவன்கள் தனக்குக் கிடைத்த இவ் அபரிமிதமான உண்மை சக்தியை உண்டு, கழித்து, உறங்கி மங்கச் செய்யும் வாழ்க்கையி லிருந்து இதே அடிப்படை எண்ண குணத்தில் செல்லாமல் ஒரு நிலைகொண்ட எண்ண சக்தி கொண்டுதான் ஞானத்தின் வளர்ச்சி நிலை பெறல் வேண்டும்.

**3–8–80**

திடப்பொருளைக் கரையச் செய்வதும் இக்காற்றுத்தான்; ஆவி அமிலத்தைத் திடமாக்குவதுவும் இக்காற்றுத்தான். இக்காற்றின் மோதலில் வரும் ஒளியும், நீரும்தான் நம் பூமியின் ஜீவன். பந்தில் சிறு துவாரம் ஏற்பட்டுவிட்டால் அதன் செயலில்லை.

இக்காற்றின் அமில ஈர்ப்பு பிம்ப ஜீவனில் ஆவி பிரிந்து விட்டால் இவ்வுடல் பிம்பத்திற்கும் ஜீவனில்லை. இக்காற்று குண அமிலத்தில்தான் இவ்வுலக சக்தியே நிறைந்துள்ளது. காற்று மண்டலத்திற்கு மேல் உள்ள பால்வெளி மண்டலத்தில் அமில குணங்கள் நிறைந்திருந்தாலும், நம் பூமியின் காற்று மண்டல ஜீவ அமில குண நிலை அங்கில்லை. நம் பூமியின் சுழற்சி ஓட்டத்தினால் பூமியேதான், சுழற்சி ஓட்டத்தின் வேகத்தினால் காற்றையும், ஒளியையும், நீரையும் வளர்த்து, தனக்குணவாக எடுத்து மீண்டும் கழித்து, மீண்டும் மீண்டும் இதே வளர்ச்சி கதியில் ஒரு நிலை சுழற்சி ஓட்ட நிலையினால் கோடிகோடி ஆண்டுகளாக வாழ்கின்றது.

பூமியின் மாற்றக் காலம் ஏற்படுவது எப்போது? பூமி ஈர்த்து வெளிப்படுத்திய அமில ஒளி ஜீவ சக்தியினால் வளர்க்கப்பட்ட மனிதனாலேதான் பூமியின் நிலை மாறப்போகின்றது. பூமியின் எண்ண சுவாச வளர்ச்சியின் நிலையின் பெருக்கத்தினால், பூமியின் நிலையே இப்படி உள்ளபொழுது, அப் பூமியிலேயே பிறந்து, வளர்ந்து, வாழும் மனிதனின் நிலையில் இவ்வெண்ண நிலை ஈர்ப்பின் செயலைக்கொண்டுதான் மனிதனின் நிலை உயர்வதுவும், தாழ்வதுவும். இவ்வுலகில் பூமியின் ஈர்ப்பினால் பலவாக உள்ள அமில குணத்தின் சக்தி நிலையில் பலதரப்பட்ட, பலகோடி அமிலங்கள் நிறைந்திருந்தாலும் பூமியின் படைப்பிலுள்ள அமில குணங்களின் ஆவிக்காற்று நம் சுவாசத்திற்கு அப்படியே வந்து மோதுவதில்லை. ஒவ்வொரு நொடிக்கும் எண்ணமில்லாத மனிதனுமில்லை. எண்ணத்தில் எடுப்பதுதான் இச்சுவாசம். இச்சுவாசத்தில் எடுக்கும் நிலைகொண்ட மனிதனுக்கு மனிதனின் எண்ணத்துடன் நிறைந்துள்ள குண அமில சுவாசம்தான் அவன் ஈர்ப்பிற்கு வருகின்றது.

மனிதன் எத்தனை காலங்கள் ஆனாலும், தன் எண்ணத்தை ஒரு நிலைப்படுத்தி எடுக்கும் சுவாசத்தினால், இவ்வெண்ணத்தில் குறைவின்றி நல்வழி பெற்று, பலவாக நிறைந்துள்ள அமில குணத்தைத் தன் எண்ண மேம்பாட்டினால் ஒன்றின்பால் நல் ஞானத்திற்குகந்த செயலாக்கும் அமிலத்தின் வளர்ச்சியின் குணத்தைக் கொண்டே, எண்ணத்தின் சுவாசத்தை எடுத்து, நாம்

எடுக்கக்கூடிய காந்த மின் அலையின் ஈர்ப்பை, நாம் நல்ல சக்தியுடன் மோதிடச் செய்தோமானால், அச்சக்தியின் ஒளி ஈர்ப்பை, இந்நுண்ணிய காந்த ஈர்ப்புத் தொடரினால், நம் தேகம் முழுமைக்கும் பரவச் செய்து, இவ்வுடலுக்குள் ஏற்கெனவே பலவாக நிறைந்துள்ள, பல குண நிலைகொண்ட அமிலங்களையும் இவ் ஈர்ப்பின் நுண்ணிய அலையினால் ஒரு நிலையான குண அமிலத்தை இத்தேகம் முழுமைக்குமே பரவிடும் தன்மையில், நம் எண்ண ஈர்ப்பினால் இத்தேகத்தை வளர்த்துக்கொண்டோமானால், மனித வாழ்க்கையில் மோதிடும் பல நிலைகொண்ட, குண நிலைக்கொத்த செயல் எதுவும் இவ்வெண்ணத்தால் இத்தேகத்தில் நிலைக்கப்பெறும் நிலையிருக்காது. பல எண்ணச் செயல்கள் மோதினாலும் நாமெடுக்கும் சுவாசத்தால் அதன் குண நல ஈர்ப்பில் நாம் சிக்கிடாமல் ஏற்கெனவே இவ்வுடலில் நாம் நிறைத்துக்கொண்டுள்ள ஒரு நிலையான அமில குணத்தின், நுண்ணிய அலையின் ஈர்ப்பு சக்தியில் பெற்ற ஒளி சக்தியின் செயலே நிறைந்து நிற்கும்.

மனித ஆத்மாவின் இவ்வெண்ண சுவாச சக்தியில் பெறத்தக்க நிலையினால் வளர்க்கும் நிலை உண்டு. தாவரங்களுக்கு அந்த நிலையில்லை. ஒரு நிலையான எண்ண ஈர்ப்பில் தாவரம் வளர்ந்து வாழ்ந்தாலும், அதன் பலன் வெளிப்பட்ட பிறகு ஒவ்வொன்றின் வளர்ச்சி நிலைக்கொத்த காலக் கெடுவில்தான் தாவரங்களின் நிலையுண்டு.

எண்ணத்தின் மேம்பாட்டின் வழி நிலைகொண்ட மனிதன் தான், தன் எண்ணத்தால் பலவாய் படைக்கவல்ல ஆண்டவனின் ஆண்டவனாக முடியும். இவ்வெண்ண மேம்பாட்டின் உணர்வு அறியாத மனிதன்தான் உழன்றுகொண்டே உருவை மாற்றி, உருச் சிதைந்து வாழ்கின்றான்.

**4–8–80**

காட்சி: வண்டியில் சக்கரம் சுழன்று, வண்டி ஓட உதவி வருகின்றது. அவ்வண்டி ஓட அச்சக்கரம் தேவைதான். ஓடும் பொழுது அவ்வச்சாணி முறிந்து சக்கரம் கழன்று ஒரு பக்கம் உருண்டோடி விடுகின்றது. வண்டியின் குடை சாய்ந்து விடுகின்றது. வண்டி என்ற வாகனத்துக்கு மட்டும் இப்பொருத்தம் உகந்ததல்ல. வண்டி ஓட அச்சாணி எப்படி முக்கியமோ அதைப் போன்று இவ்வாழ்க்கை வண்டி ஓடவும், இனி உடல் வண்டி ஓடவும் அச்சாணி தேவை.

வாழ்க்கை வண்டிக்குப் பொருளான அச்சாணி வேண்டும். இவ்வுடல் வண்டிக்கு இவ்வெண்ண, சுவாச அச்சாணி வேண்டும்.

இவ்வெண்ணத்தின் ஈர்ப்பில் நாமெடுக்கும் செயலைக்கொண்டு தான் இப்பிம்ப உடலின் ஆரோக்கியத் தன்மை உள்ளது. எண்ணத்தால்தான் அனைத்தும் நடக்கின்றன என்று உணர்த்துகின்றீர். ஆனால் இவ்வுடலின் உணர்வு நிலை எதன் தன்மை கொண்டது என்று வினவுவீர்.

உடலின் உணர்வினால் (உணவும்) பசியையும், தாகத்தையும், உறக்கத்தையும், உடல் இச்சையையும் நாம் எண்ணத்தில் எடுப்பதற்கு முதலிலேயே, உணர்வின் உந்தலினால், நம் எண்ணத்தால் கொண்ட சுவாசத்தில் உணர்கின்றோம். இவ்வுணர்வின் நிலை எப்படி ஏற்பட்டது? எண்ணத்தால் இவ்வுணர்வின் அலையை மாற்றி அமைக்க முடியும். ஆரம்ப காலத்தில் இரண்டு வகை குண அமிலச் சேர்க்கை ஈர்ப்பில், ஜீவ சக்தி தோன்றியவுடன், அவ்வமில குணம் திடப்பட்டு வளர்ச்சியின் ஜீவ சக்தி (உயிர் சக்தி) ஏற்பட்டவுடன் அதன் வளர்ச்சிக்குகந்த ஈர்ப்பின் உணர்வுக்கு மேன்மேலும் தன் உணவைச் சேமித்து அதன் வட்ட வளர்ச்சி கூடக்கூட உணர்வின் தன்மையும், உணர்வுக்குகந்த ஈர்ப்பு ஆகாரத்தையும் சேமித்த இவ்வுணர்விலிருந்துதான் உருவின் நிலையும் பெறுகின்றது ஜீவ ஆத்மாக்கள்.

ஆரம்ப காலத்தின் அமில குண சேர்க்கையென்று உணர்த்தியது, இவ்வுடல் பிம்பத்தை பெறத்தக்க அமில குண சேர்க்கைக் காலத்தைத்தான் குறிப்பிட்டேன். இப்படி இதன் வளர்ச்சி நிலை கூடிக்கூடி, பல காலமாய்ச் சேமித்த இவ்வுணர்வலையின் வழி சக்தியினால்தான், எண்ண சக்தியே வலுப்பெற்று ஜீவ ஆத்மாக்கள் வளர்ந்துள்ளன,

பலப்பல கோடி ஆண்டுகள் இவ்வுணர்வின் அடிப்படை குண அமில ஈர்ப்பை வளர்த்துக் கொண்டு, எண்ணியதைச் செயலாக்கும் மனித உரு பிம்ப ஜீவன்களுக்கு, தன் உணர்வின் அலையின் சக்தியும், இவ்வெண்ண வளர்ச்சி ஏற்பட்ட ஜீவ உடல் கொண்ட பிறகும், இயற்கையில், உடலில் தன் உணர்வை வெளிப்படுத்தும் செயல் அமிலங்களின் நிலையுள்ளன.

இவ்வெண்ண வளர்ச்சி நிலைகொண்ட மனிதனால் மட்டும், தன் எண்ணத்தால் உடலில் ஏற்படும் இயற்கை உணர்வுத் தன்மையையும் மாற்றியமைக்க முடியும். இவ்வெண்ணத்தை நாம் செலுத்தும் நிலைக்குகந்த செயலினால், இவ்வுணர்வு அலையையும் மாற்றியமைக்கமுடியும், இவ்வுடலுக்கு உணவும், தூக்கமும் இச்சையும் தேவையில்லையா? இதனை மாற்றியமைப்பதினால் உடல் பிம்ப நிலை எப்படி நிலைத்திருக்கும்? என்ற வினா எழும்பலாம்.

உடலுக்குத் தேவையான உணவும் உறக்கமும் வேண்டியது தான். ஆனுல் இவ்வெண்ணத்தின் செயலினுல், அதன்பால் அவ்வுணர்வின் தன்மைக்குகந்த வழித்தொடரிலேயே நம் எண் ணத்தைச் செலுத்தி, அதன் செயலுக்கே நாம் சென்றுவிட்டோ மானுல், அதே உணர்வின் எண்ண ஈர்ப்பின் லயிப்பில்தான் நம் ஜீவித காலம் அனைத்துமே சென்றுவிடும்.

பலதரப்பட்ட குணமும், பலதரப்பட்ட சுவையும் விரும்பக் கூடிய ஆத்மாக்கள் உள்ளன. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ் வொரு வகை சுவையும், உறங்கும் தன்மையும் இருந்திடும். அவனது குண நிலையும், சுவை நிலையும் அவனுய் இவ்வாழ்க்கை யில் மட்டும் எடுத்ததல்ல. ஆரம்ப அமில குண வளர்ச்சிக் காலத்தி லேயே அவன் ஈர்த்து உணர்ந்த எண்ணத்தின் தொடர்புதான், ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றுவரையுள்ளது. உணர்ச்சியிலும் அவனது உடலின் இச்சையின் நிலையும் இவ் ஆரம்ப காலத்து வளர்ச்சியில் வந்ததுதான்.

பசியும், தூக்கமும் ஆரம்ப காலத்தில் குழந்தைப் பிராயத்தி லிருந்தே அறிந்து உணர முடிகின்றது. ஆனுல் வளர்ந்த பிறகு தான் உடல் இச்சையின் உணர்வு ஏற்படுகின்றது.

தாவரங்கள் அதன் வளர்ச்சியின் அமில குண சேர்க்கை யின் சக்திப் படிவத்தினுல், அதன் பலனை, வளர்ந்த பிறகு பூவாகி, காயாகி, கனியாகி தருகின்றன. அதைப்போன்று மனித வளர்ச்சியிலும், இவ்வளர்ச்சி முற்றலின், அமிலச் சேர்க்கை யின், உணர்வின் நிலை குறிப்பிட்ட வயது வரம்பு சேர்க்கைக்குப் பிறகு வெளிப்படுகிறது.

இவ்வுணர்வின் வழித்தொடரினுல் ஏற்படும் இந்நிலைகளை, எண்ணத்தின் நிலைக்கொப்ப எப்படி ஒவ்வொரு மனிதனும் வழிப் படுத்தி வாழுகின்ருன்? இவ்வுடலின் தேவையான பசிக்கும், தூக்கத்திற்கும், இச்சைக்கும் இவ்வெண்ணப் பழக்கத்தைச் செலுத் திய முறைப்படி, அதன் தேவையை இவ்வெண்ணத்தின் பிடியில் அளவுடன் ஒரு நிலைப்படுத்த முடியும். எண்ணத்தைக்கொண்டு தான், இவ்வுணர்வின் இச்சையை ஒரு நிலையில் இவ்வுடலின் பிம்பத்திற்குத் தேவையான அளவுடன் செயல்படுத்தி வாழ்ந்து வரும் மனிதனின் வாழ்க்கை அழகுடனும், அமைதியுடனும், மனிதன் மனிதனுக இருக்கவல்ல தன்மையும் உள்ளது.

இவ்வுணர்வின் நிலைக்குகந்த வழித்தொடரில் தன் எண் ணத்தைச் செலுத்தும் மனிதன் தான், பசியின் தேவைக்குத் தகுந்த

உணவை உட்கொண்டு அதே அடிப்படை ஈர்ப்பின் ஒரு ஒழுங்கு முறையற்றுப் பசியடங்காமல், பசி என்ற வெறியிலும், தன்னை உணராமலும், அதன் வழித்தொடர் ஈர்ப்பு உணர்விலேயே சென்று விடுகின்றான். இதே நிலையில்தான் உறக்கத்திற்கும் பல ஆத்மாக்கள் தன் உணர்வலையின் வழித்தொடரில் அதன் போக்கில் சென்றுவிடுகின்றன.

இவ்வுடல் இச்சையிலும் இவ்விச்சையின் உணர்வை அதன் உணர்வின் இச்சைப்படி, தன் தேவையைப் பூர்த்தி செய்ய அதே எண்ணத்தில் வடிகால் இல்லாமல் சென்றுவிடுகின்றான். இவ்வுடலின், உணர்வின் நிலையை இவ்வெண்ணத்தைக் கொண்டு வடிகாலமைத்து ஒரு நிலை பெற்ற பிறகுதான் ஒவ்வொரு மனிதனும் தன் உடலிலுள்ள பன்னிரண்டு வகையான குண அமிலத்தையும், ஒருநிலையான ஞானத்தின் பால் செலுத்திட முடியும்.

இயந்திரங்களை ஓட்டினாலும், மின்சாரத்தைப் பாய்ச்சி ஒளியை நாம் கண்டாலும், அம்மின்சாரத்தை எடுக்குமிடத்திலிருந்து நேராக எந்த ஒரு செயலுக்கும் அம்மின்சாரத்தை அப்படியே பாய்ச்சாமல், அங்கங்கு பல நிலையங்களை ஏற்படுத்தி, அங்கிருந்து அதனை ஒழுங்குமுறைப்படுத்தி, நமக்கு வேண்டிய இடங்களுக்கு அதன் இணைப்பைத் தருகின்றனர்.

ஜீவ நதிகள் உற்பத்தியாகிப் பெருக்கெடுத்து ஓடி வருவதை அணைகள் கட்டி நம் தேவைக்குகந்த செயலுக்குப் பயனாக்கி, வடிகாலமைத்து எப்படிச் செயல்படுத்துகின்றோமோ, அதைப்போல் இவ்வுணர்வின் அலைக்கும் வடிகால் தேவை. அதிகமாக உணவின் தேவையில் லயிப்பவனும் உறக்கத்தில் தன்னை மறப்பவனும், இச்சையின் இன்பத்தை அதிகமாக எந்தச் செயலையும் செயலாக்கும் ஞானத்தில் செல்ல முடியாமல், தன் உணர்வின் லயிப்பிலேயே மனிதனின் கால வாழ்க்கை சென்று விடுகின்றது.

உணர்வின் இச்சைக்கு வடிகாலாய் இவ்வெண்ண மேம்பாட்டைச் செயலாக்கி, உணர்வின் அலையின் உந்தலையும், இவ்வெண்ணத்தைக்கொண்டு மாற்றியமைக்க முடியும் மனிதனால், ஜீவ உடல் பிம்பத்திற்குத் தேவையான உணவையும், உறக்கத்தையும் நாம் இவ்வெண்ணத்தைக்கொண்டு, தேவைக்குகந்த செயல்படுத்தும் வழிமுறையில் வழிபெற்று, இப்பன்னிரண்டு வகை குண அமில ஈர்ப்பையும் ஒரு நிலைப்படுத்தும் உயர் ஞானத்தை வழியமைக்க, இவ்வுணர்வின் ,தன்மையை உணர்ந்து எண்ணத்தைச் செலுத்துபவனால் இந்நிலையை, இந்நிலையென்பது பன்னிரண்டு வகை குண அமில வழியையும் ஒரு நிலைப்படுத்தலாம்.

5–3–80

உணர்வின் வழித்தொடர் இச்சைக்கு நம் எண்ணமும் செயல் பட்டு, அவ்வுணர்வின் தன்மைக்கே எண்ணச் செயலை வழிப் படுத்தும் மனிதனால், இவ்வெண்ண மேம்பாட்டிற்கு வழிப்பாதை யறிய முடியாது.

காட்சி: அம்பெடுத்து குறிபார்த்து அம்பு விடுகின்றான் ஒரு மனிதன். அவன் உடலில் ஒரு பெரிய கட்டெறும்பு வந்து ஊர்ந்து கொண்டுள்ளது. அவன் எண்ணமெல்லாம் அம்பின் குறி தவறாத ஒரே நிலையில் அம்பெய்தி தன் எண்ணத்தின் மேம்பாட்டைக் காண் கின்றான். அவ்வம்பு எய்திய பிறகு அவன் உடலில் ஓடும் எறும் பின் குறுகுறுப்பு உணர்வில் அறிந்து தட்டிவிடுகின்றான். இது எதனைக் குறிக்கிறது?

உணர்வின் நிலையையே இவ்வெண்ணக்குறியினால் மாற்றி அமைக்க முடியும். ஆனால் இவ்வுணர்வின் செயலே நம் எண் ணத்தையும் விழிப்படையச் செய்திடும், சில நிலைகளில். இவ்வுணர் வின் செயலே எண்ணத்தை விழிப்படையச் செய்யும் நிலை எப் பொழுது ஏற்படுமென்றால், இவ்வுணர்வின் எண்ணத்தை எந்த ஒரு மனிதன் தன் எண்ணத்தின் வழித்தொடரில் பழக்கப்படுத்தி, அவ்வுணர்வையே எண்ணத்தின் செயலில் செயல்புரிய வைக்கும் மனிதனுக்கு, இவ்வுணர்வின் அலையே எண்ணத்தின் ஈர்ப்பின் வளர்ச்சிக்கு அதி துணையாய் செயல்புரியும்.

சில மிருகங்களுக்கு இவ்வுணர்வின் செயல் திறமை அதிகமாக உருவளர்ச்சியிலேயே ஜீவன் கொண்டு வாழ்ந்து வருகின்றது. நாம் உறங்கும் சில நேரங்களில் நம்மையறியாமல் ஆழ்ந்த உறக்கத்தில், நம் எண்ண அலை உறங்கிடும் தன்மையில், இவ்வுணர்வின் அலையின் விழிப்பினால், நம் உடலில் ஏறும் சில ஜெந்துக்களையும், அதே சமயம் நம் உடம்பில் உள்ள நரம்புப் பிடிப்புகளையும் நீக்க இவ்வுணர்வலைகள் செயல் புரிகின்றன.

இவ்வுடலில் நாமெடுக்கும் எண்ண சுவாச அலைக்கு உறக்கம் தந்தாலும், உடலில் உணர்வு அலை இயங்கிக் கொண்டே தான் உள்ளது. இவ்வுணர்வு அலைகளிலேயே மனிதனின் எண்ண மேம் பாட்டைக் கொண்டு அபரிமிதமான சக்தி அமில குணங்கள் வளர்ந்துள்ளன. ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளபொழுது சுற்றியுள்ள சப்த ஒலிகள் தனக்கு வேண்டப்படாத ஒலி அலையை இவ்வுணர் வலையும் எடுத்துக் கொள்ளுவதில்லை, ஆனால் அதே சமயம் தன் சிசு சிறு அசைவு கொண்டு அழுதாலும் ஆழ்ந்த உறக்கத்திலுள்ள

தாயின் உணர்வறிந்து விழிப்பு நிலை ஏற்பட்டுவிடுகின்றது. சில கள்ளர்களின் கள்ளத்தனம் இல்லங்களுக்கு வந்து எடுத்துச் செல்லும் நோக்கமுடன் செயல்பட்டாலும் இவ்வுணர்வின் அலை விழிப்படைந்து, செயல்புரிந்து ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளபொழுதும் விழிப்படையச்செய்துவிடும்.

இவ்வுடலிலுள்ள பலகோடி அணுக்களும் நுண்ணிய ஈர்ப்பு அலையின் சக்தி அலையை ஈர்க்கவல்ல தன்மை கொண்ட மனிதனின் உணர்வலை, எண்ண அலை உறங்கிடும் நிலையிலும் இவற்றின் விழிப்பு நிலை உறங்குவதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன் எண்ணத்தின் நிலைகொண்டு இவ்வுடலில் உள்ள உணர்வின் சக்தி அலையைக் தன் இச்சையிலிருந்து அதன் வழியில் ஓட விடாமல் ஒரு நிலைப்படுத்தும் சமநிலை வழித்தொடர் படுத்திவிட்டால் இவ்வுணர்வலையின் சக்தி மேம்பாட்டினுல் இவ்வுடலிலுள்ள அனைத்து அணுக்கதிர்களும் தன் ஈர்ப்பில் நுண்ணிய காந்த அலையின் சக்தி அலையைக் கூட்டிக்கொண்ட பிறகு, எண்ணத்தால் எடுக்கும் சுவாசத்தால், சூரியனின் ஒளி அலையின் ஈர்ப்பிலிருந்து மிக சக்தி வாய்ந்த நுண்ணிய காந்த அலையின் ஈர்ப்பை, இச்சுவாசம் முழுவதுமே ஒவ்வொரு தசைநார்களும் ஈர்க்கவல்ல சக்தி கொண்ட மனிதனின் செயல்தான், சப்த ரிஷிகளின் செயல் வட்டத்துடன் சென்ற டையும் ஈர்ப்புப் பெற்ற ஜோதி காணும் நிலை என்பதேயன்றி, ஆறுகால ஜெபம் செய்து ஆண்டவன் நமக்கருள்வான் என்று ஏங்கித் தவமிருப்பதில் எந்தச் சக்தி அலையும், எந்த மனிதனுலும் பெற முடியாது.

உண்மை சக்தியை, காந்த ஈர்ப்பு மின் அலையை எடுக்க வல்ல மனித ஆத்மா, நிச்சயம் ஒளி அலை பெறுவான். உணர்வலையை எண்ணத்தைக் கொண்டு ஒரு நிலைப்படுத்தும் மனிதனுக்கு, அவ்வுணர்வலையின் திசை திருப்பலிலிருந்தே அதிசக்தி ஈர்ப்பைப் பெற முடியும்.

**7-8-80**

உணர்வலையின் ஜீவ பிம்ப ஞானத்தால்தான், நுண்ணிய காந்த ஈர்ப்பலையை நாம் வளர்த்துக் கொள்ள முடியும். இம்மனித உடலுக்குள் உள்ள பன்னிரண்டு வகை குண அமிலத்தையும், இவ்வுணர்வலையின் செயலையும், இவ்வெண்ண சுவாசத்தால் ஒரு நிலைப்படுத்தும் பக்குவ மேம்பாட்டினுல், ஞான ஈர்ப்பின், நுண்ணிய காந்த அலையின் வளர்ச்சி ஒளி இவ்வுடல் முழுமைக்கும் ஈர்க்கவல்ல சக்தி முறையை வழிப்படுத்தும் செயல் உணர்ந்து,

நம் ஜெப நிலை இருக்கும் பக்குவம்தான் 'சத்தியத்தின் சக்தி நிலை' வழியில் எண்ண ஜெபத்தை 'ஓம்' என்ற நாதமுடன் ஈர்த்து வழிபெறுங்கள் என்னும் நிலை.

இவ்வுடலுக்கு உணர்வும், உணர்வுடன் கூடிய குண அமிலங் களும், குண அமிலங்களுடன் வழி நடத்தும் எண்ண சுவாசமும் இருந்தால்தான் ஜீவ சக்தியான நுண்ணிய காந்த அலையின் சக்தியை நாம் எடுக்க முடியும்.

முந்தைய பாடங்களிலும் இன்றைய நிலையிலும் நம் உயி ராத்மாவிற்கு சேமிக்கும் சொத்து எது? என்று பல வினுக்களை எழுப்பினேன். உயிராத்மாவிற்கு சேமிக்கும் சொத்து என்பது பலவான எண்ணத்தில் உணர்வின் உணர்ச்சி அலையின் வாழும் மனிதனின் ஞானம் எத்தகையதைப்போல் இருந்திடல்வேண்டும்? இன்றும், பல காலமாகவும், பல மேதைகள் புதிய புதிய செயல் முறைகளைக் கண்டு பிடித்து விஞ்ஞானச் செயலும், கல்வி ஞானமும் இன்னும் சிலர் கவிதை ஞானமும், பெற்றுத்தான் வாழ்கின்றனர்.

இந்த ஞானம் எத்தகையதைப்போன்றது? சித்தனின் ஞானத்திற்கும், இந்த ஞானத்திற்கும் மாறுபாடு என்ன? சித்தனின் வளர்ச்சியும் ஞானம்தான், இவையும் ஞானம்தான். மாறுபாடு என்ன? சூரியனின் ஒளி சக்தியினுல் இப்பூமியின் வளர்ச்சியில், பூமி எடுத்து, வளர்ந்து பலவாக இயற்கை உள்ளது. வளர்ந்துள்ள இயற்கையில் இருந்து அதிலுள்ள சத்தான, நமக்குகந்தது எது? என்று அறிந்து அதன் பெருக்கத்தை உற்பத்தியாக்கி அதன் சுழற்சி செயலில் இருந்தே மேன்மேலும் புதிய புதிய படைப்புகளை ஒன்றுடன் ஒன்று கலந்து, அதன் பலனைப் பெறுவதைப்போன்ற ஞானம்தான் விஞ்ஞானமும், இன்றைய கல்வி ஞானமும், கவி ஞானமும்.

சித்தனின் ஞானம் எத்தகையது? இயற்கையில் பலவான நிலையில் இப் பலவற்றையும் கண்டு இவற்றிற்கு மேல், இவற்றையே வாழவைக்கும் நிலை எவை? என்பதனை உணர்ந்து இந்நிலையின் வளர்ச்சியின் மூலம் அறிந்திட, இம்மூலத்துடன் சென்றடையும் செயலில் கலந்தால்தான் இன்றைய படைப்பைப் போன்று பலவான புதிய படைப்புகளை இயற்கையில், படைக்கவல்ல ஆற்றலுக்கு வழிபெறச் செல்லுகின்றான் சித்தன்.

இயற்கையில் விஞ்ஞானம் காணுகின்றான் மனிதன். அவ் வியற்கையையே வளரச் செய்கின்றான் சித்தன். காற்றிலும், நீரிலும், ஒளியிலும் உள்ள அமிலங்களைக் கொண்டு விஞ்ஞான சாதனையான அணுகுண்டையும், விஷவாயு குண்டையும் பலவாகப்

படைக்கும் மனிதன் நீரையும், காற்றையும், ஒளியையும் படைக்க முடியுமா? இயற்கையில் வளர்ந்த சிறு நாணல் புல்லைக் காற்றும், நீரும், ஒளியும் இல்லாமல் விஞ்ஞானம் படைக்க முடியாது. ஆனால் இக்காற்றையும், நீரையும், ஒளியையும் படைத்தவனும் மனிதனே. சித்தானன், சப்தரிஷியானன், சகலத்தையும் படைக்கும் ஆற்றலின் ஒளி காந்த சக்தியானன்.

ஞானத்தின் படைப்புத்தானப்பா நீயும் நானும். அந்த ஞானத்தையே பெறவல்ல சக்திக்கு ஜீவத் துடிப்புக்கொண்ட எண்ண சுவாசம் இருந்தால்தான் எந்த ஞானமும் பெற முடியும்.

**10–8–80**

எண்ண சுவாசத்தை ஞானத்தின்பால் செலுத்தி ஞானத்தை வளர்க்க எண்ணத்தைச் செலுத்தி இம்மனித ஆத்ம பிம்பக் கூட்டிற்குள்ளுள்ள பன்னிரண்டு வகை குண அமிலத்தை ஈர்க்கவல்ல உணர்வலையின் இவ்வுணர்ச்சியின் மூன்று வகை உணர்வலையை இவ்வெண்ண சக்தியினல் ஒவ்வொரு மனிதனும் இதுநாள் வரை உணர்த்தி வந்த பாட முறையின் தியானம் கொண்டு

போற்றலுக்குகந்த போற்றலே
யான் போற்றி மகிழவே
நேசத்துக்குகந்த நேர்மையே
நினைவால் வழி நிற்பேனே.
பாசத்துக்குகந்த படைப்பிலே
பலவாய்க் கலந்து பெறுவேனே
ஆசைக்குகந்த ஆசையிலே
அளவாய் மகிழ்ந்து அடைவேனே
ஆற்றலுக்குகந்த ஆண்டவனே
ஆற்றலின் எதிர் பிம்பமானவனே,
தாலாட்டும் தாய் தந்தை தலைமையிலே
தலை வணங்கிப் பணிவேனே
ஏற்றத்திற்குகந்த எண்ணத்திலே
ஏறும் படியில் ஏறுவேனே
வாசத்துக்குகந்த வாசனையாய்
உள்ளத்தின் வாசனையை வளர்ப்பேனே.
போற்றித்துதிக்கும் நிலையில் உள்ளேன்
போற்றலுக்குகந்த தெய்வ நிலை பெறுவேனே.

இப்பாடலில் உள்ளதன் நிலை உணரும் எண்ணத் தொடரில் ஒவ்வொரு மனிதனின் செயலும் செல்லுமேயானல், பலகோடி

ஆண்டுகளாய் சேமித்துப் பழக்கப்படுத்தி நாம் நம்உடலுடன் கூட்டிக்கொண்டுள்ள இம் மூன்று வகை உணர்வலையையும், பன்னிரண்டுவகை குண அமிலத்தையும், இப்பலகோடி எண்ணத்தின் சுவாசத்தால் நம் சப்த அலையுடன் பல ஜென்மங்களாய் எடுத்துப் பழக்கப்படுத்திய நிலைகளையெல்லாம், தாவரங்களைப்போன்று, இக்காற்றினில் கலந்துள்ள சக்தி ஒளி அலையான காந்த மின் அலையை, நமக்கு வேண்டிய உயர்ந்த ஞான சக்தியைக் கூட்டிப் பலன் பெருக்க முடியும்.

தாவரம் தனக்கு வேண்டிய பிரித்த அமிலத்தை எடுத்துப் பலனைத் தர வல்ல காலங்கள் முடிந்தவுடன் குறுகிய கால வளர்ச்சியினால் பட்டுப்போகின்றது. ஆனால் அதிலிருந்து வெளிப்பட்ட அமில குண கூட்டுப்பெருக்கில் ஜீவன் கொண்ட ஜீவ ஆத்மாக்களான நம் ஜீவித சக்தியில் இப்பெருக்கத்தின், பெருக்க நிலை வளர்வதற்கு இவ்வெண்ணத்தால் எடுக்கும் ஞானத்தின் ஒளி ஈர்ப்பின் காந்த மின் அலையின் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் மனிதனின் ஞான ஒளியால் இவ் உயிர் அணுமட்டுமல்லாமல் பலகோடி அணுக்களும் செயல்கொண்டு இம்மனித ஞானத்தின் வளர்ச்சி நிலை கூடும் சக்தி பெறும்.

இத் தியானப் பயிற்சி முறையைப் பலரால், பல காலங்களாய் வழிப்படுத்தி வாழ்க்கையில் பலரினால் செயல்படுத்தி வருகின்றனர் என்றாலும் அதில் அவர்கள் அடைந்த நிலையென்ன?

நல்ல வாழ்க்கையும் பல ஞான உபதேசங்களும் பெற்றவர். அதே சுழற்சியில் தான் சுழலுகின்றனர். ஆழ்நிலை தியானத்தை அறியத் துடிக்கின்றனர். இவ்வுணர்வையும், எண்ணத்தையும் உறங்கும் நிலைப்படுத்தும் ஞானத்தால் இவ்வுடலுக்கோ, இவ்வுடலை வளர்க்கக் குடி வந்த பலகோடி உயிரணுக்களுக்கோ வளரும் சக்தி குன்றி, இதே சுழற்சியில் தான் சுழன்றுகொண்டிருக்குமே யன்றி, ஒவ்வொரு அணுவுமே மண்டலமாய் உருப்பெறும், நல் ஒளி பெறும் சூரிய ஒளியுடனே, பலகோடி சக்தி ஒளியான சகலமும் படைக்கவல்ல அவ்வாதி சக்தியின் அருள் ஒளியுடன் கலக்கவல்ல நிலைபெற்ற ஆழ்நிலை தியானத்தால் வளர்ச்சி கொள்ள முடியாது.

உணர்வுடன் கூடிய எண்ணத்தை இவ்வுணர்வின் உந்தலுக்குகந்த ஒவ்வொரு உடலிலும் உள்ள அமில குணங்களையும் இவ்வெண்ண ஞானத்தால் எடுக்கும் சுவாசம் கொண்டு உயர்வாக்கும் பக்குவ முறையைச் செயல்படுத்திடுவோமானால் தான் சக்தியின் சக்தியான சகலத்துடன் செயல்படுத்தும் ஆதிசக்தியின் ஒளி சக்தியைப் பெற முடியும். ஆதிசக்தியின், ஒளி சக்தியின் சிறு அணு

வாய் உதித்த நாம், அச்சக்தியின் அருளின் ஒளியைப் பெருக்கி சமர்ப்பிப்பதுதான் நமக்கு ஆண்டவனின் சக்தி பெற்ற நிலையின் பொருள் என்பது புரிந்ததா?

**11–8–80**

எண்ணத்தைக் கொண்டுதான் உணர்வை அறிகின்றோம், உணர்வைக் கொண்டுதான் எண்ணம் செயல்படுகின்றது. இவ் வெண்ணமும், உணர்வும் இயங்க இப்பன்னிரண்டு வகை குண அமிலங்களின் நிலையினால் எண்ணத்தைக்கொண்டு உணர்வும், உணர்வைக்கொண்டு எண்ணமும் இயங்கி வாழும் ஜீவ ஆத்மாக்கள் எல்லாம் இக் குண அமிலத்தையே ஒரு நிலைப்படுத்தி எண்ணத்தைச் செயல்படுத்த வழிபெற்றால்தான், இஜ் ஜீவ உடலுக்குள்ளுள்ள காந்த மின் அலையின் ஈர்ப்பை அதிகமாக சேமிக்க முடியும்.

காற்றிலும், நீரிலும், ஒளியிலும் இக்காந்த மின் அலையின் சக்தி இருப்பதினால்தான், பூமியின் ஜீவித சக்தியே சுழன்று ஓடுகின்றது. மின்சாரம் காண, இச்சக்தி அலையை அதிகமாகக் குவித்து அதனை ஒளியாக்கித் தருகின்றனர், செயலுக்குகந்தபடி யெல்லாம். அதே காந்த மின் அலையின் சக்திதான் ஒவ் வொரு ஜீவத்துடிப்பிலும் உள்ளது. நம் ஜீவ உடலுக்குள்ளுள்ள மின் அலையைக் காட்டிலும் மின் அலையைக் குவித்து மின்சாரமாய் செயலாக்க அக்காந்த மின் அலை ஜீவ உடலில் ஏறும்பொழுது, அஜ் ஜீவ உடலிலுள்ள அலையையும், எடுத்துக்கொண்டு, அவ் வுடலை ஜீவனற்றதாக்கி விடுகின்றது.

காந்த மின் அலை இல்லாவிட்டால் ஜீவத்துடிப்பு இல்லை. எந்த வீரிய சக்திகொண்ட மின் அலையை உலர்ந்த மரமும் ஜீவ சக்தியைப் பிரித்துப் பல உஷ்ணங்களை ஏற்றி வடிவமைத்த கண்ணாடி களிலும் எந்த காந்த மின் அலையும் பாய்வதில்லை. இதுவே சிறிது ஈரச்சத்து அதிலிருந்தாலும் உடனே அம்மின் அலை பாய்கிறது. இம்மின் அலையின் சக்தி எல்லா ஜீவ சக்தியிலும் அதனதன் வளர்ச்சிக்கொப்பக் கூடியும் குறைந்தும் உள்ளது.

இம் மின் அலையை எடுக்கும் முறையைக்கொண்டு நம் எண் ணத்தை ஞானத்தில் செலுத்தினால்தான், ஞானத்தின் ஈர்ப்பு நமக்கு ஜீவசக்தியின் சுவாச அலையில் தாக்கி, சுவாச அலையினால் நாமெடுக்கும் எண்ணம் கொண்டெல்லாம் நம் உயிரணுவுடன் மோதி, நாமெடுக்க வேண்டிய ஞான சக்தியின் ஒளி காந்த மின் அலையை நம் ஜீவ உயிரும் இவ்வுடலின் பலகோடி அணுக் களும் எடுக்க முடியும்.

இதன் தொடர்ச்சியை மேன்மேலும் கூட்டிச்செயல்பட்டால் இவ்வுடல் என்ற கூட்டை அழியா உடலாக காயகல்பத்தை உண்டு போகனும், கொங்கணவனும் இவர்களின் நிலையை ஒத்த பலரும் செயல்பட்டனர். இச்சக்தி மின் அலையைப் பெறவே சித்து நிலைபெற்ற சப்த ரிஷிகளுக்குள் ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் சென்ற வழிமுறையின் ஈர்ப்பு சக்தியில் மாற்றமிருந்தாலும், அவ்வழித்தொடர் ஞானத்தில் சுழன்று பிறகு ஒரே நிலையில்தான்-ஒரே நிலையில் தான் என்பது-ஒரு நிலையான காந்த மின் அலையின் தொடர்ச்சியுடன்தான் கலந்தார்கள்.

ஆண்டவனின் சக்தியை 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றும், அவ்வாண்டவனுடன் கலப்பதற்கு ஜோதி நிலை கண்டால் அச் சக்தியைப்பெறலாம் என்றும் உணர்த்தினர்களேயன்றி அஜ்ஜோதி நிலைபெறும் வழித்தொடர் என்னப்பா?

ஜோதி நிலை பெற்றுவிட்டால் ஆண்டவனுகி ஆண்டவனுடன் கலந்து நின்று முற்றுப்பெறுவதுவா? ஆண்டவனின் சக்தி ஒவ்வொரு ஜீவத்துடிப்பிலும் இக்காந்த மின் அலையின் சக்தியுண்டு: ஆனுல் அச்சக்தியையுணர்ந்து நம் ஜீவ ஆத்மா உயிர்சக்தியை நாமெடுக்கும் எண்ண ஜெபத்தால் கூட்டி இவ்வுடலிலுள்ள எல்லா உயிரணுக்களும் அச்சக்தி அணுவை வளர்த்துக்கொள்ள நம்முள் உள்ள பன்னிரண்டு வகை குண அமிலத்தை அதன் குணத்தின் செயலுக்கே, நம் உணர்வும் எண்ணமும் செலுத்தினேமானுல் இதே சுழற்சி வட்ட வாழ்க்கையில் தான் சுழல முடியுமே யன்றி மெய்ஞானத்தையுணர்த்தி உலகாயும், ஒளியாயும், நீராயும், காற்ருயும் நாம் வாழ வழியமைத்து சப்த ரிஷிகளின் சக்திக்கே இவ்வுலக ஆத்மாக்களின் குன்றிய எண்ணச் சுழற்சி பேராசை வாழ்க்கையில் தன்னையே மடித்துக்கொள்வதோடு அல்லாமல், தன்னை வளர்த்துப் படைத்த சக்திக்கே ஊறு விளைவிக்கின்ருன் இன்றைய மனிதன்.

தன் ஞானத்தை இக்காந்த மின் அலையின் ஈர்ப்பைப் பெற வளர்த்துக் கொள்ளவும் ஒவ்வொரு ஜீவனுக்கும் முடியும். ஆனுல் ஞானத்தை வளர்க்கவும், செயலாற்றவும் முடியாத இயற்கையிலேயே பல சக்திகளையறிந்த மிருக ஜெந்துக்களுக்கு நமக்குள்ள சந்தர்ப்பம் இல்லை. ஆனுல் நம்மில் நாம் எவ்வாண்டவனைக் காணத் துடிக்கின்ருேமோ அவ்வாண்டவனுல் நமக்குள் பல சக்தி அலைகளைப் படைக்கப் பெற்று வழிவந்த நாம் நம் நிலையை உணராமல் வாழ்கின்ருேம்.

**12–8–80**

அமிலத்தின் கூட்டால் சிவ பிம்பம் பெற்று சக்தி ஒளி ஈர்ப்பில் ஜீவன் கொண்ட ஜீவத்துடிப்பு அனைத்துமே ஆண்டவனுக்குப் பொதுதான். ஆண்டவனின் சக்தியென்று ஆண்டவனை வேண்டி, இறைஞ்சி, பணிந்து பல பாடல்களைப் பாடி ஆண்டவனைப் பெண்ணாகவும், ஆணாகவும், ஒளியாகவும், தாயாகவும், சகோதரியாகவும் அவரவர்கள் வழிவந்த மதக்கோட்பாட்டின் முறைப்படியெல்லாம் இறைஞ்சி துதிபாடுகின்றனர்.

இவ்வாறறிவு படைத்த மனித ஜெந்துக்களுக்கு மட்டும் தான் ஆண்டவன் சொந்தமா? சிறு அணுவும் அவனன்றி அசையாது என்று உணர்த்துபவனும் மனிதன்தான். ஆண்டவனின் நாமத்தைச் சொல்லி அவ்வணுவையே உயிராகக்கொண்ட ஆடு, மாடுகளையும், தன்னை ஒத்த மனித இனத்தையே நரபலி தருவதையும், இவ்வாண்டவனுக்கு சமர்ப்பித்து தன் வேண்டுதலை நிவர்த்திக் கடன் செய்து ஆண்டவனை வணங்குகின்றோம்.

ஆடு மாடுகளுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் அவ்வாண்டவன் சொந்த மில்லையா? மனிதனுக்கு மட்டும்தான் அவ்வாண்டவன் சொந்தமென்றால், மற்ற ஜீவராசிகளுக்கு ஆண்டவன் படைப்பே எல்லாம் என்று துதிபாடும் ஆண்டவன் எங்குள்ளான்?

தவறான வாழ்க்கை நெறியில் உள்ளவனும் வாழ்கின்றான், நல் ஒழுக்கக் கோட்பாட்டில் உள்ளவனும் வாழ்கின்றான். எல்லா ஜீவராசிகளிலும் ஆண்டவன் உள்ளான் என்று உணர்த்தும் எல்லா மதத்தினரும் தன் சுவை உணவிற்காக தன்னை ஒத்த ஜீவ பிராணிகளை உண்டுதான் வாழ்கின்றான். இவனுக்குச் சொந்தமான அவ்வாண்டவன் வந்து மற்ற ஜீவ பிராணிகளைப் பலியிட்டு உண்ணாதே என்றுணர்த்தியிருக்கலாம். அஜ்ஜீவன் பிரியும் தருவாயில் அதன் ஓலத்தைக் கேட்டு ஏன் அந்த ஆண்டவன் வந்து அவற்றைக் காப்பாற்றியிருக்கக்கூடாது?

ஆண்டவனைச் சொந்தம் பாராட்டி ஆண்டவனைத் துதித்து, வணங்குபவனுக்கு அவ்வாண்டவன் சொந்தம். மற்ற ஜீவ பிராணிகளுக்கு ஆண்டவனின் சக்தி சொந்தமில்லையா? ஆண்டவன் என்பவன் எங்குள்ளான்?

'தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான், நீரிலும் இருப்பான், நெருப்பிலும் இருப்பான், நினைத்த நினைப்பில் இருப்பான்' என்னும் ஆண்டவன் எப்படி மனிதனுக்கு மட்டும் சொந்தமாகின்றான்? மதத்தவர் என்ற அடிப்படையில் குறிப்பிடுவதை

எண்ணிச் சாடுவதாக நினைக்க வேண்டாம். உள்ள உண்மையை உணர்த்துகின்றோம்.

இயேசுகிருஸ்துவின் அன்பால் அவரின் சக்தியைத் தெய்வ மாகக் காணும் கிறிஸ்தவ மதத்தின் உண்மைத் தத்துவத்தை அம்மதத்தின் தலைவனே மீறும் நிலையில் எல்லா ஜீவராசிகளையும் ஆண்டவன் இரட்சித்தான், ஆண்டவனின் இரட்சிப்பில் வணங்கி ஜெபிக்கும் நாம், ''பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜீவன்களையும் இரட்சிப்பாய்'' என்று ஜெபத்தில் ஆண்டவனிடம் முறையிட்டு விட்டு, அடுத்த நிமிடத்தில் ஜீவ பிராணி மாமிசத்தைப் புசிக்கின்றோம்.

கிருஸ்துவ மதத்திலும், இதே முறைப்படி இஸ்லாமிய மதத்திலும் நடக்கின்றது. இந்து மதத்தவனோ ஆண்டவன் சன்னிதானம் என்ற கோயில் கட்டி வழிபடும் இடத்திலேயே பலிபீடம் கட்டி ஆண்டவன் ஆடு கேட்கின்றான், மாடு கேட்கின்றான் என்று, தான் வணங்கும் ஆண்டவனையே ஒருமைப்படுத்தி, பலியிட்டு புசிக்கின்றான். அப்பொழுது ஆண்டவன் எங்குள்ளான்?

ஆண்டவுனின் செயலை இம்மாமிசம் புசிப்பவர்கள் செய்யும் முறையில் மட்டும் குற்றம் காணவில்லை. மாமிசம் புசிக்காதவர்களின் செயலென்ன?

ஆண்டவனை பக்தித்துதிபாடி, பஜனைகள் பல செய்து ஆண்டவனுக் கோயிலில் உள்ள கர்ப்பச் சிலைக்கு நீராலும், பாலாலும் பல வாசனைத் திரவியங்களாலும் அபிஷேகம், ஆராதனை செய்து சுத்தமாய் ஆசாரமுடன் கோடி அர்ச்சனைகளை, பலகோடி புஷ்பங்களை சாத்தி, வணங்கி அவ்வாண்டவனின் அருள் பரிபூரணமாய்ப் பெற்றுவிட்ட உவகையுடன் வருபவனுக்கு, அவன் வரும் வழியில் அவன் ஜாதிப்பிணைப்பு என்ற இனத்தவரன்றி மற்றவரின் உடலோ, சில கழிவுகளோ தன் மேல் பட்டுவிட்டாலும், உடனே பெரும் கோபம் கொண்டு அவ்வாண்டவனுக்கு தான் செய்த பூஜை முறையிலேயே அபசாரம் நடந்துவிட்டதாக உள்ளம் உலைந்து நீ வணங்கும் ஆண்டவன் யார்? அவ்வாண்டவனுக்கு உள்ள சக்தி யாவை யென்று வினவினாலும் உடனே இக்கோப அலையைத் தன்னுள் ஏற்றி, பெரிய தவறு நடந்து விட்டதாகச் செயல்படும் ஒரு சாராரும் உள்ளனர்.

என் வினாவில் ஆண்டவன் என்பது யாரென்றே புரியவில்லை. ஆண்டவனின் உண்மை நிலை உணராதவன் எங்கோ காணத் துடிக்கின்றான் அவ்வாண்டவனை. மரக்கறியும் அணுத்தான், மற்றப் பிராணிகளின் உடலும் அணுத்தான். எல்லாமே அணுவாய்

உள்ளபொழுது அணுவின் அணுவாய் அக்காந்த மின் அலையின் ஜீவசக்தியில் கலந்துள்ள அனைத்துமே ஆண்டவனின் சக்திதான்.

ஒன்றின் துணையுடன் ஒன்று வாழ, ஒன்றை அழித்துத்தான் மற்றொன்று வாழ முடிகின்றது. ஆவியாகி, அமிலமாகி ஜீவனாகி பிம்பமாகி, பிம்பம் ஆவியாகி, அமிலமாகி, ஜீவனாகி, பிம்பமாகி, ஆவியாகி சுழன்று ஓடும் சுழற்சி கதியின் சக்திக் கூட்டிற்கு எல்லாமில் எல்லாமாய் நிறைந்துள்ள ஆண்டவனின் சக்தி பிறந்து, வளர்ந்து, மடிந்து, பிறந்து சுழன்று கொண்டே உள்ளது.

முதல் எது? கடைசி எது? உலக சக்தியில் முதலும் கடைசியும் உண்டா? முடிவில்லா மூலவனே மும்மூர்த்தியானவனே என்ற பொருளின் தத்துவம் உங்கள் இருவருக்குமே முதலில் புரிந்ததா?

**13–8–80**

''கண்டார் விண்டதில்லை, விண்டார் கண்டதில்லை'' இதன் பொருள் என்ன? கண்டார் என்பதற்கு, இவ்வுலகின் உண்மை ஞானத்தைக் கண்டார் விண்டு வீண் விரய நிலையில் புரளிகளால், எந்த உண்மையையும், கண்டவர் விண்டு சொல்லமாட்டார். விண்டார் கண்டதில்லை என்பதின் பொருள், விண்டவன் தன் எண்ணத்தில் ஏற்றிக்கொண்ட செயலைத்தான் விண்டு புகட்டு கின்றான்.

இவன் கண்டது எவற்றை? உண்மையை உணர்ந்த ஞானி உண்மையின் தத்துவத்தை உண்மையிலும், ஞானப்போர்வையை புகழ்படுத்திக் காண்பவன். விண்டு உணர்த்தும் நிலைதான் கண்டார் விண்டதில்லை, விண்டார் கண்டதில்லை என்ற பொருள்.

நம் ஞானத்தை வளர்க்க தியானம் வேண்டும். தியானம் பெற ஞானம் வேண்டும். ஞானம் என்பது மனிதனுக்கு எப்படி வளருகின்றது? பல குண நிலையில் வாழும் மனிதன், தன் எண்ண கதியிலேயே, தன் குணமுடனே ஞானம் பெறல் வேண்டும் என்றால் எந்த ஞானமும் வளராது. பல குணங்களுடன் உள்ளவனால் தியானத்தின் செயல் முறைக்கே வரமுடியாது.

தியானம் என்பது மனிதனின் குணத்தை சமமான சாந்த நிலை பெற்றபிறகு, சாந்தத்தினால் இவ்வெண்ணத்தை 'ஓம்' என்ற நாதமுடன் எடுக்கும் முறைப்படுத்தி, நம் கவன நிலையைச் செலுத்தும்பொழுதுதான் ஞானம் பிறக்கின்றது. மனிதனின்

வாழ்க்கையில் சலிப்பு, சங்கடம், கோபம், ஆத்திரம் இப்படியெல்லாம் ஒன்றின் தொடர்கொண்டு ஒன்று வளர்வது இயற்கையே.

இயற்கையின் கதியில், அதே வேகத்தில் நம் எண்ணத்தைப் பாய்ச்சி விட்டால்,வளரும் நிலையற்று அழிக்கும் நிலைக்குச் செல்லுகின்றான் மனிதன். நம் ஆடையில் ஏற்படும் கறையை எப்படி அகற்றினால் அது போகுமென்று பாங்காக மற்ற இடத்தில் கறை படியாமல், உள்ள கறையை போக்க நம் செயல் இருந்தால் துணி பாழ்படாமல் சுத்தமாக அகற்றிவிடலாம். கறை படிந்துவிட்டதே என்று சலிப்புப்பட்டு, அதை அடித்துத்தோய்த்து செயல்பட்டால் அக்கறையும் போகாது, அத்துணியும் நைந்துதான் போகும்.

மின்சாரத்தைப் பாய்ச்சி ஒளியைக் காண்கின்றோம். எந்த அளவு விகிதம் செலுத்தப்படுகின்றதோ அதற்குகந்த வெளிச்சத்தைத்தான் அம்மின் ஒளி ஏற்றித் தருகின்றது. அதைப்போல் இவ்வெண்ணத்தை எந்த ஒரு செயல்முறைக்கும் சாந்தமாக, ஞானத்தைக்கொண்டு ஆராய்ந்து செயல்பட்டால், வாழ்க்கையில் ஏற்படும் குறைகளுக்கு வழிமுறை அமைத்துக்கொள்ளலாம். சலிப்பையும், சங்கடத்தையும் ஏற்படுத்திக்கொண்டால் கோபமும், அழுகையும் தான் ஏற்படும்.

எந்த ஒரு சூழ்நிலையானாலும், எண்ணத்தால் ஞானத்தைப் பாய்ச்சி, அதிலுள்ள சிக்கல்களை அகற்றிவிட்டால், சாந்தமான சமநிலை பெறமுடியும். மேன்மேலும் நம் எண்ணத்தின் வளர்ச்சியில் சாந்த நிலை கூடக்கூட, நம் எண்ணமே சாந்தமாகி, ஞானத்தால் எடுக்கும் வழித்தொடருக்கு சக்தியலை கூடுகின்றது.

சாந்தமான நிலைபெற ஞானத்தால், நம் வாழ்க்கையை வழிப்படுத்திக் கொண்டோமானால்தான், நாம் எடுக்கும் வளர்ச்சிக்கு வழி அமைத்துக்கொள்ள முடியும். எந்த ஒரு சிக்கலுக்கும் எண்ணத்தைத் தெளிவுபடுத்தும் ஆத்மாவினால் சாந்த நிலை பெறுவது கடினமல்ல. பல சிக்கல்களுக்கு, தன் பல எண்ணத்தைக் கொண்டு தெளிவு ஏற்படுத்திக்கொண்டிருப்பார்கள். ஆனாலும் அவர்களின் குண அமிலத்தில் அவர்கள் வளர்த்துக்கொண்ட, அவர்களுக்குச் சொந்தமான வளர்ச்சி நிலைதான் மேலோங்கி நிற்கும்.

எண்ணத்தை சாந்தப்படுத்தி சமநிலை பெறும் ஆத்மாவினால் நிச்சயம் ஞானஒளியின் ஈர்ப்பு வழி செல்ல முடியும்.

**15–8–80**

ஞானத்தின் வழிசெல்லும் போதனை முறையையும், தியான வழிபாட்டின் முறையையும், மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்வதின் நிலையென்ன? என்ற வினு எழும்பலாம்.

இப்பூமி தோன்ற, இப்பூமியின் ஜீவன் பெற, அஜ் ஜீவனின் வளர்ச்சியினுல் மனித ஆத்மாக்கள் தோன்ற, இவர்கள் சொல்லும் இயற்கை சக்தியென்ருலும் இதற்கு மூலசக்தி வளர ஒரு சக்தி தேவை. அச்சக்தி அமிலக்கூட்டு நிலை பெற்ரேோர்கள், நம் சப்த ரிஷிகளின் செயல் வடிவம் தான், நம் பூமியும், பூமியின் வளர்ச்சி யான எல்லாமுமே.

பலகோடி ஆண்டுகளாய் எண்ணிலும், கருத்திலும் எடுத்துக் கொள்ள முடியாத மாற்றங்களின் செயல்திறனில் வழிவந்த நிலையில் மனித இனம் தோன்றி, மனித இன குண அமில வளர்ச்சி யிலிருந்துதான் மீண்டும் மீண்டும் சகல சக்திகளையும், சக்தி வழிபெற செயலாக்க முடியும் என்ற உண்மையின் தத்துவத்தில், தான் வடித்த வடிவான, மனித மகசூலான, இந்த ஞான ஒளியைத்தான் நம் சப்த ரிஷிகள் காணத் துடிக்கின்றனர்.

தன் செயலின் பலன்தான் மனித இனம். இம் மனித இனம் தோன்றி வளர, சப்த ரிஷிகளின் செயல் காலத்தில் பல கோடி ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. இவ்வினம் தோன்றி, அவ் வினத்தின் ஒளியை எடுத்தால்தான் மீண்டும் மீண்டும் இவ்வின வளர்ச்சிக்கு அவர்கள் பயிர் செய்ய முடியும். செய்த மகசூலில் வரும் பயிரெல்லாம் உணவாகி உண்டு கழித்துவிட்டால், மீண்டும் பயிர் செய்ய விதை நெல் தேவைப்படுகிறது.

அவர்கள் செய்த பயிருக்கு மகசூல் பெற்று, அம் மகசூலில் மீதமான விதை நெல் இருந்தால்தான், மீண்டும் மகசூல் காண முடியும். இதன் அடிப்படையின் நிலையை ஒத்துத்தான், நம் சப்த ரிஷிகளின் நிலையும் மகசூலைக் கண்டு, அதிலுள்ள பலனுல் மீண்டும் மீண்டும் பயிர் செய்ய செயல் புரியும் நிலைதான் இங்கு இன்றுணர்த்தும் நிலையும். இதனை ஒத்துப் பல நிலைகளில் செயல் புரிந்து வருகின்றனர்.

இம்மனிதக் கரு தோன்றி, இதுநாள்வரை அவர்களின் ஒளி வட்டத்தில் கலக்கும் நிலைகொண்ட ஆத்மாக்களின் வளர்ச்சியைக் காண, பல காலமாய்ப் பல செயல்களைப் புரிந்து வருகின்றனர். ஆனுல் இம்மனித ஆத்மாக்களின் எண்ண வாழ்க்கையில்,

அவ்வொளி ஞானத்தின் சித்து நிலைபெறப்படுவது மிகவும் குறைந்தே வருகின்றது.

தன் ஞான வளர்ச்சியை உலகுக்கு உணர்த்தத்தான் அந்தந்த காலகட்டத்தில் அச்சப்த ரிஷிகளே தோன்றி, அக்கால மாற்றத்தில் சில நிலைகளைச் செயல் புரிந்து, தன் ஒளியின் ஆத்மாக்களை எடுத்ததின் நிலைதான், நாம் இன்று கேள்விப்படும் பல மகான்கள் தோன்றிய நிலையெல்லாம்.

இயேசு கிறிஸ்துவும், முகமது நபியும், புத்தரும் அதே போன்று ஐயப்பரும், ஆதிசங்கரரும் தோன்றியதின் நிலையெல்லாம் தான் வளர்த்த பூமியின் சக்தியிலிருந்து, தன் சக்தியின் பலனைப்பெற்றால்தான், மீண்டும் அச்சப்த ரிஷிகளுக்கு அவர்களின் செயலின் மண்டலம் தோன்றி, வளர்ந்து ஜீவனை வளர்க்கமுடியும்.

சூரியனைச் சுற்றி உள்ள நாற்பத்தி ஏழு மண்டலங்களில், நம் பூமியில் மட்டும் இன்று மனித ஆத்மாக்கள் வாழ முடிகின்றது. இன்று வாழும் இதே நிலை இக்கலியின் மாற்றத்தில் அழியப் பெறுவதினால் மீண்டும் மனித ஜெனனம் தேவை. காற்று மண்டலமே விஷக் கோளமாய்ச்சுழலும் இக்கலியில், இதன் வளர்ச்சி நிலையின் மாற்றத்தின் பொழுது, மனிதன் தன்னைத் தானே அழித்துக்கொள்ளச் செயலாக்கியுள்ள இவ்விஷக்குண்டுகள் வெடிப்பதற்கு முதலிலேயே, இம்மனிதனின் ஞானம் ஒளி பெற்றால், அச்சப்த ரிஷிகளின் ஒளிக்கூட்டு அதிகப்படும்.

உலகமே விஷமாகி, ஜீவராசிகள் அனைத்துமே மடியப் போகின்றன என்றால், ஞானம் பெறுபவன் எப்படித் தப்புவான்? என்ற வினா எழும்பலாம். ஒரு பானை சாதம் வடிக்கின்றோம். அப்பானையிலிட்ட அரிசிகளெல்லாம் வெந்து சாதமானாலும் அதிலுள்ள கல் வேவதில்லை.

பூமியில் உற்பத்தி செய்தது தான் அப்பானையும், கல்லும், அரிசியும் விறகும் எல்லாமே. அதனதன் வளர்ச்சி கொண்டு விறகு எரிந்து உஷ்ணத்தைக் கக்கி சாம்பலாகிறது. சுட்ட சட்டி எந்த உஷ்ணத்தை ஏற்றி அடுப்பு எரித்தாலும், அது தாங்கி, நீரை ஆவியாக்கி, அரிசி எல்லாவற்றையும் வேக வைத்தாலும், அக்கல் எந்த உஷ்ணத்திற்கும் அப்படியே உள்ளது. அதைப் போன்று, ஒளியின் சக்தியால் பிம்பம் கொண்ட நாம், அச்சக்தி பிம்பத்தின் பிம்ப ஞானம் பெற்றால், இப்பூமியின் மாற்றத்தினால் நீரும், நெருப்பும், விஷ வாயுவும் நம் ஒளியை எந்த பின்னமும் படுத்தாது. சாதத்தில் கொதித்து வந்த கல்லைப்போன்று.

**16–8–80**

நம் பூமியில், சப்த ரிஷிகளின் செயலினுல் அந்தந்தக் கால மாற்றத்தில், அவர்களின் சக்தியை உணர்த்தப் பல உடல்களே ஏற்று, இம்மனித ஆத்மாக்களே வழி நடத்திச் சென்றனர் என்று உணர்த்தினேன்.

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் நடந்தவை என்ன? முந்தைய பாட நிலேயில் இயேசுபிரானின் பிறப்பு நிலேயை உணர்த்தி வந்தேன். அன்றுள்ள மக்களுக்கு, அம் மக்களேத் தன் ஒளி வட்டத் துக்குள் கலந்திட, சப்த ரிஷியினுல் இயேசு கிருஸ்து அவதரித்தார். அவ் இயேசு கிறிஸ்துவை, அன்றைய மக்கள் ஏற்றுக்கொண்டு அவர் வழி நடக்கத்தவறி, அன்றைய அரசு தன் புகழ் குறையும் என்பதற்காக அம் மகானேத் துன்புறுத்திய நிலேயைத்தான் உலக மறியும். ஆனுல் அவ் இயேசுகிருஸ்துவால் செயலாக்கிய நிலேகள் எவை, என்பதை உணர முடிந்ததா? பரிவையும், பண்பையும் பாசத்துடன் அன்பாக்கி ஊட்டிச்சென்ருர் இயேசுபிரான்.

அவர் அவதாரத்தில் வந்து அன்பையும் பண்பையும் மட்டும்தானு புகட்டிச் சென்ருர்? ஓர் மகான் தன் நிலேயை உணர்த்த, உலகத்தின் ஜீவ ஆத்மாவின் உடலில் ஏறிச் செயல் பட்டாரென்ருல், அம் மகானுக்கு எந்த நிலேயெல்லாம் ஏற்படு மென்று தெரியாமலா போய்விடும்?

இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தினுல், அவர் வழி ஏற்று அவரின் சக்தி அலேயைப் பெற்ற பல ஆத்மாக்களுக்கு அவரால் திராட்சை இரசம் அளிக்கப்பட்டது. இன்றும் கிறிஸ்துவ மத ஆலயங்களில் அத்திராட்சை இரசம் தரப்படும் முறையுள்ளது. ஆனுல் இயேசுவினுல் தரப்பட்ட திராட்சை இரசமுடன், அவரது சக்தியுடன் அவர் பெற்ற நல் ஒளியின் சக்தி அலேயை போதைப் படுத்தி அந்த இரசத்துடன் கலந்து பலருக்கு அளித்து, அவர்களின் உடலிலேயே பல ஒளி அலேகளேப் பாய்ச்சி, அவரது செயலுடன் அவர்களின் எண்ணத்தையும் கலக்கச் செய்து, அதனுல் அவரின் ஒளி வட்டத்தை இப்பூமியில் என்றும் நிலேக்கும்படி செயலாக்கி விட்டுத்தான் அவ் இயேசுபிரான் சென்ருர்.

இன்றளவும் அவரின் பெயர் நிலேக்கப்படுகிறதென்ருல் எதன் அடிப்படையில்? இயேசுவே என்ற ஒலி அலேயை எடுக்கும் ஆத் மாக்கள் அலேயுடன், அவர் பெற்ற சக்தி அலேகள் இன்றளவும் பரவிக்கொண்டுதான் உள்ளன. இயேசு கிருஸ்துவினுல் அன்று தரப்பட்ட திராட்சை இரசம் அருந்திய ஆத்மாக்களின் உடல்

வழித்தொடர் கொண்ட ஆத்மாக்கள் இன்றும் யூதர்கள் என்ற சமுதாயத்தில் உள்ளனர். அவர்களின் உடலின் தன்மையிலேயே பல வீரிய சக்தி நிலை குணங்களுடன் பிறந்து வாழுகின்றனர்.

யூதர்களினுல் இன்றும் பல நல்ல அலைகளை எடுத்து உலகிற்கு பயன்படச் செய்ய முடிகின்றது. ஒவ்வொரு உடல் தன்மைக்கும் பல மாற்றங்கள் உண்டு. ஒன்றை ஒத்த நிலையில் ஒன்றில்லை. ஒன்றுபோலவே எல்லாமிருந்தால் எந்த வளர்ச்சிக்கும் வழி யில்லை. யூதர்களின் உடலின் சக்தி அமில குணமே உயர்ந்த நிலையில் வளர்ச்சியுற்றுச் செயல்படும் வண்ணம் வைக்கப்பட்டது இயேசுகிறிஸ்துவினுல்தான்.

இயேசுகிறிஸ்துவை விஷத்தை அருந்தச் செய்தும் அவர் ஆத்மா பிரியவில்லை; சிலுவையில் வைத்து அறைந்தும் அவர் ஆத்மா பிரியவில்லை. பல அமில குணங்களின் உணர்வின் எண்ணத்தில் வாழ்ந்திருந்தால், அவர் ஆத்மா பிரிந்து சென் றிருக்கும். ஆத்மா பிரியாத உடலைத்தான் இவர்கள் கல்லறையில் வைத்தார்கள். பூமியிலும் காற்றுள்ளது, பூமியின் உள் நிலை யிலும் காற்றுள்ளது. மகானின் உடலை இம்சித்ததாக இவர் களையே இம்சைப்படுத்திக் கொள்ள வேண்டாமென்ற உணர்வினுல் தான், 'அவர்களின் ஆத்மா நிம்மதி பெறப்படும், அவர்களின் ஆசையும் தன் ஆசைதான்' என்று அவர்களின் இம்சைக்குத்தான் உட்பட்டு இயேசு பிரானும் செயல்பட்டாரேயன்றி, தான் உயர்ந்த மகான் என்று அந்த நிலையில் உணர்த்தித் தன் உயர்வைக் காட்ட வில்லை.

ஒவ்வொரு ஆத்மாவும் உயரவேண்டுமென்று உலகிற்கு வந்த அவதார புருஷர், தன் உயர்வை உணர்த்திச் செல்வாரா? அவரின் செயல்தான் இன்றளவும் தொடர்ந்திருக்குமா? என்று இவ்வுடலை ஏற்ருரோ அவ்வுடல் அக்கல்லறையில் அப்படியேதான் உள்ளது. அவர் வந்து சென்று வளர்த்துச்சென்ற ஒளி அலையின் வட்டமும் வளர்ந்து கொண்டுதான் உள்ளது இன்றளவும்.

**18–8–80**

யூத இன உடலை ஏற்று, யூதர்களின் வம்ச வழியில் இயேசு பிராஞல் பாய்ச்சப்பட்ட ஒளி அலையைக் கொண்டு, இன்று வரையும் அவ் யூத இன வம்ச வழித்தொடர் கொண்ட ஆத்மாக் களுக்கு அறிவு ஞானம் வளரச் செய்தார் இயேசுபிரான். அன்று ஆண்ட அரசர்கள் தன் நிலை குறையாமல் இருக்க இயேசு பிரானை இம்சித்தது யூதர்கள் என்று பழியை அவர்கள் மேல் போட்டு,

தன் உயர்வை மங்காமல் பாதுகாத்துக்கொள்ள மறைக்கப்பட்ட நிலேயும், யூத சமுதாய இன மக்கள் எங்கிருந்தாலும் அவர்களே அழிக்க வேண்டும் என்ற வெறியில் அன்று பலரை அன்ருண்ட அரசர்கள் அவ் உடல்களே அழித்தார்கள்.

அவ்வுடல்களில் ஏறிய ஒளி அலே, அழித்த உடலிலிருந்து எங்கப்பா சென்றிருக்கும்? இன்றும் யூத இனத்திலிருந்து தப்பி வந்த மக்கள்தான் இந்தியாவிலும் ஆரிய இனங்களாய்க் குடி யேறி வழித்தொடர் பெற்று இன்று வரை சமுதாயச் சுழற்சியில் உள்ளனர்.

இவ்வுலகினில் விஞ்ஞான, தொழில் நுட்ப வல்லுனர்களில் உயர் ஞானம் கொண்டவர்களில், பெரும்பான்மையோர் யூத சமுதாய இன மனிதர்கள்தாம். இயேசுபிரானே அன்ருண்ட அரசர்கள் அவர் சக்தி வெளிப்படாமல் இருக்க ஒரு தடங்கலே ஏற்படுத்தி இருக்காவிட்டால், இயேசுவின் ஞானத்தினுலேயே இவ்வுலக மனித ஆத்மாக்களுக்கு அன்றே பல உயர்ந்த சக்திகளே இன்னும் வளர்ச்சிப்படுத்தி இருப்பார்.

இயேசுபிரான் ஏன் உடலே விட்டுச் சென்றபிறகு வளர்ச்சி அளித்திருக்கக் கூடாது? மகானின் சக்தியிலும் தடங்கலா? என்ற வினு எழும்பலாம்.

ஜீவ உடலில் இருந்து எடுக்கும் சுவாச அலேயில், இப்பூமிக்கு வேண்டிய சக்தி அலேயை ஈர்க்க, எண்ணத்தின் உணர்வால் எடுக்கும் சுவாசத்தில் அவ்வொளி அலே காந்தத்தன்மை ஈர்ப்பிற்கு வர வேண்டும்.

பொதுவான மண்டலம் தான் பால்வெளி மண்டலம். பல மண்டலங்களுக்கும் பால்வெளி மண்டலம் தான் சக்தி தருகின்றது. ஆனுலும் ஈர்ப்பிற்கு வருவதற்கு இவ்வெண்ண சுவாசத்தில் எடுக் கும் அலேயின் காந்தத் தன்மைதான் பூமியில் பாய முடியும். எண்ணத்தால் வழிப்படுத்தும் செயலினுல் தான் பூமிக்கு ஈர்ப்பு சக்தி கூடியதேயன்றி தானுக எதுவும் நடக்கவில்லே.

மகான்களின் சக்தி ஒளியை ஆத்மாக்களின் எண்ணத்துடன் பாய்ச்சி, அவர்கள் எடுக்கும் சுவாச அலேயினுல்தான், பிற மண்டலங்களின் ஒளி அலேயும் நமக்குக் கிட்டும். அன்றைய புராணக்கதைகளில் விளக்கியுள்ள சனிபகவான், கேது, செவ்வாய் இப்படி ஒவ்வொரு மண்டலங்களுக்கும் உருவங்களேயும், கோவைக் கதைகளேயும் எதற்காக உணர்த்திச் சென்ருன் நம் சித்தன். தெரிந்தோ தெரியாமலோ கதை உருவில் காணும் உருவ ஈர்ப்பில்

எண்ணம் செல்லும்பொழுது அவ்வலை சக்தி பூமியில் வந்து பதிகிறது.

இயேசுபிரானின் காலத்தில் தேவலோகத்திலிருந்து தேவ தூதர்கள் நட்சத்திரங்களாய் மின்னி வந்தார்கள் என்று எதனை உணர்த்தினார்கள்? இயேசு பிரான் வந்ததினால் தான் நம் பூமிக்கே பல மண்டலங்களின் ஈர்ப்பலையின் தொடர் ஏற்பட்டது. இயேசு பிரான் சில மலைகளிலிருந்து ஜெபம் செய்தார். அம்மலைகளுக்கே சில ஒளி அலையை எடுக்கும் முறைப்படுத்திச் சென்றார். அவரது ஒளி அலை பாயப்பட்ட பல ஆத்மாக்கள் யூத இன சமுதாயத்தில் சித்து நிலையிலும், சூட்சும செயலிலும் அவர் இருந்த காலத்தி லிருந்த மனித ஆத்மாக்களே இன்றுவரையிலும் உள்ளனர்.

விஞ்ஞானத்தால் பல சாதனைகளைப்படுத்திப் பல மண்டலங் களுக்குப் பல விஷவாயுகுண்டுகளைச் செலுத்தி, அதனை வெடிக்க வைக்கும் முறையெல்லாம் படுத்தி, குரோத உணர்வின் நாட்டுப் பற்றுவெறியினாலும், ஜாதி மத இன வெறியினாலும் செய்யப்படும் சூழ்ச்சிகளையெல்லாம், இன்றும் மாற்றியமைத்து வருகின்றனர் இயேசுபிரானின் வழித்தொடரின் ஆசி பெற்ற யூத இன சித்து நிலைகொண்ட சிலர்.

என்றோ அழிந்திருக்க வேண்டிய இப்பூமியை வெறியுணர்வு கொண்ட சமுதாய இன மக்களை அவர்களின் எண்ணத்தில் ஏற்படும் செயல் விளைவுகளை யெல்லாம் மாற்றிக்கொண்டுதான் இச்சித்தர்கள் உள்ளார்கள். இவர்கள் துதிக்கும் மடாலயங்களில் சிலுவையில் அறையப்பட்ட, சோர்ந்த முகம் கொண்ட இயேசு பிரானைக் காணுகின்றார்கள். அவ் இயேசுபிரான் செயலாக்கும் முறையை உணர்கின்றார்களா? இன்றைய சமுதாய மக்களின் நிலையில், குணங்கள் அவர்களால் ஏற்பட்டதல்ல, அவர்களை மாற்றியமைக்க விஞ்ஞான ரீதியில் செயல்படுத்திய இயந்திர மனிதர்கள்தான் இன்று ராணுவம் என்று செயல் படுத்தப்பட்ட மனிதர்கள், எந்நிலைகொண்டு?

**30–8–80**

மனிதனையே, அவன் உணர்வின் அலையையே நாட்டின் இன வெறி உணர்வு கொண்ட செயலுக்காக, பேராசையில் தன் நாடு என்ற உணர்விற்காக, தன் நாட்டையும், தன் பலத்தையும் கூட்டிக்கொள்ள, பல மனித ஆத்மாக்களுக்கு, அன்றே இராணுவ முறையினால் மனித ஆத்மாவின் உணர்வின் எண்ணத்தை மாற்ற, போதை வஸ்துக்களை உண்ணச் செய்து, அப்போதையின் உணர்

வுடன் மனிதன் உள்ள நிலையில், அவன் எண்ணத்துடன் குரோத வெறி சக்தியான இராணுவப் பயிற்சி முறைகள் ஊட்டப்பெற்று, வழிப்படுத்தி அதே உணர்வலையின் சுற்றலில் மனித ஆத்மாக்களின் எண்ணத்தை அன்றாண்ட அரசியல் வீரர்களில் சிலரால் வழிப் படுத்திய நிலை இன்றளவும் உள்ளன.

சர்சில் ஆண்ட காலத்திலும், ஹிட்லரின் காலத்திலும் அவர் களின் ஆட்களின் உணர்வுடன் இப்போதை வஸ்துக்கள் செலுத் தப்பட்டு, போதை உணர்வுடன் மனிதன் உள்ளபொழுது, அவ னுக்கு எந்த உணர்வின் பயிற்சி அலையைப் புகட்டினர்களோ, அதே உணர்வின் செயலைச் செய்யத்தக்க மனித ஆத்மாக்களை உருவாக்கி விட்டனர், அன்றிருந்த அரசியல் தலைவர்கள். இன்றும் இதன் வழித் தொடர் சில நிலைகளில் உழன்றுகொண்டுதான் உள்ளது. மனிதனை மனிதனே உண்ணும் உணர்வலை கொண்ட வெறிக் குணங்களின் செயல்கள் சில பாகத்தில் நடந்து கொண்டுதான் உள்ளன.

விஞ்ஞான ரீதியிலும், சில மந்திரவாதிகளின் நிலையிலும் தன் இன வர்க்க உணவையே உண்டால், தனக்கு வீரிய சக்தி கிடைக்கும் என்ற உணர்வில், பல செயல்கள் நடக்கின்றன, இவ் வுலகின் பல பாகங்களில்.

இயேசுகிறிஸ்து அக்காலத்தில் தோன்றிச் சில ஒளி அலைகளைச் செயலாக்கிச் சென்றார். முகமது நபியின் காலத்திலும் அவர் எடுத்த அலையின் தொடர், அவர் வாழ்ந்த, அவரின் எண்ணமுடன் செயல்பட்டவர்களுக்கு, தன் சக்தி அலையைப் பரப்பித்தான் சென்றார். இயேசுகிறிஸ்துவின் காலத்திலும், நபிகளின் காலத் திலும் மனிதர்களின் எண்ணத்தைக்கொண்டு, அவர்களின் எண் ணத்தை, நல் உணர்வில் சுழற்சிப் படுத்தி, ஒளி அலையை அவர்கள் பால் செலுத்தி, அவர்களின் ஆத்மாவை வளர்க்கச்செய்து, ஒன்றைப் பலவாக, நல் அலையைப் பரப்பச்செய்த செயலில் அவ்வுணர்விற்கு உகந்த ஆத்மாக்களைச் செயல்படுத்துவது கடின மாகிவிட்டது.

இதன் நிலையை மாற்றி அமைக்கத்தான் போகரின் நிலையே சீனாவில் தோன்றி, போகரால் மனித ஆத்மாக்களை எப்படி திசை திருப்புவது, என்ற உணர்வுக்குகந்த செயலாக்க போகரினால் பல மருத்துவ முறைகளும், பல போதை வஸ்துக்களும் உருவாக்கப் பெற்று, அப்போதை வஸ்துக்களை மனிதனை உண்ணச் செய்து, எண்ணத்தை போதை நிலையுடன், பக்தி மார்க்கத்தில் உணரும் ஜெப முறைகளை போகர்தான் வெளிப்படுத்திச் சென்றார்.

போகர் செய்வித்தது போதை வஸ்துவைக் கொண்டு நல் லுணர்வை ஜெபப்படுத்தி, மனித ஆத்மாக்களை அவரது உணர் வலையின் சுழற்சி வட்டத்துடன் செயல்படுத்தப் பல முறைகளைச் செய்வித்தார் போகர்.

ஆனால் மனித ஆத்மாக்கள் அதனையே ராணுவ முறைக்கும் உட்படுத்தி, எண்ணங்களை வெறி உணர்வாக்கும் சுழற்சிக்கும் செயல் படுத்தி விட்டனர். போகரின் காலத்தில் தான் இவ்வெடி குண்டுகளைத் தயாரிக்கும் நிலையெல்லாம் சீன தேசத்தில் செயல் படுத்திக் காட்டினார். சீனாவிலிருந்துதான் இன்று விஞ்ஞானத்தில் செயலாக்கும் எல்லா நிலைகளுக்கும் பயன்படுத்தக் கூடிய, அன்று போகரினால் வெளியிடப்பட்டு எழுதிய ஓலைச்சுவடிகளில் இருந்து தான் பல செயல்கள் உருவாயின.

போகரால் நல் வழிக்குப் பயன்படுத்த எண்ணிய முறைகளே, அரசியலின் நிலைக்கு உட்படுத்தப்பட்டு, நன்மைக்காக செயல் படுத்த எண்ணிய முறையே தீயவை வளர முன்னோடியாகி விட்டது. இதை உணர்ந்த போகர் தன் உணர்வின் சக்தி அலையை எப்படிக் கூட்டிக்கொள்ளலாம், என்ற செயலுக்காகத் தான் போக ரால் சிலை வைத்து, சிலையை ஆண்டவனாக உணர்த்தி, அச்சிலையை எண்ணி வணங்கினால் அவ்வெண்ணத்துடன் தன் உணர்வின் ஒளி அலையைப் பாய்ச்ச முடியுமென்ற நற்குணங்களின் வடிவாய் முருகா என்ற ஆறு குணங்களைத் தெய்வமாக்கி அன்பு, பண்பு, பாசம், பரிவு, வீரம், சாந்தம் என்ற நற்குணங்களை முருகனாக வடிவம் படைத்து மலை உச்சியிலும், மலைக்கு நடுவில் இடும்பன் என்ற தீய குணங்களைப் படைத்து, இடும்பன் என்ற நிலையையும் உணர்த்தி ஒவ்வொரு மனித ஆத்மாவுக்கும் அவன் வாழ்க்கையில் அதனை விட்டு, வாழ்க்கையில் உயர்வான நிலையைக் குறிக்க மலையின் மேல் முருகனின் சிலையை, அறு குணங்களை ஆறுமுகனாய்ப் படைத்து, சிலை வைத்து வணங்கும் முறையை ஏற்படுத்தியவர் போகர்தான்.

அவர் உணர்த்திய உணர்வையே பல கதைகளாக, தெய்வப் படைப்புகளாக இன்று வழி வந்து வழி காண்கின்றோம்.

**31–8–80**

நாம் தீபாவளிப் பண்டிகையை எதற்காகக் கொண்டாடுகின் றோம்? போகரின் காலத்திற்குப் பிறகு, போகரால் வழிப்படுத்திச் சென்ற பண்டிகைதான் திபாவளிப்பண்டிகை. நம்முள் உள்ள அசுர குணங்களை அழித்து, நற்குணங்களின் ஒளியைப் பெறத்தான் தீபாவளிப் பண்டிகை கொண்டாடும் முறை உணர்த்தப்பட்டது.

ஆனுல் இன்றைய எண்ண ஓட்டத்தில் அசுரனையே வணங்கும் முறைப்படுத்திச் செயல்படும் வழியான எண்ண ஓட்டங்கள் வளர்ந்துவிட்டன. அந்நாளில், தீய குணங்களை அகற்ற வேண்டிய நாளில், சமமான எண்ணத்தை சாந்தமுடன், புத்தாடைபுனைந்து மகிழ்ந்து, தீபமேற்றி உற்ருர், சுற்றமுடன் இனிமையுடன் கலந் துறவாட ஏற்படுத்திய தினத்தை சந்தோஷமுடன் எவ்வாத்மா அவ்வழியில் கொண்டாடுகின்றது?

சமுதாய இனப்பிடிப்பாக அந்த நாள் பல இன்னல்களுக்கு மனித ஆத்மாக்கள் செல்லக்கூடிய உணர்வு வட்டத்தில் சுழன்று கொண்டுள்ளது. இன்று சித்தர்களினுல் ஒவ்வொரு உணர்வலை களையும் உணர்த்திச் சென்றதின் பொருள் வேறு. இன்றைய மனித ஆத்மாக்கள் செயலாக்கும் பொருள் வேறு. ஒவ்வொரு காலத்திலும் சப்த ரிஷிகள் சிலர் உடல்களை ஏற்று எதற்காக அவர்களின் உணர்வலைகளை வெளிப்படுத்திச் செல்லுகின்றனர்

படைப்பின் படைப்பையே படைக்கப்பட்டவனின் படைப் பாக்க அவர்களின் செயல் முறை செயலாக்குகின்றதப்பா. ஆவி யாகி, பிம்பமாகி, ஆவியாகிச் சுழலும் வளர்ச்சியில், சுழற்சி நிலைக்கொப்ப வழி நிலை செல்லாமல், சுழற்சியின் சக்தியைப் படைக்கப்பட்டவனிடம் சமர்ப்பிக்கும் செயலுக்கு சப்த ரிஷிகள் துணை செய்கின்ருர்கள்.

நீரின் ஓட்டத்தை எப்படி நாம் அதன் இச்சையில் விடாமல் அந்நீரைத் தேக்கி வைத்து, அணைகள் கட்டி, அந்நீரின் சக்தியை பல ரூபங்களில் பயன்படுத்திக் கொள்கின்ருேம. அதைப் போல் பால்வெளி மண்டலத்தில் படர்ந்து, சுழன்று நிறைந்துள்ள அமில குணங்களின் ஈர்ப்பை உருவமான உலகமாக்கி, உலகினில் கருவைக்கொண்டு உருவாக்கி, உருவின் உருக்களாய் பல உருக் களை வளரச் செய்து, தன் ஞானத்தின் சக்தி அலைக்கு சக்தி எடுத்துக்கொள்கின்றனர். நாம் பலன் காணத்தான் பலவற்றையும் செய்கின்ருேம். ஒவ்வொரு மனிதனும் தன் எண்ணத்தில் அவன் எண்ணத்திற்குகந்த நிறைவைக் காண நித்தமும் செய லாற்றுகின்ருன்.

எண்ணியோ, எண்ணுமலோ எல்லா ஆத்மாக்களும் தன் உணர்வில் வழிபெறுவது எதனை? வாழ்க்கையில் தன் உணர் வுக்குகந்த எண்ணச்செயல் நிறைவுருதவன் தான், விரக்தி என்ற வீண் சலிப்புடன் வாழ்க்கையை முடித்துக்கொள்ளத் தற்கொலை நிலைக்கும் தன் உணர்வைச் செயலாக்குகின்ருன்.

வெறுப்பு, விரக்தி என்ற நிலை மனிதனுக்கு எப்படி ஏற்படு கின்றது? தன் உணர்வின் எண்ணத்திற்கொப்ப எண்ணச் செயல் நிறைவுறாத தருணத்தில் சலிப்பும், சோம்பலும், விரக்தியும் உட்பட்டு, தன் ஆத்மாவையே மாய்த்துக் கொள்ளும் வழிக்குச் செல் கின்றான். உணர்வாலும், உருவாலும் தன் நிலையை எண்ணு பவன் உருவ உணர்வின் எண்ணத்தின் சுழற்சியிலேயே சிக்குண்ட வாழ்க்கை உணர்வை மாற்றி எண்ணத்தால் உணரும் ஞான வழிபாட்டில் தன் உணர்வைச் செலுத்தினால் விரக்தியும், சலிப்பும் அற்று விவேகம் பெறலாம்.

இவ்விவேக உணர்வலையின் ஞானத்தை உணர்ந்து வாழ்க்கை யில் எண்ணும் நிறைவைப் பல ஆத்மாக்கள் பெறுகின்றனர். ஆனால் இன்றைய காலத்தில் மனிதனின் உணர்வலை அனைத்தை யுமே, அரசர்கள் ஆண்ட காலத்தில் தன் உயர்வை வெளிக்காட்ட கதைகளையும், கற்பனைக் காவியங்களையும், உண்மையென்ற வாழ்க் கையின் நெறியில் கலந்துவிட்ட உணர்வலையின் சுழற்சியில் உழன் றுள்ள இந்நிலை மாறி, சப்த ரிஷிகளின் செயல் வட்டத்திற்குள் சென்றால் தான், சப்த ரிஷிகளின் செயலுக்கே, அவர்களின் உணர் வின் உணவு கிடைக்கப்பெற்று, அவர்களுக்கு அவர்களின் சக்தி அமிலத்தைக் கூட்டி, மீண்டும் மனிதக் கரு தோன்றினால் தான், மனிதக் கருவின் பிம்ப உடல் ஞானத்தை வைத்துத்தான், மீண்டும் மனித சமுதாயம் காண முடியும்.

மனித சமுதாயத்தின் எண்ண ஈர்ப்பு அலை இருந்தால் தான், சப்த ரிஷிகளின் செயலுக்கு உணவே கிடைக்கும். உணவு இல்லா விட்டால் அவர்களின் உணர்விற்கு உருவில்லை. சப்த ரிஷிகளின் செயல் அந்தந்தக் காலகட்டத்தில் உணர்த்தப்படுகிறதென்றால், இவ் அடிப்படையில் தான். இக்கலி மாறி கல்கி வரும் தருணத்தில், இன்றுள்ள எண்ண உருவ சுவாச மக்கள், இதே உணர்வலையில், இப்பிம்பங்களை மாற்றி மீண்டும் மனித அமில ஜீவன் தோன்றி னால், இன்றுள்ள ஞானத்தைக்காட்டிலும், உருவ பிம்ப அழகைக் காட்டிலும், முற்றும் மாறுபட்ட உருவ அமைப்பு, ஞான உரு வங்கள்தான் அமையப்பெறும். அதுவும் இக்கலி மாறி கல்கி மனித ஜீவன் கொள்ளப் பலப்பல ஆண்டுகள் ஆகிவிடும். காற்று மண்டலத்தில் உருளும் அமில உயிர்களுக்கெல்லாம் மீண்டும் ஜீவன் கொள்ளும் காலத்திற்குள் பல மாற்றங்கள் ஏற்பட்டு விடுவதினால் இன்றைய ஞான சக்திகளைச் செயலாக்கக் கூடிய பிம்ப ஜீவன்களான நாம், நம் சப்த ரிஷிகளின் உணர்வலையின் சக்தியுடன் ஜெபம் கொண்டால், அவர்களின் செயலின் சக்திக்கு நம் சக்தியும் கூடி செயல்கொள்ள முடியும்.

1–9–80

சப்த ரிஷிகள் தான் பூமியின் வளர்ச்சியில் மனிதக் கரு தோன்றி, மனித ஞானம் பெற வழி வகுத்தனரே, இக்கலி மாறி கல்கியில் மனிதக் கரு வளரவும், மனித ஞானம் வளரவும், சப்த ரிஷிகளே ஏன் மீண்டும் அவர்களின் செயலைச் செயலாக்கிடல் கூடாது? என்ற வினு தோன்றலாம்.

செடி சிறியதாக உள்ளபொழுது அதற்குகந்த ஆகாரத்தைச் செலுத்தினுல் போதும். வளர வளர வளர்ச்சிக்குகந்த ஆகாரம் தேவைப்படுகிறது. வளர்ந்து முதிர்ந்த மரமான பிறகு, தன் உணவைத் தானுகவே எடுத்துக்கொள்ளும் வளர்ச்சியில் மர முள்ளது. சிறிய பயிர்களுக்கு நாம் நீருற்றித்தான் வளர்க்க வேண்டும். முற்றிய மரத்திற்கு அதன் உணவை அதுவே எடுத்துக் கொள்ளும்.

அதைப்போன்று சப்த ரிஷிகள் அவர்களின் சக்தியை பூமியின் மனிதக் கரு வளர்த்துச் செயல்படுத்த, ஆரம்ப வளர்ச்சிக்கு, ஆரம்ப நிலைக்குகந்த உணவு படைத்தால் போதும். வளர்ச்சியின் பெருக்கம் கொண்ட பிறகு, வளர்ச்சிக்குகந்த உணர்வலைகளை அவர்கள் செலுத்த வேண்டியுள்ளது.

இன்று பலவாகப் பெருகியுள்ள மனித எண்ணங்களின் ஈர்ப்பு நிலைக்கும் கிருஷ்ணுவதாரம், இராமாவதார காலங்களின் எண்ண ஈர்ப்பிற்கும் பல மாற்றங்கள் உண்டு. பெருகியுள்ள இன வளர்ச்சி யின் அழிவு நிலை நெருங்கிவிட்டது. மனித ஆத்மாக்களுக்கு தன் உணர்வைத் தானறியும் பக்குவம் முறைகள் எல்லாம் மாறி, உலகப் பொது எண்ணச்சுழற்சி ஈர்ப்பே நாகரிகம் என்ற உணர்வின் பேராசைப்பிடியில் செயல்பட்டு விட்டதினுல், இப்பெருகிய மனித இனக் கரு, இக்கலி மாற்றத்தில் மாறப்பெறுவதினுல், இம்மாற்ற காலத்திற்குள், சப்த ரிஷிகளினுல் இவ்வளவு காலங்களும் அங்கங்கு செடியாக உள்ள பயிருக்குகந்த உணவளித்த நிலை, அப்பயிரே மரமாகி தன் உணவை எடுத்துக்கொள்ளக் கூடிய ஞான நெறி முறைக்கு ஈர்த்துச் செல்லுகின்றனரப்பா.

பஞ்சாக உள்ள எண்ணங்களை, பஞ்சை எப்படி பக்குவப் படுத்தி, பதம் பிரித்து அதனதன் குணத்திற்கொப்ப நூற்பு நிலை ஏற்படுத்தி இப்பஞ்சுடன் கலக்கும் அமில வண்ணத்தை ஏற்றி, ஆடை நெய்கின்றேமோ, அதைப்போன்று பஞ்சாக உள்ள பக்தி நெறி முறை உணர்த்தி அந்தந்த கால நிலைகளுக்கு ஒப்ப சப்த ரிஷிகளின் உணர்வலையால் அவர்களின் உணர்வுக்குகந்த பக்குவ

முறைகளை ஏற்றி, தன் ஈர்ப்பின் ஞானச் சுழற்சியுடன் சுழல விட்டுக் கொள்கின்றனர்.

சப்த ரிஷிகளின் நிலையை, சப்த ரிஷிதான் ஆண்டவன் என்று உணர்த்துகின்றீரே, அப்பொழுது இப்பூமியின் சக்தியெல்லாம் அவர்கள் தந்தது தானா? என்ற வினா எழும்பலாம். இவ்வினாவிற்கு விடை ஆம் என்பது ஒன்றே தான். சப்த ரிஷியினால் ஏற்படுத்திக்கொண்ட மண்டலங்களின் நிலையினால்தான், ஒவ்வொரு மண்டலத்தின் தொடர்பைக்கொண்டு, அதனதன் ஈர்ப்பு சக்தியைக் கொண்டு, அது வெளிப்படுத்தும் உணர்வு குணத்தினால்தான் மணமும், மணத்துக்குகந்த சுவையும், வண்ணங்களும் நம் பூமியில் தோன்றின.

பல சக்தி அலைகள் நிறையப் பெற்ற நம் பூமியின் மனித இன ஞானங்கள் வளர்ந்தோட வளர்த்தியதே பல மண்டலங்களின் ஈர்ப்பு உணர்வினால்தான். ஒவ்வொரு ஞானியும் அவனவன் எடுத்த உணர்வின் குண அமிலத்தை வளர்த்த ஞானத்தால் மண்டல நிலையெய்தி இம்மண்டல வளர்ச்சி ஞானத்தால் இன்றைய இந்நிலை உருப்பெற்றுள்ளது. இம்மனித ஞானத்தை வளர்த்துக் கொள்ளும் பல ஆத்மாக்கள், இக்கலி மாறி, கல்கி தோன்றி, இச் சுழற்சி வட்டத்திலிருந்தே மாறி, இம்மனிதக் கரு ஞான வளர்ச்சிகொண்ட மனிதன் பிறிதொரு மண்டல வளர்ச்சிக் கருவுடன் பிறப்பில் மனிதக் கரு வளரும் நிலையில் மனிதனின் உருவ அழகுப் பொலிவும், இன்று பூமியின் ஈர்ப்பில் நடக்கும் மனிதன் பறக்கும் நிலைகொண்ட வளர்ச்சி ஞானமும் பெறுகின்றான்.

சப்த ரிஷியின் உணர்வின் வட்டத்திலுள்ள மனிதக் கருக்களெல்லாம் இந்நிலை பெறுகின்றன. இன்று சித்து நிலையில் சுழன்று ஓடும் பல ஆத்மாக்களும் இவ்வுணர்வின் கூட்டத்துடன் செல்கின்றன. சப்த ரிஷியின் உணர்வின் சுழற்சி ஈர்ப்பில் உள்ளவர்களுக்கே இந்நிலையென்றால், சப்த ரிஷியின் உணர்வுடனே சப்த ரிஷியின் செயலாய் சுழலப்பெறும் ஆத்மாக்கள் இன்றைப்படி சப்தரிஷி மண்டலம் என்றுணர்த்துகின்றனரோ, அந்நிலையின் ஒளி ஞானம் பெற்று ஒவ்வொரு மண்டலத்துக்குமே தன் ஈர்ப்பின் உணர்வு சக்தியைப் பரப்பி, தன் உணர்வின் இன்பத்தை உணர முடியும்.

மனித வாழ்க்கையில் வாழும் இக்குறுகிய காலத்தை பேரானந்தம் அடைய முடியாத இன்பச் சுழற்சி---இவ்வாழ்க்கையென்ற கூட்டுக் குடும்பப் பொருள் சேர்க்கையில்தான் உண்டென்பது மனிதனின் எண்ணம். இம்மனித வாழ்க்கையில் காணும் இவ்

வின்பம் சிற்றின்பம்தான். பேரானந்தப் பெருநிலையென்னும் உணர்வு ஞான வளர்ச்சி இன்பம்தானப்பா அழியா இன்பம். எவ்வின்பம் பெறவும் இம்மனித வாழ்க்கை நிலையின் சமமான உணர்வு எண்ண சுவாச முறையில்தான் பெற முடியும்.

இந்நிலையை மாற்றிக்கொள்பவரின் வழித்தொடர் நிலை எத்தகையது?

**10–9–80**

நாசி சுவாசிக்கின்றது. கண் பார்க்கவும், செவி கேட்கவும், வாயில் உமிழ்நீர் சுரக்கவும், உடலில் எல்லா நரம்பும், அணுக்கள் துடிக்கவும் உணர்வுகள் உந்தவும், எண்ண ஓட்ட நிலைகள் சர்வ சதா காலத்திலும் சுழன்றே ஆத்ம பிம்பமுடன் ஜீவ உயிர் வாழு கின்றது. உறக்கத்திலும் உணர்வுள்ளவனுக்கு எண்ணமுண்டு. இவ் எண்ண ஓட்டத்தின் ஓட்டம் எப்படி, எப்பாதையில் ஓடு கின்றதோ அப்பாதையின் உணர்வுடன் மீண்டும் மோதி அவ் வுணர்வின் சுவாசம் எடுத்து, எண்ண ஓட்டத்தின் வழிப்படிச் செயலாக்க, அங்க அவயவங்களில் எச்சக்தியையும் செயல்படுத்திக் காட்டிடக் கையின் நிலை யில்லாவிட்டால் செயல் ரூபம் இவ்வுலகில் எதுவுமேயில்லை. செயலை வெளிப்படுத்தும் அவயவம்தான் கை. அக்கையின் ஈர்ப்பிலே பிம்பத்தின் சக்தி அனைத்தும் வெளிப் படுகின்றது.

ஞானத்தை உணர்த்துவதும் இக் கைதான். உலகத்தின் செயல் யாவையுமே செயலாக்க இக்கைதான் மற்ற அவயவங் களின் சக்தியை வெளிப்படுத்துகின்றது. பலவாக உள்ள ஒன்றான பிம்ப உடலை, செயலை எப்படி இக்கை வளர்க்கின்றதோ, அதைப் போன்றுதான் பலவாக உள்ள உலக வாழ்க்கையில் பக்தியென்ற தெய்வ நம்பிக்கையை நமக்கு வழிகாட்டினான் நம் சித்தன்.

ஆத்ம பிம்ப மனித சக்திக்கே செயலாக்கும் அங்கமாக கையைக்கொண்டுதான் செயல்முறை வெளிப்பட்டு, இவ்வுடல் பிம்ப ஜீவன் பிரிந்த பிறகும், மீண்டும் மனிதக் கரு வளர்ச்சியில் வரும் சிசுக்கள் பிறந்து சில மாதங்கள் கருவின் வளர்ப்பிலேயே அவயவங்களின் முக்கியமான கையை மூடிக்கொண்டே தான் பிறக்கும். கையை மூடிக்கொண்டு சுவாசம் எடுக்கும்பொழுது உடலின் சக்திகள் விரையப்படா. மனித பிம்ப செயலை உணர்த்த வல்ல இக்கையின் ஈர்ப்பு குண அமிலம் மாறுபடாத ஈர்ப்புடனே தான் சிசு உற்பத்தியாகின்றது.

பிறந்த குழந்தையின் வளர்ச்சிக்கு கையின் அவயவங்கள் செயல்படும் முறைகொண்டுதான் அக்குழந்தை வளரும் முறை யையே அறியலாம். பிறந்ததும் மற்ற அவயவங்களின் உணர்வை அக்குழந்தை கையை ஆட்டித்தான் வெளிப்படுத்துகின்றது. சில நாட்களுக்குப் பிறகுதான் காலை ஆட்டும். பிறந்த குழந்தைகள் சில பிறந்தவுடனே கையை ஆட்டிக்கொண்டே இருக்கும். அக் கையை ஆட்டும் குழந்தையின், ஞானமும் அக்கை ஆட்டும் முறை கொண்டு ஞானத்தின் நிலையும் அறியலாம்.

மனிதனின் ஞானத்தைச்செயலாக்கும் கை என்ற உறுப்பு இல்லாவிட்டால் மிருக நிலைக்கும், மனித நிலைக்கும் மாறுபாடில்லை. மனிதனின் ஞானத்தை வெளிப்படுத்துவது கை. ஞான நல்லறிவு குறைந்த, உடலைவிட்டுச் சென்ற ஆத்மாக்களுக்கு அவ்வாத்மா மற்ற ஈர்ப்பலையில் சென்று மனிதக் கருவிற்கு வரமுடியாத நிலை ஏற்படுகின்றது.

இன்று இக்கலியின் மாற்ற காலத்தில், மனிதனின் ஞானம் குறைவுபட்டு, கல்கியுக வளர்ச்சிக்கு ஞானத்தின் குறைவுகொண்ட மனித அமில குண பிம்ப உடல்கள் பெறும் ஆத்மாக்களுக்கு, மீண்டும் இன்றுள்ள அங்க அவயவப் பொலிவு இழந்தே, மிகவும் குறுகிய உடலமைப்பும், குரங்கினத்தின் அவயவங்களை ஒத்த கை, கால்களின் வளர்ச்சி பிம்பம்தான் ஏற்படும்.

மனிதர்களிலேயே இன்று சிலருக்கு அமில ஈர்ப்பு வளர்ச்சி சரியானபடி அமையப்படாமல் கை, கால்கள் சூப்பிய நிலையில், குறுகிய உடலமைப்புக் கொண்ட குழந்தைகள்தான் மிகவும் அல்லல்பட்டு, துன்புற்று ஜீவிதத்திற்கே கஷ்டப்படும் ஆத்மாக் களின் தாய்மார்கள் சிலருக்கு, சிலருக்கென்ன, இந்நிலையிலுள்ள பல தாய்மார்களின் குழந்தைகள் இப்படித்தான் இன்றும் பிறக் கின்றன. இதன் தொடர்ச்சி குண குழந்தைகள்தான் வரப் போகும் ஆண்டுகளில் அதிகமாகப் பிறக்கப் போகின்றன.

எண்ணத்தில் வளர்ச்சி ஞானம் அற்று, இம்மனித பிம்ப வாழ்க்கையில் அல்லலுறும் ஆத்மாக்கள் மலிந்துவிட்டன. மனித ஞான அமிலத்தை அழித்தவனே மனிதன்தான். ஞானமற்ற வாழ்க்கையைச் சலிப்புடனும், சங்கடமுடனும், ஏக்கமுடனும், ஏங்கி வாழும் வாழ்க்கை முறை மாற வேண்டும். ஆண்டவனிடம் ஏங்கிக் கேட்கின்றான் மனிதன். ஏக்கத்தில் வளரும் சலிப்பு, சங்கட குண மனிதனுக்கு, ஞானத்தால் வெல்லும் நிலையற்ற உணர்வுச் சுற்றல் குணங்கள் நிறைந்துள்ள இன்றைய இக்கலி மனிதனின் வளர்ச்சி இதே சுழற்சி ஓட்டத்தின் ஈர்ப்பு குண

அமிலம் கூடிக் கூடி, இதன் செயலில் தான் அடுத்த கல்கியுக இன கரு வளருமப்பா. வறுமையும், இன்னலும் அற்று மற்ற தேசங் களிலுள்ள மனித ஆத்மாக்களில் பலரோ போதை நிலையின் அடிமையினுல், எண்ண ஞானமற்ற நிலையில் அவர்களின் பிம்ப உடல் ஆத்மா பிரிந்து சென்று, இந்நிலைக் கொப்ப வளர்ச்சி அமில குண கரு தோன்றி வளரும்.

எண்ணத்தின் ஞானத்தை வெளிப்படுத்தும் சக்தி அவயவம் கைதான், மனித இனத்திற்கே மிகவும் முக்கியமானது. ஞானத் தின் அமில வளர்ச்சியின் செயலங்கம் இக்கை. ஞான வளர்ச்சி எடுக்காத, பிறப்பற்ற உணர்வலையில் செல்லும்பொழுது தான், பல ஜென்மங்களில் சேமித்த அமில குண சக்தியையே இழக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டு, மனிதக் கரு உருவ நிலை மாறுகொண்ட பிம்பத்திற்கு அங்க அவயவங்களின் சக்தியை வெளிப்படுத்தும், செயலாக்கும் திறமையுடைய கையில்லாமல் பிறப்பு வருகின்றது.

பிறப்பு என்பது மற்ற ஜீவராசிகளின் ஈர்ப்பலையின் பிறப்பு.

**11–9–80**

ஜீவராசிகளுக்கு மனிதனை ஒத்த அவயவங்கள் இல்லை. நல் லுணர்வு கொண்டு வாழ்ந்த பக்குவ முறை மாற்றத்தில் ஏக்கம், சலிப்பு என்ற தொடர் குண ஆவேச எண்ணம் கொண்ட உணர் வலையில் சென்ற மனித ஆத்மாக்களுக்கே, உடலைவிட்டு ஆவி பிரிந்தவுடன், பல எண்ண ஈர்ப்பில் சுழன்று ஆவி, மிருக ஈர்ப் பிற்குச் சென்றும், மனிதனை ஒத்த அங்க அவயவங்கள் அற்ற மிருக ஜீவிதத்திற்கு செல்ல ஏதுவாகிறது. உணர்வலையின் மாற்ற நிலைகொண்ட ஆத்ம பிம்பமே பல கால சேமிப்பு அமில ஈர்ப்பு உரு மாறி, மனிதக் கருவிலிருந்து மிருகக் கரு நிலைக்குச் செல்லும் பொழுது, இம் மாந்திரிக நிலைக்கு வசமாகிக் கொண்ட ஆவிகளின் உணர்வு ஈர்ப்பும், மாந்திரீகனின் ஆத்மா பிரிந்த பிறகு அவன் வசப்பட்ட ஆவிகளின் உணர்வு அமில சக்தி எந்நிலை பெறு கின்றது?

மிருக ஜெந்துவிலேயே பல நிலை கொண்ட குண வளர்ச்சி ஜெந்துக்கள் உண்டு. மாந்திரீக வசப்பட்ட ஆவிகளின் ஈர்ப்பு, மாந்திரீகன் வசப்படுத்தி வைத்துள்ள கால நிலை மாறுபட்டவுடன் இவ்வாவிகளுக்கும் சக்தி நிலை குறைந்து மீண்டும் பிறப்பு எடுக்க நாய், குள்ள நரி இவற்றின் ஈர்ப்பலை பிம்ப உடல்தான் பெற முடியும். நாய்க்கு உணர்வலைகள் அதிகம். மனிதனைக் காட்டிலும் நாய்க்கு மோப்பத்தால் ஈர்க்கும் நிலை துரிதப்படுகின்றது. சுவாச

ஈர்ப்பின் நிலைக்கொப்பத்தான் செவி ஈர்ப்பும், கண் ஒளியும் அதற்குண்டு.

மாந்திரீகனால் வசப்படுத்திய ஆவிகள் எப்படி மற்ற சாதாரண ஆவிகளைக் காட்டிலும் அதற்கு அதன் மாந்திரீக பூஜிப்பினால், ஈர்ப்பலை அதிகம் கொண்டுள்ளதினால் நாயின் பிறப்பிற்குத்தான் செல்ல முடியும். ஆவிகளின் நிலையை உணர்த்தி வருகின்றேன். இதன் உண்மை நிலை என்ன?

ஆவிகள் உண்டா? இல்லையா? இதை உணருவது எப்படி? என்ற வினா எழும்பலாம். இன்று உலகின் பல பாகங்களில் மாந்திரீக முறையில் பல அதிசயங்கள் நடப்பதை ஆண்டவனின் ரூபம் காட்டி, ஏமாற்றி லிங்கமும், வேலும், விபூதியும் வருகின்றதல்லவா? அதுவுமல்லாமல் சில பொருள்கள் தானாக ஆடுவதும், சிலர் பல மொழிகளில் பேசுவதுவும் இவ்வாவியின் தொடர்தான். மாந்திரீகனால் வசப்படுத்தப்பட்ட ஆவிகள் அவன் சொல்படி செயல்படுகின்றன. அவ்வாவிகளுக்கு விமோசனம் இல்லையா? என்ற வினா எழும்பலாம்.

எல்லாமே ஆவிதான். மாந்திரீகனின் வசத்தில் சிக்குண்டு தன் நிலையுணராமல் செயல்பட்ட ஆவிகளுக்கும், உணர்வால் நல் நிலை பெற வேண்டுமென்றால் சித்தர்களினால் அமைக்கப்பட்ட சில கோயில்களில் உடலுடன் கூடிய ஜீவசக்திகொண்ட பல சித்தர்கள் உள்ளார்கள். அவர்களின் நிலைக்கு அவர்கள் உடலில் ஏற்றிக்கொண்ட சக்தி வாய்ந்த நுண்ணிய மின் காந்த ஈர்ப்பு ஒளியினால் இன்றும் சித்தாகி உடலின் உணர்வுகொண்டு கோயில்களில் அவர்களுக்கென்று சமாதி குகை அமைத்திருக்கின்றனர்.

நல்நிலை பெற வேண்டுமென்ற உணர்வு கொண்டுள்ள மாந்திரீகர் வசத்திலிருந்த ஆவிகளானாலும் சரி, கொடூர வேட்கையில் ஜீவன் பிரிந்த ஆத்மாவானாலும் சரி, ஜீவ சக்திகொண்ட சித்தனிடம் தன் உணர்வின் எண்ணத்தொடர்பேற்படுத்திக் கொண்டு அவர்களின் ஆசி கிடைத்தால் சித்தர்களின் ஜீவ உடல் ஈர்ப்பில் சென்று, தன் உணர்வு ஈர்ப்பை மீண்டும் நல்லுணர்வு கொண்ட மனித இன வளர்ச்சியில் வரலாம்.

எச்சக்திக்கும் நல்லுணர்வு பெற வேண்டுமென்றால் அதற்குகந்த மாற்றம் உண்டு. மனிதனின் நிலையில் உள்ள ஆவிகளுக்கு மட்டும் தானா? மிருகங்களாய், பட்சிகளாய் சுழன்று வாழும் ஆவிகளுக்கு மாற்ற நிலை இல்லையா? என்ற வினா எழும்பலாம். அவற்றின் நிலைக்கும் நல் நிலை பெறக்கூடிய நிலைகள் உண்டு.

இதன் தொடர் நிலையை வரும் நிலையில் உணர்த்துகின்றேன். புல்லைப் படைத்தான், பூண்டைப் படைத்தான், செடி, கல், மண், நீர் அனைத்தையும் படைத்தான், சகல ஜீவராசிகளையும் படைத்தான், மனிதனையும் படைத்தான். இறைவன் படைப்புத்தான் எல்லாமே. மனிதனைப் படைத்த இறைவன், மனிதனை மற்ற எல்லா நிலைகளைக்காட்டிலும் உயர் ஞான குணமுடன் படைத்துள்ளான். அவற்றையெல்லாம் படைத்த இறைவன் நம்மையும் படைத்து, அவ்விறைவனை வணங்கச் சொல்லுகின்றானா? இயற்கையின் படைப்பில் படைப்புகள் அனைத்தும் அவன் படைப்பென்றால், அவன் படைப்பில் தீயதை எதற்குப் படைக்கின்றான்?

நல்லுணர்வையே படைத்து, நற்சக்தியின் செயலையே அவன் பெற்றிருக்கலாமல்லவா? படைப்பில் ஏன் இறைவனுக்கு ஓர வஞ்சனைகள். நீங்கள் வணங்கும் இறைவனுக்கு ஏன் படைப்பில் மாற்றங்களுண்டு? தீயோனையும் நல்லவனுக்கலாம், தீய படைப்புகள் அனைத்துமே படைக்கப்படுவதற்கு முதலிலேயே நற்படைப்புகளாய்ப் படைத்திருக்கலாமல்லவா? கொடூர குணம் படைத்தவனையும், நயவஞ்சகனையும், இறைவனை வணங்கினால் இருள் நீங்கும், இறைவன் ஒருவன்தான் அவனை மாற்ற முடியும் என்று இறைவன் படைப்பையே இறைவனிடம் வேண்டச் சொல்கின்றான். இறைவன் படைப்பில் இனியவன் என்பவன் யார்? இறைவன் என்பவன் யார்? அவன் எங்குள்ளான்?

மனிதன் பிறப்பெடுத்து வாழும் காலத்திலேயே தன் பிறப்பை உயர்வாக உணர்ந்து தெய்வத்தின் படைப்பிலேயே உயர்ந்து நிற்கும் மனிதனுக்கு எந்த இறைவனால் பலவும் படைக்கப்பட்டன என்று உணருகின்றானோ, அவற்றின் துணை இல்லாவிட்டால் இவன் வாழ முடியுமா? இயற்கையில் வளர்ந்துள்ள தாவரங்களில் இருந்துதான் உணவெடுக்கின்றான். நீரும், காற்றும், நிலமும் இவனை வளர்க்கின்றது. இவன் உணர்வில் தீயது என்று உணர்த்தப்பட்ட ஒவ்வொன்றிலும் இருந்துதான் நன்மை எது என்று இவன் உணர்ந்து வாழ முடிகின்றது.

படைக்கப்பட்ட இறைவனுக்கு எது சொந்தம்? அவன் படைப்பில் உருவான உரு அனைத்துமே இப்படி இப்படித்தான் வளரவேண்டுமென்று அவன் படைத்தானா? இறைவன் படைப்பு என்பது யாது? உருவானது எந்நிலை கொண்டது? படைப்பில் பலவும் உள்ளபொழுது இறை ஞானம் என்று உயர்ந்து காண்பது எது?

இன்றைய இவ்வுலகின் உண்மை நிலேயென்ன? உலகை உருவாக்கி உருளச் செய்த உணர்வு உண்மை நிலேயென்ன? இயற்கையின் படைப்புத்தான் பலவும் என்ருலும் படைப்பின் உரு நிலே எப்படிக்கொள்கின்றது?

இறை ஞானத்தின் உண்மையை உணர முடியுமா? உணர்ந் தோர் சொல்லும் நிலே உண்மைதாஞ என்ற எண்ணமும் எழலாம். மின்சாரத்திஞல் நீங்கள் உபயோகிக்கும் சாதன முறை களுக்கு எப்படி மின் விசை எந்தெந்த நிலேயில் பாய்ச்சப் பட்டு, அதற்குகந்த சக்தி வெளிப்படும் தன்மையில் மின் விசிறி யும், மின் இயந்திர இழுவை நிலேயும், ஒளி விளக்குகளும் செயல் படுகின்றனவோ, அதைப்போன்று ஒவ்வொரு மனிதனும் தன் உணர்வின் எண்ண ஞானத்தை, எச்சக்தி அலேயின் ஈர்ப்பில் பதியவிடுகின்ருனே அதற்குகந்த சாதனே செயல் ரூப வழியில் தான் மனிதன் இன்றுள்ளான். இயற்கையின் படைப்பில் உணர் வும் இதன் வட்டம்தான்.

**19–9–80**

ஒன்றின் தொடர்கொண்டு ஒன்று வளர்கின்றது. வளர்ப்பின் படர்பலவாகி பலவின் பல வளர்ந்தே, உருவாகி உருவாகி உருண்டோடும் உரு குண வளர்ப்புச் செயலில் தொடர்கொண்ட நிலேயில் வளர்வதுதான் அனேத்துமே. ஒன்றிலிருந்து ஒன்று பிறந்து ஒவ்வொன்ருய் வளரும் வளர்ச்சி கதியில் உருவாகி, உணர்வாகி, செயலாகி, செயலில் வழி பெறுவது பல. இயற்கை யின் உண்மை உணர்வில் உருண்டோடும் சக்திகள் எல்லாமே அவன் படைப்பென்ருலும், அவன் படைப்பிலிருந்து நல் ஒளி படைப்புப் பெறுவதுதான் இறை ஞானம் என்பது.

பலவாக உள்ள இவ்வுலகின் இயற்கைப் படைப்பில் மற் றெல்லா உயிரினங்களேக்காட்டிலும் மனித ஞானத்தை உயர் வாகச் செயலாக்கும் சக்தி உருவாகியுள்ளது. இறை ஞானத்தின் சக்தியை உணர்ந்து வழி ஞானம் பெறவல்ல ஆற்றல் மனித குண ஞானத்திற்குண்டு. உயர்த்துபவன், உயர்ந்தவன் என்ற வமிசக் கோட்பாட்டை அறியும் ஞானம் மனிதனுக்குண்டு. மனிதன் வாழ, மற்ற இயற்கையும் துணே கொள்கின்றது. தீயது என்ற நிலே உள்ளதிஞல்தான் நல்லதைப் பிரித்துக் காண முடிகின்றது. நற்சக்தியின் செயலிலே சகல வளர்ப்பும் இருந்ததென்ருல் ஞானத் தின் வளர்ப்பு நிலே பெறுவதெப்படி?

சக்தியின் ஸ்வருபத்தில் சகலமும் உண்டு. சகலமும் இருந்தால் தான் சகலத்திலும் இருந்து உயர் உணர்வெது, என்று செயல்

கொள்ள முடியும். உயர் நிலை உணர்ந்து உயர் ஞான இறை சக்தி அடைய, ஞானத்தை உணர்ந்து செயல் கொள்ளக்கூடிய நிலை மனித உரு வளர்ச்சிகொண்ட வழித்தொடரில்தான் உண்டென் பதை உணர்ந்து இப்பூமியில் மனித இன அமில வளர்ச்சியை ஊக்குவித்தனர் சப்த ரிஷிகள்.

குருவாக இன்று நாம் சொல்லும் வியாழனின் ஞான ரிஷி தான் வியாழனின் மனிதக் கரு உரு நிலையிலிருந்து, மனிதனின் அமில குண வளர்ச்சி சக்தியை, அம்மண்டலத்தில் மனித இனங்கள் வாழ முடியாத வளர்ப்பு நிலைகொண்ட மண்டலமாய் வியாழன் மாறும் தருவாயில், சூட்சும ஞான செயல் மனித இனத்தின் சுழற்சி வட்டம், சப்த ரிஷிகளினுல் ஈர்த்தெடுக்கப்பட்டு, மீண்டும் மனிதக் கரு உருவாகவும், மண்டலமாய் நம் பூமியின் சக்தி அலையை வளர்க்கவும் செய்து, இப்பூமியின் ஈர்ப்பிற்கு மனித இனக் கருவை வளர்க்கவிட்டனர் அன்று சப்தரிஷிகள்.

இன வளர்ச்சியில் ஞானத்தை உணர்ந்த அவர்கள் செயல் அந்தந்தக் கால நிலைக்கொப்ப அவர்கள் பதித்த வளர்ச்சியில் இருந்தே தன் வளர்ச்சிக்குப் பலம் கூட்ட, தன் வளர்ப்பில் பயிராக்கிய பயிரிலிருந்து மீண்டும் பயிராக்க விதையைத் தான் இன்று அவர்கள் சேமிக்கின்றுர்கள்.

சப்த ரிஷி உருவான அமிலக்கூட்டு இன நிலைக்கொப்ப, தன் குண உணவையே தானெடுத்து, தான் வளர்ந்து, இவ்வின வளர்ச்சி மங்கா நிலைக்காகத்தான், சப்த ரிஷிகளின் செயல் இன்றுள்ளது. இறைவனின் படைப்புத்தான் ஒவ்வொன்றும். படைப்பின் படைப்பெல்லாம் அவனே தான், அவனின் படைப் பில் இறை ஞானம் பெறும் மனித ஞானம் கொள்வதுதான், படைக்கப்பட்டவன் படைப்பின் பொருள் காணும் நிலை.

நாம் நம் வாழ்க்கையில் சாதாரண நிலையில் உணர்ந்து, வாழ்ந்து, ஜீவன் பிரிந்து செல்லும் நிலையில் உள்ள நிலையை அந்தந்தக் காலங்களில் சப்த ரிஷிகள் பல உடல்களை ஏற்று, பல ஞானிகளை உருவாக்கிச்சென்றுர்கள்.

ஆனுல், இன்று வளர்ந்து பெருகியுள்ள மனிதனின் உணர்வு குண வழித்தொடர் யாவையுமே, விஞ்ஞானம் என்ற உடல் பிம்ப சுகம் காணும் செயல் ஞானமாய் வளர்ந்து, வேரூன்றி, கிளை விட்டுப் படர்ந்துவிட்டது. இதனை மாற்றியமைத்து, உயர் ஞான மான ஆத்ம ஞானத்தை வளர்த்து, இறை ஞானம் என்ற மனித

அமில குணசக்தி ஈர்ப்பு வளர்ச்சிதரும் சப்தரிஷியின் ஞான முடன், நம் உணர்வின் செயல் இன்றுள்ள கால கட்டத்தில் செல்ல வேண்டிய குறுகிய காலமிது.

பல நிலைகளால் பூமியின் நிலையே, பூமியின் சுவாச நிலையே மாறுகொள்ளும் இத்தருவாயில், நம் உணர்வின் எண்ணம், நம் ஆத்ம பலத்தைக் கூட்டிக் கொண்டால், இவ்வுலக மாற்றத்தில் மடியப்போகும் உயிரினங்களின் வழித்தொடர் செல்லும் மிகவும் ஈன நிலையிலிருந்து மீள முடியும்.

இப்படி உயர் செயல் குணமுள்ளது இன்றைய மனித உடல் உள்ளவர்களுக்கு. தன் உணர்வின் எண்ணத்தைத் தானெடுக்கும் ஜெபத்தால், தான் மட்டும் சக்தி பெறுவதோடு அல்லாமல், தன் உணர்வின் எண்ணத்தைப் பாய்ச்சி, தான் வணங்கும் தன் முன்னோர்களின் உணர்வு ஆவி உயிரையும் தன் உணர்வுடன், தான் வணங்கும் பக்தியின் ஈர்ப்பால், எவ்வுடலில் இருந்து வழி கொண்டோமோ அவ்வுடலின் முன்னோர்களையும் நம் ஈர்ப்பு ஜெபத்தால் நாம் வணங்கி, உயரும் கூட்டுடன் சுழலவிட்டுக் கொள்ள முடியும்.

உடலைவிட்டுப் பிரிந்த ஆவிகளுக்கு, தன் உணர்வினால், மணம், சுவை இவைகளைத்தான் எடுக்க முடியும். ஞானத்தை வளர்த்துக் கொள்ள உடலைவிட்டுப்பிரிந்த ஆத்மாக்களினால் முடியாது. அவர் களின் நிலை சிதறுமலும், மாறுபடாமலும் இருக்க, உடலுடன் கூடிய ஜீவபிம்ப உடல் மனிதனால்தான், தன் எண்ண உணர்வில் அவர்களை நினைத்து வணங்கினால், அவர்களின் ஆத்ம பிம்ப உயிர் வேறு ஈர்ப்பலைக்குச் செல்லாமல், இவ்வெண்ண உணர்வு ஈர்ப்பு பக்திக்குள், அவர்களின் நிலையும் சுழன்று கொண்டு இருக்கும். மிக சக்தி வாய்ந்த உடலை விட்ட உயிராத்மாக்கள் கூட, இன்று விஞ்ஞானத்தால் பூமியின் உள் உள்ள நுண்ணிய காந்த அலையை யும், காற்றில் கலந்துள்ள இவ்வலையையும் ஈர்த்தெடுத்து (Electronic) காந்த மின் அலை ஈர்ப்பு செயல் காண்பதினால், உடலை விட்டுச்சென்ற ஆத்மாக்களுக்கும் அவர்களின் ஈர்ப்புச் சிதறும் நிலை இன்றுள்ளது.

இன்று விஞ்ஞானத்தில் இவ்வலையைப் பிரித்தெடுத்துப் பல செயல்களைச் செயற்கைக்கு உணர்த்துகின்றான். அதே காந்த நுண்ணிய மின் அலை ஈர்ப்பை ஈர்த்துத்தான் ஜீவன் கொள் கின்றது ஒவ்வொரு ஜீவனும். மனிதனின் உடல் பிம்பச் செயலே இக்காந்த நுண்ணிய மின் அலை ஓட்டம்தான். விஞ்ஞானத்தில்,

உலோகத்தில் இம் மின் அலை ஈர்ப்பைக்கொண்டு பல மண்டலங்களுக்கும் பல சாதனங்களைச் செலுத்தி உணர்ந்து வருகின்றான். இஜ்ஜீவ பிம்ப உடலிலேயே இவ்வுலகம் மட்டுமல்ல, எவ்வுலகையும் சென்று காணவல்ல அமிலப்படைப்பு ஈர்ப்பு காந்த மின் அலைகள் உண்டு.

இக்காந்த மின் அலையை எவ்வெண்ணத்தில் எவ்வுணர்வைக் கொண்டு பாய்ச்சுகின்றோமோ அதன் நிலையை நாம் அறியமுடியும். இவ்வுடலில் எல்லா உணர் அலையையும் ஈர்க்கவல்ல சக்தியுண்டு. இதனை உணர்த்தத்தான் ஒவ்வொரு கால கட்டத்திலும் கதை வடிவில் ராமனையும், கிருஷ்ணனையும் படைத்தான் அன்றைய ஞானி. நற்குணங்களின் உருவமாய் ராமனின் கதையைப் படைத்தான். உலகமே இம் மனித பிம்ப ஈர்ப்பில் காண முடியும் என்பதனை உணர்த்த கிருஷ்ணனைப் படைத்து, கிருஷ்ணனின் வாயைத் திறந்தால் அண்ட சராசரங்களையும் கண்டதாகக் கதை உரு காட்டினான் அன்றைய ஞானி.

இக்காற்றில்தான் அனைத்துமே பூமி ஈர்த்து வெளிக்கக்கும் அனைத்து சக்திகளும் உண்டு. உணர்வுடன், உருவமுடன் உள்ள நாம் இவ்வெண்ண சுவாசத்தால் ராமனின் குண அமிலத்தை ஈர்த்து, கிருஷ்ணனின் வாயில் கண்ட அண்ட சராசரங்களையும் காண முடியும். மனித பிம்ப உணர்வு எண்ண சுவாசத்தால், காந்த மின் நுண்ணிய அலை ஈர்ப்பை எச்செயலில் செலுத்தி நம் உணர்வு எண்ண சுவாசம் செல்கின்றதோ, அதன் செயலை நாம் செயலாக்க முடியும். நம்மைக் காட்டிலும் மிக சக்திவாய்ந்த நம்மையே படைக்க வழி தந்த சப்த ரிஷிகளின் தொடரை இவ்வெண்ண உணர்வு சுவாச ஈர்ப்பிற்கு முடியும்.

முதலில் ராமனை குணமாகுங்கள். பிறகு கிருஷ்ணனின் காந்த நுண்ணிய மின் அலை உருவாகுங்கள். உருவை உணர்த்தி வழி அமைப்பான் நம்மை வழிப்படுத்தி வளர்த்தவன்.

**24–9–80**

உணர்வையும், எண்ணத்தையும் ஒவ்வொருவரும் செலுத்தி வழிப்படுத்தும் முறைகொண்டுதான் ஞான ஈர்ப்பு வளரும். இவ்வுணர்வையும், எண்ணத்தையும் ஞானத்தில் செலுத்திட நற்குணங்களின் சக்தி அலை ஆறு வகையை உணர்த்தினோம். மனித குண அமிலம் பன்னிரண்டு வகையை நற்குணங்களின் ஆறு நிலைக்கு அமிலங்களின் சக்தி நிலை பெருக வேண்டும்.

ஒவ்வொரு மனிதனின் குண அமிலத்தின் உணர்வு உந்தச் செய்யும் எண்ண ஓட்டம் உடலின் உணர்வைக்கொண்டே நடக்கத்தான் செய்யும். சலிப்பை சாந்தமாக்க வேண்டும். வாழ்க்கையில் இவ்வுடல் பிம்ப உணர்வு ஒவ்வொரு நிலையையும் காணும் பொழுதே எடுக்கும் சுவாசத்தினுல் இவ்வுணர் அலைகள் இவ்வுடலில் சாடத்தான் செய்யும்.

ஜீவ பிம்ப உணர்வு உடலில் எல்லா உணர்வின் நிலையையும் உணரவல்ல ஈர்ப்புக் குணங்கள் இப்பிம்ப உடலின் அமில குண சேர்க்கை வடிவெடுத்த ஆரம்ப காலத்திலிருந்தே பல ஜென்மங்களின் கூட்டுக் கலவை வளர்ப்பு அமில பிம்ப உடலில் இன்று நாம் காணும், உணரும் எண்ணத்தால் மட்டும் நம் சுவாசம் ஈர்க்கும் நிலை ஏற்படுவதல்ல.

முந்தைய கால சேமிப்பு அமில பிம்பக் கூட்டு உடலின் உணர்வலைகள் இன்று நாமெடுக்கும் நற் சக்தியின் அலையின் உணர்வினுல் மட்டும் தடைப்படுத்திட முடியா வண்ணம் இவ்வுடலின் கூட்டு உணர்வமில முந்தைய சேமிப்பே இன்று நம் எண்ண நிலையை மாற்றிச் செயல்படுத்தும் செயல்வழிக்குச் செல்லவிடாமல் முந்தைய சேமிப்பு அமிலத்தில் உயர்ந்து நிற்கும் குணத்தொடர் உணர்வு அதன் ஈர்ப்பு வட்டத்திலிருந்து மாறவிடாமல் தடைப்படுத்தும்.

இயற்கையின் உரு குண நிலையே இதன் அடிப்படை குண ஈர்ப்பு ஓட்டத்தில் தான் இவ்வுலகம் முழுமைக்கும் ஓடிக்கொண்டுள்ளது. எப்படி அதி மழை காலத்தில் அதன் வேகத்தைக் கொண்டு பெய்யும் மழை நீர், அதே ஓட்டத்தில் சுழன்று அதிவேகமாக ஓடிக்கலக்கின்றது. அதே நீர்தான் அமைதியாகவும், தெளிந்த நிலையிலும் நாம் அணைகட்டி விடும் வேகத்தின் விகிதப்படி நிதானமாக ஓடுகின்றது.

உணர்வின் வேகத்தை மழைநீரானது மழை பெய்யும் வேகத்தைக்கொண்டு அதன் ஓட்ட நிலையில் விட்டுவிட்டால் அதே வேகத்தில் பாயும். அணையைக் கட்டி அந்நீரை நாம் வெளிப்படுத்தும் விகிதம் கொண்ட ஓட்டத்தில் ஓடும் பொழுது அதற்கு உகந்த வேக நிலைகொண்ட ஓட்டத்தில்தான் அது ஓடும்.

இவ்வெண்ணத்தை நம் வாழ்க்கையில் நடந்திடும் எந்தச் செயலுக்கும், அச்செயலை ஈர்க்கவல்ல எண்ண ஓட்ட கதியில் விட்டுவிட்டோமாஞல் வாழ்க்கையில் நடந்திடும் எந்த ஒரு செயலும் அணைகட்டி ஒழுங்குமுறைப்படுத்தி விடும் நீரைப்போல்

இல்லாமல், மழை நீரின் வேகத்தைக்கொண்டு பாய்ந்தோடும் துரிதத்தைப்போலும், மழையின் தன்மை குறையக்குறைய மழை நின்ற பிறகும் அதன் செயல் நிலைக்கொப்பத்தான் நீரின் வேக நிலையைப் போல் இவ்வெண்ண உணர்வும் செயல்படும்.

காட்டாற்று வெள்ளம் அடித்துச் சென்று பிறகு நிதானப்பட்டாலும் வெள்ளத்தின் பாதிப்பு பாதிப்புத்தான். அதைப் போன்று நம் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு நொடிக்கும் நாமெடுக்கும் சுவாசத்தின் உணர்வு எண்ணம் கொண்டு நம் பூமியின் காற்று மண்டலத்தில் இயற்கையின் அமில சக்திகளுடன் இம்மனித எண்ணத்தின் சுவாச அலையின் குண அமிலங்கள் நிறைந்தே இக்காற்றுடன் சுழல்வதால் நாமெடுக்கும் சுவாசத்துடன், இக்காற்று மண்டல அமில சப்தங்கள் நம் உணர்வு எண்ணத்தில் மோதிக்கொண்டேதான் உள்ளன.

ஒவ்வொரு நொடிக்கும் நம் சுவாச நிலைக்கொப்ப, உணர்வு எண்ணத்தில் எடுக்கும் உணர்வு சக்திகள், இவ்வுடல் பிம்ப அமில சப்த அலையுடன் இவ்வாத்மக்கூட்டில் பதிவாகிக் கொண்டேதான் உள்ளது.

இன்று விஞ்ஞானத்தில் ஒலிப்பதிவு செய்த நாடாக்களில் எப்படி காந்த அலையை மின்சாரத்தினுல் பாய்ச்சி அதனை ஒலிக்கச் செய்து கேட்கின்றனரோ, அதைப்போன்று இவ்வுடல் என்ற கூட்டு அமிலமுடன் உயிர் அணு தோன்றி, ஜீவ உணர்வு எண்ண சக்தி வளர்ந்த நாள் தொட்டே ஒவ்வொரு உயிர் ஜீவனின் உணர்வு எண்ண சுவாசத்தில் எடுத்த நினைவலை அனைத்துமே இஜ்ஜீவ பிம்ப உடலில் பதிவாகியுள்ளது. இப்பதிவான உணர்வெண்ண அலையில் பல ஜென்மங்களில் எடுத்த எண்ண நினைவலைகளுமுண்டு.

அதன் குண நிலைத்தொடரில் தான் இன்றைய பிம்ப உடலின் உணர்வு நினைவு எண்ண ஓட்டங்கள் வழிபட்டுப் பதிவாகியுள்ள உடல் கூறு இது. இவ்வுடல் உணர்வு எண்ணமுடனே நம் எண்ணத்தைச் செயலாக்கினேமானுல் ஆத்ம சக்தி நல்லுணர்வின் வழித்தொடர் பெற முடியாமல் அணைகட்டாமல் செல்லும் நீரைப்போல் தான் அதன் வேக நிலைக்கொப்பச் செல்லும்.

உணர்வை எண்ணம் கொண்டு நற்சக்தியின் ஞான ஒளி அலையை இவ்வுடலில் ஏற்கனவே பதிவாகியுள்ள பலகால உணர்வு எண்ண நினைவை நற்சக்தியின் நல் எண்ண குணத்தை வழிப்படுத்தக்கூடிய எண்ணத்தில் நம் வாழ்க்கை நடைமுறை இருந்திட்டால் நாம் எச்சக்தியைப் பெற வேண்டுமென்று உணர்வின்

எண்ணத்தைச் செலுத்துகின்றோமோ அச்சக்தியின் எண்ணமுடன் நம் வாழ்க்கை செயல் இருந்திட்டால்தான் நம் ஆத்மபலம் கூடி ஞான சக்தியுடன் வழித்தொடர் பெற முடியும்.

இவ்வுடலில் மட்டுமல்லாமல் உடலைவிட்டுப் பிரிந்தவர்களின் உணர்வு எண்ண நினைவு சப்த அலைகள் அந்தந்த உயிராத்மாவின் சுழற்சியுடன் இக் காற்றுமண்டலத்தில் சுழன்றுகொண்டே அழியாமல் தான் உள்ளது. இதனை உணர முடியுமா? என்ற வினு எழும்பலாம். இன்று நாம் பேசியதை நாடாக்களில் அமிலத்தைப் பூசி காந்த மின் அலையின் சக்தியினுல் பதிவு செய்து பல காலங் களுக்கு அதனைக் கேட்க முடிகின்றது.

உடலைவிட்டுப் பிரிந்த உயிராத்மாக்களின் தொடர்பலையை யும், நாம் நம் எண்ணத்தால் அவர்கள்பால் செலுத்தும் உணர்வு ஞானத்தால் எந்த ஒரு உடலை விட்ட ஆத்மாக்களுடனும் தொடர்புகொள்ள ஜீவ பிம்ப மனித உடல்கொண்டோரால் முடியும்.

இம்மனித ஞானத்தில் மட்டும் தான் முடியுமென்பதல்ல. நம்முடன் வாழ்ந்த ஜீவன் பிரிந்த ஆத்மாக்கள், அவர்கள், அவர் களால் விரும்பி வாழ்ந்த காலத்தில், அவர்களின் உடம்புடன் தரித்திருந்த பொருட்களில் காந்த மின் அலையின் சக்தியை சில அமிலங்களின் கலப்புக் கூட்டைப் பூசி, அவர்கள் பேசிய அலையை யும் எடுக்கலாம், அவர்களின் இன்றைய எண்ண ஒலியையும் எடுக்கலாம். இவ்வுடல் கூட்டிற்கு ஜீவ நீர் சக்தியினுல் எச் சக்தியையும் செயலாக்கவல்ல ஆற்றலுண்டு. சகல லோகங்களை யும் காணவல்ல ஆத்மக்கூடிது. ஆனுல், நம் உணர்வின் எண்ண மெல்லாம் இவ்வாழ்க்கை என்ற ஏக்க சலிப்பு நிலையுடனே பெரும் பாலும் தன் சக்தி குண அமிலத்தையே கூட்டும் வழியிலிருந்து குறைக்கும் ஈர்ப்பு ஓட்டமான ஓட்ட கதியில் செலுத்தி விடு கின்றோம்.

**27–9–80**

இவ்வுணர்வின் எண்ணத்தையே நாம் நல்லெண்ண குண அமில நிலையில் வளர்த்துக் கொண்டோமானுல், ஒவ்வொரு மனித ஆத்மாவும், எந்த ஒரு பேரின்ப நிலைக்காக தன் உணர்வெண்ண நினைவு வைத்துள்ளனரோ, அந்நிலை அடைய முடியும். உணர் வால் எண்ணத்தை நல்வழி அமிலமாய் வளர்க்கச் செய்து, தன் ஞானத்தை, எந்த ஞானியின் தொடர்பலையில் எண்ணத்தைச் செலுத்தி எடுக்கும் சுவாசத்தால், இவ்வுலகில் எந்தப் பாகத்திலும்

சரி, உடல் உடன் உள்ளவர்களுடனும், உடலை விட்டுப் பிரிந்த ஆத்மாக்களுடனும், சூட்சும நிலைகொண்ட சப்த ரிஷிகளின் நிலையுடனும், இவ்வுணர்வின் எண்ணத்தை ஜெபம் கொண்டு தொடர்பு வைத்துக்கொள்ள முடியும்.

ஆண்டவனாய் வந்து அருள்புரிவதல்ல, ஆண்டவன் என்று நாம் உணரும் சக்திகளுடன் நம் எண்ண அலையைச் செலுத்தினோமானால் அவர்களின் தொடர் அலையின் ஒலியையும் கேட்கலாம், உருவையும் காணலாம்.

ஆவி நிலையின் பல எண்ண அலையில் உள்ளவர்களுக்கு, அவர்களின் எண்ண வீரிய குண நிலைக்கொப்ப அவர்களின் உணர்வுடன் ஒத்த எண்ணமும், தன் எண்ணமும் ஒன்றுபோல் உள்ள நிலையில், தன் ஆசையின் உணர்வலையை இவ்வுலகில் வாழ்ந்தபொழுது நிறைவேறா ஆசையுடன் சென்ற ஆவிகள் இவர்களின் எண்ணத்தின் ஒத்த நிலை ஈர்ப்பு உள்ளதினால், இவர்கள் உடலில் ஏறிச் செயல்பட்டாலும், அவ்வாவிகள் வளர்ந்த நிலையும், அவ்வாவிகள் வளர்த்துக்கொண்ட சக்தி அலையும் இவர்களின் உணர்வு ஞான சக்தி அலைக்கும் உகந்த செயல்வடிவ வளர்ச்சி ஓட்டத்தில் தான் உடல் உள்ளவரை செயல்புரிய முடியுமேயன்றி எந்த ஒரு செயல் ஞானம் கொண்ட நிலை கொண்டுள்ளனரோ அதே வட்ட உணர்வு வளர்ப்பில் வாழ்ந்து, தன் வாழ்க்கையில் அவர்களின் ஆசையின் மேம்பாடு என்று உணரும் ஒவ்வொரு செயல் வளர்ச்சி ஓட்டத்தில் தான், உடலுடன் உள்ளவரையும், அந்த ஞானம் செயல்பட்டு உடலைவிட்டுப் பிரிந்த பிறகு இதே உணர்வலை சுற்றலைக்கொண்டு எத்துறையில் உயர்ந்து, உழன்று, உருப்பெற்று, வாழ்ந்து, உருவ நிலை மறைந்த பிறகும் அதே சுழற்சி ஓட்டத்தில் மீண்டும் மீண்டும் அந்நிலைக்குகந்த வளர்ச்சி ஈர்ப்பிற்குத்தான் செல்லுகின்றது.

எத்துறையில் முன்னேறிய விஞ்ஞானம், விசய ஞானம், இசை ஞானம் எதுவானாலும் சரி, ஓர் சுழற்சி வட்ட ஞான ஓட்ட வளர்ச்சி சுழற்றலில்தான் சுழன்று கொண்டே இருக்கமுடியுமேயன்றி உயர் ஞானச் செயலுக்கு ஒளி ஞானத்திற்குச் செல்ல முடியாது.

தன் ஞானத்தை உணர்வால் எடுக்கும் எண்ணம் கொண்டு, உடலின் அமிலக் கூட்டை நற்சக்தியின் உணர்வலையின் செயலாக்கி, தன் உணர்வின் ஜெபம் கொண்டு எண்ணத்தை ஞானிகளின், சித்தர்களின், சப்த ரிஷிகளின் உணர்வு எண்ணமுடன் மோதவிட்டு, அவர்களின் ஈர்ப்பலையின் சுழற்சி வட்டத்திற்குள்

இவ்வுடல் என்ற அமிலக் கூட்டின் நிலையே அவர்களின் ஒளி ஞான ஈர்ப்பின் சக்தியுடன் சுழலவிட்டுச் செயல் கொள்ளும் ஜெப முறையை நாம் மேற்கொண்டால், சகல சித்தர்களும், சப்த ரிஷிகளும் அவர்களின் ஒளி அலையுடன் நம் உணர்வலையின் எண்ணம் கொண்டு எடுக்கும் சுவாசமுடன் செயல்படுத்தி, அவர்கள் பெற்ற சக்தி அலையின் தொடாரை நாமும் பெற முடியும்.

**29–9–80**

இவ்வுணர்வின் எண்ணத்தை எந்த ஒரு செயலின் எண்ணத்திலும் நம் எண்ண ஈர்ப்பு செல்லாமல் இவ்வுடலின் அமில குணத்தை நற்குணங்களின் அமில வளர்ச்சியுடன் வளரவிட்ட நாம், நம் எண்ணத்தின் உணர்வை எதன் ஈர்ப்பிலும் நம் எண்ணமுடன் சங்கடமும், பரிதாபமும், பச்சாதாபமும் காட்டும் உணர் வலைக்குச் செலுத்திடலாகாது. பரிதாபப்பட்டுப் பிறரின் எண்ணமுடனே நம் உணர்வின் எண்ணத்தையும் அவர்கள் உள்ள நிலைக்கு இரங்கி, நாமெடுக்கும் எண்ணச் சுவாசத்தால் நம் உணர்வும் அதே சுழற்சியில் சென்று, அவர்களின் உடல் அமிலக் கூட்டின் எண்ண அலையை நம் ஈர்ப்புக்குள் அவர்கள்பால் நாம் செலுத்தும் எண்ணத்தால் எடுத்துக் கொள்கின்றோம்.

நம் உணர்வும், பாவம் என்ற பரிதாபச் சுழற்சி வட்ட உணர்வு அமிலத்தை ஏற்பதினால், நம்முள்ளுள்ள உயர் குண அமில சக்தியின் பிறர்பால் செலுத்தும் உணர்வின் எண்ணத்தால் நம் நிலைக்கும், நாம் செல்லவேண்டிய வழிக்கும் தடை ஏற்படுத்து கின்றது. நற்சக்தியை ஆண்டவன் என்ற நிலையடைய, ஆண்டவன்பால் செல்ல எல்லா உயிர் ஆத்மாக்களிடமும் அன்பைச் செலுத்துங்கள் என்று இன்றைய கலியில் பல மகான்களாய் ஞானத்தின் வழித்தொடாில் வந்த நாமறிந்த பலரும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களின் பிம்ப உடல் பல இன்னல்களைப் பெற்று, அதே செயலில் தான், உடல் பிம்ப வலுக் குன்றியதினால் அவர்களின் வாழ்நாட்கள் பல சக்திகளைப் பெற்றிருந்தும், இவ்வுணர்வின் எண்ண செயல்முறை செலுத்தும் வழி அறியாமல், பிறரின் எண்ண உணர்வு நிலையின் சுழற்சியில் சிக்கிவிட்டதினால், ராமகிருஷ்ண பரமஹம்ஸரும், விவேகானந்தரும் இன்று ரமண மகரிஷியாய் பலர் போற்ற இருந்தவரின் நிலையும், இன்னும் இவர்களைப்போல் ஞானத்தின் ஈர்ப்பில் வந்தவர்களும், எண்ணத்தின் உணர்வைப் பிறர்பால் பரிதாபம் கொண்டு செலுத்தி, இவர்கள் செலுத்திய அன்பின் பரிதாப நிலையினாலேயே, அவர்

களின் உணர்வு எண்ண அலையின் ஈர்ப்பு இவர்கள் உடலிலும் சாடியது.

அதனுல்தான், ஞானத்தின் வழிபெற்றிருந்தும் உடல் பிம்பக் கூட்டைக் காக்க முடியவில்லை. உடல் பிம்பக் கூட்டிற்கு மட்டுமல்ல, நாமெடுக்கும் உணர்வின் எண்ண உயர் ஞானச் செய லுக்கும், இவையெல்லாம் தடைக் கற்கள்தான். இம் மனித பிம்ப உடல் உணர்வு எண்ண ஈர்ப்பிற்குமிகவும் சக்தி வாய்ந்த நிலையுண்டு. எண்ணமுடன் எடுக்கும் சுவாச அலையில் காந்த மின் ஈர்ப்பு குண உயிரணுக்களாய் இவ்வுடல் முழுமைக்கும் ஈர்த்தெடுத்து வெளிக்கக்கும் இவ்வலையின் ஈர்ப்பு நாமெடுக்கும் எண்ணத்தின் ஈர்ப்புடன் மோதுகின்றது.

இங்கு உணர்த்தும் முறைகொண்டு பிறர்பால் அன்பு செலுத்திடலாகாதா? பிறரிடம் இரக்கங் காட்டிடலாகாதா? பிறருக்கு நம்மால் முடிந்த தான தர்மங்கள் அளித்திடலாகாதா? என்ற வினு எழும்பலாம். பிறர்பால் அன்பைச் செலுத்தாதீர், பிறருக்கு அன்பான குண நிலை பெற வேண்டுமென்ற அன்பலையை அவர்கள் வளர்க்க, அவர்களுக்கு நம் எண்ணத்தால் நல் நிலை பெறட்டுமென்ற உணர்வைச் செலுத்துங்கள் அன்பாக்கி. நம்மைச் சார்ந்தவரும் சரி, நாம் கண்டுணர்பவரும் சரி, அவர்கள் படும் துயரமுடன் நம் உணர்வையும் பரிதாபமாக்கி, நம்மையும் பரி தாபப்படுத்திக் கொண்டு, அவர்கள் அலையுடன் நாம் ஒன்ருமல், நம் சக்தி அலையைக் கொண்டு அவர்களுக்கு நல் நிலை நடக்கட்டும் என்ற ஒளி அலையைப் பாய்ச்சுங்கள்.

அவர்கள் உயரவும், உடல் நலம் பெறவும் நம் உணர்வின் எண்ணத்தைக் கொண்டு, நல் நிலை அவர்கள் பெற, நம் உணர் வின் எண்ணம் செல்ல வேண்டுமேயன்றி நம் உணர்வையும், எண்ணத்தையும் அவ்வுணர்வின்பால் செலுத்திடலாகாது. அதே போன்று, தர்ம நிலைக்கும் இரங்கிய உணர்வால் ஒன்றி தர்மம் செய்யாமல், பல துயரங்களில் அவர்கள் உள்ளார்கள் என்ற இரங்கிய தர்மம் தராமல், நாம் தரும் தர்ம ஈகையினுல் அவர்கள் பெற்று உயர வேண்டுமென்ற உயர்ந்த உணர்வுடன் எண்ணத்தைச் செலுத்தி, நாம் தரும் தர்மம் பெறுபவரையும், உயரும் எண்ணத்திற்குச் செல்லும் முறையில் நம் தர்ம முறையும் இருக்க வேண்டும்.

இவ்வுணர்வால் எடுக்கும் எண்ண முறையில் எப்படி இச் சலிப்பான உணர்வலையுடன் ஒன்றிய உணர்வு நம் ஞானத்திற்கு, பிறரின் ஈர்ப்பால், அவர்களின் குண ஈர்ப்பின் எண்ணமுடன்

ஒன்றியவுடன், நம் நிலையும் மாறும். அதைப்போன்றுதான், நாமறிந்த பல ஞானிகளும் அவர்கள் இரங்கி பிறர்பால் செலுத்திய அன்பினுலேயே அவர்கள் ஞானமும் குறைந்தது.

இவ்வுணர்வைக்கொண்ட எண்ண ஜெபத்தில் நாமெடுக்கும் நிலையைக் கொண்டுதான் நம்முள் சேர்ந்துள்ள அமில குணத்தின் வளர்ச்சியினுல் சக்தி வாய்ந்த ஒளி அலையின் காந்த மின் அலையின் ஈர்ப்பை ஞானிகளிடமிருந்து பெற முடியும்.

**30–9–80**

ஒரு சிட்டிகை உப்பெடுத்து நாக்கில் வைத்தவுடன் அதன் உவர்ப்புத் தெரிகிறது. அதே நாக்கு புளிப்பு, துவர்ப்பு, காரம் இவற்றின் சுவையையும் அறிகின்றது. சுவையை உணர்வதைப் போல் மணத்தின் மாற்றத்தையும் முகர்ந்து உணர முடிகின்றது. ஒலியின் மாற்றத்தையும் கேட்டறிய முடிகின்றது. வண்ணத்தையும் மாற்று பிம்ப நிலைகளையும் பார்த்துணர முடிகின்றது, இவ்வுலக சுழற்சி வாழ்க்கையுடன் ஒன்றிய வாழ்வின் அன்ருடச் செயலாய், இவ்வுணர்வின் வட்ட ஈர்ப்பில் உழன்று வாழும் நாம், இவற்றை உணர உருவ நிலைகொண்ட ஆரம்பச் செயலுக்கு நம் ஈர்ப்பைச் செலுத்திப் பார்த்தோமானுல், ஒவ்வொரு உயிர்த்துடிப்பு நிலை கொண்ட உயிரணுக்கள் தோன்றிய நாள் தொட்டே அவற்றின் வழி அலைத்தொடரினுல் உருவாகிய உணர்வில் சேமிப்புக் காலத்தில் பலகோடி காலங்களாய் ஒவ்வொன்றின் தொடரும் சிறுகச் சிறுக ஒவ்வொரு வளர்ச்சிநிலை மாறி மாறி இவ்வுணரும் பக்குவ நிலை அமிலக்கூட்டு உருவ மனிதனுய் உருப்பெறும் கால்த்தில் சேமித்த பன்னிரண்டு குண அமிலத்தினுல் தான், அன்று சேமித்த தின் நிலைக்குகந்த மனித பிம்ப சேமிப்பிற்குத் தேவையான வளர்ச்சி நிலை மனிதனுய் ஆன பிறகு, சேமித்ததின் சக்தி இவ்வேழு பிம்ப உடல்களுக்கு ஜென்மம் எடுக்கக் கூடிய அமிலக் கூட்டு நிறைந்த பிறகுதான் மனித பிம்ப உடல் உருப்பெறுகிறது.

இவ்வுருப் பெற்ற பலவற்றையும் உணரும் உணர்வு மனிதனின் உணர்வுடன் கூடிய எண்ண ஞானத்தைச் செலுத்தும் நிலைக் கொப்பத்தான் அமிலக்கூட்டை நிறைத்து மனித பிம்ப உடல் கொண்டவனின் செயல் திறன் அமைகின்றது. பிம்ப உடலின் பிறப்பிலேயே, பிறப்பெடுத்து வளர்ந்து வயது நிலையின் நிலைக் கொப்ப உருவ வளர்ச்சியின் மாற்றங்களும், ஞான சக்தியின் உணர்வாற்றலும் செயல்படுகின்றன.

உருவ வளர்ச்சி நிலை குறிப்பிட்ட காலத்துடன் நின்று விடுகின்றது. ஆனுல் உணர்வின் எண்ண ஈர்ப்பு ஞானத் திற்கு உடலின் வளர்ச்சிப் பருவம் எய்திய காலத்தில் எடுக்கும் எண்ண நிலைக்கொப்பத்தான், ஒவ்வொரு மனிதனின் குண நிலை செயல்படுகின்றது. பருவ வளர்ச்சிக்காலத்தில் மனித பிம்பத்தின் ஈர்ப்பின் அமில குணமே மிகவும் வீரிய காந்த மின் அலையின் சக்தியை மின்சாரத்தின் ஈர்ப்பு பாய்ச்சலைப்போன்று பாயும் அமில வளர்ச்சியின் சேமிதகுண அடிப்படை அமைகின்றது.

அத்தருணத்தில் வழிப்படுத்தும் முறைகொண்ட மனிதனு கத்தான் மனித ஜென்ம காலம் வரை ஒவ்வொருவனின் குண நிலையும் அமைகின்றது. இவ்வுணர்வலையின் ஈர்ப்பு சக்தி துரித ஓட்டத்தில் ஓடும் காலமிது. அதனைச் செலுத்தும் முறை கொண்ட மனித வாழ்க்கை முறை பெறும் காலத்தை எச்சக்தியில் செயல் படுத்துகின்றனரோ, அதன் உணர்வு ஈர்ப்பு அமிலத்தின் சேமிப்பை அத்தருணத்தில்தான் குணத்தின் அடிப்படை உணர்வு சேமிதம் கொள்கிறது.

பல துறைகளில் முன்னேறுபவர்களுக்கும், அக்கால தருணம் தான் ஏற்ற தாய் அமைகின்றது. அதி உல்லாச காமுக வழித் தொடரில் செல்லுபவனும், இப்பருவ கால ஈர்ப்பில் எடுக்கும் எண்ணத்தின் வழித்தொடர் மனிதனுகத்தான் ஒவ்வொருவனும் வாழுகின்ருன். இதனை மாற்றி அமைக்கும் செயலாய் எச் சக்தியைக் கொண்டும் செயல்படுத்துவதென்பது கடினம்தான்.

உணர்வின், எண்ணத்தின் வழித்தொடர் அமிலமுடன் வழி கொண்ட நாம் அவரவர்களின் நிலைக்குகந்த செயல் வழியை நினைத்த மாத்திரத்தில் மாற்றிக்கொள்வது கடினமாகின்றது. பிறரால் அவர்களின் நற்சக்தியைச் செயலாக்கி தீய சக்தியை நன்மை ஆக்குவதென்பதும், தீயவன் நல்லவனைத் தீமைப் படுத்து வதற்கும் குண அமிலத்தின் நிலையிலிருந்து மாற்றுவது கடினம்.

உணர்வினுல் எடுத்த அமிலத்தின் வளர்ச்சியின் குண மனிதன் அவன் அலைத்தொடரில் தான் இன்று வரை வாழ்ந்து வருகின்ருன். இந்நிலையை மாற்ற மிகவும் சக்தி வாய்ந்த காந்த மின் அலையின் ஈர்ப்பை எடுக்க அவர்களின் எண்ணமும், நல்லுணர்வின் பால் சக்தி அலையின் ஈர்ப்புடன் கலக்கப் பெற்ருல் தான், எச்சக்தியின் அலையும் அவர்கள் உடலில் பாய்ந்து குண நிலையின் வழித்தொட ரையே மாற்றி அமைக்க முடியும்.

முந்தைய இராமாவதார, கிருஷ்ணுவதார காலங்களில் போர் தொடுத்து ஆண்ட காவியங்களில் வில்லுடன் வில் மோதுண்ட

பொழுது ஒளி நிலைபெற்று ஒன்றுடன் ஒன்று ஊடுருவி எதிர் நிலைகொண்டு அதனதன் நிலைக்கே திரும்பிச் சென்றதாக காவியக் கதைகளில் படித்திருப்பீர். உண்மையைக் கதைப்படுத்தி மறைக் கப்பட்ட தத்துவங்கள் பல உண்டு அவற்றில் .

வால்மீகி முனிவரால் இராமாயண காவியத்தில் எழுதப் பட்ட உண்மையின் ஒவ்வொரு சொல்லுக்கும் பல கருத்துக்கள் உண்டு. இன்று வரை அதன் உண்மைப் பொருளை உணர்ந் தாரில்லை. இராமனின் கதையின் உண்மை என்ன?

**1–10–80**

பேராசையின் உந்தலில் ஏற்பட்ட எண்ணத்தினுல் பேராசைக் குகந்த நிலைபெறச் சூழ்ச்சி வலை பின்னப்பட்டு அச் சூழ்ச்சியின் இன்னலில் ஏற்பட்ட செயல்கள் எல்லாம் இராமாயண காவியத் தில் வடிக்கப்பட்டு, இப்பேராசை உணர்வெண்ண ஆசையின் செயல்முறை எப்படி எப்படி, எந்தெந்தச் சுற்றலில் இருந்தெல்லாம் சிக்கி ஓர் மனிதனை நற்குணம் அடையவேண்டுமென்ற உணர்வு குணத்தை இவ் வட்டத்துக்குள் சுழலவிட்டு மனிதனுக்குகந்த பண்பு, பாசம், பக்தி, வீரம், அன்பு, ஆசை இப்படி ஒவ்வொரு குணத்தையும் அக் காவியத்தில் தந்தையின் சொல் மந்திர சக்திக்கும், தமையனின் பாச பிணைப்பையும், அன்பின் உருவைக் காதலிலும், வீரத்தை வில்லாக்கியும், பண்பை பலதிலும் படைத்து பிணைக்கப்பட்ட இராமனை அவதாரப் படைப்பு காவியனுக்கி, வழிப் படுத்திக் காட்டிய இராமாவதார காலத்தில் அன்றிருந்த நிலையைக் கொண்டு, அக்காலத்திற்குகந்த வாழ்க்கையின் முன்னேற்ற ஞானத் தைக்கொண்டு, இராமனுகப் படைக்கப்பட்ட அந்த இராமனுக்கு ஏற்பட்ட ஒவ்வொரு செயலில் இருந்தெல்லாம் உணர்வின் எண் ணத்தைக் கொண்டு தெளிவு பெற்று இராமகுணமாகப் படைக்கப் பட்ட உருவின் நிலையில் ஆண்டவனுன வழி நிலை பெறுகின்ற செயலனைத்துமே, அன்றே அக் காவியத்தில் வடிக்கப்பட்டன.

ஆண்டவனுய்ப் பிறந்தவனின் இன்னல் நிலையை உணர்த்தி, ஆண்டவனின் சக்தியைக் காட்ட வடிக்கப்பட்ட காவியமல்ல இராமனின் காவியம். பேராசையின் எதிர் அலையில் சிக்குண்ட ஆத்மா, தன் உணர்வின் எண்ணத்தில் தெய்வ சக்தி பெறவேண்டு மென்ற எண்ண சக்தியிருந்தால், வாழ்க்கையில் செயல் எதிர் பிம்பம் எதுவானுலும், தன் ஞானத்தின் உயர்வினுல் வரும் இன்னலில் இருந்தெல்லாம் மீண்டு தெய்வமாகலாம் என்று உணர்த்தப்பட்ட காவியம் தான் இராமனின் காவியம்.

முந்தைய பாடத்தில் வினவாக்கி, மிருகங்களுக்கு விமோசனம் இல்லையா? மனிதனிலிருந்து மிருக நிலைகொண்ட பல சக்திகள் இருந்தும், மனிதனை ஒத்த ஞான வளர்ச்சியில் தெய்வ சக்திகொண்ட சூட்சும வழி பெறவோ, சித்து நிலை பெறவோ, மிருகங்களின் நிலைக்கு முடியாதா? இவ்வுலகின் உயிர் அணுக்கள் தான் அனைத்துமே. உணர்வின் எண்ணத்தால் மாறுகொண்டு மிருக நிலைக்குச் சென்ற உயிராத்மாக்கள்தான் அவையும்.

அவற்றிற்கும் உணர்வு, எண்ணமும் உண்டு, நற்குண ஞானப் படைப்புகளுமுண்டு. உயர்ந்து செல்லும் நிலையில்லையா? என்ற வினவும் எழும்பலாம். ஒவ்வொரு ஜீவனுக்கும் உயர் ஞானம் பெறும் சக்தியுண்டு. இவ்வெண்ணத்தால் எண்ணி, செயல் படுத்தும் நிலை மனிதனுக்கு இருந்தாலும், எண்ணத்தால் எண்ணி உணர்ந்து, உயர்நிலை பெற வேண்டுமென்ற உணர்வு மிருக ஜெந்துக்களில் பலவற்றுக்குண்டு. மனிதனின் ஈர்ப்பின் சுழற்சியில் வந்து மனிதனுல் மனித எண்ணமுடன் அன்பு பூண்டு மீண்டும், மனித இனத்திற்கு வரக்கூடிய வாய்ப்பு சில ஜெந்துக்களுக்குண்டு. மனிதனுல் அவற்றை அழித்து உண்ணும்பொழுது மனித ஈர்ப்பிற்கு வந்து, மனிதச் சுழற்சியில் ஒன்றிரண்டு மிருக இனங்கள் அபூர்வமாய்ப் பிறப்பிற்கு வருவதுண்டு.

ஆனுலும் இம் மனிதனின் சுழற்சி வட்டமுடன் சிக்குண்டு, மனித வாழ்க்கைக்கு வந்தாலும் மனித எண்ணத்தின் சுழற்சி வட்டத்தின் ஓட்டவழியில் சென்று அதே உணர்வலை பின்னலில் மீண்டும் மிருக இன நிலைக்கே செல்வதுண்டு. உணர்வால் நல்லெண்ணம் கொண்டு உயரக் கூடிய மிருக இனம் சிலவே.

சில பசுக்களும் இன்னும் பல பிராணிகளும் சில கோயில்களில் - சித்தனுல் ஏற்படுத்திய கோயில்களில், அச் சித்தர்களின் நிலையுடன் அவர்கள் சித்து நிலை எய்தும் காலத்திற்கு முன் தொடர்பு கொண்ட சில பிராணிகள் அவர்களின் அன்பு உணர்வுடன், அதே பக்தியில் தன்னைச் சுழலவிட்டு உயர்வதுவும் உண்டு. வீட்டில் வளர்க்கும் சில பிராணிகள் மனிதனின் எண்ண ஈர்ப்பில் பக்தி பூண்டு, தன் உடலை விட்டு உயிர் பிரிந்த பின்பும், எஜமான விசுவாசமுடன் இவன் காட்டும் அன்பைக் கொண்டு இவ் ஈர்ப்பில் சிக்கி உயர்வதுவும் உண்டு.

மனிதனை ஒத்த ஞானத்தின் ஈர்ப்புச் செயலால் உயரும் தன்மை மிருக ஜெந்துக்களுக்கு குறைவுதான். இவ்வுலகம் தோன்றி உருளும் உணர்வில் ஒவ்வொரு அணுவும் தோன்றி வளரவும் உணர்வின் எண்ண ஈர்ப்பு அமிலம் கொண்டே உருவாகி

உணர்வாகி வந்த நிலையை நம் சித்தர்கள் காட்டிய வழியில் இராமாவதாரத்தில் தந்தையின் குணத்தை உயர்த்தியும், தந்தைக்குப் பிறகுதான் தாயின் நிலை காட்டப்பட்டுள்ளது. அதே போல் உலகின் தெய்வமாக சிவசக்தியென்ற சிவனை முதலிலும் சக்தியின் நிலையைப் பிறகும் தான் உணர்த்தினர். ஆனால் நாம் வணங்கும் தெய்வத்தில் தாயை முதலிலும் தந்தையைப் பிறகும் தான் உணர்த்திக் காட்டி வணங்குகின்றோம். இதன் உண்மை என்ன?

ஆதி சக்தியின் படைப்புத்தான் எல்லாமே. உணர்த்தியதின் வழித்தொடர் என்ன?

**6-10-80**

ஆதிசக்தியின் படைப்பில், ஆவியான சக்தி நிலை, ஆதிசக்தியின் படைப்பு. ஆவியான நிலைகொண்ட தன்மையில், திடம் பெறும் நிலைக்குச் சிவன் என்ற நாமத்தைச் சூட்டி, திடப்பட்ட பிம்ப நிலையின் ஈர்ப்புத் துடிப்பிற்கு சக்தி என்ற பெண்ணின் நாமத்தைச் சூட்டினர். சிவ பிம்ப ஈர்ப்பு சக்தி நிலையை, நம் சித்தர்களினால் ஆவியான அமிலம் திடம் கொள்வதை, சிவன் என்ற நாமம் சூட்டி, அதன் ஈர்ப்பு நிலைக்கு சக்தி என்ற பெண் பாலை உணர்த்தினார்கள். அவ் ஈர்ப்பின் சுழற்சி அலைத்தொடர் வளர்ப்பின் நிலையில் வழிகொண்ட ஜீவ சக்தியின் படைப்பில், தாய் தந்தையென்ற உண்மை நிலை உருப்பெறுகின்றது.

படைப்பின் படைப்புத்தான் சிவ சக்தியின் படைப்பு. படைக்கப்பட்டவனின் படைப்புத்தான் அனைத்து ஜீவாத்மாக்களின் படைப்பெல்லாம்.

இந்நிலையில் சக்திகொண்டு, ஒன்றின் ஈர்ப்பில் ஒன்று வளர ஜீவ சக்தி தேவை. ஜீவசக்தியின் சக்தியில் ஞானம் பெற, ஜீவ சக்திகொண்ட குரு நிலை தேவை. இராமாயண, மகாபாரத காவியங்களிலெல்லாம் குருவின் நிலையை ஆண்டவனுக்கு முதலில் காட்டிய நிலையென்ன? ஞான சக்தி பெற ஆரம்பத் தொடர் நிலைக்கு நம்மைக்காட்டிலும் சக்திகொண்ட குரு நிலை தேவை.

நீரான ஜீவசக்தி ஈர்ப்பில் காந்த மின் அலையின் தொடர் நிலை நேராக நாம் பெறுவதென்பது கடினமாகின்றது. நம்மை ஒத்த, ஜீவ உடல் கொண்ட, ஞான சக்தியின் வழிபெற்ற குரு அமைந்தால், நம் எண்ணத்தை அவர்பால் செலுத்த, அவர் எடுக்கும் அலையின் நிலையிலிருந்து, நம் ஞானத்திற்குகந்த அலையினைத் திருப்பி அனுப்பிட முடியும்.

ஜீவனற்ற சக்தியின் தொடர்பைக் காட்டிலும், ஜீவனுடன் கூடிய குரு நிலை அமைந்து, அவர்பால் நாம் செலுத்தும் எண்ண நிலைக்கொப்ப, காந்த மின் அலையின் தொடரை நாம் ஆரம்ப காலத்தில் எடுப்பதற்கு உதவி நிலை கிட்டுகின்றது. குருவின் உண்மை நிலை இரண்டாயிரம், மூன்றாயிரம் வருடங்களுக்கு முன் இந்நிலைதான் இருந்தது. காலப்போக்கில் குருவானவர்களே தன் ஞானத்தின் வழியைப் பிறர்பால் செலுத்தி, அவர்கள் தன்னைக் காட்டிலும் உயர் நிலைகொண்டுவிடுவார்கள் என்ற எண்ண ஓட்டத்தினால் எல்லாமே மாறிவிட்டது.

அதுவுமல்லாமல் சிலர் எடுத்துச் செயல்படுத்திய வழிநிலையை உணர்ந்தெடுக்கும் ஜீவாத்மாக்களும் செயல்படுத்தவில்லை. மனித உரு கரு வளர்ந்த காலம் முதற்கொண்டே குரு சிஷ்யன் என்ற வழித்தொடர் இருந்து கொண்டுதான் இருந்தது. இன்றும் உண்டு. ஆனால், பக்தி கொண்டு பணிந்து வணங்கும் நிலைதான் உண்டே தவிர, ஞானத்தின் நிலையின் ஈர்ப்பு வழித்தொடருக்கு குருவின் செயலை எடுப்பாரில்லை. குருவின் தொடர்பால், தானே கிட்டுமென்ற நிலைதான் இன்றும் உள்ளது.

சக்தி வாய்ந்த சக்தியிலிருந்து தான், பல சக்திகள் உருப் பெறுகின்றன. உருப்பெற்ற நிலையிலிருந்து மாறி மாறி வழித் தொடர் கொண்டு, உயர் சக்தியின் படைப்பில்தான், சக்தி வாய்ந்த சக்திக்கு மேல் சக்தி கொள்கின்றது இச்சக்தி.

சூரியனின் ஒளி அலையின் தொடர்பின் பிம்ப நிலைகொண்டு சிவனாயும், ஈர்ப்பு நிலைகொண்டு சக்தியாயும் வளர்ப்பின் படைப் பைக்கொண்டு உருவான உலக சக்தியே, சூரியனைக் காட்டிலும் சக்தி வாய்ந்த நிலை ஈர்ப்பு ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய சக்தி பூமி இது.

இக்கலியின் மாற்றத்திற்குப் பிறகு, இப்பூமியில், இன்றுள்ள மனித ஆத்மாக்களின் நிலை மாறி, உருவங்கள் மாறுகொண்டு, பலகோடி ஆண்டுகளுக்குப் பிறகு பூமியின் ஈர்ப்பு ஓட்ட சக்தி சூரியனைக் காட்டிலும் துரிதம் கொள்ளக்கூடிய நிலைகொள்ளப் போகின்றது. உருவத்தில் சூரியனைவிடச் சிறிதாக இருக்கும் காலத் திலேயே, இதன் ஈர்ப்பு சக்தியினால் இதன் ஓட்ட நிலை துரிதம் கொண்டு, இன்றைப்படி சூரியனைச் சுற்றி, சூரிய குடும்பமாய் சூரியனைச் சேர்த்து நாற்பத்தி எட்டு மண்டலம் உள்ளனவோ, அதைப்போன்று பூமியின் ஈர்ப்பில் சூரியனும் சுழலப் போகின்றது.

சூரியனை மையம் கொண்டு இன்று சுழலும் நிலையே, பூமியை மையம் கொண்டு சுழலக் கூடிய நிலை உருவாகப் போகின்றது.

உயர் படைப்பின் படைப்பில் பலவுண்டு. அப்படைப்பிலேயே வளர்ச்சிகொள்ளும் நிலைகொண்டு, படைப்பின் படைப்பைக் காட்டிலும் உயர் படைப்பாவதுதான் சக்தி நிலையேயன்றி, படைப் பின் குறுகும் நிலையல்ல உயர் சக்தியின் நிலை.

இப்பூமியில் ஞானத்தின் சக்தி கொண்ட மனிதக் கரு உரு வளர்ந்துய்யும் நிலைகொண்டு, சக்தியின் நிலையினால் மனிதனின் ஞானவலுவால், ஆத்ம பலம் கொள்ளும் நிலை பெற்றோரால், நம்மைப் படைத்த அவ்வாதி சக்தியின் படைப்பின் வலுக்கொண்ட சப்தரிஷிகளின் படைப்புடன், மனித ஆத்மாவின் ஆத்ம ஞான வளர்ச்சியினால், பூமியின் நிலை வளர்ந்து, பூமியின் ஈர்ப்புச் சுற்ற லின் ஓட்டம் துரிதம்கொண்டு சுழலும் தன்மையில், பூமியின் ஈர்ப்புடன் வாழக்கூடிய சக்திநிலை மனித உரு நிலைக்கு ஒப்பாம லும், பூமியை மையம்கொண்டு சுழலும் பூமியின் ஈர்ப்பிற்கு வரும் பிறிதொரு மண்டலத்தில், மனிதக் கரு உருவம் வளரக்கூடிய நிலைக்கு இன்றெடுக்கும் ஆத்ம சக்தியின் பலத்தால் மனித இனம் வளரும்.

நொடிக்கு நொடி மாறிக்கொண்டே சுழலுகின்ற அனைத்து நிலைகளிலும் இன்றுள்ள மனித ஆத்ம பிம்ப நிலைக்கொப்ப உருவம் தான் இருக்குமா என்றால் அதுவுமில்லை. ஒன்றை ஒத்த நிலையில் ஒன்றிலிருந்து மாறுபடும் உணர்வின் எண்ணமானது ஆவி நிலை கொண்டு மீண்டும் மீண்டும் ஆவியாகி பிம்பமாகி, ஆவியாகி பிம்பமாகும் தருணத்தில், எந்த ஒரு குண அமிலத்தன்மையும் மாறிக்கொண்டேதானிருக்கும். இன்றுள்ள நம் பூமியின் இயற் கைத் தன்மையில் கனிவளங்களின் ஆரம்ப குண அமில வளர்ப் பில் வளர்ந்த தாவரங்களின் வளர்ச்சி நிலையில் மனிதக் கரு வளர்ச்சியும், மற்ற ஜீவராசிகளின் நிலையும் பூமியின் அமிலப் படைப்புக்குகந்த இன வளர்ச்சியின் நிலைத்தொடர் பெற்றோம்.

நம் பூமியின் தாதுப்பொருட்களில் அதிகமாய் உள்ளது எது? இன்று இரும்புதான் மற்ற தாதுப்பொருட்களைக் காட்டிலும் இப்பூமியில் அதிகம். ஆனால், இப் பூமியின் ஈர்ப்பு சுழன்று வேகம் அதிகம் கொள்ளும் நிலையில், இரும்பைக் காட்டிலும் பூமியின் ஈர்ப்புச் சுழற்சி துரித ஓட்டத்தினால், பூமி இழுத்து வெளிக் கக்கும் சுவாச அலையினால், பூமியின் ஈர்ப்பிற்கு மற்ற மண்டலங் களிலிருந்து வரக்கூடிய அமில குணத்தின் நிலையைக் கொண்டு, இன்று இரும்பை அதிகமாகக் கொண்டுள்ள இப்பூமியின் கனி வளத்தன்மையே, இன்று இரும்பு உள்ள நிலைக்கொப்ப தங்கம் வளரப்போகின்றது. இது உண்மை.

சூரியனின் நிலத்தன்மையில் தங்கத்தைக் காட்டிலும் சக்தி கொண்ட தாதுப்பொருள் உண்டு. இரும்பைக் காட்டிலும் தங்கத்தின் குணம் உயர்ந்ததா என்ற வினு எழும்பலாம். இரும்பைக் காட்டிலும் தங்கம் எத்தன்மைக்கும் இளகி வரும் குண நிலே கொண்டது. தங்கத்தை நுண்ணிய இழைகளாகவும் உருவாக்க முடியும். இரும்பை அதி உஷ்ணப்படுத்தித்தான் அதற்கு உருவகங்கள் அமைக்க முடியும். மிகவும் உறுதிகொண்ட திடப்பொருள் இரும்பு. ஆனுல், இளகும் தாதுப்பொருள் தங்கம்.

இன்று பூமியின் இரும்பின் குண அமிலம் நிறைந்த தாதுப் பொருள் உள்ள நிலேக்கொப்ப, இப்பூமியில் வளரும் ஜீவன்களின் அமில வளர்ச்சியும் அதன் குணத்திற்கொப்ப இருக்கின்றது. இன்று ஓடும் பூமியின் சுழற்சி ஓட்டத்தில் வேகம் கொள்ளும் நிலேக்கொப்ப, பூமியின் தாதுப்பொருட்களின் நிலேயும் மாறு கொள்ளும்.

இரும்பெல்லாம் தங்கமாகும் நிலே உருவாகப் போகின்றது, இப்பூமியில். இனி வரப்போகும் கல்கி காலத்தில், எல்லா நிலேகளுமே ஒவ்வொரு நொடிக்கும் மாறிக் கொண்டுதான் உள்ளன. ஆவி பிம்பமாகி, பிம்பம் ஆவியாகிச் சுழலும் நிலேக்கொப்ப உருண்டு வளரும் நாம், சுழற்சியுடன் ஒன்றிய எண்ணத்தின் வழித் தொடரில் இருந்தோமானுல், சுழற்சியுடன் சுழன்று கொண்டே ஆவியாகி பிம்பமாகி, மீண்டும் ஆவியாகும் அதே சுழற்சியிலிருந்து பிம்பமான பல கோடி கோடி ஆண்டுகளுக்குப் பலவற்றையும் வளர்க்கும் படைப்பாண்டவன் ஆகலாம். இவ்வெண்ணத்தை ஞானமாக்கி, ஞானத்தால் ஜீவ ஆத்ம பலம் உய்யும் வழித்தொடர் கொண்டு.

**9-10-80**

என் அனுபவம்: இன்று தியானத்திலமர்ந்து குருநாதரால் உபதேசிக்கப்படும் உபதேசத்தைக் கேட்பதற்கு முன், நம் சற்குருநாதர் மாமகரிஷி ஈஸ்வரப்பட்டரின் உருவமும், அவர் ஆசியும் கிடைத்தது. ஒரு பக்கம் அவரும், மற்ருேர் பக்கம் நானும் அமர்ந்துள்ள நிலேயில், அவரிடம் தொடர்பு கொண்டதின் சக்தியினுல், அவரிடமிருந்து நான் பெற்ற தியான அருள் மொழிகளில் இன்று வரை அவர் உணர்த்தியவையெல்லாம் தினசரி தியானத்தில் அவரிடமும், நம் குரு வேணுகோபாலசாமிகளிடமும் (ஜீவனுடன் உள்ளவர் வேணுகோபாலசாமி) தொடர்பு கொண்டிருந்தாலும், அவர் உணர்த்தும் உபதேசங்களேக் கேட்டுச் சொல்லும் முறையில் தான் இன்றுவரை நானுள்ளேன்.

அவர் உபதேசித்த செயல் வடிவை என்னுல் செயலில் காண முற்பட்டும், முன்னேறும் நிலே பெறவில்லே. உபதேசத்திற்கு முதல் அவரிடம் தொடர்பு கொண்டவுடன், என் எண்ணத்தில் சகலத்தையும் அறியக் கூடிய உணர்வு எண்ணத்துடிப்புடன் அவரிடம் ஆசி கேட்டேன். உடனே தன் கையால் வாயை மூடிக்கொண்டார். எனக்கும் அவருக்கும் மத்தியில் பெரிய நீளமான திரைச் சீலே ஓடியது. திரைச் சீலேக்கு அப்பக்கம் நமக்கு போதனே தரும் சற்குருநாதர் மாமகரிஷி ஈஸ்வரப்பட்டரும், இந்தப் பக்கம் நானும் அமர்ந்துள்ளநிலேயில், திரைச் சீலேயின் இப் பக்கம் இருந்தே அவர் அமர்ந்திருப்பதுவும், பேசுவதுவும் கேட்கின்றது.

ஆனுல் எனக்கும் அவருக்கும் மத்தியில் திரை. இத்திரைக்குப் பொருளென்ன என்ற வினு எழுப்புகின்ருர். உடனே என் எண்ணத்தில் நான் இன்னும் பயந்த நிலேயில்தானிருக்கிறேன். அவர் உணர்த்துவதை எடுத்துச் சொல்லும் பக்குவம் ஒன்றுதான் உள்ளது. அவர் அருளும் ஞானத்தின் வழி செயல் அடைய முடியாததற்கு இந்தப் பயம்தான் திரையாக உள்ளதா, என்று எண்ணியவுடன் தலேயை மட்டும் அவர் ஆட்டுவதை உணர்ந்தேன். பிறகு தியானத்தில் ஒரு நொடிப்பொழுதில் என் நினேவு இவ்வுலகக் குடும்ப எண்ணத்துடன் மோதுண்டு, என் பந்துக்களில் ஒருவர் அறியாது பெருமை கொள்ளும் செயலே எண்ணியும், பிறகு பிறரிடம் நெருங்கிய பந்துவேதான் அவர்களுக்கு உள்ள குறையை எண்ணி இதை எப்படியும் குருநாதர் நிறைவு படுத்தி விடுவார் என்ற எண்ணமோதலில் குருவிடம் எண்ணி தியானித்த பொழுது உனக்கும் எனக்கும் மத்தியில் உள்ள திரை எதற்கென்று புரிந்ததா? குடும்பச் சுழற்சியில் எந்த ஒரு நிலேக்கும் எண்ணத்தின் ஈர்ப்பை அவர்களிடம் செலுத்தி அவர்களுடனே ஒன்றி, அவர்களுக்காக வேண்டுகின்ருய்.

பந்தம், பாசம், அன்பு, பரிவு அனேத்தும் வேண்டியதுதான். பற்றற்ற நிலே என்ற பாடத்தையும் என்னிடம் கேட்டுச் சொன்னவரும் நீ தான். உன் ஞானத்தால் பற்றற்ற நிலேயின் கருத்தை எடுத்துக் கொள்ள முடிய வில்லே. மற்ற பந்தங்களேக் காட்டிலும் இரத்தத்தொடர்புடைய பந்தங்களின் ஈர்ப்பு அதி விரைவில் நம்மை வந்து சாடும்.

தியானத்தால் நல் வழிப்பட்டு ஞானத்தின்பால் நீ செல்ல பந்த பாசங்களின் உணர்வு எண்ணத்தை உன்னுள் அவர்களின் நிலேயையெல்லாம் ஏற்றிக்கொண்டே, அவர்களுக்காக அதே சுழற்சி வாழ்க்கையிலேயே இருந்து, அவ்வெண்ணத்துடன் உன்

எண்ணத்தைக் கலக்க விடுவதினுல், உன் வளர்ச்சியின் நிலையும் வளர முடியாது. பந்த பாசங்களை ஒதுக்கி விட்டு ஞான வழிக்கு வா என்றுணர்த்தவில்லை. அவர்களிடம் உள்ள குறையையும், நிறையையும் உணர்வின் எண்ணத்தால், உன் எண்ணத்துடன் ஏற்றிக்கொள்ளாமல், அவர்களின் நிலைக்காக, அவர்கள் எண்ண செயல் மோதும் பொழுது, 'அவர்களுக்கு நல்லுணர்வு தா ஈஸ்வரா, அவர்கள் நிலை உயரட்டும்' என்ற எண்ணமுடன், இறை சக்தியின் அலையை மற்றவரின் செயலுக்கெல்லாம் செலுத்தி, அவ்வலையுடன் நாம் கலக்காமல், நாம் பெற்ற நற்சக்தி அலையைக் கொண்டு அவர்கள் உயர உன் எண்ணத்தைச் செலுத்தி, அவ்வெண்ணச் சுழற்சியில் நீ சிக்காமல், உன் எண்ணசக்தியை இறை சக்தியின் செயலாக அவர்களிடம் செலுத்திவிடு என்று உபதேசம் அளித்தார்.

இப்பொழுது புரிகிறதா, உனக்கும் எனக்கும் உள்ள திரை எதற்கு என்று?

**10–10–80**

இப்பொழுது புரிகிறதா? ஞானத்தின் வளர்ச்சி நிலை பெற உபதேசத்தாலோ, நூலில் இருந்து படித்தோ மட்டும் உயர் ஞானத்தைப் பெற்றிட முடியாது. நல் உபதேசத்தைக் கேட்பது வும், நல் நூல்களைப் படிப்பதுவும், நம் உணர்வின் எண்ணமுடன் சுழன்று கொண்டேதானிருக்கும். இஜ் ஜீவ உணர்வு சக்தியைக் கொண்டு, இவ்வெண்ண நிலையை எதன்பால் திருப்புகின்ருேமோ, அவ்வலைத்தொடரின் பதிவு ஒலிகள் அதனுடன் கூடிய நல் அலை களை மீண்டும் பதியச் செய்ய, இவ்வெண்ணத்தால் எடுக்கும் தியானத்தால், இவ்வுணர்வு முழுவதுமே நற்சக்தியின் அலையை நாம் பதிவு செய்து கொள்ள முடியும்.

கோயில் குளங்களுக்குச் செல்லும் பக்திமானுக்கு அவன் கனவிலும், நினைவிலும் இதே நிலைகள்தான் சுழன்றுகொண் டிருக்கும். பல கோயில்களுக்குப் போவதுபோலவும், அங்குள்ள ஆண்டவனைத் தரிசிப்பதைப் போலவும்தான் கனவும், நினைவான எண்ணத்தில் எக்கோயிலுக்குச் செல்லலாம், எந்நூலைப் படிக்கலாம் எந்த ஞானியைத் தரிசிக்கலாம் என்ற உணர்வு அலைப்பிடியில் தான் பக்திமானுடைய எண்ண உணர்வலை எடுக்கும் சுவாசம் கொண்ட அலை பதிந்திருக்கும். திருடனுக்கும் சரி, அவன் உணர் வின் எண்ணத்தில் அவன் எடுக்கும் சுவாசத்தைக்கொண்டு எவ்வலை

ஓடுகின்றதோ, அவ் அலையின் செயலுக்குகந்த எண்ணத்திற்கொப்பத்தான் அவன் நினைவும் கனவும் இருக்கும்.

விவசாயி ஆனாலும் சரி, விஞ்ஞானி ஆனாலும் சரி, குடித்து தன் உணர்வை இழந்தவன் ஆனாலும் சரி, எந்த ஒரு உணர்வின் பழக்கப்பட்ட செயலுடன் கூடிய வாழ்க்கையுடன் வாழ்கின்றேமோ, அதன் நிலைக்கொப்ப, உணர்வின் எண்ணத்திற்கொப்ப, சுவாசத்தால், இவ்வுடலில் பதிவாகியுள்ள நிலைக்கொப்ப, சுழற்சியில்தான் ஒவ்வொரு மனித ஆத்மாவின் ஜீவ சக்தியின் அலைத் தொடரின் சொல்லும் செயலும் வெளிப்படுகின்றன.

இச் சுழற்சியில் அந்தந்த குண அமில செயல் வட்டத்துக்குள் மட்டும் உணர்வின் எண்ணத்தைச் செலுத்தி வாழ்பவனை, அவனுள் பதிவாகியுள்ள குண அமிலத்திலிருந்து மீட்டுவது கடினம். அதே சுழற்சியில் இருந்தாலும் ஆத்ம வளர்ச்சி வளர்க்க முடியாது.

உணர்வுடன் கூடிய எண்ணத்தை நம்முள் பலகோடி ஆண்டுகளாய்ப் பதிவாகி உள்ள குண அமிலத்துடன், நற்சக்தியின் அமிலத்தை ஞானத்தால் நாமெடுக்கும் ஜபத்தைக் கொண்டு நம்மைக் காட்டிலும் சக்தி வாய்ந்த சூட்சும நிலையில் உள்ளோரிடமானாலும் சரி, அவ் வழித்தொடரை அறியவோ, செயலாக்கவோ முடியாதவர்கள் நம் பூமிக்கே சக்தி தரும் சூரிய ஜெபத்தை மேற்கொண்டு, எண்ணத்தில் சூரியனிடம் ஜெபப்படுத்தி, சூரியனிலிருந்து நேராக நம் எண்ண உணர்விற்கு சுவாசம் எடுக்குங்கால், உணர்வின் எண்ணத்தைக் கொண்டு நாம் இழுக்கும் சுவாசமுடன், சூரியனிலிருந்து காந்த மின் அலையின் சக்தி நம் உடல் முழுமைக்கும் பாயப்பட்டு, ஏற்கெனவே நாம் பல காலமாய்ச் சேமித்து வைத்துள்ள இக்குண அமிலத்துடன் நற் சக்தியின் ஒளி அலை பாயப்பாய மனித சக்திக்குள் எச்சக்தியும் அறியக் கூடிய நிலை பெறலாம். நம்மைக் காட்டிலும் உயர்ந்த சக்தியின் தொடர்பைப் பெறும் வழித்தொடரை நாம் பெற்றேமானல், ஜீவனுடன் கூடிய இம் மனித உடல் பிம்பத்திலிருந்து, எச் சக்தியையும் இருந்த இடத்திலிருந்தே உணரவும், காணவும், மாற்றி அமைக்கவும் முடியும்.

ஆனல் நற்சக்தியின் பயனை பக்குவம் கொண்ட, பத நிலையில் செயல்படுத்தக் கூடிய நிலையும் நாம் பெற வேண்டும்.

புகழைக் கண்டு மயங்காதே
புகழாரம் பாடாதே
புகழ் தேடிச் செல்லாதே
இன்னல் கண்டு கலங்காதே

இகழ்ச்சி கண்டு பதருதே
இகழ்ந்துரைக்க எண்ணுதே

நம் ஞானத்தின் வழித்தொடர் வெளிப்பட்டவுடன் நம்மை எதிர்நோக்கியுள்ள நிலைகள்தான் மேலே குறிப்பிட்டவையெல் லாம்.

இந்நிலையுடன் கூடிய உணர்வின் பிடியில் சிக்குண்டவர்கள் தன் வளர்ச்சியின் ஞானத்திலிருந்தே உயரமுடியாத சுற்றலில் இன்றளவும் பலர் சுற்றிக்கொண்டுள்ளார்கள். இப்படி நம் குரு நாதர் போதனைகொடுத்ததல்லாமல், எதை எண்ணி முதல் நாள் எனக்கும், அவருக்கும் மத்தியில் திரை விழுந்ததோ அத்திரை இன்றளவும் விலகவில்லை. ஆனால், அன்று கனவில் அவரிடம் நான் வேண்டிய நிலைகளையெல்லாம் உணர்த்தி பல கவிதைகளையும், பல உண்மைகளையும் வெளிப்படுத்தினர். எனக்கு மிகவும் சொல் லில் வெளிப்படுத்த முடியாத உணர்வின் இன்பம் கொண்டு, நம் குரு வேணுகோபால சாமியின் பாதத்தில் விழுந்து வணங்கி அடைய முடியாத ஆனந்தம் பெற்றேன் என்றுரைக்க அவர் சிரித்துக்கொண்டே ஆசிர்வாதம் தந்தார்.

காலையில் இவையெல்லாம் எனக்கு நேரில் வாழ்க்கையில் காண்பது போலவே இருந்தாலும், அவர் வெளிப்படுத்திச் சென்ற சில உண்மைகளும், மிக மிக உயர்ந்த சில கவிதைகளும் என் நினைவுக்கு வரவில்லை.

**14–10–80**

பருப்பைப் பயிராக்கி, பல பருப்பை அவ் ஒரு பருப்பு பலன் தருகின்றது. ஒன்று வளர அதன் வளர்ப்பின் பலன் தான் ஒவ்வொன்றும். சூரியன், தான் வளரப் பிறரை வளர்க் கின்றது. ஒவ்வொரு இயற்கையின் ஜீவ வளர்ப்பு, தான் வளர, தன் வளர்ப்பில் பிற வளர்கின்றதே ஒளிய, தன் வளர்ப்பில்லாமல் பிற வளர்ப்பு எச் சக்தியும் வளர்த்திக் காட்ட முடியாது.

தன் உணவை தான் எடுத்து, தான் வளர்த்து, தன் வளர்ப் பில் பிறவற்றையும் வளர்க்கச் செய்கிறது சூரியன். மற்ற மண்டலங் களின் ஈர்ப்பைத் தனக்குணவாக எடுத்து, தான் வளர்ந்து, தன் வளர்ச்சியின் பலனை வெளிப்படுத்தி, அவ்வளர்ச்சியின் நிலையால் பிறவும் வளர்ந்து, ஒன்றின் வளர்ப்பில் பல வளர்ந்து, பலவற்றின் வளர்ப்பில் படருகின்ற வளர்ப்பின் செயல்தான் எல்லாமே.

தான் உட்கொண்டு, தன் உணர்வை ஒவ்வொரு உயிரணுவும் ஜீவ சக்தி கொண்டு, உணர்வால் எடுக்கும் முறைகொண்ட வழிகொண்ட தொடர் நிலைப்படிதான், சகல நிலைகளும் உள்ளன. மிகவும் சக்தி வாய்ந்த அகில சக்தியான ஆதிசக்தியின் படைப்பிற்கே, தன் படைப்பின் உணவை உட்கொண்டு உட்கொண்டு தன் படைப்பின் படைப்பில் பலவற்றையும் படைக்கின்றான்.

உயிரணு தோன்றி, அவ்வுயிரணுவின் உயிர் தோன்றி,உயிர் செயலின் வழித்தோன்றி, உயர் ஞான சக்தியாகி, சகலமும் காணும் சப்த ரிஷியானாலும், ரிஷியின் உணர்வுக்கும், தன் வளர்ப்பை வளர்க்க உணவு தேவை. தான் உண்டு, தான் வாழ பிறரையும் வாழவைக்க முடியுமேயன்றி, பிறர் வாழ்ந்தால்தான் வாழ முடியுமென்ற நிலையெதற்குமேயில்லை.

நட்சத்திர மண்டலங்களும், வளர்ந்து விட்ட சகல மண்டலங்களும், காற்றினில் கலந்துள்ள பலகோடி அமில குணங்களின் ஜீவ சத்துக்களும், நீரும், ஒளியும் அனைத்துமே, தன் உணவை உட்கொண்டுதான் வளர்ந்துகொண்டுள்ளன. உணர்வின் சுழற்சிக்கு உணவு தேவை. உணவில்லாமல் எந்த ஜீவத் துடிப்பும் உயிர் வாழ்வதில்லை. ஜீவனுடன் கூடிய பிம்ப உடலுடைய மனிதன், ஜீவ சக்திகொண்ட நீரையும் திடப்பொருள் உணவையும் உட்கொண்டு வாழ்கின்றான்.

மிருகங்களும் மனிதனை ஒத்த நிலையில் வாழ்கின்றன. தாவரங்களின் நிலை, ஈர்ப்பின் சுவாசமுடன் உணவை உட்கொண்டு, அவை வாழ்கின்றன. உடலைவிட்டுப் பிரிந்த ஆத்மாக்கள் உணர்வின் எண்ண நிலைக்கொப்ப, தன் உணர்வு அழியா வண்ணம் நுகர்ந்து, தான் வாழ்ந்த காலத்தில் உண்டு வாழ்ந்த ஆகாரங்களின் வாசனையின் உணர்வை ஈர்த்து, தன் உணர்வுக்குகந்த உணவைக் காற்றிலிருந்து, தன் சுற்றத்தாரின் உணர்வுடன் கலந்து, தன் உணவை உட்கொண்டுதான், ஆவி நிலையில் உள்ளவர்களும் வாழ்கின்றனர்.

உணவில்லாமல் எந்த ஜீவ சக்தியும் வாழ்வதில்லை. ஜீவனற்ற பொருட்களுக்கு எதுவும் தேவையில்லை. ஆனால் ஜீவனற்ற பொருளும் ஆவியாய்க் கரைந்து பிறவற்றிற்கு ஆகாரமாய்த்தான் செல்கின்றது.

படைப்பின் படைப்பனைத்திற்குமே ஒவ்வொன்றிற்கும் அதன் படைப்புக் குணம் மணம் உண்டு. கல், மண், உலோகங்கள் அனைத்திற்குமே மணமுண்டு. மணமில்லா உரு நிலை எதுவுமே

பெறுவதில்லை. நம் பூமிக்கு மட்டுமல்ல, பால்வெளி மண்டலத்திலும், நட்சத்திர மண்டலங்களிலும், வளர்ந்த பெரிய மண்டலங்கள் எதுவானாலும் அதன் ஆரம்ப அமில ஈர்ப்பு ஜீவத்துடிப்பு மணமுடன் ஒலியாகி, ஒளியாகி, நீராகும் செயல்தான் கொள்கின்றது.

மணம் கொண்ட வழியிலேயே உணர்வும் பெறுகின்றது. மணத்துடன் கூடிய உணர்வால்தான், உணவையே உட்கொள்ள முடிகின்றது. இந்நிலை எதற்கு உணர்த்துகின்றேனென்றால், உன் ஜெப நிலையால், உன் உணர்வின் எண்ணத்தை என்பால் செலுத்தி எம் அலையின் தொடரை நீ பெற்றால், உன் உணர்வின் உணவாய் எம் அலை பாயும்.

ஒரு பருப்பில் பல பருப்புகள் விளைகின்றன. அதைப்போல் எம் உணர்வை நீ எடுத்து, உன் உணர்விற்கு உணவாய் உன் வளர்ச்சி நீ பெற்றால்தான், நீ என்னிடம் கேட்ட இத்திரை விலகி, அனைத்தையும் காணும் அபூர்வ சக்தியாம் ஞான சக்தியின் சித்து நிலை பெற முடியும்.

பருப்பு பருப்பாகவே இருந்தால், பல பருப்பு காண முடியுமா? பயிர் செய்து, பலன் பெற்று, பலனின் பயிர் வளர்தொடர்பில்தான் பருப்பென்ற, பருப்பு குணப்பயிர் வளர்ப்பே வளர்ந்து கொண்டிருக்குமேயன்றி, பயிர் செய்யாமல் பயிர் வளர்தொடர் எதுவும் காண முடியாது.

ஒன்றின் தொடர் ஒன்று வளர்கின்றது. ஒன்றென்றும் வளர தன் வளர்ப்பிற்கு உணவு தேவை. அதைப்போன்று நாம் வளர உன்னை வளர்க்கின்றோம்; நீ வளர நீயும் வளர்க்கவேண்டும் பிறரை. வளர்ப்பின் தொடர் வளர்ப்பு வளர்ந்துகொண்டேயிருந்தால்தான், எந்த ஒரு வளர்ச்சி சக்தியும் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

பயிர் வளர்ப்பு மட்டுமல்ல, ஜீவித வளர்ப்பு மட்டுமல்ல, மண்டலங்களின் வளர்ப்பு மட்டுமல்ல, ஞானிகளின் வளர்ப்பு மட்டுமல்ல, அவ்வாதிசக்தியின் படைப்பின் சக்திக்கே படைப்பின் படைப்பாகி பலவற்றின் படைப்பின் தொடர் படைத்துக்கொண்டேயிருக்க வேண்டும். வழித்தொடர் வெள்ளாமை ஒவ்வொன்றிலும் வளர்ந்து கொண்டே இருந்தால்தான், அவ்வளர்ச்சியின் செயல் வளர்ந்துகொண்டேயிருக்கும்.

முற்றுப்பெற்று, முக்திபெற்று முடிவடையும் சக்தி எதுவுமேயில்லை. முழு முதலாய் வளர்வதுதான் ஆதியின் அந்த சக்தி.

உடல் வளர உணவு தேவை. உணர்வின் எண்ணம் வளர ஞானத்தின் உணவு தேவை. உணர்வின் எண்ணத்தை ஞானம் என்ற உணவை உட்கொண்டு, இவ்வுடல் என்ற பிம்ப ஜீவ சக்திகொண்ட வடிவின் அணுவின் உயிரணுக்கள் ஒவ்வொன்றை யும் ஞானம் என்ற உணவை உட்கொண்டு, ஞானத்தால் வளர்ந்த உடல் அணுக்களை சித்து நிலை பெற்றிடவே ஞானமென்ற உண வெடுத்து சித்தனென்ற உருவாகுங்கள். இப்பொழுது புரிகின்றதா போகன் அமைத்த முருகரின் சிலை எதற்கென்று?

தன் நிலை உயர, தன் உணர்வு வளர, முருகனைப் படைத் தான் போகன். முருகன் என்ற சிலையைப் படைத்து, முருகா என்ற நாத உணர்வு ஜீவ சக்தியை உணவாக உட்கொள்கின்றான் இன்றும் போகன்.

ஒவ்வொரு சித்தனும் இந்த ஞான பூமியில் தன் ஞானத்தை வளர்த்துக்கொள்ள, தன் வளர்ப்பின் வளர்ப்பு வளர வழிப் படுத்திய உண்மைகள் பலவுண்டு இப்பூமியில். போகரின் வழித் தொடர் முருகன். முருகனின் உருவத்தைக் காட்டி உணர்வின் எண்ண ஜீவ உணவை உட்கொள்கின்றான் போகன்.

முருகனின் ஆலயம் செல்லும் பக்தர்களில், உணர்வால் உண்மை பக்தி பூண்ட ஆயிரம் பக்தர்கள் சென்றால், ஆயிரத்தில் ஒன்றிரண்டு பக்திமான்களாவது ஞானத்தின் சக்தி பெறச் செல்வ துண்டல்லவா? தன் உணவாய் நல் மணிகளைத் தானுண்டு, பல மணிகளைத் தருகின்றான் போகன்.

## 16-10-70

தன் உணவைத் தானெடுக்க அவன் செய்த செயல் முறை தான் முருகா என்ற சிலை. ஒவ்வொரு சக்திக்கும் எச்சக்தியாயிருந் தாலும் தன் சக்தி வளர உணவு தேவை. உணவை எடுக்க அவரவர்கள் உணர்த்திய முறைகொண்டுதான், போகனால் சீனாவில் பல மருத்துவங்களையும், வெடி குண்டுகளையும், முகம்மது நபியின் உடலை எடுத்து அவர் உடலைக்கொண்டு முஸ்லீம் நாடு களில் தன் உணர்வைப் பதித்து, உணர்வின் எண்ணமுடன் தன் உணவை எடுத்தார். இப்படி தான் வளர தனக்குகந்த வளர்ச்சி யின் ஆகாரமாய்ப் பல நிலைகளை உணர்வின் எண்ணமுடன் பதியச் செய்த முறைகொண்டுதான் அன்றிலிருந்து இன்றுவரை பக்தி முறை தொடர் கொண்டுள்ளது. பக்தியின் உண்மையான உணர் வின் எண்ணத்திற்கு அவர்கள் சக்தியைக் கொண்டு பக்திக்குகந்த

பலனை அளித்துத் தனக்கு உணவை எடுக்கின்றார். கவிதைகளையும், பல காவியங்களையும் எழுத்தில் பதியச் செய்து, பல சித்தர்கள் அதைப் படிப்பவர்களின் எண்ண உணர்வைத் தனக்குகந்த உணவாக எடுக்கின்றனர் இன்றும்.

அன்றெழுதிய ராமாயணம், கீதை, பைபிள், குரான் இவையெல்லாம் காலப்போக்கில் உருக்கள் மாறினாலும், அன்றெழுதிய உணர்வின் சக்தித் தொடரில் படிப்பவர்க்கும், எண்ணுபவர்க்கும் அவ்வுணர்வின் சுழற்சியைக் கொண்டு, இன்றளவும் அதனை எழுதியவரின் உணர்வின் எண்ணத்திற்கு உணவு கிடைத்துக்கொண்டேயுள்ளது. இப்பூமியில் பல கோடி சித்தர்கள் பல உணர்வுகளில் இருந்தாலும், அவரவர்களின் வளர்ச்சிக்குணத்திற்கு உகந்தபடியெல்லாம், தன் எண்ண உணர்வை என்றும் அழியா வழித் தொடரிலும், சில சொல் ரூப மந்திரங்களிலும் பதிய வைத்துச் சென்றுள்ளான் அச்சித்தன்.

ஐயப்பனை எண்ணும்பொழுது ஒரு கோஷம், முருகனை எண்ணும்பொழுது வேறு ஒரு கோஷம், இப்படி ஏசுகிறிஸ்துவுக்கும், முகம்மது நபிக்கும், புத்தருக்கும், கொங்கணவருக்கும் அவர்கள் பதியவைத்த இக்கோஷத்தால் இன்றளவும் தன் உணர்வுக்குகந்த உணவை எடுத்து, தாம் வாழ்ந்து, வளர்ந்து, பலவற்றையும் வாழ வைத்திருக்கின்றார்கள் சக்திகொண்ட இச்சக்திகளை. உணவில்லாமல் எதுவுமே வளர்வதில்லை. பிம்ப உடல்கொண்ட ஜீவத்துடிப்பு உருவங்களுக்குத் திடமான உணவு தேவை. ஆனால் பிம்ப உடல் கொண்ட திட உணவை உட்கொள்ளும் இம் மனித சக்தியில் இருந்துதான், உணர்வின் எண்ண உணவையும் உட்கொள்ளும் சக்தி நிலை வளர்கின்றது. தாவரங்கள் நீரையும், சில எருக்களையும் உணவாக உட்கொண்டாலும், உணர்வுடன் கூடிய எண்ண உணவெடுக்கும் முறை மனித ஞானத்திற்குத்தான் உண்டு. மனித ஞான உணர்வின் உயர் சக்தியில் ஊன்றியுள்ள உண்மைதனை உணரல் வேண்டும். மனித நிலையிலிருந்து மாறி மிருகநிலையிலும், மற்ற பட்சிகளின், புழு, பூச்சிகளின் நிலையிலும் உணர்வின் எண்ண ஞான உணவெடுக்கச் செயலில்லை.

ஞானத்தின் உணவை எடுத்துச் சித்தனென்ற செயல்கொண்டு சப்த ரிஷியின் செயலாக்கி, ஆதி சக்தியின் சக்திக்கே துணை சக்திகொள்ளும் வடிவெடுக்கும் உருவங்கள்தானப்பா இம்மனித பிம்ப உடல். இதனை உணர்ந்துதான் இன்றளவும் போகர் தன் உடலை அழியா உடலாகப் பாதுகாத்து வருகின்றார். கால நிலைகள் மாறி மனித உருவங்களின் உணர்வின் எண்ணம் மாறு கொள்ளும் தருணத்திலெல்லாம், தனக்குகந்த உணவு கிடைக்

காமல் தடைப்படும் தருணத்தில் அவர்களின் சக்தியைக் கொண்டு சில உடல்களில் தன் உணர்வின் அலையைப் பாய்ச்சி பிம்ப சக்தியை வெளிக்காட்டி அப்பிம்பத்திலிருந்து பலருக்கும் அறியக் கூடிய சில உடல்களை ஏற்கின்றார். அருணகிரிநாதருக்கும் இந் நிலையில்தான் போகரின் சக்தியைக் கொண்டு முருகன் என்ற பக்தியைக் காட்டினர். இப்படிப் பல கோடி ஆண்டுகளாகவே நற்சக்தியின் விதைகள் விதைக்கப்பட்டுப் பலனெடுத்து மீண்டும், மீண்டும் பலன் கொண்டு, தானெடுத்த உயர் ஞானத்தைக் கொண்டு பல ஞானங்களின் உணவு எடுத்து உருவாகி, உருவாகி தனியொரு மண்டலமாய் உருவாகிச் சுழன்றுகொண்டேயுள்ள சக்தியில் முதல் எது? கடைசி எது?

## 17-10-80

### விஞ்ஞானம் — விஞ்ஞானம் — விஞ்ஞானம்

இன்று இப்பூமியில் மனிதனின் தேவையின் வேகம் விஞ் ஞானத்தின் அலையால் விஞ்ஞானத்துடன் ஓடிக்கொண்டுள்ளது. உணர்வின் எண்ணச் சுழற்சியே விஞ்ஞானத்துடன் ஒன்றியுள்ள நிலையில், தன் ஞானத்தை வளர்க்கக் கூடிய உணர்வு குண சித்து நிலையின் செயலுக்கு, நம் பூமியின் மனித ஆத்மாக்களின் ஈர்ப்பை எடுக்கக் கூடிய நிலையும், சப்த ரிஷிகளுக்கும், சித்தர்களுக்கும், அவர் கள் பெற்ற சக்தி அலையின் மெய்ஞான விளைச்சல் இப்பூயில் விளைய வைத்து, அதன் மகசூலைப் பெருக்கவும், இன்று இப்பூமியில் விஞ் ஞானத்தால் வாழ்ந்திட்ட செயற்கையின் செயல் குண உணர் வுடன், இன்றுள்ள உணர்வின் எண்ண வளர்ச்சியை, மெய் ஞானம் கொண்டு, பூமியின் தத்தளித்துக் கொண்டுள்ள செயலை, எண்ணத்தால் மனித குணங்களை பக்தி, ஞானம் என்ற உயர் குண உணர்வு எண்ண சுவாசம் எடுத்து, நல்ல உணர்வில் தான் பெற்ற சக்தி அலையைப் பயிர்செய்ய, அவ்வுணர்விற்கே மனித எண்ணங்களைத் திருப்ப முடியாமல் உள்ளதினுல், விதியின் பயன், விதியின் பயன் என்று முன்னேர்கள் உணர்த்திய விதி செயலாய் இன்று இப்பூமி உள்ளது.

காந்த மின் அலையைப் பலவாகப் பல ரூபங்களில் பிரித் தெடுத்துவிட்டான்; பிரித்து எடுக்கின்றான். உலகையே நிலைதடு மாற நிகழப்போகும் மாற்றத்தின் வித்தையும் ஊன்றிவிட்டான்.

இன்று இப்பூமியில் நடக்கும் சில இடங்களின் மாற்ற நிலை களும், போர்களும், இப்பூமியின் காற்று மண்டலத்தையே விஷ

மாக்கிவிட்டது. இன்று உணவாக உட்கொள்ளும் பல பொருள்கள் விஷத்தன்மையில் கூடப்போகின்றன. வரப்போகும் எதிர்கால முறையெல்லாமே, விஞ்ஞான வளர்ச்சியில் பூமியின் இயற்கை சக்தியை உறிஞ்சி எடுத்ததினுல், பூமியின் வலுக்குன்றி, தன் வலுவைத் தான் பெருக்க நிகழப்போகும் மாற்ற குண காலம் நெருங்கிவிட்டது.

சப்த ரிஷிகளும், பல கோடி சித்தர்களும் தன் சக்தி உணர்வின் செயலைக் குன்றவிடாமல் வளர்த்துக் கொண்டிருந்தால்தான், ஞானக் கரு உரு மனிதனை உண்டாக்கி, ஞானத்தால் வளரக் கூடிய சக்திகளின் வளர்ச்சிக்கே சக்தி கூடும். ஊரே, உலகமே மாறு கொண்டு அழியும் தருவாயில் நம் உயிராத்மா மேலா? நாம் மட்டும் இருந்தென்ன பயன்? எல்லாமே விஷமாய் உள்ளபொழுது, ஜபமுறையில் எப்படி நாம் இருந்தாலும், விஷத்தின் சுழற்சியில் சிக்கத்தானேவேண்டும் என்ற வினு எழும்பலாம்.

இம்மனித ஜீவ உடலில் உள்ள உணர்வின் எண்ண அலையை நல்ல உரமான சக்தி உரத்தை இட்டு, ஆத்ம பலம் என்னும் ஞான பலத்தைக் கூட்டி, ஒவ்வொரு அணுவையும் உணர்வின் எண்ணத்தால், ஒளியின் அணுவாய் உணர்வாக்கிவிட்டால், விஷமுடன் நாமிருந்தாலும் அவ்விஷம் நம் உடலில் பாயாது. அதற்கு உகந்த பக்குவத்தைத்தான் சத்தியத்தின் சக்திநிலை மூலமாய் ஒவ்வொரு உயிராத்மாவிற்கும் பக்குவப்படுத்தி வருகின்ருேம்.

ஓர் ஆத்மா சக்திகொண்டு வந்தால் அச்சக்தியைக்கொண்டு பல சக்தியை வளரச் செய்யத்தான், இத்தியானம் என்னும் ஆத்ம பலம் கொள்ளுங்கள் என்று உணர்த்துகின்ருேம். எல்லாம் போகும்பொழுது நாமிருந்து என்ன பயன்? என்று எண்ணுமல், ஓர் ஏக்கர் நிலத்தில் பத்து மூட்டை நெல் வந்தால், எல்லாமே உணவாக்கி விட்டால் விதை நெல் வேண்டுமல்லவா? விதை நெல் இருந்தால் தான் மீண்டும் மீண்டும் பயிர் செய்ய முடியும். குண வம்சமே அழிந்துவிட்டால் அதன் இன வளர்ச்சியின் விதை வேண்டாமா? அதைப்போல், உணர்வால் எடுக்கும் தியானம் கொண்டு, ஆத்ம பலம் என்ற ஞான வளர்ச்சியின் வழிக்கு வாருங்கள்.

உற்ருர், சுற்றத்தார் என்ற சுழற்சியில் உணர்வின் எண்ணத்தைப் பதியச்செய்து, அதே சுழற்சி வலையில் சிக்குண்டு சிதருமல், உணர்வின் எண்ணத்தை உயர் தியானத்தால் ஞானம் கொண்டு, ஒவ்வொரு ஜீவ பிம்ப உடல்களையும் உம் எண்ண உணர்வால்

நல்லுணர்வின் அலையைப் பாய்ச்சி, உம் உணர்விற்குப் பலம் கூட்டுங்கள்.

இப்பூமியில் பயிராகியுள்ள மனித மகசூலின் விதையாக நீங்களிருக்க, உணர்வின் எண்ணத்தை ஒவ்வொருவரும் நற்குண தியானமாக வாழ்க்கையின் தியானத்தை வழியமைத்துக் கொள் வீர்களாக.

**20-10-80**

உணர்வின் எண்ணத்தை வழியமைத்து வழி செல்லுங்கள் என்றுணர்த்தியதின் நிலையென்ன? உணர்வுடன் கூடிய எண்ணத் தின் சுவாசத்தால் மனித எண்ணத்திற்கு தன் உணர்வின் எண்ண நிலையை அறிந்து செயல்படுத்தக்கூடிய ஆற்றலும், திறமையும் உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் உணர்வின் எண்ண நிலைக்கொப்ப குண நிலையில் மாற்றமுண்டு. தன் உணர்வின் எண் ணத்தைத் தன்னிச்சையில் செயல்படுத்தும், தனக்குகந்த உணர்வு எண்ணத்தின் நிலையில் செல்ல மனிதனுக்கு முடியும். ஆனால், சில மிருகங்களின் நிலைக்கு உணர்வுடன் கூடிய எண்ணத்தைச் செயல்படுத்தி வழிக்கொள்ளும் திறமையில்லை. அதனுடைய ஒலி ஈர்ப்பு ஒன்றி சுவாசத்துடன் மோதுண்டவுடன் ஒன்றின் குண உணர்வுக்கொப்பத்தான், அதன் எண்ணத்தின் செயலைக்கொண்டு, அதன் இன வர்க்கங்களும் ஒரே உணர்வு எண்ண ஓட்டமாய் ஒன்றுடன் சார்ந்தே அதன் இன மிருகங்களின் நிலையும் ஒத்துச் செல்லும்.

பறவைகள், யானைகள், ஆடுமாடுகள், நீரில் வாழும் சில உயிரினங்கள் இவையெல்லாம் ஒன்றின் ஈர்ப்பின் ஒலி அலை மோதுண்டு, அதன் உணர்வின் எண்ணத்தைக் கொள்ளும் நிலை கொண்டு ஒன்றெடுத்த அலைத்தொடர்பு கொண்டே, அதன் இனக் கூட்ட வர்க்கங்களும், அதன் பின்னேயே செல்லும். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தன் உணவை நாடிச்செல்லும், ஒன்றின் தொடரிலேயே ஒவ்வொன்றின் நிலையும் தொடர்ந்து செல் லும் கூட்டமாக.

மனிதனிலிருந்து மாறுகொண்டு ஒரே நிலையான எண்ண வேட்கைக்குகந்த அமில குண இன ஈர்ப்பின் வளர்ப்புத்தான் மற்ற இனங்கள். ஆனால் இம்மனிதனின் ஞான சக்தியால் செய லாக்கும் செயல் திறன் உணர்வின் எண்ணம் கொண்டு, மனித குண அமிலத்தையே அசுர குணம் நீக்கி, முருக குணக் கலவை உணர்வுடன் கூடிய எண்ணத்தை நாமெடுக்க முறைப்படுத்திக் கொண்டால், மனித மகசூலின் வித்தாய் நம் நிலை உயருமப்பா.

இவ்வுணர்வின் எண்ணத்தை உணர்ந்தே ஒவ்வொரு மனிதனும் தன் உடல் பிம்ப ஜீவ சக்தியின் உயிருடனே, உணர்வின் எண்ணத்தை ஞானத்தின் ஈர்ப்பு குணமுடன் ஒன்றிய அலைத்தொடரில் செயல்நிலை இருந்தால்தான், செயல்படுத்தும் செயலான ஆதிச் செயலுக்கே செயல் கூடுகின்றது.

ஆதி சக்தியின் சக்திதான் அகிலத்தின் சக்தி. அண்டத்தையும், ஆதியையும் படைப்பவளும், வளர்ப்பவளும், மாற்றுபவளும் அவளே. அப்படியிருக்க ஆதி முதல்வன் முதலாமவனே, விநாயகனே, என்று விநாயகரை மூல முதல்வன் என்று, முதல் தெய்வம் விநாயகன் என்று வணங்குகின்றோம்.

மூல முதல்வன் என்று சித்தர்கள் மூலமாக்கிக் காட்டிய விநாயகனின் நாமத்தின் தெய்வ சக்தியென்ன? ஆதிசக்தியின் ஆவியான அமில சக்தியின் உருவாய், மூலவனாய், விநாயகனை மனிதனின் உரு கரு வளரும் அமிலப் படைப்பின், உருநிலையின் உருவிற்குத்தான் விநாயகனின் நாமத்தைச் சூட்டினார்கள்.

சித்தர்கள் உணர்த்திய ஒவ்வொரு செயலுக்கும் பொருளுண்டு. ஆனால் காலப்போக்கில் உணர்ந்து வழிபடும் நிலை மாறிவிட்டது. இன்றுள்ள கால நிலையில் உருண்டோடிய காலங்களுடன் நம் உணர்வின் எண்ணத்தை உருளவிட்டு நம் சக்தியை அச் சுழற்சியிலேயே சுழன்று உண்மை எது, என்று ஆராயும் நிலையை மாற்றி, அறிந்துயரும் ஆக்கத்தின் வளர்ப்பு குணமுடன் இன்றுள்ள இக்கால நிலையில் சமுதாயச் சுழற்சியில் சிக்குண்டு அதன் ஈர்ப்புடன் நம் சக்தியையும் மிருக நிலையில் ஒன்றின் உணர்வின் எண்ணம் கொண்டு ஒன்றிச் செல்வதைப்போன்ற உணர்வுடன் நாம் சிக்காமல், நம் உணர்வின் எண்ணத்தை உயர் குண அமிலமான நற்குணங்களை வளர்த்துக்கொள்ளும் செயல் குண உணர்வாய் நாம் உயரல் வேண்டும்.

உடல் என்ற பிம்பத்தை அழகுபடுத்த ஆடை தேவை. உயிர் என்ற ஆத்மாவை ஞானப்படுத்த வாழ்க்கை என்ற சமுதாய எண்ணம் தேவை. சமுதாயச் சுழற்சி எண்ணத்தால் ஆத்ம ஞானத்தை அழகுபடுத்துங்கள்.

**24–10–80**

### உடல் கூறு

ஜீவ சக்தியுடன் கூடிய இம்மனித உடலில் பலகோடி உயிரணுக்கள் உண்டு. உடல் கூற்றை ஆராய்ந்து, விஞ்ஞான

மருத்துவத்தில் உணர்த்துபவர்களும், இம் மனித உடலில் ஏற்படும் வியாதிகளின் ஆராய்ச்சித்தன்மைகொண்டு, மனிதனுக்கு ஏற்படும் வியாதியை அவன் உடலில் உள்ள அணுக்களை ஆராய்ந்து அதிலுள்ள வெள்ளை அணுக்கள், சிவப்பு அணுக்கள், இரத்தத் துடிப்பின் நிலைகள், உதிரத்தில் ஏற்படும் அந்தந்த வியாதிக்குகந்த அணுத் தன்மையின் மாற்றத்தையும், எவ்வணுவின் நிலை உயர்ந்துள்ளதோ, அவ்வுடலுக்குகந்த அணுத்தன்மையில், மனிதனின் வியாதிக்குகந்த மாற்றத்தைக் கண்டறிகின்றான்.

உணர்வின் அமிலகுணம் என்றுரைக்கின்றோம் நாம். அதையே விஞ்ஞான மருத்துவத்தில் வைட்டமின்கள் என்றுரைக்கின்றார்கள்.

**வைட்டமின்கள்—4**

**வைட்டமின்** ஏ

*பி 1* — தயமின்
*பி 2* — ரிபோபிலோவின்
B Complex — நிகோடினிக் ஆசிட்
*பி 6* — பைரிடாக்ஸின்
எப் — போலிக் ஆசிட்
*பி 12*—
பேன்டதனிக் ஆசிட்
ஐனேசிடால்
பயேடின்
பாரா அமைனோ பென்சாயிக் ஆசிட்
Cholin—கோலின்

வைட்டமின் சி
வைட்டமின் டீ
வைட்டமின் கே
வைட்டமின் இ

இதுவுமல்லாமல் உடலில் உள்ள மாறுகொண்ட விஷ அணுக்கள் உள்ளதையும் உணர்ந்து வெளிப்படுத்துகின்றான்.

இந்நிலையில் அணுக்களின் தன்மையை நுண்ணிய கருவிகளைக் கொண்டு, சில அமிலங்களை அதில் செலுத்தி மாற்ற நிலைகளைக் கண்டுணர்ந்து, மனித உடலின் அணுக்களின் ஆராய்ச்சியின் விகித நிலைக்கொப்ப, மருத்துவ விஞ்ஞானம் மிக மிகத் துரித கதியில் முன்னேறி உள்ளது இன்று. மருத்துவ விஞ்ஞானத்தால், ஜீவன் பிரியக் கூடிய ஆத்மாவை ஜீவிக்க வைக்கின்றான் மருத்துவன்.

ஆனுல், மருத்துவ ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும் நோய்க் கிரிமிகளே ஆராய்ந்து அதற்குகந்த மாற்றுக் குணங்களே ஏற்றி, அந்நோய்கள் பரவா நிலேக்காக தன் செயலில் சக்தியையும், பணத்தின் வலிமை கொண்டும் பல சாதனேகளே, இயந்திரங் களின் நிலேக்கொப்ப, மனித உணர்வின் எண்ணத்தை, விஞ்ஞான மருத்துவம் இழுத்துச் செல்கின்றதேயன்றி இயற்கையின் குண அமில மாற்று நிலேயை வழிப்படுத்தி ஆத்ம தியானம் என்ற இயற்கையுடன் ஒன்றி இயற்கைக் கோளமான மனிதக் கோளத் தின் வீரிய உயர்சக்தியின் ஞானத்தை இயற்கை ஈர்ப்பின், குண அமிலத்தின் ஈர்ப்புடன் ஒன்றச் செய்து, மண்டலங்களாய் உருப் பெறும் இவ்வுடல் மண்டலங்களேச் செயலாக்கும் திறமைக்கு, இவ்வெண்ண ஈர்ப்பு உணர்வைச் செலுத்த முடியாத செயற்கை விஞ்ஞான மருத்துவ இயந்திர மனிதன் தான் இன்றுள்ள மனிதன்.

பல கோடி கோடி உயிரணுக்கள் வாழ்கின்ற பிம்ப ஜீவ மனித உடலில் ஏற்படும் பிணியினுல், ஒன்றின் ஈர்ப்பில், எவ் ஒன்றின் அலேத்தொடர் வியாதி நிலே சிக்குண்டு, அதன் ஆரம்ப வியாதி நிலேயில் அவை மாறுபடாமல் (குணமாகாமல்) அதன் சுழற்சியில் உணர்வின் எண்ணத்தைக் கடினமாக்கிச் செலுத்தி மேன்மேலும் அதன் ஈர்ப்பின் சுவாசத்தால் குறைவாக உள்ள இவ்வியாதியின் அணுவே, உடல் முழுமைக்கும் ஏறச்செய்து, ஓர் அணு பல அணுவையும் தன் குணத்தின் தொடரின் சுழற்சி யினுல் உடல் பிம்பம் முழுமைக்கும் அதன் குண, செயல் வியாதி தொற்றிக்கொண்டு, அதே சுழற்சி பயத்தில் பிம்பஉடலின், அவ் வுடலுக்குகந்த அமிலங்கள் எல்லாம் மாற்றப்பட்டு, ஒன்றின் ஈர்ப்பு வியாதியுடன் ஒன்றிப் பிரிவதுதான் இஜ் ஜீவன்.

மனிதனுக்கு வியாதிகள் எப்படி வருகின்றன? உணர்வின் எண்ணத்தைக்கொண்டு, எதனேயும் மாற்றி அமைக்கும் சக்தி மனிதனுக்குண்டு. மனிதனுக்கு ஏற்படும் வியாதியில் சக்கரை வியாதி எப்படி ஏற்படுகிறது? சர்க்கரை வியாதியின் குண நலன் என்ன? சிறு வயது முதற்கொண்டு ஒரு நிலேயான வாழ்க்கையில் வாழ்ந்துள்ள நிலேயில், அதி சந்தோஷங்கள் ஏற்பட்ட காலங் களில், சந்தோஷ அலேயின் சுழற்சி வாழ்க்கையில், அதன் தொடர் அலேயில் ஏற்படும் சலிப்புக் குணம் உந்தப்படுபவனின் உடல் அமிலத்தின், உணர்வின் எண்ணத்தைக் கொண்டெடுக்கும் சுவாசத்தால், அவன் உட்கொள்ளும் ஆகாரமானது உதிரமாகக் கலக்கப்படும் ஆவி அமிலத்தில், இக் குண நிலேயின், உணர்வின் எண்ணம் கொண்ட சுவாசத்தால், சர்க்கரைச் சத்து என்ற இவ் அமில சுரப்பி அதிகமாக உடலுக்கு வேண்டிய உதிர சக்தி யிலிருந்து அதிகமான சத்து நிலேகள் சிறுநீரில் கலந்துவிடுகின்றன.

மருத்துவத்தில் சில நிலைகளை இவ்வுடலில் செலுத்தி (மருந்துகளை) அந்தந்தக் காலங்களுக்கு உணவுடனும், மருந்துடனும் சமப்படுத்தலாமே தவிர, இவ்வுணர்வின் எண்ணத்தை, இவ்வியாதியில் சிக்குண்ட மனித ஆத்மாவானது, ஆத்ம தியானம் என்ற குண நிலையைச் சமமான நிலைப்படுத்தி, நற்குணங்களின் ஈர்ப்பில் தன் எண்ணத்தைச் செலுத்தி, தானெடுக்கும் ஞானத்தால், சூரியனின் உயர் அலையின் தொடரை, உடல் பிம்பத்தில் ஈர்க்கும் தியானம் கொண்டால், மாறுகொண்ட உடல் பிம்பத்தின் எவ்வியாதியையும் மாற்றி அமைக்கலாம்.

தான் வாழ்ந்த எண்ணச் சுழற்சியில் இருந்துகொண்டே உண்ணும் உணவாலும், மருந்தாலும் மட்டும் எவ்வியாதியையும், எம் மகான் வந்தாலும், அகிலத்தையே ஆட்டுவித்த, ஆட்டுவிக்கும் ஆதிசக்தியின் தொடர்பிருந்தாலும், உணர்வின் எண்ணத்தைச் சமப்படுத்தும் செயல் எண்ணம் இருந்தால்தான் மனித ஆத்மாவின் உடல் பிணியும் தீரும், உயர் ஞான குணமும் வளருமப்பா.

உணர்வால் எடுக்கும் எண்ணத்தைக்கொண்ட வியாதிகள் தானப்பா, இம்மனித உடலில் ஏற்படும் எல்லா வியாதிகளும். உதிரக் கொதிப்பு எப்படி ஏற்படுகிறது? உணர்வின் எண்ணத்தை, கோபத்தின் அலையில் எடுக்கும் சுவாசம் கொண்டு, கோபத்தின் தன்மையை அதே ஈர்ப்பில் மீண்டும் மீண்டும் எடுத்து, அதை வெளிப்படுத்திக் கோப அலையில் வாழ்பவனுக்கு, இரத்த நாளங்களின் துடிப்பு நிலை அதிகமாகி, உஷ்ணமான கனம் கொண்ட ஈர்ப்பின் சுவாசத்தால் உணர்வின் கொதிப்பே உதிரக் கொதிப்பாகின்றது.

சஞ்சலம் கொண்ட சலிப்புக் குணத்தின் ஈர்ப்பின், உணர்வின் எண்ணச் சுவாசம்தான் புற்றுநோய்க்கும், எலும்புருக்கி நோய்க்கும் வித்தப்பா. காமாலையும் உப்புச் சத்துக்களும் எப்படிக் கூடுகின்றன? தன் உடலின் உறுப்புக்களின் சுரப்பி நிலைகளுக்கொப்ப அவன் செய்யும் வேலைகளும், அவ்வுடல் நிலையின் சக்திக்கு மேல் உடல் உழைப்பும், உறங்கும் கால நிலையும் மாற்றியமைக்கப்பட்டு, கடின உழைப்பால் உடலில் இருந்து வெளிப்படும் வியர்வையிலிருந்து, உடலிலுள்ள அமில உப்புகள் வெளிப்பட்டுள்ள நிலையில், அவன் உண்ணும் உணவு எவ்வமிலம் வெளிப்பட்டுள்ளதோ அதற்குகந்த உப்புக்கலந்த உணவு நிலைகள உண்ணுமல், அமில குணங்கள் வெளிப்பட்டுள்ள நிலையில், கொழுப்புச் சத்துக்கள் நிறைந்த ஆகாரங்கள் உண்ணும்பொழுது, அவ்வுடலின் தன்மையில் அவை ஏற்கப்படாமல் நுரையீரல் பாதிக்கப்பட்டு உதிரத்தை

சுத்தப்படுத்தக் கூடிய சில அவயவங்களில் இவன் உண்ணும் உணவால் உடலில் ஏற்கெனவே இருந்த சத்துக்கள் வெளிப்பட்ட வுடன் இக்கனமான கொழுப்பு நிலைகொண்ட ஆகாரங்கள் செயல் படாத நிலையில்தான் இம்மாதிரி வியாதிகள் வருகின்றன.

கோபத்தைத் தன்னுள் அடக்கி அடக்கி, பிறர் மத்தியில் தன்னை சாந்தவானாகக் காட்டுபவனின் உணர்வின் எண்ணம் கொண்டவனுக்கு, குடல்புண்களும் (ulcer) சில மூலவியாதி களும் வருகிறதப்பா. கோபத்தைக் கட்டுப்படுத்துவதாக அவன் எண்ணம், வெளியில் தெரியாத இவனது குணத்தின் செயலை உள் அடக்கிக்கொள்வதால் குடலில் ஏற்படும் குடல்புண் நோய்களெல்லாம் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு வியாதியும் ஏற்படுவது இத்தொடர்ச்சியில்தான். இவ்வலைத் தொடரின் தொடர் கொண்ட ஆவிகளின் தொடர்ச்சி யும், பலவீனமான உணர்வுடன் நாமெடுக்கும் சுவாசத்தால் பலவீனம் கொண்ட தொடரலையின் ஈர்ப்பும், அக்குணம் கொண்ட ஆவிகளின் தொடரும் நம்முள் ஏறிக்கொள்கின்றன.

நற்குணங்களின் ஈர்ப்பில் நாமெடுக்கும் சுவாசத்திற்கு இக்குணமுண்டு. நாமெடுக்கும் எத் தொடருக்கும் இக்குண முண்டு. நல்லவையானாலும், தீயவையானாலும் இச் சுவாசத்தால் எடுக்கும் உணர்வின் எண்ணச் சுழற்சியில்தான் நாம் வாழு கின்றோம். எண்ணத்தின், உணர்வின் குண நிலைக்கொப்ப ஈர்ப் புடனே நாம் சுழலுகின்றோம்.

**20–10–80**

உயிரணுத் தோன்றி வளரும் தருண முதற்கொண்டு, உணர் வின் எண்ணம் கொண்ட ஈர்ப்புக் குணச் சேர்க்கை வளர்ச்சியில், தொடர் வளர்ச்சிதான் ஒவ்வொன்றின் வளர்ச்சி நிலைகளும். ஒவ்வொருவருக்கும் வரக்கூடிய வியாதியின் தன்மைகொண்ட குணநிலை ஒத்துத்தான் இருக்கும். குண நிலைக்கு ஒத்த வியாதி தான் மனிதனுக்கு வருகிறது. மனிதனுக்குத்தான் பலவிதமான புதுப்புது வியாதிகள் வளர்ந்துகொண்டே உள்ளன.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான வியாதிகள். தாவரங்களுக்கு ஒன்றை ஒத்த நிலையில்தான் அதனதன் வியாதி அணுப்பூச்சிகள் அத்தாவரத்தைத் தாக்குகின்றன. மிருகங்களின் நிலையிலே மனித நிலைக்கு முற்றிலும் மாறுகொண்ட நிலை யுள்ளது.

மிருகத்தின் உணர்வின் எண்ணம் ஒலியின் ஈர்ப்பைக்கொண்டு பழக்கப்பட்ட ஒன்றின் செயலில் செல்வதினுல் ஏறக்குறைய தாவரங்களின் நிலைக்கு ஒத்த பருவக் காலங்களில் தாக்கக்கூடிய விஷ அணுக்களின் நோய்த் தன்மை ஒன்றுக்கொன்று தொடர் கொண்ட ஒட்டும் நிலையில் ஒன்றை ஒத்த வியாதியில்தான் மிருக இனம் தாக்கப்படுகின்றது.

மனித ஞானத்திற்கும் சில காலகட்டத்தில் சீதோஷ்ண நிலைக்கொப்பவும், பூமி இழுத்து வெளிப்படுத்தும் உஷ்ண அலையின் வெக்கைக்குகந்த நிலைகொண்டு அந்தந்தக் காலங்களில் வளரக் கூடிய சில விஷக்கிருமிகளின் நிலையினுல் காற்றிலும், நீரிலும் தொத்தியுள்ள விஷக்கிருமியினுல் சில தாக்குதல்கள் ஜுரங்களும், வாந்தி, பேதி, கண்களைத்தாக்கக் கூடிய சில நோய்க்கிருமிகளும், கால நிலையில் இயற்கைக் கொப்ப ஒன்றின் தொடர்கொண்டு ஒருவரைப் படர்ந்த நிலையில் ஒன்றைப்போல் பலருக்கும் சில வியாதிகள் தாக்கப்படுவதுண்டு.

கால நிலைகள் மாறி இயற்கையின் மாற்றத்தால், அவ்வணுக் களின் ஈர்ப்பு குண விஷங்களும் மாறும் தருவாயில் விஷக்காய்ச் சல்கள் தொற்றிப் பலருக்கு ஒரே சமயத்தில் இவ்வியாதி வந்தாலும் இவ்விஷக் கிருமியினுல் தாக்கக் கூடிய வியாதிகள் தொடர் கொண்டு வளராமல் சிறிது காலத்தில் அதன் குணம் மாறி விடுகிறது.

ஆனுல், உணர்வால் எடுக்கும் எண்ணம் கொண்டு ஏற்படும் வியாதிகள் அவரவர்களின் எண்ண நிலைக்கொப்ப உடலின் அணுவின் அணுவாய் ஒன்றி வளர்ந்து இவ்வுடல் பிம்பம் அழியும் வரை அதன் குணப்பிடியில்தான் மனிதன் சிக்கி மாளுகின்ருன்.

அம்மை வியாதிகள், மலேரியா, டைபாய்டு, வாந்தி, பேதி போன்றும் இன்னும் புதிய புதிய சில விஷத்தன்மைகொண்ட வியாதிகளும், அந்தந்தக் காலங்களில் ஏற்படும் சீதோஷ்ண நிலைக் கொப்பப் படரக்கூடிய விஷத்தன்மையின் பாதிப்பு சீதோஷ்ண நிலையின் மாற்றத்தைப் போலவே அப்பாதிப்பின் தன்மையும், இப்பூமியின் ஈர்ப்பில் வெளிப்படும் உஷ்ணத்தின் விஷ அணுக்கள் இப்பூமியில் வாழும் ஜீவஜெந்துக்களின் நிலையிலும், அதன் நிலைக் கொப்ப பூமியின் ஈர்ப்புடன் ஒன்றிய ஜீவன்களுக்கும் சாடு கின்றது.

அவ்வலையின் விஷத்தின் தாக்குதல் கிருமியின் அணுவை படர்ந்துள்ள காற்றின் அலை ஈர்ப்பு சுவாசமுடன் எடுப்பவர்க்

கெல்லாம், குறிப்பிட்ட காலத்தில் ஒரே தன்மை கொண்ட வியாதி தான் பலரைத்தாக்கும். கால நிலையில் அதன் சக்தியின் வலுக் குன்றி மாற்றமும் கொண்டுவிடுகின்றது.

இத்தன்மையான தாக்குதல் நீருடன் கூடிய ஜீவ சக்தி கொண்ட, உணர்வின் துடிப்புக் கொண்ட எவரையும் தாக்கத் தான் செய்யும். தன் சக்தியையே தெய்வ சக்தியாக்கி சப்த ரிஷியின் நிலையில் ஜீவன் கொண்டு உள்ளவனுய் இருந்தாலும் கால நிலையின் மாற்றத்தில் ஏற்படும் சில விஷ அணு கிருமிகளின் தாக்குதல் சுவாசமுடனும், நீருடனும் தாக்கத்தான் செய்யும்.

பூமியின் நிலையுடன் கூடிய கால மாற்றமுடன் இவ்வணுவின் தன்மையும் மாறிவிடும். இவை இயற்கையின் உண்மையுடன் உருண்டுள்ள செயல் தொடர்பான குண நிலைகள்தாம்.

தாவரங்கள், மனிதன், மிருகம் என்று இனம் பாத்துத் தாக்காமல் காற்றுடன் கலந்துள்ள நச்சுத்தன்மையின் செயல் வடிவங்கள் பல உண்டு. இதன் நிலையை மாற்றவோ, அழிக்கவோ, தப்பவோ முடியாதப்பா. ஆனல் உணர்வுடன் கூடிய எண்ணத் தால் வரக்கூடிய வியாதிகள் இம்மனிதனுக்கு மட்டுமே தான் உண்டு.

கை, கால் உணர்விழந்து வாதப்பிடிப்பு நோய்கள் எப்படி வருகின்றன? வாதத்தின் தன்மை அதிகமாய் கோப உணர்வை வளரவிட்டு, படபடக்கும் உணர்வுடன் சலிப்பு, சோம்பல் என்ற சங்கடத்துடன் கோப உணர்வின் அலையை மீண்டும் மீண்டும் எடுத்து, அதனை அடக்கி தன் சந்தோஷ உணர்வைக் கூட்டிக் கொள்ள உந்தலை அடக்கி, மற்றொரு உணர்வின் ஈர்ப்பில் எண் ணத்தைச் செலுத்திச் செலுத்தி கோபத்தினல் வரக்கூடிய விளைவு களைக் கண்டு அஞ்சி, சந்தோஷத்தால் மாற்றியமைக்க முடியுமென்று தன் எண்ணத்தை மாற்றியமைத்து இன்பம் என்று எதனைச் செயல் படுத்த எண்ணுகின்றானே இவ்விரண்டு அலைகளும் இவன் உணர்ந்து எண்ணும் எண்ணத்தால் சுவாசமுடன் மோதுண்டு, சத்ருமித்ரு நிலையாகி வருவது தானப்பா. நரம்புகளின் இயக்கத்தன்மை குறை வினல் தன் உணர்வின் ஈர்ப்பு நரம்புகள் பாதிக்கப்பட்டு, சிறு மூளை பெருமூளை நரம்புகளில் சரிவர இரத்த ஓட்டங்கள் ஓடப் பெருமல் சில அடைப்பின் நிலைக்கொப்ப வியாதிகள்தானப்பா இவ்வாத நோய்களெல்லாம்.

தோல்களில் ஏற்படும் சர்ம வியாதிகள் எப்படி வருகின்றன? அங்கங்கு கட்டிகளும், சில புண்களும் எப்படி வருகின்றன?

உடலிலுள்ள பாக்கித்தன்மைகளெல்லாம் சரிவர இருந் தாலும் சர்மங்களில் ஏற்படும் ஒருசில வியாதிகள் எப்படி வரு கின்றன? உடலிலுள்ள ஒவ்வொரு சிறு உறுப்பிற்கும் நகம் முதற் கொண்டு ரோமங்கள் வரை ஜீவ சக்தி இருந்தால்தான் வளரு கின்றது. உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் அததற்குகந்த அமில ஈர்ப்பை அந்தந்த உறுப்புக்களே தனக்குகந்த ஆகாரத் தைத் தானெடுத்து வளருகின்றது.

நகத்தின் அமிலமும், பற்கள், ரோமம், எலும்பு, சதை எல்லாமே அதனதன் குண அமில ஆகாரத்தைத் தன் ஈர்ப்பின் சுவாசத்தால் எடுத்துத்தான் வாழுகின்றன. இப்படி வாழும் நிலையில் சர்மங்களில் அந்தந்த இடங்களின் ஈர்ப்பு ஜீவ சக்தி பாதிக்கும் பொழுது அதற்குகந்த துடிப்பு உணவை எடுக்காத முறையில் ஏற்படுவதுதான், உடலில் ஏற்படும் சில கொப்பளங் களும், நகங்களின் வெடிப்புத்தன்மையும், ஈறுகளில் ஏற்படும் விஷ அணுக்களின் தாக்குதலினால் பற்களில் வியாதியும், சில அமில பாதிப்பால் ரோம வளர்ச்சி உதிருவதும் ஏற்படுகின்றன.

மனித எண்ண உணர்வு நிலைக்கொப்ப வியாதிகள் வரும் பொழுது இன்றைய விஞ்ஞானத்தால் சில செயற்கை முறை கொண்ட மருத்துவத்தால் பல சாதனைகளைச் செய்கிறார்கள். எப்படிச் செய்கிறார்கள்?

**27–10–80**

சில வியாதிகளுக்கு டி. பி. அதனைத் தொடர்கொண்ட வியாதி களுக்கெல்லாம், அவ்வியாதிக் கிருமியை அழிக்க, அதற்கு மேல் சக்திகொண்ட சில மருந்துகளை (Streptomycin) செலுத்தி, இவ்விஷ, வீரிய சக்தி, உடலைப் பாதிக்காமல் இருக்க, அதற்கு மாற்று மருந்தையும், (பி-காம்ப்ளெக்ஸ்) அதன் கூடச்செலுத்தி, உள்ள வியாதியை மற்றொரு சக்தியினால் அதனை மாற்றி, மாற்றக் கூடிய அச்சக்திக்கு, அதன் வீரிய குண படர்ப்பு உடலைப் பாதிக் காமல் இருக்க, மற்றொரு மருந்தையும் தந்துதான், விஞ்ஞான மருத்துவம் இன்றுள்ளது.

இன்னும் புற்று நோய்கள் போன்ற மாற்ற முடியாத வியாதி யின் தாக்குதல், உறுப்புக்களில் எந்தெந்தப் பாகத்தில் அதிகமாகத் தாக்கப்பட்டு, அதனை ஆரம்ப காலத்தில் கண்டுணரும் முறை கொண்டு, அந்தந்த உறுப்புக்களை நீக்கி, உயிர் வாழக்கூடிய நிலை யிருந்தால் கருப்பை, மார்பகங்கள், குடல்கள் இவற்றின் நிலையில்

தாக்கப்பட்ட இடத்தை நீக்கி செயல்கொள்ளுகின்றது மருத்துவ விஞ்ஞானம்.

நீக்கிவிட்டு உயிர் வாழ முடியாத பாகங்களில் தாக்குண்டபுற்று வியாதியை, கதிரியக்கம் கொண்டு மின் அலையினுல் அந்தந்த பாகங்களைச் செயலிழக்கச் செய்து, செயல்கொள்ள வைக்கின்றூர்கள். மீண்டும், மருந்துகளால் உடலில் உள்ள அனைத்து உறுப்புக்களையும் மின் அலையின் சாதனத்தால் உடல் மண்டல நரம்புகளனைத்தும் செயல்கொள்ளும் முறைகளையும் உடல் உறுப்பின் உள்நிலைகளைக் காணக் கூடிய சாதனை போட்டோவில் (X-Ray கருவி) இன்றைய விஞ்ஞானம் உள்ளது.

இன்னும் பல விநோத விஞ்ஞானக் கருவியில் ஆராய்ந்து உயிர் காக்கும் செயல் ரூபம் அனைத்துமே விஞ்ஞான மருத்துவத்தில் வளர்ந்து கொண்டு உள்ளதே தவிர, உணர்வின் எண்ணம் கொண்டு நாமெடுக்கும் சுவாசத்திற்கு வலுத்தந்து வளர்க்கும் நம் சூரிய மண்டலத்தின் உண்மை சக்தியின் அலையைத் தன்னுள் ஈர்ப்பார் எவருமில்லை.

நம் பூமி இல்லாவிட்டால் நாம் ஏது? நம் பூமியையே வளர்க்கும் சூரியனின் சக்தியில்லாவிட்டால் நம் பூமிதான் ஏது? சூரியனுக்கு சக்தி தருவது சூரியனைச் சுற்றியுள்ள 47 மண்டலங்கள்தாம். நாற்பத்தி ஏழு மண்டலங்களின் துணைகொண்டு இயங்கும் சூரியனின், தன் அலையைக் கொண்டு, பிற மண்டலங்களின் அலையை எடுத்து, தான் வளர்ந்து, பிற மண்டலத்தையும் வாழ வைக்கின்றது.

சூரிய அலையை ஈர்க்கும் மண்டலமாய், நம் பூமியின் ஜீவன் உள்ளது. நம் பூமிக்கு ஜீவன் தருவது சூரிய மண்டலத்தில் இருந்து வெளிப்படும் அலையைக் கொண்டு, நம் பூமி இழுத்து வெளிப்படுத்தும் அலையின் மோதலில் உருவான 'ஓம்' என்ற ஒலியின் சுழற்சிகொண்டு உருண்டோடும் இவ்வுலகச் சுழற்சி ஓட்டத்தில் உருவான உயிர் ஜீவன்கள் 'ஓம்'க்குள் ஓமாய், ஓம் என்ற நாதத்துடன் உருண்டோடும் பூமியில், அந்நாதத்தால் உருவான ஜீவ நீரும், காற்றும், ஒளியும் கொண்டு ஜீவத் துடிப்புப்பெற்று, இப்பூமியின் ஈர்ப்பு ஜீவ உடல் கொண்ட உயிர் பிம்பங்களின் சுவாசத்தில் எடுக்கும் ஒலிதான் 'ஓம்' க்குள் ஓமாய் உள்ள ஒலி.

ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு தனித்தொரு நிலையில் எதுவுமில்லாமல் இரண்டு ஒன்ருகி, அவ்வொன்றுடன் பிறிதொன்று சேர்ந்து, ஒன்ருகி உருளுகின்ற உயிர் ஜீவ சக்திக்கு தனித்த சக்தி

நிலை ஏது? தனித்த ஒன்றான 'நான்' என்ற சக்திக்கு ஜீவனே இல்லை.

ஜீவனற்ற சக்திதான் 'நான்' என்ற சக்தி. இதனை உணர்ந்து ஒவ்வொரு ஆத்மாவும் இவ்வுடல் பிம்பத்தில் ஏற்படும் எந்த ஒரு பிணியையும் உணர்வால் எடுக்கும் எண்ணத்தின் சக்தியை சூரியனுடன் நேராகத் தொடர்பு கொண்டு, சூரிய அலையை மேல் நோக்கிய சுவாசமாய் இவ்வுடல் பிம்ப உணர்வு எண்ணம் கொண்டு, உடல் பிம்பத்தில் நிறைந்துள்ள பன்னிரண்டு வகை குண அமிலத்தையும், ஆறு வகை நற்குண அமிலத்தையும், ஆறுவகைத் தீய குண அமிலத்தையும் நற்சக்திப்படுத்தும் நிலைகொண்டு சலிப்பைச் சாந்தமாக்கி, கோபத்தை வீரமாக்கி, சங்கடத்தை அன்பாக்கி இப்படி உணர்வின் குணத்தால் உந்தப்பட்டு, அவற்றினால் உடல் பிம்பத்தில் ஏற்றிக்கொண்டுள்ள இவ்வியாதியின் தன்மையை, நம் குண நலத்தை, ஞான வழிபூண்டு, சூரியனை நாம் தினசரி காலை உதயகாலத்தில், உதயத்தில் நேராக அவன் உருவைப் பார்த்து, நம் உணர்வுடன் கூடிய எண்ணத்தால் உடல் பிம்ப ஆரோக்கியத்திற்கும், அவன் அலையை நேராக நம் உடலில் பாய வைத்துக்கொண்டால், உடல் ஆரோக்கியமும், ஞான அலை ஈர்ப்பையும், வழித்தொடர் செயல் ஜெபத்தால், இப்பூமியின் ஈர்ப்பு மண்டல சுழற்சியுடன் சிக்குண்டு, இவ்வாழ்நாட்களை சலிப்பு, சங்கடம், கோபம், வஞ்சனை, குரோதம், காமம், வெறி என்ற உணர்விலிருந்து நற்குணத்தின், அமிலத்தின் வளர்ப்பின், ஞானத்தின் வளர்ச்சியால் எம் மண்டலத்திலும் செயல் கொள்ளும் நிலைபெற்ற உயிராத்மாவாய், நம் உயிராத்மாவை வளர்த்துக்கொள்ளமுடியும்.

உடல் பிணியின் வேதனைப் பிடியில் இருந்து, உணர்வின் எண்ணத்தைச் சுயநலம் மிக்க, தன்னலம் கொண்டு செயல்பட்டால் தன்னலத்தின் வளர்ப்பால் பிற நலத்தை வளர்க்கலாம். உடல் என்ற பிம்பத்தை வைத்துத்தான் எந்த ஞானத்தையும் வளர்க்க முடியும். உடல் பிணிக்கு மருந்து தேவை. உணர்வின் பிடிக்கு, உணர்வின் எண்ண நிலைக்கொப்ப சுழலவிடாமல், உணர்வின் எண்ணத்திற்கு ஞானம் தேவை.

**28–10–80**

### சுயநலம்

சுயநலமின்றிப் பொதுநலம் வளராது. தன்னலத்தை வளர்த்துத்தான் பிற நலத்தை வளர்க்கமுடியுமேயன்றி, பிறர் நலத்தால் தன் நலம் என்றுமே வளராது. உருவாகும் சக்திக்கே

சுயநலம் தான் காரணம். ஜீவசக்திகொண்ட துடிப்பனேத்திற்குமே சுய நிலேயுடன் கூடிய, தன்னலம் கொண்ட சுயநலம் உண்டு.

சுயநலமில்லா எச்சக்தியும் வளர முடியாது. உணர்வின் எண்ணத்திற்கே சுயநலம் உண்டு. சுயநலம் கொண்டுதான் முருகனேப் படைத்த போகனும் செயல் கொள்கின்ருன், வெங்கடா ஜலபதியைப் படைத்த கொங்கணவனும் செயல்படுகின்ருன், சூரியனுய் உருளும் சூரிய தேவனின் சக்தியும் சுய நலம் கொண்டு, தன் வளர்ப்பை தான் ஈர்த்து, பிற மண்டலங்களுக்கு சூரியனின் சக்தி சென்று, மிதந்துகொண்டேயுள்ள இப்பேரண்டத்தில் உருண்டு ஓடுகின்ற மையப்புள்ளியாய், தன் சுயநல வளர்ப்பின் சக்தி கொண்ட பெரிய மண்டலமான சூரிய மண்டலம், தன் வளர்ப்பின் சக்தி வளர, சூரியனின் குடும்ப மண்டலமாய் உள்ள நாற்பத்தி ஏழு மண்டலங்களேயும், தன் ஈர்ப்பின் வட்டத்தின் சுழற்சியுடன் வளர விட்டு, வளர்ந்த மண்டலங்களின் அமில சுழற்சி கொண்ட அலேயைத் தனக்குணவாக எடுத்து, தன் வளர்ப்பில் தன்னேச் சார்ந்துள்ள பிற மண்டலங்களேயும் வளர்க்கச் செய்கின்றதேயன்றி, சுயநலமின்றிப் பிற நலமாய் எம்மண்டலத்தையும் சூரியனுனுலும் சரி, வளர்ந்தோடும் மற்றெல்லா மண்டலங்களும் சரி, சப்த ரிஷிகளும், சப்த ரிஷியின் தொடர் கொண்ட சகல ஜீவ உணர்வு உயிரணுக்களும் சரி, சுய நலத்தின் தொடர் படைப்புத்தான்.

ஆதி சக்தியின் சக்தி என்கின்ருேமே, அச் சக்தியே ஆக்கல், காத்தல், மாற்றல் என்ற சுழற்சி சுயநலம் கொண்டுதான் படைக்கின்ருன், படைப்பின் பலன் காணுகின்ருன், மீண்டும் படைப்பின் படைப்பை உருவாக்க, படைத்ததை மாற்றி மாற்றி அழிக்கின்ருன்.

உரு மாறி மாறி, சக்தி நிலே செயல்பட்டால்தான் சக்தியின் சக்திக்கே சக்தி கூடுகின்றது. ஒன்ருன சக்திக்கு ஜீவன் ஏது? ஒன்று ஒன்றுடன் சேர்ந்து, இரண்டு ஒன்ருகி, ஒன்றுடன் பிறிதொன்று சேர்ந்து இரண்டாகி, ஒன்ருகி இரண்டாகி ஒன்ருகி சுயநலம் கொண்டு உருவாகும் சக்தியின் அலே இருந்தால்தான் படைப்பின் பொருள் வளர்ந்துகொண்டே இருக்கும்.

சுயநலம் கொண்ட வாழ்க்கைதான் மனித வாழ்க்கை. சுயநலம் கொண்டு பிறர் நலம் காணுங்கள். தன் வளர்ச்சியைக் கொண்டுதான் பிற வளர்ச்சியை வளர்க்க முடியும். இம்மனித வாழ்க்கையில், ஒவ்வொரு நொடிப்பொழுதும் எடுக்கக் கூடிய உணர்வின் எண்ண சுவாசமானது, பிறர் ஈர்ப்பில் பாவமென்ற

பரிதாபச் சுழற்சியில், தன் எண்ணத்தைச் செலுத்தாமல், தாயா யிருந்தாலும், தந்தையாயிருந்தாலும், கணவன், மனைவி, குழந் தைகள், சகோதர பந்த பாசங்கள், உயிர் காக்கும் நண்பனாய் இருந்தாலும், ஆண்டவனாய் இருந்தாலும், அவர்கள் எடுக்கும் உணர்வின் எண்ணத்தை, அவர்களுக்கு ஏற்படும் இன்னலைக் கண்டும், உடல் நலக்குறைவு எதுவாய் இருந்தாலும், அவர்கள் மேல் பரிதாப எண்ணத்தைச் செலுத்தி, அவர்கள் உள்ள பரிதாப எண்ணத்தில் நாம் சிக்காமல், சுயநலம் கொண்ட தன் நலமுடன், பிறரின் நலம் காண நம் உணர்வின் எண்ணச் செயல், அவர்கள் அலை நம் மேல் சாடாமல், நம் அலையின் சக்தியை அவர்கள் மேல் பாய்ச்சி, அவர்கள் நல்ல நிலை பெற வேண்டுமென்ற உயர்வான சக்தி அலையைத்தான் நம் எண்ணத்தில் எடுக்க வேண்டும்.

பரிதாபப்பட்டுச் செய்யும் தர்மம் பரிதாப அலை உணர்வை நம்மையறியாமல் நம் எண்ணம் எடுப்பதினால், பரிதாப எண்ணத் திற்குடைய அலை குண அமிலமாய், இவ்வுடல் பிம்ப அமிலம் அவர்கள் எடுத்த அலைத்தொடரின் ஈர்ப்பில் சிக்கி, நம் உணர்வு வுடன் கூடி நம் எண்ணமே, அச் சுழற்சி கவலையுடன் சென்று, நாளாவட்டத்தில் அவ்வுணர்வின் பரிதாப நிலைக்கு நாமும் செல்லக் கூடிய நிலை ஏற்பட்டு விடுகிறது.

உணர்வின் எண்ணத்தால் எடுக்கும் செயலின் ஒலி ஈர்ப் பானது உடனே நம்மைச் சாடும். இரத்தத் தொடர்பு கொண்ட வர்களின் அலைத்தொடர் இன்னும் வேகமாய் நம் உணர்வுடன் ஏறிவிடுகிறது.

வைத்தியர்கள் மற்றவர்களுக்கு தன் உணர்வின் எண்ணத் தைச் செயல்கொண்டு செய்விக்கும் மருத்துவத்தினால், அவர்களின் (வியாதியஸ்தர்கள்) ஈர்ப்பலையில் சிக்காமல், அவர்கள் சொல்லும் வியாதிக்குச் செய்யப்போகும் மருத்துவ ஞான அலையை உணர்ந்து செய்யப்படும் மருத்துவத்தால் வரும் வியாதியஸ்தர்களுக்குக் குண மாக வேண்டுமென்ற செயலின் நிலைக்கொப்ப வைத்திய முறை யைக் கடைப்பிடிக்க முடிகின்றது. அவர்கள் ஈர்ப்பில் சிக்காமல், அவர்கள் படும் இன்னலின் பரிதாபம் கொள்ளாமல், மருத்துவத் தால் மாற்றி அமைக்கலாம் என்ற உணர்வுடன் செய்யப்படும் நிலைக்கொப்ப, பிறர் ஈர்ப்பும் இவரைச் சாடுவதில்லை, மருத்துவ ரால் செய்யப்படும் செயல் குணமும் நலம்பெற வழிகொள் கின்றது.

அதுவே தன் குழந்தை, தன் தாய், தந்தையர் என்ற சுற்றத்தில் உள்ளவர்களின் நிலைக்காகச் செய்யப்படும் மருத்துவத்

தில், பயம் கலந்த உணர்வு கூடிவிடுவதால், உணர்வின் எண்ணம், பாசம் என்ற பரிதாப அலையை எடுக்கும் பொழுது, செயலில் தடுமாற்றம் ஏற்படுகிறது.

உணர்வின் எண்ண ஒலிக்கு உள்ள உண்மையை உணர்ந்து, ஒவ்வொருவரும் பிறர் அலையின் ஈர்ப்பில் சிக்காமல், சுயநலம் கொண்ட தன்நல வளர்ப்பால் பிறர் நலத்தை வளர்க்கக்கூடிய வளர்ப்பாகுங்கள். உணர்வின் எண்ணம் உயர் ஞான சக்தியின் தொடர்புடன் நமக்கு மேல் சக்திகொண்ட, நமக்குச் சித்தர் களினுல் வழிப்படுத்திச்சென்ற சக்திகளின் தொடரை ஜெபம் கொண்டு, ஒவ்வொரு இன வழியிலும் உணர்த்தி வரும் முன்னேர் களின் தொடர் அலையை எடுக்கப் பழகுங்கள்.

**29–10–80**

இந்நிலையை உணர்ந்துதான், ஜீவ சக்தியுடன் கூடிய பிம்ப உடலிலிருந்து, உணர்வுடன் கூடிய எண்ணத்தால், ஞானத்தின் சக்தி கொண்டு, பக்தி என்ற முறைப்படுத்தி, உயர் சக்தியை ஞான வழியின் ஜெபமாக்கி, நமக்கு மேல் சக்தி கொண்டவரின் அலையை எடுக்க, இவ்வாழ்க்கை முறையினுல் நற்சக்தியின் அமில குண மகனுய், உடலுடன் கூடிய உணர்வான சோம்பல், தூக்கம், பசி, காம இச்சைகள், உடல் கழிவுகளின் உந்தல், உடலில் ஏற் பட்டுள்ள வியாதியின் வலிகள் இவ் ஆறு நிலைகளும் உணர்வால் வெளிப்படும் நிலைதனை, இவற்றை மனிதன் ஒருவனுல்தான், சோர்வைத் தன் எண்ண பலத்தால், எத்தன்மையான சோர்வு வந்தாலும், எண்ணத்தின் நிலைக்கொப்ப, சோர்வை அகற்ற முடிகின்றது. தூக்கத்தையும் நம் வேலையின் நேரத்திற்கொப்ப உணர்வால் எடுக்கும் எண்ணம் கொண்டு மாற்றி அமைக்க முடிகின்றது.

எண்ணத்தால் வேறு ஒரு செயலில் உள்ளபொழுது பசியையும் மாற்ற முடிகின்றது. உடல் காம இச்சையையும் மனிதனுல் இச்சைக்குகந்த நிலையில் செல்லாமல், ஒழுங்கு முறைப்படுத்திக் கொள்ள முடிகின்றது. அதே போல் உடல் வியாதியையும் எண்ணத்தால் அவ்வலியையே மறக்கக் கூடிய தன்மை, மனி தனுக்கு உண்டு.

உணர்வால் உந்தப்படும் உடலின் இச்சையையே ஒழுங்கு நிலைப்படுத்தி, உணர்வின் தன்மையில் செல்லாமல், ஞானத்தால் காலநிலை அனுசரித்து, உடல் பிம்ப உணர்வு உந்தலின் அலை

யையே எண்ணத்தால் ஒழுங்குபடுத்துகின்றான் மனிதன். எண்ணத்தைக்கொண்டு எச் செயலையும் செய்விக்கும் மனிதனைப்போல், மிருகங்களின் நிலைக்கு அதன் உடலில் ஏற்படும் உணர்வின் உந்தலானது, ஞானத்தின் எண்ணம் கொண்டு மாற்றியமைக்கக் கூடிய பக்குவமும், செயல் திறனும் மிருகங்களுக்கு இல்லாததினால்தான், மனிதனை ஒத்த உணர்வை மாற்றியமைத்து, வாழ்க்கையென்ற சமுதாயப் பிணைப்பு ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. மனிதன் தன் எண்ணத்திற்குகந்த வளர்ச்சி செயல் ஞானத்தைச் செய்விக்கின்றான்.

உணர்வை மாற்றியமைக்கக் கூடிய எண்ணம் செயல் மற்ற இனங்களுக்கு இல்லை. உணவைத் தேடி உண்டு, கழித்து, உறங்கி, காம இச்சையின் இனப் பெருக்க உணர்வும், உடல் பிணியில் உண்டாகும் அவஸ்தையில் சர்வ சதா அவ்வலியின் தன்மையுடன் ஒன்றியும், உணர்வை மாற்றியமைக்கா நிலைதான் மற்ற இனங்களுக்குண்டு.

மனிதனின் ஞானம் எவ்வுணர்வையும் கால நிலை, சூழ்நிலை இதன் வட்டத்தைக் கொண்டு ஒழுங்கு முறைப்படுத்தி தன் ஞானத்தால் உணர்வின் எண்ணத்தையே செயல்படுத்துகிறான் மனிதன்.

**4–11–80**

உணர்வின் எண்ணத்தை உணர்த்தி வந்தேன். மனித உடலின் அமில குணங்களையும், குணத்தினால் விளையும் உணர்வு, உடல் ஆரோக்கியம் இவற்றையும் சில சில குறிப்பிட்டுள்ளேன்.

அணுவுக்குள் அணுவாய், அணுவின் அணுவுக்குள் உள்ள நாம், நம் எண்ண வலிமையை எப்படி வழிநடத்துகின்றோம்? மனிதனின் நற்குண அமிலமான அன்பு, பாசம், பரிவு, ஞானம், வீரம், சாந்தம் இவற்றை நாம் எப்படிச் செயல்படுத்துகின்றோம்? நம் உணர்வின் அன்பால், நம் குழந்தையிடம் அவ்வன்பை மட்டும் செலுத்தி, அன்பின் செயலால் வளர்க்கப்படும் குழந்தை, அவ்வன்பையே தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்டு, அவ்வன்புடன் வளர்ந்த நிலைகொண்டு, தனக்குச் சாதகமான தனக்கு வேண்டிய உணர்வு, தேவையின் நிலையைத்தான் நம்மிடம் எதிர்பார்த்துப் பிடிவாதத்தில் நிற்கும். மீண்டும் அன்பினாலேயே வளர்க்கப்பட்ட குழந்தைக்கு, அது வளர்ந்த பிறகு நம்மிடம் இவ்வுணர்வின் குணத்தைத்தான் எதிர்பார்க்கும். அன்பினால் மட்டும்

எச்சக்தியையும் செயல்படுத்திட முடியுமா? அவ்வன்பே கடும் விஷம் ஆகி எதிர்த்துத் தாக்கும்.

அன்பைக்கொண்டு செயல்படுத்தி, அச்செயலே நமக்கு எதிராகும் தருணத்தில் நம் உணர்வில் கோபம் குடிகொள்ளும். இதனை எப்படிச் செலுத்துவது? அன்புடன் ஞானத்தைச் செலுத்தி, சாந்தமாய் நாம் ஊட்டும் அன்பே, அக்குழந்தையை உயர் ஞானக் குழந்தையாக நாம் வளர்க்க முடியும். பரிவும், இதன் நிலை கொண்டு ஒருவருக்குச் செலுத்தப்படும்பொழுது, பரிவுடன் கூடிய ஞானத்தால் சாந்தம் கொண்டு, அப்பரிவைச் செலுத்தும்பொழுது, பரிவினால் விளையக்கூடிய நற்பயனை நாம் காணலாம். ஆசையின் நிலையும், ஆசையினால் உள்ளதுதான் இவ்வுலகமே. உண்ண, உடுக்க, உணர எண்ண வாழ்க்கையின் ஆணிவேரே இவ்வாசை தான். ஆசைகொண்டு நாம் ஒரு தொழிலுக்கு வித்தூன்றி வளரச்செய்கின்றோம் என்றால், அவ்வாசையின் வித்திற்கு ஞானம் என்ற முதல் போட்டு, சாந்தம் என்ற நீரை ஊற்றினால்தான், அவ்வித்து வேரூன்றி வளர ஏதுவாகும்.

ஞானமில்லா வழியில் சாந்தம் கொள்ளாமல், ஆசை கொண்டு எதைச் செய்தாலும், வியாபாரமாயிருந்தாலும் சரி, வாழ்க்கை நடைமுறைச் செயலாயிருந்தாலும் சரி, ஒரு வீடு கட்டுகிறோம் என்றாலும் சரி அதற்கு ஆசை தேவை. ஆசையின் நிலை கொண்டுதான் அவ்வீடு கட்ட நாம் முற்படுகின்றோம். ஆசையின் வடிவத்தை ஞானம் கொண்டு, அவ்வீடு கட்டத் தன்னிடமுள்ள பொருளாதாரச் சூழ்நிலை, மற்றும் அவ்வீட்டிற்குகந்த பொருள் கிடைக்கும் நிலை, இவற்றை எல்லாம் இந்த ஞானத்தால், தன் ஆசையின் உருவத்தை ஞானம் கொண்டு, தன் ஆசையின் செயலை எந்த வடிவில் அமைக்க முடியும் என்ற ஞானம் அறிய சாந்தம் தேவை. ஆசையை ஞானம் கொண்டு சாந்தப்படுத்தினால் நாம் அமைக்கும் வீடு, நம் உணர்வின் ஆசைக்கு உகந்த நிலையில் அமையுமப்பா.

வீரமான உணர்வலைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் முக்கியம். வீரத்தின் உணர்வாற்றல் சக்திதான் உருவாக்குகின்றது மனிதனின் வாழ்க்கை அமையும் நிலைதனை. இவ்வீரத்தை ஞானம் கொண்டு சாந்தப்படுத்தினால், மனித வாழ்க்கையின் வெற்றிக்கு இவ்வீரம்தான் வித்தப்பா.

இவ்வுலக நடைமுறை அரசியலின் உண்மை நிலையினை ஊன்றிப் பார்த்தால், வீரத்தின் ஞான சாந்தநிலை புலப்படும். சர்ச்சில்ஆண்ட காலத்தில் அவர்வீரத்தால் ஞானத்தைச்செலுத்தி,

சாந்தமான சூட்சும குணத்தைக் கொண்டு, தன் சாணக்ய முறையால் தன் வீரத்தின் வெற்றியை அடைந்து கொண்டே இருந்தார். இவ்வீரத்தில் ஞானத்தைச் செலுத்தி, சாந்தம் கொண்டு இவ்வுலகத்தையே கதிகலங்கச் செய்தாரல்லவா? அவரும் நம்மையொத்த மனிதர்தான். அவர் செலுத்திய முறை, அரசிய லின் செயலுக்கு அவர் வீரம் நிலைக்க எப்படி வலுக்கொண்டதோ, அதைப்போல் நம் உணர்வில் கலந்துள்ள வீரத்தை, நாம் அதன் நிலையிலேயே செலுத்தி விட்டால், வீரத்தின் வீழ்ச்சியை விரைவில் அடைவோம். வீரத்தை ஞானத்தால் சாந்தமாக்கிச் செயல் படும்பொழுது, அவ்வீரத்தின் வீரிய சக்தியை வளர்த்துக் கொண்டேயிருக்கலாம். வீரத்தைக் கோபத்தால் செலுத்தும் பொழுது, நம் வீரத்தின் செயல் தெறித்துவிடும் நிலையை நாம் உடனே அறியலாம்.

இஞ்ஞானத்தை எப்படி வழிப்படுத்துவது? திருடனுக்கும் ஞானம் உண்டு, குருடனுக்கும் ஞானம் உண்டு, மிருகங்களுக்கும் ஞானம் உண்டு. அதைப்போல் பல இழிசெயல்களில் செல்ப வனுக்கும் ஞானம் உண்டு. பக்தி, யோகம் எவ்வழிக்குச் செல்ப வனுக்கும் ஞானம் உண்டு. ஞானம் இல்லாவிட்டால் திருடன் எப்படிச் சாதுரியமாகப் பிறரை ஏமாற்றித் திருட முடியும்? திருட னும் தன் ஞானத்தைத் திருட வேண்டிய நிலைக்கு, பிறரை ஏமாற்ற அச் சாந்தத்தைக் கற்றுத்தான், பொறுமையுடன் தன் திருட்டைப் பிறர் அறியாவண்ணம் திருடிக்கொண்டு வர, மிகவும் சாதுரிய மாக தன் ஞானத்தைச் சாந்தமாக்கி, தன் நிலையை சாதகமாக்கிக் கொள்கின்றான். அதையே ஏன் நாம் நல்வழியின் உணர்வுக்கு, ஞானத்தைச் சாந்தமாக்கி உயர் ஞானம் கொள்ள முடியாது? கண் ஒளி யற்றவன் தன் ஞானத்தைச் சாந்தமாக்கி உணர்வின் எண்ணம் கொண்டே தன்னைக் காத்துக் கொள்கின்றான் அல்லவா?

தான் வாழ வேண்டும் என்ற ஒரே ஆசை உள்ளவன் உணர்வை, இச்சாந்தத்தின்பால் செலுத்தி, ஞானம் கொண்டு கண் ஒளி உள்ளவர்களைக் காட்டிலும் அதிக ஆண்டுகள் ஜீவிக்கின்றான். மிருகத்திற்கு ஞானம் உண்டு. அந்த ஞானத்தை எப்படிச் செயல் படுத்துகின்றது? எல்லா நிலைகளையும் மிருகம் உணர்ந்திருந்தாலும், அங்க அவயவங்களும், சொல்லாற்றல் திறமையும் மனிதனை யொத்த நிலையில் இல்லாததினால், அதன் ஞானத்தை எப்படிச் செயல்படுத்துகின்றது? ஒலியின் ஈர்ப்பை ஒளி கொண்டு, தன்னை வளர்க்கும் எஜமானரின் சொல் ஒலியை, இவ்வொளியால் கவ னித்து தன் ஞானத்தை உடலுக்குள் பதியச் செய்துகொள் கின்றது. குறிப்பிட்ட சில ஒலி அலைகளைத் தன் மேல் விசுவாசம்

கொண்டு, பரிவுடன் செலுத்தும் வளர்ப்பவனின் ஒலியை, தன் ஒளியால் ஈர்த்தெடுத்துப் பதியவைத்துள்ளநிலைக்கொப்ப, வளர்க்கப்பட்டவனின் ஒலி பாய்ச்சிய முறைகொண்டு, அதன் ஞானத்தின் செயல் இருக்கும்.

மனிதனின் வளர்ப்பில் உள்ள பிராணிகளுக்கு, அந்தந்தப் பிராணிகளின் கூக்குரலின் நிலைக்கொப்ப, இவன் ஒலியை அதன் ஒளியுடன் பாய்ச்சும்பொழுது, அதன் ஈர்ப்பில் அதனுடைய ஞானம் வெளிப்படுகின்றது. பக்தியின் நிலை ஞானம் எப்படிச் செயல்படுகிறது? ஆண்டவனை வணங்கினால் அவன் அருளுவான் பல என்று, தன் உடல் தேவைக்கும், செல்வத்திற்கும், வாழ்க்கையில் உழன்றுள்ள மற்ற நிலைகளுக்கும், ஆண்டவனை நினைத்து வணங்கும் ஞானம் எப்படிச் செயல்கொள்ளும்? அவர்களின் உணர்வுக்குகந்த எதிர்பலனின் நிலையைத்தான், அவன் அடைய முடியும். யோக மார்க்கத்தில் மனிதனின் ஞானம் எப்படிச் செயல்கொள்கின்றது?

### 13–11–80

அறிவு மார்க்கம், பக்தி மார்க்கம், சித்து மார்க்கம் இப்படி ஒவ்வொரு வழியினரும் ஞானத்தை மனிதனுக்குகந்த மார்க்கமாகத்தான் உணர்த்துகின்றனர், உணர்கின்றனர்.

ஞானம் என்பது மனிதனுக்கு மட்டும் தான் உண்டு, மிருகங்களுக்கு ஞானம் இல்லை என்கின்றான் மனிதன். அறிவு மட்டும் மிருகத்திற்குண்டு, பகுத்தறியும் நிலை கொண்ட மனிதனுக்கு ஞானம் உண்டு என்றுணர்த்துகின்றான்.

அறிவு—கூர்மை, அறிதல்—தெரிந்து கொள்வோம் என்ற ஆர்வம். அறிவோம்—அறிவின் செயலைச் செயல்படுத்தச் செல்லும் வழி.

எறும்பு அதற்குகந்த அறிவைக்கொண்டு ஞானத்தை எப்படிச் செயல்படுத்துகிறது? தனக்கு வேண்டிய ஆகாரத்தை அறிவைக் கொண்டு அறிகின்றது. தன் செயலைக் கொண்டு அவ்வுணவை சேமிக்க மண்ணைப் பறித்து, அவ்வுணவை அதில் சேமித்து, பிறருக்குத் தெரியாவண்ணம் பாதுகாக்கின்றது. அறிவைக்கொண்டு செயல்படுத்தி தனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பாதுகாக்கும் எறும்பிற்கு ஞானமில்லையா?

ஒவ்வொரு சிறு பிராணியும் தனக்குகந்த அறிவின் ஞானத்தை செயல்கொண்டுதான் ஜீவிக்கின்றது. மனிதனைக் காட்டிலும்

அறிவும் ஞானமும் சில மிருகங்களிடம் உண்டு. ஆனால் அதற்குகந்த அங்க அவயவங்களும், சொல்வெளிப்படுத்தும் ஒலி பாஷையும் இல்லாததினாலும், உணர்வின் எண்ணத்தை ஒரு நிலைப்படுத்தக் கூடிய பகுத்தறியும் ஞானமில்லை.

அறிவின் செயல் ஞானமுண்டு. உயர் ஞானத்தை, உணர்வின் தன்மையை மாற்றியமைத்து சக்தி கொள்ளக் கூடிய ஞானத்தின் வளர்ச்சி அங்கில்லை.

இந்த ஞானத்தைச் செயலாக்கி, ஒன்றுடன் ஒன்று சேர்த்து, பிறிதொன்றின் கூட்டமைக்க மனிதனின் ஞானத்திற்குச் செயல் திறமை, சொல்லாற்றல் இவை உண்டு. இந்த ஞானத்தின் உயர் ஞானம் கொள்ளத்தான் பக்தி மார்க்கம், சித்து மார்க்கம், யோக மார்க்கம் என்றெல்லாம் இம்மனித உடலின் உணர்வை எண்ணத்தால் ஒரு நிலைப்படுத்தி ஜெபம் என்ற, ஒவ்வொருவரும் அறிந்த ஒவ்வொரு மந்திரச் சொற்களைச் சொல்லி, உயர் ஞானத்தைப் பெற்று, ஆண்டவனிடம் முக்தி பெறும் மார்க்கத்தை இவ் யோக சாதனையால், உணர்வைக் கட்டுப்படுத்தி, சுவாசத்தை ஒவ்வொருவரும் தான் தான் அறிந்த மார்க்கங்களை உணர்த்துகின்றார்கள்.

பக்தியினால் ஞானம் கொண்டு, சக்தியினால் உணர்வை ஒரு நிலைகொண்டு, எண்ணத்தால் உயர் ஞானத்தின் அலையை நாம் செயல்படுத்த நற்குணங்களின் அலைத்தொடரில் இந்த ஞானத்தைச் செலுத்தி, அந்த ஞானச் செயலாக நாம் ஒன்றாகலாம்.

இயற்கையின் படைப்பில் உயிரணுத்தோன்றி, உருவாய், உருவமாய் உருக்கொண்டு, இயற்கை சுவாச முறையை மாற்றியமைத்து, சகல சித்து நிலை பெறுவதல்ல உயர்ந்த ஞான சக்தியின் வழித்தொடர் பெறுவதற்கு. இந்த ஞானம் கோபத்தில் உள்ளவனுக்கும் துணை செல்கின்றது, திருடனுக்கும் துணை செல்கின்றது, வஞ்சகனுக்கும் துணை செல்கின்றது, பெரும் காமுகனுக்கும் துணை செல்கின்றது.

அவரவர்கள் அறியும் அறிவின் செயலைச் செய்விப்பதே ஞானம்தான். ஞானத்தைப் பகுத்தறியும் உயர் ஞானமாக்கி உயரக்கூடிய நிலைக்கு உயர் ஞானமாக்கி ஞானியாகுங்கள். நற்குணங்களின் படைப்பை ஞானத்தின் சாந்தம் கொண்டு மனிதனும் தேவனாகலாம் என்று சித்தர்கள் உணர்த்திய முறை இதுவே.

உணர்வின் எண்ணத்தை, ஆண்டவனின் நாமத்தை ஜெபித்து வருவதல்ல தெய்வசக்தி. உணர்வின் எண்ணத்தை

நற்குணங்களின் அமிலமாய் நாம் வளர்க்கும் செயல் முறை ஞானம் தான், நாம் தெய்வமாகும் முறை.

**14–11–80**

ஆரம்பக் கல்விக்குக் குழந்தையை நாம் அனுப்பும்பொழுது, சில குழந்தைகள் பள்ளி செல்லவே பயம் கொண்டு அழுது, பிறகுதான் பள்ளி செல்கின்றது. பள்ளியில் கல்வி போதனையை அந்தந்தக் காலங்களில் வைக்கும் தேர்வு, அக் குழந்தைக்கு அதன் எண்ண வளர்ச்சியின், அறிவின் அடிப்படையில்தான் அதன் ஞானம் வளர்ந்திருக்கும். அதைக்கொண்டு தேர்வு எழுதும் பொழுது அதற்குகந்த பயம், அச்சம் இருந்து கொண்டுதான் இருக்கும்.

வளர வளர, அதற்குகந்த அறிவின் செயல் ஞானத்திற் கொப்ப, முதிர்ச்சியுற்ற பிறகு, ஆரம்பக்கல்வியானது மிகமிகச் சுலபமாகவும், குழந்தையின் கல்வி போலவும் வளர்ந்தவர்களுக்குத் தெரிகின்றதல்லவா? அதைப்போன்று, மனிதனின் குண அமிலத்தை, நற்குணங்களின் வழித்தொடர்கொள்ள அன்பு, பாசம், வீரம், ஞானம், ஆசை இவற்றை, இவ் ஐந்து குணங்களை சாந்த மாக்கி, நம் குண அமிலத்தையே, நற்குண அமிலமாய்ச் செயல் கொள்ளும் பொழுது, நம் உணர்வின் அலைத்தொடர் உயர் சக்தியின் அமில ஈர்ப்பில், இவ்வெண்ணம் செலுத்தும் முறை கொண்டு முருகனின் அழகுடையவன், குணமுடையவன், இனிமை கொண்டவன், மணமுள்ளவன், ஒளியானவன், ஒலியானவன் என்ற தத்துவ உயர் குண முருகனாய், நம் உணர்வின் எண்ணம், முருக னாய்ச் செயல்கொள்ளும் பொழுது, வளர்ந்த கல்வியில் உள்ள வனுக்குப் பள்ளிப்பாடத்தில் முதல் வகுப்புப் பாடம் எப்படி மிக எளிதாய் உள்ளதோ, அதைப்போன்று இவ் ஐம்புலன்களான நற்குணங்களை, ஆறும் புலனாய் வழிப்படுத்தி முருகனானவனுக்கு வாழ்க்கையில் ஏற்படும் எந்த ஒரு இக்கட்டான செயலும், ஒவ்வொரு வகுப்பாய் பரீட்சையில் தேறிய உயர் கல்வியில் உள்ளவனுக்கு, முதல் பாட நூலில் தேர்வு வைத்ததைப்போல், வரும் இன்னலை மாற்றியமைப்பது மிகமிக எளிதாகிவிடும்.

நற்குணங்களின் வழித்தொடர் செயல் ஞான ஈர்ப்பிற்கு நம் உணர்வின் எண்ணத்தைச் செலுத்தும் காலங்களில் ஏற்படும், வாழ்க்கையில் எதிர்கொள்ளும், சோதனை எல்லாமே நம் உயர் வின் தேர்வுதான். இத்தேர்வில் இருந்து எல்லாம் நாம் பெறும் மதிப்பெண் நிலைக்கொப்ப, அடுத்த தேர்விற்கு நாம் உகந்தவர்கள்

ஆகின்றோம் என்ற உணர்வின் எண்ணத்தில் சென்று கொண்டே நம் செயல் இருக்குங்கால் இந்நற்குணங்களின் செயலுடன் ஒன்றிய முருகனின் அழகனின் அழகென்ற பட்டத்தை நாம் பெற்றால், இனிமையென்ற உணர்வின் செயலுடன், நம் எண்ணத்தின் ஈர்ப்பு ஒலியின் ஒளியாய்க் கலந்துவிடும்.

இச்சக்தி நிலைகொண்ட உருவம்தானப்பா முருகனேயன்றி, முருகன் என்று தனித்தொரு சக்தி வந்து நற்குணங்களாய் அவதரித்து, நற் படைப்பைப் படைக்கவில்லை. இடும்பன் என்ற அரக்க குணத்தை வளரவிட்டு, வாழ்க்கையை இருள் என்ற அழுகையின் ஊடே, சோர்வென்ற சகதிதனில் சுழலவிட்டு, உயிரென்ற ஆத்மலிங்கத்தை சர்வ சதா காலமும் நிந்தித்து, துவேஷித்து உயர் சக்தியான உயிர் ஆத்மாவை மண்ணுடன் மண்ணாய், புழுவாய், பூச்சியாய் சகதிதனில் சுழலவிடாமல் உயர் வழித் தொடர் கொண்டு, மனித பிம்பம் பெற்ற நாம் உயர் அலைத் தொடரின் உணர்வின் வழித்தொடர் செல்ல முருகனின் உருவாக வேண்டும்.

உணர்வின் இனிமையையும், உணர்வின் அழகையும், உணர்வின் மணத்தையும், உணர்வின் ஒலியையும்; உணர்வின் ஒளியாய் உயர் ஞானச் செயலின், ஈர்ப்பின் செயல் செல்ல, இவ் ஐம்புலன் என்ற நற்குணக்கூட்டை, சாந்தம் என்ற சக்தி கொண்டு செயலாற்ற வேண்டும்.

**16–11–80**

### இயற்கையும் தாம்பத்யமும்

இயற்கையுடன் ஒன்றிய படைப்பான, உலக வளர்ச்சிப் படைப்பையெல்லாம் சிற்சில குறிப்பில் உணர்த்தி வந்தேன். ஒன்றின் தொடர்பு கொண்டு ஒன்றாய், அணுவுக்குள் அணுவுமாய், உருவாய் வளர்ந்த உருவத்தின், உலக வளர்ப்பின், ஈர்ப்பின் ஒலியாய் பூமி ஈர்த்து உயர் சக்தியின் ஒலியான தன் வளர்ப்பின் ஒலியான 'ஓம்' என்ற நாத ஒலியின் உள் ஒலியான, 'ஓம்' என்ற பிறிதொரு நாதத்தின் 'ஓம்' என்ற நாதம் வளர்த்த ஓமாய், அணுவுக்குள் அணுவாய், ஜீவநீரின் அமிலக் கூட்டில், இன வளர்ச்சியின் பல மாற்றங்கள் உருவாகி உருவாகி, நீரின் ஜீவ சக்தியைக் கொண்டு உருவான, மாற்றம் கொண்ட பலப்பல மாற்றங்கள், அணுத்தோன்றி, அணு வளர்ந்து, மாறி மாறி வரும் சுழற்சி மாற்றத்தினால், பலப்பல கோடி மாற்றங்கள் உருண்டோடி உருண்டோடி, பல அமிலக் கூட்டின் சேர்க்கையுடன் உருவாகி, மாறி, ஆவியாகி மீண்டும் உருவாகி, இப்படி ஜீவ சக்தியின் ஈர்ப்

பில் மோதுண்டு காற்ருகி, ஒலியாகி, நீராகி உலக மோதலில், உலகின் பிடிப்பான மண்ணுகி, கனி வளங்களாகி, தாவரமாகி, பலப்பல ஒரு நிலையுடன் உருவாகி உருவாகி உருப்பெற்ற பல உலோக, தாவர அமிலக் கூட்டுடனும், இயற்கையின் இயற்கையாய் மோதுண்டு மோதுண்டு, ஒன்ருென்ருய் மாற்றிக்கொண்டு உருவான நிலைகளெல்லாம் ஏற்பட்ட பிறகுதான் உணர்வு பலவாகி அவ்வுயிரணு பல நிலைகள் கொண்ட உணர்வுகளின் செயலுடன் ஜீவத்துடிப்புக் கொண்ட பிறகு, ஜீவத்துடிப்புக் கொண்டு உருவாகி ஆவியாகி, உருவாகி, உணர்வு ஆவியாகி அவ்வுயிரணுவின் மோதலின் ஈர்ப்பு உணர்வு பலவாகி, பலவின் ஈர்ப்பின் வழித்தொடர் கொண்ட பிறகுதான், உணர்வு செயல் வளர்ச்சியின் எண்ண நிலை ஏற்படும் உயிர் ஜீவன் கொள்கின்றது.

ஜீவ சக்தி உருவாக, உணர்வின் பலவான வழிபெற்று, பலப்பல மாற்ற நிலைகொண்டு, எண்ணத்தில் உருவான உயிரணு ஜீவ வளர்ச்சியின் இன வழி வளர்ச்சி உருவாக, எண்ணத்தின் எண்ண மோதலின், உணர்வின் உணர்வும், உணர்ச்சியின் உணர்ச்சியும், மோதுண்ட இன வழி உயிரணு ஜீவ வளர்ச்சி கொள்கின்றது.

இவ்வளர்ச்சியின் சக்தியைத்தான், படைக்கப்பட்டவனின் படைப்பு வளர்ச்சியாய் எடுத்துக் கொள்கின்ருன். இவ்வளர்ச்சியின் உண்மை சக்திக்கும், தாம்பத்ய சக்திக்கும் உள்ள உண்மை நிலையென்ன?

சப்த ரிஷிகளாலும், சித்தர்களாலும் போற்றப்பட்டு வணங்கப்பட்ட உயர் சக்தியின் நிலைகளையெல்லாம் ஊன்றிப்பார்த்தால், ஒவ்வொரு சப்தரிஷியும் தன் சக்தியால் வணங்கப்படும் தெய்வங்கள் பெண்மை உருவங்களாகத்தான் இருக்கும். பராசக்தியையும், ஆதி சக்தியையும் பெண்மையின் சக்தியாய் வணங்கும் நிலையென்ன?

ஒவ்வொரு சப்த ரிஷியின் உயர்ந்த சக்திக்கும் உண்மையை ஊன்றிப்பார்த்தால், அவர்களின் ஆரம்ப கால தாம்பத்ய வாழ்க்கையின், உணர்வின், எண்ண மோதலின் ஒன்றுபட்ட உயர் சக்தியின் வழித்தொடர் பெண்மையின் சக்திகொண்டு தான் ஆண் வலுப்பெற்று ரிஷியாய், சப்த ரிஷியாய் உயர்ந்தானேயன்றி, ஜீவனற்ற ஜீவனை வளர்க்கும், சக்தியற்ற சிவ அமில குண ஆண்மைக்கு வலுத்தந்த சக்தியே, இத்தாம்பத்ய எண்ண வலு பெண்மையின் ஜீவ வளர்ச்சி வாழ்க்கையின் கூட்டிணுல்தான்.

இக்கலியிலும் ஆதாம், ஏவாள் என்றுணர்த்திய மனித இன வளர்ச்சியின் செயல்முறையும் இதன் உண்மைகொண்டுதான். அமிலமான சிவ உருவம்கொண்டு திருவள்ளுவருக்கு வாசுகி அம்மை யாரின் உயர் ஞான ஈர்ப்பு கரு அமில, செயல் சக்தி கூடித்தான் அவர் வளர்த்த ஞானக் கருவை இவர் உருவில் வெளிப் படுத்தி, இன்றளவும் வள்ளுவனையும் வாசுகியையும் போல் என்று பெரியோர்களின் வாழ்த்தாய் அமையப்பெற்ற வாழ்த்தின் சொல் லின் உண்மை இதுவே.

பெண்மையின் கரு வளர்ச்சியினுல் உயர் இன வளர்ச்சியின் வித்தை உருவாக்க முடிகின்றது. ஒரு சித்தரின் பாடலில் ''பூவை யரை அன்னையெனப் புகழ்ந்தாய் போற்றி'' என்பதன் உட் பொருள், படைப்பின் படைப்பே பூவையரே அன்னையாகக் கூடிய செயலுக்கு, இம்மனிதக் கரு இன வளர்ச்சியைப் பெருக வைத்து, உயர் சக்தியை வளர்க்க, செயலாக்க வழிதந்த படைப்பிற்கே, பூவையரை அன்னையாகும் வளர்ச்சியைத் தந்ததற்காகப் போற்றி வணங்கினுர்.

இக்கலியில் மகாத்மா காந்திக்கு வலுத்தந்ததே அவரின் மனையாளான கஸ்தூரிபா காந்தியின் பக்தி மார்க்க வழி முறை தான். பூவையரின் சுவாச அலையே கரு வளர்ச்சி அலை. ஆண்களைக் காட்டிலும் பெண்களின் ஈர்ப்பலைக்கு வீரிய சக்தி உண்டு. ஆனுல் சிவனுன அமிலமுடன் மோதுண்டு வெளிப்படும் சக்தியில் தான் அச்சக்திக்கே சக்தி கிடைக்கின்றது.

மனித இனவாழ்க்கையின், எண்ணத்தின் உணர்வு நிலைக் கொப்ப, ஒன்றுடன் ஒன்று இவ்வெண்ணத்தின் செயல் இணையும் பொழுதுதான் எப்படிப் பாவாகவும், ஊடையாகவும் நூற்பின் இரண்டு நிலைக்குள்ள எண்ணங்கள் ஒன்ருய் இணைந்து மோதுண்டு நெய்யப்படும் துணியைப்போல், இத் தாம்பத்ய எண்ண உணர்வில் அமில பிம்ப சிவ ஊடைக்கு சக்தி ஈர்ப்புப் பாவாய் இத் தாம்பத்ய நிலை அமைந்து, பெண்மையின் உயர் வழியைச் செயல் கொள்ளும் ஆண்மையின் நிலையில்தான் இப்பூமியின் உயர் ஞானங்களும், சித்து நிலைகளும், சப்த ரிஷியின் நிலையும் உருவானதே.

## 17–11–80

தாய் தந்தையரின் அன்பில் உருவாக்கப்பட்டு அறிவின் ஞானமும், நல்லொழுக்க உயர் மகனுய் வளர்க்கப்பட்ட தன்

மகனுக்கு, அவனது வளர்ச்சியின் வம்சம் வளர, பெண்மையின் சக்தி கூடி, தன் மகனின் வாழ்க்கையின் நிறைவில் தாய் தந்தையர் பூரிப்புக் காண்கின்றனர்.

பெண்மை எது? ஆண்மை எது? உயர் சக்தியின் தன்மை எது? படைப்பின் படைப்பில் முன் ஜென்ம வழித்தொடர் அறியும் முறையில், வளர்ப்பின் ஆரம்ப வளர்ச்சி குணத்தில் பெண், ஆண் என்ற வளர்ச்சி முறைதான் வளர்ந்ததா? பெண்ணைப் பிறவி எடுத்து முற்பிறவி, இப்பிறவி, எப்பிறப்பிலும் பெண் பெண்ணுகவும், ஆண் ஆணுகவும் தான் பிறவி எடுக்கின்றனரா? பிறவியின் தொடர் வழிப்படும் முறையென்ன? என்ற வினு எழும்பலாம்.

பின்னிப் பின்னி வரும் தொடர் வளர்ச்சிநிலையில் ஆவியாகி, பிம்பமாகி மீண்டும் ஆவியாகி, பிம்பமாகும் வழித் தொடர் தனில், ஓர் ஆத்மா பிறப்பெடுத்து அப்பிறவி மாறி ஆவியான நிலையில், அவ்வாவியின் உணர்வு அமில குணத்தின் ஈர்ப்பு எண்ணம், ஆண் உணர்வுடன் ஆணின் ஈர்ப்பில் அவ்வுயிர் ஆவி சிக்கும்பொழுது, ஆண்மைக்குகந்த அமிலத்துடன் கலக்கப்பெற்று, அவ் ஈர்ப்பின் வித்தாய் ஜீவன் கொள்ளும் ஜீவக் கருவிற்கு ஆண் வித்தின், அமில ஈர்ப்பின் வீரிய குணமுடன் பெண்ணின் ஆவி உயிர் சென்றிருந்தாலும், ஆணின் ஜீவ பிம்பமுடன் உள்ளவரின் ஈர்ப்புடன் செல்லும்பொழுது, ஆண் மகனின், அவ்வமில வித்தின் ஜீவ சக்தி அதிகமாய் வளர்க்கும் அமில வளர்ச்சி உதிரமுடன் உருவாகும் நிலையிருந்தால், முன் ஜென்ம பெண் ஆவி உயிரே, இவ் ஆணின் ஈர்ப்பில் சிக்கி, ஆண் உயிர் வித்தாய் பெண் அமிலச் சேர்க்கையில் ஜீவன் கொள்கின்றது.

வாழ்ந்த நாளில் மகன், மகள் சகோதரன், சகோதரி இப்படி பந்தபாசத்தில் உள்ளவரும், எண்ணத்தில் ஒரு நிலையான உணர்வு நிலையில், ஆண் சுவாசமுடன் ஆணின் உடலில் ஏறும் எவ்வுயிர் அணுவாய் தாய், தந்தை மற்றும் எண்ணமுடன் கலக்கப்படும் எவ்வுயிரணுவாயிருந்தாலும் ஆண், பெண் என்ற நிலை மாறி, இவ் ஈர்ப்பிற்கு வந்த நிலையில், ஆணின் உதிர அமில ஜீவசக்தியின் வளர்ச்சிக்கொப்ப ஆணுகவும் பெண்ணுகவும் ஜீவிதம் கொண்ட பிறப்பெடுக்க முடிகின்றது.

இந்நிலை கொண்டுதான் பெண்ணின் ஈர்ப்பிற்கு வரும் ஆண், பெண் என்ற எவ்வாவி உயிரணுவாய் இருந்தாலும், இப் பெண்ணின் ஈர்ப்பின் வீரியம் கொண்ட உணர்வு எண்ணமுடன், அவ்வுடலின் ஈர்ப்பில் சிக்குண்டுள்ள அவ்வாவி உயிர் அணு பெண்

ஆண் என்ற தன் உணர்வு மாறி, எத்தாயின் ஈர்ப்பின் வளர்ச் சிக்கு வந்ததோ, அதன் நிலையினால் பெண் ஆண் என்ற முந்தைய ஜென்ம முறை, ஒவ்வொரு ஜென்ம நிலையிலும், இவ் ஈர்ப்பு ஜெனன உணர்வு நாளில், இவ் ஆண் பெண்ணின் உணர்வு ஜீவித ஈர்ப்பு வளர்ச்சி அதிகம்கொண்டவர்களின் அமில நிலைக் கொப்ப, பெண் கருவாகவும், ஆண் கருவாகவும் அவதரிக்கும் நாளில், ஆண், பெண்ணின் ஜீவ உயிரணு ஈர்ப்பின் விகித நிலைக் கொப்பத்தான், அஜ்ஜீவன் ஆணாகவும் பெண்ணாகவும் உருவா கின்றது.

முந்தைய கால உணர்வு எண்ணமானது ஆவி உயிரணுவின் நிலையே உருவாகும் ஜீவ சக்தி கரு வளர்ச்சி நாளில்தான் ஒவ் வொரு ஜென்மக் கருவும் ஆண், பெண் என்ற உருவ நிலை கொள் கின்றது. ஆணின் உணர்வு எண்ண அமிலமும், பெண்ணின் உணர்வு எண்ண அமிலமும் மாறுகொள்கின்றது. பெண்ணின் உடலில் உருவாகும் ஜீவ சக்திக்கு உயிர் அணுக்களின் வளர்ச்சியை வளர்க்கும் ஈர்ப்புக் குண ஜீவசக்தி அதிகமுண்டு.

எவ்வுடலின் எவ்வமில ஜீவித உணர்வு உயிரணு வளர்க்கும் தன்மை அதிகமுள்ளதோ, அவ் ஈர்ப்பின் நிலைக்கொப்ப பெண், ஆண் என்ற உருவ பிம்ப உணர்வு ஜீவ கரு உருவாகின்றது.

மனிதனின் ஜீவ கரு உயிரணுவின் வளர்ச்சித் தன்மை கொண்ட இனத் தாவரங்கள் சில உண்டு. மனிதனின் ஜீவ சக்திக்கு உகந்த சக்தி குணம் மாங்கனிக்கு உண்டு. மாங்கனியின் கொட் டையை, அம்மரத்தின் கனி எவ்வளவு சுவையாக இருந்தாலும், அம்மரத்தின் கொட்டையையே நாம் பயிர் செய்தால், அம்மரம் விட்ட கொட்டையில் வளர்த்த மரத்தின் கனியின் சுவையை உண்டுபார்த்தால், தாய்மரத்தின் கனிச் சுவை சேய் மரத்தின் கனிச் சுவைக்கு இருக்காது.

தாய் மரத்தின் கொட்டையை எடுத்து வளர்க்கவிட்டு, அவ்வளர்ந்த வித்து செடியுடன் தாய் மரத்தின் கிளையை ஒட்டுச் சேர்த்து, ஒட்டுமரமாய் வளரும் மாங்கனியின் சுவை, தாய் மரத்தின் கனியைக் காட்டிலும் சேய்மரத்தின் தாய்மரத்துடன் ஒட்டுச் சேர்த்து வளர்த்த கனியின் சுவை தாய் மரத்தின் சுவை யைக் காட்டிலும் நற்சுவையாய் இருக்கும்.

ஒன்றின் துணைகொண்டு ஒன்றாய் உருவாகும் உணர்வின் எண்ணஈர்ப்பு நிலைக்கொப்பத்தான் ஆண், பெண் என்ற கரு நிலை உருவாகி வளர்கின்றதப்பா. வளர்ப்பின் வளர்ப்பாகி,

ஆவியாகி, பிம்பமாகி ஆவியாகும் செயல் சுழற்சியின், ஈர்ப்பின் உணர்வு உயர் நிலை வளரும் நிலைக்கொப்பத்தான், வளர்ச்சியின் தொடர் வளர்ச்சி வளரும் ஈர்ப்புத்தன்மை உருவாகின்றது.

**26–11–80**

இவ் ஈர்ப்புத்தன்மையின் வளர்ச்சித் தொடரில் உருவாகி, வளர்ந்து ஒவ்வொரு ஜென்மங்களும் (பிறவி) எடுக்கும் உருவில், உருவ பிம்ப, உணர்வு எண்ண வாழ்க்கை முறையில், இவ்வெண்ணத்தை எப்படி வழிநடத்துகின்றோமோ, அவ்வழியின் நிலைக்கொப்ப குண நலன்கள் பிம்ப உடலின் கூட்டு அமிலமுடன் ஜீவ சக்தியுடன் கூடிய சுவாசத்தால் உடல் அமில விகித நிலையும் ஒவ்வொரு பிறவியிலும் ஏற்படுகின்றது.

மனித எண்ண பிம்ப உடலில்தான் செயலாற்றும் திறமையும் சொல்வடிவ உணர்வலைகளும் உள்ளதினால், இம்மனித பிம்ப உடலில் நற்குணங்களின் வழிமுறைகளை இவ்வுடல் அமிலக்கூட்டையே உணர்வின் எண்ணத்தால் தாக்கப்படும் எந்த ஒரு குண நிலையையும், சமமான நிலைப்படுத்திச் செயல்படக்கூடிய தன்மை இவ்வெண்ணத்தால் வழிப்படுத்தும் முறைகொண்டு வாழ்க்கையிலும் நம்மை எதிர்கொள்ளும் மனித பிம்பத்தை விட்டுப் பிரிந்த ஆவி நிலைகொண்டோரின் அலையிலிருந்தும், இவ்வுடல் பிம்ப எண்ணத்தில் ஈர்க்கப்படும் உணர்வு நிலையை எண்ணத்தால் சமப்படுத்தும் நிலை பெற்றுவிட்டால், இவ்வெண்ண பலத்தினால் எச்செயலையும் இவ்வெண்ணத்தால் செயலாக்க முடியும்.

வீரமான உணர்வுகளையும், அவ்வீரத்தின் உயர் ஆற்றலையும், நம்மை வந்து மோதும் எத்தீய செயலையும், நாமெடுக்கும் எண்ணத்தின் பார்வைகொண்டே, நம்மை அவை வந்து தாக்காமல், நம் உணர்வின் சுவாசம் பட்டநிலையிலேயே அத்தீய சக்தியைப் பார்வையாலேயே மாற்ற முடியும்.

இவ்வெண்ணத்தால் எடுக்கும் ஜெபத்தின் வீரிய, வீரச் செயல் தன்மை இருந்தால், நம்முள் உள்ள அமிலக் கலவையின் கூட்டு நற்குண வழித்தொடர் பெற்றிருக்குங்கால், இவ்வீரிய வீர உணர்வால் எந்நிலையையும் நாம் பெறமுடியும். அன்பு, பாசம், ஞானம் அனைத்தும் வேண்டியதுதான். அனைத்து சக்திகளையும் சாந்தமுடன் சுழலவிடும் ஜெபத்தினால், இவ்வாழ்க்கை என்ற நிறைவுக் குணத்துடன் மட்டும்தான் சுழல முடியுமேயன்றி, இவ்வீரத்தின்

வீர சக்தித் துடிப்பு உணர்வின் செயல்கொள்ளும், செயல் நிலை இவ் உடல் அமிலக் கூட்டிலேயே வீரியம் கொள்ளவேண்டும்.

வீரத்தின் வீரிய செயல் குணத்துடிப்பு உணர்வால் உந்தப் படும் இவ்எண்ணத்தின் ஈர்ப்பலையை உயர்ந்த ஜெப சக்தியின் தொடர்பு கொண்டு சித்தர்கள், சப்த ரிஷிகள் ஆகியோரின் உணர்வுடன் ஒன்றப்படும் செயலினுல், இம்மனித பிம்ப உடல் சக்திதான் தெய்வ சக்தியாகின்றது.

ஆவலும் ஆவலுக்குகந்த ஆசை வீரமும், உணர்வால் ஜெப முடன் கூடிய அறிவும் ஞான வழித்தொடரில் செலுத்தி, அவ்வழி யினில் நாம் சென்ருேமானுல், நாம் செல்லும் வேகம் கொண்டு, நம் சுழற்சியுடன் நம்மை வழிநடத்திச் செல்லும் வழித்தொடர் குருவின் நிலைக்கே, நம் செயலைக்கொண்டு சுழற்சியின் சக்தி வேகம் அதிகம் கொள்ளும்.

அறியும் அறிவாற்றல் வளர்ந்துகொண்டே இருக்க வேண்டு மப்பா. இவ்வாழ்க்கை, இன்பம், துன்பம் என்ற சுழற்சியின் கதியிலேயே எண்ணத்தை சமப்படுத்தி உண்டோம், உறங்கினேம், வாழ்ந்தோமென்ற குறுகிய சுழற்சியில் எந்த நல்ல குணத்தின் சக்தியை நாம் பெற்றிருந்தாலும், அறிவோம் ''ஹரிநாராயண'' என்ற மந்திரச் சொல்லின் உண்மை நாமத்தின் வழித்தொடர் ஜெப நாமத்துடன், நம் செயல் சுழன்றுகொண்டே இருக்க வேண்டும்.

'ஹரி ஓம்' எதனையும் நாம் அறிந்து கொண்டே இருப்போம். 'ஹரே' படைப்பின் படைப்பு நாராயணு உன் படைப்பையே நான் அறிய, படைக்கப்பட்ட படைப்பையே அறிந்து படைக்க வருகின்றேன் என்ற, அறிவோம் என்ற, வீர உணர்வு சுழற்சியின் செயல் வளர்ச்சியில் ஞானச் செயல் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

காலத்தின் மாற்றமும், உருவத்தின் மாற்றமும் மாறிக் கொண்டேதான் உள்ளது, ஒவ்வொரு நொடிக்குமே. இச் சுழற்சியின் சுழற்சியாய் சிக்குண்டு, கிடைக்க முடியா பாக்கிய மாய் மனித உருவத்தை எடுத்துள்ள நாம், இவ்வுருவத்தின் ஜீவத் துடிப்பு சக்தியைக் கொண்டுதான், எச்சக்தியையும் பெறமுடியும் என்ற உண்மையை உணர்ந்து, இவ்வுடல் பிம்ப உணர்வு எண் ணத்தையே வீரம் என்ற உயர் சக்தியின் வீரிய குணமாய் நம் குணத்தை ஜெபம் கொண்டு, சூரியனின் சக்தியுடன் சக்தியாய், நம் எண்ணத்தைச் செலுத்தி, நாமெடுக்கும் ஜெபம்கொண்டு பல உன்னத நிலைகளை நாம் பெறலாம்.

**1–12–80**

சுவை தரும் இயற்கைக்கனிகள் தன்மையில், இனிப்பின் சுவையே ஒவ்வொன்றுக்கும் மாறுபாடு உள்ளது. காரத்தின் சுவையில் மிளகாய்க்கும், மிளகிற்கும், வெங்காயத்திற்கும் இஞ்சி, பூண்டு போன்றவற்றின் கார குணமானது ஒன்றுக்கொன்று மாறுபட்ட காரமும், அதை உண்ணும் உடல் நிலைக்கு ஒவ்வொன் றினால் ஒவ்வொரு நிலையான உஷ்ண கதியும் ஏற்படுத்தவல்ல குண நிலை உள்ளது. இதைப்போன்று புளிப்பு நிலையிலும், ஒவ்வொன் றின் புளிப்பின் சுவையும், அதற்குகந்த உடல் தன்மைக்கு அதனுடைய குண செயலும் ஏற்படுகின்றது.

இதைப்போன்றே, இவ்வுணர்வின் எண்ணத்தையும், ஒவ் வொரு மனித பிம்பத்தின் உணர்வு, எண்ண நிலைக்கொப்பத் தான், அப்பிம்ப உடலில் இருந்து செயல் கொள்ளும் ஆத்ம உணர்வின், சேமித குண சக்தியின், அமிலக் கூட்டு உருவாகி யுள்ளது.

நம் இந்திய பூமியில்தான், இந்துமதத்தின் வழியில், பலவித குணங்கள் கொண்ட, பல நிலையான விக்கிரகங்களை அமைத்து வணங்குகின்றனரே, மற்ற மதத்தில் ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்று ஒவ்வொரு மதத்தவரும் ஒரே ஆண்டவனை வணங்கும்பொழுது, இந்துமதத்தில் பல நிலையான விக்ரக ஆராதனையும், மாறுகொண்ட பூஜை முறைகளும் வழிப்படுத்திய தின் உண்மை நிலையெல்லாம், ஒவ்வொரு சித்தனாலும் தானெ டுத்த சக்திதனை அந்தந்த மனிதக் கூட்டின், அமில ஈர்ப்பின் நிலைக்கொப்ப, ஒன்றின் சக்தியினால் பிறிதொன்றின் வழித்தொடர் கூட்டி, வழிப்படுத்தித்தந்த முறை வழியில் வந்ததுதான். குண நிலையின் உருவத்தை உருவக் கல்லாய்ச் செதுக்கி வைத்து, கல்லின் உருவத்தில் உணர்த்தினான். குண மாற்றத்தின் சக்திதனை எடுத்து அக்குணத்தின் விக்கிரகத்துடன் எண்ணத்தைச் செலுத்தி வணங் கும் நிலையில், எக்குண தெய்வத்தை ஒருவன் வணங்குகின்றானோ அக்குணத்தின் அடிப்படை சக்தியின் உணர்வு, அவ் ஆத்மாவும் ஏற்று அவ்வழி சக்தித் தொடர் பெற வேண்டிய நிலைக்காகத் தான், பல உருவ வழிபாட்டினை உணர்த்தி, செயல்படுத்தி சப்த ரிஷிகளினால் இன்றளவும் அவ் வழிபாட்டின் தொடர் சுழற்சி, இந்து மத உணர்வு எண்ணமுடன் வளர்ந்து கொண் டுள்ள உண்மை நிலைதான் பல உருவ வழிபாட்டு முறை யெல்லாம்.

உருவ வழிபாட்டின் மாறுகொண்ட குண நிலைபோன்றே மனித பிம்ப உடல் எண்ணத்திலும், மாறுகொண்ட நற்குணங்

களிலும் பல நிலைகள் உண்டு. தீய குணங்களிலும் பல நிலைகளுண்டு. இதைப்போன்றே, சப்த ரிஷிகளினால் செயல்படுத்தும் முறையிலும், அவரவர்கள் ஆரம்ப குணத்தன்மையில் அதிகமாகச் சேமித்த எண்ண உணர்வின், விகித நிலையின், வளர்ச்சித் தொடரிலே தான், இன்றளவும் தான் பெற்ற அலைத்தொடரின் வழித்தொடர்கொண்ட, ஒளி அலையை உணர்வலையாக்கி. பல தன்மைகளை மாற்றி மாற்றி, ஒருவரின் செயலின் துணைகொண்டு மற்றவரின் தொடர்கொண்டு, இன்று இப்பூமியில் வாழும் மனித பிம்பங்களின் செயல் முறை, உருவக் கூட்டின் தன்மை, சுவை, குணம், எண்ண ஆற்றல் இவை எல்லாமே சப்த ரிஷிகளினால், இவ்பூமியில் விதைத்த மனிதக் கருவின் வளர்தன்மை தொடர் நிலைகொண்ட இன்றைய நிலை. இக்கலி மாறி கல்கி சுழற்சியில் மீண்டும் பலகோடி ஆண்டுகளுக்குப் பிறகு மாறப்படும் இம்மனிதக் கரு உருவம் மாறுகொண்ட தன்மையில்தான் உருவாகும்.

இன்றுள்ள சப்த ரிஷிகளின் சக்தி நிலை கூடக்கூட, காலப் போக்கில், தீய நிலைகளை மாற்றி, உயர் சக்திகளை வளர்த்துக் கொண்டு தான் இருப்பார்கள். இத்தொடர் முறை மாற்றத்தின் வழிதனையும், பல குண வழித்தொடர் ரிஷிகளின் தொடர் நிலையையும், நாமெடுக்கும் ஜெபத்தொடரில் ஒவ்வொருவர் எடுத்த தனித்த உயர் சக்தியின் வழித்தொடர் அலையை நாம் ஜெப முறையினால் எடுக்க முடியும்.

**2–12–80**

பூண்டின் செடி வித்தான ஆரம்ப வளர்ச்சி நிலையில், அதன் கிளைத்தொடர் அச்செடி வளர்வதற்குகந்த ஜீவ சக்தி இருக்கும் வரை, அப்பூமியின் சுற்றளவில் ஆரம்ப பூண்டுக்கிழங்கின் வளர்ச்சிக் காலம் முடிவுற்றாலும், அதன் தொடர் வளர்ச்சிக் கிளைப் பூண்டுகள் எவ்வித்தின் ஆரம்பத்தில் வளர்ச்சி கொண்டு வளரப் பெற்றதோ அதன் குண ஜீவ சக்தியும் தன் வளர்ச்சிக்குகந்த நிலப்பரப்பு உள்ளவரை வளர்ந்துகொண்டே உள்ளதைப்போல், இம்மனிதக் கரு எண்ணத்தில் சக்திகொண்ட ஆத்மாக்களின் வளர்ச்சியினால், பல ஆயிரம் காலங்களுக்கு முன் அவர்கள் உணர்ந்து வழிப் படுத்திச் சென்ற உண்மை நிலைகளின் படர்தன்மை, வழித் தொடர் அலைத்தன்மையில் இன்றளவும் இப்பூமியில் பல தெய்வங் களை வணங்கக் கூடிய முறை வழிபெற்று விட்டது.

பல குணங்களை உணர்த்த அவர்களினால் நல் வழிபடுத்தப் பட்ட, சக்தி வாய்ந்த அலைத்தொடரின் உருவங்களாய் படைக்கப்

பட்டவை எல்லாமே, இன்று கால நிலையின் மாற்றத்தினால், மனித எண்ணத்தின் உணர்வலைகள் பல கூறுகளில் மாறுகொண்டு மாறு கொண்டு சுழற்சி பெற்ற வழிதனில் உண்மை சக்தியின் தெய்வ நிலை வெறிகொண்ட பக்தி முறையாய் இன்றுள்ள சுழற்சி நிலையில் உள்ளது.

நம் இந்திய பூமியில் மட்டும் இந்நிலையென்றால் மற்ற தேசங் களில் ஜாதி வெறி யற்றநிலையின் இன மாற்றம் என்ற வெறி உணர் வின் ஈர்ப்பில் உண்மைத் தெய்வ சக்தியின் அன்பு பாச பிணைப்பில் வழித்தொடர் செல்ல முடியா உணர்வு எண்ணங்கள்தான் அங்குள்ளன.

மனித எண்ண உணர்வால் எடுக்கும் சக்தியினால், எச் சக்தி யும் பெறவல்ல ஆற்றல் மனித பிம்பக் கூட்டிற்கு உண்டு. விஞ் ஞானத் தொடர்பினால் ஒன்றின் சேர்க்கை கொண்டு அறியக் கூடிய செயல் வன்மையினால் பலவற்றையும், உணரும் மனிதன் இவ்வுடல் பிம்பக் கூட்டைக்கொண்ட எந்நிலையையும் உணரவும் செயலாற்றவும் முடியும்.

ஆவி நிலையின் சுழற்சி ஈர்ப்பில் மனித உடலை விட்டுப் பிரிந்த ஆத்மாக்கள் படர் கொண்ட சுழற்சியில் இப்பூமியின் ஈர்ப்புடன் ஒன்றியே மனிதன் எடுக்கும் எண்ணமுடனும், உணர்வுடனும் சுழன்று கொண்டுள்ள நிலையில் இம்மனித பிம்பக் கூட்டின் எண் ணத்திற்கொப்ப இவ்வாவி ஈர்ப்பின் அலைத்தொடரில் சிக்குண்ட மனிதர்களும் வாழ்கின்றனர்.

காற்றுடன் கலந்துள்ள படர்தொடரில் பல சக்திகளின், சுழற்சியின் மத்தியில் தான் மனிதனும் வாழ்கின்றான். எண்ணத் தின் சுவாச நிலைக்கொப்ப எல்லாம் எண்ணிய நிலைகொண்ட அலைத்தொடர் பயம், சந்தோஷம் மற்ற எல்லா நிலைகள் கொண்ட எவ்வெண்ணத் தொடராய் இருந்தாலும், அந்நிலையான சுவாச நிலையின் அலைத்தொடர் பிம்பக் கூட்டின் சுழற்சியுடன் எண்ணத் தில் எண்ணும் நிலைக்கொப்ப எல்லாமே உடலுடன் சேமித்துக் கொண்டேதான் உள்ளது.

பக்தி மார்க்கமானாலும், யோக சக்தி மார்க்கமானாலும், விஞ்ஞான அஞ்ஞான, எஞ்ஞானமானாலும் எண்ணத்தில் எண்ணும் வழித்தொடர் கூட்டு அமிலச் சேர்க்கையை அப்பிம்பம் சேமித்துக் கொண்டே உள்ளது.

எவ்வெண்ணத்தை உயர்த்தி, அதன் வழித்தொடர்கொண்ட குணத்தன்மையில் இவ்வெண்ண சுவாசம் உள்ளதுவோ, அவ்வழித்

தொடர் கொண்ட அலையின் அமில குணத்தின் வீரிய தன்மை தான் மனிதக் கூட்டின் பிம்பக் கலவையில் நிறைந்திருக்கும்.

3–12–80

மனிதனுக்கும், மற்றெல்லா மிருகங்களுக்கும், பட்சிகள் யாவைக்குமே இயற்கையின் ஒளி ஈர்ப்பு தன் முன் உள்ளதை ஊடுருவிப் பார்க்கும் தன்மையில்தான் அமையப் பெற்றுள்ளது. ஒரே சுழற்சி கதியில்தான், ஈர்ப்பின் சுழற்சி ஓட்டமே சுழன்று ஓடுகின்றது. முன்னேக்கிச் செல்லும் சுழற்சி கதியில்தான், வாகனங்களையும் மனிதன் அமைக்கின்ருன். மேல் நோக்கிய கதியில்தான் தெய்வ சக்தியை எண்ணி வணங்குகின்ருன் மனிதன்.

ஆனுல் ஜீவராசிகளின் சுவாச ஈர்ப்பிற்கு, மேல்நோக்கி சுவாசம் ஈர்த்து பூமி கக்கும், பூமி எடுத்து வெளிப்படுத்தும் ஈர்ப்பின் சுவாசத்தைத்தான், கிழ்நோக்கிய சுவாசமாய் தானெடுத்து, பிடியில் சிக்கி, பூமியின் ஈர்ப்புடன் ஈர்ப்பாய் இப்பூமி வளர்த்த வளர்ப்பெல்லாம் உள்ளன.

ஆரம்ப கதியில் எவ்வுயிரணு, எவ்வலைத்தொடர் அமிலக் கூட்டின் உருவத் தன்மை எடுத்து ஆவியாகி, பிம்பமாகி ஒவ் வொரு பிம்ப மாற்றத்திலும் வழிப்படுத்திக்கொண்ட உணர் வெண்ணக் கூட்டு அமில ஈர்ப்பின் பிடி, இப்பூமியின் சுவாசப் பிடியின் தொடர்பு ஈர்ப்புப்பிடியில்தான், சிக்குண்ட தன்மையில் கீழ்நோக்கிய சுவாச ஈர்ப்புடன் வாழும் தன்மையையே, பகுத் தறியக்கூடிய ஞான வளர்ச்சி கொண்ட மனிதன், தன் ஜீவ பிம்ப உடலின் எண்ண சக்தியை, நற்குண வழித் தொடரில், மேல் நோக்கிய சுவாச அலையை ஈர்த்தெடுக்கக் கூடிய ஜெபம் கொண்ட சக்தி பெற்ருல், இப்பூமியின் ஈர்ப்பில் சிக்குண்டு வாழும் நிலையில், நற்குண ஜெப முறையினுல், இவ்வுடல் முழுமைக்கும் படர்ந்துள்ள அனைத்து அணுக்களுக்கும், மேல் நோக்கிய சுவாச அலை ஈர்ப்பின், ஊடுருவும் உயர் காந்த மின் சக்தியின் செயல் ஏற்பட்ட பிறகு, இஜ்ஜீவ பிம்ப உடலில் இருந்தே, இவ்வெண் ணத்தை ஒளியின் அலையாய், தனித்த ஒரு ஜோதி உணர்வாய் செயல் படுத்த முடியும்.

கொழுந்து விட்டு எரியும் நெருப்பில் எதைச் சேர்த்தாலும், அதுவும் எரிந்து பஸ்பமாவதைப்போல், இவ்வுணர்வால் எடுக்கும் எண்ண ஜெபமுறையின் வழியினுல், சூரியனின் ஒளி கண்ணுடியில் பட்டு மறுபக்கம் ஊடுருவுவதைப்போலில்லாமல், அதே சூரியனின் ஒளி பாதரசம் பூசிய கண்ணுடியின் மேல் படும்பொழுது, இவ்

ஒளியை ஈர்த்து இரசக் கண்ணுடி வெளிப்படுத்தும் ஒளியைப் போல், இவ்வுடல் பிம்ப கூட்டிற்கு நற்குண அமில இரசத்தைப் பூசி ஜெபம் கொண்டோமானுல், வள்ளலார் உணர்த்திய 'அருட் பெருஞ்ஜோதி' என்ற நிலேயான 'தனிப்பெரும் கருணே' கொண்ட அவர் உணர்த்திய முறையான, இவ்வாத்ம ஜோதியே அருட் பெரும் ஜோதி, பூமியின் ஈர்ப்பில் ஜீவன் கொள்ளும் ஜீவத் துடிப்பாய் அனைத்துமே ஜோதி நிலேதான்.

இவ் ஈர்ப்பின் பிடியுடன் மேன்மேலும் சிக்கி, பல அமில குணங்களின் மாற்றத்திலும், இவ்வுடல் பிம்ப உயிரணுக்கள் எவையுமே எவ் ஈர்ப்புப் பிடிக்கும் செல்லாமல், பூமியின் ஈர்ப்பு சுவாசப்பிடியில் உள்ள நிலேயில் ஜீவன் பிரிந்தால், இதே சுழற்சி ஓட்டத்தில் மீண்டும் மீண்டும் சிக்குண்டு சுழலும் தன்மையிலிருந்து எவ் ஈர்ப்பலேக்கும், மற்ற ஜென்மத் தொடர் வழிக்கும், நம் உயிர் ஆத்ம ஜோதியை அருட்பெரும் ஜோதியாய், தனிப்பெரும் கருணேகொண்ட எச் செயலேயும் உருவாக்கும் தன்மைக்கு உயிர் ஆத்மாவின் உயர் ஆத்ம ஜோதியை நாம் வளர்க்க முடியும்.

**9–12–80**

இம்மனித பிம்ப உடல் ஞான ஆத்மாவுக்குத்தான் சொல் லாற்றலும், செயல் திறமையும், பகுத்தறியும் எண்ண வளர்ச்சி யும் கொடை நிலே உள்ளதினுல், இந்நிலேயை வளர்க்கும் முறை, ஆத்ம தியானம் பெறும் முறை ஒன்றுதான், அனைத்து அண்ட கோடிகளேயும் வளர்க்கும், அறியும் நிலேகொண்ட சக்தி, இப்பிம்ப உடலுக்குத்தான் உண்டு.

இப்பிம்ப உடலிலும், தனித்த ஆத்ம தியானத்தால் உயர் ஞானக் கூட்டினேப் பெருக்க முடியாது. ஆண் பிம்ப உடலுக்கு அமிலப்படைப்பை படைக்கத்தான் முடியும். ஆண் விடும் சுவாச அலேயினுல் மரம், செடி, கொடிகள், தாவர இன வர்க்கத்தையும், மலேகள், உலோகப்பொருட்கள் இந்நிலே போன்ற சிவ பிம்ப படைப்பாய்த்தான் ஆண் வர்க்க சுவாச அலேயில் உருப்பெறும் உரு நிலேயுள்ளது.

இவ் உரு நிலேக்கு ஜீவன் தரக்கூடிய சக்திக் கூட்டு அலேகள், பெண்மையின் சுவாசக் கூட்டிற்கு உண்டு. பெண்ணினத்தின் சுவாச அலேயில் இருந்துதான் புழு, பூச்சி, வண்டினங்கள் யாவையும் ஜீவன் கொள்கின்றன.

நம் பூமியின் பிம்பமே சிவ பிம்பம்தான். இச் சிவ பிம்ப னுக்கு ஈர்ப்புக் குணம் தந்தவள் சக்தி சுழற்சிதான். அமிலப்

படைப்பு ஆணினம், சக்தி ஈர்ப்பு பெண்ணினம். வளர்க்கும் முதல் இன அமில இனம் ஆதி முதல்வனே, விஞயகனே என்று உணர்த்திய, சிவ சக்தி என்ற உரு நிலேக்கு உருவ வளர்ப்பின், வளர் நிலேயின், ஆதி நிலேயான சிவன் சக்தியென்ற ஆண் பெண் நிலேயான அமிலக் கூட்டின் ஈர்ப்பு சுழற்சியில், வளர்ப்பின் வளர்ப்பிற்கு நீர், நெருப்பு, காற்று இவற்றை வளர்க்கும் முதல் நிலேயான விஞயக குண நிலேக்கு, வளர்ப்பின் வளர் நிலே சுழற்சியில் வளரும் ஜீவ சக்திக்கு, முருகன் என்ற குணப்படைப்பும், முருகனுக்கு துணே சக்தியான ஆசை குண தெய்வயானேயும். தேவைக்குமேல் பேராசை வளர்ப்பு நிலேதான் வள்ளி குணம்.

முருகனுக்கு பிள்ளேயைக் காட்டவில்லே புராணம். பூமியின் இயற்கை உண்மை உற்பத்தி முறையைத்தான் சிவ சக்தியாக்கி, ஆதிமுதல்வஞய் விஞயகனேக் காட்டி, சிவ சக்தியென்ற இப் பூமியானது தன் வளர்ப்பின் வளர்ப்பிற்கு ஆவியாகி பிம்பமாகி நீர், நிலம், காற்றை எப்படி முதலாய் வளர்த்ததோ அதனே விஞயகஞய் உணர்த்தி, முருகன் என்ற பல குண நிலேகளே ஜீவ பிம்ப உடலாக்கி, ஆசையென்ற அன்பைக் காட்ட தெய்வயானேயை உணர்த்தி, இன்று வாழக்கூடிய நிலேயான பேராசை வள்ளியை உணர்த்திச் சென்ருன் அச்சித்தன்.

பூமி மட்டுமல்ல, உருவாகும் ஜீவ சக்தி அனேத்துமே, ஒவ்வொன்றுமே பிம்ப சிவன், சக்தி ஈர்ப்பு, வளர்ப்பு விஞயகன், பொருள் முருகன், தேவை தெய்வயானே, தேவைக்கு மேல் உணரும் பேராசை வள்ளியம்மை தான். படைப்பின் உண்மை நிலே இது. படரும் வழிமுறை இந்நிலே. படைப்பான அமிலத்தை ஆண் இன சுவாசம் படைக்கின்றது. ஜீவ சக்தியின் அலேயைப் பெண் இனம் வளர்க்கின்றது. படைப்பில்லேயேல் ஜீவ பிம்பத்திற்கு உயிர்த்துடிப்பு இல்லே; உயிர்த்துடிப்பிற்கு பிம்ப உடல் இல்லேயேல் செயலில்லே.

உருவாகும் உயிர்க் கருவிற்கு அமில பிம்பத்தைத் தருவது ஆணினம், சக்தி ஈர்ப்பு ஜீவன் தருவது பெண்ணினம். ஆணின் வித்து அமில வித்துத்தான். பெண்ணின் வித்து ஜீவத்துடிப்பு வித்து. அமிலப்படைப்பைப் பெண்ணினம் ஏற்று ஜீவ சக்திக் கருவை வளர்க்கின்றது தாயினம். ஜீவ சக்திகளின் உண்மைப் படைப்பு எப்படி உள்ளதோ, அதை ஒத்துத்தான் ஆத்ம தியானம் பெறும் வாழ்க்கை முறைக்கும், பெண்மையின் சக்தியின் ஈர்ப்பை ஆண் இன செயலில் பதிக்கும் நிலேயில் தான், ஞான வளர்ச்சியும், வாழ்க்கை அமைதியும் வழிக்கூட முடியும்.

வாழ்க்கையுடன் சக்தித் தொடர்பு சிவ பிம்பம் இணைந்து வாழ்க்கையைப் போல் வளர்ந்தால்தான், உயர் சக்தி பெற முடியும். சிவ சக்தி இல்லையேல் வளர்சக்தி இல்லை. இவ்வளர் சக்தியான உயர் குணம் மனித பிம்பத்திற்கு எப்படி வந்தது? ஒவ்வொரு பாடத்திலும் சொல்லாற்றல், செயலாற்றல் என்று உரைக்கும் வழித்தொடர் ஞான வளர்ச்சி நிலை உருவானது எந் நிலை கொண்டு?

இந் நாற்பத்தி ஏழு கோளங்களில் இல்லாத சக்தி, இப்பூமி வளர்த்த மனித ஞானத்திற்கு எப்படி வந்தது? சந்திரனிலும், செவ்வாய், புதன், வியாழன், ராகு, கேது, சூரியன் இப்படி நாற்பத்தி ஏழு கோளங்களுக்கும் இல்லாத்தன்மை நம் பூமிக்கு உண்டு. ஜாதகத்தாரால் சனிமண்டலத்தை, தருவான் அழிப் பான் என்றுணர்த்திய முறையெல்லாம் எப்படியப்பா வந்தது?

பார்க்கின்றான், கேட்கின்றான், சுவைக்கின்றான், நுகருகின் றான், வாழுகின்றான் பல சக்தியையும் பெற்ற மனித பிம்பம், சூரியனுக்கே இல்லா ஞான வளர்ச்சி செயல் மனிதன் எப்படி உருப்பெற்றான்? சுழற்சி கதியின் இயற்கை வளர்ச்சி செயல்தான். சூரியனே தவிர, நினைத்த செயலைச் செயலாக்கும் எண்ண, ஞான வளர்ச்சி மனித சக்தி, சூரியனுக்கே இல்லை. இந்நிலை கொண்ட மனித சக்தி எப்படி உருவானது?

## 10–12–80

மிதந்து, சுழன்று ஓடிக்கொண்டேயுள்ள சூரியனின் வளர்ச்சி யின் அங்கங்கள்தான் சூரியக் குடும்ப நாற்பத்தி ஏழு மண்டலங் களும். இஜ் ஜீவ பிம்ப உடல் கோளத்தில் இயங்கும் அவயவங் களைக் கொண்டுதான் மனித பிம்ப ஆத்மாவின் வளர்ச்சி நிலை உள்ளதைப்போல், சூரியனின் அங்கங்களாய், ஒன்றின் ஈர்ப்பின் துணைகொண்டு, ஒவ்வொன்றின் வளர்ச்சியுமே, அது வளர்க்கும் சக்தி கொண்ட உரத்தைச் சூரியன் பெறுகின்றது.

சூரியன் செயல் கொள்ள, சூரியனின் அங்கங்களாய் உள்ள நாற்பத்தி ஏழு மண்டலத்தின் துணை இல்லையேல், சூரியனுக்குச் செயலில்லை. மனிதனின் உடல் உறுப்பில் செயல்புரியும் அங்க மாய், மனித இருதயத்திற்கு எச்செயல் உள்ளதோ, அச் செயலைப் போன்ற நிலையைத் தரவல்ல மண்டலம் சனி மண்டலம்.

சனியின் சக்தியினால், அது எடுத்து வெளிக்கக்கும் அமில ஈர்ப்பின் குளிர் தன்மையான ஆவி சக்தி, சூரியனுக்கு இருதயம்

போன்று செயல்கொள்கின்றது. மனித அங்கத்தின் செயலைப் போன்று, ஒவ்வொரு மண்டலத்தின் செயலும், சூரியனைச் செயல் படுத்துகின்றது.

ஜீவ ஆத்மாவான சூரியனின் அங்க அவயவங்களான நாற் பத்தி ஏழு மண்டலங்களின், உருவத்தின், ஞானத்தின், சொல், எண்ண வலுவாற்றல், வளர்குழந்தையை வளர்ப்பது இப்பூமி தான். நாற்பத்தி ஏழு மண்டலங்களின் அவயவங்களை, சூரிய பிம்ப ஜீவன் வளர்க்கும் வளர்ப்பு நிலை செயல், இப்பூமியில் வளர்த்த மனித பிம்ப வளர்ச்சியைக் கொண்டுதான் சப்த ரிஷிகளின் சக்திச்செயலாய், இப்பூமிக்கு பலகோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வளர்ப்பின் வளர்ப்புக்கான, இப்பூமிக்குப் பல அலைத் தொடரின் ஈர்ப்புச் சுழற்சியை ஏற்படுத்தி நிலைகொண்டு, எந் நிலையையும் உருவாக்கவல்ல தெய்வ சக்தியை உருவாக்கும் மனித பிம்ப ஞானத்தை வளர்க்கச் செயல் கொண்டன.

உருவாக்கும் உயர் சக்திக்கு, எண்ணத்தால் எடுக்கும் ஞானச் சுழற்சி ஜீவன்கள் தேவை. இப்பூமியின் சக்திக்கு, இவ் ஈர்ப்பு அலையின் சுழற்சியைச் சுழலச் செய்து, ஜீவ பிம்ப மனித ஞானத்தை வளர்க்க, சூரியனை மையப்படுத்தி, இந்நாற்பத்தி ஏழு மண்டலங் களில் இருந்து வெளிகக்கும் அலைத்தொடர்பைத் தானெடுத்து, பல பிரளய நிலைகள் மாற்றம் தந்து, இப்பூமியில் மனிதக் கரு ஞானத்தை வளர்த்தான் அச் சப்த ரிஷி.

சப்த ரிஷி மண்டலம் ஏழு என்றுணர்த்துகின்றார்கள் புராணத்தில். ரிஷி மண்டலத்தின் தொடர்பு நிலையென்ன? வாரம் ஏழு நாட்களும், ஜாதகத்தானுக்கு பன்னிரண்டு ராசிகளும் உணர்த்திய முறை எல்லாம் எதுவப்பா?

சனி அலையின், அம்மண்டலக்கோளானது, அது ஈர்த்து, வெளிக்கக்கும் அலையின் செயலில் திடம் கொண்டு உருவாகின்றன பன்னிரண்டு நட்சத்திரக் கோளங்கள். அதன் சுழற்சி ஈர்ப்பில், அக்கோளத்தைச் சுற்றி உருவாகும் நட்சத்திர ஈர்ப்பு மண்டலங்கள் பன்னிரண்டு உருவாகி, சூரியனின் மற்றக் கோளங்களும் ஓடும் சுழற்சி கதியில், வருட நிலைக்கொப்ப, அந்தந்த மண்டலங்களின் நேர்ப்பார்வை சுழற்சி சந்திப்பு தருணத்தில், சனியினால் வளர்ந்த நட்சத்திரமானது, சனியின் ஈர்ப்புப் பிடியுடன் சுழன்று வளரும் நிலையில், இம்மண்டலச் சந்திப்பு கூடும்பொழுது, சந்திக்கும் மண்டலத்தின் ஈர்ப்புப் பிடியில் சிக்கி, கரைந்துவிடுகின்றன, சனி வளர்த்த இப்பன்னிரண்டு நட்சத்திரங்களும்.

நம் பூமியின் ஈர்ப்பிற்கு, வருடத்தில் இரண்டு சந்திப்பு நிலை நேர்ப்பார்வையாய், சனியின் பார்வை படுவதினால் வடமேற்கு, தென்கிழக்கு பருவக் காற்றுகளும், இம் மழைக் காலங்களையும் உருவாக்கக் கூடிய வித்தை ஊன்றியவனே இச்சனிதான். இச் சனியின் நேர்ப்பார்வை சந்திப்பு பூமிக்கு இல்லையேல், கால நிலையில் பெய்யும் மழையில்லை.

அதே போன்று சனியினால் உருவாகும் இந்நட்சத்திரங்களின் ஈர்ப்பு வட்டமானது, இச் சுழற்சியில் ஈர்ப்பு மாறி நேர்க்கோட்டில் கரையக்கூடிய சந்திப்பு நிலையானது, பூமி சந்திக்கும் நிலை ஏற் பட்டால், பூமியில், இப்பருவக் காலங்களில் ஏற்படும் இயற்கை யின் சீற்றம் அதிகம் கொள்கின்றது. சனியினால் வளர்த்து, பூமி யின் ஈர்ப்பில் கரையும் நட்சத்திர மண்டலத்தின் விகிதத்தன்மை யின் மாற்றங்கள், மற்ற மண்டலங்களின் சந்திப்பு கால நிலைக் கொப்ப மாறுபடுகின்றது.

இதை வைத்துத்தான் ''சனியைப்போல் கொடுப்பாருமில்லை, கெடுப்பாருமில்லை'' என்றுணர்த்தினர்கள். வருடத்தில் இரண்டு தடவை சந்திக்கும் சனியின் நேர்ப் பார்வையில், சனி வளர்த்த நட்சத்திர மண்டலத்தின் சந்திப்பு நிலைக்கொப்ப, பூமியின் ஈர்ப்பில் கரையப்படும் நட்சத்திர மண்டலம் கரையும் அமில நிலையானது, பூமியின் ஈர்ப்பில் வரும் நிலைகொண்டுதான், பூமியின் இயற் கைக் கால நிலைகள் உள்ளன இன்று. இந்நிலையில் சப்த ரிஷிகளின் நிலையென்ன? பலகோடி நட்சத்திர மண்டலங்களுண்டு. வளர்ந்து கொண்டே, சுழன்று கொண்டே மிதந்து கொண்டேயுள்ள செய லில்தான் நாம் உள்ளோம். மிதப்பின் மிதப்பாய் உருளும் தன்மையில், உருவமாய் ஞானத்தை வளர்க்கும் மனிதக் கரு உரு நிலை வளர ரிஷிகளினால் வளர்க்கப்படும் வளர்நிலை, எந்நிலை கொண்டதாக உள்ளது இன்று?

உருவாகும் சக்திக்கே உருவகம் தந்தவர்கள் நம் சப்த ரிஷி தானப்பா. இம்மனிதக் கரு உரு ஞானத்தை வளர்க்க, அவர்கள் ஏற்படுத்திய வழிப்படுத்திச் செல்லும் செயலாய் தானப்பா இன்று நாம் வாழுகின்றோம். அவர்கள் ஓட்டிச் செல்லும் வாகனத்தில் அமர்ந்துள்ளவர்கள் நாம்.

சூரியனை ஜீவனாய் வைத்து, நாற்பத்தி ஏழு மண்டலங்களை அங்கங்களாய் வைத்து, உருவாக்கிய வாகனத்தில் அமர்ந்துள்ள ஜீவ சக்தியை ஓட்டிச் செல்பவர்கள் சப்த ரிஷிகள் தானப்பா. ஜீவ சக்தி உருவாகும் நிலை எப்படி?

மிதந்துகொண்டேயுள்ள, பல்சுவைகொண்ட நீரின் ஆவியானது, திடம்கொண்டு, கனமாகி, ஈர்ப்பின் சுழற்சியில் ஆரம்ப ஈர்ப்பு நிலைக்கொப்ப, மிதந்துகொண்டேயுள்ள நிலையிலிருந்து கனமாகி, உந்தித்தள்ளும் ஈர்ப்பின் எச்சுவையை ஆரம்பத்தில் ஈர்த்து, ஈர்ப்பிற்குச் சுழன்று, தங்க இடம் கொள்ளாது, ஆரம்ப ஈர்ப்புச் சுழற்சியின் எச்சுவை கொண்டு ஈர்த்து, கனம் கொண்டு, திடமாகி தங்க இடம் கொள்ளாமல், தன் சுழற்சியின் ஈர்ப்பில் சுழன்று வளர்ந்ததுதான் இன்று சூரியன், சந்திரன், வியாழன், புதன், சனி மற்றெல்லா வளர்ந்த மண்டலங்களும், இன்று நாம் காணும் நட்சத்திர மண்டலங்களும்.

**11–12–80**

அவை சுழன்று, வளர்ந்து, ஆவியாகி, குளிர்ந்து, மீண்டும் ஆவியாகி, அந்தந்த மண்டலங்கள் விடும் சுழற்சி, ஈர்ப்பு, வெக்கை உணர்வில், தன் வளர்ப்பின் வளர்ப்பிற்கு, தன் சுவை ஈர்ப்பின் வளர்ப்பை வளர்த்துக்கொண்டே, அவையவை எடுத்து, சமைத்துக் கக்கிய பல சுவைகொண்ட, பல மண்டலங்களின் தொடர்பு கொண்டு, பல அலையின், ஈர்ப்பின் தொடர் அலைச்சேர்க்கை, சுவை, அமில குண ஈர்ப்பு நிலை ஏற்பட்ட பிறகுதான், வளர்ந்த பூமியின், சூரிய குடும்பத்தின் மண்டலங்கள் வளர்ந்து அவை எடுத்த, அவற்றின் சுவை குண சமைப்பு அமிலத் தொடரினால் பலப்பல வளர் மாற்றத்தின், கூட்டுக்கலவையின், சமைத்த சத்துத்தன்மையின் சக்தி குணம் இப்பூமியில் படர்ந்து, தாவர இன வளர்ச்சியான, ஜீவ சக்தி வளரக் கூடிய, காற்றமில வளர்ச்சி, உற்பத்தி வளர்ப்பு நிலைகொண்ட பிறகுதான், இக் காற்றான ஆவி குணத்தின் ஜீவ சக்தி வளரக்கூடிய தன்மை வளர்ந்து, பலவில் பலவாகி, ஜீவ வளர்ச்சியின் பலப்பல மாற்ற சுழற்சி ஈர்ப்பின் சுழல் வட்டத்தில் மோதுண்டு மோதுண்டு ஒவ்வொரு ஈர்ப்பு மாற்றத்திலும், எவ் ஈர்ப்பில் எல்லாம் வளர்ந்து வளர்ந்து மாற்றம் கொண்ட தருவாயில், ஒவ்வொரு இன மாற்றத்தின் சக்தியும், ஆரம்ப ஈர்ப்பு உயிரணுத்தோன்றி, பலவாக பல மண்டலத்தின் ஈர்ப்பு சுவை வளர்ந்த பூமி மண்டலத்தின், மனித கரு, ஜீவ பிம்பம் உருவாவதற்குள், அதன் சேமிப்பு வட்டச்சுழற்சியின் மாற்றத்தில் ஒவ்வொரு வளர்ச்சியிலும் உயிரணுவின் உணர்வு கூட்டிக்கொண்ட பல சுவை அமில வார்ப்புடன் வார்ப்பாகி ஜீவ பிம்ப நிலை கொள்கின்றது.

இஜ் ஜீவ பிம்பத்தில், இன்று சுவைக்கும் நிலையும், செயலாற்றக் கூடிய அங்க அவயவங்களும், ஒலி ஈர்த்துச் சொல்லாற்றும்

திறமையும், பல வார்ப்பில் மாறி மாறி, ஒவ்வொரு நிலை கொண்டு மோதுண்ட சுழற்சி வழித்தொடரில், ஒலி, ஒளியாகி, ஒளி ஒலியாகி வழித்தொடர்கொண்டு, உயர் சக்தி நிலை பூண்டு, மனித பிம்ப கரு ஞானம் கூடியது.

சூரியனைச் சேர்த்து நாற்பத்தி எட்டு மண்டலங்களும் ஒன்றாக இயங்கி, தன் வளர்ப்பின் வளர்ப்பாய் பல நட்சத்திரங்களை வளர்த்து, செயலாகும் சக்தியில் உருவான உரு நிலை தந்த மனித ஞான பிம்பம் வளர்ந்ததப்பா.

மண்டல ஈர்ப்பின், சுழற்சி கதியின் நேர்பார்வையில், செயல்வழியில், இயற்கைத் தன்மையில், சுழலும் சக்தியையே சப்தரிஷிகளின் நிலையினால், இம்மண்டல சந்திப்பு நிலைதனை திசை திருப்பும் நிலைதனை ஏற்படுத்துகின்றனர். இப்பூமியின் மனிதனைக் காட்டிலும் ஞான சக்தியில் வளர்ந்த மனிதக் கரு உருவ நிலை, இந் நாற்பத்தி எட்டு மண்டலங்களில் இல்லா நிலை மற்ற சூரிய குடும்ப மண்டலங்களில் உண்டு.

இப்பேரண்டப் பெரு நிலையின் வார்ப்பு, செயல் எவையென்று அறியமுடியும்?

உயிரணுத்தோன்றி, ஈர்ப்பு நிலையில் சிக்குண்ட செயல் வழிக்கு, முடிவில்லா உருமாற்ற நிலை வளர்ப்புச் சுழற்சியின் முடிவே இல்லை. வளர்ப்பின் வளர் நிலையை உயர் வளர்ப்பின் வளர்ப்பாக்கி, உன்னத வளர்ப்புகளை வளர்க்க ஆரம்ப உயிரணு தான் வித்தப்பா.

இம்மனித பிம்ப உடல் சேமித்த, பதம் கொண்ட, பக்குவ நிலைதானப்பா, வளர்ப்பின் வளர்ப்பை வளர்க்கும் நிலை. இதை உணர்ந்து, உயர் ஞான அலையின் வழிச் சென்றோமானால், உரு வாகும் உருவ சக்திக்கே உருவம் தரலாம்.

**17–12–80**

அணுத்தோன்றி, அணுவளர்ப்பின், வளர்தொடர் வளர்ப்பு அணுக்கள்தான், தொடர் அணு வளர்ச்சி நிலை. அணுவுக்குள் அணுவாய், உணர்வின் உணர்வலைகளை ஊன்றி, உயர் உணர்வின் ஞானத்தில் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அணுவுக்குள் அணு வளர்க்கும் வளர்தன்மை எத்தகையது? அணு வளர்ப்பின் இயற்கை குணம், ஜீவ சக்தியுடன் எப்படி

மாற்றம் கொள்கின்றது? இயற்கை வளர்ப்பில் வளர்ந்த கனிகளில், சாதாரணமாய் வாழைப்பழத்தின் பழுத்த நிலைக்குப் பிறகு, அக் கனியை பூமியின் ஈர்ப்பில் உள்ளபொழுது, அக் கனியானது அழுகிய தருவாயில், பூமியின் வெக்கை அதன் மேல் பட்டு, பூமி மீண்டும் ஈர்த்து, அக்கனியின் சுவை அமிலமுடன், இவ்வுஷ்ண அலை ஈர்ப்புப்பட்டு வெளி வரும்பொழுது, அதன் அழுகிய தன்மையில் உயிரணுக்கள் தோன்றுகின்றன.

தோன்றிய உயிரணுக்கள் எவ் அமிலத்தில், எச்சுவை கொண்டு அவ்வணு தோன்றியதோ, அதன் தொடர்பு கொண்ட அணு வளர்ச்சி, உருவத் தொடர்கள் (புழுக்கள்) வளர்கின்றன. இதன் நிலை உணர்த்துவதின் வழி எதற்கு என்றால், மனித பிம்ப உடலுடன், இப்பூமியின் ஈர்ப்புப் பிடியில் வாழும் நாம், இப்பிம்பக் கூட்டின், சுவாச அலையில் எப்படி வாழைக்கனியிலிருந்து அதன் வெக்கையில் பட்ட உயிரணு தோன்றியதோ, அதைப்போன்று தான் ஒவ்வொரு ஜீவ சக்தியிலும், உணர்வின் சுவாசம் எடுக்கும் நிலையில் ஏற்படும் வெக்கை உயிரணுக்கள்தான் உடல் பிம்பக் கூட்டிலும் வளர்கின்றது. எடுத்து வெளிவிடும் சுவாசத்திலும் அதன் தொடர்பு கொண்ட அணுக்களின் வளர்சக்திதான் வளர்கின்றது.

ஒவ்வொரு ஜீவ சக்தியின் தொடர்பிலும், அணுவுக்குள் அணு வளரும் தன்மையில், அந்தந்த இனக் கலவை உயிரணுக்கள் வளர்வதுடன், பிறிதொரு அமில உயிரணுக்களின் செயல் எப்படிக் கூடுகின்றது? மனிதனின் உணர்வுத் தன்மையில், அவன் உடலில் வளரும் புழுக்களும், தலையில் வரும் பேன்களும் எப்படி ஏற்படுகின்றன?

அமைதியுடன், ஆரோக்கியமான, சந்தோஷ வாழ்க்கையில் உள்ள மனிதனுக்கில்லா நிலை, சலிப்பு, சோர்வு, சங்கடம் போன்ற வறுமையில் வாழும், இன்னல்படும் ஆத்மாக்களின் உணர்வில், அவர்கள் எடுக்கும் இச்சுவாசஅலையின் வெக்கையானது, ரோமக் கால்களில் வெளிப்படும் அமிலக் கசிவில், உடல் வெக்கையின், உஷ்ண அலையின் விகிதத்தைக் கொண்டு, இச் சஞ்சலமான நிலையில் உள்ளவர்களின் தலைகளில் இப் பேன் வளரும்.

உடல் உறுப்புக்களில் இவ் உணர்வின் கசிவில் வெளியில் உள்ள தூசிகளோ, சில அழுக்குகளோ படும்பொழுது, இவ்வுடலில் ஏற்படும் வெக்கையின் தன்மை கொண்டு, இக் காற்றலையிலுள்ள சில உயிரணுக்களுக்கு உடல் வெக்கையினால் வெளிப்படும் வியர்வையின் அமிலத்தின் மேல் அவ்வுயிரணுப்

பட்டு, அவற்றின் வளர்ப்பாய் அணுவுக்குள் அணு வளர்ந்து, அவை பெருகி ஏற்படுவதுதான் உடல் உறுப்புகளில் ஏற்படும் சில கட்டிகளும், புண்களும்.

அவற்றின் கசிவு வளர்ப்பு அணுக்களினுல் படரும் தொடர் நிலையை, அவற்றை அழிக்கக் கூடிய சக்திகொண்ட சில மருந்து களால், வைத்தியத்தில் மாற்றுகின்ருர்கள்.

அணுவுக்குள் அணு வளரும் தன்மையில், இன்று விஞ்ஞான ரீதியில், தாவரங்களேயும், மிருக இனங்களேயும் சில கலப்புகளேச் சேர்த்து மாற்றி அமைக்கின்ருர்கள். நாய், நரி இவற்றை மாற்றி ய்தைப்போல், மனிதனுக்குச் சேவை செய்ய கொரில்லாக்கள் போன்ற இன விருத்தியை, குரங்கின் இனத்துடன் மனித அமி லத்தைச் சேர்த்து வளர்த்த மனிதர்களே, இன்று அவை வளரா வண்ணம் தடுத்தும் விட்டனர்.

இதை உணர்த்தும் முறை எதற்கென்ருல், இவ்வுடல் பிம்ப உணர்வு அமிலக் கூட்டில், பலகோடி ஆண்டுகளாய் அணுவுக் குள் அணுத்தோன்றி, உரு மாறி மாறி ஒவ்வொன்றின் உருவச் சேமிப்பின் முலாமுடன் இன்று வளர வழித்தொடர் கொண்டு, வாழ்ந்துள்ள நாம் எச்சக்தியும் செயாலக்கக் கூடிய எண்ண ஆற்ற லின் ஞான வளர்ச்சி கொண்ட மனித உணர்வின் சேமிப்பிற்கு, இவ்வெண்ணத்தால் எடுக்கும் உணர்வலேயின் சுவாசத்தால், இவ்வுடல் அமிலத்தில் ஏற்கெனவே உரு மாறி மாறி, ஒவ்வொரு தொடர்பிலும் சேமித்த அமிலக் கூட்டில், நற்சக்தியுடன் கூடி வந்த தீய குண அமிலத்தையும் மனிதன் எடுக்கும் உணர்வின் எண்ணம் கொண்டு, எச்சக்தியாகவும் ஆக முடியும். தொடர் நாளே.

**18–12–80**

பாலில் சேர்க்கப்படும் பொருளேக்கொண்டு அதன் சுவையும், மணமும், நிறமும் எப்படி மாறுகின்றதோ, அதைப்போன்று தான், இப்பிம்ப உடலில் சேர்க்கப்படும் உணர்வின் எண்ண, சுவாச அமிலத்தால் பிம்பக் கூட்டின் உருவ நிலேயும், குண நிலேயும் சொல் வடிவமும் அமைகின்றதப்பா.

நல்லுணர்வு சுவாச முறையால், நாம் எடுக்கும் ஜெபசக்தி காந்த மின் அலே சுவாசத்தால், உடல் பிம்பக் கூட்டிலுள்ள ஒவ் வொரு அணுக்களேயும், சக்தி வாய்ந்த ஒளியில் வளப்படுத்த முடியும். இவ்வுடல் பிம்ப ஜீவக் கூட்டிலிருந்துதான், ஜீவ

சக்தியுடன் கூடிய இவ் அலே ஈர்ப்பின் குணத்தின் சக்திகொண்டு, சகல சக்தியையும் அறியவல்ல ஆற்றலும், செயல் முறையும் என்றுமே அழியா வண்ணம், பல படைப்பைப் படைக்கவல்ல படைப்பின் சக்தி இப்பிம்பக் கூட்டிற்கு உண்டு.

இப்பிம்பக் கூட்டில் எடுக்கும் இச் சக்தியினுல், எச்சக்தியையும் அடையலாம் என்று உணர்த்துகின்றீரே, அப்படியானுல் நீரிலும் நெருப்பிலும் குதிக்க முடியுமா? என்ற வினு எழும்பலாம்.

கடும் உஷ்ண அலேயைக் கக்கும் நெருப்புக் குண்டத்தில், இஜ் ஜீவ பிம்ப உடலுடன் அமர்ந்திருக்க முடியுமா? என்ருல் முடியுமப்பா. தானெடுக்கும் உயர் சக்தி அலேயின் ஒளியுடன் ஒளியாகும் ஒளி சக்தி பெற்ருல், தணல் விட்டு எரியும் நெருப்பில் அமர்ந்தாலும், இவ்வுடல் பிம்ப ஈர்ப்பு சக்தியிலிருந்து வெளிப் படுத்தும் ஒளி அலேயைப் பாய்ச்சினுல், அந் நெருப்புக் கோளம் தான் அணேயுமே தவிர, இப்பிம்ப உடலேப் பாதிக்காது.

இயற்கையின் சீற்றமுடன் விளேயாடுவதற்கல்ல உயர் ஞான சக்தி. உள்ள சக்தியை உணர்த்திஞேம். ஆழ் கடலாய் இருந்தாலும், பூகம்ப சூருவளியாய் இருந்தாலும், ஒலியின் சக்தியுடன் ஒளிரும் சக்திக்கே எவ் இயற்கையின் சீற்றத்திலிருந்தும் பிம்ப உடலேயும் தப்ப வைக்க முடியும்.

திராவகத்தில் போடப்படும் மற்ற உலோகங்கள் கரைந்தாலும் தங்கத்தின் குணம் எப்படிக் கரைவதில்லேயோ, அதைப் போன்று இவ்வுணர்வால் எடுக்கும் எண்ண சுவாசத்தால், ஒலி கொண்டு ஒளி பெற்ருேமானுல் உயர் ஞான சக்தியை வழி கொண்ட எச்சக்தியாகவும் நாம் ஆக முடியும்.

ஜீவ சக்தியைக்கொண்டு வளர்த்த சக்தியின் தாதுப்பொருட் களில், பிரிந்த சக்தியாய் திராவக சக்தியிலிருந்து ஒன்றைக் கொண்டு பலவாக பெட்ரோலியப் பொருட்களே எப்படி எப்படிப் பிரித்து, பல சாதனேகளேப் புரிகின்ருேமோ, அதைப்போன்று, இவ் வுணர்வின் சுவாசத்தால் எடுக்கும் இஜ் ஜீவ சக்தியைக்கொண்டு, இப்பேரண்ட பெரு நிலேயின் வளரத்தக்க முறைதனேயும், ஒவ் வொரு மண்டலங்களிலிருந்தும் ஒன்றின் தொடர்கொண்டு ஒன் ருென்று உருவாகும் முறைதனேயும், அணுவுக்குள் அணுவாய் ஊன்றி, அணுசெயல் தொடர்பனேத்தையும், ஒலியையும், ஒளிக் காட்சிகளேயும், மணத்தையும், சுவை குணத்தையும் அவை மாறும் சேர்க்கை வடிவையும், இவ்வெண்ணத்தைச் செலுத்தி எடுக்கும் சுவாசத்தால் முடியும்.

இந்நிலையெல்லாம் பெறுவதற்கு மனித உணர்வில் ஊன்று கோலாய் நிலைத்துள்ள மரண பயம் என்ற இவ்வித்தை அகற்ற வேண்டும்.

**21–12–80**

இம்மரண பயம் என்ற உணர்வு மனிதனுக்கு மட்டுமல்ல, ஜீவ பிம்பம் அனைத்திற்குமே உண்டு. பிறப்பில் தாயெடுக்கும் சுவாச உணர்வின் அலைத்தொடரில் பிறந்த குழந்தைக்கும் ஏன் கருவில் உள்ள குழந்தைக்குமே, மரண பயம் என்ற அச்ச உணர்வு உண்டு.

பிறந்த குழந்தைக்கு, அதன் உணர்வுடன் அக்குழந்தையின் உடலில் கடிக்கும் கொசுவின் வலி ஏற்பட்டாலும், உலுக்கும் தன்மைகொண்டு, உலுக்கி விழுந்து சில குழந்தைகள் வீர் என்று அழவும் செய்யும். அதிர்வு நிலை ஏற்பட்டவுடன், இக் குழந்தைகள் அழும். கருவிலேயே மரண பயம் என்ற அச்ச உணர்வுடன்தான், உருவாகும் கரு, வளர் நிலை கூடி வருவதினால், இவ்வுணர்வின் அச்சம் மாறி, மரண பயத்தை எப்படி விட முடியும்? என்ற வினா எழும்பலாம்.

மரண பயம் என்ற உணர்வின் பிடியில் வாழ்க்கை உள்ளதினால்தான், மனித வாழ்க்கையில் சோர்வும், இன்னலும், கலகங்களும், கோபத்தன்மையும், பொறாமை உணர்வும், போட்டி நிலைகளும், பேராசை நிலையும், புகழ் நிலையும் ஏற்படுகின்றன. இறவா வரம் பெற வேண்டும் இறைவா, இறை சக்தி இறைஞ்சி, இன்னமுதுடன் இனிதிசை கொண்ட இல்லற இன்ப இல்வாழ்க்கை இனிய வழித்தொடர் ஈன்றெடுக்கும் இறைசெல்வ மக்களுடன் இயற்கை வழி, இனிய ஒளி இன்பம் பெற இறவா வரம் பெறும் இறைஞானம் நிலையுடன்தான், வாழ்க்கை நிறைவு செல்வது இறவாவரம் பெறும் நிலை.

இவ்வுணர்வில் சேமிக்கும், உணர்வின் எண்ணத்தில் கூடும் அமிலச் சாற்றில், இம்மரண பயம் என்ற உணர்வுடன் வளரும் பருவக் காலமும், வளர்ந்த வாழ்க்கைக் காலமும், மனிதனின் உணர்வில் இவ் அச்ச உணர்வினால்தான் இப்பேராசை, புகழ், போட்டி, பொறாமை எல்லாமே. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்ற பயத்தை ஊட்டி இறவா வரம் என்ற இயற்கை உணர்வுடன் நாம் ஒன்றிச்சென்றால், இல்லறம் இன்பம் கொள்ளுமா? இயற்கை வாழ்க்கையும் நமக்குக் கூடுமா?

நாளை நாளை என்ற உணர்வும் மனிதனுக்கு உழன்றுகொண்டே உள்ளது. இயற்கையின் படைப்பில் பல தாவர உணவுகளும், நீரும், காற்றும், ஒளியும் செல்வமாய் வளர்ந்து, செயலாற்றும் திறமையும், சொல்லாற்றும் வன்மையும், எங்கும் சென்று எதனை யும் செயலாற்றக் கூடிய நிலையில் தாவரங்களைப் போன்றும், கனிவளங்களைப் போன்றும், பூமியின் ஈர்ப்புப் பிடியுடன் வளரா மல், நடந்தோடும் செயலைக் கொண்ட ஜீவ பிம்ப மனிதனுக்கு, இன்றைய நாகரிகச் சுழற்சிப் பிடிப்பு வாழ்க்கையில், தன் ஜீவ னுக்குப் பிறகு சேமிக்கும் பேராசை பொருள் செல்வ செயலி னுல்தான், இன்றைய ஜீவ சக்திகளின் மரண பய உணர்வு, ஒவ் வொரு நொடிக்கும் தன் உணர்வில் இன்று உண்ணும், உடுக்கும், வசிக்கும் வாழ்க்கைப் பிடியின் உணர்வாசைக்கு மேல், தேவைக்கு மேல் அடையும் பேராசை குணத்தினுல்தான், தன் வாழ்க்கை யையே மரண பயத்திற்கு அடகு வைத்து, அதிலிருந்து இஜ் ஜீவ பிம்ப உடலை மீட்டத் தெரியா அச்ச உணர்வில் இருக்கும் வரை உண்ணும் உணவையும், உணரும் காம இச்சையின் இன்பத்திலும், செயற்கை வாழ்க்கை முறையிலும் தான் இன்பம் உள்ளது. இதன் தொடர் நிலை நீடிக்கவும், இதற்கு வேண்டிய பொருளை ஈட்டவும், அதில் ஏற்படும் தவறுக்காக, ஒன்றை மறைக்கப் பிறிதொரு தவறு நிலைக்குச் சென்று, இப்பொருள் என்ற சேர்க்கை இருந்தால் எவ் இன்பத்தையும் அடையலாம். எச் செயலையும் செய்யக்கூடிய ஆற்றல் கொண்ட வல்லுனரையும், இப்பொருளீட்டிய வித்த கனுல் (ஊதியம் தந்து சேவகத்தால்) முடியும் என்ற குணமுட னும், முன்னேறிய இன்றைய அரசியல் ரீதியிலும், பொருள் என்ற பிடியில், புகழ் என்ற இன்பம் காண உயர்ந்த, ஞான சக்திகொண்ட ஞான வித்தகர்களின் ஞான போதனையே, இவ் ஆயிரம் ஆண்டு காலத்தில் அற்று, ஒவ்வொரு மனிதனும் தன் ஜீவ சக்திக்குகந்த தேவையின் செயல்கொண்டு வாழாமல், நாளை என் செய்வோம் உடல் நிலை குன்றிவிட்டால், செய்யும் தொழில் நசித்துவிட்டால், இன்று வாழும் சுக வாழ்க்கையின் வழிக்கு என்றுமே இன்று சேமிக்கும் பொருளினுல்தான் பேராசைப்பிடி யில், மரண பயம் என்ற அச்ச உணர்வுடன், பக்தி என்ற முறை யில் ஆண்டவனை வணங்குவதிலிருந்தும், எதிர்கால சேமிப்புப் பொருளின் சேர்க்கையிலிருந்தும் மரண பயத்தை தன்னுள் ஏற்றிக் கொண்டுள்ள மனிதனுக்கு, எப்படியப்பா இம் மரண பயத்தை விட்டு, ஞான வளர்ச்சியை வளர்த்து, தெய்வ சக்தியையே எடுக்க வல்ல உயர் குண, செயல் சக்திகொண்ட மனிதன் இவ்வுணர் வின் பிடியில், இம் மரண பயம் என்ற அச்சத்துடன் வாழ்ந்து, எச்சக்தியையப்பா பெற முடியும்?

விஞ்ஞானத்தில் பல செயல்களை ஆராயும் மனிதர்களெல்லாம், பலர் ஏன் தற்கொலை என்ற தன்னை மாய்த்துக்கொள்ளும் முடிவிற்குச் செல்கின்றார்கள்? இறவா வரம் பெறும் இனிய சக்திகொண்ட ஞானிகள், தன் உடலைப் பாதுகாக்க, இவ் வாழ்க்கையில் உள்ள பொழுதே, உடல் என்ற கூட்டின் முதுமை உணர்ந்து, இறவா சக்தி கொண்ட நிலையில், உடலை சமாதி நிலைப்படுத்திக் கொள்ளுகின்றனர். அவர்களுக்கு இவ்வுணர்வில் மரண பயம் என்ற அச்ச உணர்வு இருப்பதில்லை. இதன் நிலை எப்படி?

**24–12–80**

ஒலிகொண்டுதான் ஒளிகொண்டு உருவான உணர்வு சக்தியில், இவ் ஒலியின் உணர்வில்தான், உழல்கின்றது உலகச் சுழற்சியும் ஜீவ சக்தியும், உயிர் அணுத்துடிப்புகள் யாவும். இவ் ஒலி ஈர்ப்பின் தாக்குதலுக்குகந்த, உணர்வின் சுழற்சி ஈர்ப்புப் பிடியில் பிடிபட்டுள்ள வளர்ச்சிதான் ஒவ்வொரு வளர்ச்சியுமே.

இனிமையான இசைக்கு இவ் உணர்வின் எண்ண ஈர்ப்பு செல்லும்பொழுது இனிமையின் நாத ஒலி, ஜீவ சக்தி ஒவ்வொன்றின் அலையிலும் மோதுண்டு, அதன் தொடர்பு கொண்ட வளர்ப்புச் சக்தி ஒவ்வொன்றிலும் கூடுகின்றது. அதிர்வு, இடி, மின்னல், காட்டாற்று வெள்ளப்பெருக்கின் வேக ஒலி இந்நிலை மோதும் பொழுது, இவ்வுடலே அவ்வுடலின் அச்ச உணர்வுடன் செல்லுவது போன்ற உணர்வின் பயம் ஏற்படுகின்றது.

அறிவியல் அமைதியாக சலசலப்புடன் அந்நீரின் ஒலி மோதலைக் கேட்கும் பொழுது, அவ் இனிமையுடன் கூடி நம் உணர்வின் எண்ணமும் மயங்குகின்றது. மாலை நேர பட்சிகளின் அமைதியான ஒலி, நம் உணர்வின் இனிமை உணர்வைக் கூட்டுகின்றது. ஒலியின் ஈர்ப்பு எந்நிலைகொண்டு, கால நிலையில், உணர்வின் மோதலில் மோதுகின்றதோ, அதற்குகந்த வளர்ச்சி மனித உடலின் உணர்விற்கும், ஜீவராசிகள், தாவரங்கள், கனிவளங்கள் ஒவ்வொன்றின் வளர்ச்சிக்குமே இவ் ஒலியுடன் ஒலி கூடும் ஒலித் தன்மைகொண்டு வளர்ப்பு நிலை கூடுகின்றது.

இவ் ஒலியின் செயற்கை அதிர்வில், சுற்றுப்புற தாவர இன வளர்ச்சிக்கும், நகரப்புறத்தைத் தாண்டி வளரும் தாவரங்களின் வளர்ச்சிக்கும், மாறுகொண்ட வளர்ப்பு விகித நிலை இருக்கும்.

இவ் ஒலி உணர்வில் சேமிக்கும் அச்ச உணர்வின் ஈர்ப்பே, மனித உணர்வில் ஒவ்வொரு நொடிக்கும், இம்மரண பயம் என்ற பிடி ஈர்ப்பில் சிக்குண்டு வாழும் தன்மை, இன்றைய நாகரிக செயற் கைப்பிடி வாழ்க்கையில் உள்ளது.

இயற்கைச் சுழற்சியில் இயற்கையிலிருந்து மாறுபட்டு, இப் பேராசைப் பிடியில், நாகரிகச் செயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கை யில், ஒவ்வொரு நொடியையும், இம்மரண பயம் என்ற பிடியுடன் சிக்கித்தான் இன்று வாழும் நிலை உள்ளது. ஜீவ சக்தி அனைத் திற்குமே.

உருவத்தில் பெருத்த யானை, உணர்வில் இம்மரண அச்சத்தை வளர்த்துக்கொண்டு, தன் இரு செவியையும் செவிக்குள் எவ் எறும்பும், பூச்சிகளும், ஏறு வண்ணம், தன்னைத்தானே, செவியை விசிறிக்கொண்டே காத்து வாழுகின்றது. இவ் எறும்பின் ஊர்தல் அதன் செவி மட்டத்தில் உள்ள ஜவ்வில் பட்ட வுடன் ஏற்படும் இரைச்சல், அவ் யானையின் உணர்விற்கு மரண பயத்தின் அச்சத்தை ஏற்படுத்தி, அவ் எறும்பின் ஊர்தல் செவிக் குள் பாய்ந்தவுடன், தன்னை அறியாமல் வெறிகொண்டு, மிகவும் பதட்டம் ஏற்பட்டு, அவ்வுணர்வின் பிடியிலேயே சிக்குண்டு மாய் கின்றது. இன்னும் சில யானைகள் அவ்வுணர்வில் மதம் பிடித்துக் கொள்கின்றது.

இவ்வுணர்வால் எடுக்கும் அச்சத்தால் விளையும் பயம்தான் இம்மரண பய உணர்வு. எண்ணத்தால் இவ்வுணர்வின் பிடியை மாற்றிக்கொண்டு, உயர் ஞான வழி ஈர்ப்பு வளர்ச்சிக்கு எண்ணம் செல்லும் வாழ்க்கை இருந்தால், இப்பிம்ப உடலில் ஏற்படும் அச்ச உணர்வின் நிலை மாறும்.

எச்சக்திக்கும் சக்தி பெற இவ்வுடல் பிம்பம் தேவை. ஆனால், இவ்வுடல் பிம்ப உணர்வில் ஏற்படும் மாற்றங்களும், நலிவுத் தன்மையும், இவ்வுடல் பிம்பத்தைப் பேணி வளர்க்கும் ஈர்ப்பலையும் இவ்வுடல் பிம்பத்தின் சுகம் காணும் ஆரோக்கிய வாழ்க்கையின் ஆவல் உணர்வும், பிம்ப உடலின், அழகின் ஆசையிலும், இவ் வுணர்வின் ஈர்ப்பை எண்ணம் செலுத்தி வாழும் வாழ்க்கையைக் காட்டிலும், உணர்வின் எண்ணம், குணத்தின் ஈர்ப்பில் செல்லும் உணர்வால், இப்பிம்ப உணர்வும், ஆரோக்கிய அழகும் தானாக வளரும்.

'அகத்தின் அழகு முகத்தில் காணலாம்' என்பதின் பொருளும் இதுவே. மரண பயம் என்ற அச்சத்தை விட்டு, இவ்வுடல் கூட்டின் அழகு, ஆரோக்கியம் இவற்றைப் பேணிக்காக்கும் உணர்வு

ஈர்ப்பை விட்டு, நல்ல குண ஞான வளர்ச்சி வாழ்க்கையுடன் நாம் வாழ்ந்தால், அமைதிகொண்ட வாழ்க்கையும், ஆரோக்கிய உடல் நிலையும், வாழ்க்கையில் செய்யப்படும் தொழில் நேர்மையும் அதற்குகந்த வருவாயும் இன்பமுடன் நமக்குக் கிட்டும்.

உணர்வின் சுழற்சி இந்நிலையில் சுழன்றால்தான், வளர்ச்சியின் ஆத்ம சொத்தை வளர்க்க முடியும். ஈர்ப்பின் பிடியால் நம் உணர்வுடன் ஏறும் சில நிலைகளை இனி வரும் பாடத்தில் உணர்த்துகின்றேன்.

**2–1–1981**

காற்றலையில், புவிஈர்ப்பின் பிடியில் வாழும் நம் உணர்வில், உணர்வில் உந்தப்படும் எண்ணத்தின், உணர்வின் செயலைக்கொண்டு உடல் சேர்க்கை அமிலக்கூடு வளர்வதோடு மட்டுமல்லாமல், இக்காற்றுடன், இப்புவி ஈர்ப்பில் பலவற்றில் பல வாய் பல எண்ணங்கள் சுழற்சிகொண்டு வாழ்ந்து, அவற்றின் வளர்ச்சி உயிரணுக்களின் ஜீவ சக்தியான சில உயிரினங்கள் எறும்பு, கொசு, தேள், பாம்பு, மூட்டை இவற்றைப் போன்ற கடியினுல் விஷம்கொண்டு, இவ்வுடல் ஈர்ப்பில் அவற்றின் உணர்வலையின் எண்ணச் செயலையும், நம்மை அவை கடிக்கும் பொழுது அவை சேமித்த விஷ நிலைகொண்ட அமில உணர்வானது அதன் கடி உணர்வை நாம் அறியும்பொழுது அதன் ஈர்ப்பு குண அமிலம் முழுவதையும், நம் உடல் பிம்ப உணர்வலையின் அமிலத்துடன் எடுத்துக்கொள்கின்றோம்.

வாழ்க்கையில் சில ஜீவராசிகளான இப்பூச்சிகள் கடிக்காமல் இருக்குமா? இவற்றின் ஈர்ப்பலையின், உணர்வின் அச்சம் நம் எண்ணமுடன் மோதும்பொழுது அதனுடைய விஷம் நம் உடலில் ஏறிக் கடிக்கும்பொழுதும், நசுக்கும்பொழுதும் அதற்கு ஏற்படும் மரண பயமும் நம் உடல் பிம்பத்திலும் ஏறி விடுகின்றது.

எவ்வமில குண ஜெந்துவின் கடிபட்டதோ, அதனுடைய உணர்வையும் நாம் பெற்று, இவ்வுடல் பிம்ப சேர்க்கையில் அவை வளர்த்துச் செயல் கொண்ட அவற்றின் விஷ உணர்வின் தீய அமிலம் இவ்வுடல் அமிலத்துடன் சேரும்பொழுது, உணர்வால் உந்தப்படும் எண்ணமும், எவ்வமிலத்தைச் சேர்த்து உணர்வு கொண்டதோ அதனுடைய வழித்தொடர் கொண்ட எண்ண குணத்தை இவ்வுடலைக் கடிக்கும் சில ஜெந்துக்களின் நிலையை நாம் அடைகின்றோம்.

இதிலிருந்து தப்பும் முறை எப்படி? ஒவ்வொரு மனிதனுக்கும் எதிரி யார்? ஞானத்தை வளர்க்கவிடாமல் இருப்பதுவும், எல்லா நிலேகளுக்கும் தடைகள் ஏற்படுத்தும் எதிரி யார்? இதே மனிதனுக்கு நற்குண வழிக்குச் செல்ல வழிகாட்டும் நண்பன் யார்?

அன்பான எதிர் அலேயின் உணர்வை அடையவல்ல சக்தி நண்பன் யார்? எதிரியான நிலே ஏற்படுத்துவதும் இவ்வுடல் பிம்பக் கூடு தான். நற்சக்தியின் ஞான அலே பெறவல்ல தன்மையைச் செயல்படுத்தவல்ல நண்பனும் இக்கூடுதான். ஆக, இக்கூடான உடல் இவ்வுணர்வான எண்ணச் செயலினுல் செயல்படுத்தவல்ல தீய குணத்தின் எண்ணத்தை மேற்கொள்ளும் பொழுது, தீய சக்தியின் எதிர் அலேயான எதிர்ப்பு நிலேயை ஏற்படுத்துவதும், இவ்வுடல் பிம்ப வீட்டினுள் வாழும் உணர்வின் எண்ணச் செயல் தான்.

நல்ல வழிக்கு வழி நடத்திச் செல்வதுவும் இவ்வுணர்வின் எண்ண சக்திகொண்ட நல் அலேயின் சக்தியினுல்தான். இவ்வுணர்வில் எடுக்கும் எண்ணத்தின் செயல் எத்தன்மைகொண்டுள்ளதோ, அத்தன்மைகொண்ட ஒவ்வொரு மனிதனேயும் நிலேக்கு உட்படுத்துவது இவ்வுடல் பிம்பக் கூடுதான்.

விஞ்ஞானிகளும், பல மருத்துவர்களும் தற்கொலேயின் செயலில் ஈடுபடுவதுவும், அவற்றின் வளர்ப்புத்தன்மையும் எப்படி ஏற்படுகின்றது? மருத்துவர்களின் உணர்வில், அவர்கள் சக்திக்கும் ஆத்மாக்களின் உணர்வின் எண்ணத்தின் வியாதியான மரண பயம் கலந்த வழிமுறை கொண்டவர்களின் எண்ணத் தொடர்புடனே, இவர்களின் வாழ்நாள் செல்வதினுல், அவ்வச்ச உணர்வின் பிடிக்கு இவர்களின் உணர்வலேயும் செல்வதினுல், இதே சுழற்சி வட்டத்தால் இவர்கள் உணர்வுடன் இம்மரணபயம் உந்தப்பட்டு, இவர்களின் உணர்வின் எண்ணமே இம்மரண பய ஈர்ப்புப் பிடியில் சிக்குண்ட நிலேயில் பலரின் செயல் இதே உணர்வுடன் செயல் கொள்கிறது.

**18–1–81**

உணர்வால் உந்தப்படும் அச்சமுடன் கூடிய எண்ணத்தால், ஒவ்வொரு நொடிப்பொழுதும் எடுக்கும் சுவாச முறைகொண்டு, வாழ்க்கை நெறி வழியிலும், குடும்பச் சுழற்சி செயலிலும், பந்த பாச சுற்றத்தாரின் உணர்வுடன், இவ்வுணர்வின் எண்ணத்தையே வெளிப்படுத்தினுல், வைத்தியனுல் பலரின் உணர்வு எண்ணமுடன்

கலந்து, அவர்களின் வியாதிக்கு இவர் எண்ணத்தைச் செலுத்திச் செலுத்தி, அதனுடன் கூடிய சுவாசத்தை எடுப்பதினுல், இவ் வைத்தியனுடைய உணர்வே அவ் ஈர்ப்பின் பிடியில் சிக்குண்டு, அவ்வலைத்தொடர் எண்ணம்கொண்ட செயலுடன் ஒன்றுவதாம். இவ்வைத்தியர்களில் பெரும்பாலோரின் வாழ்க்கை நிலை, அமைதி கொண்ட இன்ப இல்லற, குடும்ப வாழ்க்கை அமையாமல், அவர் களின் வாழ்க்கையே அமைதியற்ற, தற்கொலைக்கு தன்னை ஆட் படுத்திக்கொள்ளக்கூடிய சுழற்சியுடன் ஊன்றிவிடுகின்றது.

அதே போன்று விஞ்ஞானத்தில் தன் ஞானத்தை வளர விடுபவர்களும், எவ் அலை ஈர்ப்பில் தன் உணர்வின் எண்ணத்தைச் செலுத்தி, தன் ஞானத்தை எவ் விஞ்ஞானச் செயல் கண்டு, எவ் ஒரு மாற்றப்படைப்பை தன் அறிவின் ஞானம் கொண்டு உரு வாக்க முற்படுகின்முர்களோ, அதே ஈர்ப்பின் சுழற்சி வட்ட அலைத் தொடருடன் எண்ணத்தை ஒன்றி, தன் அறிவின் ஞானத்தால் அறியும் புதிய விஞ்ஞான அலையில் சிக்குண்டு, அதனுடனே ஒன்றி தன் உணர்வின் எண்ண சுவாசத்தால் தன் ஆத்ம ஞானமும் அதுவாகவே உட்பட்டு, அச்சுழற்சியில் உள்ள விஞ்ஞானக் குடும்ப வாழ்க்கையோ, உற்ருர், சுற்ருர், மற்ருேரின் எண்ண அலையை மனிதச் சுழற்சி, நெறி முறை, பழக்கவழக்கங்களையும் அறி யும் தன்மையையும் அற்று, எவ் ஈர்ப்பின் பிடி அலையில் சிக்குண்டு பசி, தாகம் மற்றெல்லா உணர்வுகளையும் மறந்து, அவற்றின் பிடிக்குத் தன் ஞான அறிவின் ஆத்மாவையே செயலாக்குபவனுக்கு வாழ்க்கையில் ஏற்படும் எவ் எதிர்நிலையான எதிர்ப்பையும் ஏற்க முடியாத் தன்மையில்தான், விஞ்ஞானத்தால் தன் அறிவு ஞானம் கொண்டு பல புதிய செயற்கைச் செயல்களைச் செய்விக்கும் விஞ்ஞானி, தன் உணர்வின் ஞானத்தில், வாழ்க்கையில், அமைதி கொண்ட சுழற்சி வாழ்க்கைக்கு தன் வாழ்க்கையை அமைக்க முடி யாமல், தற்கொலைப்பிடியில் தன்னையே மாய்த்துக் கொள்ளு கின்ருன்.

இவ்வுணர்வால் செலுத்தும் எண்ணம் எவ் ஈர்ப்பலையையும் தன் உடலுடன் எடுத்துக் கொள்ளும் செயலாய் ஒன்ருமல், தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் செயலாய், இவ்வெண் ணம் செயல்பட வேண்டும். ஒன்றைக்கொண்டு பலவற்றை வளர்க்க அவ் ஒன்ருன விதையை புழு, பூச்சி அரிக்காமல், சொத்தைப் பட்டு வெடிப்பு ஏற்படாமல், விதை நன்ருக இருந்தால்தான், அவ்விதையைப் பக்குவப்படுத்திய நிலத்திலிட்டுப் பயிராக்கிப் பல விதையை எடுப்பதைப்போல் இவ்விதையான ஆத்ம ஜீவனை இஜ் ஜீவனுடன் கூடிய உடலின் உணர்வால் எண்ணத்தில் எடுக்

கும் செயல்கொண்டு இவ் ஆத்ம விதையை நற்சத்தான வித்தாக்கி, வித்தைக் கொண்டு பல வித்துக்களை எடுக்க வேண்டும். இதன் வழிமுறை எப்படி?

மனித வித்தின் வளர் வித்து ஆத்மாவை எப்படியப்பா வளர்ப்பது? பிறந்தோம், வளர்ந்தோம், மணந்தோம், பெற்றோம் என்ற வழித்தொடரில் வளர்ப்பதல்ல ஆத்ம வித்துசக்தியை. ஒன்று பலவாகும் வித்தை வளர்க்கும் சக்தி எத் தொடர்பின் வளர்ப்பில் வளர்கின்றதப்பா? தான் பெற்ற சக்தியைப் பலரும் பெறவல்ல வழித்தொடர் வளர்க்கும் முறை எப்படி?

**19–1–81**

மனித எண்ணத்தின் பகுத்தறியும் உணர்வு ஞானம் வளரும் ஈர்ப்பலைக்கு, ஞானிகளால் வழி வகுத்து, குடும்ப வாழ்க்கை முறையில் பல நெறிமுறைகளைக் காவியக்கதைகளில் உணர்த்தியும், அதன் வழித்தொடர் பக்தியை ஊட்டி, மனித ஆத்மாக்களின் எண்ணச் சிதறலை வழிவகுத்து மனிதன் தன்னை மறந்து சில தேவையின் இச்சையில் தன் உணர்வையே இழக்கும் நிலைக்கு, அன்றே காவியங்களில் கதையாக, தெய்வங்களான நிலைக்கு கதை உருவங்கள் தந்து செயல்படுத்தினார்கள்.

மனிதனின் பகுத்தறியும் ஆற்றலினால், உடல் உறுப்புக்களில் செயலிழந்த கை கால்கள் முடம் ஏற்பட்டாலும், செயற்கை உபகரணத்தால் தன் தேவையை அடைகின்றான். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, இயற்கையின் மாறுபாட்டுக்கு உகந்த தன்மைக்குகந்த வீடு அமைத்துக் கொள்ளுகின்றான். ஆனால், இப்புவி ஈர்ப்புப் பிடியில் வாழும் மனிதன், தன் வளர்ச்சியால் ஆத்ம பலம்கொண்டு, ஈர்ப்பலையில் இருந்து விடுபடும் உணர்வின் செயலுக்கு, தன் ஆத்ம ஞானத்தை வளர்த்துக் கொண்டால்தான், மனிதனின் ஆத்ம பலம் கூடும்.

ஞானத்தால் சக்திகொண்டு, தான் பெற்ற சக்தியைப் பிறிதொரு ஆத்மாவும் பெறவல்ல போதனையால் எச்சக்திகொண்டு நம் ஆத்ம ஞானம் வளர்ந்ததோ அதற்கு வலுவான ஆத்ம வலு அலை சக்தியை நம் ஆத்மாவும் பெற்று வலுப் பெறுகின்றது.

காந்த மின் ஈர்ப்பு ஜீவ உயிர் இது. இவ்வுயிர்த் துடிப்பின் ஆத்ம ஈர்ப்பின் வலுக்கூட்ட, இவ்வுணர்வின் எண்ணத்தைப் பக்குவம் கொண்டு ஞானம் வளர்த்து, ஞானத்தால் அறியும் உயர் ஞான வழிமுறையை, ஞானம் வளர்க்கப் பிறிதொரு ஆத்ம

சுழற்சி எண்ணத்தில் செலுத்தி, அவ்வலு சக்தியை நம் உயிர் ஆத்மா பெறவேண்டும்.

உயிர் தந்தாய், உடல் தந்தாய், குருதிதனைப் பாலாக்கி வளர்த்திட்டாய் என்று அன்னையை முதல் தெய்வமாக, குருவாக வணங்குகின்றோம். ஒவ்வொரு மனிதனுக்கும் குரு யார்? தன் உயிராத்மாதான் தனக்கு முதல் குரு. தாயானவள் நம் ஈர்ப்பிற்கு ஜீவன் பெற வழிதந்து வளர்ச்சி தந்த குருவானாலும், இவ்வாத்ம குரு வளர்ப்பினால் தானே அக்குருவை நாம் அடைய முடிகின்றது.

குருவின் உண்மை நிலை என்ன? போதனையால் பெறுவது குருவல்ல. குருவின் போதனையை குரு காட்டிய போதனையாய் நம் ஆத்ம குரு ஏற்கும் பொழுதுதான், எக்குருவின் போதனையையும் இக்குரு செயலாக்கி வழிப்படுத்தும் முறைகொண்டு, நம் ஆத்ம குரு வளர்ந்தால்தான், குரு சிஷ்யத் தன்மை வளர்கின்றதப்பா. இக்குரு முறை அனைத்து நடைமுறை செயல்களுக்கும் ஒன்றியதுதான். இவ்வாத்ம குருவை ஞானம் வளர்க்கும் நற்குருவின் செயல் குருவாய் இவ்வாத்ம குரு வளர்வதுதான் குருத்தன்மை பெறும் நிலை.

ஒவ்வொரு ஆத்மாவும் தன் உயிர்க் குருவை, உயர் குருவாய், இப்புவி ஈர்ப்பு பிடி சுழற்சியிலிருந்து விடுபட்டு, இவ்வுயிர் ஆத்மாவை ஞான குருவாக்குங்கள்.

மனித உயிராத்மாவின் சக்தி, மற்றெல்லா ஜீவ சக்திகளைக் காட்டிலும் உயர்ந்த ஈர்ப்பு சக்திகொண்டது. இவ்வாத்ம உயிரைச் செயல்படுத்தும் தன்மைகொண்டுதான், இப்பிம்ப உடல் ஆரோக்கியமும், ஞான ஈர்ப்பு வளர்ச்சியும் வலுக் கொள்கின்றது.

இவ்வுயிராத்மாவை, வலுப்பெறும் தன்மைக்கு இவ்வுணர் வலையின் எண்ணத்தை எப்படிச் செயல்படுத்துவது?

**20–1–81**

உடலுடன் கூடிய உயிராத்மாவை எப்பிம்பத்தில் இவ்வுயிர் ஆத்மக்கலவை செயல்படுகின்றதோ, அதே பிம்பத்திலிருந்துதான் இவ்வுயிராத்மாவையும் வலுப்பெறச்செய்ய முடியும். குயவன் செய்யும் பானையின் உருவிற்கு, அவன் சேர்க்கும் மண்ணும், அவன் வடிக்க எண்ணிய அச்சின் வடிவமாய் பானை அமைவதைப் போன்று, ஒவ்வொரு உயிரணுவும் எப்புவி ஈர்ப்பில் ஜீவன் கொண்டு, எதிலெதிலெல்லாம் மோதுண்டு மோதுண்டு, உருவாகி

வலுப்பெற்றதோ, அதன் தன்மை போன்று, இவ்வுயிராத்மா வானது இப்பிம்ப அச்சுக்கூட்டில் இருக்கும் பொழுது, ஆத்ம உயிர் வித்தை உயர்ந்த வித்தாக்க வேண்டும்.

இப்புவி ஈர்ப்பில் மட்டுமல்லாமல் உருவாகும் அனைத்து அணுத்தன்மையும், அணுத்தோன்றி, அணு வளர்க்கும் வளர்ச்சி முதலில் மோதுண்டு மோதுண்டு அணுவாய் தாவரம் வளர்ந் தாலும், அணுவாய் உலோகத்தில் வளர்ந்தாலும், எத்தொடர் வழி அணுக்கொண்டு, எதனெதன் தொடரிலெல்லாம் ஆரம்ப உயிரணு மோதுண்டு, வழிபெறும் தன்மையெல்லாம், அவ்வுயி ரணுவின் அமில ஆத்மக்கலவையின் வளர்ச்சித்தொடர் ஒவ்வொரு சக்திக்கலவை வழிகொண்டு அதன் சேர்க்கை உருவ அமைப்பை வளர்த்துக்கொள்ளுகிறது.

ஆரம்ப உயிரணுத்தோன்றி இவ் ஈர்ப்பில் புல்லாய், புல் செடி யாய் வளர்ந்து, அப்புல் செடியானது மக்கி மடிந்தாலும், அது வளர்த்த அவ்வுயிரணு, அப்புல் செடியாய் வளர்ந்த கலவையின் முலாமுடன், பிறிதொரு வளர்ப்பிற்கு அவ்வுயிரணு வித்து அமிலத்தன்மை வளரும்பொழுது, புல்லாகிய முதல் உயிரணு பிறிதொரு வளர்ப்பிற்கு வரும்பொழுது வலுவான செடித் தன்மைகொண்ட பிறப்பெடுக்கின்றது.

இப்பிறப்புத்தன்மை செடி மக்கிய அவ்வுயிரணு, அச்செடி யின் வளர்ப்பில் பல அணுக்களை வளர்த்து, தன் வலுவைக் கூட்டிக்கொண்டு, இச்செடியின் முலாமான அமிலக் கூட்டுத் தொடர்புடனும், பிறிதொரு வளர்ப்பில் இதற்குமேல் வலுவான பூவாகும் வளர்ப்பாகி, இத்தொடர் கொண்டு ஒவ்வொரு வளர்ச் சியின் ஈர்ப்பிலும் எச் சுவை கொண்டு, எவ்வழித்தொடர் வளர்ப்பி லெல்லாம் ஓர் உயிரணு வழித்தொடர்கொண்டு, தன் கூட்டுக் கலவையின் வளர்ச்சி மோதலுக்குகந்த முலாமான அமிலத்தை சேர்க்கைப்படுத்தும் வலுக்கொண்டு, அவ்வுயிரணு உயிராத்மா வாக புவி ஈர்ப்புப் பிடியில் சிக்குண்டு வளரும் தாவர நிலை மாறி, ஜீவ சக்தி பெறக்கூடிய நடக்கும், பறக்கும், ஊரும், நீந்தும் நிலை பெறுகின்றது.

இவ்வழித்தொடரில் எல்லாமே இயற்கை என்கின்றோம். இயற்கை என்ற வழித்தொடரில், இயற்கையுடன் ஒன்றி வளரும் உருமாற்ற வளர்ச்சித் தொடரும், உருவாகும் கால நிலையும், உருண்டோடும் ஈர்ப்புச் சுழற்சியும், உருவாகும் தன்மைகொண்டு உருளுகின்ற உயிரணுவின் சேர்க்கை கொண்டு உருவாவதுதான் பிம்ப உடல்களின் அங்க அவயவங்களும் உருவ பிம்ப அச்சும்.

இப்பிம்ப ஜீவ உடலின் உயிராத்மாவிற்கு எத்தகைய இவ் வெண்ண ஈர்ப்பில் நாம் சேமிக்கின்ருேமோ, அந்நிலைக்குத்தக்க உயிராத்ம வித்துத்தானே பிறிதொரு கூட்டுச்சேர்க்கை வளர்ப்பு ஜீவனுக்கு வழிகாட்ட முடியும். இவ்வாத்ம ஜீவ உயிரானது, காந்த சக்திகொண்டது. நாமெடுக்கும் சுவாசமானது இக்கவன நரம்பில் மோதுண்டுதான், இந்நெற்றிப்பொட்டில் ஈர்க்கப்பட்டு, சிறு மூளையின் செயலுக்குச் சென்று இப்பிம்ப உடல் ஜீவிக்கின்றது.

இக்காந்த சக்திகொண்ட இவ்வுயிராத்மாவானது, எவ் வெண்ண சுவாசத்தை நாம் எடுக்கின்ருேமோ, அதன் நிலைக் கொப்ப வலுச்சக்தி கொண்ட முலாமாக இவ்வுயிர் காந்த ஆத்மாவுக்கு வலு ஏறுகின்றது.

நாம் பூசிய முலாமின் ஈர்ப்பு காந்த உயிரணுவின் செய லானது, இவ்வுடலில் இருக்கும் காலத்தில் சேமித்த தன்மை கொண்டுதான் பிறிதொரு ஜென்மப் பிறப்பு உடலுக்கு இவ் வித்தின் கலவைக் கூட்டுச் சேர்க்கைக்குகந்த பிறப்பெடுக்க முடி கின்றது.

தாவரங்களின் புவிஈர்ப்புப் பிடியுடன் ஒன்றி வளர்ந்த உயிரணுக்களும், இப்புவியுடன் ஒன்றிய கனிவள உயிரணுக்களும், ஒன்றிலிருந்து ஜீவன் பிரிந்து மற்ருெரு ஜீவ சக்தி எடுப்பது, இப்புவி ஈர்ப்புப் பிடியுடன் ஒன்றிய பிறப்பில் இருந்ததால் பிறி தொரு ஜீவ சக்தி வளர்ப்பின் ஈர்ப்பும் குறுகிய காலத்தில் தொடர் பிறப்பின் பிறப்பு வளர்கின்றது.

அதுவே ஆத்ம பிறப்பெடுக்கும் உயிராத்ம பிறப்பானது, இவ்வுயிர் ஆத்மாவானது அது சேமித்த முலாமின் அமில வளர்ச்சி யின் சக்தி வலு இக்காந்த ஈர்ப்பு சக்தி கூடிவிட்டதினுல், அவ் வுயிர் ஆத்ம வலுவினுல் ஜீவ சக்தி கொண்ட வளர்ப்பாகும் தன்மைக்குத் தன் சேமித கலவைக் கூட்டு அமிலத் தன்மைக்கொப்ப ஈர்ப்பு நிலையின் உயிர் வித்தின் ஈர்ப்பில்தான் பிறப்பெடுக்க முடியும்.

நெல்விதையைப் பக்குவப்பட்ட நஞ்சை நிலத்தில் போட் டால்தான் அது வளருகின்றது. அதையே மேடு காடுகளில் போட் டால் அந்நிலப்பகுதியின் பக்குவத் தன்மையில் இதன் வளர்ப்பு வளர்வதில்லை. அதைப்போன்று, இவ் உயிராத்ம சக்திக்கு எவ் ஈர்ப்பு அமிலக்கூட்டு முலாமாய் மோதுண்டு மோதுண்டு, தன் வளர்ப்பு வளர்ந்ததோ, அதன் ஈர்ப்பு பிம்பத்திற்குச் செல் கின்றது. இயற்கைச் சுழற்சித்தன்மையில் சுழன்று வாழும் உயி

ராத்மாக்கள் சுழற்சி ஈர்ப்பின் சுழலாய் சுழலும் சுழற்சியையே உணர்வால் எடுக்கும் எண்ணம் கொண்ட மனிதச் சுழற்சி வாழ்க்கையில் ஜீவன் கொண்ட பகுத்தறிவும், செயலாற்றும், பிம்ப உடலின் உயிராத்ம காந்த சக்தியினால்தான், உருவாகும் இயற்கை கோளங்களையும், உருவாகும் சக்திக்கே உருநிலை தரும் சக்தி இம்மனித பிம்பத்திற்குத்தான் உண்டப்பா.

இவ்வுயிராத்மாவிற்கு நாம் சேமிக்கும் இவ்வெண்ண உணர்வால், நாமெடுக்கும் சுவாசத்தின் மூலாம் கொண்டுதான் இவ்வுயிராத்மாவின் உயர்வை நாம் காண முடியும்.

**21–1–81**

உயிராத்மாவின் மூலாமான வலுச்சக்தி எப்படி ஒவ்வொரு ஆத்மாவிற்கும் கூடுகின்றது? ஓர் உயிராத்மா ஜீவன் பெற்று, உடல் கூடும் செயல் சக்தி முறையும், வளர அங்க அவயவங்களின் நிலைக்கொப்ப, முந்தைய சேமிப்பின் நிலைக்குகந்த வளர்ச்சித் தன்மைகொண்டு, உயிரணுக்களின் வளர்ப்பு நிலை கூடி, அந்தந்த அணு வளர்ச்சிக்குகந்த வலுத்தன்மைகொண்ட, அணு நிலைக்கு உகந்த அவயவ வளர்ப்பின் எலும்பும், சதையும், ரோமங்களும், நகக்கண்களும், பல்லும், தசை நரம்புகளும், விழி அமைப்பும் அந்தந்த அணுச்சேர்க்கைத் தொடர் அமில வளர்ப்புக்குகந்த வளர்ச்சியை வளர்த்துக்கொண்டு வளர்ப்பின் சத்து சேமிப்பாய் உயிராத்ம வலுக் கூடுகின்றது.

பிம்ப உடலின் ஆரோக்கியத்தன்மைகொண்ட, வலுவுக்குகந்த அணு வளர, உணர்வால் எடுக்கும் எண்ணத்தில், உணவின் தன்மைக்கொப்பவும், உடல் உறுப்பு அவயவங்களின் வலுக்கொண்ட ஆரோக்கியத்தைப்போல், உயிர் ஆத்ம வலுவும் கூடிக்கொள்கின்றது. உயிரானது சிரசின் மேலிருந்தும், ஆத்மாவானது இவ் உடலைச்சுற்றியும், இவ்வுடல் பிம்பத்தைக் கவசம் போல் சுற்றியுள்ள இவ்வாத்மா, இவ்வுடலை விட்டு இவ்வுயிர் பிரியும் பொழுது, இவ்வுடல் தன்மை ஆரோக்கியம் அற்று, செயல் இழந்து, உடல் மடியும்பொழுது, இவ்வுடலுடன் கூடிய உயிர் ஆத்மா, இவ்வுடலில் இருந்து எப்படிப் பிரிகின்றது?

இவ் உடலுடனே சுற்றிக்கொண்டு உள்ளதா? பிம்பத்தை எரித்த பிறகு வெளிப்படுகிறதா? புதையுண்ட பிறகு உடல் அழுகி வெளிப்படுகின்றதா? இதன் தன்மை என்ன?

சாதாரண அமைதி கொண்ட வாழ்க்கையுள்ள, அன்பு நெறியில் வயது முதிர்ந்து, உடல் உறுப்புக்கள் செயலிழந்து, ஆத்மா பிரியும் உயிரணுவின் தன்மைக்கும், பல இன்னல்களில் இருந்து வாழ்ந்து முடியும் உயிராத்மாவின் தன்மைக்கும், தற் கொலையின் உயிராத்மா தன்மைக்கும், கொலையுண்டு மடிந்த ஆத்மாவின் தன்மைக்கும், விபத்துக்களில் இறந்த ஆத்மாக்களின் தன்மைக்கும், சில ஈர்ப்பலையில் தன் ஆத்ம பலத்தால் விஞ்ஞானத் தாலோ, மருத்துவத்தாலோ கலை உணர்வாலோ வளர்ந்த உயிராத்மாவிற்கும் அவ்வுடல் பிம்ப உயிராத்மாவின் தன்மை யில், வலுத்தன்மை ஒவ்வொன்றுக்கும் மாறுபடுகின்றது.

காந்த சக்தியினால் வளர்ச்சிகொண்ட இவ்வுயிராத்மாவின் நிலை, எப்படி மின்சார சக்தி பாய்ந்து, எந்தெந்த அலைகொண்டு எந்நிலை கொண்ட மின் அலை சாதனத்தைச் செயல்படுத்தி, எவ்விதித ஒளிக்குகந்த காந்த மின் சக்திகொண்ட விளக்கு (bulb) பொருத்துகின்றோமோ, அதற்குகந்த வெளிச்சத்தைத் தான் அவை எடுத்து வெளிப்படுத்துவதைப்போல், இவ்வாத்ம உயிர், அவ்வுடலில் உள்ள அணு வளர்ப்பின் வலுக்கொண்ட சேமிப்பு வலுவை, அவ்வுயிராத்மா உடலில் உள்ள பொழுதே, வலுக்கூட்டிக்கொண்ட நிலைக்கொப்ப, இவ்வாத்மா பிரிந்தபிறகு, இக்காற்றலையுடன் இப்புவி ஈர்ப்பில் சுழன்று கொண்டிருந்தாலும், சேமித்த வலுத்தன்மையைக்கொண்டு, தன் வலுவை மற்றொரு ஈர்ப்பலைக்குச் சிக்காமல், தன்னைத்தானே பாதுகாத்து, தனக்கு உகந்த வார்ப்புப்பிடியில்தான், பிறிதொரு வார்ப்பு நிலைக்கு வரமுடியும்.

இப்புவியில் காற்றடிக்கும்பொழுது, காற்றடிக்கும் நிலை கொண்டு லேசான காகிதங்களும், இலைச்சருகுகளும், கனமற்ற தன்மைகொண்ட காற்றின் நிலைக்கு ஒப்பான பொருள்கள் பறக் கின்றன. வலுவான காற்று வரும்பொழுது அதனைத் தாங்க முடியா மல் இன்னும் சில கனம் கொண்ட பொருள்கள் பறக்கின்றன. சூறு வளி வந்தால்தான் இப்புவியின் ஈர்ப்புடன் வளர்ந்த வளர்ப்புக் களையே சூறுவளி பறக்கச் செய்வதைப்போல், எந்தெந்த வலுத் தன்மைகொண்டு, இவ்வுயிராத்ம வலுச்சக்தி கூடுகின்றதோ, அதற்குகந்த வலுத்தன்மையை இஜ்ஜீவ சக்தி கொண்ட உடல் உறுப்புக்களின் அணுக்களின் வளர்ப்பிலிருந்து தன் உயிராத்மா வின் வளர்ப்பணுவிலிருந்தே, தன் வலுவை வலுப்பெறச் செய்து கொள்கின்றது இவ்வுயிர் ஆத்மா.

எண்ணத்தின் நிலைக்கொப்ப நாமெடுக்கும் சுவாசம்கொண்ட அணுக்களின் நிலைக்கொப்ப வலுவைத்தான் உயிராத்மாசேமித்துக்

கொள்கிறது. சேமித்த நிலைக்கொப்பத்தான் ஜீவன் பிரிகின்றது. எம் மூலாமின் வார்ப்பில் இவ்வுயிராத்மா வலுக்கொண்டு வெளிப் பட்டதோ, அதன் வலு வித்து வளர்ச்சியில்தான் மீண்டும் சிக்கமுடியும்.

இவ்வெண்ணத்தால் எடுக்கும் ஜெபம்கொண்டு, உணர்வின் எண்ணத்தையே ஞான வளர்ச்சி எண்ணமுடன் செயல்கொள்ளும் உயர்காந்த மின் சக்தியை நாமெடுக்கும் எண்ண சுவாசத்தால் வலுப்பெறும் தன்மை கொள்வதினால் வளர்ச்சிபெறும் தொடர் நிலை யாது?

**28–1–81**

இவ்வுடல் என்ற பிம்பமானது அடுப்பைப் போன்றது. அடுப் பில் எதை வைத்துச் சமைக்கின்றோமோ அதனை வேகவிடுவதுதான் அடுப்பின் வேலை. சேர்க்கப்படும் பொருளின் சேர்க்கையின் சுவை கொண்டு சுவைகொள்வது ஆத்மாவின் வேலை.

மோதுண்டு, மோதுண்டு, எச்சுவையிலெல்லாம் தன் வலுவைக் கூட்டி, இவ்வுயிராத்மா வலுப்பெற்று வலுக்கொண்டதோ, அவ் ஒவ்வொரு சேர்க்கையிலும், தன் வளர்ச்சி மூலாமின் சக்தி எடுப்பது, இஜ் ஜீவ பிம்ப உடலின் அணுச் சேர்க்கை சமைத்தனுப் பும் வலுவைத்தான் இவ்வுயிராத்மா தனக்கு வலுவாக்கிக் கொள் கின்றது.

உண்ணும் உணவையும், எண்ணும் எண்ணத்தையும், செய்யும் செயலையும் இவ் உடலானது எடுத்து, அவை வளர்க்கும் அணுக் களின் வளர்ச்சியிலிருந்து, தன் வலுவை இவ்வுயிராத்மா வளர்த் துக் கொள்கின்றது. இவ்வுயிராத்மாவின் நிலை, இவ்வுடலைவிட்டுப் பிரிந்த ஆத்மாக்களின் தன்மையை நாம் எப்படி உணர்வது? அதன் செயல் நிலை அறிய, நம் ஆத்ம பலம் கூடியிருந்தால், மற்ற உயிராத்மாவின் வலுவைக்காட்டிலும் ஜீவன் கொண்ட உயிராத்மாவின் சுழற்சி நிலை, ஜீவ சக்தியின் ஈர்ப்புடன் செயல் படுவதால், வலுக்கொண்டு இவ்வுடலையே காந்த மின் அலை ஈர்க்கக் கூடிய ஆத்மாவின் சுழற்சி இவ்வுடல் முழுமைக்கும் கவசம் போல் இவ்வுடலைச் சுற்றிக் கொண்டுள்ளது.

இவ்வுடல் பிம்பமானது இயந்திர செயலைத்தான் செய்விக் கின்றதேயன்றி, இவ் இயந்திரத்தில் எதை எதைப் போட்டுச் சமைக்கின்றோமோ, அதிலுள்ள சக்தியைப் பெறுவது இக்கவசம் போல் அமைந்துள்ள உயிராத்மாதான். பசி, தூக்கம், தாகம்

இவற்றின் உந்தலின் எண்ணமும், இவ்வாத்மாவின் செயலுக்கு உகந்த சக்தி நிலைக்கு (வளர்ப்பு நிலைக்கு) தேவைக்குகந்த செயலுக் கொப்பத்தான், பிம்ப உடலின் உணர்வை ஏற்படுத்தி உணர்வைக் கொண்டு எண்ணத்தொன்றல் உந்தப்பட்டு, இவ்வெண்ணத்தால் செயல்படுத்துவதுதான், இப்பிம்ப உடலின் உடலுக்குகந்த காப்பு நிலையை, இவ்வுடல் எடுக்கும் முறை.

ஜீவாதாரத் தேவை இவ்வுடலின் உந்தலின் செயல், உயிராத்மாவின் உந்தலுக்குகந்த செயல்தான். பல பெரியோர்கள் இவ்வுடலை வாடகைவீடு என்றும், இவ்வுடல் என்பது வெறும் சக்கைதான், இவ்வுடல் வேறு, ஆத்மா வேறு, ஆத்ம தியானத் தால்தான் இம்மனித ஆத்மா வளர முடியும் என்றதின் பொருளும் இவுதுவே.

பல மோதலில் வலுக்கொண்ட உயிராத்மா, ஜீவாத்மாவின் தன்மைக்கு வந்து வார்ப்பாகி, வார்ப்பின் வலுவைப்பெறும் செயலுக்குத்தான், ஒவ்வொரு உயிராத்மாவும் பல பிறப்பிற்கு வருகின்றது.

இச் சுழற்சி ஈர்ப்பின் பிடியிலேயே மோதுண்டு மோதுண்டு வலுப்பெற்ற தன்மைகொண்டு வலுவான காந்த சக்திகொண்ட தன்மை கூடிய பிறகுதான் இவ்வுடல் பிம்பம் கொண்ட மனித ஆத்மாவின் எண்ண ஞான வளர்ச்சி செயல் நிலைக்கு இவ்வாத்மா வலுப்பெறுகின்றது.

வலுக்கொண்ட உயிராத்மாவின் கவசம் பூண்ட, ஜீவ பிம்ப மனிதன், இவ்வாத்ம உயிருக்கு மேலும் வலுத்தரக்கூடிய தன்மை, இவ்வெண்ணத்தால் எடுக்கும் இவ்வுயிர் ஞானத்தை வளர்க்கக் கூடிய தன்மை கொண்டுதான் வளர்க்க முடியும். மிருகங்களின் நிலைக்கு எண்ணம் இருந்தாலும், ஞானம் இருந்தாலும், பகுத் தறிந்து செயல்படக்கூடிய உயர் ஞானத்தை வளர்க்கும் ஆற்றல் வலு ஈர்ப்புச் செயல் அற்றதினுல், மனிதனை ஒத்த, ஆத்ம வளர்ச் சியைப் பெருக்கக்கூடிய சக்தி அதற்கில்லை.

ஆனுலும் ஒவ்வொரு மிருகத்திற்கும், ஒவ்வொரு தனித் தன்மை வாய்ந்த உயர்ந்த குண வார்ப்பு அமில, ஜீவ சக்தித் தன்மையுண்டு. இம்மனிதன் சாதாரண வாழ்க்கை முறைக்கு மிருகங்களை உணவாகவும், தன் செயலுக்குகந்த நிலைக் கும், அதனைப் பயன்படுத்துகின்றுன். ஆனுல் உயர் ஞானம் கொண்ட சப்த ரிஷிகள், தன் உடலுடன் உள்ளபொழுதே, தன் உயிராத்மா பலத்திற்கு, தன் வலுவைக் கூட்டிக்கொள்ள,

எப்புவி ஈர்ப்பில் தன் உயிராத்மாவானது வலுக்கொண்டு வலுப் பெற்றதோ, அவ்வலுவுக்குகந்த வலுத்தன்மை கொள்ள, இப்புவி யில் வளர்ந்த வளர்ச்சி நிலை ஒவ்வொன்றிலுமே, அணுவுக்குள் அணுவாய் ஊடுருவி, அணுவின் தன்மையிலெல்லாம் மோதுண்டு, இப்புவி ஈர்ப்பில், அணு அமிலத்தன்மையின், பலவற்றின் நிலை யையும் தன் எண்ண ஞானத்தால், தன் உயிராத்மாவிற்கு வலுக் கொண்டனரப்பா.

முருகரின் வாகனம் மயிலும், பாம்பும், சேவலும், விநாய கனுக்கு சுண்டெலியும், ஐயப்பனுக்குப் புலியும் வாகனம் என்று உணர்த்துகின்றனர். இப்படி ஒவ்வொரு சித்தன் காட்டிய உருவகக் கடவுளுக்கும் பட்சிகளையும் மிருகங்களையும் வாகனம் என்று காட்டினார்கள். அச்சித்தர்களின் செயல் எதைக்கொண்டு இவ்வாகன நிலைகளை உணர்த்தினார்கள்?

ஞானத்தால் சித்து நிலை பெற்றவர்கள் இவ்வாத்மா உயிருக்கு அணுவுக்குள் அணு வளர்ந்த, பல சுவைகொண்ட, பல அமிலக் கூட்டு வார்ப்பிலும், தன் உயிராத்மாவின் கவசத்திற்கு, அதன் முலாமையும் சேர்த்துக் கொண்டார்கள். எந்நிலைகொண்டு?

**1–2–81**

ஆரம்ப பாட நிலையிலிருந்து உணர்த்தி வந்த முறையில், உயிரணுத்தேன்றி, உயர்நிலை பெறும் வழித்தொடரிலெல்லாம், எவ்வுயிரணு, எச் சுவைகொண்டு வளர்ச்சிபெற்றதோ, அதன் தொடர் நிலைகொண்டு, ஒவ்வொரு வளர்ச்சி நிலையுடன் மோதுண்டு, அவ்வுயிரணுவின் பலம் கூடி ஆத்ம நிலை கொண் டாலும், அதன் ஆரம்ப உணர்வின் சுவைகொண்ட எண்ண வழித்தொடரில்தான், அதனதன் குண நிலை அமைகின்றது என்று உணர்த்தி வந்தேன்.

காரத்தின் சுவை, இனிப்பின் சுவை, புளிப்பின் சுவை, பல சுவைகொண்ட அதனதன் வளர்ப்பு உயிரணு மாறிவரும் பிறப்பு வட்டத்திலும், தன் உணர்வு வட்டத் தொடர்ச்சியிலே தான், வளர்ச்சி பெறுவதைப்போல், இவ்வடிவமைத்த வளர்ப்புத் தொடரின் உணர்வெண்ண ஜீவ சக்தியிலும், குணத்தைக்கொண்ட வழித்தொடர் முலாமுடைய தன்தன் உணர்வின் எண்ண நிலை, எந்தக் குணம்கொண்ட ஆத்மாவானாலும், தன் வளர்ப்பின் உணர் வெண்ண குணம்தான், அவரவர்களுக்கு அவர்கள் எடுக்கும் எண்ணமே நல்லெண்ணமாக இருக்கும்.

எவ்வாத்மாவும் தன் குண எண்ணத்தைத் தீயது என்றும், நியாயமற்றது என்றும் எண்ணுவதில்லை. அவ்வார்ப்பின் ஜீவ உடல் உணர்வு குணம் தான், அவ்வுயிரணுவின் ஆத்ம வலுவாக, ஆரம்ப ஈர்ப்பு வழி முதற்கொண்டே வலுப்பெறுகின்றதப்பா.

அவர் குணத்தை அவர் நன்மையாகக் கருதிச் செயல்படு கின்றார். ஒவ்வொரு ஆத்மாவின் தன்மையும் இதுவேதான். ஈர்ப்பலையின் உணர்வு சுவை வளர்ச்சி கொண்ட தாவரமானது எண்ணப்பரிமாற்றம் அற்றது, ஒலி ஈர்ப்பு நடமாட்ட நிலையும் அற்றது.

மிருகங்களின் நிலையில் ஒலி பரிமாற்றச் செயல் இருந்தாலும், மனிதனின் நிலையை ஒத்த எண்ணப் பரிமாற்ற உணர்வு, ஞான வளர்ச்சி, செயல்முறை தாவரத்திற்கும், பிராணிகள் தன்மைக்கும் இல்லை. தன்தன் உணர்வின் எண்ண குண நிலைக்கொப்ப பிறப் பிற்கு வந்தாலும், குழந்தைப்பருவம் முதற்கொண்டே தாய் காட்டும் பரிவும், தந்தை காட்டும் அன்பும், உடன் பிறப்புக்களின் பாச உணர்வின் ஊட்டமுடன், ஆத்ம எண்ணத்திற்கு முந்தைய கால, முன் ஜென்ம உணர்வு எண்ணமானது பிறப்பிற்கு வந்த வுடனே மறைவதினால், எப்பிறப்பு எடுத்து, எத்தாய், தந்தை உணர்த்தி உருவாக்குகின்றார்களோ, அதன் கூட்டு எண்ண உறவின் வழித்தொடரினால் பிறப்பெடுத்த நாள் கொண்டு, வளர்ச்சிக்கால மெல்லாம் படிக்கும் பருவமும், விளையாடும் காலமும், தொழில் அறியும் முறையிலும், மண வாழ்க்கை உறவிலும், பெற்றெடுக் கும் செல்வங்களின் வளர்ப்பிலும் ஒவ்வொரு மனித ஆத்மாவும் இவ்வெண்ணப் பரிமாற்ற வளர்ச்சியுடன் ஒன்றி வருவதினால், தன் வார்ப்பின் குணத்தையே பிற எண்ணத்தின் வார்ப்புக் குண முடன் பகுத்தறியும் செயலுடைய மனிதன், தன் குணத்தில், தன் எண்ணத்தால் நன்மை என்று செய்வதையும், பிற எண்ண முடன் தன் எண்ணம் மோதுண்டு, தன் உணர்வின் ஈர்ப்பைச் செலுத்தித்தான், தன் வாழ்க்கையை நடத்திச் செல்லும் முறை யில் மனித வாழ்க்கையின் நிலை உள்ளதோடு மட்டுமல்லாமல், வழி வழியாய் வந்த சமுதாய இனப்பிணைப்புகளும், அதன் வழித் தொடர் கட்டுப்பாடுகளும், அரசியல் சட்டதிட்டங்களின் ஒழுங்கு முறை விகிதப்பிடிப்பிலும்தான், மனிதனின் எண்ணப் பரிமாற்ற உணர்வு ஒன்றியுள்ளதினால், இத்தர்மநியாய, சத்திய முறை களை உயர்ந்த குணமாக்கி உணவு, உடை, உறவு ஒவ்வொன்றி லுமே ஒழுக்க முறை வழித்தொடர் கொண்டுள்ள சமுதாயத்துடன் ஒன்றிய வாழ்க்கை கொண்ட மனிதன், தன் குண முறையையே நற்குண வழியில் செலுத்தினால்தான், நற்குணம் என்று சமு

தாயத்தில் வழிகாட்டப்பட்ட முறை வழித்தொடரின் வழிவந்த மனிதன், குண முறையில் அவன் குணநிலைக்கொப்ப எண்ணத்தைச் செலுத்தினுல் சமுதாயமே ஏற்பதில்லை.

இதையொத்த நிலையில்தான், அன்றைய காலத்திலேயே, ஒவ்வொரு சித்தனும் தன் உணர்வின் எண்ணத்தை ஞான வழி பூண்டு, சித்து நிலைபெறும் தன்மைகொண்டான். சித்து நிலையின் செயல்முறை எதுவென்ருல், ஞான வழியில் எப்படி எண்ணத்தின் வளர்ச்சியால், ஞான வளர்ச்சி மோதலில் எண்ணத்தைப் பலவற்றின் வாழ்க்கை செயலில் ஒன்றி, தன் உணர்வின், ஈர்ப்பின் எண்ணத்திற்கு, நற்குண வழித்தொடரினுல் ஞான ஈர்ப்பு எண்ண வளர்ச்சியில் செலுத்துகின்ருேமோ, அதைப் போன்று சித்துத்தன்மையில் அணுவுக்குள் அணுவாய், அணு ஈர்ப்புக் கலவைக் கூட்டுடன், தன் உயிர் ஆத்ம கலவையைப் பிற அணுக்களின் நிலையுடன் ஊடுருவி, அவற்றின் சக்தி வீரிய குண முலாமைத் தன் வலுவுக்கும் ஏற்றிக்கொள்கின்ருன் சித்தன்.

**7–2–81**

இதுநாள் வரை உணர்த்தியதெல்லாம் ஜபமுறையும், தியான வளர்ச்சிக்கு உகந்த ஞான வளர்ச்சி வழிமுறையும் ஞானத்தால் உயர் ஞானம் கொள்ள இவ்வுடல் முழுமைக்கும் உள்ள ஒவ்வொரு அணுவுமே, தன் ஞான வளர்ச்சியின் வழி செயல் வளர்க்க, இவ்வுடல் அமிலக்கூட்டின் அணுக்கள் யாவையுமே ஞான உணர்வு எண்ணச் செயலுக்கு, இவ்வாத்ம உயிரைச் செயலாக்கத் துணை புரியும் வழிமுறையின் ஈர்ப்பில் காந்த மின் அலை ஈர்ப்பு வளர்ச்சி இவ்வாத்ம உயிருக்கு சூரிய அலையிலிருந்து இவ்வுயிர் ஆத்மாவிற்கு நேராகப் பாயத்தக்க செயலாய் இப்பிம்ப உடல் அணு வளர்ச்சியின் செயலாத்மாவாய் இவ்வுயிராத்மாஉட்கொள்கின்றது.

இத்தொடர் வார்ப்பு உடம்பாய், இஜ் ஜீவ பிம்ப உடல் செயல்படும் தன்மையில், உடலின் ஆத்மாவானது இவ்வுடலின் அமில முலாம் குண வளர்ச்சியின் ஈர்ப்பு விகித எண்ணச் செயலைக்காட்டிலும், இப்புவி ஈர்ப்பின் வளர்ச்சிபெற்ற பல உயர்ந்த அமிலத்தன்மையின் வார்ப்புடன் தன் செயலைச் செய்விக்க, இவ்வாத்மா உயிரை அணுவுக்குள் அணுவாய் சென்று பிற வார்ப்பில் உள்ள அமிலக்கலவை முலாமையும் தன் உயிர் ஆத்மாவிற்கு வலுவாக்கிக் கொள்கின்ருன் ஞானத்தில் வளர்ந்த சித்தன்.

அன்ன பிண்ட உடலாய் இஜ் ஜீவ உடலை வளர்த்துள்ள மனித இன சக்தியின் ஞானமும் அதன் செயற்கைப் பிடிப்புடனே சமைத்துண்டு இயற்கையின் பிடிப்பின்றி காற்று, மழை, வெய்யில் எதுவுமே தன்னைத் தாக்காமல் காத்துக்கொள்ள உறைவிடம் அமைத்து வாழத்தக்க நிலையில், மனிதச் செயலே பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதனுக்குகந்த பகுத்தறியும் ஞானத்தையே செயற்கையின் செயலின் வழியில் வார்ப்புப் படுத்திவிட்டதினால், இயற்கை உணர்வின் தன்மையை தன் ஞான உணர்வால் ஈர்க்க முடியவில்லையப்பா மனிதனுக்கு.

சேவலிலிருந்து பல பட்சிகளும், நாய், நரி, பூனை அனைத்துமே உலகச் சுழற்சியின் தன்மையைத் தன் சுவாச உணர்வில் அறிந்து, ஜாமக்கோழி கூவுகின்றது. துயிலெழுந்து இரை தேடச் செல்கின்றன பறவை இனங்கள்.

சூரிய ஒளி உதயமாவதற்குள்ளேயே ஒளியின் தன்மையை மழை மேகம் மறைத்திருந்தாலும் இப்பட்சிகள் எப்படி விடிவை அறிகின்றன. இப்பூமி சுழலும் சுழற்சித்தன்மையை மனிதனைக் காட்டிலும் தன் உணர்வின் சுவாசத்தாலேயே அறியவல்ல தன்மை சில தாவரங்களுக்கும், பட்சிகளுக்கும், பிராணிகளுக்கும் உண்டு. ஆறறிவு கொண்ட மனிதன் என்றுரைக்கப்படுபவன், செயலாற்றும் திறமைகொண்டவன், சொல்லாற்றல் உடையவன், விஞ்ஞான சக்தியைக் கொண்டு மனிதக் கருவையே தாயின்றி வளர்க்கச் செய்பவன், இவ்வியற்கைச் சுழற்சியைச் செயற்கை கொண்டு தான் உணருகின்றான்.

ஐந்தறிவுகொண்ட மற்ற இனங்கள் சொல்லாற்றலும், செயலாற்றலுமின்றி இயற்கையுடன் இயற்கையாய் ஒன்றி, இயற்கை உணர்வை அறிந்துகொள்கின்றன. ஞானத்தால் உயர்ந்த மனிதன், அணுவுக்குள் அணுவாய் சித்து நிலைபெற, இப்பிம்ப உடலின் ஆத்ம உயிரை, பல மிருகங்களின், பட்சிகளின் ஆத்மாவுடன் இவ்வாத்மாவைக் கவசம் போல் அதன் ஈர்ப்பில் சென்று, அதன் உடல் அமிலக் கூட்டின் முலாமையும் தன் உயிராத்மாவிற்குச் சேமிதம் செய்து வருகின்றான் அச் சித்தன்.

இதை உணர்த்தும் நிலையில்தான், குணத்திற்காகச் சிலை உருவிற்கு நாமகரணமிட்டு, அச்சிலையின் வடிவத்தைக் காட்ட குண சக்தியின் வழியில் ஞானத்தை வளர்த்து, அவதார மூர்த்திகளுக்கு வாகனங்களாக பாம்பையும், மயிலையும், சேவலையும், பசு, பன்றி, சிங்கம், புலி இவற்றையெல்லாம் இன்னும் பல பிராணிகளையும் வாகனமாகக் காட்டினார்கள்.

விக்ரமாதித்தனின் கதையில் வரும் நிலே யாவையுமே கதை யல்ல உண்மைத் தன்மையது. விக்ரமாதித்தன் பூஜித்த உஜ்ஜயினி காளியானவள் பெண்ணென்று பிறப்பெடுத்து ஞானத்தால் வளர்ந்த சப்த காளியப்பா அவள். அவளின் வழித்தொடரைப் பிடித்தவன் தான் விக்ரமாதித்த மகாராஜா. அக்கதையில் உள்ள யாவையுமே ஒருசில மாறியிருந்தாலும் உண்மை நடப்புகள் தானப்பா அவை யாவும்.

**8–2–81**

அரசாண்டவரின் ஞானம் சித்துநிலே பெற வழிவந்ததின் தன்மை பக்தி பூண்டு, பூஜித்து, பூஜிப்பின் பலனல் அக்காளியின் ஞான அலேத்தொடர்பைப் பெற்று, அக்காளியின் செயலாகவே சித்து நிலே பல பெறும் தன்மைக்கு விக்ரமாதித்தர் ஆளானர். காடாறு மாதம், நாடாறு மாதம் என்ற நிலேயில் காடுகளில் வாழ்ந்த காலத் தன்மையில், தன் ஆத்ம உயிருக்கு வேண்டிய வலுத்தன்மையை, ஞானத்தின் வழியான சித்து மார்க்கம் பெற, தன் உயிராத்மாவைப் பல செயல் அறிய அணுவுக்குள் அணுவாய், அணுவின் தன்மையின் முலாமையெல்லாம் தன் ஆத்ம வலுவுக்கு ஏற்றிக்கொண்டார்.

இப்பூமியின் கனிவள விகிதமானது ஏழு குணத் தன்மை கொண்டது. அதன் வளர்ச்சி கனிவளங்களின் தன்மை ஒவ்வொன் றில் பலவாக வளர்ந்துள்ளது. வண்ணமும் ஏழு, சுவை குணங் களும் ஏழு. இவ்வேழின் தன்மை எதன் குணநிலே அடிப்படையில் கலவை பூண்டது?

ஆவியாகி கனம் கொண்டு, ஜீவனுகிச் சுழலும் இயற்கைத் தன்மையில், இவ் ஈர்ப்பின் இயற்கைச் செயலுக்கொப்ப, பால் வெளியின் கூட்டுக் கலவை அமிலத்தின் குறிப்பிட்ட செயல் சேர்க்கையின் தன்மை இச்சக்திபெற்ற சப்த ரிஷி மண்டலம் என்று உணர்த்துகின்றனரே, அவர்களின் ஈர்ப்பு, வளர்ப்பு நிலேதான் இப்பூமியின் தன்மை குணம்.

சுவையும், வண்ணமும், மணமும், ஏழாய் ஈர்ப்பு கூட்டுக் கலவை சேர்க்கை ஜீவன் கொண்ட சிவசக்தியென்ற ஆண், பெண் ணின் செயல் கொண்டு உருவான இப்பூமியின் குணத்தை சிருஷ் டித்து வழிநடத்தும் ரிஷிகுணத்தின் ஒவ்வொருவர் பெற்ற தனித்தன்மையின் சக்தியை ஒன்ருக்கி வளர்த்த தன்மைதான் இப்பூமியின் தன்மை.

இதில் சித்து நிலை பெறத்தக்க ஆத்மாக்கள் எத்தன்மை பூண்டு இப்பூமி உருவானதோ, அதன் கலவைக் கூட்டிலெல்லாம் தன் ஆத்ம உயிரைச் செலுத்தி, தன் வலுவை இப்புவி ஈர்ப்பின் வலுவிலேயே தன் வலுவைக்கூட்டி, எவ்வலுத்தொடர்பைத் தந்து ஏழு குணச் சேர்க்கையால் இப்பூமி உருவானதோ, இவ் வேழில் மூலாம் பெற்ற சித்தன், இவ்வேழுக்கு மேல் சக்திகொண்ட வலுசக்தியான சூரிய சக்தியின் சக்தியுடன் எச்சக்தியையும் உரு வாக்கவல்ல ரிஷித்தன்மை கொள்கின்றான்.

கங்கைத் தீர்த்தம் புனிதமானது என்றும், இதையொட்டிய ஒவ்வொரு தீர்த்தத்திலும் தான் குளித்தெழுந்தால் புண்ணிய தீர்த்தத்தை நாடி மனிதன் சென்று குளித்து இவ்வுடல் பிம்பத் திற்குப் புனிதம் என்று நீராடி வருகின்றான். அது பக்திமார்க்க முறை.

இவ்வெண்ணத்தை இப்பூமியின் சக்தி அலையான அமிலத் தீர்த்தத்தில் தன் ஆத்ம உயிரையே குளிக்கச் செய்தானப்பா அச் சித்தன். பக்தி மார்க்கமும், ஜெப முறையும் வழிகாட்டிகள் தான். வழியின் வலுவறிந்து, தியானத்தால் ஞானம் பெற்று, இச் சுவாசத்தின் அலையைக்கொண்டு சூரிய சக்தியின் வலுஈர்ப்பை இவ்வாத்ம பிம்ப உயிர் ஈர்ப்பிற்கு, இவ்வெண்ணத்தைச் செலுத்தி இப்புவி ஈர்ப்புப் பிடியில், இப்புவியில் பிறந்த பலகோடி எண்ண ஆத்ம உயிர்களின் ஈர்ப்புப்பிடி அலை சுழற்சியில் இருந்து நம் ஆத்ம உயிரின் ஈர்ப்பிற்கு இப்புவி ஈர்ப்பின் உணர்வு சிக்கா வண்ணம், நம் உணர்வின் எண்ணமானது நாமெடுக்கும் பக்தி ஜெப முறையின் வழிபாட்டிற்கு மேல், தியானத்தால், உயர் ஞானம் கொண்டு, சூரியனின் அலை ஈர்ப்பின் செயலாய் ஒன்றி, நம் தியான முறை வழிகொள்ளும் முறையினால், இம்மனித பிம்ப ஆத்மஉயிரின் நுண்ணிய காந்த ஈர்ப்பின் அலைசக்தி வளர்ப் பினால், இவ்வுடலே இப்புவி ஈர்ப்புப் பிடியிலிருந்து சூரியனின் அலைத்தொடர்பின் வலுத் தொடர்பு கொண்ட செயலின் வளர்ச் சியுடன் இச்சக்திபெற்ற மனிதன், தன் எண்ணத்தைக் கொண்ட எம் மண்டலத்திற்கும் தன் உயிரைச் செலுத்த முடியும்.

**9–2–81**

இப்புவியின் நாதம் 'ஓம்' என்ற நாதம். அமிலமானது சுவைகொண்டு பால்வெளி மண்டலத்தில் மிதந்துள்ள அமிலத்தின் சுவை சேர்க்கையின் கனம் கொண்டு ஈர்ப்பின் சுழற்சி சக்தியிலேயே சுவையின் ஒலி பிறக்கின்றது. அமிலச் சுவை

ஒலி ஈர்ப்பாகி ஒளியாகின்றது. உயிர் அணு பிறக்க சுவையின் ஒலிகொண்ட ஒளியான அணு பிறக்கின்றது. இவ்வழித் தொடரின் நிலேக்கொப்பச் சுவை குணம் வளர்ச்சியின் ஒலி கொண்டு ஒளியாகி வழிபெறும் ஒவ்வொரு தன்மையிலுமே இயற்கை வளர்ச்சி ஒவ்வொன்றின் ஈர்ப்பிற்கும் அத்துடிப்பின் நாதம் பிறக்கின்றது.

சுவையில் எப்படி ஒன்றை ஒத்து ஒன்றில்லேயோ, அதைப் போன்றே இவ்வொலியும் ஒன்றுக்கொன்று மாறிய நாதமாகத் தான் பிறக்கின்றது.

செயற்கையின் சேர்க்கைப் பொருள் கொண்டு வாகனங்களில் அதனதன் உலோகச் சேர்க்கையின் நிலேக்கொப்ப மாட்டு வண்டிக்கும், புகைவண்டிக்கும், மிதி வண்டிக்கும், விமானத் திற்கும் நாத ஒலி மாறுபடுகின்றது. இது ஒவ்வொன்றையும் பிரித்துக் காட்டுவதின் பொருள், செயற்கைச் சேர்க்கைப் பொருளேப் போன்றே, இயற்கை சேர்க்கையின் ஒலி நாதமும் மாறுபடுகின்றது.

இந்த ஞான வளர்ச்சிக்கு, ஆத்ம ஜெபத்தால், உயர் ஞான தியான முறைக்கு, ஒவ்வொரு சக்தி அலேயின் ஒலி அலேயையும் இவ்வாத்ம உயிருக்கு எடுக்க வேண்டியுள்ளது.

அணுவுக்குள் அணுவாய்ப் பல சுவை முலாமை எப்படி இவ்வுயிராத்மாவிற்கு சித்தர்கள் சேமித்தனரோ, அதைப் போன்றே இவ்வெண்ணத்தால் எடுக்கும் ஒலியின் நாதத்தை ஜெபம் பூண்ட முறையிலேயே, சப்த ரிஷிகளின் அவரவர்களுக்கு உகந்த சூட்டப்பட்ட நாமகரணத்தின் நாதத்தை அவர்கள்பால் எண்ணத்தைச் செலுத்தி நாமெடுக்கும் ஜெபத்தால் அவர்களின் நாத ஒலியை நம் ஆத்ம உயிரும் எடுத்துக்கொள்ளுகின்றது.

அதைப்போன்றே, இவ்வெண்ணத்தின் ஈர்ப்பை தியானத் தால் எடுக்கும் சுவாசத்தால், இச்சூரிய குடும்ப வளர்ச்சிகொண்ட உயர் சக்திகளின் மண்டல ஈர்ப்பின் ஒலியையும் இவ்வெண் ணத்தைச் செலுத்தி எடுக்கும் சுவாசத்தால் நாம் உணர்ந்த மண்டலங்களின் தொடர்புகொண்ட அததற்குகந்த ஒலியை இவ்வாத்ம உயிர் சேமித்துக் கொள்கின்றது.

நாமெடுக்கும் ஜெபத்தால் இவ்வுயிராத்மாவின் சக்தி கூடி னல், எம் மண்டலத்திற்கும் செல்லலாம் என்ற தன்மைக்கு இவ்வெண்ணத்தால் எடுக்கும் ஒலி சேமிப்பின் தொடர் வளர்ச்சி

விகிதத்திற்கொப்பத்தான் இப்புவி ஈர்ப்பின் பிடியிலிருந்து எம் மண்டலத்திற்கும் செல்லத்தக்க சக்தி இவ்வொலி ஈர்ப்பினுல் கிட்டுகின்றது. இச்சொல்லாற்றல் என்ற சக்தியான உயர் குணம் கொண்டு இந்த ஞான ஈர்ப்பின் பக்திபூண்ட பெரியோர்களின் ஆத்ம உயிரின் சேமித ஒலி சக்தியினுல்தான், சிலரின் சொல் லாற்றல் சக்தியே உயர்ந்த சொல்லால் சொல்லின் செயல் நடப் பவை எல்லாம்.

சுவையின் தன்மைக்கே இவ்வொலிச் சேர்க்கை கொண்டு தான் வலுக் கூடுகின்றது. எவ்வெண்ணத்திலெல்லாம் சுவாசம் எடுக்கின்ருேமோ அச்சுவாசத்தால் பிறக்கும் ஒலியின் ஒளியைக் கொண்டுதான், இவ்வாத்ம உயிரின் நிலை உயருகின்றது. இதன் நிலைக்கொப்பத்தான் ஜெபமுறை கொண்டு தியானத்தின் எண் ணத்தை எவ்வலை ஈர்ப்பு செயலில் செலுத்துகின்ருர்களோ அதன் ஒலி ஈர்ப்பை சித்துநிலைபெற்ற தன்மைகொண்டு இஜ் ஜீவ பிம்ப உடலிலேயே ஒவ்வொரு மண்டலத்தின் ஒலி ஈர்ப்பையும் தன் தன் எண்ணத்தால் செலுத்தும் தியானத்தால் ஆத்ம உயிரின் வளர்ச்சிக்கு ஒலி முலாமை ஏற்கின்ருர். இப்பொழுது உணர்த்தப் படும் முறைகள் யாவையுமே ஒவ்வொரு மனிதனும் இப்புவி ஈர்ப்பு வாழ்க்கைதான் வாழ்க்கை என்ற இச்செயற்கைப் பிடியி லிருந்து மீள வழிகாட்டும் முறைகள்.

**17–2–81**

பழயன கழிதலும், புதியன வளர்தலும் இயற்கை நியதி. அணுத்தோன்றி எவ்வித்தான உயிரின் தாவரமாய் வளர்ந்தாலும் அவ்வித்து விதை வளர்ந்து துளிர் கொண்ட இலை அது ஈர்த்து வளரும் தன்மை காலத்துக்கு உகந்த அமிலச் சேர்க்கையின் வளர்ப்பு அவ்விலை ஈரப் பசை கொண்ட வளர்ப்பின் முற்றிய தன்மையின் தன் சக்தியைத் தண்டுப் பாகத்தில் வளர்ப்பு வலு எடுத்த பிறகு முற்றிய இலை உதிர்ந்து விடுகின்றது சருகாய்.

இப்படி வித்திட்ட விதையின் வளர்ப்பு, தன் வளர்ச்சியி லேயே விழுதுகளாகி, அவ்விழுதின் வலுவைத் தன் வளர்ப்பின் வலுவாக்கி, வித்தின் வளர்ப்பின் வளர்ப்புகளை வளர்க்கின்றது. சிறு வித்து பல வித்தாக வளர்ப்பெடுத்து மாறுகொண்ட வளர்ப்பை உருவாக்குவதைப்போல், ஒவ்வொரு அணு வளர்ச்சி யின் வளர்ப்பிலும் தொடர் வளர்ச்சி வளர்வதைப்போல், இப்புவி மட்டும் அல்லாது ஒவ்வொரு மண்டலமுமே தன் வளர்ப்பின் வளர்ப்பை வளர்த்துக் கொண்டே உள்ளது.

சூரியக் குடும்பத்தின் வளர்ப்பைப்போன்றே, ஒவ்வொரு மண்டல வளர்ப்பின் வளர்ப்பு வளர்ந்துகொண்டே தான் உள்ளது. மனித இனப்பெருக்க சுழற்சியைப்போன்றே, ஒவ்வொரு செயலும் தன் வளர்ப்பின் வளர்ப்பை வளர்த்துக்கொண்டேதான் உள்ளது. சுழற்சி ஈர்ப்பு வளர்ப்பின் நிலைக்கொப்பச் சுழலவிடும் வளர்ப்பிலேயே வளரும் தன்மை ஒன்றுென்றின் தொடர்ச்சி கூடக்கூட வளர்ச்சியின் தன்மை வலு அதிகமாகின்றது. தங்கத்தின் வளர்ப்பானது அவை வளரும் இடங்களில் ஆரம்ப இடத்தைக் காட்டிலும் அடுக்கடுக்காக அத்தங்க வளர்ப்பு மண்ணுனது சிறிது சிறிதாக வலுப் பெற்று அதன் தொடர்ச்சியில் கிடைக்கப்பெறும் இவ்வுலோக சேர்க்கை வடிவமைப்பு மிகவும் உயர்ந்ததாக கிடைக்கின்றது. அதைப்போன்றே இவ்வுயிர் ஆத்மாவிற்கு சேமிக்கப்படும் சேர்க்கையின் தன்மை இவ்வுடல் பிம்ப ஜீவனுக்கு அளிக்கப்படும் உணவிலிருந்தும், சுவாசத்தால் எடுக்கும் எண்ணத்திலிருந்தும், உணர்வின் தன்மைகொண்டும் வளர்ச்சிபெறும் அணுக்களின் காந்த ஈர்ப்பு நிலைக்கொப்ப இவ்வாத்ம வலு வளர்கின்றது.

இவ்வெண்ணத்தால் எடுக்கும் ஞானவளர்ச்சியில் வாழ்க்கை நெறி முறை செயல் உணர்வுகளில் இவ்வெண்ண ஈர்ப்பை நாம் செலுத்தும் உணர்வின் வலு அணுக்களைத்தான் இப்பிம்பக் கூடு வளர்த்து அவ்வளர்ப்பின் வலுவைத்தான் இவ்வாத்மா பெறுகின்றது. செடியின் ஆரம்ப வித்துத்தன்மை வளர வளர அதன் பலன் பலவாய் முற்றித்தருவதைப்போல் இவ்வெண்ண ஈர்ப்பால் எடுக்கும் வலுத்தன்மையை இவ்வாத்ம உயிரும் எடுத்துக் கொள்கின்றது. இவ்வாத்ம உயிரின் வலுத்தன்மையானது உணர்வின் ஈர்ப்பு செயல் நிலைக் கொப்ப எல்லாம் வலு ஏறுகின்றது. நாம் சொல்லக்கூடிய ஜெபமுறையாலும் தியான முறையாலும் மட்டும் வலு ஏறுவதென்பதல்ல. இவ்வாத்ம உயிரின் வலு, இவ்வுணர்வின் எண்ண ஈர்ப்பின் செயல் வலுவை எதன் வழியில் செலுத்தி வீரிய குணம் பெற்றிருந்தாலும் அதன் குண நிலைக்கொப்ப தீய வழிகளில் செல்லும் ஆவேச அலை ஈர்ப்பில் உள்ளவர்களின் உயிராத்மாவின் வலுத்தன்மையும், இதன் ஈர்ப்பின் பிடியில் வலுவாகிச் செயல் கொள்ளுகின்றது. இவ்வுணர்வின் ஈர்ப்பு வீரத்தின் செயலை, சாந்த குண ஞான வழிக்குச் செலுத்தினுலும், அசுர குண வஞ்சனையில் இவ்வீரத்தைச் செலுத்தினுலும், இவ்வலை ஈர்ப்பு காந்த சக்தியின் வலுத்தன்மை இவ்வுயிராத்மா எப்படி வலுவாக்கிக் கொள்கின்றதோ அதைப்போன்றே அசுர குண ஈர்ப்பு நிலைக்கும் இவ்வலுக் கூடுகின்றது.

20–2–81

### வலுத்தன்மையின் நிலே என்ன ?

எல்லாமே ஒலியின் தன்மைகொண்டு உருவாக்கப்படுவது தான். உருவாக்கப்படும் நற்சக்தியும், தீய சக்தியும் எதுவாயிருந் தாலும், இவ்வொலிகொண்டுதான் பிறக்கப்படுகின்றது. இவ் வொலி நாதம் கொண்டு அமையப்படுவதுதான் உயிரணுக்கள் யாவையுமே. இந்நாதவிந்துச் சேர்க்கை செயலில் எடுக்கப்படும் சுவாசத்தின் நிலேக்கொப்பத்தான்., உயிராத்மாவின் செயலும் உள்ளது.

நெற்பயிரில் அப்பலன் தரும் தருவாயிலும், இக்காற்றலே யின் நாதச் சேர்க்கையை தன் ஈர்ப்பில் சேமிக்கப்படும் நிலேக் கொப்பத்தான் அக்கதிரின் மணியில் அரிசியின் நிலே வளருகின்றது. ஒரு கதிரில் வரும் நெல் விதையில் எல்லாமே மணியாய் இருப்ப தில்லே. பதர்களும் உண்டு. அதைப் போன்றே கனிகளிலும், ஒரு செடியில் பூக்கும் பூக்களிலும் ஒன்றை ஒத்த நிலேயில் ஒன்றில் லாமல், ஒரே செடியில் பூக்கும் பூவிலும் சில சிறுத்து கரடு தட்டிய நிலேயில் வருகின்ற தன்மை போன்றே, ஒவ்வொரு அணு எடுக்கும் நாதத்திற்குகந்த விந்துத்தன்மைதான் வளர்கின்ற தப்பா.

இந் நாதத்தால் எடுக்கும் உருவகத் தன்மையில், நம் சித் தர்கள் காட்டிய செயல் முறையின் ஆரம்பத் தன்மைதான் பக்தி யால் ஜெபிக்கும் ஜெப நாதப்பாடல்கள். அன்பென்ற பக்தி பூண்டு, ஆசையென்ற நாத இனிமை கூட்டி ஜெபப்படுத்தும் முறை இவ்வுயிராத்மாவிற்கு ஆரம்பச் சேர்க்கை வழிகாட்டி முறை.

இப்புவி ஈர்ப்பின் பக்தி செயலில், இப்புவியின் வளர்புடனே நல் வளர்ப்பாய் பல நாயன்மார்கள் இப்பாடலின், நாதத்தின் சுழல் விகிதத்தில் செயல்பட்ட முறைதான், இப்பக்தியின் நாத ஜெப முறை. இஜ் ஜெப முறையின் வளர்ச்சியால், இப்புவி சுழல் நாதமான 'ஓம்' என்ற நாதத்தின் உள் நாதமான ஓமுக்குள் ஓமாய், இவ்வுயிராத்மாவின் நாதத்தை, இப்புவிக்கே நாதம் தந்த சகல ரிஷிகளின் நாத அலேயுடன், இத்தியானத்தால் ஓமுக்குள் ஓமாய் இருந்து, அவ்அலே நாதத்துடன் இந்நாதத்தின் எண்ணத்தைச் செலுத்தி, அவ்வலேத்தொடரின் தொடர்பலேயை ஜீவ சக்திகொண்ட இவ்வுயிராத்மா எடுக்கும் சுவாசத்தால், எச் சப்தரிஷியின் அலேத்தொடர்புடனும். இவ்வெண்ணத்தால் செலுத் தும் சுவாச நாதம் கொண்டு, அவ்வலேயின் தொடர்பை இவ் வாத்ம உயிர் தன் ஈர்ப்பின் வளர்ச்சிக்கு எடுத்து வளர்க்க முடியும்.

ஒவ்வொன்றின் தன்மையும் தனித் தன்மை கொண்ட உயர் நாதச்செயலாய் ரிஷித்தன்மையின் வளர் வார்ப்பு செயல் நிலை செயல்படுவதால், இப்புவியின் எண்ணத்தின் சுழல் வாழ்க்கைப் பிடியில் இருந்து, வளர்ப்பின் வளர்ப்பாய் செயல் வழி வளர்ப் புடன் வளர்நிலைகொள்ள, இவ்வாத்ம உயிரில் எடுக்கும் தியா னத்தின் சுவாச அலைத்தொடர்பின் வழிமுறை செயலினுல், இப் பிம்பக் கூட்டின் ஜீவசக்தி அணுவளர்ச்சி சேர்க்கையின் செயல் கொண்டுதான், இவ்வெண்ணத்தால் எடுக்கும் அலைத்தொடர் பின் சக்தியை இவ்வுயிராத்மா வளர்த்துக் கொள்ள முடியும்.

காந்த ஈர்ப்பு சக்தி கொண்டது இவ்வுயிராத்மா. இவ் வெண்ணத்தின் செயலைக்கொண்டு எடுக்கும் தியான நிலையின் தொடர் நிலைக்கொப்ப, இப்புவி ஈர்ப்பின் பிடியிலிருந்து ஞான வளர்ச்சி செயலையும், சித்துத் தன்மை வளர்ப்பையும், இவ்வலைத் தொடர்பின் எண்ண நாதச் சேர்க்கையைக் கொண்டு, இப்பிம்ப இயந்திரத்தின் உதவியால் இவ்வுயிராத்மாவையே உயர்ஞானக் கூட்டு ஆத்மாவாய் உயர்த்த முடியும் இவ்வெண்ண நாதத்தால்.

**26–2–81**

**ஓம் ஈஸ்வரபட்டாய குருதேவா**

நாதத்தால் வளர்ந்த விந்துவின் ஜீவ வளர்ப்புத்தான் இப்புவி வளர்ப்பு யாவையுமே. பால்வெளி மண்டலத்தின் வளர் தன்மை கொண்ட அமில மோதல் நாத முதற்கொண்டு, இப்புவியின் சுழற்சி நாதக் காற்று வளர்ப்பு ஒலி, ஒளி. நீராகி இத்திடங் கொண்ட சத்துத் தன்மையின், நாத ஈர்ப்பினை சுழற்சிப் புவியில், இப்புவியின் வெக்கை அலை வெளிப்பட்டு ஈர்க்கப்படும் ஒலி நாத மான 'ஓம்' என்ற நாதத்தின் குணத்தன்மை ஒலியாகி, ஒளி யாகி, நீரான வளர் சுழற்சியில் ஓம் எனக் கொண்ட நாத ஒலியின் தொடர் நாத விந்து வளர்ப்புத் தானப்பா, இப்புவி நாத வளர்ப்பு யாவையுமே.

இப்புவி வளர்த்த நீரில், சூரியனின் அலை ஈர்ப்பை இப்பூமி ஈர்த்து, நீரின் மேல் சூரிய ஒளி பட்டு, இப்பூமி ஈர்த்து, இப்பூமி வெளிப்படுத்தும் ஆவியான வெக்கை நிலை மேல் நோக்கிச் செல்லு கின்றது. அதைப்போன்றே, எரிக்கப்படும் எரி பொருளின் புகை யானது மேல் நோக்கிச் செல்லுகின்றது. இப்புவியில் வளரும் வளர்ப்பு யாவும் மேல் நோக்கி வளர்கின்றது. ஆனுல் கனம் கொண்ட வளர்ப்பு யாவும் புவி ஈர்ப்பின் பிடியுடன் கீழ் நோக்கி வளர்கின்றது.

புவி வளர்ப்பா, பால்வெளி மண்டலத்தின் வளர்தன்மையா, இவ்வளர் நிலை யாவையும்? இப்புவியில் வளரும் தன்மையின் வளர்சக்திக்கு நாதத்தின் விந்துத்தன்மையின் செயலுக்கே ஜீவ நாடி இவ் 'ஓம்' என்ற புவி நாதம்தான்.

இப்பால்வெளி மண்டலத்தில், செயல் தன்மையில், அந்தந்த மண்டல ஈர்ப்பு ஒலித்தன்மைகொண்டு, நாதச்சேர்க்கையின் வளர் உயிரணுக்கள் ஒவ்வொரு மண்டலத்தன்மைக்குகந்த நிலையில்வளர்கின்றது. மண்டலச் சுழற்சிக்கு மாறுபட்டுள்ள பால்வெளி மண்டலத்தில் காற்றுத்தன்மையே இல்லாத மேல் நோக்கியும், கீழ் நோக்கியும் எத்திசையென்ற செயலற்ற நிலையில் உள்ள இடங்களில் சில ஜீவராசிகள் பிறந்து, மடிந்து வாழ்கின்றன.

காற்றுத்தன்மையே இல்லா நிலையில் ஜீவன்கள் எப்படிப் பிறக்கின்றன? இவ்வமிலத்தின் சேர்க்கை நிலையில் சிறுசிறு அமிலக் கூட்டின் மோதலின் ஒலி ஈர்ப்பின் ஜீவனுகி இவ்வொளியின் நாதமுடன் வளர்ச்சிகொண்ட வளர்நிலைக்குகந்த மிகக் குறுகிய கால, சில அபூர்வச் செயல்கொண்ட ஜீவத்தன்மைகள் தோன்றி, அதன் கனம் உந்தித் தள்ளப்பட்டு, பிறப்பெடுத்தவுடன் மடிந்து கனம் கொண்ட அப்பிறப்பு அமிலக் கூட்டுச் சேர்க்கை உந்தித்தள்ளப் பட்ட நிலையில் தான், தனக்குகந்த மண்டல ஈர்ப்பின் வளர்ப்புத் தன்மைக்கு வலு நிலை கொண்ட வளர்ப்பு அமிலச் சத்துக் கிடைக்கின்றது.

இப்பால் வெளி மண்டல செயல் வளர்ப்பு நிலை இல்லா விட்டால் மண்டல ஈர்ப்பு வளர்ப்பு செயல்படாது. சூரிய மண்டலம் ஜீவராசிகள் வாழ முடியாத இடம், ஜீவ வளர்ப்பே இல்லாநிலை என்றெல்லாம் உணர்த்துகின்றனர். இவ் அண்ட கோடி அனைத்து வார்ப்பு நிலைகளிலும், இந்நாத விந்தற்ற நிலை இல்லா இடம் எதுவுமேயில்லை. வளர்ப்பின் வளர்ப்புத் தன்மை கொண்ட வளர் வளர்ச்சி செயலுடன் ஒன்றிய செயல் தொடர் வளர்ப்பு நாத விந்துக்கள்தான், இம்மனிதனும், இம் மற்றெல்லா மண்டலங்களுமே.

இந்நாத ஈர்ப்பு மோதலின் துடிப்பில்லாவிட்டால் எச்செயலின் வளர்ப்பு வளர்படுவதில்லை. வளர்ப்பின் வளர்ப்பே இந் நாதம் தான். எண்ணத்தால் எடுக்கும் நாதத்தை உயர் நாதச் செயலாய்ச் சேமிக்கும்பொழுதுதான், இவ்வுயிர்காந்தத் துடிப்பின் சக்தியை இவ்வாத்மா சேமித்து அதன் வளர்ப்பிற்குகந்த அணு வளர்ச்சியின் வலுவைத் தன் வலுவாக்கி ஜீவ சக்தி வாழ முடிகின்றது.

இதன் தொடர்பில் தனக்கு சாதகமான வலுத்தன்மையை கூட்டிக்கொள்ள இம்மனித எண்ண நாதத்திற்குத்தான் உண்டு. இதன் உண்மையை உணர்ந்தவர்கள் நம் இந்துமத, தர்மீக, தத்துவ ஞான செயல் மணிகளாய் பல ஞானிகள் இஜ் ஜெபமுறையின் நாத ஒலிகொண்ட சில மந்திர ஒலிச் சேர்க்கையின் செயல் கொண்டு, அச்செயல் வளர்ப்பின் தன்மைகொண்ட பல கோடி ஆண்டுகளாய் வளர்ச்சிகொண்ட, இச்சூரிய குடும்பமல்ல, பல சூரியனின் வளர்ச்சிபெற்ற ரிஷி அலையின் தொடர் நிலை பெற இம் மந்திர நாத, யாக, ஜெப பூஜைவழிபாட்டில் ரிஷித்தன்மை வளர்ப்பு ஞானியாக ஒளிர்ந்தனரப்பா இவ் இந்து மத இப்பூஜை முறை, மந்திர நாத ஜெபத்தொடரினல்.

**28–2–81**

ஏழு வகை குண சேர்க்கையின் அமிலத்தன்மைகொண்ட இப்புவியின் நாத ஈர்ப்பு வளர்ச்சியின் உண்மையறிந்த ரிஷிகள், தன் ஞானத்தின் தொடர் சித்து நிலைகொண்ட காலத்திலேயே, இவ் ஒலி நாதத்தின் ஈர்ப்பைத் தன் ஆத்ம உயிர் சேமிதம் கொள்ள, இவ் யாக பூஜை முறையில் இப்புவியின் மணம், சுவை, உலோகம் இவற்றைப்போன்று ஏழு தன்மைகொண்ட வஸ்துக்களை அதிகமாக யாக குண்டத்தில் செலுத்தி, அதிலிருந்து வரும் புகையினல் தன் சுவாச ஈர்ப்பிற்கு எடுக்கும் நிலையில் சுவை நிலைக்குகந்த இப்புகை மண்டலத்தின் அமில விகித நிலையைக் கொண்டு எந்தெந்த அமிலச் சேர்க்கையின் புகை சுவாச நிலையைத் தன் ஈர்ப்பிற்கு எடுக்கின்றதோ அதே மந்திர ஜெபத்தை ஜெபித்துக் கொண்டே அவ்வலைத்தொடரின், மற்ற மண்டலங்களின் வழித் தொடர் அலை ஈர்ப்பிற்கு, இவ்வுடல் பிம்ப இயந்திர அணுக்களின் வளர்ப்பை இயங்கச் செய்து, உயிராத்மாவின் செயலைக்கொண்டு அவ்வலைத்தொடரின் சக்தியைத் தன் ஜீவ சக்தியுடன் கூடிய அணு மண்டல ஆத்ம உயிரின் வளர்ப்பிற்கு வலுவாக்கிக் கொண்டார்கள்.

வீணையின் நாதத்தில் சேர்க்கப்படும் அத்தந்திகளின் நிலையைக்கொண்டு, எப்படி ஒலி மாறுபாடு ஏற்படுகின்றதோ, அதைப் போன்றே இவ் எண்ண ஒலி நாதத்தில் ஜெபிக்கப்படும் ஜெப ஒலியின் தன்மைகொண்ட அதனதன் தொடர் குண வலு அலை இவ்வாத்ம உயிர் எடுத்துக்கொள்கின்றது.

ரிஷிகளையும், சித்தர்களையும் உணர்த்திய நிலையெல்லாமே ஜெப மெடுத்த தன்மையிலும், பூஜை, யாக வழித்தொடரிலும்

தான், நம் முன்னேர்கள் நமக்குச் சுட்டிக்காட்டி, அதன் உண்மை உணர்வை அறியமுடியா விகிதத்தில் இன்று நாம் உள்ளோம்.

இப்புவியின் வளர்ப்பிலிருந்தே, தன் ஜீவ பிம்பத்தின், தன் ஞான வளர்ப்பை அறிந்து கொள்ளும் செயல் யாவும், அவர்கள் இப்பூஜை யாக வழிபாட்டில் இம்மந்திர நாதத்தால் பல சக்தியைப் பெற்றனர். நாற்பத்தி எட்டு நாள் விடாமல் யாகம் செய்தார்கள் என்றும், சில ரிஷிகள் சில குறிப்பிட்ட மரங்களில், நதி ஓரங்களிலிருந்து ஜெபமிருந்தார்கள் என்றும் அறிந்திருப்பீர்கள். அந்த ஞானிகள் தன் வலுவின் சக்தியை வலுப்படுத்திக் கொள்ள, தன் உயிராத்மாவின் வளர்ப்பிற்கு பல அலைத் தொடர்புகளை எடுத்து வலுவாக்கிக்கொள்ளும் வளர்ப்புக்குத்தானப்பா இவ் வழிபாட்டுத் தன்மையை ஜெபம் கொண்டு எடுத்தார்கள்.

இஜ் ஜெபத்தால் ஓதிய தியான ஈர்ப்பின் வலுத்தன்மை சேர்க்கையாக, தன் உடல் கூறு அமில வளர்ப்பே அவ்வலைத் தொடர்பின் வளர்ப்பாய், தன் உயிராத்மா வளர்ந்த பிறகு அவர்கள் சொல் நாதத்தின் வாக்குத்தன்மையின் பலிதமும், இப் பார்வையின் தன்மையிலேயே நினைத்த நினைப்பு நடைபெறும் வலு கூட்டிக்கொள்கின்றனர். பார்வை பட்டாலே எந்தக் குணத்தில் அப்பார்வை செலுத்துகின்றனரோ, அவ் அமில ஈர்ப்பு இச் சுவாசத்தின் அலையினுல் அவ் இடத்தில் பாய்ந்து, அதன் தன்மைதான் அங்கு நடக்கும்.

இஜ் ஜெபத்தால் தியானம் கொண்டு, தன் வலுவை வளர்த்துக்கொண்ட ஆத்மாக்களின் ஈர்ப்பு நிலையானது நேராக மேலிருந்து சூரியனின் அலை வலுவை இவ்வுடலின் மேல், சிரசில் பட்டு இவ்வுயிர்த் துடிப்பின் வளர்ப்பைக் கொண்டு சுவாச இயந்திரம் இயங்குகின்றது. பூமியின் ஈர்ப்பு பிடிப்பு குறைந்து விடுகின்றது. பூமியின் கீழ்நோக்கிய சுவாச எண்ண அலையுடன் வாழும் தன்மையில் பல எண்ண மோதலின் சிக்கலுடன் இக்கனம் கொண்ட சுவாசம் எடுக்க, இப்புவிப்பிடிப்பின் சுழல் பிடிப்பாகத் தான் இருக்க முடியும்.

இதிலிருந்து விடுபட்ட சப்த ரிஷிகள்தான், தன் ஞானத்தால் தன் வலுவின் சக்தியைப் பார்வையிலும், சொல்லாற்றலிலுமே எத்தன்மையையும் வளர வைத்தனர். இப்புவியில் வாழும் ஆத்மாக்களான நாமும், இவ்வலுத்தன்மையை வலுவாக்கிக் கொண்டோமானுல், அதன் வளர் தன்மையின் செயல் வழித்தொடராய் ஒவ்வொருவரும் செயலாக்கி, இந்நாத ஈர்ப்பின்

வீரிய சக்திகொண்ட இம்மனித ஆத்மாவின் செயலினல் மட்டும் தான் இவ்வலுவின் வலுவைக் கூட்டிக்கொள்ள முடியும்.

**2–3–81**

நம் சுவாசத்தால் எடுக்கும் மணத்தைக்கொண்டு இவ் உயிராத்மா அவ்வலேயைச் சேமிக்கின்றதென்று முதல் பாட நிலே யிலிருந்து சொல்லி வருகின்றேன். அமிலத்தின் மோதலின் நாத ஈர்ப்பு உயிரணுத்தன்மை எந்தெந்த அமிலமுடன் எவ்வ மிலச் சேர்க்கை சேர்ந்து அதன் நாதம் பிறக்கின்றதோ, அந் நாதத்திற்குகந்த சேமித அணுத்தன்மைதான், எக்கூட்டுச் சேர்க்கை சேர்ந்ததோ அதன் வளர்ப்பு அணு பிறக்கின்றது.

இவ்வுடல் பிம்பத்தின் எண்ண உணர்வில் எடுக்கும் சுவாச நாதத்தின் மோதலின் அணுத்தன்மைதான், இஜ் ஜீவ பிம்ப உடல் வளர்த்து இவ்வாத்மா வலுக்கொள்கின்றது. இப்பிம்ப உடலின் உணர்வு அணுக்களின் வளர் தன்மையில் நாதத்தின் இசையின் (சங்கீதம்) தன்மைக்கும், அதிர்வு வெடி, இடி இவற்றைப் போன்று பயங்கர ஒலி ஈர்ப்பின் நிலே செவிக்கு ஏற்கும் மோதலேக் கொண்டு இச்சுவாச அலே உணர்வு அச்சம் அதற்குகந்த அணுக்களே தன் ஈர்ப்பில் வளர்க்கின்றது.

இம்மனித ஆத்ம நாத ஒலி ஈர்ப்பு செவி செயல் தன்மை மற்றெல்லா ஜீவராசிகளேக்காட்டிலும் ஒலி ஈர்ப்பு விகித வீரிய தன்மைகொண்டது. மற்ற ஜீவராசிகள் ஒளிபாய்ச்சி, சுவாச மண நுகர்வுத்தன்மை கொண்டுதான் அதன் ஈர்ப்பு நாதத் தன்மை உள்ளது.

பார்வையின் ஒளிபட்டு சுவாச மணத்தின் நுகர் தன்மை மனிதனேக் காட்டிலும் மிருக நிலேக்கு (சிலவற்றிற்கு) கூடி இருந் தாலும், மனிதனே ஒத்த செவி ஈர்ப்பு நாத வளர் சக்தி மற்ற நிலேகளுக்குக் குறைவு. உணர்வால் எடுக்கும் எண்ணநிலேக்கொப்ப சுவாச மோதல் வளர்க்கும் அணு வளர்ச்சி அலே சக்தியால்தான் இவ்வுடலேச் சுற்றியுள்ள ஆத்ம வலு வலுப்பெறுகிறது.

ஆத்மாவின் நிலேக்கொப்ப உணர்வுதான் இவ்வுடல் வெளிப் படுத்துகிறது. ஆத்மாவின் உணர்வையும், உணர்வின் ஆத்மாவை யும் இவ்வெண்ணத்தின் ஈர்ப்பு நிலேகொண்டு, ஒளி பாய்ச்சி ஒலி கேட்டு இம்மனித ஆத்மா மாற்றியமைக்க முடியும். ஒளி பாய்ச்சி ஒலி ஈர்ப்பின் நிலேக்கொப்ப இவ்வண்ணக்கலவை அமில வளர்ப்பு மோதலின் பிம்ப நிலேயை எப்படிக் காண்கின்ருேமோ,

அதைப் போன்றே இவ்வொளி பாய்ச்சி ஒலி ஈர்க்கும் எண்ணத்தின் ஓட்ட நிலையை இப்பிம்பமல்லா ஆவி அணுச்சேர்கையின் நிலை முறையை பிம்பத்தன்மை மாறிய அமிலக் கூட்டின் ஆத்ம வடிவுகளை அமில உருவாய் பிம்பமில்லாத் தன்மையில் நிழல்பட உருவத்தில் காண முடியும்.

சப்த ரிஷிகளின் தன்மையிலிருந்து மற்றெந்த ஜீவ பிம்ப மாற்றம்கொண்ட ஆவி அமிலச் சேர்க்கை ஆத்ம உயிர்களையும் இவ்வொளிபாய்ச்சி, ஒலி ஈர்த்து இவ்வெண்ண ஓட்ட நிலைக்கொப்ப எதனையுமே அறியும் ஆற்றல் அருகிலுள்ள இடங்களையும் இவ்வெண்ணத்தைச் செலுத்தும் எவ்விடமாய் இருந்தாலும், இவ்வெண்ணத்தைச் செலுத்தி செயல்முறைப்படுத்தும் நிலையில் காண முடியும்.

இதன் தொடரிலேயே ஞானத்தால் காணும் தன்மை போன்றே, இவ்வுணர்வின் அச்ச அதிர்வு நிலையினுல் சில ஆத்மாக்களின் அலைத்தொடர்புடன் இவ்வச்ச உணர்வுடன் சென்ற ஆவி உலக உயிரின் தொடர்பும் இவ்வலை ஒளி, ஒலி ஈர்ப்புத் தன்மையில் சில கோவில் விழாக்களில் எழுப்பப்படும் சில மண, ஒலி ஈர்ப்புத்தன்மையில் அதே உணர்வுகொண்ட அலை உணர்வு மோதல் ஏற்பட்டவுடன், அவ்வாவி சேர்க்கை ஆத்மாவின் மோதலும், ஜீவ பிம்ப ஆத்மாவின் மோதலும் ஒன்றுபட்டவுடன், அதன் தன்மையில் அது சேமித்து வாழ்ந்த, நிலைக்குகந்த தன்மை உணர்வு செயல் உருவாய் ஜீவ ஆத்மா தன்னையறியாமல் ஆடி அதன் நிலையெல்லாம் இவை பேசும்.

பல மொழிகளிலும், அதன் சுவைக்குகந்த உணவைக்கேட்டு உண்டும் இதன் நிலை தெய்வமே வந்து தனக்கு உணர்த்தியதைப் போல் பேசும். இவ் ஈர்ப்பலையின் நிலைக்கொப்ப ஆத்ம எண்ணம் சென்றுவிட்டால் தன் நிலை மறந்து எவ்வலைத்தொடர் ஆத்மாக்களின் எண்ணத்தையெல்லாம் அவ்வாத்மாவின் நிலைப்படிதான் இஜ் ஜீவ ஆத்மா வாழ முடியும்.

இந்நாதத்தால் எடுக்கப்படும் (சேர்க்கப்படும்) உருவங்கள் தான் அனைத்துமே. இந்நாத சேர்க்கை எண்ணத்தை, இதை உணர்ந்து ஒவ்வொருவருமே இந்நாத விந்துவை எவ்வெண்ணத்தால், செலுத்தும் ஒலி ஈர்ப்பு நம்மைச் சுற்றியுள்ள பல ஒலிகளிலும் நம்முடன் எதிர்கொண்டு கலந்துறவாடிப் பேசுபவர்களின் ஒலி அலையிலும் இவ்வெண்ண ஈர்ப்பை நாம் செலுத்தும் நிலைக்கொப்ப சுவாச அணு வளர்ப்பு உணர்வு சக்தியைத்தான் இவ்

வாத்ம உயிர் சேமித்து நம் வளர்ச்சித்தன்மையின் குணப்பிடி உள்ளது.

**3–3–81**

அதுமட்டுமல்லாமல் நாம் வாழக்கூடிய இல்லங்களிலும், நாம் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களிலும், இஜ் ஜீவனுடன் கூடிய உணர்வின் எண்ண ஒலி நாதம் வெளிப்படுத்தும் அலைத் தன்மையின் ஈர்ப்புத்தன்மை, அந்தந்த இடங்களில் அதிகமாய் நாம் உட்படுத்தும் இடம் எல்லாவற்றிலும், எவ் ஒலி கொண்ட எண்ணத்தின் செயலாய் குண நிலை சுவாசம் பதியப்பட்டதோ, அத்தன்மையின் அலையை இல்லங்களின் சுவர்களும், தரையும் ஈர்த்து, அவ்வொலி அலையின் எதிர் அலை சுழற்சி அவ் இல்லத்தில் சுழன்று கொண்டேதான் இருக்கும்.

பழங்கால மனையியல் சாஸ்திரங்களில் தெரிந்தோ, தெரியாமலோ சில நிலைக்கற்களை இல்லங்களில் பதிய வைப்பதிலிருந்து, சுவருக்கு பூசப்படும் கலவை முதற்கொண்டு, சில விதிமுறை வழி நிலையை ஏற்படுத்தினர்.

பூமியின் தன்மை எப்படி அதன் குண ஈர்ப்புக்குகந்த அமில வெக்கையை வெளிப்படுத்துகின்றதோ, அதைப்போன்றே, இவ் வெண்ணத்தில் வெளிப்படுத்தும் உணர்வு குண நாத அலைகள், இல்லங்களில் வாழ்பவர்களின் குண நிலையின் எதிர் ஒலி, ஒலி பரப்பிக்கொண்டேதான் இருக்கும்.

இம்மனித ஆத்மாவானது, தான் வளர்த்து வெளிப்படுத்திய அலைத்தொடர்பிலிருந்தும், தன்னுடன் வாழும் சுற்றத்தின் உணர்வுத்தன்மையின் ஈர்ப்புப்பிடி குண நிலையிலிருந்தும், காற்று மண்டல ஆவி ஆத்ம உயிரின் சுழல்பிடியின் மத்தியில் இருந்தும், தன் வளர்ப்பின் ஞானச் செயலை இப்பிடியிலிருந்தெல்லாம் மீட்டுத் தான், தன் ஞான வளர்ப்பை உயர் ஞானிகளின் தொடர்புடன் சமம்கொண்ட ஈர்ப்பலை எண்ண உணர்வுடன், தன் ஜெப ஞானம் இருக்கவேண்டும்.

இன்றைய விஞ்ஞானச் செயற்கை யுகத்தாரால், இக்காற்று மண்டல முழுமைக்குமே, இக்காந்த மின் அலையைப் பிரித்தெடுத்து, ஒலி அலையாய், செயற்கை முறையில் பல செயலுக்காக ஒளிக் காட்சி, வானொலி மற்றும் பல ஒலி அலைகளின் அரசியல் ஒலித் தன்மை தொடர்பு நிலைக்கும், அரசாங்க வழி நிலைக்கு உகந்த சில அலைத்தொடர்பு சாதன நிலையினாலும், இக் காற்று மண்ட

லத்தில் படரவிட்டுள்ள இவ்வலைத்தொடர்பினால் ஜீவசக்தி கொண்ட மனித உணர்வின் எண்ணமே இவ்வலைத் தொடர்பைக் கேட்பதினால் சுயமாய்ச் சிந்திக்கும் ஞான நிலையற்று, இவ்வலை நாத மோதலினால் தன் உணர்வு ஞான எண்ண ஈர்ப்பே தன் ஞானத்தைத் தான் வளர்க்கும் செயலற்ற தன்மையினால், இவ்வொலி நாத மின் அலைத்தொடர்பு கொண்ட செயற்கை நாத மோதலினால் ஜீவத்துடிப்பு நாதமே தன் நிலை மழுங்கிய உணர்வு செயலாய்ச் செயற்கையுடன் சிக்குண்ட மனித ஞானம் பேசுகின்றது இன்று.

தன் வளர்ப்பின் உண்மை ஆத்ம ஞானத்தை உணர்ந்து, இப்பிடி உணர்வின் இறுக்கத்திலிருந்து, தன் வளர்ப்பை வளர்க்கும் உண்மை நிலை உணர்ந்து, தொடர்பு கொள்ளுங்கள் உயர் ஞானிகளுடன்.

**9–3–81**

பிடி உணர்வு என்பது அவர்கள் பெற்ற செயல் தன்மை, தன் பிம்ப உடலையே அடுப்பாக்கி, இச்சரீர உடல் எதைச்சமைத்து அனுப்புகின்றதோ, இதன் சத்தை ஆத்மா எடுத்து, அவ்வாத்மா வின் செயலுக்குகந்த நிலைதான் உயிர் செயல்படுத்தியது. சரீரத் தில் சரீரத்தையே வளர்க்க வலுவாக்கி ஆத்மாவின் அமில வளர்ச்சிக்குகந்த சுவைகொண்ட உணர்வாய்த்தான் சரீரக் கூடு உள்ளது. ஆத்மா பெற்ற வலுவைக்கொண்டு அவ்வாத்மாவின் உயிரானது எந்நிலத்தில் இத்தாய்க்கருவில் ஆத்ம உயிரின் அமில கலவைக்கூடு உராய்ந்து, இவ்வாத்மாவின் ஆவிநிலை சுழற்சியில், பிம்பமற்ற முறையில், தன் அமிலச் சுவைக்கு உணர்வு, சொல் நாத சக்தியும் இல்லா நிலையில், நிலமான தாய்க் கருவுக்கு வளர்ப்பு நிலைக்கு வந்தவுடன், தாயின் உணர்வு சுவாச நாத நிலையினால் இவ் வாத்ம உயிருக்கு உணர்வு எண்ண மோதல் உருவாகும் தருணத் தில், இந்நாதத்தின் துடிப்பு இயக்கத்தால் ஆத்ம உயிரின் உராய்வு சேர்க்கை கொண்ட சரீர அவயவங்களின் உருவக வளர்ப்பு நிலைகொண்டு, பிறப்பெடுத்து வளரும் தருவாயில், இதில் எடுக்கும் உணர்வுத் துடிப்பு சுவாசத்தில் உண்ணும் உணவை மட்டு மல்லாமல், எந்தெந்த எண்ணக்கலவைகளை எண்ணி எண்ணி இச்சரீர சுவாசத் துடிப்பு உள்ளதுவோ, அதற்குகந்த அமில இனத்தை இச்சரீரம் சமைத்து வெளிப்படுத்தும் அலை உணர்வைத் தான் இவ்வாத்ம வலு கூட்டிக்கொள்கின்றது.

இப்பிம்ப உடலின் மோதலினால், மோதல்என்பது இப்பூமியின் பிடிப்பிலும், சூரியனின் அலை வீச்சிலும், இச்சுழற்சியின் சுழலுடன்

இவ்வலை மோதலின் பிடிப்புடன் வாழும் இச்சரீரத்தின் மேல் இப்பூமியைச் சுழலவைக்கும் இக்காற்றலையின் ஆகர்ஷண சக்தி யானது, இப்பிம்பத்தின் மேல் மோதி, இப்பிம்பத்தின் துடிப்பு நிலை செயல்பட்டால்தான் சுவாச நிலை சுவாசமெடுத்து இக்கவன நரம்பிற்கு மோதுண்டு அதன் ஈர்ப்பு சிறு மூளைக்குச்சென்று இச்சரீர பிம்பக் கோளமே இயங்கவல்ல அடுப்பைப் போன்று அதில்போடும் எண்ண உணர்வையும் உண்ணும் உணவும் சரீர அவயவங்கள் அதைச் சமைத்து ஆவியாக்கி, அவ்வாவியின் சக்தியை இவ்வாத்மா ஈர்த்து இப்பிம்ப உடல் வாழும் தருவாயில் இவ் உணர்வின் எண்ணத்தில் எடுக்கும் குண நிலைக்குகந்த சமநிலைகொண்ட வாழ்க்கை நிலை அமைத்துக்கொண்ட மனிதன் ஆரோக்கிய நிலை யுடனும், நீண்ட நாள் வாழ்க்கை வாழ்வுடனும் வாழ்கின்றான்.

இவ்வலை உணர்வின் எண்ண குண ஈர்ப்பில் இவ்வுடல் சமைக்கக்கூடிய வலுவைக் காட்டிலும், வலு என்பது இவ்வுடல் பிம்ப சரீரத்தின் அமிலக்கூட்டின் சேர்க்கைச் செயல் வடிவ வளர்நிலைக்குகந்த, தான் பெற்ற வலுத்தன்மையின் சக்திக்கு உகந்த செயலை அவ்வுடலுக்குத் தரும்பொழுது உடல் இயந்திரக் கோளமானது சீராகச் செயல்கொள்ளும்.

அதைவிட்டு மனிதன் தன் எண்ண உணர்வையே இன்று பல ஈர்ப்பின் பிடியில் சிக்கி பேராசைப் பிடி அலைக்காகத் தன் எண்ணத் தைப் பல நிலைகளில் மோதவிட்டு, தனக்கு எண்ணத்தின் சாதக மற்ற நிலை ஏற்படும் தருவாயிலெல்லாம், சலிப்பு, கோபம் இப்படி கனமான சுவாச அலையை எடுத்து, எடுத்து, அக்குணமுடன் உள்ள நிலையில் எண்ணக்கூடிய உணவும், அதே அமிலத்தைத்தான், இவ்வுடலுக்குள் வளர்க்கக் கூடிய தன்மைகொண்டு, இச் சரீரத் தில் சமைக்கப்படும் நிலையையே இவ் வெண்ணத்தால் கனமாக்கி, அதன் வலுவை அவ்வாத்ம உயிருக்குத் தரும்பொழுது, அதே உணர்வு எண்ண ஆத்மாவாயிருந்தால், அதன் பழக்கப்பட்ட வலுவாகி வாழ்ந்திருக்கும் ஜீவத்துடிப்புடன், சில காலமாவது மாறுகொண்டு மாறுகொண்டு இவ்வெண்ண உணர்வுகளை இச் சரீர பிம்பம் எடுக்கும்பொழுது, அதை ஏற்காத நிலைகொண்டு, இச்சரீர அமைப்பில் சுகவீனம் காணுகின்றது.

மனிதன் எடுக்கும் குண நிலையில் எண்ண உணர்வில் சமைக் கப்பட்ட ஆவியின் வலுத்தான் ஆத்மாவின் உராய்வுக் கவசமாக உராய்ந்து உராய்ந்து, அதன் வலுத் தன்மையை காந்த ஈர்ப்பு வளர்ப்பாய், இப்பிம்ப உடலின் அச்சான எலும்புகளின் வளர்ப் பின் உராய்வு வலுக்கூடி ஆத்மாவின் வலுவும் வளருகின்றது.

இப்பிம்ப உடலின் நிலையைக்கொண்டு, பல செயல்களைப் பல கோடி ரூபத்தில், வளர்ப்பின் வளர்ப்பாகப் பலகோடி மண்ட லங்களை வளர்க்கக்கூடிய வளர் நிலைக்குகந்த வலு வித்துத்தான் இப்பிம்ப உடல்.

சப்த ரிஷிகளின் செயலை வளர்க்கவும் இவ்வொலி நாத செயல்கொண்ட ஜீவத்துடிப்பு உள்ள எண்ணத்தின் சரீரத்தினுல் தான், பலகோடி சக்திகளை உருவாக்கும் சப்த ரிஷிகளே, இப் பிம்ப உடலின் தொடர்பு கொண்டு, தன் வலுவை வளர்க்கின் ருர்கள் என்பதின் உண்மைப்பொருள்தான், நாம் இன்றளவு காணும் இயேசு கிறிஸ்து, ஐயப்பன், முகமது நபி, ஆதிசங்கரர் போன்றவர்களைப்போன்று, பலர் நிலை தெய்வீக வளர்நிலையின் உண்மைத் தன்மை எப்படிக் காண்கின்றேமோ, அதைப்போன்றே, இச் சரீர பிம்பத்தின் உண்மை உணர்ந்து ஜீவ சக்திகொண்ட துடிப்பு ஆத்மாவினுல்தான், இச் சரீரம் சமைக்கும் உணர்வின் வலுவைக்கொண்டு, பல வலுவான வளர்ப்பின் வளர்ப்பாய், இச் சரீரக் கூட்டின் தொடருடன் வளர்க்கலாம். ஜீவன் பிரிந்த ஆத்ம உயிருக்குத் துடிப்பு நிலையும், நாத ஒலி வெளிப்படுத்தும் ஜீவத்தொடர்பும் இல்லாததினுல், அதன் எண்ணத்தின் ஈர்ப்பை தன் எண்ண அலைக்குகந்த ஆத்ம உடலின்மேல் தன் உணர்வை, தன் ஆத்மாவின் உயிரையே தன் குண நிலைக்கொத்த உணர்வு நிலை கொண்ட ஜீவ சரீர ஈர்ப்பிற்கு வந்து பிறப்பெடுக்கும் ஆத்மாவும் உண்டு. பிறப்பிலுள்ள ஆத்மாவிற்கு மேல் வலுவான எண்ண வேட்கை கொண்ட ஆத்ம உயிர் பிற ஆத்மாவின் மேல் படரும் பொழுதுதான் தன் வலுவுக்குமேல் வலுவான ஆத்மா தன் ஈர்ப்பில் வரும்பொழுது சிலரின் நிலை புத்தி பேதலித்த நிலையும், சில கொடூர எண்ணங்களின் வெறி நிலைகொண்ட குண நிலை யும் அமைவது.

பேய் பிடித்து விட்டது, பிசாசு பிடித்தது என்றெல்லாம், இக்குண நலத்தின் எண்ண மாற்ற உணர்வினுல் சில அலைத் தொடர்புகளின், ஆத்ம உணர்வின் ஈர்ப்பினுல், தன் நிலை மறக் கின்ருன் மனிதன்.

**10–3–81**

இவ்வுயிர் ஆத்ம வலு எதன் குண வித்தாய் வலுப் பெற்றதோ, அதன் தொடர்கொண்ட செயலில்தான் மறு பிறப்பு நிலையும், சில எண்ணங்களின் உணர்வுடன் மோதுண்டு பிற சரீரத்தில் சாடும் நிலையிலும், தன் வளர்ப்பின் வித்து குண ஆத்ம உயிரின் செயல் குணம்தான் செயல் கொள்ளும்.

உயிரணு தோன்றி, அவ்வுயிரணுவின் வளர்ப்பு மூலாம் ஒவ்வொரு செயலிலும் வளர்ப்பு செயல் மோதுண்டு மோதுண்டு, அவ்வுயிரணுவின் மோதலின் வளர்ப்பு வலுக்கொண்டு ஆத்ம நிலை பெறும் நிலையை முந்தைய பாடத்தில் உணர்த்தியுள்ளேன். உயிரின் ஆத்ம நிலைக்கு எப்படி அதன் உராய்வுத்தன்மை வலுக் கூடுகின்றதென்றால், தென்னைமரத்தின் பலனான அக்காய்கள் எப்படி இளநீர் வளர்ந்து அந்நீரானது அதன் உஷ்ண அலையில், அம்மட்டையின் உள் பாகத்தில் உராய்ந்து, வேடுகட்டி வேடு கட்டி, நீர் நிலை சுண்டி, பருப்பு வளர்ந்து முற்றி அதன் பலனான எண்ணெய்வித்தை வளர்க்கின்றது?

தென்னை மரத்தின் வேர் நிலையில் இருந்து அது சத்து எடுப்ப தில்லை. மேல்நோக்கிய சுவாசம் கொண்ட தாவர இனத்தின் ஈர்ப்பு நிலையில் மோதலில் ஒளிபட்டு, அது ஈர்த்துக் கீழிருந்து மேல் வளரும் வளர்ப்பின் பலனின் தன்மையில், பல வித்துக்களை தென்னை மரம் உருவாக்குவதைப்போன்றே, ஒவ்வொரு வளர்ப் பின் வித்தின் தொடர் வளர்ப்பு, அணு வளர்ச்சி மூலாம் ஒன்றில் மோதி வலுக்கொண்ட தன்மை போன்றே, இம்மனித ஆத்ம உயிரின் வளர்ப்பு நிலையின் வலுவை இவ்வாத்மா சேமித்துக்கொள்கின்றது.

சேமித்த வலுவின் தன்மை எத்தகையது? நீரில் மிதக்கும் மரங்களைப் போன்று, இவ்வலுக்கொண்ட ஆத்ம நிலை இவ்வுயிராத்மா பெற்றதென்றால் எவ்வீர்ப்பின் பிடிக்கும் சிக்காமல் இச்சரீர பிம்பமே காந்த மின் அலை ஒளி சக்தி பூண்ட உயர்வு நிலை கொண்ட ஆத்மாவாகலாம்.

அன்றைய சித்தர்களிலும், சப்த ரிஷிகளின் நிலையிலும் தன் சரீர பிம்பத்தையே இந்நிலைக்குகந்த வளர் நிலைக்கு உட்படுத்தித் தான், தன் வளர்ப்பின் வளர்நிலையைப்பெற்றார்கள். நல்வழியின் ஒளி நிலைகொண்ட உயர் ஆத்ம வழித்தொடர் பெரு நிலையில், பல எண்ண நிலையுடன் வாழக்கூடிய தன்மையில் சில அலைகளின், நம்மைச் சுற்றியுள்ள இக்காற்றலையில் படர்ந்து வாழும், பல எண்ணங்கள் கொண்ட ஆத்மாக்களின் நிலையில் அதற்குகந்த, அதன் செயலைச் செய்விக்க, அதற்குச் சொல்லாற்றலும், செயல் திறமையும் இல்லாத தன்மையில் அதன் எண்ண ஆசையை நிறை வேற்றிக்கொள்ள மனித உடலில் சாடும்பொழுதுதான் சிலருக்கு வாதத்தன்மையும், இதன் தொடர்புகொண்ட சில வியாதிகளும், இவ்வலை உடல் மேல் பாய்ந்தவுடன் அதன் தன்மையை உடல் ஏற்காதபட்சத்தில் எந்த இடத்தில் அவ்வலை சாடியதோ, அவ் விடத்தில் வளரும் அணு வளர்ச்சி, அதன் குண தன்மையையே,

தன்மைக்குகந்த அணுவை வளர்ப்பதினுல் அவ்வளர்ப்பின் வலுவை உடலுக்குகந்த ஆத்மா ஏற்காத பொழுது, உடலேச்சுற்றியுள்ள ஆத்மாவானது, அவ்விடங்களுக்கு தன் அலேயை அனுப்பாததினுல் செயலிழந்த தன்மை அவ் உறுப்புகள் ஏற்க வேண்டியுள்ளது.

இளம்பிள்ளே வாதங்களில் செயலற்ற தன்மையிருந்தாலும், அங்கங்களின் நரம்பு மண்டல உதிர ஓட்டங்களும், துடிப்பு நிலேயும் உள்ளது. உதிர ஓட்டமில்லாவிட்டால் அழுகிய தன்மை யல்லவா அந்நிலே பெற்றிருக்கும். உடல் முழுமைக்கும் தொடர்பு கொண்டல்லவா அச்செயல் இருக்க வேண்டும்.

மாறுகொண்ட அணு வளர்ப்பின் நிலேயினுல்தான் இவ் வாதத்தன்மை கொண்ட வியாதிகளின் வளர்ப்புகள் வளர்ந் துள்ளன. எண்ணத்தால் எடுக்கும் குண நிலேக்குகந்த சுவாச அலேயின் சம வாழ்க்கையற்றவர்களின் வாழ்க்கையிலெல்லாம் அவரவர்களின் குண நிலேக்குகந்த சுவாசத்தால் அதற்குகந்த பலனுன தொடர் அலே செயலேத்தான் காற்று மண்டல ஈர்ப்பி லிருந்தும் பெற முடியும். ஈர்ப்பு நிலேக்குகந்த ஆவிகளுக்கு நாம் தரும் இடத்துக்குகந்த வலுவாய்த்தான் சரீர பிம்பத்தின் ஆரோக் கிய நிலே வளருகின்றது.

எதனேயும் செயலாக்கக் கூடிய எண்ண சக்தியின் வலுவைக் கொண்ட மனித ஆத்மா இன்றைய காலத்தில் சிக்கியுள்ளது ஆவி உலக ஆத்ம பிடியில் தான்.

**11–3–81**

பெரியோர்களின் வாக்குப்படி 'மிரண்டவனுக்கு இருண்ட தெல்லாம் பேய்' என்ற சொல் கூற்று உள்ளது. அதன் தொடர் யாவை? பேயைப் பார்க்கமுடியுமா? பிசாசு உண்டா? இரத்தக் காட்டேரிகள் வாழ்கின்றனவா? என்பன யாவையுமே உண்மை தான்.

தற்கொலே கொண்ட, ஆவேச அலே உணர்வுடன் ஜீவன் பிரிந்த, ஆவி உலக உயிர் ஆத்மாக்கள் சில இல்லங்களிலும் அவை வாழ்ந்து பழக்கப்பட்ட இடங்களிலும் அதன் எண்ண ஆசையைச் செயல்படுத்த வேண்டியவர்களின் தொடர் வட்டமுடன் இக்காற் றலேயின் சுழற்சியில் சுழன்றுள்ள ஆவி உலக ஆத்ம உயிரின் அமிலக் கூறுனது உள்ள இடங்களுக்கு சரீர ஜீவ பிம்ப உடல்கொண்ட எண்ண உணர்வுடைய மனிதன், பயம் கலந்த அச்ச நிலேயுடன், பல உணர்வுகளில் செல்லும்பொழுது, ஆவி உலக ஆத்மாவின்

அலைத்தொடரும், சரீர பிம்ப உடலின் அலைத்தொடரும் இவ் ஈர்ப்பலையில் மோதும்பொழுது, ஒன்றுடன் ஒன்று மோதுண்ட நிலையில், ஜீவ சக்தி கொண்ட துடிப்பு நிலை பெற்ற எண்ண உணர்வுடன், அவ்வெண்ணம் மோதியவுடன், இக்காந்த ஈர்ப்பு குண மின் அலைத்தொடர்புகொண்ட, இச் சரீர கோள நிலையுடன் மோதியவுடனே, எப்பயமுடன் இவ்வாத்மா சென்றதோ அத்தொடர் அலைக்குகந்த எண்ண குண ஆவி ஆத்மாவின் அமிலக் கூற்றை நிழல்படம் போல், இவ்வொலி நாத சக்திகொண்ட சரீர சுவாச மோதல் அதன் அலையின் மேல் பாய்ந்தவுடன், அது பேசிய நாதத்தையும் (வாழ்ந்த காலத்தில்) அதன் நிழல் உருவைப் பார்க்க முடியும் மனிதனுல், இன்று காணும் ஒளிக்காட்சி ஒலி அலையைப் போல், இத்தொடர் அலையில் இருந்தெல்லாம் மனித உணர்வுப்பிடி சிக்காவண்ணம் தன் ஆத்ம வலுவை ஞான ஈர்ப்பு வழித்தொடர்பு கொண்ட தொடர் அலையுடன் வலுவாக்கிக் கொள்ள வேண்டும்.

வலுக்கொண்ட ஜீவத்துடிப்பு ஆத்ம நிலை பெற்றுவிட்டால் எண்ணத் தொடர் அலையின் செயல் இல்லா நிலை ஒரு நொடிப் பொழுதும் இல்லை. நித்திரை உணர்வுகளிலும், இச்சரீர செயல் நடைபெறும் வழித்தொடரில் சுவாசமுடன் கூடிய உணர்வு எண்ண அலை ஈர்ப்பின் தொடர்கொண்ட நிலையுடன்தான் இவ்வெண்ணச் சுழற்சி இவ் இயந்திரக்கோளமும், மற்றக் கோளங்களும் எப்படி நிற்காமல் ஓடிக்கொண்டே உள்ளனவோ அதைப் போன்றே ஓடிக்கொண்டே உள்ள இவ்வெண்ண உணர்வு வளர்ப்பு நிலை ஜீவ சக்திகொண்ட மனித உடலுக்குத்தான் உண்டு.

ஆவி உலக ஆத்மாக்களின் எண்ண ஓட்டத்தின் வலு, இன்று நாம் எப்படிச் சில ஒலிப்பதிவுகளை நாடாக்களில் பதியவைத்து ஒலிபரப்புகின்ருேமோ, அதைப் போன்று அவை சரீரக் கூறுடன் வாழ்ந்த காலத்தில், தன் ஆத்மாவில் பதியவைத்த அலைத்தொடர் நாதச் சேர்க்கையுடன் தான், அதே தொடர்பு சுழற்சியுடன் அதே சுற்றலில் சுற்றிக்கொண்டுள்ள நிலையில், வளர் நிலைகொண்ட எண்ண சரீர உணர்வு இயந்திர மின் அலைத்தொடர்பு, அவ்வலைத் தொடர்புடன் பொருந்தும் பொழுதுதான், இவ் இயந்திர கோளப்பெட்டியின் செயலைக்கொண்டு அதன் நிலை பேசுகின்றது.

இவ்வாவி சுழற்சி வலுக்கூடி, அதன் தொடர்பு விட்ட செயலாய் செயல் கொண்டுள்ள வழித்தொடர் ஜீவ ஆத்மாக்கள்தான், இன்று பிறப்பில் வரும் ஆத்மாக்களின் தொடர் அலையே உள்ளது. தன் ஞானத்தை வளர்த்து சித்து நிலை கொண்ட ஆத்மாக்களின் நற்சக்தியின் தொடர் அலையையே அறியா வண்ணம் இன்று பல

வலுக்கொண்ட, வெறிகொண்ட பக்தி இயக்க ஆத்மாக்களின் அலைத் தொடர்புதான் வலுவாகியுள்ளது இன்று.

**17–3–81**

இந்நிலை எப்படி ஏற்பட்டது? ஆதிசங்கரர் காலத்திலும், அதற்கு முந்தைய காலங்களிலும், இப்பூமியில் பல மகான்கள் வளர்ந்தார்கள். தன் ஞானத்தால் தெய்வசக்திபெற்று, சப்த ரிஷியின் தன்மைக்கு தன் வலுவையும் வலுவாக்கிக் கொண்ட மகான்களை வளர்த்த பூமிதான் நம் தாய்ப் பூமி.

அதன் தன்மையில் தொடர் வளர்ப்பு நிலையற்று, அந்த ஞானச் செயலே விஞ்ஞானச் செயலாய், ஞானத்தின் தொடர் அலையின் செயல், செயற்கை ரூபத்தில் சென்றுவிட்டது. ஏட்டுப்படிப்பு வழிமுறையிலும், இவ்வொலி அலை மின்சாதன தொடர்பலையால். இதுவுமல்லாமல் தன் ஞானத்தால் வளர்ந்த சக்தியைச் செயல் கொண்டு வழிபெற்றவர்களெல்லாம், வளர்ப்பின் வளர்ப்பாய் செயலாக்க, தன் வலுத்தன்மையின் வலுவை எடுக்கவல்ல ஆத்ம வளர்ச்சி ஞானம் குன்றியதன்மையில், ரூப வழிபாட்டு முறைப் படுத்தி, கல்லில் சிலை செய்து வணங்கும் தொடர் ஏற்பட்டது, பக்தியைக் காட்ட.

அதுவுமல்லாமல் இப்பூமியின் வளர்ப்பில், சுழற்சி ஓட்ட கதியில், மண்டல ஈர்ப்பு சந்திப்பு நிலைகளிலெல்லாம், இப்பூமியின் வளர்ப்புத்தன்மையினால், பல மாற்ற பிரளய காலங்களில், ஒவ் வொரு பிரளய மாற்றத்திலும், இப்பூமியின் ஈர்ப்பு வளர்ப்பு செயல் ஓட்டமானது, வளர்ப்பின் நிலைக்குகந்த மாற்றச்செயலினால் அந்தந்த மாற்றத்திற்குப் பிறகு வளரக்கூடிய அணு வளர்தன்மை யும் மாறுவதோடு அல்லாமல், குண ஈர்ப்பின் அமிலமே மாற்றத் திற்கு முன் இருந்த நிலை வேறு, மாறிய பிறகு வளரும் நிலை வேறாக இப்பூமியில் படியும் அமில வலு மாறி விடுகின்றது.

தங்கத்திலோ மற்ற உலோகத்திலோ செய்யப்படும் பொருள் எப்படி மாறி மாறி அதை அழித்து நாம் மற்றொன்றை உருவாக்கும் பொழுது, அதனுடைய மாற்று ஏற்படுகின்றதோ அதைப்போன்ற நிலைதான் இத்தொடரில் வந்துள்ள ஞான வளர்ப்பு நிலை வளர்ச்சி தொடர் அலையே இப்பூமி வெளிக்கக்கும் அமில வளர்ப்பின் நிலைக்கொப்பத்தான் ஞானமும் வளர்கின்றது இன்றளவும்.

இந்த ஞானத்தின் செயல் முறை வழித்தன்மையே, ஆதிசங்க ரரின் காலத்திற்கு முந்தைய காலத்திலிருந்து, அவரின் காலம்

வரைக்கும் வளர்ந்த ஞான சக்தி, அதற்குப் பிந்தைய காலத்தில் அரசுகளின் போற்றலின் பேராசை உணர்வு நிலை அதிகப்பட்டு விட்ட மனித இன வளர்ச்சிப் பெருக்க நிலையினுல், மனிதனின் எண்ண ஈர்ப்பே இப்பேராசை உணர்வை அரசர்கள் ஆண்ட கால உணர்வில், அவர்களின் ஆதிக்க ஈர்ப்புப்பிடியில் சிக்கிய தொடர்பலே வளர்ப்பாய் ஒன்றின் தொடர் கொண்ட தொடர் வட்டச் சுழற்சியில் சுழன்று வருகின்றது இன்றளவும்.

அரசர்களின் காலத்தில்தான், இப்பக்தி வழிமுறை அதிகமாய் வளர்ந்தது. அதுவுமல்லாமல் இவ்வரசர்களினுல் சில அலேத் தொடர்களேச் சில சக்திவாய்ந்த பக்தி கொண்ட, தெய்வ குண சித்து நிலேகொண்ட அலேத்தொடர்புடைய தெய்வ ஆவி அலே களேத் தன் வசப்படுத்தி, தன் ஆதிக்க அரசு வாழ, பிற அரசுகளின் போர்த்தொடர்புகளுக்கு, இவ்வாவி அலே தெய்வ குண சக்திகளே, இவர்களின் பூஜா பலனுல் விக்கிரமாதித்தன் காலத்திலும், அசோக சக்கரவர்த்தி காலத்திலும், அதைப் போன்றே வீரபாண் டிய கட்டபொம்மன் காலத்திலும், பல அரசர்களும் இப்பூஜை வழி பாட்டுச் சித்து முறைபெற்று, ஆவியின் தெய்வகுண தேவதை களின் தாய் சக்தியை வணங்கி, அரசாண்ட காலத்தில் அரசர் களின் வலுவுக்கு வலுவாய் இச்சக்திகள்தான் ஆண்டன.

புராண, இதிகாச நூல்களில் சித்தர்கள்பால் தொடர் கொண்ட காவியங்களிலெல்லாம் ஆண், பெண் குண சக்தியின் தொடர்பில் உணர்த்தித்தான் உண்மை நிலேயெல்லாம் சிவசக்தி, விஞயகன், முருகன், விஷ்ணு என்றும் நாரதர் என்றும் ஆணின் தொடர்பு முறையை வலியுறுத்திய தெய்வ குணங்களாய் இராமரையும், கிருஷ்ணரையும், ஒவ்வொரு பிரளய மாற்றத் திலும், இராமரின் குண சக்தியையே பல ரூப அலே ஞான செயல் குண இராமனுய் உணர்த்திஞர்கள்.

சீதா இராமன், பலராமன், பரசுராமன் இப்படி கால மாற் றத்தின் குண நிலே வளர்ப்பு அமில எண்ணத்திற்குகந்த செயல் உருவ வளர்ப்பிற்கு அந்தந்தக் காலங்களின் வீரியத் தன்மைக்குகந்த நாமகரணங்களேச் சூட்டி, ஆண் குண அமிலத் தன்மைக்குகந்த தெய்வச் செயலேத்தான் சப்த ரிஷிகளின், சித்தர்களின் காலங்கள் உணர்த்தின.

அரசர்கள் காலத்தில் வணங்கிய தெய்வங்கள் யாவையுமே பெண் சக்தியான காளிமாதா என்றும், அதன் தொடர்பு ரூபத்தில் பராசக்தியென்றும், ஐக்கம்மா என்ற தாய் சக்தியும், உஜ்ஜயினி

காளி சக்தியும், சௌண்டம்மனின் தொடர்பும் இத்தொடர்பில் வந்தவைதாம்.

மனித சக்தியின் தெய்வ சக்தி பெற்ற, சித்து நிலைகொண்ட தாய்க் குணத்தின் பூஜிப்பின் அலைத்தொடர் வச செயலில்தான் அரசர்கள் பலர் அத்தொடர்பினால் தன் வலுவுக்கும் வலு கூட்டிக் கொண்டு அரசர்களின் காலம் நடந்தது. அத்தொடர்பின் வழி முறையில்தான் இக்கலி நடக்கின்றது.

**20–3–81**

தன்னைத்தான் நம்பாமல், தனக்கு மேல் வலுவான பூஜிப்பு முறையால், பல அலைத்தொடர்புகளின் சக்தி அலையையே நம்பி, அதன் தொடர்புடன் இன்றளவும் பக்தி பூஜிப்பு வழிமுறை ஞானம் நமக்கு மேல் சக்திகொண்ட தெய்வங்களை அடி பணிந்து, அருள் வேண்டி அவ்வலையின் வசத்தில் நாம் வளரும் பக்குவத்தி லேயே இன்றளவும் காலம் சென்று விட்டதினால், தன் வலுவைத் தான் கூட்டி, தன்னையே தான் நம்பி, தானும் வலுவான தெய்வ சக்தியின் சக்தியாகலாம் என்பதையே மறந்த மனிதன் வேண்டிப்பெறும் பக்தி உணர்வு குணவழிச் செயலாய் வாழ்கின்றான் இன்றளவும்.

ஒவ்வொரு ஜீவசக்தியிலுமே தன் வலுவை வளர்க்கக்கூடிய வலுத்தன்மை உண்டு, உடல் வேறு, ஆத்மா வேறு; ஆத்மா பிரிந்து விட்டால் உடல் செயல் இழந்த தன்மை என்ற உண்மை உணர்ந்த மனிதன் தன் ஆத்ம இயக்கத்தின் உண்மையை உணர வில்லை.

உடலை விட்டுப் பிரிந்தவர்களுக்கும் ஆத்ம உயிர் உண்டு. சரீர பிம்ப உடலை இயக்குவதுவும் அவ்வாத்ம பிம்பம்தான். உடலைச்சுற்றி இவ்வாத்மாவின் இயக்கம் செயலாற்றும் தன்மைக்கு ஜீவத் துடிப்புக்கொண்ட இயக்க இயந்திரம்தான் இவ்வுடல் கோளம். எண்ணம் எப்படி உதயமாகின்றது?

மூளையின் பதிவு நிலையிலோ மற்ற சரீர பிம்ப உடல்உறுப்பின் நெஞ்சிலிருந்தோ எண்ணம் உதயம் பெறவில்லை. இவ்வாத்மா வின் உந்தலின் எண்ணம் கொண்டுதான் இவ்வுடல் இயந்திரத் துடிப்புக்கோளத்தின், ஆத்ம உயிரின் மோதலினால் இச்சுவாசம் எடுத்து உயிர்த் துடிப்பின் மோதல் இருந்தால்தான் சுவாசம் எடுக்க முடியும்.

ஆத்மாவின் செயலாய் இவ்வுயிர்த் துடிப்பு ஏற்பட்டு உயிர்த் துடிப்பின் உந்தலுக்கு இச்சுவாசத்தின் மூலமாய் ஆத்மாவின் எண்ண செயல் கவன நரம்பில் மோதி சிறு மூளையின் இயக்கத் தால் செவி ஒலி ஈர்த்து, எண்ணச்செயல் நடக்கின்றது.

ஆத்மாவின் உந்தலுக்குகந்த எண்ணச்செயலை உடல் கோளத்தைக்கொண்டு செயலாக்கிக் கொள்கின்றனர். காற்றலை யில் கலந்துள்ள ஒலிஅலையை வானொலிப்பெட்டி மின் தொடர்பு ஏற்படுத்தியவுடன் எவ்வலைத்தொடரில் அம்முள்ளை வைக் கின்றோமோ அவ்வலையின் ஒலி கேட்பதைப்போல், இவ்வாத்ம அலையின் உந்தல் இவ்வுயிர் சிரசில்பட்டு, உயிர்த் துடிப்பைக் கொண்டு சுவாசத்தின் எண்ணச் செயல் நடக்கின்றது.

ஆத்மாவின் சாதாரண மனிதனின் செயல் முறையின் எண்ண அலை, நடைமுறை வழித்தொடர் இந்நிலை.

இவ்வெண்ணத்தின் செயலை மாற்றியமைக்கும் நிலை, வளர்க்கும் நிலை, குறைக்கும் நிலை எதுவாகிலும் இஜ்ஜீவத்துடிப்புக் கொண்ட சரீர இயக்க அணு வளர்ப்பின் வளர்ப்பில் இருந்துதான் இவ்வாத்மாவின் வலுவையே வலுவாக்கக் கூடிய வழித்தொடர் பெற முடியும்.

ஆத்மாவின் செயலான எண்ணத்தை உயர் அலையின், உயர் அலை என்பது இப்பூமியின் பிடிப்பலையில் இப்பூமியின் சுழற்சியுடன் சுழலும் அலைத்தொடர்பின் வட்ட ஈர்ப்பில் வாழும் நிலையிலிருந்து சூரியனின் அலைத்தொடர்பு ஞானத்தை மேல் நோக்கிய சுவாசத் தால், இவ்வெண்ணத்தைச் செலுத்தி எடுக்கும் முறை வழியால், உயர் காந்த மின் அலையின் தொடர்பை நாம் எடுக்க எடுக்க இவ்வுடலில் இருந்து கொண்டே இச்சரீர அணுக்களின் ஈர்ப்பு வளர்ப்பலையால் இவ்வாத்மாவின் வலுவைக்கூட்டி, இவ்வாத் மாவை எந்நிலைக்கும் செலுத்திச் செயலாக்கக்கூடிய வலுவை இம்மனித சரீரம் பெற முடியும்.

தன்னைத்தான் நம்பி, தனக்குள் உள்ள இறை சக்தியின் உயர் அலையைப் பிற அலைகள் தங்க இடம் தராமல் ஏற்கெனவே நம் உட லில் குடிவந்துள்ள எவ்வலைக்குண வலு ஆத்மா இருந்தாலும், நம் வலு கூடக்கூட, நம் வசப்பிடி வலுவாய் அதனையும் செயலாக்கும் வலுவாக்கி நம் ஆத்ம சக்தியை நாம் வளர்த்து ஒவ்வொரு வனுமே இறைவனுகலாம். எங்கோ இல்லை இறைவன். இங்குள்ள இறைவனை நாம் தூசிக்காமல் ஒவ்வொருவருமே இறைவனுகலாம்.

மனிதனும் தெய்வமாகலாம் என்பது போற்றலில் பிறர் போற்றி வணங்கும் தெய்வமல்ல. மனிதன்தான் தெய்வ சக்தியைப் படைக்கவல்ல, தெய்வ குண வழிமுறை செயல்பாடு உருவக குண செயலேயே உருவாக்கவல்ல சக்தி மனித சக்தி. ஒவ்வொரு ஆத்மாவும் அந்நிலே பெறலாம்.

**24–3–81**

காட்சி: கை வண்டியில் பல மூட்டைகளைப் போட்டு வண்டியை இழுத்துச் செல்வதைப் போல் தெரிகின்றது.

பொருள்: அம் மூட்டையில் உள்ள பொருள் எது என்று அறியாமல் அம்மூட்டையைப் பார்த்தவுடன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எண்ணம். அரிசியாக இருக்கும், பருப்பாக இருக்கும், என்ற சில எண்ணங்களும், சிலருக்கு அதே தொடர்புத் தொழிலில் ஊறிய நிலைபெற்றவர்கள், அம் மூட்டையின் கோணத்தைக் கொண்டே பருப்பு மூட்டை, சர்க்கரை மூட்டை, அரிசி மூட்டை என்று யூகிப்பு நிலையில் சொல்பவர்களும் உண்டு.

ஆனல், அம்மூட்டையைக் கட்டியவனுக்கும், இழுத்துச் செல்பவனுக்கும் அதில் என்ன உள்ளது என்று தெரியும். இதைப் போன்றே இவ்வுடல் மூட்டையில் எவ் வெண்ணத்தைப்போட்டு வளர்த்திருந்தாலும் அம்மனிதனின் புற உருவத்தைக்கொண்டு செய்யும் தொழில், உற்ற பந்தங்களின் தொடர், பொருளாதார நிலே இதனைக் கொண்டு ஒரு மனிதன் நிலேயை யூகிக்கும் தன்மை தான் புற உலக எண்ணங்களில் பருப்பாக இருக்குமோ, அரிசியாக இருக்குமோ என்ற யூகிப்பின் நிலைப்படி.

கலந்துறவாடித் தொடர்பு கொண்டவர்கள் தொடர்பு நிலே யால் எப்படி மூட்டையின் வடிவ நிலேயைக்கொண்டு அதனதன் பொருள்தான் என்று உணர்த்துகின்றனரோ அதைப்போன்று கலந்து வாழ்பவர்கள், ஒரு மனிதனின் குணத்தை இக்குணமுடையவன் தான் என்று உணருகின்றனர்கள். ஆனல் இவ்வுடல் மூட்டையில், எதை இவ்வெண்ணத்தால் ஒரு மனிதன் போடுகின்றனே, அதன் நிலே போடுபவனுக்கு எப்பொருள் என்று தெரிகின்றதோ, அதைப் போன்றே ஒரு மனிதனின் எண்ண குணம் அவனுக்குத்தான் தெரியும்.

அவன் எண்ணத்தால் போட்டதின் பொருள் நிலே அறிந்து அவனே இயக்கிச் செல்லக் கூடிய, அவன் எண்ணத்தின் தொடர்பு

கொண்ட, உயர் சக்திகளுக்கும் அவ்வண்டியோட்டியின் நிலையை ஒத்த நிலையில் அறிய வாய்ப்புண்டு.

இச் சரீர பிம்ப மூட்டையே பல எண்ணத்தில் உழலுகின்ற உருவ மூட்டைதான். இச் சரீர பிம்பத்தில் ஓடக்கூடிய எண்ண ஒலியின் உணர்வலைகள், இப்பொழுது வாழும் வாழ்க்கையும், முந்தைய கால சேமிப்புத் தொடர்பையும் சுழன்று ஓடும் இவ் வெண்ண ஓட்டத்தின் செயலில் வாழ்ந்தது, உண்டது, கழித்தது ஆகிய எல்லா நிலைப்பட்ட குப்பையின் மத்தியில்தான், உயர் ஞானத்தை வளர்க்கவல்ல உயிர் ஆத்மா உள்ளது.

இவ்வுயிராத்மாவிற்கு நாம் வலுக்கூட்டிக்கொள்ள இக்குப்பை யான சரீர எண்ணத்தில் உள்ள சத்து நிலையை உரமாக இவ் உயிராத்மா எடுத்து உயர் ஞான வித்தாய் பிறிதொரு ஈர்ப்புச் சுழற்சியில் சிக்காவண்ணம் உயர் ஞானம் பெறல் வேண்டும். குப்பையின் மத்தியில் வளரும் மணியான வித்து தன் வளர்ப்பில் அக் குப்பையின் சத்தை எடுத்து, பல சித்துக்களைத் தரவல்ல சக்தியைப் போன்று, இச் சரீர பிம்ப மூட்டையில் சேமித்துள்ள குப்பையான பல வாழ்க்கைத் தொடர்புகளையும், இவ்வுலக பந்தச் செயல் எண்ண உருவத்தில் எல்லாம் இவ்வெண்ண ஓட்டம் எப்படியும் செலுத்தி வாழாமல் தொடர்புகொண்ட வாழ்க்கையில் எந் நிகழ்ச்சி ஓட்டத்திலெல்லாம் இவ்வெண்ண வாழ்க்கை மோதுண்ட வழித்தொடர் பெற்றாலும், அதன் அலை ஈர்ப்பு வார்ப்பாய்த்தான் இச்சரீர பிம்பம் வளர்க்கும் ஆத்ம நிலை உள்ளதினால், நமக்குத் தொடர்பு கொண்ட இச்சரீர எண்ண மோதலின் வாழ்க்கை தொடர்பு நிலையிலுள்ள செயலில் குப்பையான உணர்வை எடுத்து, இச்சரீரத்தை மேலும் குப்பையாக்காமல் நம்மைச் சுற்றியுள்ள நாம் செல்லும் செயல் வழியிலும், இவ்வெண்ணத்தை நாம் செலுத்தும் முறையே குப்பையில் உள்ள சத்தை எப்படி அவ் வித்து தனக்கு உரமாய் எடுத்து வளர்கின்றதோ, அதைப் போன்ற எண்ணமுடன் நம் ஞானம் செல்லுமானால், நம் உயி ராத்மாவின் வலு வலுவாகும் சக்தி நிலையை நாம் பெற முடியும்.

நம்மைச் சுற்றியுள்ள உலக வாழ்க்கை பந்தத்தில் நம் எண்ணமானது எப்படி மின்சாரத்தை எடுத்து அதன் சக்தியைப் பல சாதனையாய் ஒளி பெறவும், நாம் இயக்கக் கூடிய இயந்திர ஓட்டங்களுக்கும் அதன் உபயோகத்தைக்கொண்டு குளிர்ச்சியை யும், வெப்பத்தையும் சாதனைக்குகந்த செயலாய் உபயோகப் படுத்திக்கொள்கின்றோம்.

சக்தி கொண்ட காந்த வலு ஈர்ப்பு மின் அலை ஒரு நொடிப் பொழுது இம்மனித ஜீவனுடன் மோதினால், மனிதனையே அழிக்கக் கூடிய வலுக்கொண்ட மின்சாரத்தை தனக்குச் சாதக பக்குவத்தைக் கையாண்டு பல செயல்களை அதன் உதவி நிலையில் பெறுவதைப் போல், இவ்வாழ்க்கை உலகச் சுழற்சியில் ஓடக்கூடிய மின் அலையின் வீரிய சக்தியைப்போன்ற மனிதனின் எண்ண உணர்வின் வீரிய சக்தியே விஷமான உணர்வுடன் சுழல்வதால் இவ்வெண்ணத் தின் ஈர்ப்பை ஒரு நொடி அவ்வலையில் செலுத்தினாலும் மின் சாரத்தின் தாக்குதலைப்போன்ற அழிவு நிலைக்குத்தான் மனிதன் செல்ல முடியும். அதனையே நாம் மின்சாரத்தின் செயலை ஒத்த சாதகப்படி நமக்கு சாதக வழி முறையினால் நம் ஞானத்தை வளர்த்துக்கொள்ளக் கூடிய தன்மைக்கு நம் ஞானம் செல்ல வேண்டும்.

**26–3–81**

ஜீவ பிம்ப சரீரத்தில் இருந்துதான் ஆத்ம உயிர் வலுப் பெற வேண்டும். ஆத்ம உயிர் வலுப்பெற ஜீவ சக்தி வேண்டும். நீரின் சக்தியைக்கொண்டுதான் ஆவியாகி காற்றும், நெருப்பும் தொடர் வளர்ச்சி, இப்பூமியைச் சுழல வைப்பதைப்போல், எச் சக்தி வளரவும் இஜ் ஜீவ சக்தி தேவை. இஜ்ஜீவ சக்தி ஆவியாகி சமைக்கப்படும் சத்து நிலைதான் சரீரக் கூறின் எலும்புகளின் வளர்ச்சியைக் கொண்டு, பிம்பத்தின் வார்ப்பு ஆரோக்கிய நிலை வலுப்பெறுவதைப்போன்றே, அதன் வலுச்சக்தியை சரீரத்தைச் சுற்றியுள்ள ஆத்மவலு வலுவேற்றிக்கொள்கின்றது.

இச்சரீரக் கூடு சமைக்கும் சத்தெடுத்து வளரும் ஆத்மாவிற்கு இவ்வுலக பந்தத்தில், சுழலில் விஷமாகக் கலந்துள்ள இன்றைய எண்ண குரோத நிலையிலிருந்து நம் ஆத்மா வலுப்பெற எப்படி விஷமான நாக சர்ப்பத்தின் உடலில் மாணிக்கக்கல் வளர்வதைப் போன்று, இவ்விஷ உலகப்பிடியிலிருந்து உயர் ஞான அலைத் தொட ருக்கு நாம் சென்று அவ்வலைச் சக்தியையே நம் உணர்வின் எண்ண சுவாசம் வளர்க்கும் நிலைகொண்டு அவ்வளர்ப்பின் சக்தி வலுவை இவ்வுயிர் ஆத்மா பெறப்பெற ஆத்மா வலுப்பெற்ற ஞான வளர்ச்சி நிலைக்குப் பிறகு தன் வலுவைத் தானே வளர்க்கக் கூடிய ஆத்ம சித்து நிலையும், செயல் முறையும் அடையலாம்.

எண்ணத்தின் வீரியத்தில் ஜெப முறையின் பக்தி மார்க்க ஆவேச அலைத்தொடரில் அதே அலைத்தொடர் கொண்ட ஆத்மக் குடியிருப்பிற்கு இச்சரீரத்தில் குடியிருக்க இடம் தந்து அவ்வலை

ஞானத்தை இச் சரீரத்தின் உதவிகொண்டு, அவற்றின் ஞானத்தால் பெயரும், புகழும், பொருளும் அடைந்த சித்து மார்க்கம் இவ்வுலக சுழற்சி மார்க்கத்தில் தான் எக்கவி பாடினுலும் எவ்விஞ்ஞானத்தை அறிந்தாலும் தன்னைத்தான் உணர்ந்து தனக்குள் உள்ள இறை சக்தியை, தான் வளர்த்து ஒவ்வொரு நொடிப்பொழுதும் உயர் ஞான ஈர்ப்பலையின் தொடர் அமிலத்தை வளர்க்கவல்ல சுவாச ஈர்ப்பு, மின்காந்த, வளர்ச்சி ஒட்ட வளர்ப் பினுல் மட்டும்தான் உயிர் ஆத்மா வலுக்கூடி எவ் ஈர்ப்பலைக்கும் இவ் உடலைவிட்டு எந்த நிமிடத்திலும் உடலில் இருந்து இயக்க வும், உடல் அற்ற நிலையிலும் வலுக்கொண்ட ஆத்மா எவற்றிலும் சிக்கா வண்ணம் சித்துநிலையும், இதன் வளர்ச்சி தெடர் யாவை யுமே பெற முடியும்.

சித்து விளையாட்டினுல் சில அலைத்தொடர்பின் பக்திமுறை ஜெப வழியில் கூடுவிட்டுக் கூடு பாயும் உடலை அடக்கி ஆத்மாவைப் பிற உடலுக்குச் செலுத்தி செயல்படுத்திய பல மாந்திரீகத் தொடர்பு கொண்டவர்கள், அதன் தொடர்பால் வேறு ஒரு ஈர்ப்பலையில் சிக்குண்டு, தான் பெற்ற சக்தி முறையையே அழித்துக்கொண்டனர்.

உயர் ஞானத்தொடர்பின் அலைத்தொடரில் தன்னைத்தான் நம்பி, தனக்குள் உள்ள இறை சக்திக்கு பூஜிப்பு நடத்தி வளர்ந் தால் அன்றி, வளர் சக்தி பெறுவது மற்றெந்த நிலையிலும் கடினம். தன் ஆத்ம உயிரைக்கொண்டு ஆத்மாவின் சக்திதான் இவ்வுடல்; இவ்வுடலை இயக்குவதுவே இவ்வாத்மாதான். ஆத்மா, வளர, வலுப்பெற ஜீவ சக்தி தரவல்ல இச்சரீர கோளத்தின் உண்மை உணர்ந்து உயிர்த்துடிப்பின் செயலுக்கு வலுத்தந்த தாய்மை சக்தியின் தொடர்பை பூஜித்தே ஒவ்வொரு ஆத்மாவும் இதன் உண்மையின் வழித்தொடர் பெறுங்கள்.

**31–3–80**

ஆத்மாவாகித்தான் மனித எண்ண சரீர பிம்பம் உருவாகும் தொடர்நிலையை வழித்தொடர் பாடத்தில் உணர்த்தியுள்ளேன். ஆத்ம சக்தியின் உண்மை உணர்ந்து ஞானத்தைப் பெருக்கும் உயர் ஞான செயலின் சுவாச அமில உராய்வு வலுத் தன்மையின் சக்திநிலை வளர்ச்சியின் தொடரினுல் வளர் நிலை கொண்ட தொடர் சக்தியான தெய்வ நிலை பெற்ற ஆத்மாக்களின் தொடர் வழி அலைத் தொடருடன் இவ்வாத்ம சரீர பிம்ப உயிரின் எண் ணத்தை அவ்வலையுடன் இவ்வலைத் தொடர் சரீர பிம்பமுடன்

இவ்வெண்ண ஆத்மாவின் நினைவை எண்ணத்தில் உணரவேண்டிய ஞானத்தின் அறிதல் அறிவு வினைவை அவ் அலையின்பால் இச்சரீர பிம்ப ஆத்ம எண்ண அலையைச் செலுத்துங்கால் அவ்வலைத் தொடரின், அவ்வலைத்தொடர் என்பது சகலத்தையும் அறியவல்ல சகலத்திலும் கலந்துள்ள உயர் சக்திகொண்ட சப்த ரிஷிகளின் தொடர்பலையின் தொடர்பாய் இச்சரீர எண்ணமானது செலுத்தப் படும் தொடர்பு கொண்டு இச்சரீர உணர்வு அமிலக்கூட்டின் வளர்ச்சி நிலைக்கு உகந்த அலைத்தொடர்பான காந்த மின் அலைத் தொடர்பின் சக்தி தியானத்தால் இச்சரீர பிம்ப உணர்வுகளோ, இயக்கங்களோ தன் நிலை மறந்த மயக்க நிலையோ அன்றி இந்த ஞான ஆத்ம பலத்தின் எண்ண ஞானத்தால் உயர் தொடர்புடைய அலைச்சக்தியின் தொடரினால் இப்பிரபஞ்ச உண்மைகளையும், இதன் தொடர்பு கொண்ட பால்வெளி மண்டல வளர்ப்புத்தொடர் யாவையுமே தன் நிலை மறக்கா உணர்வுடனே காண முடியும்.

சித்து நிலை பெறுவதென்பதும் இதன் தொடர் அலையின் வழித்தொடரினால்தான். ஆத்ம வலுவைக் கூட்டிக்கொள்ள இச் சரீர பிம்ப வளர்ப்பிற்கு நல் உர சக்தியைப்போட வேண்டும். நல் உர சக்தியென்பது தனித்த ஆத்மாவாய் எண்ணத்தாலும், செயலாலும் பிற ஆத்மாவின் தொடரில் இருந்தெல்லாம் விலகி தன் குணத்தின் நற்குணம் எதுவென்றறிந்து அதன் சுழற்சியில் பக்தி கொண்ட ஜெப ஞான தியானத்தால் மட்டும் உயர் சக்தியை இவ்வாத்மாவுக்கு உரமாய்ச் செலுத்த முடியாது.

மனித ஆத்மாவிற்கு வலு உரம் எங்கிருந்து எடுக்க முடியும்? நறுமணநிலையிலிருந்தோ, அமைதியான சுற்றச்சூழல் தனித்த வாழ்க்கை முறையிலோ இவ்வாத்ம வலு ஞானம் கூடாது. அதே சமயம் பல ஆத்மாக்களின் மத்தியில் வாழக்கூடிய தொடர் வாழ்க்கையில் தொடர்புடைய ஆத்மாக்களின் அலை ஈர்ப்பின் பிடியில் அவர்கள் செய்யும் குரோத, வஞ்சனை, உல்லாச கேளிக் கைகளுக்கு இவ்வுணர்வால் எடுக்கக் கூடிய எண்ண மோதலின் பிடியில் சிக்கிவிட்டாலும் இவ்வாத்மாவுக்கு நாம் போடக்கூடிய உரம் தடைப்படுகிறது.

எப்படி உயர்ந்த குண உலோகமான தங்கம் அது வளரக் கூடிய பகுதியில் மண்ணுடன் மண்ணாய் ஒவ்வொரு இடத் திலும் அதன் வளர்தன்மை வளர்ச்சி நிலை கூடிக்கூடிஉயர்ந்த வளர்ப்புப் படிவமாய் மண்ணின் சத்துப் படிவத்துடன் அடுக்கடுக்கான படிவமாய் படர்ந்து, வலுக்கொண்ட உலோக வார்ப்பாய் அத்தங்கம் வளர்வதைப்போலும், நெருப்புடன் எப்

பொருளை நாம் போட்டாலும் போடப்படும் பொருள் யாவை யுமே அந்நெருப்புடன் பஸ்பமாகும் நிலை போன்று இவ்வுலகச் சுழற்சி பந்த வாழ்க்கையில் இச்சரீர பிம்பம் சிக்குண்ட பிடியி லிருந்து தங்கத்தின் படிமான வளர்ப்பைப்போன்று இம்மண்ணுன பிரபஞ்சத் தொடரின் உயர் உரமாக இச்சரீர பிம்ப ஆத்மாவிற்கு நாம் அளிக்கக்கூடிய உரமானது தங்கத்தின் படிமான வளர்ப்பை ஒத்த வளர்ப்பைப்போல் நாம் எடுக்கக்கூடிய சத்துத் தன்மை திராவகத்தில் செலுத்தப்படும் செம்பு, பித்தளை, இரும்பு போன் றவை கரைந்தாலும் இத்தங்கம் கரையா நிலைபெறுவதைப் போன்று நாம் அளித்த உரத்தின் தன்மைகொண்டு இவ்வாத்ம சக்தி எவ் ஈர்ப்புப் பிடியிலும் போய்ச் சிக்காமலும், அதில் வந்து மோதும் பிரபஞ்சத் தொடர்பு வேண்டப்படாத தீய குணங்களில் இருந்தெல்லாம் இவ்வாத்ம வலு தங்கத்தைப்போன்று இப்பிர பஞ்ச திராவகத்திலிருந்து கரையப்படா தங்கமாய் ஜொலிக்கக் கூடிய தன்மைக்கு இச்சுழற்சி வாழ்க்கையில் நம் ஆத்ம பலத் திற்கு தொடர் வாழ்க்கையில் ஏற்படும் நம் தொடர்புகொண்ட ஆத்ம குணங்களின் தொடர் வாழ்க்கை குணத்திலிருந்து தொடர் கொண்ட ஆத்மாக்களின் எண்ண உணர்வின் ஈர்ப்பு அலைத் தொடர்பை இச்சரீர பிம்ப எண்ணத்தில் நாம் எடுத்துத்தான் நம் ஆத்மாவிற்கு உரம்போட்டு உயர்வாக்க முடியும் என்பதை உணர்ந்து ஆத்மத் தொடர்பின்றி ஆத்ம வலுவை நாம் பெருக்க முடியாதென்ற உண்மையை உணர்ந்து எவ்வெண் ணத்தைப் பிற எண்ணத்தின்பால் நாம் செலுத்துகின்றோமோ அவ்வெண்ணத்தின் பிரதிபிம்ப அலை உணர்வின் எதிர்நிலைதான் நம் எண்ணத்திற்கு அவ் அலை செலுத்தும்.

பெண்மைக்கு ஆண்மைத்தொடர் அமில குண வார்ப்புசக்தி இல்லாவிட்டாலும், ஆணிற்குப் பெண்ணின் ஜீவ ஈர்ப்பு வளர்ப்பு சக்தியில்லாவிட்டாலும் இவ்வாத்ம வலுவைத் தனித்த உணர்வு எண்ணத்தைச் செலுத்தி வளர்த்துக்கொள்ள முடியாது.

இவ்வாத்மாவிற்கு உரமே பிற ஆத்மாக்களில் செலுத்தும் எண்ண உணர்வின் தொடர்பலையிலிருந்து இந்த ஞானத்தின் வலு செயல் கொள்ளத்தக்க முறை அமில உணர்வு வளர்ப்பு அணு வளர்ச்சியின் வலுக்கொண்ட உராய்வுதான் இவ்வாத்ம வலுவின் வளர்தன்மை உயரும் நிலையும். இவ்வுயர்வினுல் இச்சரீர ஜீவத் துடிப்பலையின் தொடர்புகொண்ட வளர்ச்சியிலிருந்துதான் சகலத்தையும் அறியும், வளர்க்கும் சப்த ரிஷியே உரு வாணுனப்பா.

**7–4–81**

இதுநாள்வரை நீங்கள் தியானத்தால் அறிந்த மார்க்கம், ஞானத்தால் அறியும் மார்க்கம். நீங்கள் எடுத்துக்கொண்ட பக்திமுறை, ஜெபவழி, தியான வழிமுறையில் ஞானம் கொண்டு, ஞான வழித்தொடரினுல் உம் எண்ண அலைத்தொடரில் எம் அலைத்தொடரின் தொடர்புடன் ஞானத்தில் அறிந்த உண்மைகள் யாவையும் செயல் முறையின் சித்துடன் காணப்படும் உண்மையையும், செயல்படும் வழித்தொடர் நிலையையும் பாட முறைக்கு அறியுங்கள்.

காட்சி: புட்டியில் தேன் உள்ளதைப்போன்றும், அத்தேனை உள்ளங்கையில் சிறிது விட்டுச் சுவைப்பதைப்போன்றும் தெரிகின்றது. இதன் விளக்கம் என்ன?

விளக்கம்: புட்டியிலுள்ள தேனைப்போன்று சுவையான ஞானத்தேனின் சேகரிப்பு பல தேனீக்கள் தன் உழைப்பால் சேமித்ததைச் சேமித்து வைத்த நிலைபோன்று சக்தி பூண்ட ஞானிகளின் செயல் சேகரிப்பு ஞான அலைத்தொடரின் எண்ணமுடன் நீங்கள் அவர்களின் அலைசக்தியான ஞான முறையை நூலில் அறிந்துள்ள தன்மையில் சேகரிக்கப்பட்ட இந்த ஞான அலையின் உண்மைதனைப் புட்டியிலுள்ள தேனைச் சிறுகச்சிறுகக் கையில் ஊற்றிச் சுவைத்துப் பருகும் இனிமையில் செயல்தன்மையில் உங்களின் ஞானத்தால் அறிந்த நிலையின் செயல்வழி சித்துநிலை இருக்கவேண்டும்.

புட்டியிலுள்ள தேனை அப்படியே பருகினுல் அதன் சுவையே தித்திப்பு திகட்டக்கூடிய எதிர்க்கும் தன்மை ஏற்படும். இதை உணர்ந்து ஞானத்தால் அறிந்து உண்மைதனை சித்து வழியில் அறிந்திட முதல் நிலைதான் 'என்னை நீ காண்' 'உன்னுள் உள்ள இறைவன் யார்?' என்பதை முதலில் நீ அறிந்து கொள், 'நான் என்பது யார்'? இச்சரீர பிம்பக்கூட்டில் ஒளி அலைகள் மோதலில் காணப்படும் நிழல் பிம்பம் ஒன்று. நீரிலோ, நிலைக்கண்ணுடியிலோ காணப்படுவது எதிர்பிம்பம் செயலாய் உண்ணுவது, கழிப்பது உறங்குவது செயல் பிம்பம். இதனை இயக்கக் கூடிய ஆத்ம பிம்பம்தான் இப்பிம்பத்தையும் இப்பிம்ப எண்ணத்தையும் வழிநடத்திச் செல்வது. இதில் நான் என்பது யார்?

ஆத்மாவாகித்தான் இச்சரீர பிம்ப எண்ணம் செயல்கொள்கின்றது. இச் சரீர பிம்ப செயலைத்தான் நான் என்று உணர்ந்து நாம் எதனையும் செய்கின்ருேம். இச்சரீர பிம்பத்தில் ஓடும்

எண்ணம், இச்சரீர சுழற்சியின் மோதலின் உணர்வுடன் செல்வ தால் இச்செவி ஈர்த்து, கண் பார்க்கும் ஒளி வட்டத்தின் உணர் வுடனே இவ்வெண்ணத்தை நாம் பாய்ச்சி, இவ்வாழ்க்கைச் சுழலில் சுழலும் இவ்வட்டத்தின் செயலுக்காகவே இச்சரீர பிம்பத்தின் நினைவுக்கும், பிம்பத்தை அழகுபடுத்த ஆடை அணிகலனையும், இப்பிம்பத்தின் வார்ப்பைப் பாதுகாக்க அதற்குகந்த சொகுசு முறையிலும் பிம்பத்தின் சுவை உணவின் ருசிக்காகவும், இப் பிம்பத்தின் செயலை ஒத்த எண்ண ஓட்டமும், பந்த பாச சுற்றுப்புறச் சூழல் இவற்றின் செயல் வழிக்கொத்த எண்ண உணர் வையும் தான் இச்சரீர பிம்ப செயலில் இவ்வெண்ண ஓட்டங்கள் செயல்படுகின்றனவேயன்றி, இச்சரீரத்தில் உள்ள உண்மை ஜீவ சக்தியான ஆதிசக்தியின் உண்மை சக்தியை ஆத்மா பெறவல்ல தன்மைக்கு நம் ஞானங்கள் செயல்படவேண்டும்.

ஆதிசக்தியான நீர்சக்தியின் சக்தித்தொடர்புதான் சகல சக்தியையும் வளர்க்கவல்ல சக்தி. ஆத்ம உயிருக்கு இவ்வாத் மாண்டவன் வளரவல்ல தொடருக்கு ஜீவத்துடிப்பு இயக்க நிலை இருந்தால்தான் அதன் வலுத்தன்மை கூடமுடியும்.

காட்சி: கீழே அடுப்பெரிவதைப் போன்றும், பானை ஒன்றை அவ்வடுப்பில் ஏற்றி, அப்பானைக்குள் எதுவோ வெந்து கொண்டிருப் பதைப்போன்றும், வேகப்படும் பொருளின் ஆவி வெளிப்படு வதைப்போன்றும் தெரிகின்றது.

விளக்கம்: இப்பூமி அடுப்பைப்போன்றது. இச்சரீரம் பாத் திரம் போன்றது. அதில் வேகப்படும் பொருள் எவ்வெண்ணத்தை யெல்லாம் கொண்டு இச்சரீரத்தில் நாம் போடுகின்றோமோ அதன் தன்மைகொண்டது. எதைப் போடுகின்றோமோ அதன் சுவைதான் அப்பாத்திரத்தில் போட்டு வேகப்படுவதைப்போன்று இவ் வெண்ணத்தால் போடப்படும் நிலையில் சுவைதான் இச் சரீரத்தை இயக்கும் உயிராத்மா பெறுகின்றது. இப்பாத்திரத்தில், வேகப்படும் பொருளின் சுவை, மணம் எப்படி ஆவியான தன்மை யில் வெளிப்படுகின்றதோ அதைப்போன்றுதான் இப்பால் வெளி மண்டலத்தின், சூரியனின் ஈர்ப்புப் பிடியில் மோதலினால் இப் பிம்ப இயக்கம் உள்ளது.

இவ்வாத்மாவின் உண்மை இயக்கத்தை நீங்கள் பெற்ற ஞானத்தின், செயல் தொடர்பின் 'உன்னை நீ காண்' என்ற பொருளின் உண்மையை செயல் அறிந்து நாளை சொல்.

**8–4–81**

ஆத்மாவின் செயல் உணர்ந்தீர்களா?

எங்களின் பதில்: தியானத்தில் அமர்ந்து எங்களுக்கு வழி காட்டிய ஞானகுரு வேணுகோபால் சுவாமிகளின் உபதேச நிலைக்கொப்ப அத்தொடரில் அவர் காட்டிய எல்லா நிலைகளையும் அறியாவிட்டாலும், சில உண்மைகளைச் செயலாலும் ஞானத்தாலும் அறியும் வழி பெற்றோம்.

சங்கத்தின் தொடர்புகொண்ட பல ஆத்மாக்கள் தன்னைத் தான் உணர்ந்து, தன் வழியில் பல உண்மைகளை அறிந்ததையும் கண்டோம்.

இச்சரீர பிம்பம் மயங்கிய நிலையோ, தன்னைத்தான் மறந்து செயல்படும் முறையன்றி, இத்தியானத்தால் அடைந்த உண்மை நிலைகள் பல உண்டு. (நாங்கள் சொல்லி வந்த நிலைகளில் நடந்த சில உண்மைகளை குருநாதர் ஈஸ்வரப்பட்டரே வெளியிட வேண்டாம் என்ற சில உண்மைகள் வெளிப்படவில்லை).

அல்லி மலர் காலை உதய சூரியனைக் கண்டவுடன் மலர்ந்து சூரிய ஒளி மறைந்தவுடன் கூம்பிவிடுகிறது. இன்னும் சில மலர்கள் சூரிய ஒளியின் அலை பாயும் இடத்தில் எல்லாம் அதன் மலர் முகம் காட்டி மலர்ந்து, அதன் ஒளி திக்கிலேயே அதன் ஈர்ப்பும் திரும்பிய நிலையில் வாடிவிடுகின்றது. இவையெல்லாம் இயற்கை என்கின்றான் மனிதன். எல்லா சக்தியைக்காட்டிலும் இனி தன் செயற்கைக்கு உதவப்போவது சூரிய சக்திதான் என்ற உண்மை வழியைச் செயற்கைக்கு பாழ்படுத்தும் மனிதன், அடுப்பான இப் பூமியில், பாத்திரமான இச் சரீரத்தில், ஒளியான ஜீவ சக்தி தரவல்ல சூரிய சக்தியைப்போட்டு, இவன் சமைக்கும் சுவையில் எச் சுவையையும் பெறவல்ல சக்தி இச்சரீர ஜீவனில் உள்ளதை மனிதன் அறியவில்லை.

இயந்திரத்தின் துணைகொண்டு, சூரிய அலையைச் சில உலோகங்களின் தொடர்பைக்கொண்டு சக்திபெறும் மனிதன், இவ் வெண்ணத்தின் ஆற்றலைக்கொண்டு எதனையும் செயல்படுத்தக் கூடிய செயல் தெய்வமாய் தன்னுள் உள்ள ஆத்ம சக்தியைச் செயல்படுத்தி, இவ்வாத்மாவின் தொடர்பலையால் எவ்வலையையும் அதன் தொடர்புகொண்டு, தொடர்புப்படுத்தி, செயலாக்கக்கூடிய ஆற்றல் இவ்வாத்ம ஞானத்திற்கு உண்டு.

இவ்வுடலின் செயலுக்கொப்ப இவ்வெண்ண ஈர்ப்பு செல்லும் முறையைச் சிறிது மாற்றி இவ்வுடலை இயக்கும் ஆத்மாவை இவ்

வெண்ணத்தில் நாம் செலுத்தும் ஞானத்தால் இச்சரீர இயக்க ஆத்மாவையே இது நாள்வரை உணர்த்திய ஞான உபதேசத்தின் தியான வலுவால், இவ்வாத்மாவை சக்தி வாய்ந்த ரிஷிகளின் ஆத்மாவுடன் தொடர்புபடுத்தி, அவர்கள் பெற்ற சக்தி நிலையை நாமும் பெறவல்ல இயக்க நிலையை இம்மனித ஞானத்தால் செயல் படுத்துங்கள்.

இச்சரீரக்கூடு ஜீவத்துடிப்புடன் இருந்தால்தான் இவ் இயக்கத்தின், காந்த மின் அலையின் வளர்ப்பைக்கொண்டு ஆத்ம பலத்தை நாம் பெருக்க முடியும். ஆத்ம பலம்பெற்ற நிலையில் வேறு ஒரு ஈர்ப்புப்பிடிக்கு நாம் சிக்காமலும், இக்காற்றுடன் கலந்துள்ள பலகோடி நிலைகளில் நம் சரீர சுவாச ஈர்ப்பிற்கு எவ்வலையும் உடலை விட்டுப் பிரிந்த ஆத்மாவானாலும் சரி உடலுடன் உள்ளவர்களின் எண்ண அலைகளானாலும் சரி, இவ்ஈர்ப்பு வட்டத்தில் சிக்காமல் எப்படி எரியும் நெருப்பில் எது போட்டாலும் அதுவும் பஸ்பமாகி விடுவதைப்போல், இச்சரீர இயக்கத்தால் நாம் பெற்ற ஆத்மபலம் கூடக் கூட இவ்வாத்மாவின் வலுவை நாம் தனித்துக் காண முடியும்.

வலுப்பெற்ற ஆத்மாவை நாம் உள்ள இடத்திலிருந்தே எங்கும் அனுப்பி எதனையும் அறிந்து வரச் செயல்படுத்த முடியும். 'தன்னைத்தான் உணர்ந்து தன்னுள் உள்ள இறைவனான ஆத்மாவை அறியவல்ல செயல்தான் சித்து வழியில் முதல் சித்து.

ஆத்மபலம் பெற்று வேறு ஒரு ஈர்ப்பலைக்கு இவ்வாத்மா செல்லாத வலுவாக நம் எண்ண ஞானம் வளர்ந்திருக்கவேண்டும். வாழ்க்கை பந்தத்தில் சுவைக்கும், மற்றப்பொருள் நிலை எவற்றிற்கும் இவ்வெண்ணமானது பேராசைக்கோ, ஏக்கத்திற்கோ, சஞ்சல, சலிப்பு நிலைக்கோ செல்லும் வழிமுறை சிறிது இருந்தாலும் இவ்வாத்மாவின் செயல் தனித்து, தன்னிச்சைக்கு இயங்க இச்சரீர பிம்பத்தின் உணர்வில் செயல் நிலை தடைப்படும்.

ஞானத்தின் வளர்ச்சியானது எவ் ஈர்ப்பலையின் பிடியிலும் இவ்வெண்ண செயலின் உணர்வு நிலை செயல்கொள்ளும் பக்குவம் கொண்டுதான், இவ்வாத்ம பலம் கூடியுள்ள தருணத்தில் நாம் ஜெபித்த, தியானித்த சித்தர்களின், வளர்ந்த ரிஷிகளின் தொடர்பு வட்ட அலை ஈர்ப்பு, நம் ஆத்ம வலு வளர்ந்த வளர்ப்பின் பதம் பார்த்து நம்மை வழி நடத்த நடத்துவார்கள்.

ஆத்ம வலுவை மட்டும் இச்சரீர பிம்ப வாழ்க்கையில் இருந்து தான் இந்த ஞானத்தால் வளர்ச்சியுறச் செய்ய முடியும். ஆத்ம

பலம்பெற்ற ஞானத்தால் இவ்வாத்மாவின் பலம்கொண்டே இச் சித்துத்தொடரின் செயல் சித்துக்களை, இவ்வாத்மாவினால்தான் வளர்த்துக்காட்ட முடியும்.

சரீர பிம்ப இயக்கத்தால் பெற முடியாது. முதல் சித்தான ஆத்ம பலம்பெற இச்சரீர பிம்ப இயக்கம் இருந்தால்தான் பெற முடியும். இச்சரீர பிம்ப எண்ணத்தின் அறியும் ஞானத்தைக் கொண்டு ஆத்ம பலத்தால் சித்து நிலைத்தொடர் யாவையும் நாம் பெற முடியும்.

**9–4–81**

கூடுவிட்டுக் கூடு பாயும் சித்து நிலை என்பது, தன் நிலை வளராத ஆத்ம பலமின்றி ஆரம்ப ஆவி நிலை தொடர்பு நிலையில் பெற்ற பக்தி வாய்ந்த மந்திர தந்திர செயல்கொண்ட உடலின் ஆத்மாவைக்காட்டிலும் பிறிதொரு சக்திவாய்ந்த, சக்திவாய்ந்த என்பது, இதற்கு மேல் வலுக்கொண்ட ஆத்ம அலையின் தொடரின் ஈர்ப்புப்பிடி ஞானச் சித்துப் பெற்ற இயக்க வழி சித்தில்தான் இக்கூடுவிட்டுக் கூடு பாய்ந்து தன் சரீர இயக்கத்தைச் செயல்படா வண்ணம் சரீரத்தில் ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, ஆத்ம உயிரைப் பிறிதொரு சரீரத்தின் பாலோ, மற்ற ஜீவ ஜெந்துக்களின்பாலோ செலுத்தி இயக்கப்படும் தன்மையில் சிறிது இசகு பிசகான நிலைகொண்டு மாறுபடும் தன்மை ஏற்பட்டாலும் மீண்டும் சரீர இயக்கத்திற்கு வந்து செயல்பட முடியாத நிலையும், அதுவுமன்றி பிரிந்த ஆத்ம உயிர் வேறு ஒரு பிடிப்பலையில் சிக்கிச் செயல்படுத்தப் பட்ட ஈர்ப்புப்பிடியின் செயலினால் மீண்டும் சரீர நிலையும் பிறப்பும் அற்று ஆத்ம வளர்ச்சியே இல்லாநிலை தன் நிலையில் வளர முடியா வேறு ஒரு ஈர்ப்பு நிலைக்குச் சென்று விடுகின்றது.

சப்த ரிஷிகளின் வளர் சித்து நிலையெல்லாம் தன்னைத்தான், உணர்ந்து, இச்சரீர பிம்பச் சேர்க்கை அமிலக்கூட்டின் வலுவிலிருந்த ஆத்ம வலு கூடி, இவ்வாத்மாவை சரீர பிம்பத்திற்கு மேல் சக்திவாய்ந்த செயலாய் செயல் கொள்ளும் தன்மைக்கு இவ் வாத்ம வலுவை வலுவாக்கி தன் ஆத்மாவைத் தானே இயக்கக் கூடிய இயக்கச் செயலில் செயல் சித்தாய் ஜீவ பிம்ப சரீர இயக்கத்தின் தொடர்புடனே இவ்வாத்மாவைத் தனித்து நிறுத்தி, ஆத்ம அலையை எவ் அலைக்கும், எவ் அலை என்பது. சரீர பிம்ப தொடர்பு கொண்டவர் அலைக்கும், சக்தி வாய்ந்த சித்தர்களின் அலைக்கும் செயல்படுத்தவும், இவ்வாத்மாவின் ஈர்ப்பு சக்தியைக் கொண்டு எந்நிலையையும் அணுவுக்குள் அணுவாய் இவ்வாத்ம

அலையை அனுப்பி அணு வளர்ச்சியின் உண்மையையும், உருவாகும் சக்தி அனைத்தையுமே உணரக்கூடிய அலைத்தொடர்பு யாவைக்குமே இச்சரீர பிம்ப நினைவு மாருமலும், இஜ் ஜீவத் துடிப்போ, மற்றெத்தன்மையும் மாற்றம் கொள்ளாத் தன்மையில் இவ்வாத்மாவைத் தனித்து எச்செயலுக்கும் செலுத்திச் செயல் சித்தைச் செயல்படுத்த முடியும்.

11–4–81

இப்பூமியின் பிடிப்பு வாழ்க்கையில் சத்தெடுத்து, இவ்வுடல் பிம்ப ஆத்மாவிற்கு சித்தாக்கி, ஒளி பெறும் வளர்நிலையாய் வளரின்பம் நாம் பெற முடியும். இப்பூமியின் பிடிப்பு வாழ்க்கையில் நாம் எடுக்கும் சத்தானது ஞான வளர்ப்பு வித்தான நிலை பெற்ருல்தான் சித்துநிலை நாம் பெறமுடியும். சித்து நிலையால் யான் பெற்ற சக்தியை இவ்வொளி அலை பாய்ச்சி ஆத்மாவைத் தனித்தியக்கமாய் செயல்கொள்ளும் ஈர்ப்புப்பிடிக்கு செயலாக்கும் காரிய சித்து தொடரிலும், இவ்வாத்ம அலையின் செயல்வழி செயலினுல் அதனை நாம் செயல்படுத்தும் முறையில் சில சத்து நிலைகள் கூடுகின்றன.

மனித எண்ண ஈர்ப்பு வட்டத்தில் அரசர்கள் காலத்தில் சித்து நிலை பெற்றவர்களில் சிலரின் செயல் அரசைக் காக்கவும், தன் குடும்பச் சுழற்சியின் ஈர்ப்புப் பிடியிலும் தன் சித்து நிலையின் சக்தியைச் செயல்படுத்திய வட்ட செயலில் இயற்கையின், இயற்கை என்பது, இப்பூமியின் வளர்நிலை தொடர் அணு வளர்ச்சியின் செயலில் எல்லாம் அணுவுக்குள் அணுவாய் உயர் அலைத்தொடரில் சூரிய அலையின் அலைத்தொடர்புடன் தன் ஆத்ம வலுவைச் செயல் படுத்தாமல், இஜ் ஜீவ சரீர இயக்கத்திலேயே செயல்படுத்திய சித்து ஞானத்தின் வளர்ச்சி காரிய சித்துடனே நின்று விட்டதினுல் இன்றளவும் ஆத்ம உணர்வு ஞானச் சுழற்சியில்தான் அச்சித்து நிலை கொண்டோரின் நிலையுள்ளது.

காரிய சித்துடனே தன் ஞானச்சித்தை இவ் ஈர்ப்புப்பிடியில் சுழலவிடாமல் அணுவுக்குள் அணுவாய் இவ்வுலக வளர்ப்பு வளர்ச்சி அணுவுடனும், இவ்வுலகையே வளர்க்கும் சூரியக் குடும்பமான நாற்பத்தி எட்டு மண்டலத்தொடர்பிலும், இந்நாற்பத்தி எட்டின் வளர்ப்பான வளரும் பன்னிரண்டு கோள்களிலும், ஒவ்வொன்றின் தொடர் வளர்ப்பிலும் தன் காரிய சித்து ஆத்மச் செயலைச் செயல்படுத்தி, சூரியக் குடும்ப இவ் அறுபது கோளங்களைப் போன்று சுழலுகின்ற ஒவ்வொரு குடும்ப சுழற்சியாய் சுழன்றுள்ள

பல கோளங்களின் உண்மையையும், இந்த ஞானத்தால் பெற்று காரிய சித்தை மேல்நோக்கி ஈர்ப்பு வட்டத்தில் இவ்வுயிராத் மாவை வளரவிட வேண்டும்.

தன் சித்துத் தன்மையில் வளர் முறையிலேயே தான் பெற்ற வளர்ப்பு நிலையை எவ் ஈர்ப்புப் பிடியிலும் நிலைக்கச் செய்யும் செயலாய் இக்காரிய சித்தை நிலை நிறுத்தாமல் இப்பூமியின் வாழ்க்கைப் பிடியின் சத்தெடுக்கும் நிலையில்தான் ஆத்ம சித்தைப் பெற வேண்டும்.

வாழ்க்கையில் ஏற்படும் தொடர் நிலைகள் ஒவ்வொன்றிலும் தீயவை, நல்லவை என்று தன் ஈர்ப்பின் எண்ணத்தை துவேஷத் திற்கோ, புகழுக்கோ செலுத்தாமல், எப்படி முள்ளை நம் பாதுகாப் பிற்கு வேலியாக உபயோகித்துச் செயல்படுத்துவதைப்போன்று, தீயவை என்ற நிலையிலிருந்து அதிலிருந்தே நாம் அறிந்த முறை கொண்டு மீண்டும் அதில் போய்ச் சிக்காமல், அதன் செயலின் உண்மை உணர்ந்து, நம் பாதுகாப்பு வேலியாக நன்மைப்படுத்தும் பக்குவத்தை நாம் பெறல்வேண்டும்.

இனிமை உண்மை நிலையிலேயே இவ்வெண்ணத்தின் செயலைச் சுழலவிடாமல் செயல்படும் ஒவ்வொரு செயலையுமே இனிமை ஆனதாக இவ்வாத்ம அலை பெறக்கூடிய தன்மைக்கு தன் ஞானம் செல்ல வேண்டுமேயன்றி இனிமைக்காக ஏங்கும் ஏக்கத்தின் வார்ப்பாய் இவ்வுடலின் அமில உராய்வு இல்லாமல் இனிமையை வளர்க்கும் அமிலமாய் இவ்வெண்ணத்தின் உணர்வைச் சுவை கொண்ட சத்தாய் இப்பூமி ஈர்ப்பு வாழ்க்கையிலிருந்து சத் தெடுத்து சித்தை வளர்க்க வேண்டும்.

**12–4–81**

வளர்ந்துவிட்ட மனித ஆத்மாவின் சரீர வளர்ச்சியின் பெருக்கத்தால் ஞான வளர்ப்பு இன்றளவும் வளர்ந்திருந்தால் அன்றைய ஞானிகள் காட்டிய சித்தின் செயல் உயர் தெய்வ ஆத்மாக்களாய் இம்மனித வளர்ப்பிலிருந்து எண்ணத்தின் ஈர்ப்பு வளர்ச்சியைக்கொண்டு உயர் ஞானத்தின் செழிப்புரமாய் செயல் சக்தி வளர்ந்து செயலாக்கக்கூடிய மனித உயர்வை நாம் காண முடியாமல் செயற்கை உருவாய்த்தான் பக்தி மார்க்கம், மதவழி போதனை, விஞ்ஞானச் செயல், செயற்கை உல்லாசப்பிடிப்பு வாழ்க் கையுடன் ஒன்றியதாக உள்ளதினல், இவ் ஆத்மாவின் உண்மை நிலையறியாத தன்மையில் உலக நிலையே மாசு கொண்ட நிலையில்,

எண்ணத்தில் ஈர்ப்பு வட்டமே பேராசைப்பிடியில் சிக்குண்ட நிலை யில், இப்பூமியின் சத்துநிலையே செயற்கையின் செயலுக்காக வளர்ப்பின் தன்மை குணங்களை இம்மனித விஞ்ஞானம் இன்று சூரிய இயக்கத்தின் நுண்ணிய கதிரியக்க வலுவைப் பிரித்தெடுக்கக் கூடிய சில நிலைகளுக்கு இன்று ஏவப்பட்டுள்ள சில கோளங்களில் சூரிய அலைக்கதிர்களைச் சேமித்து, அச்சேமிப்பின் அலை இயக்கத்தை இப்பூமியில் சில பாகங்களில் இவ் அரசியல் நாட்டுப்பற்றின் விஞ் ஞான வேவுச் செயலுக்காக ஒருவரை ஒருவர் அழிக்க சூரிய அலைக் கதிரின் சக்தியைக் கொண்டே செயற்கை நிலையில் நில அதிர்வு களையும், எரிமலை வெடிப்புகளையும் இன்றைய விஞ்ஞானச் செயல் செய்விக்கின்றதப்பா.

கதிரியக்கங்களைப் பிற கோளங்களுக்கு ஏவப்படும் ஏவுகணையில் சேமிக்கப்படும் இயக்கத்தின், அலை வீச்சின் தொடராய்த்தான் இன்றைய பூமியின் இயக்க நிலையிலே மனிதனின் விஞ்ஞானச் செயல் செல்லுகின்றது. இத் தொடரினால் மனித உணர்வின் எண்ணங்களே சிதறுண்ட குண வட்டங்களாய்த்தான் இன்றைய பூமி ஆத்மாக்களின் தன்மை உள்ளது.

இதன் இயக்க வட்டத்திலிருந்து தன் ஞானத்தால் இவ் வாத்ம வலுவைப் பெருக்கிக்கொண்டால் இவ்வாத்ம வலுவானது எவ் ஈர்ப்புப்பிடியிலும் சிக்காமல் இந்த ஞான ஈர்ப்புத் தொடர்பில் பெற்ற ஆத்ம பலத்தைக்கொண்டு இப்பூமியின் நிலையே மற்றெந்தச் செயல் பிடிப்போ எவற்றிலுமே இவ்வாத்மா சிக்காமல் உயர் சக்திகொண்ட ரிஷி அலையின் தொடர்புடன் இவ்வாத்ம இயக்க மானது சூரிய குடும்பமல்லா மற்றச் சூரிய குடும்ப அலைத்தொடரி லும், நம்மைக்காட்டிலும் ஞான வலுக்கொண்ட ஆத்மாக்களின் மனித வாழ்க்கை முறையையும் காண முடியும்.

ஆதிசக்தியின் சக்தி வார்ப்பின் தொடர் அனைத்தின் கூட்டுச் சேர்க்கை வார்ப்பையும், மாற்றத் தன்மையையும் வளர்த்துக் கொள்ளும் சக்தி வலு அனைத்தையும் காண முடியும்.

பிறப்பில்லா-பிறவா வரம் என்பது ஞான வார்ப்பின் சித்து நிலை வளர்ப்பின் வளர்ப்பை வளர வைக்கும் வலு சக்திதான் பிறவா வர சக்தி. இன்றைய நம் சக்தி வளர்ச்சியின் குண எண்ணத்தின் வளர்ப்பு சக்தி, பல கோடி மோதலில் உருமாறிய வார்ப்புக் கூட்டின் வலுத்தன்மையான எண்ணச் செயலின் செய லாற்றும் செயல் மனித சக்தியின் ஞானத்தில் உயர் நிலைக்குச் செல்லக் கூடிய உருவகம் பெற்ற தெய்வச் செயலாய் வளரக்கூடிய

வளர்ப்பு முற்றிய நிலைகொண்ட மனித எண்ணத்தின் சிந்தனை செயல் சக்தியை மனிதன் உயர்வாக்கும் நிலைபெற வேண்டும்.

மனிதனின் உண்மையை மனிதனே அறியாமல் தன்னைத் தானே செயற்கைக்கு அடகு வைத்து மீளமுடியா வட்டிச் சுமையாய் மூழ்கிவிடும் தன் நிலை இழக்கின்ற கலிகாலத்திலிருந்து இவ்வுடலின் உண்மைத்தத்துவ உயர்வை உணரும் ஆத்மாவாகுங்கள்.

**13–4–81**

எண்ணத்தின் சமைப்புத்தான் ஆத்மாவின் வலு. ஜீவராசிகளின் எண்ண ஈர்ப்பின் சமைப்பு நிலையில் ஏற்படும் ஆவியான உஷ்ண அலைகள் வளர்வதினுல்தான், இவ் எண்ணத்தின் ஓட்ட அடக்க நிலையான உறக்கநிலையால், சரீர பிம்பம் சாந்தம் கொண்டு, மீண்டும் விழிப்பில் இவ்வெண்ண ஓட்டச்செயல் ஒவ்வொரு ஜீவராசிக்கும் உறக்க விகிதம் மாறுபட்டு இருந்தாலும், உறங்கா நிலையின்றி ஜீவராசிகளால் இருக்க முடியாது.

வளர்ப்பின் வார்ப்பு செயலில் சரீர ஆத்மாக்களின் இவ்வெண்ண ஓட்டத்தின் வலுநிலை கூடிய ஆத்மாவிற்கு உறக்க நிலையும் வேண்டியுள்ளது. ஐம்புலனை அடக்கி நாம் பெறும் தியானம் என்பது ஞானத்தின் வளர்கூட்டை வளர்க்கும் தன்மையற்று உறக்க நிலையும் சமாதிநிலை பூண்டு புலன் அடங்கிய தன்மையில் இச் சரீர பிம்பத்தின், எண்ணத்தின், உணர்வின், செலுத்தும் ஞானத்தின் வலுவை இவ்வாத்மா வலுவாக்கிக்கொள்ள முடியாது.

உறக்க நிலையினுல் சரீர சமைப்புச் செயல் அங்கங்கள் ஓய்வு பெறும் நிலைதான் ஏற்படுகிறது. ஒலி ஈர்த்து, ஒளி கண்டு உணர்வின் எண்ணம் எடுக்கும் சுவாச அலையின் ஒளி, ஒலி, உணர்வின் எண்ணம் சுவாசம் என்ற இந்திரிய, ஐந்துமுக செயல் வடிவில்தான் சரீர பிம்ப இயக்கமும், இயக்கத்தால் வலுக்கொள்ளும் ஆத்ம வலுவும் வலுவாகிறது.

இவ்வாத்மாவிற்கு வலுக்கூட்ட எண்ணத்தின் சுவாசத் தொடர் இருந்தால்தான் இவ்வாத்ம வலு வளரமுடியும்.

எண்ணத்தின் உணர்வை இனிமை கொண்ட, இனிய செயலில், இனியன வளர்க்க இனிது வாழும் வாழ்க்கை இல்லறச் சுவையில், இனிய சொல்லை உரமாய் இட்டு இனிய மணமாய் இவ் ஆத்மா வலுப்பெறும் வளர்ப்பிற்காக எண்ணத்தின் உணர்வைப்

பிற ஈர்ப்பின் மோதலே ஏற்கக்கூடிய ஈர்ப்புப்பிடியில் சிக்காமல் இனிய குண வழித்தொடர் வார்ப்பாத்மாவாய் இவ்வாத்மாவை இனிமை கொள்ளும் ஞானத்தால் உயர் ஞானத்தொடர்பு கொண்ட ஆத்மத் தொடரில் அறியும் உண்மைகளே, சஞ்சல, சபல, பேராசை என்ற ஈர்ப்புப்பிடிக்குச் செயல்படுத்தாமல், உண்மை இறைநிலையை வளர்க்க இனிய குண வார்ப்பாத்மாவின் தொடர் செயல் கொள்ளுங்கள்.

**16–4–81**

இச்சரீர பிம்ப செயலில் நற்குண அலேத்தொடரினுல் பெற்ற ஆத்ம பலத்தின் வளர்தன்மையின், செயல் சித்தின், செயல் முறையினுல்தான் விருப்பு, வெறுப்பற்ற உண்மை வலுவின் அலேத்தொடரின் வளர்ச்சி ஆற்றல், வேறு ஒரு ஈர்ப்பின் பிடியில் சிக்காமல், உயர் வழியின் வழிச்சென்று என்றுமே அழியாத் தொடர் வழி வளர்ப்பை வளர்க்க முடியும்.

சித்துநிலே பெற்ருேரில் செயல் சித்தைப் பெற்றவர்கள், அதைப் பயன்படுத்தக்கூடிய முறை அறியாத்தன்மையில், குண நலத்தின், உணர்வின் உந்தலின் செயலில், இச்செயல் சித்துவைப் பாழ்படுத்திய நிலேயில், ஞானத்தின் சுழற்சி வட்டச்செயலே இந்துமதத்தினரால் அறியப்பட்ட பல ஆயிரம் நூற்ருண்டு களுக்கு முன், இவற்றின் உண்மை வழி ஆத்ம வலுவை வளர்க்கும் செயல் சித்தே சுயநல ஈர்ப்புப்பிடியில் விருப்பு, வெறுப்பு ஏற்பட்ட காலங்களில்தான் ஜெபமுறை, பக்தி மார்க்கம், சிலே வைத்து பூஜித்ததின் செயல்வழி இவற்றின் பிடியில் ஞானச் செயலே சென்ற தோடல்லாமல், உருவக, நாமகரண வேதாந்த பாராயணத்தால் புரியமுடியாத்தன்மையில் இறை சக்தியின் உண்மை ஆத்ம வலுவை ஒவ்வொரு ஆத்மாவும் உணரமுடியாமல், இச்சரீரப் பிடிப்பின் அலேத்தொடரில்தான் வாழ்க்கை பந்தம் உள்ளது.

பெறமுடியாப் பொக்கிஷமான ஞான வளர்ப்பின் சரீரத்தை, அதன் உண்மை நிலே அறியாமல், அச்சரீரமென்பது நாம் தங்கி எடுக்கும் வலுக்கோயில்தான், அவ்வாத்மாண்டவனே வளர்க்கும் இல்லமாக எண்ணுமல், இச் சரீரத்தைத்தான் நானென்ற சுக போக ஆனந்தச் சுவையில், உண்டு கழிக்கும் நிலேயில் நாம் வைத் துள்ளோம்.

உண்மை ஆனந்தம் வளர்க்கும் ஆலயத்தை, செயற்கை இயந்திர கதியைப் போன்ற, உண்டு கழிக்கும் இயந்திரமாகத் தான் நாம் வைத்துள்ளோம். இச்சரீரத்தின் உணர்வின் எண்ணத்

தில், இவ்வுலக ஈர்ப்பில் உள்ள நன்மை, தீமை என்ற குண வட்டத்தில், தீமையில் நன்மையைக் காண்பதைப்போன்று, உணர்வில் மோதும் செயலில் ஏற்படும் எண்ணக் கோவையில், நாம் எடுக்கும் உணர்வானது நல்வழிப்படுத்தும் செயல்வழி சேமிப்பு, இச்சரீர ஈர்ப்பு சமைத்து, இவ்வாத்ம வலுவின் வலுக்கூடிய தன்மையை, செயல் சித்திற்கு ஆரம்ப காலங்களில் செயல்படுத்தலாம். உயிரைவிட்டு ஆத்மா பிரிந்து செல்லுமா? உயிரற்ற ஜட பிம்பமாய் இச்சரீரத்தை வைத்து உயிராத்மா பிரிந்து செல்லாது. இவ்வுயிர்சரீரக் கூட்டின் இயக்கமுடன் வலுக்கூடிய ஆத்ம அலையை எப்படி நிலைக்கண்ணுடியில் நம் உருவத்தைப்பார்த்தால் எதிர் பிம்பம் தெரிகின்றதோ, அதைப்போன்றே, இவ்வாத்ம பிம்பத்தைப் பார்க்கவும், இவ்வாத்ம அலையைச் செலுத்தி, எச்செயலிலும் ஊடுருவி, ஒவ்வொரு நிலையையும் அறிய முடியும், என்பதை ஏற்கெனவே பாடத்தில் உணர்த்தி இருந்தாலும், செயல்வழியின் உண்மைச் சித்தறியும் வழிபெற்ற ஆத்மாக்கள், இச்செயல்சித்தின் காலங்களில்தான், செயல் தன்மையின் நிலைக்கொப்ப உயர் வழித் தொடர் ரிஷித்தன்மை பெறமுடியும்.

**24—4—81**

ஆத்மாவாகித்தான் சரீர பிம்பம் பெறுகின்றேம். சரீர பிம்பத்தின் சமைப்பைக்கொண்டுதான் ஆத்ம வலுவைக் கூட்ட முடிகின்றது. சரீர எண்ண இயக்கத்தின் பிடிப்பு வாழ்க்கை அலையில், நம் எண்ணநிலை செல்லுங்கால், அதே அமில சத்தின் குண வலுவை ஆத்மா பெற்றுப் பெற்று, தொடர்கொண்ட சரீர இயக்க ஈர்ப்பலையின் பிடியிலிருந்து, எண்ணத்தின் உணர்வை உயர் ஞான ஜெப முறையினுல், மேல்நோக்கிய சுவாச, சூரிய மின் அலையின் காந்த வலு, இச்சரீர அங்க எலும்புகளில் வலுத்தன்மை கூடி, இவ்வலுவின் அமிலத்தால், ஆத்ம வலுவும் உன்னத வலுத் தன்மை பெற்று, இச்சரீர இயக்க எண்ண உணர்வையே, இவ்வுயர் ஞான ஈர்ப்பலை வலு ஆத்மா பெற்றதினுல், ஆத்மாவானது தனித்து எங்கும் சென்று செயலாற்றக்கூடிய வலுவாக, இவ்வுடல் இயக்கத்தால், காந்த ஈர்ப்புத் தொடர் அலையால், எங்கும் ஆத்மாவைச் செலுத்தி, இப் பால்வெளி மண்டல எந்நிலையிலும் ஆத்மாவைச் செலுத்தி, உடல் ஈர்ப்பின் தொடரிலேயே எதனையும் அறிய முடியும்.

இச்சரீர எலும்புக்கூட்டின் வலு, காந்த மின் அலையின் ஈர்ப்பு வலுக்கொண்டதாய் செயல்படுத்தி, இவ்வாத்மாவை இவ் ஈர்ப்புப்பிடியின் பிடியிலிருந்தே தனித்தனுப்பி, உடல் தொடர்புடனே உணரும் பக்குவம் அடைய வேண்டும்.

உடலைச்சுற்றித்தான் இவ்வாத்மா உள்ளது. ஆத்மாவின் அலைமோதலில்தான் உடல் இயக்கமே உருவாகிச் செயல்கொண்ட நிலையை, உடலின் இயக்கம் கொண்டே இவ்வாத்ம வலுவால், நாம் பெறும் உயர்ஞானச் சித்து செயலினுல்தான், சகல சித்துத்தன்மையும் நாம் பெற முடியும்.

உடல் இயக்க ஆத்ம வலுவால், காந்தம் எப்படி இரும்பைத் தன் வசத்திற்கு இழுத்துக்கொள்கின்றதோ, அதைப்போன்று உயர்ஞான வசத்தால் எண்ணத்தின் ஈர்ப்புச் செயல் இருக்குமே யானுல், மனிதனின் உயர் குணத்தை மனிதனே அறிய முடியும். பல காலமாய்ச் சேமித்த ஆத்மவலுவின் சரீர இயக்கம் கொண்ட இந்நாளை, இன்றைய செயற்கை முறை வாழ்க்கைக்காக, உன்னத நிலை பெறும், ஞான வழித்தொடர் அறியும், உயர் தியான முறையை வாழ்க்கையின் செயலுடன் ஒன்றச்செய்து, மாறு கொள்ளப்போகும் மண்டல ஈர்ப்புச் சுழற்சி ஓட்ட கதியில், மண்டலச் சேர்க்கையின் காலங்கள் உருவாகும் தருணத்தில், மனிதனின் எண்ண உணர்வே சித்தம் கொண்ட, பிரமை கொண்ட ஞானத்தின் ஈர்ப்பை எடுக்கவல்ல காற்றலையின் தொடர் நிலையே, மண்டல ஓட்ட சேர்க்கைக் காலத்தால் பாதிப்பு ஏற் பட்டு மனிதனை மனிதனே இனம் காணமுடியா செயல் ஓட்டம் தான் இனி வரப்போகும் கால நிலை.

இதிலிருந்தெல்லாம் தப்பி, தன் ஞான சக்தியை உயர்த்தி. தன் ஆத்ம வலுவை, தான் உணரும் பக்குவத்தின் உண்மைச் செயலாய்ச் செயல்படுங்கள்.

**27–4–81**

நம் பூமியின் முக்கிய தாதுப்பொருள் இரும்பு. இதன் நிலையில் ஒத்த ஜீவஜெந்துக்களும், தாவர இன வளர்ப்புகளும் இதன் தொடர் வளர்ச்சியுடையதாகத்தான் வளர்ந்து வந்துள்ளன இன்றளவும். எப்படி உலோகங்களிலேயே ஒவ்வொரு உலோகத் திற்கும் அதன் கன அளவுக்குக் கொள்ளளவு நிறையில் இரும்பின் கனம் ஒரு கிலோவுக்குள்ள எடையின் கொள்ளளவைக் காட்டி லும் பிற உலோகங்கள் அதிகமாக நிறை தெரிகின்றது (உருவ நிலை). இதன் நிலைக்கொப்ப நம் பூமியின் நிறை கனம் பொருந் யது. ஜீவ ஈர்ப்பின் நீர் சக்தி வளர்ந்துள்ள இரும்புத் தாதுப் பொருளின் கூடுதல் நிறைகொண்ட பூமி வளர்ப்பு வளர்ப்பில் தான் நம் வளர்ப்பு யாவும் உள்ளன.

இம் மண்டலச் சேர்க்கைக் காலத்தில் பூமியைப் பாதிக்கவல்ல சில நிலைகள் ஏற்படுவதினால் அத்தொடரிலிருந்து நாம் தப்ப இப்பூமி ஈர்ப்புப்பிடியிலிருந்து விடுபடக்கூடிய தன்மைக்கு நம் சுவாசத்தில் மேல்நோக்கிய தொடர்புடையதாய் சூரிய அலை வட்டத்தின் நுண்ணிய காந்த அலையை நாமெடுக்க பக்குவப்பட்டு விட்டால், நம் உடல் உறுப்பான எலும்புகளில் அவ் அலைத் தொடரான குண ஈர்ப்பு வளர்ப்பு அணுக்களை இவ் எலும்பு வளர்த்துக்கொள்ள இச்சரீரக் கூட்டையே பூமியின் பாதிப்பு நிலை ஏற்பட்டாலும், சூரிய அலைத் தொடரிலிருந்து நாமெடுக்கும் சுவாச அலையின் வளர்ப்பினால், இவ்வுடல் வாழ்க்கை இப்பூமியில் வாழ்ந்தாலும், நம் எண்ணத்தில் எடுத்த சுவாசத்தால் நம் ஆத்ம வலு சூரியக்குடும்பத்திற்குச் சொந்தப்பட்டதாய்ச் செயல் படத்தக்க பக்குவ ஆத்மாவாகின்றது.

பாடத்தில் உணர்த்துவதும், உங்களுக்கு நேரடி போதனை தருவதுவும் சாதாரண நிலையிலும், விளையாட்டுப் போன்ற உணர் விலும் இருக்கலாம். ஆனால் நடக்கப் போகும் காலத்தில் இனி நிகழ்பவை எல்லாமே ஞானத்தைச் செயலாக்கும் மனிதனின் சித்த மெல்லாம் கலங்கிச் சிதறும் அழிவு நிலையில்தான் ஓடிக்கொண் டுள்ளது.

மனிதன் தன்னைத்தானுணர்ந்து ஆத்ம வலுவை உயர் ஞான சூரிய காந்த அலையுடன் தொடர்புபடுத்தினாலன்றி, இப்பூமி பிடிப்பு சாதாரண வாழ்க்கை நிலையில் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் நிலைதான் ஏற்படும்.

ஆத்மாவாகித்தான் உடல் பெறுகிறோம். உடலில் இருந்து தான் ஆத்மா வலுப் பெறுகின்றது. ஆத்மாவின் உண்மையறிந்து ஆத்மாவை நாம் காணவும், ஆத்மாவுடன் நாம் பேசவும், ஆத்மா வைக்கொண்டே அகிலத்தையும் அறியும் ஆற்றலையும் நாம் பெறும் பக்குவத்திற்கு, இச் சரீர எண்ணத்தின் சுவாசத்தை இதுநாள் வரை சொன்ன முறைக்கொப்ப தியானத்தால் வலுக்கூட்டுங்கள்.

சந்திர மண்டலத்தில் அதன் ஒளி பிரகாசமாய் ஒளிராமல் இருப்பதின் நிலைக்கு அதன் ஈர்ப்பில் பூமியை ஒத்த, கனம் பொருந் திய இரும்புத் தாதுப் பொருள் குறைவானதினால் சந்திர மண்ட லத்தைச் சுற்றியுள்ள காற்று மண்டலமே மண்ணும், நீரும் கலந்த கனத்த காற்றாய் அங்கு வீசிக்கொண்டிருப்பதினால், அதன் ஒளி வீச்சு குறைவாய் உள்ளது. அதைப்போன்று ஒவ் வொரு மண்டலத்திற்குமே தனித்தனி மாறு கொண்ட ஈர்ப்பு நிலை உள்ளது.

சூரியக் குடும்ப மண்டலங்களிலேயே ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நிலை. ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்ட வளர்ப்பிலேயே பல மாற்றங்கள் உண்டு. அதைப்போன்று மனிதனின் எண்ணகுணத்திலும், மற்றெல்லா வளர்ப்புத்தன்மையிலும் ஒலி கொண்டு ஒளியான உயிரணு அமிலக் கூட்டு நிலைக்கொப்ப வளரப் பெற்ற வளர்ப்பில் ஞான வளர்ச்சிகொண்ட மனிதக் கரு வார்ப்பு மனிதன் ஒருவரைப்போன்று ஒருவருக்கு ஞான வழி சித்து அமையும் என்று எண்ணுமல், மேல் நோக்கிய சுவாச ஈர்ப்பு வலுவினுல், தன் ஆத்ம வலுவை, தன் அமிலக்கூட்டின் நிலைக்கொப்ப உயர் வாக்கிக் காணுங்கள்.

**1–5–81**

ஒலிகொண்டு உராயும் அமிலச்சேர்க்கையின், வார்ப்பின் வளர்ப்பாய்த் தான் வளர்ச்சிபெறும் தன்மையில், பல தொடர்பலையில் வலுக்கொண்ட உயிராத்மாவானது, சுவாச ஈர்ப்பில், நம் உடலுக்குள் எண்ண நிலைக்கொப்ப குணநல ஈர்ப்புப்பிடியில், எந்தெந்தக் காலங்களில் எக்குணங்களைக் கொண்டு நாம் எக்குணம் என்பது மனித எண்ணத்தின் பன்னிரண்டு வகை குண அமில நிலைக்கொப்ப குணநிலை கொண்டுள்ளோமோ, அக்குண ஈர்ப்புத் தொடர்கொண்ட ஆத்ம உயிரானது, நாமெடுக்கும் சுவாசத் தால், நம் உணர்வின் குணநிலைக்கொப்ப, நம் சுவாசமுடன் நுரையீரலில் உட்புகுந்து, அதன் குண வளர்ப்பு அணுக்களை எவ்வாத்மா நம் குண ஈர்ப்பிற்கு, நம் சுவாசமுடன் வந்ததோ, அவ் உயிராத் மாவின் துடிப்புநிலை நம் சுவாசமுடன் நுரையீரலில் உட்புகுந்து, அதன் துடிப்பான அணுக்களை வளர்த்து, இரத்த நாளங்களில் உட்புகுந்து, இவ்வுடலுக்குள் அதன் குடியிருப்பினுல் அதற்குகந்த வேட்கை குண அணுக்களை நம் உடலில் வளர்த்து, ஒவ்வாத நிலையிலுள்ள அமிலக்கூறு உயிராத்மா, நாம் சில சந்தர்ப்பக் காலங்களில் தன் நிலை மறந்த உணர்வுடன் கூடிய ஈர்ப்பு எண்ணத் தில் செல்லும்பொழுது, நம் உடலுக்குக் குடிவந்த ஆத்மாவானது, அது வளர்க்கும் அணுக்களின், அதன் எண்ணச் செயலின் வேகத் தால், அதன் ஈர்ப்புப்பிடிக்கு நம்மை உட்படுத்தி அதன் வசத்திற்கு நாம் செல்லும் காலங்களும் உண்டு. அவையே நம் வளர்ப்பின் கருவாய் கருப்பெற்று குழந்தைகளாய் ஜெனனம் பெறுவதுவும் உண்டு.

நற்குண சுவாச ஈர்ப்பில் முந்தைய காலத் தொடர்பு கொண்ட வலுப்பெற்ற உயிராத்மாக்களும் தொடர்புகொண்டு ஈர்ப்புப்பிடியில் ஜெனனத்திற்கு வருகின்றன. இரத்த நாளங்களில்

ஏறிய இவ்வுயிராத்மாதான், ஆண், பெண் உறவு நிலையில், காந்த ஈர்ப்பு நுண் அலையை வளர்க்கவல்ல வண்ணங்களில், வெண்மை அமிலக்கூறின் வார்ப்புச் செயலான ஆணின் அணு வளர்ப்பின் சேர்க்கை வித்துடன், காந்த மின் அலையை ஈர்க்க வல்ல வீரிய உணர்வு கொண்ட, உஷ்ண அலையின் சேர்க்கைக் காலங்களில், நம் உடலில் ஆணுய் இருந்தாலும், பெண்ணுய் இருந்தாலும், பெண்ணின் வீரிய குண உஷ்ணஅணுக்களின் உயிரணு வளர்க்கும் காலங்களில், ஆணின் அமிலச்சேர்க்கையில், இரத்த நாளங்களில் குடிபுகுந்த இவ்வுயிராத்மாக்கள் கரு ஈர்ப்பிற்கு வந்து, கருத்தரித்த காலத்தில், தாயெடுக்கும் சுவாசத்தால், இக்கருவானது அதன் உயிர் ஆத்மா திடம்கொண்டு, அவ்வாத்மா வளர்க்கும் அவ்வமிலத்தின் உஷ்ண அலையில் வளரும் உயிரணுக்களிஞல், ஆத்மா உராய்ந்து உராய்ந்து வலுப்பெற்று, கரு நிலைக் காலங்களில் அவ்வணுக்களே வளர்ந்த அணு அதன் மலம் வெளிப்பட்டு அதுவே மீண்டும் அணுவாகி, வளரும் கரு வளர்ப்பு, வார்ப்பு சரீர நிலை உருவாகின்றது.

தாயின் கர்ப்பத்திலேயே, கர்ப்பப்பையில்தான் அவ்வாத்மாவும் வளருகின்றது. ஆத்மாவின் ஈர்ப்பு உஷ்ண அலையின் வார்ப்பாய்த்தான் அக்கரு வளர்ந்து, அக்கருவின் எலும்புப் பாகங்கள் உறுதிகொண்டு, அவ் எலும்பின் ஈர்ப்பு வளர்ச்சி வளர்ந்தவுடன் தான், இவ்வுயிராத்மாவானது ஜெனனப் பிறப்பிற்கு வருகின்றது.

வலுக்கொண்ட காந்த ஈர்ப்பு வார்ப்பாய் சரீரம் உருவான பிறகு, அச்சரீரத்தை இயக்கி வளர்த்த ஆத்மா வலுக்கொண்ட பிறகு, தாயின் சரீரத்திற்கும், சேயின் சரீரத்திற்கும் தொடர்பு கொண்ட தொப்புள் கொடியின் தொடர் ஓட்ட நிலை சேய் வளர்ச்சிகொண்ட பிறகு தாயின்றித் தனித்து சக்தி பெறும் ஆற்றல் கொண்ட நேரத்திலேயே, அதன் துடிப்பு வேகம் அதிகப்பட்டு தன் சுவாசத்தால் தன் ஆத்மாவை இயக்கக்கூடிய உருநிலை உருவான காலத்திலேயே, அதன் உந்து வேகம் அதிகப்பட்டுத் தாய்க்கும் சேய்க்கும் தொடர்பான தொப்புள்கொடியைப் பிரித்துத் தன் இச்சைக்கு வளரும் சிசு பிறக்கின்றது.

சிசுவாய் வளரும் காலத்தில் துடிப்பு நிலையின் இயக்கம் ஒன்றுதான் அச்சிசுவிற்கு உண்டே தவிர, சிறுநீர் கழிப்பதோ, மலம் கழிப்பதோ, சுவாசம் எடுப்பதோ, உணவு எடுப்பதோ, இச்செயல் எவையும் இல்லை. ஆனுல் தாயெடுக்கும் சுவாசத்தால், தாய் எடுக்கும் உணர்வுகளின் எண்ணத்தின் அலைத்தொடர்பு யாவையுமே ஒலி ஈர்ப்பின் தொடர்பை அச்சிசு பெறுகின்றது.

கரு வளர்ப்பில் அக்கருவின் ஆத்மா தாய்க்கும் சேய்க்கரு விற்கும் தொடர்பு கொண்ட உதிரத்தொடர்பில் உதிர அணுக் களின் வளர்ப்பணு, உராய்வு திட வளர்ப்பினுல்தான், அணு மூட்டையாய்த்தான் கரு உருவகம் பெறுகின்றது. உண்டு, கழித்து உருவாகுவது இல்லே, உருவாகும் உயிரணுக் கரு.

உஷ்ண அலேயின் வார்ப்பாய்த்தான் உயிராத்மா தாயின் உதிரத்தொடர்பைக்கொண்டு, தன் வளர்ப்பிற்கு சத்தெடுத்து, உருவாகி பிறந்த பிறகுதான், தன் இச்சையில் சுவாசமெடுத்து, உணவெடுத்து, செவி ஈர்ப்பும், ஒளிப்பார்வையும், ஒலி வீச்சும் அச்சிசு பிறந்த பிறகுதான் செயல்பட ஆரம்பிக்கின்றன.

மனிதக் கரு உரு, உருவாகும் தருணத்தில் உருவங்களும், நிறங்களும் அங்க அவயவங்களின் வார்ப்புகளும் தாயின் உதிர உஷ்ண ஓட்டத்தால் இவ்வாத்ம உயிர் ஏற்கெனவே எந்தெந்த முலாமிலெல்லாம் வார்ப்பாகி வார்ப்பாகி வலுக்கொண்டு, வழித் தொடர் பெற்று, எதை வளர்க்கக்கூடிய வித்தாய் அவ்வுயிராத் மாவின் முலாம் இருந்ததோ அதன் தொடர்புகொண்ட உருவக அங்க லட்சணங்கள்தான் கருவகக் காலத்தில் பெற்று வந்த வார்ப்பு உருவாய்ப் பிறப்பெடுத்து வளர முடியும்.

**3–5–81**

மணம், ஒலி, இவற்றுடன் கூடிய அமிலச் சேர்க்கையின் உருவக உணர்வு வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு மோதலின் உணர்வு நிலேக்கொப்ப எல்லாம், சுவாசத்தால் வளரும் அணுக்களின் வார்ப் பக உருவத்தில், இத்தொடரின் வாழ்க்கை நிலேயில் வாழக்கூடிய மனித எண்ணங்களின் ஈர்ப்பு விகித செயலாற்றலும், சொல் லாற்றலும் மிக்க வளர்ப்பகச் செயலில் இக்கூட்டு பிம்பத்தில் எவை எவை மோதுகின்றனவோ, அவற்றின் உணர்வை அதிகமாய் ஈர்க்க வல்ல தன்மையில், நுகரும் ஈர்ப்பு நிலேக்கொப்ப, அணுவளர்ப்பு கூடு வதினுல், சுழற்சி ஓட்ட வாழ்க்கையில் சுழன்று ஓடும் நாம், ஓடும் நிலேக்கொப்ப, நம் வாழ்க்கை ஓட்டத்தை ஓடவிடாமல், இவ் வெண்ணத்தின் உணர்வை அந்தந்த கால நிலேக்கொப்ப ஏற்படும் மோதலேயெல்லாம் தன் ஈர்ப்புப்பிடியில் எடுத்துக்கொள்ளாமல், எப்படிச் சூடான பொருளே நாம் உண்ணும் பொழுது, நம் உடல் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்திற்கு அதனே ஆற வைத்து உட் கொள்ளுகின்றேமோ, அதைப்போன்று எண்ணத்தில் மோதும் செயல் எதனேயும் மிகத்துரித வேகத்தில் பிறரிடம் இருந்து எதிர்ப் படும் சொல் அலேயானுலும், குடும்ப வாழ்க்கையில் ஏற்படும்

இன்னலின் துன்ப சம்பவமானுலும், மகிழ்ச்சியின் ஆரவாரச் செயலானுலும், உட்கொள்ளும் உணவை எப்படி உடல் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் மட்டும்தான் நாம் உண்ண முடிகின்றதோ அதைப்போன்று, இவ்வெண்ணத்தின் செயலைக்கொண்டு அந்தந்த காலங்களில் ஏற்படும் மாற்றத்தை, ஞானம் கொண்ட சிந்தனை வழியில், அமைதி கொண்டு ஏற்படும் தொடருக்கு உட்பட்ட உணர்வை எடுங்கள்.

மனித உணர்விற்கு எப்படி உடலின் மேல் காரத்தையோ, புளிப்பையோ பிய்ப்பெடுக்கும் சில காய்கறிகளின் சாறுகளையோ வைத்தவுடன், உடலின் உணர்வு அதைத் தெரிந்து கொள்ளுகின்றதோ, அதைப்போன்ற தொடர்அலை அமிலத்தின் சேர்க்கை குணம் யாவையும், இக்காற்றலையில் கலந்துள்ள நிலையில், இவ்வெண்ணத்தில் எடுக்கும் சலிப்பு, சாந்தம், கோபம் எதுவாகிலும் அத்தொடர்புகொண்ட நெடியுடன் கூடிய சுவாச அலையை நாமெடுக்க, அத்தொடர்புகொண்ட அணுவளர்ப்பின் வார்ப்பாய் உடல் வளர உடலின் வலுவான ஆத்மாவிற்கு அம்முலாமின் வலுகூட, இப்பிடிப்பிலிருந்து மீள முடியா நிலைக்கு ஆத்மாவைச் செயல்படுத்தி விடுகின்ருேம், இச்சரீர வாழ்க்கையில் எண்ணத்தின் சமநிலை உணர்வினுல், ஞானத்தின் ஒளி அலையை நாமெடுக்கும் சுவாச வலுக்கொண்டு, நம் ஆத்மா வலுக்கொள்ளும் வளர்ச்சி அலையை, சமமான குணத்தினுல், இவ்வாத்மா வலுப்பெற்று விட்டால், இவ்வாத்மாவைக்கொண்டு உருவாக்கும் சக்தி அலைதான் சகல அலைகளுமே.

தெய்வீக சக்தி, பிறவா வரம், முக்தி நிலை, மோனப்பெருநிலை, நிர்வாண நிலை பல மதவழி போதனையாலும், தான்தான் உணர்ந்த நிலைகளில் ஒவ்வொருவரும் உணர்த்திய தொடர்நிலையின் செயல்நிலை என்பது,ஞானத்தால் பெறும் சமமான நிலை கொண்ட, சாந்த குண, உயர் ஞான சித்தறியும் நிலைதான்.

நிர்வாண நிலை என்பதின் பொருள் என்ன?

**6–5–81**

உணர்வின் எண்ணம் கொண்ட சரீர பிம்ப இயக்கத்தில், ஆத்மீக போதனையில் (வழித்தொடரில்) ஞானத்தின்பால் செயல்படும் உணர்வின் எண்ணத்தால் பன்னிரண்டு வகை குண அமிலக் கூட்டு உருவக உடல் வடிவத்தில், அதன் சேர்க்கையின் விகித நிலைக்கொப்ப உள்ள உருவக, குணநிலை, ஞானவளர்ச்சித் தன்மை,

ஈர்ப்புப்பிடி சரீர இயக்க வளர்ப்பு நிலேக்கொப்ப, செயல்படும் மனித எண்ண குணத்தில் செயல்கொள்ளும் ஒவ்வொருவரின் குண நிலேக்கொப்ப கூடப்பெற்ற அமில வார்ப்பக செயலில்தான், மனிதனின் எண்ண நிலே, செயல் முறை உள்ள தன்மையில், அதற்குகந்த பிடிப்பலே உணர்வு எண்ண செயல் நடப்பதினுல், மனிதனின் எண்ண உணர்வு, தான் வளரவேண்டிய ஆத்ம வளர்ப்பின் வலுநிலேயில், பல குணங்கள் கொண்ட உணர்வின் உந்தல் வாழ்க்கையில், இச் சரீர பிம்ப இயக்க எண்ணத்தை சம நிலேகொண்ட நற்குணத் தொடர் அலேயின் வார்ப்புச் செயலாய், சரீர அணுக்களின் வளர்ப்பை வளர்க்கும் நிலேக்கொப்ப, அந்தந்த குண நிலேக்கொப்ப, உடல் சேர்க்கையின் அமிலக்கூட்டு நிலேயை, நற்குணத் தொடர்பினுல், சாந்த குண அமிலமான வெண்மையின் அமிலமான சேர்க்கை விகிதம் கூடி, அதன் தொடர்புகொண்ட காந்தமின் அலே ஈர்ப்புச் செயலினுல் இச்சரீர பிம்பமே ஆத்ம வார்ப்பிற்கு வளர்நிலே தரத்தக்க இயந்திர நிலேயாய், எப்படி சூரியனின் சக்தியைக்கொண்டு காந்த மின் அலேயின் தொடர்பினுல், ஜீவசக்தியான நீர் சக்தியின் தொடர்புடன், உலோக ஈர்ப்பில் மின் அலேயைச் செலுத்தி, அதன் செயலின் வீரிய குணத்தை எடுக்கின்ருர்களோ, அதைப்போன்ற இயக்கச் செயலாய் சரீர பிம்பத்தின் நீர் சக்தியைக்கொண்டு, இச்சம குண உணர்வினுல் பெற்ற உறுப்புகளின் வளர்ப்பினுல், காந்த மின் அலேத்தொடர்பினுல் இச்சரீர உணர்வு எண்ணத்தை சகலத்திலும் கலக்கச் செய்து, எவ் ஈர்ப்புப்பிடியிலும் இவ் எண்ணத்தின் உணர்வு மோதாமல், இவ்வெண்ணத்தின் செயல்கொண்டே ஆத்ம அலேயை எல்லாவற்றிலும் எல்லாமாய் கலக்கச் செய்து, நிர்வாண சக்தியாய் நிலேபெறச் செய்யலாம் இவ்வாத்ம சக்தியை.

வெண்மை அமிலத்தின் தொடர்புகொண்டுதான் மின் அலேயே உருவாகின்றது. வண்ணத்தின் கூட்டு நிலேக்கொப்பத் தான் வளர்ப்புநிலே ஒவ்வொன்றுமே உருவாகின்றது. வானவில்லின் வண்ணத்தைக்காட்டி, இராமாயண காலத்தில், வால்மீகியார் எழுதிய காவியத்தின் உட்கருத்தை மாற்றப்படா தன்மையில் உணர்ந்து இன்றைய நிலே இருந்திருந்தால், வண்ணங்களின் தொடர்புகொண்டு உயிர் வளர்ப்பின் அணுத்தொடர் வளர்ச்சியின் அணுவுக்குள் அணு வளரும் உயர் சக்திகளே நாம் அறிந்திருக்கலாம்.

வெண்மையின் அமிலமான சக்திதான் நம் உடல் உறுப்பின் எலும்புக் கூறுகள் உருவாகி, அதன் தொடர்புகொண்ட அணு வளர்ச்சி வார்ப்பாய்த் தான் ஆத்மவலு வலுக்கொள்ளு

கின்றது. சூரியனின் அலைத்தொடர்பிலிருந்து பூமியின் சுழற்சிக்கு, பூமிக்கு வடிகட்டி பூமியின் ஈர்ப்பிற்கு வரும் அமிலச் சத்தின் உயிர் அணு வளர்ப்பு அமிலமே இவ்வெண்மையின் சக்திதான்.

வெள்ளைத்தாமரை பூவில் இருப்பாள் கலைமகள்-ஞான மகள் என்ற தொடர்பு குண அமில உணர்வே குணத்தின் தொடர்பில் சாந்த குணமான வெண்மையின் சக்தி அலையை உணர்த்தத்தான் ஞானத்தின் ஈர்ப்பு நிலைக்கு வெண்மை உடுத்தும் தாய்க்குண சரஸ்வதி என்ற ஞானத்தின் தொடர்பு கலைமகள் என்ற சூட்சும வட்டத்திற்குள் அச்சக்தியின் தொடர்பை உணர்த்தினர் நம் சித்தர்கள்.

வண்ணத்தின் சேர்க்கைக்கொப்பத்தான் உருவக செயல் உருவாகின்றது. அதன் தொடர்புகொண்ட உணர்வின் செயல் தான் மாற்றங்களின் நிலையும். இன்றைய இக்கோளத்தின் உயர் வார்ப்பான, உயர்வண்ணமான, வெண்மையின் தன்மைக்கே கருமையின் பழுப்புநிலை கூடிக்கொண்டே வருகின்ற இக்கலி காலத்தில் மனிதனின் ஞானம் நிர்வாண உணர்வாய், வார்ப்பின் வளர்ப்பாய், ஆத்ம வளர்ப்பை வளரும் ஞானம் பெற்று, நிர்மலமான நிலையுடன் கலந்திட வேண்டும்.

**7–5–81**

இக்கர்ம வாழ்க்கையின் செயல் முறையிலிருந்து, ஆத்ம ஞானத்தின் சூட்சும நிலையான நிர்வாண நிலை அடையக்கூடிய வலு ஈர்ப்பிற்கு, இஜ்ஜீவ சரீர பாத்திரம் இருந்தால்தான் ஆத்ம பலம் பெறமுடியும்.

எவ் உலோகத்தால் செய்த பாண்டமானலும் அதனை அடுப்பில் வைத்து நீரின்றி எரியும்பொழுது உஷ்ணத்தின் நிலை கூடக்கூட அடுப்பில் ஏற்றிய அப்பாண்டமும் உருக்குலைந்த நிலை ஏற்பட்டு, மாற்றுநிலை கொள்ளுகின்றது. ஆனல் அதையே சமையல் பக்குவத்தில் நீர் சக்தியைக்கொண்டு அதில் சமைக்கப்படும் நிலைக்கு எத்தனை காலங்கள் ஆனலும் அதன் தேய்மானமோ, துவார நிலையோ ஏற்படாத காலங்கள் வரை அடுப்பில் ஏற்றிச் சமைக்க இப் பாண்டம் உபயோகப்படுகின்றது.

அதைப்போன்று இச்சரீர சமைப்பிற்கு ஜீவ சக்தியின் தொடர்புகொண்டு இவ் ஆத்ம பாத்திரம் செயல்படும் வழி முறையில் எண்ணத்தில் எடுத்து, உணர்வில் சமைக்கும் ஜீவ சக்தியின் வலுக்கொண்டு, இவ்வாத்மா வளர்கின்றது.

இக்கர்ம வாழ்க்கைக்கு உட்பட்ட தேவையின் விகித நிலை ஒவ்வொன்றிலும் இருந்துதான் வாழ்க்கை செயல் ஓட வேண்டி உள்ளது. அவ் ஈர்ப்பின் பிடியில் பேராசைகொண்டு கர்மமே சிந்தையாகி, செயல் பிடியின் உணர்வாகி, எண்ணத்தின் சுவாசமே கர்ம சிந்தையில் சிக்கிவிட்டால், தன்னுள் உள்ள தன் வளர்ப்பின் வளர்ப்பான ஆத்மாவின் வளர்ப்புத்தான் இச்சரீர கர்ம வாழ்க்கை என்பதை மறந்து, இதுதான் வாழ்க்கை என்ற பிடி உணர்வுடன், பூமி ஈர்ப்புடன் ஈர்ப்பாகிச் சுழலும் வட்டத்தில் இருந்து மீள மேல்நோக்கிய சுவாசத்தால் எண்ணத்தின் ஞானத்தை இச்சரீர பிடிப்பில் இருந்து உயரும் ஞான ஈர்ப்பிற்குச் செல்ல நம் செயல் வழி இருக்க வேண்டும்.

காந்தத்தின் ஈர்ப்பிற்கு இரும்பை இழுப்பதைப்போன்று, இப்பூமி வளர்த்த வளர்ப்பின் வளர்ப்பை தன் ஈர்ப்புப்பிடிக்கு சுழல் ஓட்டத்தின் சுழற்சியுடன் பிடித்துக் கொண்டுள்ள இப்பூமி யின் ஈர்ப்புப்பிடியில் வாழும் நாம், இப்பூமி மனித இன ஞானத் தின் வளர்ப்பலையை வளர்த்த செயல் அலைத் தொடர் குன்றி யுள்ள இக்கலியில் நாம் மேல்நோக்கிய சுவாசத்தால் ஞானத் தொடர்புடைய பெரியோர்களின், எண்ண ஜெப தியானத்தால் இப்பிடி உணர்விலிருந்து எவ் அலையிலும் மனித ஞானம் வளரும் வளர்ப்பில் நாம் பெற்ற வலுவின் வலுவால் வளர்ச்சிகொள்ளும் வளர் நிலையை இக்கர்ம வாழ்க்கை சிந்தையில் சிக்குண்டு பக்தி என்று பகவானை எண்ணி ஏங்காமல், ஞானத்தின் உயர்வால் தன்னுள் உள்ள ஆத்மாண்டவனை உயர்த்தும் உயர்வு எண்ணத்தை ஞான ஈர்ப்பலையினுல் வலுக்கட்டினுல் எப்படி ஆகாயவிமானத்தை மேல்நோக்கிய உந்தலினுல் அதற்குகந்த காற்றழுத்த இயந்திர செயலைக் கொண்டு மனித விஞ்ஞானம் பறக்க விடுகின்றதோ, அதைப்போன்று, உணர்வின் எண்ணத்தால், தன் ஞானத்தால் இச்சரீர பிம்பத்தை மேல் நோக்கிய சுவாச ஈர்ப்பினுல் எந் நிலைக்கும் இச்சரீரத்தைப் பறக்கவிடவும், பிரித்துக் கூட்டுச்சேர்க் கும் நிலைக்கும், இவ்வுடலிலுள்ள ஜீவ அணுக்கள் ஒவ்வொன்றை யும் உயிர் ஆத்மாவாக்கி இவ் ஒரு சரீரத்தில் இருந்தே பல கோடி சரீர செயல் அலைக்கு உயர் ஆத்ம வலு கொண்டவர் களினுல் செயலாக்குவதென்பது அஷ்டமாசித்து என்பதின் மூன்றும் சித்து.

முருகா என்றதுவும் முருகன் ஓடிவந்து செய்வானு? என்பது வேறு கதை. போகநாதனின் வலுத்தன்மையினுல் எண்ணத்தால் எண்ணும் பல கோடி ஆத்மாக்களுக்கும் அவன் அருள் ஞான ஆசி கிட்டுகிறதென்ருல் அலைத்தொடரின் அருளும் ஆசீர்வாதமும் தான்.

ஆயிரம் கண்ணுடையாள், அகிலத்தைக் காத்தருள்வாள், அமராவதி, அபிராமவல்லி என்றெல்லாம் உணர்த்தும் சித்தின் தொடர் இப்பிம்பத்தின் ஜீவனைக்கொண்டு, ஆத்ம ஞானம் பெற்ற வர்களின், சுவாச அலையின் அணுக்களே பலகோடி ஆத்மாக் களும் ஒரே சமயத்தில், அத்தேவியின்பால் செலுத்தும் பக்தியில் ஜீவசக்திகொண்ட சித்தினுல், அழியாத்தன்மைகொண்ட சரீர ஆத்மாவினுல் ஆயிரம் கண்ணல்ல, அகிலத்தையே கண்ணுகக் கொண்டு வளரும் சக்தியை, உணர்வின் எண்ணத்தைக்கொண்டு, சுவாச அலையின் வளர்ப்பினுல் கர்ம வாழ்க்கைச் சிக்கலில் இருந்து மீண்டு, உயர் ஞான ஈர்ப்புடன் சித்துத் தன்மையில் வழித் தொடர் பெற்ருல், போற்றி வணங்கும் தெய்வசக்தியின் அருளை வேண்டி பக்தியுடன் பணிவெய்திப் பணிந்திடாமல் அத்தெய்வத் தின் சக்தியையே மேல் நோக்கிய ஞானத்தொடர்பின் ஈர்ப்பினுல் அத்தெய்வத்தின் தொடர்புடனே நாமும் தெய்வ சக்தி பெறும் தன்மையைத் தொடரலாம்.

**8–5–81**

தன் பெருமைக்காகவோ, புகழுக்காகவோ சித்துநிலை வளர்ப்புப் பெற்ற ரிஷித்தன்மையின் ஆக்கத்தன்மை செயல்பட வில்லை. மனித இனத்தின் வளர்ப்பின் ஞான வித்தின் அலைத் தொடர் வழித்தொடரை, அவ்வித்து அழியாமல் செயல்படும் செயலுக்காக, தன் சக்தி நிலையை சப்த ரிஷிகளினுல் மனிதக் கரு உயர் ஞானம் பெறவல்ல செயல்கொள்ளும் கோளங்களில் எல்லாம் அவ்வித்தின் நிலை வளர்ந்திட சப்தரிஷிகளின் செயல்முறை செயல்படும் தன்மைதான், ரிஷித்தன்மை பெற்ற வளர் குணத் தின் வளர்ப்பு நிலை.

நம் பூமியைக்காட்டிலும் ஞானத்தில் உயர்ந்து, மனித குண வீரிய உயர் சக்திகொண்ட மக்கள், நம் சூரியக் குடும்பமல்லா (நாற்பத்தி எட்டு+பன்னிரண்டு=அறுபது) கோளங்களில், அச்சூரிய வட்டத்தில், இரண்டாயிரம் கோளங்களில் ஞான வளர்ச்சி பெற்ற மனித இனங்கள் உண்டு.

விஞ்ஞானத்தைக்கொண்டு செயற்கையின் ஞானம் பெற்ற இனத்தன்மை நம்பூமி மனிதனுக்குத்தான் உண்டு, மற்றக்கோளங் களில் உள்ள மனித இனம், ஞானத்தால் உயர்ந்து பறக்கும் தன்மைகொண்ட, சரீர உடல் வளர்ந்த பக்குவ வளர்ப்பாய் செயல்கொள்கின்றனர். நம் பூமியின், தன் ஞானத்தை இயந் திரங்களில் செலுத்தி, பறக்கும்நிலை கொண்டான் மனிதன்.

உயிரணு தோன்றி வளர்ச்சிகொள்ளும் வளர்ப்புத்தன்மையில் மோதுண்டு மோதுண்டு வளர்ச்சிபெறும் வளர்ச்சி நிலையில், கனி வளங்களும், தாவர இனங்களும் வளர்ச்சிகொண்டு வளர்ச்சி கொண்டு, வளர்ச்சியின் முற்றிய தன்மை கொண்ட பிறகுதான், உணர்வின் எண்ணத்தால் செயல்படும் மனிதக் கரு செயலாற்றும் அங்க அவயவங்களும், சொல்லாற்றும் திறமையின் வளர்ச்சியும் வளரப்பெற்ற தொடரின் வளர்தன்மை அடுத்த நிலைக்கு மனித இன வர்க்கம் செல்லா நிலையில் இப்பூமியில் கிருஷ்ணுவதாரக் காலம் தொட்டே, பேராசைப்பிடி உல்லாச வாழ்க்கை, எண்ண உரு வளர்ப்பு வளர்ச்சிபெற்றதிஞல் மனித வளர்ப்பின் சரீர செயல் எண்ண வளர்ப்பும் தடைப்பட்டு, தன் ஞானத்தில் செயல்படும் நிலைமாறி, போதனையின் வளர்ப்பில் அடிமைகொண்ட கல்வி குண போதனை செயலில் குரு சிஷ்யர் என்ற குருகுலத் தொடர்பு நிலையிலும், மனிதனின் எண்ணத்தில் தன் உயர்வின் பெருமையில் பிறரின் நிலையை அடக்கி ஆளும் வழித்தொடரில் மறைக்கப்பட்ட போதனை வழித்தொடரிஞல், இப்பூமியில் வளர்ச்சிகொண்ட ஞான வித்தின் வித்தகத்தன்மையே, ஞானச்செயலின் தொடர்பலைகள் சூழ்ச்சிகொண்ட சூட்சும நிலையில் மறைக்கப்பட்டு, சூட்சுமத் தால் வெளியிடப்பட்ட சில சுவடிகளின் உண்மையைக் காவியக் கதை, கற்பனை ரூபகமாகக் காட்டிய தொடர் நிலையைக்கொண்டு, விஞ்ஞான ஆராய்ச்சியின் செயல் திறமையிஞல், இன்றைய மனித ஞானச் செயல் இப்பூமியின் சுழற்சியில் வளரும் தன்மையிஞல், மனித உருவக வளர்ச்சியும், ஞான வளர்ச்சியும் தடைப்பட்டு, விஞ்ஞானத்தால் இன்று சூரிய அலையுடன் சில அலைத்தொடர்களைப் பாய்ச்சி, தன் விஞ்ஞானச் செயலுக்காகச் சில சக்தி அலைகளைப் பிரித் தெடுத்ததிஞல், மனித ஞானத்தை வளர்க்கவல்ல காந்த மின் அலையின் ஒளி அலையில் வெண்மை அணு சக்தியின் வளர்சக்தியே தடைப்பட்ட தன்மையில் உருவளர்ச்சியின் வளர்ப்பின் தடையும், ஞான வளர்ச்சியின் தடையும் இப்பூமிக்கு ஏற்படுகின்றது.

இதிலிருந்தெல்லாம் இவ்வெண்ணத்தின் வீரிய குணம்கொண்டு இப்பூமியின் பிடிப்பிலிருந்து சூரிய அலைத்தொடர்பைப் பலவாக உள்ள எண்ண குண ஈர்ப்பின் சரீர உணர்வை, நல் அணு வளர்ப்பின் குணத்தன்மைகொண்டு, சூரியஅலையின் சக்தியை சரீர பிம்ப ஈர்ப்பில், எண்ணத்தின் ஞானத்தால் நேராக எடுக்கும் பக்குவத்தால், ஆத்ம பலம்பெற்ற தன்மையில், எவ் ஈர்ப்புப்பிடி யிலும் இவ்வாத்மா சிக்காமல், இப்பூமியின் மாற்றத்தன்மை எதுவாயிருந்தாலும், வளர்ப்பின் வளர்ப்பை வளர்க்கும் ரிஷித் தன்மையின் வலுவுடன் நாமும் கலந்து மனித வித்தை அழியாத் தன்மைப்படுத்தலாம்.

9–5–81

சரீர ஜட பிம்பமான நாம் தெய்வ சக்திபெற்ற தேவர்களின் தொடர்பைக்கொண்டு, மேல்நோக்கிய வளர்ச்சியினால் நம் வளர்ப்பலையின் தொடர்பை எவ் ஈர்ப்பலையிலும் சிக்காமல் சகல சக்திகளையும் உணர்ந்து, சக்தியின் செயலாய் செயலாற்றும் சப்த ரிஷிகளின் ஞானத்தொடர்பலையுடன், உணர்வின் எண்ணமுடன் சரீர ஜடம் கொண்ட நாம் அவ்வலைத்தொடரின் தொடர்பலையுடன் ஞான ஈர்ப்புத் தொடர்பலை பெற்றோமானால், இஜ்ஜட சரீர அணு மூட்டையின் பிடிப்பிலிருந்து உயர்கொண்ட ஞான ஈர்ப்பிற்குச் செல்லலாம்.

இச்சரீர உடலில் உணரும் எண்ண வேட்கைகள் யாவையும் சாதாரண வாழ்க்கை நிலையில் உள்ள மனிதனுக்கு பூமியின் ஈர்ப்புப் பிடியுடன் சிக்கி, அதன் வெளிப்படுத்தும் அலை உணர்வு பூமியின்பால் பதிந்து, பூமியின் அலைத் தொடர்பை இவன் எடுத்து உணர்வின் பிடியை எண்ணத்தின் வேட்கைக்கொப்ப சமநிலை கொள்ளாத்தன்மையில் உணர்வின் வேக உந்தலினால் ஒவ்வொரு ஜீவ ஆத்மாவிலும், ஜீவனற்ற ஆத்ம உயிர் குடியேறி மனிதனின் எண்ண உணர்வையே தன் இச்சையில் செயல்படும் ஞான அணு வளர்ப்பை வளர்க்கவிடாமல், ஒவ்வொரு உடலிலும் சுவாசத்தால் குடியேறிய பல ஆத்மாக்கள் வளர்க்கும் உணர்வின் எண்ண நிலைக்கொப்ப வளரும் சரீர இயக்க ஓட்டத்தின் மாறு கொண்ட தன்மையால், குடியேறிய ஆத்மாவின் அணு வளர்ப்பினால் சரீர பிம்பத்தில் ஏற்படும் தொல்லைகளில் ஆங்காங்கு ஏற்படும் உடலின் கட்டிகளிலும், சில புண்களிலும், கரப்பான், சொறி போன்ற சர்ம வியாதியினால் உதிரமே சீழாகி, அச்சீழ் வளர்க்கும் அணுவை மேன்மேலும் வளர்க்கும் நிலையெல்லாம் ஏற்பட்டு எவ் அணு வளர்ந்து, எவ்வலை உடலின் வேட்கையாய் வெளிப்படுகின்றதோ அவைதான் ஆத்ம உராய்வுகொண்டு ஆத்ம மூலமாய் அதில் சேர்ந்து, அதே ஈர்ப்பு அலை மோதலைத்தான் ஆத்மாவின் வேட்கையும் உடலில் மோதி, உடலின் சத்தெடுக்கும் தன்மையை மேல்நோக்கிய சுவாச அலையினால் எண்ணத்தின் உணர்வை ஞானத்தின்பால் செலுத்தி, இச் சரீர ஜடப்பொருளைக் கொண்டு ஆத்மாவின் வலுவைக்கூட்டிக் கொண்டோமானால் இப் பூமியில் மனிதனாய்ப் பிறந்து சகல சித்தியும் அடைந்து சப்த ரிஷியாய் வாழும் பலரின் நிலைபோன்று இம்மனித எண்ணம் கொண்டோரினால் முடியும்.

உணர்வின் எண்ணத்தின் செயலுக்கொப்ப உட்கொள்ளும் உணவிலும், போதை வஸ்தின் ஈர்ப்பிலும், காம இச்சை வெறி

யிலும் இச்சரீர பிம்பத்தையே அழுகும் மூட்டையாக்கி ஆத்மாவையும் செயலையே இவ் ஈர்ப்பின் ஆத்மாவாக்கிப் பல காலமாய் பலகோடி உயிர்த்தொடர் பிம்பத்தொடர்பில் எல்லாம் முலாம் பெற்ற ஆத்மாவை, உயர்ந்த தெய்வ சக்தியாய் செயல்கொள்ளும் எண்ணத்தால் எதனையும் செயல்புரியும் மனித சக்தி பெற்ற பிறகு இவ்வுணர்வின் உந்தலின் வேட்கைக்காக மனித ஆத்மாக்களின் செயல் தன்னைத்தானே இழக்கும் நிலையாய் மனித வித்து செல்கின்றது.

மனிதனைக் காட்டிலும் உருவத்திலும், பலத்திலும் (வலு) அறிவிலும், சுவாச ஈர்ப்பு நிலையிலும் சக்திகொண்ட யானைக்கு மனிதனை ஒத்த செயல் அங்கங்களோ, சொல்லாற்றும் திறமையோ அற்றதினால் எல்லா நிலைகளும் உணரும் தன்மையிலிருந்தும், ஞானத்தை வளர்க்கும் வளர்நிலைக்கு செல்லமுடியா நிலை மிருகங்கள் பலவற்றிற்கு உண்டு.

எறும்போ, கொசுவோ, மூட்டையோ உருவத்தில்மிகச் சிறியதாய் இருந்து அவை மனிதனைத் தாக்கும்பொழுது அதன் கடி நிலைக்குப் பயந்து பல முன் ஏற்பாடுகளைச்செய்து, பல நிலைகளைச் செய்கின்றான் மனிதன். ஒவ்வொரு நொடிக்குமே இச்சரீர ஜட பிம்பத்தின் ஈர்ப்பு எண்ண வேட்கைக்குத்தான் மனிதன் வாழுகின்றானேயன்றி, ஆத்ம ஞானத்தின் உணர்வை மனித ஞானம் பெற முடியும், மனிதனால் மட்டும்தான் தெய்வசக்தியை உருவாக்க முடியும். அன்று போகன் தன் உடலால் பெற்ற சக்தியை இவ்வுலக முழுமைக்கும் பறக்கும் நிலைகொண்டு, தன் ஆத்மாவில் பெற்ற உயர் அலையின் தொடரை இவ் உலகம் முழுமைக்கும் அந்தந்த இடங்களில் ஜீவன் கொண்ட சக்தி அலைத்தொடர்புகளைப் பூமியில் பதியவிட்டு, அவ்வலையின் ஞானத்தால் பல கோயில்கள் அமைத்து, மனிதனின் எண்ணத்தில் தெய்வ ஞான பக்தியை சரீர ஜட உடம்பைக் கொண்டே போகரும், கோலமாமகரிஷியும், கொங்கணவரும், அகஸ்தியரும், ஐயப்பன், ஆதிசங்கரர் போன்று பல ரிஷிகளும் இன்றளவும் சரீரத்தின் தொடர்பு கொண்டு அன்று பதிய வைத்த அலைத்தொடர்பின் வழித்தொடர்பினால் செயலாற்றும் சக்திபெற்ற செயல் நிலைக்கொத்த தன்மைக்கு இக் கலியின் கடைசியில் எண்ணத்தின் உணர்வைக்கொண்டு நாமெடுக்கும் தியானத்தால் உயர்ந்தோரின் உயர்வுடன் நாமும் உயரலாம்.

**13–5–81**

இச்சரீர பிம்ப உடலில், உணர்வின் எண்ணத்தில் காணும் இன்பநிலை ஒன்றைத்தான் மனிதன் பெருநிலையாக, எண்ணத்தின்

ஏக்கத்துடன் வாழ்கின்றான். உணவின் சுவை, நுகரும் மணத்தின் நிலை, உறக்கத்தின் இன்பநிலை, உடல் இச்சையின் காதல் களிப்பு நிலை, இவற்றின் இன்பத்தையும், ஒளிகொண்டு காணும் இயற்கை அழகு நிலை, கலை இன்பநிலை, நகைச்சுவைநிலை, பிள்ளைக்கனியமுதின் வளர்ப்பு நிலை, அன்பு, பாசம், பரிவு, பரவசச் செயல் நிலை இவற்றின் தொடரிலெல்லாம் மனித உணர்வின் எண்ணம் இன்பம் கண்டு, இவற்றின் தொடரில் கிடைக்கப் பெறும் அமைதிக்காகப் பொருள் சேர்க்கையின் வரவு நிலையிலும், இன்பம் உள்ளது என்ற தொடர் வாழ்க்கையில் இன்பம் அடையும் மனிதன், உடல் உபாதையில் ஏற்படும் எதிர்ப்பு நிலையில் அவதிக்கும், குடும்ப வாழ்க்கையில் உண்டாகும் மற்றவரின் எதிர் நிலையின் சோர்வுக்கும் இன்பநிலை என்று உணரும் தன்மையில் எதிர்ப்படும் மோதல்நிலை எதுவாகிலும், துன்பவாழ்க்கை என்ற சோர்வில் எண்ணத்தைத் சோர்வுபட்டு, முந்தைய நிலையில் சுட்டிக்காட்டி இன்ப நிலைக்காக எதிர்ப்படும் எவையுமே துன்பம் என்ற அச்ச உணர்வினால் வாழ்க்கையில் ஏற்படும் எதிர்நிலை சோர்வைக்கொண்டு, எண்ணத்தின் உணர்வில் ஏற்றிக்கொண்ட இன்பத்தைத்தான் மனித வாழ்க்கையின் இன்பமே உள்ளதென்று, மனித ஓட்டக்காலங்கள் ஓடுகின்றன இன்று.

ஆத்மநிலையின் தொடர்பை உணர்த்தினால், சலிப்புற்ற வாழ்க்கையில் கடைசியாக வாழ்க்கையிலிருந்து அடையக்கூடிய தெய்வீக பக்தி மார்க்கத்திற்குத்தான் ஆத்ம ஞான போதனை செலுத்த வேண்டுமென்ற உணர்வு, மனித எண்ணத்திற்குஉண்டே தவிர, இவ்வாத்ம ஞானத்தைக்கொண்டு மனித சக்தியினால் இன்று முன்னேறிய தொழில் நுட்ப வைத்திய முன்னேற்றச் செயலின் விஞ்ஞான வளர்ச்சியைக்காட்டிலும் வளரும் ஆத்ம ஞானத்தின் நிலையைக்கொண்டு பல உன்னத உணர்வு ஞானத்தையே உருவாக்கலாம்.

விஞ்ஞான முன்னேற்றத்தாரால் அணுக்கதிர்களின் செயலைக் கொண்டுதான் மிக நுண்ணிய வைத்தியமுறைக்கும், தொழில் நுட்ப முறைக்கும், வானக்கோளங்களின் தொடர்புநிலைக்கும், இப்பூமியின் நிலையை அறிய ஒவ்வொரு நாட்டுக்கும் ஒன்றுக்கொன்று தெரியாதநிலையில், பூமத்தியரேகையின் மையப்பகுதியில், அணுச்சேர்க்கையின் நுண் அணுவீச்சுக் கதிர்களைக்கொண்டு, ஒரு நாட்டுக்கொரு நாடு தெரியாவண்ணம் பூமியின் உள்பாகத்தில் கிடைக்கப்பெறும் சில ஆக்க சக்தியின் அலைத்தொடர்பு வளர்ப்புக்களைத் தன் பாகத்திற்குத் திருப்பி வளரப்பெறும் நிலைக்காகவும், தனக்கு மேல் விஞ்ஞானத்தில் வளர்ந்த சில நாடுகளை வளரவிடாத்

தன்மைக்காகப் பூமியின் உள்பாகங்களிலேயே, வளர்ந்த விஞ்ஞானத்தாரால் இவ்வொளிக் கதிர்வீச்சினுல், பல பாகங்களுக்கு பூகம்ப நிலே ஏற்படும் வண்ணம் நீர் வாயு ரேசர் இயக்க அலேகளேப் பாய்ச்சி, பூமியின் உள் நிலேயில் பல வேலேகளே நடத்துகின்றனர்.

விஞ்ஞானத்தின் செயலேக்கொண்டு உயிர்காக்கும் நிலேக்காக மருத்துவ ஞானம் பல செயல்பட்டிருந்தாலும், செயலின் வேகத்தை மனிதன் இன்று உண்மை உயர்வு வாழ்க்கை எது என்ற இனம்புரியா இன்பத்திற்காக, இயற்குண ஆத்ம உயிரை உணரும் பக்குவ நிலேயின்றி மனித வாழ்வு உள்ளது இன்று.

உடலேவிட்டுப்பிரிந்த ஆத்ம உணர்விற்கு இன்பம் உண்டா? ஜீவ சக்தியின் சரீர வாழ்க்கையின் இன்பம்தான் இன்பம் என்ற எண்ணம் மனிதனுக்கு உண்டே தவிர, ஆத்ம ஞானத்தில் உணரும் உயர் இன்பநிலேயின் உண்மை நிலே மனித நிலேக்குப் புரியவில்லே இன்று.

சரீர நிலேயில் உணரும் இன்பத்தைக் காட்டிலும் பேரானந்தப் பெருநிலேயென்று முன்னேர்கள் உணர்த்திய உயர்நிலேயின்உண்மை நிலே, வளர்ந்த ஆத்ம ஞானத்தின் சித்து நிலேயிலேயே இன்ப நிலேயின் உண்மையை உணரலாம். உணவின் சுவையும், மணத்தின் மகிழ்வும், இசையின் இனிமையும், இயற்கையின் எழிலேயும், பிள்ளேக்கனியமுதின் சொல் அமுதையும், ஜீவ சரீர ஆத்மாவால் உணரும் பக்குவத்தைக் காட்டிலும், ஆத்ம சித்து சக்தியின் தொடர்பினுல் ஆத்மா பெறும் இன்பத்தின் பெரு நிலேயின் செயல் நிலேயை உணரும் சக்திநிலே பெற்ருல், சரீர வாழ்க்கையில் பெற்ற இன்பத்தைக்காட்டிலும் பலகோடி இன்ப நிலேகள் சித்து ஞானத்தில் பெற முடியும்.

வாழ்க்கை நிலேயில் கலந்துறவாடும் எண்ணப்பரிமாற்ற நிலே எப்படி உள்ளதோ, அதைப்போன்றே, ஆத்மத்தொடர் ஞான சித்துவின் வலுக்கொண்ட, வளர்ச்சிபெற்ற, தொடர்பு நிலே பலவாக உண்டு. கூடிய வாழ்க்கையும், கலந்துறவாடும் எண்ண நிலேயும் வாழ்க்கைத் தொடர்பில் எப்படி உண்டோ, அதைப்போன்றே ஞானச் சித்தின் ஞானிகளும், ஆத்ம சொந்தம் கொண்டு இன்பம் கொண்ட இரு நிலே இன்பத்தையும் பெறுகின்றனர்.

ஜாதி, மதம், உற்ருர், உறவினர் என்ற பிடிப்பு வேலியற்ற உயர்ஞான சொந்த பந்தங்கள் ஆத்மத் தொடர்கொண்டு அடையும் நிலேயில் இருநிலே இன்பத்தில் பெருநிலே பெறும் வளர்ப்பு நிலே ஒன்று உண்டு.

14–5–81

இன்றைய பக்தி மார்க்கத்தில் மதில் சுவர் எழுப்பி, ஆலய கோபுரம் கட்டி, தெய்வத்தின் உருவச்சிலையைப் பஞ்சலோகங்களைக் கொண்டு பிரதிஷ்டை செய்து, அழகிய ஆடை, ஆபரணங்கள் அணிவித்து, மேளங்கள் முழங்க, வேதங்கள் ஓதி, தீபாராதனை காட்டி, அறங்காவலர்களையும், பொறுப்பேர்க்கும் பொருட் காவலர்களையும் நியமித்து, தெய்வ சங்கல்பம் பெறும், பக்தி மார்க்கத்தால் கிடைக்கப் பெறும், நடைமுறை செயல்வழியை வழிப்படுத்தும் மனிதக் கூட்டங்களும், தன் ஜீவாதாரத்திற்கே பொருளீட்டமுடியா, செயல்நிலை கொள்ளா மனிதக் கூட்டங்கள் போற்றலில் புகழ்கொண்டு பொருளைப்போட்டு, தெய்வபக்தியை வளர்க்கும் தேவக்கூட்டங்களை எதிர்க்கும் எண்ணக்குரோத பொருமை ஆவேச உணர்வுடன் தன் வளர்ப்புநிலையின் உயர் குணத்தையே மறந்து, பொருள்கொண்ட பக்தி உணர்வின் கூட் டத்தைப் பொருளற்ற, ஏக்க உணர்வு கொண்ட மனிதக் கூட்டங் களின் சலிப்பின் சோர்வினுல் பொருமை உணர்வு ஏற்பட்டு, தான் அடையமுடியா நிலையை ஏமாற்றுக் குணத்துடன் ஆலயங் களில் நடைபெறும் பஜனைக்கூட்டத்தின் வலுவைக்காட்டிலும் ஏமாற்றும் உணர்வுகொண்ட, திருடும் நிலைக் கூட்டங்கள் வளர்ந் துள்ள இன்றைய நிலையில் ஆலயத்திற்குச் செல்லும் இரு சாராரும் பயந்த உணர்வு கொண்டே எங்கு, தான் அணிந்து செல்லும் நகைகளோ, பொருளோ, பறிபோய்விடும் என்ற பய உணர்வின் அச்சமுடன் பக்தியும், வருபவர்களிடம் ஒன்றுக்கு இரண்டாய் ஏமாற்றி பூஜை சாமான்களின் விலையை விற்பவரின் உணர்வும், பயத்துடன் தெய்வம் தண்டித்துவிடுமோ என்ற உணர்வு கொண்ட தன்மையும் சில களவாடும் உணர்விலும் தான் இன்றைய ஆலய நிலைகள் யாவும் உள்ளன. இதில் இருந்து உண்மைத் தெய்வ சக்தி அலைபெறும்நிலை மனித உணர்வின்பால் செலுத்தமுடியாச்செய லாய்த்தான் வளர்ந்துவிட்ட மனிதக் கூட்டங்களின் செயலில் இருந்து, ஞான அலையை ஈர்க்கும் வழியற்ற ஈர்ப்புப்பிடியினுல் வலுக்கொண்ட ரிஷிகளின் செயலே இக்கலியில் கலக்கவிடா எண்ண ஓட்டங்கள் ஓடுகின்றன இன்று.

பொருமை உணர்வுகளும், பேராசை உணர்வும்தான் வலு வாகி உள்ளதேயன்றி, முருகனின் குணநிலையை ஒத்த சாந்த சக்திநிலை வளரமுடியாக் கலியாக இன்றைய நிலை உள்ள தன்மை யிலும், எண்ணத்தின் வீரியத்தைப் பிறர்மேல் நாம் செலுத்தும் அலை, தெய்வத் தொடர்புகொண்டு, சாந்தவழித்தொடரின் ஞானத்தின் ஈர்ப்பு வட்டத்திற்கு வந்தாலும், தெய்வத்தின் தெய்வமாகவே நம் ஞான சக்தி உயர்ந்து இருந்தாலும், பிறர்

மேல் நாம் செலுத்தும் அலைத்தொடர், குறைகாணும் எண் ணத்தைச் செலுத்தாமல், நிறைவு கொண்ட நல் அலைகளை நலம் பெற வேண்டுமென்ற உணர்வுகொண்டு செலுத்தி, கீழிருந்து மேலாகத்தான் ஒவ்வொரு ஆத்மாவையும் தெய்வ உருவாய் நாம் எண்ணி, நல் அலை சென்று அவ் அலையின் சக்தியை நாமெடுத்து, நாம் வளர வேண்டுமேயன்றி வேறு ஒருவரின் குறை யிலோ, நிறைவிலோ நம் ஆத்மாவிற்கு வலுப்பெறும் தன்மையோ, வளரும் தன்மையோ நாம் பெற முடியாது.

பிறர்பால் செலுத்தும் எண்ணத்தில் அவ் ஈர்ப்புப்பிடியில் நம் உணர்வைச் செலுத்திவிட்டோமானுல், அவர்கள் பிடியில் சிக்குண்ட ஆத்மாவாய்த்தான், நாமெடுக்கும் சுவாசத்தால் நம் ஆத்மாவும் வழிபெறும்.

**16–5–81**

ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் நாமெடுக்கும் சுவாசத் தால் ஆத்ம அலையின் தொடர்புகொண்டுதான் சரீர இயக்கச் செயலினுல் ஆத்மாவின் வலு கூடிக்கொண்டே உள்ளது. இயற்கை யின் மாற்ற குணங்களும், உருவாகும் ஒவ்வொரு சக்தியுமே நொடிக்கு நொடி மாற்ற உராய்வு வளர்ப்புத் தன்மையில்தான் மாற்றமும், வளர்ப்பும் சுழற்சி ஓட்டத்தில் எல்லாவகைக் குண வளர்ப்பு முறையிலும் வளர்ந்து கொண்டுள்ளது.

காட்சி: அடர்ந்த காட்டுப் பகுதியில் மேடான மலைப்பகுதி யைக் காட்டி பாறையாய் உள்ள ஓரிடத்தில் அப்பாறையின்மேல் மிகப்பெரிய பாறையொன்று நிற்பதைப்போன்றும், பிறிதொரு இடத்தில் அழகான குளமும், அக்குளத்தின் நீர் பாசிபடிந்த கிளிப்பச்சையின் நிறம் போலவும், அப்பச்சையின் நிறம் மாறி மாறி கரும்பச்சையைப்போலவும் அதைச் சுற்றி மேலும் சில செடி கொடிகள் வளர்வதைப் போலவும், பிறிதொரு இடத்தில் ஏற்றம் இறைக்கும் கிணற்றைக் காட்டி நீர் உயர்ந்து, குறைந்து இருப் பதைப் போன்றும், ஆனுல் நீரின் நிறம் தெளிவு கொண்ட நீராய்க் காட்சியில் தெரிகின்றது. இதன் விளக்கம் என்ன?

வளர்ந்த பாறையின் மேல் அப்பாறைக்கும் (பூமியின் பிடிப் புள்ள பாறைக்கும்) அதற்குமேல் பிடிப்பற்ற பூமியின் வளர்ப்பு நிலையிலிருந்து மாறி ஒரு பாறையின் மேல் ஒரு பாறை நிற்கின்ற தென்ருல் அது நிற்கும் நிலையின் நிலை எப்படி ஏற்படுகின்றது? பூமியின் வளர்ப்புப் பிடியுடன் வளரும் பாறைகள், இப்பூமியில்

ஏற்படும் பிரளய காலங்களில், சில மண்டல ஓட்டங்களின் சேர்க்கை காலங்களிலும், பூமி ஈர்க்கும் அமில மாற்றத்திலும், பூமி ஈர்த்து வெளிக்கக்கும் உஷ்ண அலையின் அமில வளர்ப்பில் அந்தந்த இடங்களில் வளரும் கனிவளங்களுக்கும், கல், மண் இவற்றின் வளர்ப்பு நிலைகளுக்கும் கிடைக்கப் பெறும் ஊட்டச்சத்து மாறு பட்டவுடன் பழக்கப்பட்டு எடுத்த வளர்ப்புநிலை குன்றிய நிலையில், அக் கல்களில் சில வெடிப்பு நிலைகள் ஏற்பட்டு வளர்ந்த நிலையில் சத்துக் கிடைக்காமல் அதன் தன்மை அதே நிலையில் வெடிப்புப் பெற்று நிற்க, கீழிருந்து வளரும் பாறையின் மேல் இப்பாறைகள் கரடுமுரடாய் மலைகளில் ஒன்றிற்கு மேல் தனித்தனிப் பாறை களாய் உருண்டு நிற்கின்றன.

பூமியின் பிடிப்புடன் வளரும் பாறை மாறுகொண்ட வளர்ப் புடனே வளர்ந்துகொண்டுள்ளது. நீரின் நிலை பாசிபடர்ந்து வண்ணங்கள் மாறித் தெரிந்ததின் நிலையும், இதைப்போன்றே. ஒவ்வொரு நொடிக்கும் மாறும் உஷ்ணவெக்கையின் ஆவி நிலைக் கொப்ப மாற்றத்தன்மைகள் இயற்கையின் உண்மையை எப்படி இதனைப்போன்று அறிகின்றோமோ, அதைப்போன்றுதான் வள ரும் ஆத்ம வளர்ப்பிலும், இப்பூமியின் பிடிப்புடன் வாழும் தன்மை யில் மாறி மாறி வளர்ந்து கொண்டுள்ள இயற்கையின் சுழற்சி யில், ஒன்றை ஒத்த தன்மையில் ஒன்றில்லா உலகச் சுழற்சி நிலையில், பலகோடி ஆண்டுகளுக்கு முன் இருந்த மனிதனின் வளர்ப்பு ஞானமும், பத்தாயிரம் இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த சித்தர்கள் பெற்ற ஞான சக்திக்கும், இன்றைய வளர்ந்த கலியின் ஆத்ம ஞான சக்திக்கும் மிகமிக மாறுபாடுகளும் அவர்கள் உணர்த்திய காலத்தில், அவர்கள் நடைமுறைச் செயலுக் கொப்ப, இவ் விஞ்ஞானக் காலத்தில் நம் செயலும் இயற்கையுடன் ஒன்றிச் சென்றுதான் ஞான சக்திபெறவேண்டுமென்ற எண்ணத் தின் ஈர்ப்பைச் செலுத்தி, ஆசார அனுஷ்டானங்களை வலியுறுத்தி வகைப்படுத்தித்தான் எண்ணத்தைச் செலுத்தி வழிபெற வேண்டு மென்று உணராமல், இக்கலியின் காலத்தில் மனித ஈர்ப்பு துரித அறிவாற்றலின் சக்தியை, இக்கால நிலையின் சுழற்சியுடன் கலந் துள்ள தன்மையிலிருந்தே, அவரவர்களுக்கமைந்த வாழ்க்கையின் வளர்ப்புத்தன்மையில் ஒவ்வொரு செயலையுமே உயர்வின் ஞானத் தைச் செலுத்தி ஆத்மாவின் வலுவுக்கு வலுக்கூட்டும் வழிமுறைத் தன்மையை வகுத்துக் கொள்ளுங்கள்.

**22–5–81**

சூரிய அலை ஈர்ப்பிலிருந்து இன்றைய விஞ்ஞானத்திற்காகச் செயற்கை மின்காந்த அலையை மிகத் துரித இயக்கமாய் இந்நூற்

ருண்டில் எப்படி மனித விஞ்ஞானம் பிரித்தெடுத்து ஒளிகாண சூரிய சக்தியின் அலையை இப்பூமிக்குத் துரிதப்படுத்தியதின் செயற்கை இயக்கவேகம் உயிரினங்களின் ஈர்ப்பு வார்ப்பிலும், இக்காற்றலை யின் தொடர்பினுல் பெறவல்ல துரித இயக்கத்தினுல்தான் இக்கலி மனிதர்களின் ஞான ஈர்ப்பும், இயக்கத் துரிதமும் மிக வேகமாக முன்னேறியுள்ள, முன்னேறியுள்ள என்பது இயற்கையின் அலை ஈர்ப்பானது உயிரினங்களின் சுவாச ஈர்ப்பிற்குத் துரிதம் கொள்ளும் அலை காந்த அணுக்களின் மின் ஈர்ப்புநிலை உயிரின வளர்ப்பு யாவற்றுக்குமே துரிதப்பட்டுள்ளது இயற்கை.

செயற்கையின் செயலுக்காக சூரிய அலையின் மின்காந்த அலைகளைப் பிரித்தெடுக்கும் இயக்கத்தால், பூமியின் தன்மைக்கே அக்குணம் கூடிவிட்டதின் செயலினுல்தான், இந்நூற்ருண்டில் மனித விஞ்ஞானச் செயல் முன்னேறியுள்ள துரித வேக ஓட்டம் மிகவும் வளர்ச்சியுற்று ஓடிக்கொண்டுள்ளது இன்று.

இத் துரித ஓட்டத்தையே வழிப்படுத்தும் ஞான ஈர்ப்பின் இயற்கை சக்திக்கு ஆத்மத் தொடர்புடன் செயல்படுத்திணேமானுல் ஆயிரம், பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் வளர்ச்சியுற்ற நிலையைக் காட்டிலும், இன்றைய வளர்ப்பின் துரிதத்திற்கு, இக்கலியின் மின்அலை செயலுக்கு உட்படுத்தப்பட்ட மின் சக்தியின் துரிதம் போன்றே எண்ணத்தில் எடுக்கும் சுவாசத்தால், ஞானத்தின் ஈர்ப்பு நிலையினுல், இவ்வாத்ம வார்ப்பை ஒளி நிலையாக்கி உயர் சக்தியின் தொடர்பில் சித்து நிலைகொண்ட ரிஷித் தன்மைக்கு உட்படுத்த முடியும்.

தீய சக்தியின் செயலில் இன்று பல நிலைகள் துரிதம்கொண்டு மாந்திரீகத்தாரால் அவர்கள் அறியாத நிலையிலேயே அவர்களுக்குச் சில துரித ஆவேச அலை உணர்வு கொண்ட ஆவி ஆத்மாக்கள் இவர்கள் ஈர்ப்பிற்குச் சிக்கி, அவ்வாவியின் உந்தலின் சுவைக்கு உகந்த ஆகாரத்தை இவர்கள் தந்து, மந்திரவாதியின் செயலுக் காக அவ்வாவிகள் எச்செயலையும் செய்விக்கும் தன்மையெல்லாம் சூனியக்காரர்களின் நிலைகளிலெல்லாம் பல செயல்கள் நடை பெறும்போது, உண்மையின் இயற்கை ஆத்ம வலுவை நாம் நற்குணங்களின் வார்ப்பாய் இயக்கவல்ல இயக்கத்தால் இவ் ஆத்ம வலுவைக்கொண்டு ரிஷித்தன்மை பெற முடியும்.

இப்பூமியின் இயக்கத்தில் எப்படி இருள் அதிகமாகவும், ஒளி குறைவாகவும் உள்ளதுவோ, அதைப்போன்றுதான் எண்ணச்செயலும் உள்ளது. கடும் இருட்டிலும் சிறிது வெளிச்சம்

ஊடுருவி ஒளி பாய்ச்ச முடியும். சிறிது வெளிச்சத்தையே மறைக்கக் கடும் இருட்டுத் தேவையாக உள்ளது.

இவ்வெண்ணத்தின் இருளை ஒளியாக்கும் ஆத்ம வலுவை நாம் பெற்றோமானால் உடலின் எண்ண நிலைக்கொப்பச் செயல் படும் குணத்தையே ஆத்மாவின் செயலாய் உடலைச் செயல்படும் வண்ணத்தில் செயலாக்கி இருளில் இருந்து ஒளிபெறும் ஞான ஒளியாய் இவ்வாத்ம ஒளி பிரகாசிக்கும் சக்தியை இவ்வெண்ணத் தின் ஞானத்தால் எண்ணத்திலுள்ள இருளான சலிப்பு,சோர்வு, பிறரிடம் உள்ள குறைகாணல், புகழுக்காக ஏங்கும் ஏக்க நிலை, மரண பயம் போன்ற இருள்தன்மையையும் நாம் மாய்க்க வேண்டும்.

குரோதம், வஞ்சனை என்ற தீய குணங்கள் வேறு, எண்ணத் தால் வளரவிடாமல் மறைத்துவிடும் இருள் குணங்கள் வேறு. ஆத்ம ஞானத்தால் நாம் வளரும் காலங்களில் சலிப்பின் சோர்வை அண்டவிடாமல் சலிப்பின் ஏக்கத்தால் உயர்வு கொள் வோம் என்ற உயர்ஞான வழிக்கு ஏக்க நிலையைச் செலுத்தி, இவ் ஏக்கத்திலேயே ஆத்ம வளர்ப்பை வளர்க்கவும் முடியும். இவ் ஏக்கத்தின் சோர்வைக் கொண்டே பிறர்பால் பொருளைப் பார்த்து ஏக்கப்படும் ஏக்கத்தால் மனித வாழ்க்கை அழிவிற்கும் செல்வதுண்டு. குணங்களை வழிப்படுத்தும் ஞானத்தால் பெறவல்ல ஆத்ம பலத்தால்தான், இருள் என்ற நிலை நீங்கி ஒளியான ஆத்ம வலுவைப் பெற்ற ஆத்ம ஞானத்தால் எண்ணிய எண்ண நிலைக் கொப்ப கடும் பசியையும், உடல் சோர்வையும் உடலில் எப்பாகத் தில் எவ் உபாதை ஏற்பட்டிருந்தாலும், இவ்வுடலின் செய லுக்கும் இவ்வாத்ம ஞானத்தால் அலைத்தொடர்பின் ஈர்ப்பு வரிசையில் எண்ணத்தைச் செலுத்தி சுவாசம் எடுப்பதினால் எதை எண்ணி சுவாசம் எடுக்கின்றோமோ அவ்வலை அமில உணர்வு இவ்வுடலில் சாடி ஏற்படும் எண்ண நிலைக்கொப்ப ஆத்ம பலத் தைக்கொண்டு இவ்வுடலின் செயலையும் வழி வகுத்துக் கொள்ள லாம்.

இவ்வுடல் ஓர் அடுப்புத்தான். இவ்வுடல் சமைக்கும் அமில உணர்வின் ஆவி நிலையைத்தான் ஆத்மா பெற்று, ஆத்மா வாழ்வது சாதாரண வாழ்க்கை நிலை. வாழ்க்கையின் ஞான ஈர்ப்பு நற்குண தியானச் செயலால், எண்ணத்தின் சுவாசத்தில் ஆத்ம பலம் பெற்ற ஞானியினால், உடல் சமைப்பிலிருந்து ஆத்மா பலம் பெறும் நிலை மாறி, ஆத்மாவின் செயலுக்குகந்த சமைப்பாய் இவ்வுடலை இயக்க முடியும்.

பசி, தூக்கம், கழிவு, காமம் பேன்ற உடலின் செயல் இயக்கத்தையே ஆத்ம வலு கூடிய ஞானியினுல் ஆத்ம வலுவைக் கொண்டு மாற்றியமைக்கும் தன்மைக்கு இச்சரீரக்கூறின் எலும்பு களே மின்காந்த வலுக்கொண்ட உறுப்புக்களாய் உறுதிகொண்டு சரீரஉணர்வின் சாதாரண நிலையையே எண்ணத்தின் இயக்க நிலைக்கொப்ப மாற்றியமைக்கும் ஆத்ம வலுவைக் கொண்டு செயலாக்க முடியும்.

**23–5–81**

ஆத்ம வலுப் பெறுவதென்பது ஆண்டவன் அருளினுல் ஒரு நொடிப்பொழுதில் கிட்டிவிடுவதென்பதல்ல. இச்சரீரக்கூறின் உணர்வின் எண்ணத்தையே, உயர்ஞான வழிமுறைக்குச் செயல் படும் ஒவ்வொரு செயலுக்குமே, செயலின் வழி முறையில் செலுத்தப்படும் எண்ணத்தில் உடல் ஏற்கும் உணர்வு நிலைக் கொப்ப, உணர்வு நிலையென்பது, சகல நிலைகளிலும் இவ்வெண் ணம் மோதும்பொழுது சமமான சாந்தநிலையுடன் கூடிய எண் ணத்தின்பால்தான் உணர்வின் செயல் உடல்நிலை ஏற்கும், வழிப் படுத்தும் நிலைக்கொப்ப இவ் எண்ணத்தன்மையைச் சகல சக்தி களிலும் சமமான சாந்த சக்தியைச் செயல்படுத்தும் வழிமுறை யினுல்தான் ஆத்ம பலத்தைக் கூட்டிக்கொள்ள முடிகின்றது.

ஆத்ம பலம் பெற்ற ஞானத் தன்மையினுல் எண்ணத்தின் உணர்வை சாந்தப்படுத்தும் வழிச்செயலை அவ்வாத்மாவே பிறகு செயல்படுத்தி வழிநடத்தும். சிறுசிறு துளிகள் சேர்ந்ததுதான் பெரு வெள்ளமாகின்றது. அதைப்போன்று ஒவ்வொரு செயலிலும் எண்ணத்தின் வழிமுறையைச் செயல்படுத்தும் தன்மைகொண்டு தான் ஆத்மபலம் கூடி வலுவாகின்றது. ஆத்மபலம் பெற்று விட்டால் வாழ்க்கையில் நடக்கும் எதிர்நிலை உந்தல்கள் பல மோதத்தான் செய்யும்.

பெரும் வெள்ளத்தில் எதிர்ப்படும் குப்பைகள் எப்படி அடித் துச் செல்லப்படுகின்றனவோ அதைப்போன்றே, ஆத்மபலம் பெற்ற வாழ்க்கையில் எதிர்ப்படும் உணர்வை உந்தத்தக்க சில நிலைகள் ஏற்பட்டாலும் வெள்ளத்தில் அடித்துச் செல்லும் குப்பை யைப் போன்று நம் ஆத்மாவுடன் கலக்காது.

பல காலமாய் உழைத்துச் சம்பாதித்து வீடு கட்டும்பொழுது வீட்டின் அஸ்திவாரத்தைப் பலம்கொண்டு கட்டப்பட்டவுடன் அதற்கு அழகு செய்வது கடினமல்ல. கட்டப்பட்ட வீட்டில்

ஆங்காங்கு ஏற்படும் துப்புரவு நிலைகள் சில செய்துதான் ஆக வேண்டும். அதைப்போன்றே ஞானபலத்தால் சித்து நிலை கொண்ட ஆத்மபலம் பெற்று இச்சரீரமுடன் வாழும்கால் ஏற்படும் வழிமுறையில் கட்டப்பட்ட வீட்டின் குப்பைகள் அண்டுவதைப் போன்றும், காறைகள் உதிர்வதைப்போன்றும், சில நிலைகள் ஏற் படத்தான் செய்யும். அதைத் துப்புரவுபடுத்திக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

உடலுடன் கொண்ட வாழ்க்கையில் எதிர்ப்படும் யாவையும் நம் ஞானத்தை வளர்க்கவல்ல வழிமுறையாய் ஆத்மாவின் செய லைக் கொண்டு வழிபெறும் பக்குவத்தை நாம் பெறல் வேண்டும்.

**26–6–81**

எண்ணத்தால் எடுக்கும் சுவாசம், எவ் ஈர்ப்புப் பிடியின் அலையைத் தொடர்புகொண்டு எடுக்கின்றதோ, அத்தொடர்பு அலையின் உணர்வுத் துடிப்பணுஅலை வளர்ப்புத்தான் சரீர பிம்ப இயக்க வலுவாய் எதன் தொடர்பலையில் அதிகப்பட்டு எண்ணத் தின் ஈர்ப்பு சுவாசம் எடுக்கின்றதோ, அவ்வணுவுக்குகந்த வளர்ப்பு வார்ப்பாய்தான் எண்ண வளர்ச்சியும், உணர்வின் உந்தலும் வளர்ச்சி பெறுகின்றன.

சரீரத்தைக்கொண்டு யோகாசனம், சில விந்தை விளை யாட்டுக்கள் செயல் புரிபவரின் அங்கக்கூறின் அமிலத்தன்மையே அவ் ஈர்ப்பின் எண்ண உணர்வின் வலுவான அணு வளர்ப்பினுல் சரீரத்தைப் பத்து நாட்கள், பதினைந்து நாட்கள் இப்படிசுவாசத்தை அடக்கிய முறையிலேயே சில விந்தை புரிபவர்களும் உண்டு. அதைப் போன்றே சரீர இயக்கத்தால் சரீரத்தைப் பல விந்தைச் செயலாய் யோகாசனம் போன்ற வழிமுறையில் செயல்படும் முறையும் இதன் தன்மைக்கு உகந்ததுதான்.

நாட்டியம், சங்கீதம், உடற்பயிற்சி, சில விளையாட்டு வழி முறைகள் இவற்றில் ஒவ்வொன்றிலுமே எண்ணத்தின் உணர்வைக் கூர்மையாக்கி, எத்துறையின் வழிப்படி இச்சரீர இயக்கம் அதிகப் படியாய்ச் செயல் கொள்கின்றதோ, அதற்குகந்த அணுவளர்ப்பை இச் சரீரம் எண்ணத்தினுலேயே அவ்வமிலத்தை காந்த மின் அணு வளர்ப்பாய் சரீரம் வளர்ச்சிகொள்கின்றது.

எண்ணத்தின் உணர்வைக் கூர்மையாக்கி, துரிதம் கொண்ட ஆர்வ உணர்வின் உந்தலுக்குகந்த வார்ப்பாய் சரீரம் வழிவகுத்துக் கொள்ளுகின்றது. இத்தொடர் சரீர இயக்கத்தில் மட்டும்

அல்லாமல் தொழில் முறையிலும் மற்றக் கலைகள் ஒவ்வொன்றிலுமே ஒரு மனிதன் தன் வாழ்நாளில் எண்ணத்தின் உணர்வு சுவாசத்தை எச் செயலுடன் ஒன்றிய சுழலில் வாழ்கின்றானோ, அவ்வலையின் வளர்ப்பை சரீர அணுக்களே வளர்ப்பதோடு அல்லாமல், அதே நிலைகொண்ட அமிலக்கூறின் ஆவி நிலை அமிலத் தொடர்பும், இவ்வளர்ப்பின் தொடர்புடன் வளரும் அலைத் தொடர்பாய் இவ் ஈர்ப்புடன் தொடர்ந்து வளர்கின்றது.

இனம் இனத்துடன்தான் சேரும் என்ற உண்மையின் தத்துவ உணர்வு இவ்வலையில் பின்னப்பட்டதுதான். இச்சரீர உணர்வின் எண்ணத்தைச் செலுத்தும் வழிமுறையைக் கொண்டு, வாழ்க்கையில் நடைமுறைச் செயலே இத்தன்மைக்கு உட்பட்டு வளர்ச்சியுறும் பொழுது, எண்ணத்தின் உணர்வு ஞானத்தைக் கொண்டு மனித சக்தியின் செயலை உயர்வின் வழியமைக்கச் செயல்படுத்தும் முறையறிந்து, எண்ணத்தின் உணர்வை உயர்வுகொண்ட ஞானஈர்ப்புத் தொடர்புடன் தன் ஞானத்தை வளர்த்து, சகல சித்தும் அறியும் ரிஷித்தன்மையின் வழிபெறலாம்.

சரீர உணர்வுடன் இந்த ரிஷித்தன்மைபெற ஆண், பெண் கூட்டு உணர்வு எண்ண வழி முறையின் வளர்ச்சியினால் சகல சித்துவும் பெறும் தன்மை அடைய, வாழ்க்கையில் ஆண், பெண் எண்ணக்கூட்டுநிலை தேவைப்படுகின்றது. ஒவ்வொரு சித்தரும் ஒவ்வொரு நிலையில் சக்தி பெற்றார். மலட்டுத்தன்மையற்ற வளர்ப்பு நிலைக்கு, சிவசக்தியென்ற ஆண், பெண் அமிலக் கூட்டின் உணர்வுத் தொடர்புடன் கூடிய ஞானச்சித்து பெறுபவர்களின் ஐக்கியத்திற்கு, தனித்த சக்தியினால் செயல்படுவதென்பது வளர்ப்புத் தன்மையைக் காட்டிலும் மலட்டுத்தன்மையான முனிவர்களின் நிலையை ஒத்துத்தான் தனித்து இயங்க முடியும்.

ஆண், பெண் அமில சக்திதான் நம் பூமியின் சக்தியே. அச்சக்தியின் தொடர்பு போன்றே சகல நிலைகளும் இன்றளவும் வளர்ந்துள்ளதைப் போன்று ஞானத்தின் தொடருக்கும் இவ்வழி முறையைப் பெற்றிடுங்கள்.

**4–6–81**

சகல ஜீவஜெந்துக்களும் ஆண் பெண் இனத்தொடர்பால் இனப்பெருக்கம் எப்படி வளர்கின்றதோ, அதனை ஒத்த தன்மையின் வளர் சக்தியில்தான் ஆண் எடுக்கும் உயர் தொடர்பலை தியானத்தால் கூடக்கூடிய அமிலத்தின் தன்மைக்கு ஜீவன் பெற பெண் இன சுவாசத் தொடர் எண்ணப் பரிமாற்றத்தினால், தான்

பெற்ற சக்திக்கே ஜீவசக்தி இருந்தால்தான் ஆத்மபலத்தின் வலுத்தன்மை பெற முடியும்.

உடல்பலத்தைக் கொண்டு பயில்வான்கள் எடுக்கும் பளு தூக்கிகளைப்போல் ஆத்மபலம் பெறத்தக்கதல்ல. எண்ணத்தால் எடுக்கும் சுவாச அலையின் ஜெபத்தன்மைக்கு, கூடப்பெறும் அமிலச் சேர்க்கைக்கு ஜீவத் துடிப்பலைகள் பெறவல்ல அணு வளர்ச்சித் தன்மைக்குப் பெண்மைத்தொடர் சுவாசஅலை இருந்தால்தான் ஆண் எடுக்கும் ஜெபத்தின், உயர் அமிலத்தின் வார்ப்புத்தன் மையை அணுவளர்ப்பின் சமைப்புத்தன்மை ஆவி நிலையால் ஆத்ம வலுவின் மூலம் பலம் கொள்ள முடியும்.

பெண் இனமே இல்லாமல் பலகோடி ஆண்டுகள் கடும் தவமிருந்து பெண்ணின் சுவாச அலையே படாமல் இப்பூமியில் ஜெபம் பெற்ருலும், எப்பூமியில் இருந்து ஜெபநிலை பெற்ருர்களோ அதே ஈர்ப்புப் பிடிப்பின் சுழற்சி வட்டத்தில் சிக்குண்டுதான் தனித்த நிலைகொண்டு தவத்திலிருந்து செயல்பட முடியுமேயன்றி வளர்சக்தியின் தொடர்சக்தியான ரிஷிசக்தியின் சுழற்சி வட்டத் தில் சுழலும் தன்மை பெற முடியாது.

ஒன்றுடன் ஒன்று மோதுண்டு சுழல் பெறும் வழித்தொடரில் ஒவ்வொன்றும் உருவாகுகின்றதேயன்றி, தனித்தொன்று இயங் காத்தன்மை போல், தெய்வ சக்தி கொண்ட ரிஷித் தன்மை பெற ஆத்மத் தொடர்புகொண்டு, ஆண் பெண் இனத் தொடர்பு ஆத்ம அலையின் கூட்டு ஐக்கியமாய் இத்தொடர் பெற முடியும்.

இத்தொடரில் சில சித்தர்கள் தன் வாழ்க்கை பந்தத்தில் பெறமுடியாப் பெண்மையின் ஜீவத்தொடர் கிட்டாததினுல் தன் சித்து நிலையில் ஆத்ம வலுவைக்கொண்டு ரிஷித்தன்மை பெற வேண்டிய சக்திக்காக மிருக அலைத்தொடர்புடனும், ஆத்ம ஜீவ பிம்ப உடல் எண்ணத்தை மிருகங்களின் உணர்வலையுடன் தன் ஆத்மாவைப் பிறிதொரு சரீரத்தின்மேல் செயல்படுத்தியும் அச் சக்தியைப் பெற்றனர்.

உபதேச உயர்வு ஞானத்தால் பல சித்தர்கள் தாய் இன குணமுடன், தான் பெறும் சக்திக்குப் பல ஆத்மாக்களின்பால் தன் எண்ண உணர்வின் உயர்விற்காக உபதேச நிலையில் பல சக்திகளைப் பெற்றனர்.

ஆணின் உயர்வுத்தன்மைக்குப் பெண் இன ஜீவஅலைத்தொடர் எப்படி அவசியமோ அதைப்போன்றே பெண்மையின் சக்திக்கு ஆணினத்தின் அமிலத்தன்மை இல்லாவிட்டால் ஜீவசக்தியின்

வழி சக்தியைப் பெருக்க சக்தியின் செயல் தன்மை உயர்ஞானம் பெறவல்ல வழித்தொடருக்குச் செல்லாமல் பெண் இனத்தின் துரித அமிலக்கூறு ஜீவ சக்தியின் வம்சப் பெருக்கத்தின் நிலையில் சோர்வுகொண்ட பெண் இன வர்க்கத்தின் சுவாச நிலைகொண்டு வாழும் இடங்களில் புழு, பூச்சி, கரையான் இப்படி பூமியின் கீழ் பிடிப்பில் ஊரும் ஜெந்துக்களின் வளர்ப்பு நிலை மிக அதிகமாக இனப்பெருக்கம் கொண்டு சுழலும் தன்மை ஏற்படும்.

இதுவே பெண் இனத்தின் உண்மையான உயர் சக்தியை ஞானத்தால் உயர்வழிக்குச் செல்ல ஆண் இனத்தொடர்பு எண்ணத்தின் பால் செலுத்தப்படும் வாழ்க்கைநெறி, சுற்றுச் சூழ்நிலை எத் தொடர்பு சுற்ற ஆண்வர்க்கத் தொடர்பு கொண்டவர்களுடனும், பெண் இனத்தின் குணத்தன்மையே ஆவேச உணர்வு, சலிப்பு, சோர்வு, சங்கடம் போன்ற எண்ணத் தொடர்பு கொண்டு எடுக்கும் சுவாச அலையின் தொடர்பில் பெறும் நிலையினுல் பெண்களின் உடல்நிலையிலும், பெண் விடும் சுவாச அலையில் வளரும் அணுக்களும் எவ்வலையின் உணர்வைச் செலுத்தி எடுக்கும் தொடர்புக்கொப்ப ஜீவ அணுக்கள் ஒவ்வொரு மூச்சலையின் தொடரிலும் பலகோடி ஜீவ அணுக்கள் பெருகிக்கொண்டே உள்ளன.

புழுவாகவும், பூச்சியாகவும் தன் சுவாசத்தின் அலை ஈர்ப்பை வளர்க்கும் தாயினம் நற்குணத்தின்பால் ஆண் இன குணங்களுடன் தன் எண்ணத்தின் செயலை ஞானத்தால் செலுத்தும் உயர் குணத்தைக் கொண்டு, இப்பூமியின் பிடிப்பலைக்கே ஞான உணர்வைப் பெறவல்ல நற்குண வளர்ப்பான ஜீவ அணு காந்த சக்தியின் ஞான சக்தியை ஆண் இன உயர்வுக்கும் நற்குணத்தினுல் தொடர்பு கொண்டு எண்ணும் எண்ண சுவாச அலை அனைத்துமே உயர்வின் தொடர்பில் பூமியின் உயர்வுக்கே பெண் எடுக்கும் சுவாசத்தால் உயர்வு நிலைப்படுத்த முடியும்.

பெண்களின் சொல் ஈர்ப்பில் ஆண் இன உணர்வின் மோதல் எடுக்கப்படும் நிலைகொண்டுதான், ஆண் இன அமில ஜீவ ஆவி வார்ப்பு, ஆத்மாவிற்குக் கூடுகின்றது. அதைப்போன்றே பெண் இனம் ஆணின் சொல் ஈர்ப்பில் இருந்து சக்தி பெறுவதில்லை. பெண்ணின் சொல்லும், எண்ணமும் ஆணின்பால் செலுத்தும் உணர்வுக்கொப்பத்தான் உணர்வின் ஈர்ப்பிலேயே காந்தமுடன் இரும்பு சேர்வதைப்போன்று, தானுகவே சக்தியைப் பெற்றுக் கொள்கின்றது பெண் இனம்.

இதை ஒவ்வொருவரும் தன் வாழ்க்கை நிலையுடன் ஒத்த வழியிலிருந்தே அறிந்துகொள்ளலாம். ஜெபத்தால் எடுக்கும்

ஞானத் தொடர்பில் சூட்சுமத்தை ஒன்றுடன் ஒன்று கலந்த உணர்வுத்தொடர்புடன் உள்ள வழித்தொடர் அறிந்து செயல் கொள்ளுங்கள்.

**5–6–81**

அகம், புறம், சூட்சுமம் இவற்றின் உண்மைத் தத்துவத்தை உணராமல் அகத்தின் உணர்வு எண்ணத்தின் செயலாய்த்தான் அகச்செயலும், புறத்தின் அகச்செயலும் அதே தொடரின் உணர் வலேகொண்ட புற நிலேயையும் காணும் வாழ்க்கையில்தான் சுழற்சி ஓட்டம் உள்ளதேயன்றி, சூட்சுமத்தால் வெளிப்படுத்தப் பட்ட பல தத்துவங்கள் மறைக்கப்பட்ட நிலேதான் இன்றளவும் உள்ளது.

மனித ஞானம் பக்குவம் பெற்று வாழ்க்கையென்ற கூட்ட மைப்பு, நெறிமுறை நிகழ்ந்த காலத்திலிருந்தே மனித ஞானத்தின் பால் வாழ்க்கையில் வழிமுறைச் செயலுடன் பல பக்குவ ஆரோக் கிய நிலேகளேச் சித்தர்கள் காட்டிச் சென்றனர்.

சமைத்து உண்ணும் உணவைப் பச்சை வாழையிலேயில் சூடாகப் படைத்து உண்ணும்பொழுது உணவின் உஷ்ணம் வாழை யிலேயின் மேல்பட்டு அதிலிருந்து வெளிப்படும் ஆவிச்சத்துடன் உணவை உண்ணும் பொழுது உணவின் சுவையும் அவ்வாவியில் இருந்து வெளிப்படும் இரசச்சத்தான அமில குணம் உணவின் செரிப்பிற்கும், உடல் ஆரோக்கியத் தன்மைக்கும் வழிகாட்டியாய் உள்ளதன் நிலேயுணர்ந்து அப்பக்குவ முறையை சித்தர்கள் காட்டிச் சென்றனர். இதைப்போன்று வாழ்க்கைநெறிக்குப் பல உண்மை களே உணர்த்திச் சென்ருர்கள்.

சூட்சுமத்தால் மறைக்கப்பட்ட பல நிலேகள் இன்றும் உள்ளன வாழ்க்கையில். உலகச் சுழற்சி ஓட்டத்தில் ஆதிசக்தியின் பரம் பொருளின் சக்திநிலேயைச் சிறிய இவ் இரண்டு கண்களேக்கொண்டு பரந்த கண்ணுக்கெட்டிய பலவற்றையும் பார்க்கும் சக்திகொண்ட படைப்புப் பெற்ற நாம், ஏன் சூட்சும ஞானத்தால் விஞ்ஞானத் தில் இன்று ஓர் இடத்திலிருந்து ஒளிபரப்பப்படும் உருவத்தொடர் காட்சிகளே இக்காற்றில் கலக்கவிட்டுப் பல மைல்களுக்கப்பால் அதே உருவத்தின் செயலே அமிலச் சேர்க்கையின் உலோக அலேத் தொடரில் காந்தமின் அலேயின் மோதலினுல் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிதனேக் காற்றலேயில் கலந்துவரும் அலேத்தொடரை உருவ மாய் நிகழும் நிகழ்ச்சிதனே இருந்த இடத்தில் பார்க்கும்பொழுது, எல்லா சக்திகளேயும் பெற்ற செயலாக்கி,செயல்காணும் மனிதன்

அதைப் போன்றே இஞ்ஞானத்தைக்கொண்டு ஆத்ம தியானத்தால் இவ் எண்ணத்தின் உந்தலை எதில் செலுத்தி தட்டுகின்ருனே அத்தொடரில் உள்ள நிலைகள் புருவத்தின் மத்தியில் எலும்பு கவன நரம்புகளில் எண்ணியதின் சுவாச மோதல் ஏற்பட்டவுடன் எதையெண்ணி தியானநிலை எண்ணம் செல்கின்றதோ அங்கு நடக்கும் நிலையைத் தொலைக்காட்சியில் காண்பதைப்போன்று பக்குவம் பெற்ற ஆத்ம ஞானத்தால் காணவும், ஒலி கேட்கவும் முடியும்.

ஆத்ம ஞானத்தால் முக்காலமும் அறியவல்ல சக்தியை ஒவ்வொரு ஆத்மாவும் பெறமுடியும். சென்றகாலம் நடந்தன யாவையுமே இக்காற்றலையில்தான் கலந்துள்ளன. உணர்வின் எண்ணத்தைப் பின்னேக்கிய அலைத்தொடர்பில் செலுத்தப்படும் நிலைக் கொப்ப உயிரணு தோன்றிய காலம்தொட்டே மனித ஞான சக்தியால் எதனையும் காணமுடியும்.

நிகழ்நிலையையும் எண்ணத்தைச் செலுத்தும் உணர்வின் மோதலினுல் ஞான திருஷ்டி என்று சித்தர்கள் உணர்த்திய நிலையால் நிகழும் காலத்தையும் அறியலாம். எதிர்கால நிலையை, நாளை நடப்பதை இன்றெப்படி அறியமுடியும்? என்ற வினுத்தான் இன்றைய செயலில் உள்ளதுவேயன்றி, பிறப்பும் இறப்பும் ஆண்டவன் செயல், காலதேவனின் கருணை என்ற எண்ணம் பக்திமார்க்கத்திலும், அதையே விஞ்ஞானி அமிலச் சேர்க்கையின் நிலையை இயந்திர சாதனங்களின் துணையைக்கொண்டு காலநிலைகளின் மாற்றத்தையும் மண்டலச் சேர்க்கைக் காலங்களில் புள்ளி விவரங்களையும் இயந்திரத்தால் உணரக்கூடிய எதிர்கால நிலைதனை ஆத்மஞான வலுக்கூட்டிக் கொண்ட ஞானசக்தியினுல் எதிர்காலத்தில் நடக்கும் நிலைகளை இன்றே உணரக்கூடிய உண்மை பெறும் நிலை அடையலாம்.

முக்காலமும் உணரும் பொற்காலமாய் இவ்வாத்ம காலத்தை பக்குவப்படுத்துங்கள் பொற்கோவிலாய். ஆத்மாவின் வளர்ப்பில் எவ் ஈர்ப்பின் உணர்வும் மோதாமல் புடம்போட்ட பொன்னுய் பக்குவப்படுத்துங்கள். ஈயம், பித்தளை, செம்பு, தங்கம் இவற்றில் திராவகத்தை விடும்பொழுது மற்ற உலோகங்கள் கரைந்தாலும் தங்கம் எப்படி தனித்து நிற்கின்றதோ அதைப் போன்று புடம் போட்ட தங்கமாய் இவ்வாத்ம வலுவை வளர்த்துக் கொண்டோமாளுல் எக்காலமும் அறியவல்ல ஆற்றலும், முக்காலமும் உணரும் சக்திநிலையும் இவ்வாத்ம ஞானத்தால் பெறவல்ல சக்தியை சத்தியத்தின் சக்திநிலை மூலமாய் உபதேச மந்திரமாய் ஜெப ஞானத்தால் என் ஈர்ப்பின் வட்டத்தில் வழிவந்த ஆத்ம தியானம்

கொண்ட தம்பதிகளின் ஆண் பெண் இருவரின் துணைகொண்டு என் சக்தி நிலையில் உணர்த்தப்பெற்ற உபதேசத்தின் உயர்வை இதைப் படிக்கும் ஒவ்வொரு ஆத்மாவும் தன் ஆத்மத்தொடர்பு கொண்ட பல ஆத்மாக்களுக்கும் ஆத்ம தியானத்தின் உண்மை சத்தியத்தை உணர்த்தி ஆதி பரம்பொருளின் சக்தியின் படைப் பின் உயர்வுப்படைப்பை ஒவ்வொரு ஆத்மாவும் பெற்று சக்தியின் சக்திக்கே ஆண் பெண் இனம் வளர சக்தி தாருங்கள்.

**9–6–81**

தனித்து எச்சக்தியும் செயல்படுவதில்லை. இச் சரீர பிம்ப அணுக்களின் வளர்ப்புநிலைக்கொப்பத்தான், இவ் எலும்பின் வளர்ப்பு காந்த மின் சக்தியின் ஈர்ப்பு வளர்ப்பினுல், இவ் ஆத்மா வையே ஒளிபெறும். உயர்ந்த சக்தியாக்கிவிட்டால், ஒளியான இவ் ஆத்மாவை காந்த மின் சக்தியின் வார்ப்பான இவ் எலும்பின் வலுத்தன்மையின் தொடரைக் கொண்டு, ஒளிகொண்ட ஆத்ம சக்தியை எதனிலும் ஊடுருவவிட்டு, உயர்தன்மையின் வார்ப் பாய் ஆத்ம சக்தியை ஒளிபெறச் செய்யலாம்.

இச்சரீர அணுத்தன்மை ஒவ்வொன்றுமே மலம்தான். இச் சரீர சதை, அணு மலத்தின் வளர் அணு வளர்ப்பின் வார்ப்பு எலும்புகளின் வலுத்தன்மைதான். இச் சரீரம் மலம் போன்றது தான். ஒளிபெறும் ஆத்ம சக்தியை, இவ் எண்ணத்தில் எடுக் கும் உயர்ந்த ஞான குணத்தன்மையால், சரீரம் வளர்க்கும் ஒவ் வொரு அணுவையுமே, ஏற்கெனவே எக்குணத்தின் வழித்தொடரில் பழக்கப்பட்டு, வழிபெற்றிருந்தாலும், எண்ணத்தால் எடுக்கும் ஞானத்தின் நற்குணத் தொடர்பைக்கொண்டு, உடலின் அணு வளர்ந்து வளர்ப்பின் சமைப்பினுல் எலும்புகளின் உறுதியான காந்த மின் அலை உணர்வுத் தன்மை இவ் எலும்புத் தன்மை உறுதிகொள்ளும் வார்ப்பு நிலைக்கொப்ப ஆத்ம வலு கூடுகின்றது.

ஜெபத்தால் பெற்ற உயர்குண சக்தியால் தன்னைத்தான் நம்பி, தன்னுள் வளரும் பல கோடி கோடி உயிரணுக்களையும் உயர்நிலை அணுக்களாய் வளரவிட்டு, அவ்உயர்வின் வலுவை எலும்புத் தன்மையின் வலுவாக்கி, ஆத்ம சக்தியை உயர்த்திக் கொண்டோமானுல் தன் ஆத்மாவை தானே பார்க்கவும், பேசவும் ஆத்மாவைக் கொண்டு எச்சக்தியும் பெறவும், உயர்வு ஞான சக்தி யால் வழிப்படுத்த முடியும்.

ஆத்ம வலுத்தான் மனிதனுக்கு அடுத்த தெய்வ சக்திநிலை. ஆத்மவலுக் கொண்ட தன்மையினுல் இவ்வாத்மாவின் ஒளித்

தன்மையைக் கொண்டு முன்கூட்டி அறியும் ஞானத்தையும், உலகச் சுழற்சி தொடர்பு முறையினுல் உலகத்தன்மையில் எங் கெங்கு மாற்றுநிலைகள் ஏற்படும் நிலையை அறியவும் ஏற்படக்கூடிய மாற்றத்தின் அபாயத்தை ஆத்மவலுக்கொண்டு அறியும் தன்மை யில் மாற்றியமைக்கவும் முடியும்.

பிற ஈர்ப்பலையில் சிக்கா ஒளிவட்ட ஞானத்தால், ஆத்ம வலுவின் சித்துத்தன்மையில் அறியும் அஷ்டமாசித்துநிலை அனைத் தும், ஆத்ம வலுவினுல் பெற்ருலும், எவ்வாத்ம வலுவை எவ் வழித்தொடரில் பெறுகின்ருேமோ, அவ்வலுவுக்குத் தகுந்த உணவு நிலை படைத்துக் கொண்டேதான் இருக்கவேண்டும்.

உடலுக்கு உணவை உண்ணுகின்ருேம். உணர்வுக்குத்தக்க உறக்கம் கொள்ளுகின்ருேம். அதைப்போன்றே ஆத்ம வளர்ப் பிற்கு, வளர்தொடர் சக்தி நிலைக்கு, உணவாய் மனித ஆத்ம பிம்பத்தால் பெற்ற ஆத்மாவின் வலுவிற்கு உணவு, எவ்வழித் தொடரில் உயர்வு கொண்ட ஆத்மநிலை பெற்ருேமோ, அத் தொடர்பு கொண்ட சரீர பிம்ப ஆத்மாக்களின்பால் இருந்து வெளிப்படும் எண்ண உணர்வின் சப்த அலையின் தொடர்புநிலை, சுழற்சி நிலை இருந்துகொண்டே இருக்க வேண்டும்.

தனித்து ஆத்ம சக்திபெற முடியாது. ஆணுக்குப் பெண் சக்தியும், பெண்ணிற்கு ஆண் சக்தியும் கூட்டு சக்தியின் போதனைத் தொடர் அலை சக்தியும், எண்ணத்தின் உணர்வைக்கொண்டு அன்பு பாசம், ஞானம், வீரம், சாந்தம் கொண்ட உயர்குணத்தின் வழித் தொடர் வாழ்க்கையில் கலந்துறவாடும் ஆத்மாக்களின், நம் பால் செலுத்தப்படும் அலை உணர்வின் ஈர்ப்பினுல் நம் ஆத்மா விற்கு நாம் செலுத்தும் உணவு, நாம் எத்தொடர்பில் ஞானம் பெற்ருேமோ, அத் தொடர்பின் உணவாய் நமக்குக் கிட்டும்.

நம் எண்ணத்தின் உயர்வினுல் பெற்ற ஆத்ம பலம் கொண்டு, நாம் செலுத்துவது எல்லாமே நாமெடுத்த ஜெப உணர்வின் நற்குண எண்ண அலை வெளிப்படும்பொழுது, எவ்வளவு கொடிய எண்ணம் கொண்ட குரோதவானுய் ஒருவன் நம்மைச் சந்தித்து எதிர்ப்பட்டாலும், நாம் செலுத்தும் நல் அலையின் எண்ண ஈர்ப்பின் பால், அக்கொடிய எண்ணத்தைக் கொண்டவனின் குரோதநிலை, நாம் வெளிப்படுத்தும் சாந்தத் தன்மையின்பால் அண்டமுடி யாது.

குரோதத்தாலும், வஞ்சனையாலும், பதட்டம் கொண்ட சோம்பல் கொண்டவர்களின் எச்சுழற்சி வட்ட ஈர்ப்பில் உள்ள

வராய் இருப்பினும், நம் உணர்வும், எண்ணமும் வளர்த்துக் கொண்ட வலுத்தன்மையினுல் பதட்டம், சோர்வு, சங்கடம், சலிப்பு போன்ற உணர்வு நிலேக்கே இடம்தரா ஆத்மாவாய் நம் ஆத்மா வலுப்பெற்ற தன்மையில் எதிர்நிலேகொண்ட எவ்வுணர்வு எண்ணமும் நம்மைப் பாதிக்காது.

அதே சமயம் நாம் பெற்ற வலுத்தன்மையினுல் எவ் ஆத்மா வின் மேல் எண்ணத்தின் பார்வையின் ஒளியை எதை எண்ணிச் செலுத்துகின்ருேமோ அந்நிலே அங்கு நடக்கும். கொடிய குரோத எண்ணம் கொண்டவனுய் இருந்தாலும், தெய்வ சக்தியின் உயர்வு ஆத்ம சித்துவை நாம் பெற்றிருந்தாலும், நாம் செலுத்தும் சக்தி அங்கு நடக்கும் என்ற உண்மை தெரிந்தாலும், தீய சக்தியை தீயது என்று அழிக்கவேண்டுமென்று நம்மை உயர்த்தி எண்ணத் தைச் செலுத்திஞேமாஞல், அவன் பெற்ற தீய அலேத்தொடர்பின் ஈர்ப்பில் நாமும் மீண்டும் சிக்கும் செயலாய், அவன்பால் செலுத் தும் எண்ணத்திலேயே, மனிதனுக்கு மனிதன் விடும் சுவாசத்தின் மோதலினுல், காந்த நுண் அலேயின் தொடர்பு ஈர்ப்பு அணு வளர்ப்பின் செயலுக்கு நம் உடலும் உட்படுகின்றது.

எண்ணத்தை உயர்த்தி ஒவ்வொரு ஆத்மாவுமே, தெய்வ சக்தி கொண்டதாய் எண்ணத்தில் கொண்டு, ஆத்மத் தொடர் பினுல்தான் ஆத்மா வலுக்கொள்ள முடியும். நாம் செலுத்தும் எதிர் அலேயின் உணர்வலேதான் நாம் பெற முடியும். எந்நிலே கொண்டு எவரிடத்தில் நாம் தொடர்புகொண்டாலும், அவர்கள் எக்குண வழித்தொடரில் இருந்தாலும் அவ் ஈர்ப்புப் பிடியில் நாம் சிக்காமல், எண்ணத்தின் உயர்வைக்கொண்டு உயர்ந்த ஒலி அலேகளேயே பிறர்பால் செலுத்தி எண்ணத்தில் ஒவ்வொரு ஆத்மா வையும் நாம் உயர்த்தி, நமக்கு வேண்டிய சத்தை நாம் பெற லாம்.

தீயது, நல்லது என்ற பாகுபாட்டுடன் நம் உணர்வின் எண் ணத்தைச் செலுத்தாமல், நம் உயர்வின் உயர்விற்கு உயர்ந்த எண்ணத்தால் சக்தி பெறலாம்.

## 11–6–81

ஜீவன் கொண்ட ஒவ்வொரு செயலுமே தன் ஜீவித உணவை எடுத்து எப்படி வளர்கின்றதோ, அதைப் போன்றே, இவ் ஆத்ம வலுத்தன்மைக்கு வலுக்கூடிய பிறகு, அதுவே ஒளிரும் தன்மையில் தனித்து இயங்கக்கூடிய வழித் தொடருக்கு உணவு நிலே தேவை. அதைப்பெறும் வழிமுறை எப்படி?

கல், மண், தாவரங்கள், உலோகங்கள், திரவகங்கள், ஜீவ ராசிகள் ஒவ்வொன்றுக்கும் ஜீவ சக்தியுடன் வாழும் காலத்தில், அததற்குகந்த உணவு நிலையை உட்கொண்டு, ஜீவத்துடிப்புடன் வாழ்கின்றது. கல்லும், மண்ணும், உலோகமும், திரவகமும் தாவர இன வர்க்கங்கள் எல்லாமே வளரும் பிடிப்பிலிருந்து எடுத்தவுடன், வளர்ச்சிநிலை நின்று, அதனை உருமாற்றிச் செயல் படுத்தும் ஜீவனற்ற மாற்று நிலைக்கு உட்படுத்தியவுடன், அதன் வளர்ப்பு நின்று, ஜட பிம்பப் பொருளாய் கரையும் ஆவிநிலைக்கு உட்படும் வழித்தொடருக்குச் சென்றுவிடுகின்றது.

ஜீவராசிகளின் உயிர்சக்தியும் உயிர் ஆத்மா பிரிந்தவுடன் ஜடப்பொருளாகி, உணவு உட்கொள்ளும் நிலை மாறி, ஆத்மா பிரிந்து செல்கின்றது. ஜீவசக்தி கொண்ட ஒவ்வொன்றுமே தன் வளர்ப்பின் வளர்ப்பிற்கு உணவை உட்கொண்டு வாழ்வதைப் போன்று, அழியா, பிறவா, சக்தி நிலைகொள்ளும் ஜீவ ஆத்ம வலுவிற்கு, அதன் வளர்ச்சி வளர்கொள்ள உணவு உட்கொள் ளும் வழித்தொடர் இருந்துகொண்டே இருக்கவேண்டும்.

வளர்தன்மைக்கு ஆண், பெண் அமிலச்சேர்க்கை ஜீவத் துடிப்பு எப்படித் தேவையோ, அதைப்போன்றே, ஆத்மாவை சரீரத்திலிருந்து பிரித்துச் செயல்படுத்தும் வழிமுறைக்கு, உடலுக்கு எப்படி உணவு உட்கொள்ளுகின்றோமோ, அதைப்போன்றே, ஆத் மாவிற்கான உணவைச் செயல்படுத்தும் வழிமுறை செயல்தான் அஷ்டமா சித்துநிலைகொண்ட வளர்நிலை.

உணவை உட்கொண்டு சரீர வளர்ச்சியில் ஆத்மாவின் செயல் சாதாரண நடைமுறையில் நடைபெறுகின்றது. பலவற்றில் இருந்து வழிவந்து, உயர்வின் முற்றிய தன்மையான மனித சக்தியின் எண்ண உணர்வு, சொல், செயல் ஆற்றல் கொண்ட ஆத்ம சரீர சக்தியில் இருந்துதான், மனித சக்திக்கு அடுத்த வளர்ப்புசக்தி யான, ஆத்மவலுவின் சித்து சக்தி மனித சரீர உடலில் இருந்து ஆத்மாவைப் பிரித்துச் செயல்படுத்தும் வழிமுறை வளர்ச்சி நிலைக்கு ஆரம்பத் தொடர் உணவு நிலையாய், ஆத்மா பெறும் நிலை, எண்ணத்தைச் செலுத்தி காற்றலையின் தொடரிலிருந்து தன் ஆத்மாவிற்கு வேண்டிய உணவாய் காற்றலையின் தொடர்பிலிருந்து தன் சுவாச ஈர்ப்பிற்கு நறுமண அலைத்தொடர்பில் எண்ணத்தைச் செலுத்தி, அவ் அலை உணர்வை ஆத்மா உட்கொண்டு பழக்கப் படுத்திய தொடர்பின் நிலையில், ஜீவ சரீரத்தின் எண்ணத்தை கனிகளின் சுவை அலையில் சுவாசம் பெற்று, சுவாசத்தின் அலைத் தொடரினால் அச் சுவையின் உணவு எடுக்கும் வழித்தொடரை ஆத்மா பெறுகின்றது.

காந்த மின் அலையின் வார்ப்பு சக்தியை, ஜெபத்தால் எடுக்கும் ஞான சக்தியில், தன் ஆத்மாவை தானே காணக்கூடிய வழிமுறை பெற்றவுடன், சரீர இயக்கத்திலிருந்தே உணர்வின் எண்ணத்தைச் செலுத்தி உணவு எடுக்கும் வழிமுறை பெற்று, அவ்வழிமுறை தொடர்பில் இருந்து ஆத்மா தனித்து இயங்க, ஆத்மாவுக்குகந்த ஆத்ம அலைத் தொடரில் தொடர்புகொண்டு, ஆத்மாவிற்கும் ஆத்மாவிற்கும் உள்ள தொடர்பலையின் ஈர்ப்பலையின் ஈர்ப்பிலிருந்தே தன் ஆத்மாவிற்கு உணவெடுத்துக் கொள்கின்றது.

வலுக்கொண்ட தனித்து இயங்கும் ஆத்மாவின் செயல் ஒன்றை அறிய, அணுவுக்குள் அணுவாய், இச் சரீர பிம்ப இயக்கத் தொடர்புடன், சரீரத்தில் இருந்து எண்ணத்தை வெளிப்படுத்திய ஆத்மா செயல்கொள்ளும் வழித்தொடரில் மோதும்பொழுது, அணுவுக்குள் அணுவாய் இச் சரீர சுவாச ஈர்ப்பிற்கு அவ் அணு அலை வளர்ச்சிகொண்ட சேமித காந்த நுண் அலை சுவாசத்தின் மோதலில் சமைத்து, எலும்புகளின் உராய்வு கொண்டு ஆத்மாவின் செயலுடன் ஒன்றுகின்றது உணவாய்.

இதன் வழித்தொடரில் வளர்ச்சி கொள்ளும் ஆத்ம வளர்ச்சியினுல் ரிஷித் தொடர்பலையுடன் தொடர்பு கொள்ளும் நிலையில் வளர்ப்பலையின் வளர்ச்சி ஆத்மா செயல் கொள்ளும் முறை வளர் நிலையும் உணடு. அதன் தன்மை எப்படி?

**13–6–81**

சிறு சிறு துளி பெரும் வெள்ளமாகி, வெள்ளம் கடலாகி, கடல்அலை ஆவியாகி, ஆவி நீராகி சுழற்சி கொள்ளும் தன்மை போன்றே, சித்து நிலையில் வளர்ச்சிகொள்ள ஆத்ம அலையை அணுவுக்குள் அணு செலுத்தி பூமியின் உயர்குண வார்ப்பு ஒவ்வொன்றிலும் எண்ணத்தின் உணர்வால் ஆத்மாவைச் செலுத்தி, ஒவ்வொன்றும் பெற்ற ஒளி சக்தியின் உயர்வு அலையை ஆத்ம வலு கூடி, சூரியனின் வளர்ப்பாய் அணு வளர்ப்பாகி, அணு அணுவாய் வளர்ச்சிபெற்று, ஒளி அணுவாய் இப்பூமியே தன் சுழற்சி ஈர்ப்பினுல் ஒளி பெறுவதைப் போன்று, எண்ணத்தின் உணர்வைக் கொண்டு ஆத்ம அலையின் தொடரில் இவ் ஆத்ம உயிருடன் இயங்கக்கூடிய சரீர பிம்பமே ஒளியாய் பிரகாசித்து பிரிந்து, ஒவ்வொரு அணுவுமே தனித்து படர்தொடருக்குள் தொடர் கொள்ளும் அணு ஒளியாய் செலுத்தி, அணுவுக்குள் அணு எப்படி வளர்ச்சி கொள்கின்றதோ, அதைப்போன்று ஒளி அலையாய் பிரகாசித்த அணு ஒளி ஒவ்வொன்றுமே தொடர்பு கொள்ளும்

அலை வட்டத்தின் ஒளியின் வார்ப்பையும், தன் ஈர்ப்பில் சுழற்சி கொள்ளும், வளர்ப்புக் கொள்ளும் வழி செயலாய் வளர்ந்து, எத்தன்மையிலும் இச் சரீரக் கூட்டைப் பிரிக்கவும், கூட்டவும் சப்த ரிஷித் தன்மையினால் சரீர இயக்கமுடன் வளரும் வளர்ச்சிக் காலங் களில் வழித் தொடர் கொள்கின்றனர்.

நீர் சக்தி இல்லையேல் நெருப்பு எரிய சக்தியில்லை. நெருப் பாய் ஆவிகொண்டு (உஷ்ண அலை) நீர்நிலை பெறுவிட்டால் நீருக்கும் வளர்ச்சியில்லை. தனித்த சக்தி, தனி அணு, தனித் தொன்றுக்கு எப்படிச் செயலில்லையோ அதைப்போன்று ஆத்ம சக்தியின் சித்து வளர்ப்பிற்கு ஆண் பெண் இயக்கத் தொடர்பு, ஆத்மக்கூட்டுநிலை செயல்கொள்ளும் வளர்ப்பு நிலையில் ரிஷி பத்தினி, ரிஷி சக்தி, என்றுணர்த்தும் கூட்டு ஐக்கிய ஆத்மத் தொடர் சித்து பெறும் தம்பதியரின் வழித்தொடரினால்தான், உணர்வின் எண்ணத்தால் செயல் கொள்ளும் படைப்புத்தொடர் ஆத்ம அணுவளர்ப்பின் தொடர் அலையை, எம் மண்டலத்தில், மனித சக்தியைப்போன்று இன்று நம் பூமியிலுள்ள நிலை போன்ற தொடர் அலையை வழிப்படுத்தும் வளர்ப்பு நிலைக்கு, பிறிதொரு மண்டலத்தில் இதைப்போன்று வளரவேண்டிய நிலை ஏற்பட வேண்டிய தொடருக்கே இத்தொடர் நிலைகொண்ட சக்திநிலை, ரிஷித்தன்மை செயல்படவேண்டும்.

படர்ந்து கொண்டேயுள்ள ஆவி அமிலம் திடம்கொண்டு, அண்டசராசர அனைத்துக்கோடி சுழற்சியிலும் மாறிக்கொண்டே, சுழன்று கொண்டே வழித்தொடர் கொள்ளும் ஒவ்வொன்றின் இயக்கத்திற்குமே வளர்நிலை தொடர் வளர்ச்சிக்கு ரிஷித்தன்மை கொண்ட அலைத்தொடர் வளர்ப்பைக்கொண்டு எச்சக்தி நிலை யையும் உயர்வுபடுத்திச் செயலாக்கும் வளர்சக்தியின் சக்தியே ஆண் பெண் என்ற எண்ண சக்தியின் மனித வளர்ப்பு வார்ப்பில் உருவாக்கும் தொடர் அலையில்தான் இப்பூமியே சிவசக்தியென்ற இரண்டு ஆத்மாக்களின் தொடர்பில் உருவாகி, பலகோடி ஆண்டுகளாய் தன் உருவின் உருக்களை வளர்த்துக் கொண் டுள்ளதேயன்றி, தன் உருவின் உருவைக் கொள்ளும் உயர் ஆத்மத் தொடர்பு ஆண், பெண் ரிஷித்தன்மையின் வழித்தொடர் ஆத்மாக் களை வளர்கொள்ளும் செயல் தன்மை அரிதிலும் அரிதாய்த் தான் இன்றுவரை செயல்பட்டுள்ளது.

இரண்டு ஆத்மாக்களின் உயர் ஞான சித்தைக்கொண்டு உருவாக்கும் சக்தித்தொடர்பாய் சத்தியத்தின் சக்திநிலைச் சங்கத் தாரால் வாழ்க்கையுடன் ஒன்றிய கூட்டு ஐக்கிய தியான வளர்ச்சி

யால், ஒவ்வொரு குடும்பமுமே ஆண் பெண் தொடர்பு ஆத்ம தியான சித்தைப் பெற்று, இப்பூமியின் சக்தியைப் போன்று நம் சூரிய குடும்பத்தின் சுழல் கொண்டு மிதந்து ஓடும் மண்டல சுழற்சி ஒவ்வொன்றிலுமே அதன் சக்திநிலைக்கொப்ப அதன் வளர்சக்தியின் வளர்ப்பிற்கு வழி செய்யலாம்.

நம் பூமியைத் தவிர சூரியக் குடும்பத்தில் வளர்ந்த மண்டலங்கள் விஷத்தன்மை கொண்டதாகத்தான் இன்றைய நிலையில் உள்ளது. இதே சுழற்சி நீடித்து நம் பூமியும் இன்றுள்ள விஷத் தன்மையில் (செயற்கை என்ற காந்த மின் சக்தியைப் பிரித் தெடுத்ததின் விஷத்தால்) சுழன்றதென்ருல், இக் கலி மாற்றத்தில் வரப்போகும் கல்கியில் தன் ஞானம் மிஞ்சாது. விஞ்ஞானம் எஞ்சி நிற்கும்.

ஒவ்வொரு ஆத்மாவுமே தன்னுள் உயர்சக்தியை உருவாக் குங்கள், ரிஷிப்பத்தினியென்ற ரிஷி சக்தியை.

**14–6–81**

இயற்கையில் வளரும் தாவர இன வளர்ச்சியில் அதன் பலனில் தரவல்ல முத்துக்களும், மற்றைய கனிகளும் அதன் சுவை, மணம், அழகு இவற்றைப் போன்று பயிர் செய்யத்தக்க தானிய வகை தரவல்ல நெல்மணியில் அதன் சத்துநிலை தரவல்ல காலங்களில் நெல் மணிகள் அழகு பெற்று, வளர்ந்து குலுங்கும் காலங்களில் அதனுடைய அழகுப்பொலிவும், பல இயற்கைத் தாவரங்களின் மணமும், பட்சிகளின் ரோமத்தின் மிருதுத்தன்மையும், அவற்றின் வண்ண அழகுகளும் எப்படி அது அது எடுத்து வளரத்தக்க அமில வார்ப்பின் வளர்ப்பின் வளர்நிலையில் அதன் பலன்தரும் வளர்ச்சி அழகை இயற்கையென்ற நியதியுடன் கண்ணுற்று செயற்கையுடன் ஒன்றி வாழும் நாம், அது வளரும் உண்மையை அறியாமல், ஆனந்த ரசிப்பில் இயற்கையாய் எண்ணித்தான் அதனைக் காண் கின்றோம்.

ஒவ்வொரு வளர்ப்பிலுமே அதன் பலன் ஒன்று வளரும் தன்மையில்தான் சகல சக்திநிலைகளும் வளருகின்றன. கடல் வழியில் பலகோடி வளர்ப்புகள் கடல்நீரின் சத்தெடுக்கின்றன. நீர்நிலைகளில், ஆற்றுப்படுகைகளில் நீர்நிலை உருளும் தன்மை யிலேயே பல வளர்ச்சி நிலைகள் நிறைந்துள்ளன இன்று.

எல்லாவற்றிலும் மோதுண்டு மோதுண்டு பல வளர்ச்சியில் மூலாம் கொண்ட உயிரணு, மோதுண்ட வளர்ச்சி நிலைக்கொப்ப ஆத்ம நிலைகொண்டு, சக்திநிலை பெறவல்ல எண்ணச் செயல் பூண்டு, ஜீவ ஆத்மாவாய் கருதோன்றி, கரு வளரும் அமில மூலாமாய் எண்ணத்தின் ஞானத்தால், ஞானப்பாலின் சத்தெடுத்து ஆத்ம மூலாம் மனித வித்தின் ஜீவிதத்தில் வளர்ச்சியுறும் காலத் தன்மையில் ஆத்மாவின் ஒளிநிலை பெறும் வளர்நிலைதான் மனித வித்தின் ஜீவவளர்ச்சியின் அடுத்த நிலை.

மாமரம் மாங்கனிகளைச் சத்தாய் வெளிப்படுத்துகின்றது. ஆனால் மனிதன் தன் பிறப்பின் வளர்ச்சி, தான் பெறும் மக்கள் செல்வம்தான் என்ற தன் பெயர் சொல்லும் வாரிசு நிலையைத் தான் உயர்வு கண்டு வாழ்கின்றனரேயன்றி, போக மகரிஷிக்கும், கொங்கணவ தேவருக்கும், கோலமாமகரிஷிக்கும் கிடைத்த வாரிசு நிலை அவர்களின் நிலையுணர்ந்த ஞானவான்களுக்குத் தெரியும். பிறவியுடன் பிறப்பெடுக்கும் செல்வம் மட்டும் செல்வம் என்று எண்ணாமல், பிறவாவரம் என்ற முத்தாகும் ஒளிநிலை பெறுவது தான் உயர்வு நிலை.

இன்றைய காலநிலையில் ஆத்ம ஞானத்தால் பெறும் தியான வழிமுறையையோ தன்னுள்ளுள்ள தெய்வச் செயலையோ, ஆத்மா வின் இயக்கம்தான் இச்சரீரக்கூடு, ஆத்மாவின் பதிவுநிலைகொண்டு ஆத்மாவின் உந்தலுக்குகந்த எண்ணமோதலினால் சரீர இயக்கம் உட்பட்டு, சரீரத்தின் செயலைக்கொண்டு ஆத்மா சத்தெடுத்து, அதே ஆத்மா எண்ணத்தை உருவாக்கி, சரீரத்தின் செயலால் தான் சத்தெடுக்கும் சுழற்சியில் சுழன்று வாழுங்காலங்களில், இது நாள் வரை பாடத்தில் குறிப்பிட்ட எண்ணத்தின் உணர்வுக் கொப்ப காற்றலையில், கலந்துள்ள சத்துத்தன்மையை உரமாய் பெறும் சுழற்சி ஓட்டத்திலிருந்து உண்மை சக்தியான உயிராத் மாவை, இக்கர்ம உடலை உடலின் கர்ம எண்ணங்களிலேயே செலுத்தக்கூடிய வழி முறையை எண்ணத்தின்பால் மேல் நோக்கிய, இதுவரை வழிப்படுத்திய வழிகாட்டிய தன்மை கொண்டு, நம் எண்ணத்தின் செயலைக்கொண்டு, நம் ஆத்மா ஞானப்பால் கொள்ளும் சுவையாய் வளர்படுத்துங்கள்.

புஷ்பங்கள் அடர்ந்த காட்டுப்பகுதிகளில், அப்புஷ்பத்தி லேயே அணுவாய் வளர்ந்து, புழுவாகி, பறக்கும் வண்ணத்துப் பூச்சிகள் எவ் அமில மூலாமில் அணுப்பெற்று ஜீவன் கொண்டு சத்தெடுத்து வளர்ந்ததோ, அச்சத்தின் வண்ணக்கோர்வையை வண்ணத்துப் பூச்சியின் அழகுநிலைபோன்றும், பூவில் பிறந்த

வண்டின் தேன்சுவையை எப்படிப் பெறுகின்றதோ அதைப்போன்று எச்சத்து நிலையில் எத்தன்மை வளர்ச்சிகொள்கின்றதோ அதன் வளர்ச்சி நிலைக்கொப்ப வார்ப்பு வளர்ப்பாவதைப்போல் எண்ணத்தின் உணர்வை நாம் செலுத்தும் நிலைக்கொப்ப எதிலெதிலெல்லாம் இவ்வெண்ண நிலை மோதி சுவாசம் எடுக்கிறோமோ, அதன் மூலாம் வார்ப்பைத்தான் ஆத்மா பெறுகின்றதென்பதை உணர்ந்து ஆத்ம பலத்தின் உணர்வைக்கொண்டு அடைய முடியாப் பேரானந்தப் பெருநிலையை இவ்வெண்ணத்தைச் செலுத்தும் உயர் ஞானத்தால் பெறலாம்.

இது நாள்வரை தெரிந்தோ, தெரியாமலோ ஜெப வழியில் பலகோடி ஆத்மாக்கள், தான் தெரிந்த பாதைவழியில் உயர்வைக் காண, ஜெபம் கொண்டு செல்லும் தியான மார்க்கத்தில், இந்த ஞானத்தை அறிந்துகொள்ளும் ஒளிநிலை ஈர்ப்பு வட்டம் அவர்கள் பெறவல்ல காலநிலைகளும் உருவாகக்கூடிய தன்மைக்கு, நாம் பெறும் போதனை ஞான வளர்ச்சியைக்கொண்டு, நம் ஈர்ப்பலையின் வட்டத்தில் ஆத்ம ஐக்கிய இயக்கத் தொடர்புச் செயல், செயல் கொள்ள தியானத்தின் ஞான சித்தால் சில செயல் முறைகள் உண்டு.

**16–6–81**

ஆத்மாவின் இயக்கம்தான் சரீரச் செயல் வழித்தொடர் என்பதனை இதுநாள்வரை அதன் உண்மை வழித்தொடர்போதனை நிலையில் உணர்த்தியதற்கு ஒப்ப ஆத்ம வளர்ச்சியால் தியானத்தில் நீங்கள் இன்று கண்ட உண்மைதனை இந்நூலில் எழுதுங்கள்.

அதன் தொடரில் மேற்கூறிய நிலைக்கு போதனை அளிக்கின்றேன். இப்பாடத்தைத் தினசரி எழுதும் பாலசுப்பிரமணியன் அவர்களின் தியானத்தில் அடைந்த உண்மைநிலை.

இன்று தியானத்தில் அமர்ந்து ஞான போதனை அளிக்கும் ஞான குருவை நினைத்தவுடன், ஞானகுரு என்னை ஆசிர்வதித்துக் கையை உயர்த்தியபோது, ஞானகுருவின் உள்ளங்கையிலிருந்து குருதேவரின் முகம் மட்டும் என்னை நோக்கி வருவதாக உணர்ந்தேன். வந்துகொண்டிருந்த முகஉருவம் பிறகு முழு உருவில் இருப்பதையும், கையில் ஒரு தடியுடனும் அவரைச்சுற்றி ஆட்டுக் கூட்டம் இருப்பதைப்போன்றும் தெரிந்தது. பிறகு வெண்மையான, முகிலைப்போன்று படர்ந்த ஒளியாகத் தெரிந்தது.

இன்று தியானத்தில் ராஜம்மாள் அடைந்த நிலை.

வழக்கப்படி தியானத்திற்கு வந்த வழியில் முதலில் உடல் முழுவதையும் சுற்றி ஓர் ஒலி சுழல்வதைப்போன்று செவியில் 'உய்' என்ற ஒலி நாதமும், உடல் முழுவதையுமே அவ்ஒலியுடன் ஒளியும் சேர்த்து இயக்கக்கூடிய இழுப்புநிலேபோன்று உடலே ஜிவ்வென்று மேல்நோக்கி, உச்சந்தலையிலிருந்து இழுப்பதைப் போன்று ஆனந்தமான நிலே ஏற்பட்டது. சதையோ மற்ற உணர்வு களோ எதுவுமே தெரியாமல் உடல் இருப்பது தெரிகின்றது. உடலின் எண்ண ஓட்டங்கள் இயங்குவது தெரிகின்றது. உடல் கனமோ உடலுக்குகந்த மற்ற எந்த உறுப்புகளின் நிலேயோ மறந்து எண்ணம் மட்டும் ஓடுவது தெரிந்தது. பிறகு மிளகின் அளவை ஒத்த மிகவும் பிரகாசமான நீல நிற ஒளி நெற்றியின் புருவத் திற்கு இடையில் தெரிந்தவுடன் மஞ்சள் நிறமான பெரிய சூரி யனேப்போன்று ஒளி தெரிந்து அவ்வொளி சுழன்று ஓடுகின்றது. சுழலும்பொழுது அதிலிருந்து நாங்கள் வானவில்லில் காணும் ஒளியைக் காட்டிலும் மிக மிக பிரகாசமாய் சில ஒளிகளும், அவ் வொளி ஒன்றுடன் ஒன்று உராய்ந்து அதிலிருந்து பல ஒளியும் தெரி வதைப்போன்றும், வானமண்டலம் அம்மஞ்சள் நிறமான பிரகாச ஒளி நிலேக்கு அது சுழன்று ஓடும் ஓட்டத்துடன் செல்வதைப் போன்றும் சில இடங்களில் உஷ்ணமாயும், குளிராகவும், நெருப் பும் மற்றும் விவரிக்க முடியாத பஞ்சைப்போன்று, அதை எப்படிச் சொல்வதென்றே புரியா நிலேயில் வெண்மை முகிலுமல்ல, பஞ்சு போன்ற கனத்த தன்மையுமல்லாமல் சொல்லால் உணர்த்த முடியாத சிலவும் இதே தொடரில் அவ் ஒளி வட்டத்துடனே செல்லும்பொழுது மனித உருவத்தைப்போன்றும் ஆனுல் உருவ மல்லா ஒளியைப்போன்றும் பிரகாசத்தன்மையுடன் வரிசையாக பலர் உள்ளனர். ஒருவர் முதுகில் மட்டும் ஏதோ ஒரு மிருகம் உள்ளதைப்போன்று தெரிகிறது.

அவர்களேயெல்லாம் பார்த்தவுடன் ஆசிர்வாதம் வாங்கும் எண்ணத்துடன் உங்கள் உயர்வைப்போன்று நான் உயரவேண்டு மென்று எண்ணி வணங்கச் செல்லும்பொழுது என்னேத் தடுத்து நிறுத்தி ஜீவ சரீர பிம்ப வாழ்க்கையில் உங்களே ஒத்தவர்கள் பெறும் ஞானத்தைக் கொண்டுதான் எங்கள் வளர்ச்சி நிலேயே உள்ளது. உங்களேக் கொண்டுதான் எங்கள் உயர்வே. நீ அவரிடம் ஆசி பெறு என்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டுகின் ருர்கள். அவ்விடம் ஒன்றுமே இல்லா பால்வெளி வான மண்ட லத்தைப்போல் கண்ணுக்கு எட்டியவரை எதுவுமே இல்லாமல் தெரிகிறது. பிறகு முகிலேப்போன்று படர்ந்து திட்டுத்திட்டாய்த் தெரிகின்றது. அதன் பிறகு வார்த்தையிலும் இது வரைக்கும் கண்ணிலும் கண்டிராத ஒளிகள் மிக மிகப் பிரகாசமாய் பல

வண்ணத்தில் நாட்டியமாடுவதைப்போன்று மிகவும் துரிதமாய் சுழன்று ஓர் உயர்ந்த முப்பது, நாற்பது அடி உயரத்திற்குப் பெண்ணின் உருவம் போன்று ஒளியிலேயே ஆனதைப்போன்றும் ஊன்றிப் பார்க்கும் பொழுது அதேபோன்று ஆணின் உருவமாயும் மாறி மாறித் தெரிந்த பிறகு சாதாரணப் பெண் உருவத்தை ஒத்த ஒளி வண்ணங்கள் சேர்ந்த பெண் உருவம் ஒன்று நான் ஆசீர்வாதம் வாங்கச் சென்று பாதத்தில் விழுந்து வணங்கியவுடன் 'என் செயலை வளர்ப்பாயா' என்று பெண் குரலாகவே கேட்டது.

இருவருமாக ஆசீர்வாதம் பெறுங்கள் என்று சொன்னவுடன் நாங்கள் இருவருமே ஒன்றி நிற்பது மட்டும்தான் தெரிகிறது. அந்த இடத்தில் எங்கள் குருநாதரும் ஞானகுருவும் நின்றிருக்கின்றார்கள். ஒரு பெரிய பெட்டி தெரிகின்றது. அப்பெட்டி இரண்டு அடி அகலமும் ஆறு அடி நீளமும் உள்ளது. அதில் ஓர் ஆண் உருவம் படுத்திருப்பது தெரிகிறது. இதுவரைக்கும் நினைவு மாற்றமில்லாமல் தியானத்தில் தெரிந்த நிலையைப் பார்த்துக் கொண்டு வந்த நான் பாடநிலை இன்று எடுக்கவில்லையே என்று நினைவை மாற்றியவுடன் பல எண்ணங்கள் அதனைத் தொடர்ந்து வந்துவிட்டன.

**18–6–81**

நீங்கள் இருவரும் தியானத்தில் எடுத்த அலைத்தொடரின், அவரவர்களின் உடல் அமிலச்சேர்க்கை உருவக எண்ண வீரிய சக்திக்குகந்த அலையின் தொடர் காட்சிகளை தியானமுறையில் தினசரி பார்க்கவும், பேசவும் அவ்வழியைக்கொண்டு உங்கள் ஞானம் வளரவும் வழி தெரிகின்றது. இதன் தொடரைப் போன்றே அமில சக்தியின் வார்ப்பு ஜீவித உயிரணு தோன்றிய ஒவ்வொரு ஜீவ வளர்ச்சிக்கும் அவையவை பெற்ற சுவை, மணம் குணத்துக்குகந்த தனித்தன்மை உருவான உயர் குணங்கள் பல உண்டு.

பால்வெளி மண்டலத்தில் படர்ந்துள்ள பலகோடி அமில குணங்கள் அதனதன் சுழற்சி ஓட்டத்தில் அங்கங்கு உள்ள படர்ந்த அமில குணங்களுக்கொப்ப ஒன்றுடன் ஒன்று உராய்ந்து, தன்தன் இன வளர்ச்சிக்கொப்ப வளர்ந்த மண்டலமாயும், அதனதன் ஈர்ப்பின் சுழற்சியில் சுழன்றுகொண்டே, வளர்ந்துகொண்டே, மாறிக் கொண்டே வழிகொள்ளும் வளர் முறையில் எப்படி மணலுண்டு, நீருண்டு, சுண்ணும்பும் உண்டு, மரம், மண் இவை யாவையும் இருந்தாலும் அதனை நாம் நமக்கு வேண்டிய பக்குவச் செயலுக்

காக சுண்ணும்பையும், மணலையும், நீரையும் கொண்டு நமக்கு உகந்த இல்லங்கள் அமைத்து, பாதுகாப்பு இடம் தேடி வாழும் பக்குவம் போன்று, பால்வெளியில் நிறைந்துள்ள அமிலச் சுழற்சியில் தன்னிச்சையில் வளர்ந்துகொண்டே, மாறிக்கொண்டே சுழலும் வழித் தொடரிலிருந்து எப்படி வீடமைக்கப் பல பொருட்களை வீட்டிற்கு வேண்டிய நிலைக்கு பக்குவப்படுத்தி, வீட்டைக்கட்டி வாழுகின்றேமோ, அதைப் போன்றுதான், அமிலச் சுழற்சியின் உயர்வுநிலை சக்திகொண்ட ஆத்ம நிலைகொண்டு எண்ணத்தின் ஞானம் கொண்டு, உயர்ந்த ரிஷிக் கோடிகளின் அமைப்புநிலை உருவகங்கள்தான் ஆதிசக்தியின் சக்திவழிவந்த ரிஷிவழி மண்டல அமைப்பின் ஜீவ ஆத்ம ஞான சக்தியின் ஜீவ வளர்ச்சி வளருகின்றது.

அதது எடுத்து வளர்ந்த நிலைக்கொப்ப வளர்ச்சியின் உயர்ந்த தன்மை கூடும்நிலை வழிபெற மனித ஞான உயர்விஞல் மட்டும் தான் உயர்வின் உருவகத்தையே உருவாக்கும் தன்மை உருப் பெறும் என்பதனை உணர்த்தியுள்ளேன்.

உண்மையின் உன்னத சக்திதனை உணர்த்திஞல் உருவாக்கிடலாம் உலக சிருஷ்டியையே.

இப்பூமிக்கு மனிதக் கரு வர ஆண், பெண் என்ற இரண்டு ரிஷித் தன்மை கொண்ட ஆத்ம சுழற்சி பூமியான இப் பூமியின் நிலைக்கு சிவசக்தி என்ற ஆத்மக் கரு எங்கிருந்து வந்தது?

இப்பூமியில் மட்டுமல்ல, நம்மைக்காட்டிலும் உயர்ந்த ஞான சக்திகொண்ட மனித ஆத்மாக்கள் நம் சூரியக் குடும்பமல்லா (நாற்பத்தி எட்டுக் கோளங்கள்) மண்டலங்களில் ஜீவிக்கின்றனர். ஞானச் சித்துக்கொண்டு அவர்கள் நம் பூமியுடனும், மற்றெல்லா பூமித் தொடருடனும் தொடர்பு கொண்டுள்ள நிலையில் செயல் கொண்டுள்ளனர்.

இன்று மனித ஆத்மாக்களின் பெருக்கத்திலுள்ள இப்பூமியின் எண்ண உணர்வு செயற்கையின் சுழற்சியில் சிக்காமலும், விஞ்ஞானத்தை நம்பி வாழும் உருநிலை பெருமல் இருந்திருந்தால், வளர்ந்துள்ள ஜீவ வளர்ச்சியின் சொல், செயல், ஞானம் கொண்ட வழித்தொடரிஞல், தன் ஞானம் உயரும் நிலை பெற்றிருந்ததென்ருல், இப்பூமி பெற்ற உன்னத உயர்ந்த சக்தியே மிகவும் உன்னத சக்தியாய் இன்னும் பல கோடி கோடி ஆண்டுகளுக்குச் சொல்லாற்றலும், செயலாற்றலும் கொண்ட மனிதன் மிக உயர்ந்த குணசக்தியின் ஆனந்த அன்புகொண்ட இனிமை வாழ்க்கையை

வாழக்கூடிய தன்மையையே, இன்றைய வாழ்க்கை முறை இன்னலின் பிடிப்பில் இறுக்கம்கொண்டு, மனிதனை மனிதனே அழித்து, அழித்து என்பதன் பொருள், இல்லற வாழ்க்கையில் கூடி, மனிதப் பிறப்புக்கு வரும் சிசுக்களை, சிசுவைக் கருவுக்கே வரவிடாமல் பல காலமாய் அவை சேமித்த சக்திநிலையையே கருவில் வந்து மறைக்கப்பட்ட தன்மையிலேயே, இம் மனிதனே மனிதக் கருவை அழித்து, அதனை ஞானம் வளரவிடாமல் இழிநிலையான சுழற்சியில் அமிழ்த்தி விடுகின்றான்.

தான்படும் வாழ்க்கைச் சுழற்சியில் இன்பங்கள் தனக்குச் சொந்தமானதாகவும், துன்பங்கள் ஆண்டவனின் சோதனையாகவும், எண்ணத்தில் கொண்டு வாழும் வாழ்க்கை ஓட்ட அலையில் எண்ணத்தில் ஏக்கமுடனும், பேராசை எதிர்நிலையிலும்தான் மக்களை நடத்திச் செல்லும் மதவழி போதனைகளும், அரசியல் சுழற்சிகளும் சுழன்றுள்ளன.

தன் ஆத்ம ஞானத்தைக்கொண்டு உலகத்தையே சிருஷ்டிக்க வல்ல ஆதி முதலாம் விநாயக சக்திகொண்ட சொல், செயல் ஞானம் கொண்ட மனித ஆத்மாக்கள் இப்பூமி சரீர வாழ்க்கையிலிருந்தே, தன் ஆத்மஞானத்தை எப்படி ஆண், பெண் வாழ்க்கை இணைப்புச் சேர்க்கையில் உருவாகி, சரீரம் பெற்று, வாழ்க்கை வழித்தொடருக்கு வந்தோமோ, அதே தொடரில் ஆண், பெண் இணைப்பினால் கருநிலை உருவாகி, பூமி ஈர்ப்பு கரு வளர்க்கின்றோமோ, அதைப்போன்றே, ஆண், பெண் என்ற இரண்டு ஆத்மாக்களும் தன் ஞான சக்தியினால் சித்து நிலை பெற்று, ஒளிநிலைத் தன்மையுடன் உடல் இயக்க உறவு நிலையில் கரு தோன்றி வளர்வதைப்போல், ஆத்ம இணைப்பில், ஒளிவட்டத்தின் ஆத்மச் சேர்க்கையிலிருந்து பிறக்கும் ஒளிநிலையைக் கொண்டு, ஞான வட்டமாய் அவ்வலைத்தொடரை எம் மண்டலத்திற்கு அனுப்புகின்றோமோ அம் மண்டலத்திலெல்லாம் ஜீவச் சிசுவை வளர்க்கவும் ஜீவ சக்தியை வளர்க்கவல்ல வழிமுறை ஆத்ம சக்தியை ஆத்மச் சேர்க்கையைக்கொண்டு அன்று எப்படி இராமாயண காலத்தில் இராமாயணத்தை எழுதிய வால்மீகி முனிவர் சூட்சுமத்தால் லவ குசா என்ற குழந்தைகளின் படைப்புநிலையை மறைக்கப்பட்ட நிலையில் உணர்த்தியதைப்போன்றும், காந்தர்வன் கன்னி நீரில் வாழும்பொழுது மேகக் கூட்டத்திலிருந்து விந்துகள் தோன்றி கன்னி கருத்தரித்து ஞான தெய்வக் குழந்தை பிறந்ததென்றும், கார்த்திகைப் பெண்கள் முருகனை வளர்த்தனர் என்ற கதையில் சொல்லும் உண்மைதனை ஒவ்வொரு மனிதனும் ஞானம் கொண்டு அதிலுள்ள சூட்சுமத்தை உணர்ந்தீர்களானால் சிவசக்தி கருத்

தரிக்கவில்லை, சிவன் உருவாக்கிய குழந்தை முருகன் என்று மறைக்கப்பட்ட பல உண்மைகள் அவற்றில் அடங்கியுள்ளன. என்றோ நடந்தவை அவை. அவற்றின் சக்திதான் இன்று நாம் வாழ்வது என்ற எண்ண உலாத்தான் உள்ளதேயன்றி, இன்று நடப்பவையும் அத்தன்மைதான். ஜீவக் கரு எத்தனை கோடிகோடி ஆண்டுகள் எம் மண்டலத்தில் வளர்ந்து வாழ்ந்தாலும், இன்று உணர்த்திய இத்தொடரின் உண்மை போன்றுதான் ஜீவ சக்தியின் ஆண், பெண் ஆத்ம சக்தியால்தான், ஜீவ ஆத்மாவில் பெறப்படும் சித்துத் தன்மையும், ரிஷித் தன்மையும் கொண்ட ரிஷிப்பத்தினி, ரிஷித்தன்மையைக் கொண்டுதான் உருவாகும் ஜீவனுக்கே ஜீவவித்து விருட்சகம்.

**19–6–81**

எப்படி நீரை உண்டு பூமியின் சத்தெடுத்து தாவரம் வளர்ந்து அத்தாவரங்களில் புழு, பூச்சிகள் உண்டாகி, அத் தாவரத்தில் பூக்கள் பூத்து, பூக்களின் சுவையை அத்தாவரத்தில் வளர்ந்த வண்டுகளே அதற்குகந்த சுவை சத்தான தேனை புஷ்பங்களிலிருந்து பெற்று, தேனென்ற சுவைகொண்ட திரவகம் கிடைப்பதைப்போன்றும், இதையொத்த ஒன்றின் தொடர்கொண்டு ஒவ்வொன்றும் ஜீவசக்திகொண்ட நீரைக் கொண்டு அதனதன் வளர்ப்புப் பலன் பெறுவதைப்போன்று இக்காற்று அமிலத்தில் பூமி சுழற்சி காற்றுமண்டலத்தில், இப்பூமி சமைத்த அமிலக் கூறுகளின் வளர்ப்பு நிலைக்கொப்ப, பூமியின் சத்துநிலை ஒன்றின் தொடர்புகொண்டு ஒன்றொன்றும் அதன் தொடர்ச்சியில் மாற்றுத் தன்மைகள் பெற்றாலும், இப்பூமியின் அமிலக்கூறே, இப்பூமியின் ஈர்ப்பிற்குகந்த, பூமியுடன் தொடர்புகொண்ட மற்றக் கோளங்களின் சத்தெடுத்து அச் சத்துத்தன்மையை பூமி சமைத்து, ஆவியாக்கி, அமிலமாக்கி, நீராக்கி பூமி வளரும் வளர்ப்பிற்கு தன் சமைப்பின் சத்தைக்கொண்டு பூமி வளர்த்து பலதையும் கொண்டு அவை வாழ்வதைப்போல் இச்சரீரக்கோளத்தில் எண்ணத்தின் ஞானம்கொண்டு சுவாசத்தால் பெறும் சத்துத் தன்மையைக் கொண்டு, தனக்கு வேண்டிய உயர்ந்த சத்துக் குணத்தை எத்தன்மையில் பெறமுடியுமென்ற ஞான சக்தியைக் கொண்டு உணரும் ஆற்றல் தொடர்பினால் எண்ணத்தைச்செலுத்தி எடுக்கும் சுவாசத்தால் உடல்விட்டுப் பிரிந்த முன்னோர் தொடர்பும், ஞானிகள், சித்தர்கள், சப்த ரிஷிகள் வளர்ந்த, வளரும் சூரியக் குடும்பக் கோளங்களின் தொடர்பையும், இப்பால்வெளி அண்டசராசரங்கள் எதுவாகிலும் எண்ணத்தால் அவற்றுடன்

நம் உணர்வின் தொடர்பைச் செலுத்தி ஞானத்தில் செயல் அலேக்கு சுவாசத்தால் இவ்வுடலின் அணுத்தன்மையை நாம் எண்ணும் நிலேக்கொப்பச் சத்தாக்கி, அச்சத்தின் பலனுல் ஆத்ம வளர்ப்பை நாம் வளர்க்க சுவாசத்தின் மோதலினுல் கவன நரம் பின் காந்த ஈர்ப்பு சக்தியைக் கொண்டு, அவை மோதி வளரும் வளர்ச்சியால் இவ்வெலும்புக்கூடு கூறு அனேத்திற்குமே முதலில் இச்சிரசு பாகம் காந்த மின் சக்தியின் வளர்ச்சி கொண்டு மேல் நோக்கி நேராக எடுக்கும் சுவாசத்தால் நாம் பதியவைக்கும் அலேத்தொடர்பு அனேத்துமே சுவாசத்தின் உணர்வால் சரீர எலும்புகளின் வளர்ச்சி சத்தின் பலனுய் ஆத்ம உயிர் வலுக் கொண்டு, வலுவின் தொடர்பால் இவ்வலுவான ஆத்ம அலேயை சரீர இயக்கத்தால் எண்ணத்தின் தொடர்புடனே ஆரம்பத்தில் எடுத்த சுவாச அலேயின் வளர்ப்புத் தன்மையின் வலுக்கொண்ட அடுத்த வளர்ச்சியாய் ஆத்மாவின் இயக்கத்தை தனித்து இயங்க வல்ல இயக்கத் தொடர்பிற்குச் செயலாய் ஒவ்வொன்றையும் அறிந்து வளரும் ஆற்றலின் வலுத்தன்மையாய் வலுவாக்கி சகல சித்தின் தன்மைகொண்டு ரிஷித்தொடர்பின் ரிஷித்தன்மை கொண்டு இல்வாழ்க்கையில் வாழும் தொடர்பிலேயே காட்டி லிருந்தும், ஜடாமுடி தரித்தும், சாமியார்கள் என்ற காஷாயம் பூண்டு, ஜெப மந்திரம் ஓதி பகவானின் அடிமையாய் அடிபணிந்து அடையவல்லதல்ல ரிஷித்தன்மை.

ஞானத்தின் தொடர்பலேயால் சுவாசத்தால் பெறும் உயர் காந்த சக்தியின் தொடர்பை இச்சரீரம் எடுத்து சமைக்கும் காலங் களில் அடையக்கூடிய இன்பமும், உடல் ஆரோக்கியத்தன்மையும் இனிமை கலந்த, உயர் அலேயின் சுழற்சியாய் தாம்பத்ய வாழ்க்கை இனிய அன்பு நற்குணத்தொடர்பால் பெறவல்ல இனிய சக்தியைக் கொண்டே உலக சிருஷ்டியை சிருஷ்டிக்கும் ஆற்றல் மனித எண்ண உணர்வு செயலுக்குத்தான் உண்டு.

**23–6–81**

பிறவா வரம் கொண்ட ஜோதிநிலேபெறும் ஒளி நிலேயின் உயர்தத்துவத்தை உணர்ந்தீரானுல் உயர்வுகொண்ட ஒளிநிலேயின் உண்மை புரியும். சகல ஜீவ சக்திகளிலும் சரீர உணர்வினுல் செயல்படும் ஒளித்தன்மையின் விழிநிலே ஜீவராசிகளுக்குத்தான் உண்டு. பூமியும், பூமி வளர்க்கும் தாவர இனம், மற்றையத் தாதுப் பொருள்கள் ஒவ்வொன்றும் ஜீவ சக்தி கொண்டிருந் தாலும் அவற்றின் முலாம் வளர்ச்சியின் முதிர்வு நிலேயில் ஒன்றின் தொடர்கொண்டு ஒன்றுய் மாறிமாறி வரும் வளர்ப்பு, அழிவு,

வளர்ப்பு என்ற நிலையில் ஒவ்வொன்றின் வார்ப்பு வளர்ப்பில் அணு சமைத்து வளர்ந்த மூலாம் கொண்டு உயிரணு தோன்றி ஒவ்வொன்றிலும் பல வார்ப்பு நிலையில் வளர்ந்து, அழிந்து, சக்திகொண்டு பல நிலைகளுக்குப் பிறகு ஜீவ சரீரம் பெறும் விழிநிலையாற்றல் ஊர்வன, நீந்துவன, பறப்பன, நடப்பன இத் தொடர் ஜீவராசிகளில் விழிநிலை ஒளிகாணும் உருவக எதிர் நிலையை அறியும் ஆற்றல் வழிவருகின்றது.

பலவில் முதிர்ந்து மனித எண்ண செயல் அங்க அவயவங் களின் ஆற்றல் வளர்ப்புநிலை பலகோடி ஆண்டுகளுக்குப் பின் உயிரணு தோன்றி, பல வார்ப்பில் மோதுண்டு வளர்ச்சிகொண்டு முற்றிய நிலையில் விழியின் ஒளியை எதிர்ப்படும் பொருள் கண்டு, விழியின் பாப்பாவில் படம் பிடித்து உணர்வுகொண்ட எண் ணத்தில் அறியும் வாழ்க்கை நிலையிலிருந்து சாதாரண பிறப்பு, இறப்பு என்ற நிலையில் ஜீவ சக்தி பிரிந்து உடலைவிட்ட உயிராத்மா விற்கு ஆத்ம ஒளி வட்டம்தான் உண்டு.

காற்றலையில் இப்பூமி வளர்ப்பில் ஜீவன் பிரிந்த ஆத்ம அலைகள் சுழன்றுகொண்டே காற்றலையில் மிதந்துகொண்டே இப்பூமி ஈர்ப்பில் சுழன்றாலும் விழியால் பார்க்கும் நிலை அவ்வாத் மாவிற்கு இல்லை.

சுவையையும், மணத்தையும், நுகரும் சுழற்சி வட்டத்தில் தான் சுழலுகின்றது ஜீவனுடன் உள்ளவர்களின் சரீர எண்ணத் தால் உடலைவிட்டுப் பிரிந்தவர்களின் நினைவில் எண்ணத்தைச் செலுத்தும்பொழுது அவ்வலையின் உணர்வு இவர்களின்மேல் மோதி அத்தொடர்புடன் அவர்களுக்கும் ஜீவ காந்த அலைத் தொடர்பு கிட்டியவுடன் அவர்கள் தொடர்புடன் ஆவி ஆத்மா வும் விழி அலை பிம்பத்தை எதிர்கொண்டு பார்க்க முடிகின்றது.

அலை உணர்வின் தொடர்பைக் கொண்டு பார்க்கும் நிலை யானது எப்படிப் புகைப்படக் கருவியைக்கொண்டு அதில் பூசப் பட்ட அமிலப் புகை பிம்ப தாள்களை அக்கருவியுடன் பொருத்தி அதற்குகந்த விசை அழுத்தத்தைத் தந்து எதிர் பிம்பத்தைப் பதிவு செய்வதைப் போன்று ஆவி ஆத்மாக்களின் செயல் நிலையுண்டு.

எதிர்நிலையில் காண்பதை விழியில் காணும் நிலைதான் மனித சரீரத்திற்கே உண்டு. தன் முதுகை தான் காண முடியாது. தன் பிம்பத்தையே எதிர் அலையின் நிலைக்கண்ணாடியிலோ, நீரிலோதான் பார்க்கும் நிலை உண்டு.

ஆத்ம தியான சக்தியைக் கொண்டு ஞான திருஷ்டியால் விழியை மூடிக்கொண்டு ஞானத்தால் பெறும் தியான சக்தியில் ஆத்ம சக்தியின் உயர்வு நிலையால் இச் சரீரக் கூட்டிலிருந்தே சகல சித்துக்களையும் பெறும் வழித்தொடர்கொண்டு ஞானத் தால் காணும் விழியின் ஒளிநிலை காட்சிகளை எண்ணத்தால் எண்ணியவை யாவையுமே காணத்தக்க விழிநிலையின் ஒளித் தன்மை இவ்வாத்ம அலையே பெற்றுவிட்டால் ஏகமும் ஒன்றான அகில சக்தியின் தொடர்பிலும் விழி அலை ஒளி நிலையில் காண முடியும்.

இச் சரீரக் கூட்டின் சமைப்பில் காந்த மின் அலையின் வலுத் தன்மையை எலும்புக்கூடுகள் பெறும் தன்மை கொண்டுதான் ஆத்மாவின் விழிநிலையின் ஒளிநிலை பெறும் ஆத்ம ஜோதியான ஜோதிநிலை சக்தியினால் ஏகத்தையும் காணும் ஆத்ம நிலையின் ஜோதி நிலைகொண்டு நம் வளர்ப்பின் தொடருக்கு வழி காட்டிய ரிஷி சக்தியின் உயர்வுத் தொடர்புடன் அவர்களின் வளர்ப்பின் வட்டமுடன் நம் ஐக்கியச்செயலையும் ஐக்கியப்படுத்த லாம்.

**24–6–81**

ஒருவர் நீர் அருந்தும்பொழுது நாம் பார்த்தால் நமக்கும் தாகநிலை ஏற்படுகிறது. அதைப்போன்றே ஒருவர் கொட்டாவி விட்டால் அதே நிலை நமக்கும் ஏற்படுகின்றது.

ஜீவ சக்தியில் சரீர பிம்ப வாழ்க்கை நிலையில் உணர்வுடன் கூடிய எண்ணத்தில் செயல்படும் வழிமுறை ஆற்றல் மனித சக்திக்கே ஒருவருடன் ஒருவர் கூடி வாழும் வாழ்க்கையில் இவ் ஈர்ப்பின் தொடர்பில் ஒருவரை ஒத்து ஒருவரை எப்படிச் சாடு கின்றதோ, அதைப் போன்றே, ஆத்ம இயக்கத்தின் தொடர்பை யும், தாம்பத்திய எண்ண வாழ்க்கையில் ஆண், பெண் ஒத்த இல்லற உணர்வால் ஒருவரின் அலைத்தொடர்பைப் பிறிதொருவர் அதிவிரைவில் எடுக்கும் வல்லமை கூடிய இல்லற எண்ண ஒற்றுமைகள் நடைபெறுகின்றன.

உயர்அலையின் தொடர்பலையால் காந்த மின் அலையின் வீரிய உயர்குண வழித்தொடரில் ஜெபம் கொண்ட சக்திமிக்க வாழ்க்கை நிலை ஏற்படும்பொழுது இரண்டு எண்ணங்களின் ஒருமித்த கூட்டு ஐக்கிய குணநிலை அமையும் பொழுது அத்தொடரினால் பெறப் படும் உயிராத்மாவின் வலுவின் கூட்டு ஐக்கியம் கொண்டு சிவசக்தி என்ற ரிஷிப்பத்தினி நிலையைப் பெறமுடியும்.

அந்நிலையின் வழித்தொடரில் தனித்த அலைத்தொடர்பைக் காட்டிலும், வளர்க்கும் தன்மைக்கு வளர்ச்சிபெறும் ஜீவ சக்தியை சிருஷ்டிக்கும் ஆற்றல் நிலை பெற முடியும்.

மனித ஆத்மாவின் அலைச்சக்தி எண்ணத்தின் ஆவி நிலையின் பதிவுநிலை பூமியின் ஈர்ப்பில் பதிந்துகொண்டே பூமி இழுத்து வெளிப்படுத்தும் அலையுடன் ஒன்றிய வாழ்க்கை நிலையில் இவ்வுணர்வின், எண்ணத்தின் சரீர அலைத்தொடர்பு இவ்வுடல் செல்லும் இடங்களில் எல்லாம் எப்படிப் பதிகின்றதோ, அதைப்போன்றே ஒத்தநிலையிலோ, மாற்று நிலையிலோ உள்ளவர்களுடன் கூடிய எண்ண உறவாட்டததில் பிறரின் அலை உணர்வை நம் ஆத்மா எப்படி தாகம், கொட்டாவியின் தொடர்பு உள்ளதுவோ அதைப் போன்றே பிறர் வளர்த்த அலைத்தொடர்பை வாழ்க்கை நடைமுறையில் ஒளிபாய்ச்சி உணர்வும், எண்ணமும் ஈர்க்கும். ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல் பிறரின் சோகத்தையும், சஞ்சலம், சந்தோஷம் எதுவாகிலும் எடுக்கும் நிலையிலுள்ள நாம் எண்ணத்தால் எடுக்கும் ஞான உணர்வின் வழிமுறையில் உயர்ந்த ரிஷித்தொடர்புடன் செயல்படும் வாழ்க்கை வழிமுறையை அமைத்துக் கொண்டோமானல் இவ்வாத்ம அலையே ஒளிரும் சக்தியில் வலுக் கொண்டு இயங்க நாம் வளர்த்த உயர்தொடர்பின் வலுத் தன்மையுடன் மாற்று நிலைகொண்ட பிறருடன் கலந்துறவாடும் எண்ணநிலை ஏற்பட்டாலும் தணலில் போடும் பொருளைப் போன்று அவை நம்மைச் சாடாமல் பஸ்பமாகும் தன்மைக்கு நம் ஆத்ம அலையின் வலுநிலை கூடிவிடும்.

கதைகளிலும், காவியங்களிலும் தொட்டவுடன் பொன்னுகும் சில வழிமுறைகளை முந்தைய காலங்களில் உணர்த்தியதின் உண்மை நிலையென்ன?

ஒரு பொருளைத் தொட்டால் அப்பொருள் எதுவாகிலும் பொன்மயமாய் மின்னுவதாகச் சொல் வாக்கிய வழிமுறையிலும் காவியக் கதைகளிலும் உண்டு. சாதாரண ஒரு கனியை—ஒன்று போல் ஒரேமரத்தில் இருந்து பறித்த எலுமிச்சங்கனியை பத்துப் பேர்களிடம் வைத்திருக்கச் சொல்லிப் பிறகு பார்த்தோமானல் அவரவர்கள் பெற்ற அமிலச் சேர்க்கையின் உருவக உஷ்ண அலையின் வெப்ப நிலைக்கொப்ப கனியின் தன்மை மாறுபடும்.

இதைப்போன்றே உயர்காந்த சக்தியின் எண்ண வலுக் கொண்டு ஞானத்தின் வழி சக்தியால் உயர்ந்தோரின் தெய்வத் தொடர்புடன் சங்கமித்த வழித்தொடரில் எவ்வலையையும் இச் சரீர இயக்கம் எடுத்து சமைத்து ஆத்மாவை வளர்க்கும் ஆத்ம

ஜோதி நிலைகொண்டவர்களினால் ஒரு பொருளை எவ்வமிலத்தினால், எவ் உலோகத்தால் செய்யப்பட்டிருந்தாலும் சில அலைச் சக்திகளைக் கொண்டு அதனை உரு மாற்றவும் சில நிலைகளைக் கூட்டிக் காட்டும் தன்மையை உருவாக்கும் நிலையையும் உருவகப்படுத்தலாம்.

இந்நிலையில் ரிஷித்தன்மை கொண்ட ரிஷிகள் பலர் காய கல்ப சித்து என்ற சில சக்தி நிலைகள் பல செய்துகாட்டினர். போகரினால் சித்துப்பெற்று ரிஷித்தன்மை வலுக்கூடிய நாளில் அவர் எடுத்த அலை சக்தியினால் இப்பூமிக்குப் பல மூலிகைகளை மருத்துவச் செயலுக்காக பூமியில் பதியவைத்து வளர்தொடர் தந்ததின் வழிமுறை மூலிகைகள் பல உண்டு.

இப்பூமியில் சித்துப் பெற்று வளர்ந்த ரிஷி சக்திகள் பலர் இன்றளவும் தான் பெற்ற அலைத்தொடரின் சக்தியை, தான் பிறப்பெடுத்து வளர்த்த பூமி அலையின் பதிவில் ஜீவாத்மாக்களின் வளர்ப்பு காப்பக நிலைக்காக இன்றளவும் பல அலைச் சக்திகளை பூமியில் பதித்து வளர வழிகாட்டுகின்றனர்.

மனித உணர்வின் எண்ணத்தை வாழ்க்கைப் பிடிப்பின் உணர்வை எண்ணுமல் வாழ்க்கையில் நடக்கும் நடைமுறையில் தன் இனத்தின் உண்மை குணநிலையைப் புரியாமல்தான், உண்மை உயர்வின் வழிச்செல்லாமல் பூமிப் பிடிப்பில் புதையுண்ட நிலையில் வாழுகின்றனரப்பா.

**25–6–81**

விஞ்ஞானி ஓர் இடத்திலிருந்து வண்ண ஒளிக்காட்சிகளைப் படமாக அமிலமுடன் பதியச்செய்து, காற்றலையில் இப்பிம்ப ஜீவன், ஜீவனற்ற பொருள் நிலையைப் படமாக்கி, காற்றலையில் அந்தந்த வண்ணநிலையுடன் இவன் பூசிய முலாமின் பிடிப்பலையில் எடுக்கும் காட்சிகளைக் காற்றலையுடன் கலக்கப்பட்டு, அதே தொடர்பலையைப் பல நூறு ஆயிரம் மைல்களுக்கு அப்பாலும் அதன் தொடர்பு கொண்ட வண்ணக் காட்சிகளைப் பார்க்கும் நிலைக்கு விஞ்ஞான முன்னேற்றமும் ஒளி பாய்ச்சி ஒளி ஈர்க்கும் பார்வையால் படம் பிடிக்கும் ஒளிநிலை காணும் விழிநிலையில் காண்கின்றோம்.

கனவுகளில் காற்றலையின் அமில ஈர்ப்பு இவ்வுடலின்மேல் மோதுண்டு சுவாசத்தின் ஈர்ப்புடன் இவ்வுடலின் அமிலத்தின் மோதலில் ஆத்மாவின் தொடர்புடன் உடல் உறங்கினாலும், இவ் ஆத்மாவுடன் ஆவி அமிலங்கள் மோதுண்டு, அம் மோதலினால்

உடலின் எண்ணத்தின் செயல் உணர்வு கொண்டு இயக்கப்படாத உறக்கத்தில் விழி மூடிய நிலையில் எண்ணத்தைக் கொண்டு செயல் படுத்தாத அலைநிலையை உடல் சமைக்கும் அமில உராய்வின் காட்சி நிலைகள் ஆத்மத்தொடர்புடன் செயல்படும். தொடர்புடன் கனவுகளில் சம்பந்தம் இன்றிப் பலநிலைகளை எண்ணம் கொண்டு செயல்படாமல் இச்சுவாச அலையில் மோதும் அமிலத்தில் இவ் வுடல் எவ் அமிலச் சேர்க்கை எடுக்குமோ, அதற்குகந்த ஈர்ப்பு அலைகள் சுவாச வட்டத்தில் மோதுண்டு எண்ணமில்லா உணர்வு செயல்படாத் தன்மையில் ஆத்மாவின் விழிப்பு நிலையில் கனவுநிலை காணுகின்றோம்.

ஒளிக்காட்சி, நேர்ப்பார்வை, கனவுக்காட்சிகள், ஆவிநிலை உணர்வுகள், ஆவிநிலை உணர்வு என்பது இன்று மருத்துவத்தில் மனநோய் என்று உணர்த்தும் ஒரு சாராரின் விஞ்ஞான நிலையும், தெய்வத் தொடர்புகொண்டு பக்திமார்க்கத்தாரால் அருளாடும் நிலையில் முருகன் வந்தான், காளி வந்தாள் என்றுணர்த்தும் நிலைக் கும் ஆவியின் நிலையென்று உணர்த்தி, பேய், பிசாசு என்று, பேயைக் கண்டேன், இரத்தக்காட்டேரி வருகின்றது என்று பயந்த நிலையும், அன்பு, பாசப்பிணைப்புடன் குடும்பத்தில் பற்றுடன் பல காலம் வாழ்ந்த முன்னோர்கள், அவர்கள் ஆத்மா பிரிந்தவுடன் குடும்பத்துடன் உறவாடும் நிலையில் இறந்த பின்னும் அவர்கள் வருவது போன்றும் பேசுவதுபோன்றும் சில நேரங்களில் குடும்பங் களுக்குச் சில வழிகாட்டும் நிலை ஏற்படுத்திச் செல்வது சில குடும்பங் களில் இன்றும் நடக்கின்றது.

இவையெல்லாம் எத்தொடர்பலையில் மனித ஆத்மாவின் எண்ணம் செயல் கொள்கின்றதோ அதற்குகந்த அலை அமிலங்கள் ஏற்கெனவே இப்பூமியில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, இறந்த ஆத்மாக்களின் அலை எவ்வெண்ணத்தில் உடலுடன் உள்ள மனித னின் எண்ணம் அதிக எண்ணத்தைச் செலுத்திச் செயல்படு கின்றதோ அவ்வலை ஈர்ப்பின் நிலைக்கொப்ப உடலைவிட்டுப் பிரிந்த ஆவிஆத்மாக்கள் ஜீவ சக்தி கொண்ட அமில உணர்வு எண்ண செயல் வட்டத்திற்கு வந்து, அதன் செயலில் சிக்கிய அதனின் எண்ணம், அது வளர்த்த அமிலத்தன்மையின் வழி நிலைதான் ஜீவசக்தி கொண்டவர்களுடன் அவ்வலை மோதி (ஹிஸ்டீரியா என்றுணர்த்தும்) மனநோய்க்கும், பல மொழிகளில் பேசி அருளாடு தெய்வ நிலையும், பேயாடும் நிலையும், முன்னோர்களைக் காணும் பாசப்பிணைப்பினால் வழிநடத்திச் செல்லும் நிலையும், இவ்வலைத் தொடர்பிலிருந்து எண்ணத்தின் வேட்கையின் துரிதத்திற்கொப்ப பிற ஈர்ப்பில் சிக்கி அவ் ஈர்ப்பின் அலை இச் சரீரத்தை இயக்கும்

செயல்முறை எப்படியெல்லாம் நடக்கின்றதோ அதன் தன்மையின் பிடியை எண்ணத்தின் சமநிலைகொண்ட ஆத்ம வளர்ச்சியினுல் அந்நிலையில் சிக்காமல் வாழும் நிலையில் இவ்வாத்ம வலுவைக் கொண்டு எத்தன்மை கொண்ட வேட்கை அலையும் பிறரின் ஈர்ப்பின் சொல், செயல் எண்ணங்களில் நம் ஆத்மா சிக்காமல் சமநிலை கொண்ட நற்குண சாந்த, ஞான, வீரத்தால் இவ் ஆத்மாவின் வலு கூடிய தன்மையில் எப்படி திராவகத்தில் போடப் படும் பித்தளை, செம்பு மற்ற உலோகங்கள் எதுவாகிலும் கரைந் தாலும் தங்கத்தின் நிலை கரைக்கப்படுவதில்லையோ, அதைப் போன்று, இவ் ஆத்மாவின் வலுவைக் கொண்டு, ஞானத்தால் பயம் என்ற அச்ச உணர்வை நீக்கி, சாந்தத்தை ஞானம் கொண்டு வீரத்தால் செலுத்தும் எண்ணத்தின் சரீர உணர்வலையின் ஈர்ப்பு வழித்தொடரில் காந்த மின் அலையின் தொடர்பலையை ரிஷிகளின் சத்தலையுடன் செலுத்தி, அவர்கள் வளர்க்கும் நிலைத் தொடருடன் எண்ணத்தின் உணர்வைக்கொண்டு, உணர்வு என்பது ஜீவ சக்தி கொண்ட காந்த ஈர்ப்பு அணு வளர்க்கும் வளர்ச்சியின் வித்தான சரீர செயலின் ஜீவனுக்கு ஜீவாதார முக்கிய நிலை உணர் வில்லையேல் ஞானச்செயல் செயல்படாது. உணர்வின் சமைப் பினுல்தான் எச்செயலுக்கும் எண்ணத்தைச் செலுத்தி, எண்ணத் துடன் மோதும் அலையின் ஈர்ப்பிற்கு காந்தமின் தொடர் அலைகள் மோதுண்டு அதன் பதிவுதான் ஆத்மா ஜீவ சக்தியிலிருந்து தனக்கு வேண்டிய வலுவைப் பெறுகின்றது. ரிஷிகளின் வளர்ப்பலை யுடன் வளரும் சக்தியில் உயர்ந்த ஆதி சக்தியின் படைப்பு சக்தியைப்பெற்ற, அவர்கள் படைப்பின் தொடரை நாம் பெற்று, நாம் பெற்றதன் தொடர் அலையை நம் தொடர்பைக் கொண்டு வளரும் ஆத்மாவிற்கு வழிகாட்டி, அவ்வலை சக்தியை நாமெடுத்து, நம் தொடர்பின் அலையை ரிஷித்தொடர்புடன் தந்து, ரிஷிவளர்ப்பின் ஆதிசக்தியின் அனைத்து சக்திகளிலிருந்து வளரும் சக்தியை அவர்கள் பெற்று சுழலும் சுழற்சி ஓட்ட அலையில் உயர்ந்த ஒளி வட்டமுடன் ஞான சக்தியைக் கொண்டு செய லாற்றும் உண்மைத் தொடர்புகொண்டு தன்னுள்ளுள்ள இறை சக்தியை இறை ஆத்மாவாய். ஆத்மலிங்க ஜோதியாய் அடையும் வழியை நாம் பெற இவ்வாழ்க்கையில் மோதும் எண்ண உணர்வை நாமெடுக்கும் சமைப்பு பிறரின் ஈர்ப்பில் சிக்காமல், பிறர் செய் யும் தவறில் நாம் தண்டனை பெறுவதைப்போன்று, நம் உணர்வு களை மாற்றி அவர்கள் செய்த நிலைக்கு நாம் தண்டனை பெற்றுச் செல்லும் நிலையிலிருந்து மீண்டு, நம் அலை சக்தியின் உயர்வலைதான் பிறர்மேல் செலுத்தி, மேல் நோக்கிய ஈர்ப்பில் நாம் வளர்ந்தால் நம் ஒளி ஈர்ப்பிலிருந்தும், சொல் ஆலையிலிருந்தும் வெளிப்படும் உயர்வலைகள் அங்கு பதிந்து அவர்களும் வளர்வார்கள், பிறரின்

தலைமைச் சங்க உறுப்பினர்கள்

திரு. எஸ். எஸ். எம். சுப்பிரமணியம்
தலைவர், குமாரபாளையம்

திரு. டாக்டர் ஆர். கிருஷ்ணன், M.B.,B.S.
பொதுச் செயலாளர், வெள்ளக்கோயில்

திரு. ஆர். என். நாராயணசாமி
பொருளாளர், மங்களூர்

திரு. கே. ஸ்ரீனிவாஸ்
உறுப்பினர், மங்களூர்

திரு. ஏ. சிதம்பரம்
உறுப்பினர், சேலம்

திரு. ஏ. கந்தசாமி
உறுப்பினர், சேலம்

திரு. ஆர். பாலசுப்பிரமணியம்
உறுப்பினர், பவானி

திரு. எஸ். குழந்தைவேலு
உறுப்பினர், சேலம்

திருமதி இராஜம்மாள் பாலசுப்பிரமணியம்
உறுப்பினர், பவானி

தலைமைச் சங்க நிர்வாகிகள் மற்றும் சத்தியத்தின் சக்தி நிலைச் சங்கப் பொது உறுப்பினர்களால் இப்புத்தகம் வெளியிடப் பட்டது.



ஓம் ஈஸ்வர குருதேவர் துணை

ஓம்

## ஆத்மாஞ்சலி

எங்கள் தாய் தந்தையருக்கும், எங்கள் குருவாகிய தெய்வத் திரு **வேணுகோபால் சுவாமி** அவர்களுக்கும், எங்கள் குருவின் குரு தேவராகிய அனைத்திலும் நாம் காணும் எங்கள் ஆத்மாவுடன் ஆத்மாவாகக் கலந்துள்ள ஆண்டவனாக வந்து எங்களை வழிநடத்தி, எம் வழியை அனைவரையும் ஏற்கும் நிலைப்படுத்திட, எங்களுக்கு இப் பாக்கிய அருளைப் பெரும்பொக்கிஷமாக ஏற்றி வழி நடத்திடும் சற்குருதேவர் **ஈஸ்வரபட்டராகிய** ஆண்டவரின் பொற்பாதங் களைப் போற்றியே வணங்கி, பூஜித்தே என்றும் எங்களை அவர் வழியில் வழி நடத்திட எங்கள் ஆத்மாஞ்சலியைச் செலுத்தியே, அடி பணிந்தே, நமஸ்கரித்தே எங்கள் குடும்பத்தில் நாங்கள் இருவரும், எங்களின் குழந்தைகளும் வணங்குகின்றோம்; வணங்கு கின்றோம்.

**திருமதி இராஜம்மாள் பாலசுப்பிரமணியம்,**

**திரு. ஆர். பாலசுப்பிரமணியம்,**

பவானி



ஓம்

## பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 40 | 30 | கலி | கல்கி |
| 41 | 33 | திரையறியிச் | திசையறியச் |
| 49 | 2 | ஞாயத்தின்பால் | ஞானத்தின்பால் |
| 65 | 18 | உள் | உன் |
| 188 | 20 | கொடை | கொண்ட |
| 195 | 1 | கவிகளில் | கனிகளில் |
| 200 | 24 | அறிவியல் | அருவியில் |
| 203 | 21 | சக்திக்கும் | சந்திக்கும் |
| 231 | 24 | எண்ணக்கூடிய | உண்ணக்கூடிய |
| 250 | 17 | சரீரத்தில் | சரீரத்தை |
| 263 | 17 | தெடைர்புடன் | தொடர்புடன் |
| 265 | 24 | வலுக்கட்டினுல் | வலுக்கூட்டினுல் |
| 277 | 1 | பேன்ற | போன்ற |
| 304 | 39 | ஆலேயிலிருந்தும் | அலேயிலிருந்தும் |